ஆய்வுச்சுருக்கம்
ABSTRACTS
vol. II



148/95
f241P1,N62
N95;1
186012

அண்ணாதுரை, முனைவர் கு. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி

அடிப்படைஎழுத்தறிவின்மை பற்றி இன்று நாம் பெரிதும் கவலைப்படுகிறோம். எழுத்தறிவு பெறாதவர்கள் இந்தியாவில் பாதிக்குமேல் இருக்கிறார்கள். அதேபோல் இருபது சதவிகிதப் பிள்ளைகள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளியில் சேர்க்கப்படாமலேயே விடுபடுகின்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தது ஐந்து வருடக் கல்வியாவது கொடுக்கப்பட வேண்டும். பள்ளியில் சேர்க்கப்படும் பிள்ளைகளில் 47 சதவிகிதத்தினர் அடிப்படைக் கல்வியிலே இடைவிலகுகின்றனர். 35 சதவிகிதத்தினர் மட்டுமே ஆரம்பக் கல்வியினை முடிக்கின்றனர். எனவே, நூறு சதவிகிதக் குழந்தைகள் சேர்க்கைக்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்ற அதேவேளையில், பிள்ளைகள் இடைவிலகலுக்கான காரணங்களும் கண்டறியப்பட வேண்டும். மொழிப்பாடம், பயிற்றுமுறை, பாடச்சுமை, கற்றல் சூழல்கள் ஆகியனவும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். எனவே இக்கட்டுரையில் பிள்ளைகளின் இடைவிலகலுக்கான காரணங்கள் விளக்கப்படுகின்றன. மேலும், அடிப்படைக் கல்வியில் தேவையான மாற்றங்களைக் கொண்டுவரவும் இக்கட்டுரையில் கருத்துரை வழங்கப்படுகிறது.

அரங்கசாமி, முனைவர் ஜெ. வைணவ ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறி

அறிவியல் வளர்ச்சியால் தனிமனித, சமுதாயத் தேவைகள் பொருளாதார ரீதியில் முழுமைபெற்றினும் உலகில் ஆன்மீக நிலையில் அமைதியான வாழ்க்கை அமையுமா? என்ற வினா ஆன்றோர்கள் மனத்தில் எழாமலில்லை. வாழ்க்கை என்பது இப்படித்தான் அமையவேண்டும் என்பதை வளர்ந்துவரும் இளைஞர்களுக்குச் சான்றோர்கள் காட்டுவித்து நெறிப்படுத்தாததால் அவர்கள் தடுமாறுகின்றனர். இந்நிலையில் அறக்கருத்துக்களைப் பற்றி அவர்களுக்குத் தக்கமுறையில் போதிப்பார்களாயின் அவர்கள் வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக்கொள்வர். வைணவ சமயத்தின் ஆணிவேரான நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் மக்களுக்கு வேண்டிய அறக்கருத்துக்கள் உள்ளன. அவை உலகை அமைதிவழியில் முன்னேற்றும்.

எதிர்வரும் நூற்றாண்டில் உலகம் கணிப்பொறிவழி அதிசயத்தக்க நிகழ்வுகளைச் சந்தித்தாலும் அன்பின் அடிப்படையில்

18802
சென்னை-600 008

மனித வாழ்க்கை அமையவில்லையெனில் அஃது பாலைநிலமாய் மாறிடும். குலசேகராழ்வார். 'காதல் செய் தொண்டர்க் கெப்பிறப்பிலும் காதல் செய்யுமென் னெஞ்சமே' (பெருமாள் திருமொழி 2.6.)

என்று அன்பின் மேன்மையைப் பறைசாற்றுகின்றார்.

மனித வாழ்க்கைக்கு உயர்பொருளாய் அமைவன அருள், ஒழுக்கம், வாய்மை எனும் உள்ளார்ந்த தகவுகள் ஆகும். ஒருவன் இவற்றின்வழி வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் அவனுக்கு அனைத்தும் தானாகக் கூடிவரும் என்பார் திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி 1.1.9).

இப்பாடல்களின் முடிவைப் பின்னோக்கி ஆயும் நிலையில் ஆழ்வார் அறக்கருத்துக்களுக்குக் கொடுக்கும் முன்னிலை அறியப்படுகிறது.

மனத்திலிருந்து அன்பு ஊற்றெடுத்து மனிதரிடத்தும் விலங்குகளிடத்தும் ஏற்றத்தாழ்வின்றிக் கலந்து பரிமாற வேண்டும். இந்நிலையிலான உயிரிரக்கம், மனிதனை இறைவனிடத்து நெருக்கிப் பேரானந்தத்தை ஊட்டுவிக்கும். (பெரிய திருமொழி 5.8. 1,2).

உலக இயக்கம் இறைவனை நோக்கியே அனைத்து வகையாலும் அமைதல் வேண்டும். உலகின் நிலையாமையையும், மனித மனம் உலகின்பால் பற்றற்றிருக்கும் தன்மையின் மேன்மையையும் அறிந்திருக்கவேண்டும். என்கிற இவ்வுண்மைகளை உள்வைத்தே பெரியாழ்வாரும் பாடுகிறார் (பெரியாழ்வார் திருமொழி 4. 5. 9.).

பன்னிரு ஆழ்வார்களுடைய பனுவல்களைப் பகுத்துத் துருவுவதன்மூலம் அறக்கருத்துக்களைத் திரட்டி வாழ்க்கைப்பண்புநலம் மேம்படக் கருதிப்பார்க்க முடியும். அதன்வழி எதிர்வரும் 21-ம் நூற்றாண்டில் சமுதாயம் சமயம், பண்பாடு, கலாச்சாரம் என்ற ரீதியில் அறிவியல் வளர்ச்சியுடன் ஒன்றுபட்டு நிறைவுடன் முழுமைபெறும். இவையே வைணவ ஆழ்வார்கள் உலகிற்கு நல்கும் பெருங்கொடையாகும்.

அரங்கராசன், டாக்டர் ச. தமிழ் இலக்கிய மரபின் வழி சித்த மருத்துவ நூல்கள் - ஓர் பார்வை

தொன்மையான தமிழ் மொழி இலக்கியங்களாகச் சங்கப் பாடல்கள் உள்ளன. சங்கப் பாடல்களில் உள்ள சில புலவர்கள்

சித்த மருத்துவர்கள் தேரையர், ஐயாதி சிறு வெண்தேரையர், இடைக்காடர், வான்மீகி, சல்லியங்குமரனார், மருத்துவன் தாமோதரனார், மருத்துவன் நல்லச்சுதனார் என்ற சங்ககால மருத்துவப் புலவர்களின் பெயர்கள் பிற்காலச் சித்த மருத்துவத்திலும் உள்ளன.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் உள்ள நோய், பிணி என்ற சொற்கள் சித்த மருத்துவத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவைகளாகும். நோய் என்பது மனநோயையும், பிணி என்பது உடல் நோயையும் குறிக்கும். மனநோயைப்பற்றிச் சிறப்பாகப் பாடிய புலவர் நோய் பாடியார் எனப்பட்டார். வெறி என்ற மனநோயைப்பாடிய பெண்பாற்புலவர் வெறிபாடிய காமக் கண்ணியார் எனச் சிறப்பிக்கப்பட்டார். வெறி என்பதை 18 வகையான மனநோய் வகைகளில் ஒன்றாக அகத்தியர் கிரிகை 18 என்ற சித்த மருத்துவ நூல் கூறுகிறது.

இவ்வாறு தமிழ் இலக்கியமரபு வழிவந்த சித்த மருத்துவ நூல்கள் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை விளக்கமாகக் கூறுகின்றது.

DR. C. RENGARAJAN SIDDHA MEDICAL LITERATURE - AN OUT LOOK

The Sangam Literature are the ancient one in Tamil and they followed the great grammar Tholkappiyam.

Some among Sangam poets were Doctors themselves. Marutthuvar Damodharanar, Marutthuvar Nallanatchchuthanar, Salliam Kumaranar, Theraiyar, Idaikkadar can be found in Siddha Medical Literature, also. This indicates that Siddha Medical Literature follows Tamil Literatury tradition.

We come across with the terms "Noi" and "Pini" in Tholkappiyam and Sangam Literature. These terms are connected with Siddha School of Medicine. 'Noi' denotes mental ill health and 'Pini' means physical illness. A poet was called 'Noi' padiyar because she composed well about mental illness.

The aim of this paper is to study the Siddha Literature in Tamil Literatury tradition.

அரங்கன், முனைவர் கி. மாற்றுப் பெயர்ச் சொற்களில் மாற்றமா

மொழியில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பானது. பண்டைத் தமிழையும் தற்காலத் தமிழையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பல்வேறு நிலைகளில் மொழியமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பிய நெறிப்படி படர்க்கையை ஆண்பால் ஒருமை என்றும் பெண்பால் ஒருமை என்றும் குறிப்பர். அண்மையில் ஏ.கே. இராமானுஜமும் சண்முகம் பிள்ளையும் தற்காலத் தமிழில் ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை என்னும் புதிய பாகுபாடு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதை நுணுகி ஆராயும்பொழுது இத்தகைய பாகுபாடு தோன்றியிருப்பதாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இப்பாகுபாட்டைக் குறிக்கின்ற புதிய உருபன்களோ புதிய மறு பெயர்ச்சொற்களோ (Pronouns) மொழியில் தோன்றவில்லை. பன்மையைக் குறிக்கின்ற விகுதி மட்டும் உயர்திணை ஆண்பாற்சொற்களிலும், பெண்பாற் சொற்களிலும், மறுபெயர்ச்சொற்களிலும் வருகின்றது. இம்மாற்றத்தை மொழி ஒழுங்கு முறையில் (Language System) ஏற்பட்ட மாற்றமாகக் கருதுவதைவிட உருபன்கள் வருகிற முறையில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதலாம். ஆகையால் தொல்காப்பியர் சுட்டியுள்ள படர்க்கை ஒழுங்குமுறையில் மாற்றம் ஏற்பட்டதாகக் கருதுவதை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதைச் சான்றுகளுடன் இக்கட்டுரை தெளிவாக்குகிறது.

அரசு, முனைவர் வீ. தமிழ் அரங்க வரலாறு - தெருக்கூத்து அடிப்படையிலான சில விவாதக் குறிப்புகள்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் இருந்து வந்த அரங்கத்தின் வரலாறு குறித்து இரண்டு கால அடிப்படைகளில் புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது.

13 - ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட (அல்லது பிற்காலச் சோழர் ஆட்சிக்கு முற்பட்ட) அரங்க வரலாற்றை ஒரு நிலையிலும், அதற்குப் பிற்பட்ட வரலாற்றைப் பிறிதொரு நிலையிலும் காண வாய்ப்புண்டு.

இக்கட்டுரையில் 13 - ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வரலாறு தொடர்பான குறிப்புகளில் தெருக்கூத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் அரங்க வரலாறு தொடர்பான சில விவாதக் குறிப்புகளை முன் வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழருக்கென கூத்து என்ற அரங்கம் தொடக்க காலம் முதல் இருந்து வந்தமையை, பேரா.கா. சிவத்தம்பி, பேரா. சி. மௌனகுரு போன்றவர்களின் ஆய்வுகளும் வேறு பல ஆய்வாளர்களின் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. இந்தக் கூத்து பிற்காலச் சோழர் ஆட்சிக்குப் பின் என்ன வடிவம் கொண்டது; அதில், இன்றும் வீரியத்தோடு செயல்படும் தெருக்கூத்தின் இடம் என்ன? என்ற விவாதத்தைத் தமிழ் அரங்க வரலாற்றில் முதன்மையான விவாதமாக முன்னெடுப்பது அவசியமாகப் படுகிறது.

இவ்விவாதத்தை முன்னெடுப்பதில் எழும் அடிப்படையான சிக்கல்களைப் பின்வரும் வகையில் நாம் வரையறை செய்யலாம்.

- தெருக்கூத்து நாட்டார் அரங்கின் ஒரு பகுதியான சடங்கை முதன்மைப்படுத்திய அரங்கேயன்றி, அது அரங்கம் என்ற பொருளில் முழுமையானது இல்லை என்ற கருத்தாக்கம் பரவலான பொது அபிப்பிராயமாகவும், அதனை உறுதிப்படுத்தும் வகையில் வெளிநாட்டு, உள்நாட்டு ஆய்வாளர்களின் ஆய்வுகளும் அமைந்துள்ளன.

- இக்கருத்தாக்கத்தை மறுபரிசீலனைக்கு ஆட்படுத்துவது அவசியம். தெருக்கூத்து தன்னளவில் ஒரு முழுமையான அரங்காக இருப்பதை உறுதிப்படுத்தத் தரவுகள் உள்ளன. இதன் அடிப்படையில் தமிழக நாட்டார் அரங்கின் உச்சவளர்ச்சியுற்ற 'தமிழர்களின் அரங்காக' இதனை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

- மேற்குறித்த கருத்தாக்கம் உறுதிப்படுவதற்குத் தெருக்கூத்தின் பின்வரும் தன்மைகள் அடிப்படையாக அமையக்கூடும்.

- தொண்டை மண்டலத்தில் உச்ச வளர்ச்சியுற்றிருக்கும் தெருக் கூத்தின், கூத்து வடிவங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறையில் இருந்தமைக்கான தரவுகள் உள்ளன.

கேரளம், கர்நாடகம் போலன்றி - ஆதிக்கச் சாதியினரின் பண்பாட்டு நடவடிக்கைகள், தமிழகத்தில் தமிழை முதன்மைப்படுத்தாத தன்மையால், இவை புரவலர்கள் இல்லாத இடங்களில் மாற்றம் பெற்றன. புரவலர் உள்ள இடங்களில் செழுமையுற்றன.

- கதகளி, யட்சகானம் ஆகிய அவைக்காற்று கலைகளின் அடிப்படை அம்சங்களே தெருக்கூத்தின் அடிப்படை அம்சங்கள். இவை எவ்வகையில் கொண்டும் கொடுத்தும் உறவு கொண்டன

என்பது முக்கியம். கதகளி, சமசுகிருத உறவால் வேறு நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. யட்சகானத்திற்கு அந்த வாய்ப்பு குறைவு. தெருக்கூத்திற்கு அறவே இல்லை. ஆனால் அவ்வப்போது புனிதப்படுத்தும் முயற்சிகள் நடந்தன. கலை அதன் போக்கில், அறிவு சார்ந்த, மொழி சார்ந்த, மரபு சார்ந்த நிலையில் அடுத்த கட்டத்தை அடைய வேண்டும். தமிழகத்தில் அவ்வகை வாய்ப்பைத் தெருக்கூத்து பெற்றிருக்கலாம். அது அவ்விதம் நடைபெறாமல், பின்னிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதே வரலாறு. 'சடங்கு' என்றும் 'நாட்டார் அரங்கு' என்றும் அது குறைக்கப்பட்டது.

- பரதம் தொடர்பான தமிழக வரலாற்றை இங்கு மேற்குறித்த வரலாற்றோடு இணைத்துப் பார்க்கலாம். 1920 தொடங்கி 1950-களில் அதற்குப் புதிய பரிமாணம் எப்படி உருவாக்கப்பட்டது என்ற வரலாற்றோடு தெருக்கூத்து நிலைகளை இணைத்துப் பார்க்கலாம்.

- வசதிக்காகச் 'செவ்வியல் அரங்கு' என்று தெருக்கூத்தைச் சொல்வோமானால் அது தவறாக அமையாது. மாறாகச் செவ்வியல் அரங்கு என்று கூறுவதற்கான அடிப்படைத் தன்மைகளை அது பெற்றுள்ளது. பார்வையாளன், பனுவல் உருவாக்கம், நடிகனின் தன்மைகள், ஒப்பனைகள், இசை போன்ற பல கூறுகளில் இதற்கான அடிப்படைகளைக் காட்டும் தரவுகள் உள்ளன. இதனைச் சமசுகிருத அடிப்படையிலான, செவ்வியல் அரங்காகக் கொள்ளாது, தமிழருக்கான செவ்வியல் அரங்காகத் தனித்துப் பார்க்கும் தேவையையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- தரவுகளை முழுதும் அறியாமை (பகுதி பகுதித் தரவுகள் அடிப்படையில் ஆய்வு மற்றும் அபிப்பிராயம் கொள்ளல்)

- ஆதிக்கச் சாதியினரின் பண்பாட்டு நடவடிக்கைகள் (தமிழ் மொழி, தமிழ் மரபு சார்ந்த நிலைக்குப்புறம்பாக நடந்தமை)

- முன்னரே உருவாக்கப்பட்ட கோட்பாடு மற்றும் கருத்தாக்கங்களை வெளிக்கொணரவே கள ஆய்வு செய்யும் காலனிப் பார்வையுடைய ஆய்வாளர்களின் தன்மை

போன்ற பல காரணங்களால் தமிழ் அரங்க வரலாற்றில் தெருக்கூத்தின் அல்லது கூத்தின் அரங்க வரலாற்றைத் திரித்துக்காணும் நிலைமை உள்ளது. இதனை விவாதப் பொருளாக்குவது அவசியம். இந்த அடிப்படையில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

அருள்ராஜ், முனைவர் வே.சா. பழந்தமிழர்களின் நீர்வழிப் போக்குவரத்துத் திறன் - ஓர் இலக்கியக் கண்ணோட்டம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மேற்கத்திய நாடுகளுடனும் கிழக்கத்திய நாடுகளுடனும் கடல் வணிகம் செய்துச் சிறப்புற்றிருந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் பழந்தமிழ் இலக்கியம் மற்றும் தென் திராவிட இலக்கியங்களிலும் வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளிலும் வரலாற்றுச் சான்றுகளிலும் கல்வெட்டு மற்றும் தொல்பொருள் சான்றுகளிலும் காணக்கிடக்கின்றன. அதற்குக் காரணம் தமிழகத்தின் மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருப்பது மட்டுமன்றி, நம் பழந்தமிழர்களின் நீர்வழிப் போக்குவரத்து அறிவும் ஒரு சிறந்த காரணமாகும். கடல் வணிகத்திற்கு மட்டுமின்றி, மீன் பிடிப்பதற்கும் கடல் கொள்ளைக்கும் நீர்வழிப் பயணத்திற்கும் விளையாட்டிற்கும் படகுப் போட்டிக்கும் நீர்வழி ஊர்திகள் பழங்காலந்தொட்டே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

பழந்தமிழ் இலக்கியங்களில் புனை படகு, ஓடம், முடுக, கைப்பரிசு, சோங்கு, அம்பி, திமில், நாவாய், வங்கம், கலம், மதலை, கப்பல், பஃறி போன்ற பல்வேறு நீர்வழி ஊர்தி வகைகள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய ஊர்திகள் கட்டப்பட்டமுறை, அவற்றின் வகைகள், உறுப்புகள், அவற்றைச் செலுத்துவதற்குக் கையாளப்பட்ட உத்திகள், கடலில் எழும் அலைகளின் தோற்றம், தன்மை மற்றும் வகைகள், நீரோட்டத்தின் தன்மை, பருவக் காற்றுகள், விண்மீன்கள் ஆகியவை பற்றிய அறிவு, கப்பலோட்டியின் திறமை, திசைகள், நேரம், கரைகள் ஆகியவற்றை அறிதல், ஊர்திகள் கட்டுவதற்குத் தகுதியான மரங்களைத் தேர்ந்தெடுத்தல் போன்ற இன்னோரன்ன தொழில் நுட்ப அறிவு பழந்தமிழருக்கு நிரம்ப இருந்ததற்கான சான்றுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. கடலுக்குள் சென்ற ஊர்திகள் கடற்கரையை வந்தடைவதற்கு வசதியாகத் துறைமுகங்களும் கலங்கரை விளக்கங்களும் தமிழர்களால் கட்டப்பட்டிருந்தன என்ற செய்தியினையும் இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

மேற்கூறப்பட்ட நீர்வழிப் போக்குவரத்துத் திறன்கள் தமிழரிடம் இருந்ததற்கான சான்றுகளைத் தமிழ் இலக்கியங்கள் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பழந்தமிழ் இலக்கியங்களும் மலையாளம் போன்ற பிற பழந்தென் திராவிட மொழி இலக்கியங்களும் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் மூலம் பழந்தமிழரின் தொழில்நுட்பத் திறன், வானியல், அறிவியல், நீரியல் துறைகள் சார்ந்த அறிவு போன்றவை வெளிப்படுத்தப்படும். அறிவியல் மேம்பாடு மிக்க இக்காலத்தில் காணப்பெறும் பல்வேறு துறைகள் சார்ந்த அறிவினை நம் பழந்தமிழர் பல நூற்றாண்டுகட்கு முன்னரே பெற்றிருந்த திறம் இவ்வாய்வின் வழி உலக அறிஞர்கள் அரங்கில் வெளிப்படுத்தப் படும்.

அருளி, ப. தமிழில் கலைச்சொல் உருவாக்குவதற்கு உரிய நெறிமுறைகளில் - மீவிரைவுச் சொல்லாக்க முறை

கலைச்சொல் என்பதன் வரைமுறை - கலைச்சொல் உருவாக்கம் - பண்டைய முறை - ஆங்கிலேய ஆட்சிக் காலத்து முயற்சிகள் - தமிழகத்தில் அறிவியல் கலையியல் பாடநூல்கள் ஆக்கம் - இலங்கை மொழித் திணைக்கள முயற்சிகள் - தமிழகத்தில் கடந்த கால் நூற்றாண்டுக்கால முயற்சிகள் - இதுவரை வெளிப்பாடுற்றுள்ள கலைச்சொற்கள் உருவாக்கம் பெற்றுள்ளமையில் அமைந்திருக்கும் முறைகள்.

வடமொழிவழி தமிழ் அறிவியல், கலையியல் நூல்களில் திணிந்துள்ள கலைச்சொற்களின் பயன்படுத்தத்திற்குரிய காரணங்கள்.

பழந்தமிழ்ச் சொற்களின் பாங்கு அறியாமல் புதியன படைக்க எடுத்த முயற்சிகள் - ஆங்கிலக் கலைச்சொல்லின் மூலங்கண்டு - அதற்கேற்பச் சொற்படைக்கும் நெறி - கலைச்சொல்லின் பொருள் தெளிந்து - அதற்கேற்ற நேர்பொருளில் தமிழில் அமைக்கும் முறை

ஆக்கவேண்டிய சொல்லுக்குரிய பொருளை அறிந்தோ - அச்சொல்லுக்குரிய பிற சொற்களில் உள்ள தெளிவுச் சொற்களை அறிந்தோ - அச் சொல்லுக்குரிய பொருளின் தோற்ற வகை ஒப்புமை அறிந்தோ - அச்சொல்லுக்குரிய பொருளின் பயன்பாட்டு நிலை அறிந்தோ - உரிய முறையில் நம் மரபுக்கேற்ப எளிதாகவும் நிறைவாகவும் நேரிய சொல்லொன்றை உருவாக்கிக்கொள்ளும் முறை.

ஆங்கிலக் கலைச்சொல்லின் வேர்ச்சொல்லுக்கு இணையான நேரிய தமிழ் வேர்ச்சொல்லினின்று அடிப்படைச் சொல்லை உருவாக்கம் செய்து கொண்டு அம் மொழிக்கண் அவ்வகையில் பெருகியுள்ள பன்னூற்றுக்கணக்கான அறிவியல், கலையியல்

கலைச்சொற்களை விரைந்துருவாக்கிக்கொள்ளும் நெறிமுறைகள்.

இவ்வகையிலமைந்த உடனடிச் செயற்பாடுகள், அதற்குரிய முன் - திட்டமீடுகள் - சிக்கல் வருமிடங்களில் கையாள வேண்டிய தீர்வு முறைகள் ஆகியன இவ் ஆய்வுக் கட்டுரையுள் பதிவுறுகின்றன.

அலீம், டாக்டர் எம்.ஏ. கிராமப் பெண்களின் தற்கொலை...

கிராமப் பகுதிகளில் வாழக்கூடிய பெண்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கிராமப்புறப் பெண்களின் அறிவுக் குறைபாடு, இவர்களின் நாகரீகப் பழக்க வழக்கங்கள், இப் பெண்கள் வாழ்கின்ற சுற்றுச் சூழல் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் இவர்களின் பின்தங்கிய பொருளாதார நிலை ஆகியன கிராமப் பகுதிகளில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாய்த் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்வதற்கு வித்திடுபவையாக அமைகின்றன. இவ்வாறு தற்கொலைக்குள்ளாகும் பெண்களைப் பற்றிக் கடந்த 1993 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரைத் திருச்சி மாவட்டத் தென் கோடிக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளைப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

இந்த ஆய்வின்படி 10 வயது முதல் 20 வயதிற்குட்பட்ட பெண்களே அதிகம் (44.4%) தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரிகின்றது. இவ்வாறு தற்கொலைக்குள்ளாகும் பெண்களில் பெரும்பாலானவர்கள் (82.2%) திருமணமானவர்களாக இருக்கின்றனர். இவர்களில் 37.8 விழுக்காட்டுப் பெண்கள் 10 முதல் 15 வயதிற்குள்ளும், 56.7 விழுக்காட்டினர் 16 முதல் 20 வயதிற்குள்ளும் திருமணமானவர்களாக இருக்கின்றனர்.

கிராமப் பகுதிகளில் தற்கொலை முயற்சியை மேற்கொள்ளும் பெண்களில் அதிகமானவர்கள் (84.4%)குறைந்த வருவாய் உடையவர்களாகவும், 53.3 விழுக்காட்டினர் பள்ளி சென்று படிக்காதவர்களாகவும், 26.6 விழுக்காட்டினர் மூன்று முதல் ஐந்து வகுப்பு வரைப் படித்தவர்களாகவும் 17.7 விழுக்காட்டினர் ஆறு முதல் எட்டு வகுப்பு வரைப் படித்தவர்களாகவும் இருக்கின்றனர்.

தற்கொலை முயற்சிக்கும், பெண்களின் மாதவிடாய்த் தினங்களுக்கும் உள்ள தொடர்பை ஆராயும்போது 62.3% பெண்கள் தங்களின் முன் மற்றும் மைய மாதவிடாய் நாட்களிலேயே இம்முயற்சியில் அதிகம் ஈடுபடுவதாகத் தெரிகின்றது. கிராமப்

பெண்கள் மாலை நேரங்களிலேயே (35.5%) அதிகம் தற்கொலை முயற்சியை மேற்கொள்கின்றனர். தற்கொலைக்காகக் கிராமப் பெண்கள் பெருமளவு (84.4%) விஷமுள்ள நச்சுத் தாவரங்களையே

பயன்படுத்துகின்றனர். இவ்வாறு தற்கொலைக்காக விஷம் உட்கொண்டவர்களுக்கு என்ன முதலுதவிச் சிகிச்சை செய்ய வேண்டும் என்பதை 60 விழுக்காட்டுக் கிராமத்தினர் அறியாமல் இருக்கின்றனர்.

கிராமங்களில் தற்கொலை செய்துகொள்ள முற்படுகின்ற பெண்கள், பல வகைக் காரணங்களை மையமாக வைத்து இம்முடிவை எடுப்பதாகக் கூறுகின்றனர். இவ் ஆய்வில் 62.2 விழுக்காட்டுப் பெண்கள் தத்தம் கணவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இம் முயற்சியை மேற்கொண்டதாகக் கூறுகின்றனர். இவ்வாறு கணவன், மனைவி உறவில் விரிசல் ஏற்படுவதற்குக் கணவரின் மது அருந்தும் பழக்கம், குடும்பச் செலவுக்குப் பணம் கொடுக்காமை, மனைவியை அடித்துத் துன்புறுத்துவது போன்றவை முக்கியக் காரணங்களாக இருக்கின்றன. இதையடுத்துத் தந்தை, தாய், மாமனார், மாமியார் ஆகியோரிடையே ஏற்படக்கூடிய பிணக்குகளும் மனவருத்தங்களும் கூடக் கிராமப் பெண்களின் தற்கொலை முயற்சிக்குத் தூண்டுகோலாக அமைகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பல்வேறு பெண்கள் நலத் திட்டங்களை ஊரகப்பகுதிப் பெண்களிடம் விளக்கி அவர்களை அத்திட்டங்களில் ஈடுபடுத்திக் கிராமப் பெண்களின் கல்வி கற்கும் ஆற்றலை வளர்த்து, அவர்களின் திருமண வயதை உயர்த்தி, கிராமப் பெண்களின் தனி நபர் வருவாயை உயரச் செய்து அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் பட்சத்தில், கிராமப் பெண்களின் மனத்தில் தற்கொலை எண்ணம் எழுவதையே தடை செய்ய முடியும்.

எனவே, பெண் சுமை பெரும் சுமை என்று இச்சமுதாயம் எண்ணும் எண்ணத்தை மாற்றி, பெண்களின் நலன்தான் அரசின் நலன் என எண்ணும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பல்வேறு பெண்கள் நலத் திட்டங்கள் தமிழகக் கிராமப் பெண்களின் தற்கொலை எண்ணத்திற்கு ஒரு தடுப்புக் கவசமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அழகேசன், முனைவர் சு. தொல்காப்பியர் சுட்டும் வினாக்கள்

தொல்காப்பியர் நூ ன்மரபில் 'ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினா' (32) என வினா எழுத்துக்களைச் சுட்டுகிறார்.

இளம்பூரணர், "தன்னின முடித்தல் என்பதனால் எகரமும் யகர ஆகாரமும் வினாப் பெறும் எனக் கொள்க' எனக்கூறி எ, யா வினா எழுத்துக்களாக அமைதலைக் குறிப்பர். இதனையே நன்னூலாரும் ஏற்று,

எயா முதலும் ஆ ஓ ஈற்றும்

ஏயிரு வழியும் வினாவாகும்மே (நூற்பா 67)

எனச் சூத்திரம் செய்தார்.

ஆயின் தொல்காப்பியர்,

'ஒன்றறி சொன்முன் யாதென் வினாவிடை' (எழுத்து.172).'

'யாவென் வினாவும் ஆயியல் திரியாது' (எழுத்து.175)

'யாவென் வினாவின் ஐயென் இறுதி" (எழுத்து.178)

என எழுத்ததிகாரத்துப் பல இடங்களில் 'யாவென் வினாவையும்', யாவன், யாவள், யாவர் (பெயரியல்.7), யாது, யா, யாவை (பெயரியல்.13) என்ற வினாப் பெயர்களைப் பெயரியலிலும் "யார் என்னும் வினாவின் கிளவி,' (வினையியல்.13) 'எவன் என் வினாவின் கிளவி', (வினையியல்.22) என யார், எவன் என்னும் வினைகளை வினையியற்கண்ணும் சுட்டுகிறார்.

மேலும் யாது, எவன் என்னும் சொற்களைப் பயன்படுத்தும் பாங்கையும் கிளவியாக்கத்துள் (நூற்பா.32) குறிப்பிடுகிறார். மட்டுமின்றி, அவரே தம் நூற்பாக்களில் பல இடங்களில் எகர, யாகார வினாக்களைப் பயன்படுத்துகிறார் (தொல். 590, 1149)

எனவே, தொல்காப்பியர் சுட்டும் வினாக்கள் எவை என்பது ஆய்வுக்குரியதாகிறது. இதனையே நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது. மேலும், தொல்காப்பிய வினா குறித்த நூற்பாக்களை விளக்குவதோடு, உரையாசிரியர்களின் கருத்து முரண்பாடுகள், பிற இலக்கண, மொழியியலாளரின் வினாக்கள் குறித்த சிந்தனைகளுக்குத் தொல்காப்பியர் வழிவகுத்த பாங்கு போன்றனவற்றையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

DR. S. ALAGESAN A STUDY ON TOLKAPPIYAR'S INTERROGATIVES

Tolkappiyar denotes ā, ē, ō as interrogative markers (Eluttu: 32) The commentator Ilampuranar explicits `ē' and `yā' also as interrogatives. Another traditional grammarian Pavananthi Munivar in Nannul denotes ē, yā, ā, ō and ē as interrogative markers.

`e ya mutalum a o irrum e yiru valiyum vinavakumme' (Nan: 67)

Also Tolkappiyar explicits, yā as interrogatives,

`Oṉṟari coṉmuṉ yāteṉ viṉavitai' (Eluttu:172)

`Yāven viṉāvum āyiyal tiriyātu' (Eluttu:175)

`Yāveṉ viṉāviṉ aiyeṉ iruti (Eluttu:178)

He denotes yāvaṉ, yāvaḷ, yāvar, as interrogative nouns (Peyariyal:77) and yar, evan as interrogative verbs (Vinaiyiyal:22). Also he uses yā, e as interrogative markers in his own nuṟpās in Tolkappiyam (Tol:590, 1149).

The whole research is about what exactly Tolkappiyar wants to points out as interrogatives. This is the main objective of this paper. The researcher also wants to find out the truth contained in the commentator's interpretation of Tolkappiyar's nurpas and also in what way Tolkappiyar gives way for further grammarians like Pavananti to give diverse thinking in this aspect.

அறிவுநம்பி, முனைவர் அ. நாட்டுப்புற அரங்கக்கலைகள் - புத்துருவாக்கம்

தமிழரின் பழைமை வாய்ந்த மரபுகள் வெவ்வேறு காரணங்களால் காலந்தோறும் மாற்றங்களைப் பெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக மரபுக் கலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகுதி. பண்டைய மரபுக் கலைகளில் பல சிதிலமாகியுள்ளன. வேறு சில அடியோடு அழிந்து விட்டன. பண்டைய மரபுக் கூறுகளைப் பேணவும், காலத்திற்கேற்ற வண்ணம் கலைகளைப் புத்துருவாக்கம்

செய்யவும் வேண்டிய காலகட்டமே நிகழ்காலமாகும். இருபத்தோராம் நூற்றாண்டில் பழந்தமிழ் மரபுவேர் சிதையாமலும் புதுமைகள் பூத்துக்குலுங்குமாறும் கலைகளைப் பேண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்த ஆய்வுக் கட்டுரை மூன்று படிநிலைகளை உள்ளடக்கியதாக அமைகின்றது.

1. நாட்டுப்புறக் கலைகள் சூழல், தேவை போன்ற அடிப்படைக் காரணங்களைக் கொண்டு மண்வாசனையைப் பரப்ப வல்ல சிற்றூர் மக்களின் அரங்கக் கலைகள் ஆகும். மக்களுடன் இயைந்த, பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற இந்தக் கலைகள் பெற்றுள்ள ஒவ்வொரு கூறும் குறிக்கத் தக்கது. இசை, நடனம், கதை என்பன ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டிய பகுதிகளாகும். பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிகளை இக்கலைகள் இக்கூறுகளின் வழியே பரப்பி வந்தன.

2. காலந்தோறும் கலைகளில் மாறுபாடுகள் அமைவது இயல்பானது. வளர்ச்சியை நோக்கியவையாக இம்மாற்றங்கள் ஏற்கப்பட வேண்டும். ஆனால் மறுதலையாகப் பண்பாட்டுக்குக் குந்தகம் விளைவிப்பனவாகப் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. நாகரீகம் என்ற பெயரில் பண்பாட்டிற்கு எதிரிடையானவை இக்கலைகளில் கலந்திருப்பதும், அரசியல், திரைப்படம் போன்றவற்றின் தாக்கங்கள் வெகுவாக ஊடுபரவியிருப்பதும் வெள்ளிடைமலை. இன்றைய நிகழ்த்து முறைகளை அளவுகோலாகக் கொண்டு பண்டைய தமிழ்க் கலை மரபுகளையோ பண்பாட்டுக் கூறுகளையோ இனங்காண இயலாது. பார்வையாளர்களின் எதிர்பார்ப்பு, கலையை விலையாக்கும் கலைஞர்கள், கலைகளில் புறக்கூறுகளை இணைத்துத் தீரவேண்டிய கட்டாயம் போன்றவை காரணங்களாகும். நேரம், காலம் போன்றவையும் கருதப்பெற வேண்டியவையாகிவிட்டன.

3. பண்டைய அரங்கக் கூறுகள் சேதாரமாகிவிடாமல் அவற்றைக் கவனத்துடன் பின்பற்ற வேண்டும். அதேவேளையில் காலத்திற்குகந்த மாறுபாடுகளை அமைப்பதும் தேவையாகின்றது. குறிப்பாக நேரக் கட்டுப்பாடு, கதை, பாடல்கள் போன்றவை கருதத் தக்கன. அவசரவுலகத்திற்கு ஏற்ற மொழிநடையில், கட்டுமானத்தில் கலைகள் உருவாக்கப் பெற வேண்டும். புராண, இதிகாசக் கதைகளிலிருந்து விலகியோ, அவற்றில் நடப்பியலுக்குரியனவற்றை மட்டும் எடுத்துக் கொண்டோ கதைக்களம் அமைக்கப்பெற வேண்டும். இன்றைய சிக்கல்களை விளக்கும் குடியின் தீமை, கல்வியற்ற சமுதாயக்கேடு, தீண்டாமை போன்ற சமுகக் கொடுமை பலவற்றை இக்கலைகளின் வழியே பொதுமக்களுக்குக் கொண்டு

செல்லவியலும். இசை, நடனம் போன்ற கூறுகளிலும் பழமை, புதுமை ஆகியவற்றின் கூட்டிணைப்பில் மக்கள் செய்திகள் பேசப்பெறுமாறு கலைகளை உருவாக்குவது பயன்தர வல்லது. கேரளாவில் சாத்திரிய சங்கீத் பரிசத்து போன்ற அமைப்புகள் அறிவியல் செய்திகளைக் கூட மிக எளிய முறையில் நாட்டுப்புற அ ' ங்கக் கலைகளின் வழியே வெளிப்படுத்தி வருகின்றன. அறிவொளி இயக்கம் வெற்றி பெறுவதற்கு நாட்டுப்புற நாடக வகைகள் உதவின. இது போன்ற காலத்துக்கேற்ற கதையமைப்புகளைத் தேர்ந்து, தமிழ்ப் பண்பாட்டின் சுவடுகளில் கால்பதிக்குமாறு மரபுக் கூறுகளில் எவை எவை எந்தெந்த அளவுகளில் மாற்றம் பெற வேண்டுமென்பதை இக்கட்டுரை முன் வைக்கிறது.

பண்டைய நிகழ்த்துமுறை, இன்றைய நடப்பு முறை, தேவையான மாற்றங்களுடனான - புத்துருவாக்கம் பெற்ற - எதிர்கால முறை ஆகியவற்றை உரிய கூறுகளில் பொருத்திக் காட்டி விளக்குவது இக்கட்டுரையின் பாடுபொருளாயமையும்.

DR. A. ARIVUNAMBI FOLK PERFORMING ARTS - DIAGNOSIS

Traditional features of the ancient Tamils are getting changed day by day due to various reasons. In particular the changes are seen among the traditional arts. Many arts are almost dead while some other are going to disappear into thin air. Hence it is high time to preserve the traditional arts of the Tamils. It will help the traditional arts to march ahead of the 21st Century.

Folk performing arts are born due to cater various needs. They are inter related with the life of the people. They expose the life style of the ancestors. Various elements like music, dance, make-up and stories reveal the multifarious aspects of the Tamils' life.

Changes in arts are quite natural. But they should indicate the development of the arts. But now-a-days the so-called changes are spoiling the culture. In the name of Modernism the evil features have creeped into the arts and the influence of politics, cinema are seen everywhere. It may be due to various reasons like the expectation of the audience, communication of

the arts, an enthusiasm to introduce modern elements in the arts. In order to do give perfection, the elements of the art should be reconsidered to suit the tastes of all.

Without spoiling the traditional roots the folk performing arts are to be rebuild with the indispensable elements. Most of the folk arts perform round the clock. They are based on the episodes of the puranics or epics in general. The music and songs are very ages old since they are followed traditionally. The style of the language is hyperbolic. All of these elements must be changed to adorn the present day norms.

The social problems and other essential themes must be taken into consideration. We may interpret the puranic or epic stories, suitable to the modern world. For example we have the traditional story of Lord Muruga in which he marries Valli, a girl from Kuravaa Community. In this story non-dowry, inter-caste marriage is obvious. We must deal with these elements in the modern point of view. On the other hand, the artists must choose the modern stories like eradication of untouchability, importance of education, social evils like dowry, liqourism, casteism and so on. In Kerala State, the Sastriya Sangeeth Parikshat is organising folk arts in the modern form to educate the public through science. In Tamil Nadu also the Arivoli Iyakkam (Movement for the eradication of illiteracy) is utilising this folk performing arts to preach the essential sermons to the public.

Preservation of the traditional roots and the adoptations of the modern features are the two sides of the same coin meant to reform the folk performing arts. Since the folk performing arts are the powerful media we can make the most of it by projecting, teaching, painting the errors in a less satirical way to the people in various angles.

அஜ்மல்கான், முனைவர் பீ.மு. இஸ்லாமும் சமயப் பன்மியமும்

சமயங்களின்பெயரால்நடைபெறும் வேறுபாட்டு உணர்வுகளுக்கும் இவ்வுணர்வுகளின் அடிப்படையில் எழும் குழப்பங்களுக்கும் காரணம் ஒவ்வொரு சமயத்தையும்சார்ந்த

அடிப்படைவாதி (fundamentalist) களும் அவர்களது எண்ணங்களும் செயல்களுமே ஆகும். இந்நிலை நீங்குவதற்கு, ஒவ்வொரு சமயமும் வலியுறுத்தும்சமயப்பன்மியம் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துதல் அவசியமாகும். இவ்வகையில் சமயப் பன்மியத்திற்கு இஸ்லாமியசமயம்ஏற்படுத்தும் தடைகளாக மக்கள்மத்தியில் வழங்கும் ஒரு சில கருத்துக்களையும் அவற்றின் உண்மைத்தன்மைகளையும் விளக்குகிறது இக்கட்டுரை.

இஸ்லாம் வலியுறுத்தும் உண்மையானசகோரத்துவம்-சமயப்பொதுமையைச்சரிவரப் புரிந்துகொள்ளாத சில அடிப்படை இஸ்லாமிய சமயவாதிகள் "இந்தியாவில் இஸ்லாம்" என்றவுடன் மாறுபட்ட வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயல்படுகின்றனர். இஸ்லாமிய சமயத்துள் காணப்பெறும் சமயப் பன்மியத்திற்கு எதிரான கருத்துக்களைக்காண்பதற்கு முன்இஸ்லாம், இந்து சமயங்களுக்குரிய உறவு நிலைகள் அரசியல், சமூகப் பின்னணியுடன் விளக்கப்படுகின்றன. ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவில் மேற்கொண்ட பிரித்தாளும் முயற்சிகளுள் ஒன்றே இந்து, முஸ்லிம் காழ்ப்புணர்வின் தொடக்கம் என்றும் கூறலாம்.

இந்து சமயத்திலிருந்து இஸ்லாமிய சமயத்தை வேறுபடுத்திக் காட்டும் ஓரிறைக்கொள்கையானது இந்து சமயக் கொள்கையினின்றும் முற்றிலும் முரணானது அல்ல - இந்து இஸ்லாமிய கலாச்சாரங்களின் சங்கமம் இந்திய மண்ணில் நல்ல பல புதிய சமயக் கோட்பாடுகளும், தத்துவங்களும் வளர்வதற்குக் காரணமாயிருந்தது.

அரசும், அரசாட்சியும் செய்யும் தவறுகளை அந்தந்த அரசு சார்ந்த சமயங்களைச் சார்ந்தனவாய்க் கொள்ளக்கூடாது. சமயப்பன்மியத்திற்கு ஆதாரமாகத்திருக்குர்ஆனில் நிறைந்துள்ள கருத்துக்களுள் ஒருசில சான்றுகளும்-இஸ்லாமிய சமய வரலாற்றின் நிகழ்வுகளும் விளக்கப்படுகின்றன.

இஸ்லாமிய சமயத்தில் உள்ளவிக்கிரக வழிபாட்டு எதிர்ப்பு என்பது இந்தியச் சூழலை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட கருத்தல்ல இது வரலாற்குப் பின்னணியுடன் விளக்கப்படும். அனைத்துச் சமய இறைவழிபாட்டுத் தலங்களின் முக்கியத்துவத்தைத் திருக்குர்ஆன் உணர்த்தும் முறையும் விளக்கப்பெறும்.

இஸ்லாம் மாற்றுச் சமயத்தவரின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மதிப்பதல்ல என்ற குற்றச்சாட்டும் உண்மைத்

தன்மையும் - மதமாற்றம் பற்றிய கருத்தும் மக்களிடையே ஒற்றுமையும் சகிப்புத்தன்மையும் ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டமார்க்கமே இஸ்லாம் என்பதுபோன்ற கருத்துக்கள் சரித்திரச் சான்றாதாரங்களுடன் விளக்கப்படும். இந்நிலையைப் பரிபூரணமாக உணராத இஸ்லாமிய சமய அடிப்படைவாதிகளின் போக்குகளும் விளைவுகளும் சுட்டிக்காட்டப்படும்.

ஆல்பென்ஸ் நதானியேல், முனைவர் மு. மொழியியலில் உயிர் மெய் ஓர் - ஆய்வு

உயிரினங்களின் நினைவலையை வெளிப்படுத்தும் வடிவங்கள் மூன்று வகையின. 'ஒன்று வாய்மொழி, மற்றொன்று எழுத்து மூலம் பரிவர்த்தனை, பிறிதொன்று செய்கையிற்பொருள் உணர்த்துதல்'. என்பர் கிலால்முஸ்தபா.

வாய்மொழி எல்லா உயிரினங்களிலும் காணப்படுகின்றது. இந்த ஒலிக்குறிப்பு எல்லா உயிரினங்களிடத்து இருந்தாலும் மனிதன் மட்டும் அவ் ஒலிக்குறிப்பை வளர்த்துக்கொண்டான். அவனுடைய மொழி வளம் பெற்றது. இதனால் மனிதன் மற்ற உயிரினங்களைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்பட்டான்.

ஒலிக்குறிப்புகள் எழுத்துக்களையே ஒலித்தன. இதனை நன்னூலார் 'மொழி முதற் காரணமா மணுத்திரளொலி எழுத்து' என்றார்.

எழுத்துக்கள் வாக்கியமாகவே வருமென எண்ணத் தேவையில்லை. ஓவியமாக சிலையாக இவை போன்ற கலை வடிவினதாக எழுத்து, தன்னை உணர்த்தும். இதனை உணர்ந்த இலக்கண ஆசிரியர்கள் எழுதப்படுதலின் எழுத்து என்றனர். எப்படி எழுதினாலும் அக்குறியீடு எழுத்தைக் குறிக்கும்

எழுத்துக்குரிய வடிவம் இரண்டு. ஒன்று ஒலிவடிவம் மற்றொன்று வரிவடிவம். செவியால் கேட்க நிற்பது ஒலிவடிவம். கண்ணால் காண நிற்பது வரிவடிவம். நிலைபெற்றது வரிவடிவம். நிலையற்றது ஒலிவடிவம். ஆகையால் ஒலிவடிவத்தை விட வரிவடிவமே சிறந்தது. எழுத்துக்கள் வாழ்கின்ற மக்களின் குணங்களைக்காட்டும் மிக உயர்ந்த கண்ணாடியாக விளங்குகின்றன. மொழி ஆற்றின் கரையென்றால் எழுத்து அந்த ஆற்றில் ஓடும் நீர் போன்றது.

எழுத்து இறைவனின் படைப்பிலக்கணத்தோடு ஒன்றிக் காணப்படுகிறது. உலகில் உயர் செம்மொழியாம் தமிழில் உள்ள

எழுத்துக்கள் இதற்குப்பகலவன் போன்று விளங்குகின்றன.

எல்லா வேதங்களும் உயிர் தனித்து இயங்கும் என்று கூறியுள்ளன. அதுபோன்று தான் உயிர் எழுத்துக்கள் தனித்து இயங்கும் தன்மை பெற்றுள்ளன.

உலகிலுள்ள எந்த மெய்யும் (உடம்பு) தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாதது. அது போன்று மெய்யெழுத்துக்கள் தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாதவை.

உலகில் மெய் இருக்கக்கூடிய இடத்தில் உயிர்கள் இணைந்து உயிர்மெய் ஆகின்றன. அதே நேரத்தில் உயிர் இருக்கும் இடத்தில் மெய்கள் சென்று சேருவதில்லை. இது இயற்கை நியதி. இதை அப்படியே தமிழ் எழுத்து அமைப்புகள் பின்பற்றுகின்றன.

உயிர் ஒரு மெய்யில் சென்று சேர்ந்தவுடன் மெய்யின் வடிவத்தைப் பெறும். எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் உயிர் மறுபிறப்பில் மான் உடம்பில் சென்று சேர்ந்தால் மனிதவடிவம் மானின் வடிவம் பெற்றுவிடும். அதுபோன்று ஒரு நாய் நற்பயன் செய்து மறுபிறப்பில் மனித வடிவம் பெற்றால் நாய் வடிவத்தில் இருந்த உயிர் மனித வடிவம் பெறும். ஆக எடுத்துக்கொண்ட மெய்யின் வடிவத்தை உயிர் தனதாக்கிவிடும். இதுபோன்று தமிழில் உள்ள உயிர் எழுத்துக்கள் தாங்கள் எந்த மெய்யோடு இணைகின்றனவோ அந்த மெய்வடிவத்தைப்பெறும்.

'அ' என்ற உயிர் 'க்' என்ற மெய்யோடு சேருகின்ற போது 'க' என்ற உயிர்மெய்யாக மாறுகிறது. உயிர்மெய் எழுத்தில் 'அ' கலந்திருப்பது எழுத்து வடிவத்தில் நமக்குத் தெரிவதில்லை. அதே 'அ' என்ற உயிர் 'ச்' என்ற மெய்யோடு இரண்டறக் கலக்கும் போது 'ச' என்ற உயிர்மெய் கிடைக்கிறது. உயிர் தான் எடுத்துக்கொண்ட மெய்யின் வடிவம் பெறுவது போன்று எழுத்துக்களிலும் உயிர் எழுத்துக்கள் தாம் எடுத்துக்கொண்ட மெய்யின் வடிவத்தைத் தனதாக்கிக் கொள்கின்றன. என்னே இயற்கையின் விந்தை!

ஆலிஸ், முனைவர் அ. தமிழ்ப் புதுக்கவிதைக் கட்டமைப்பில் எதிர்காலச் சிந்தனைகள்

கவிதையின் கட்டமைப்பை அறிதல், அதன் கருத்துக் கூறுகளையும் (motifs) அவற்றின் வருகை முறையின் முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதோடு கால வளர்ச்சியில் கவிதைகளின் கருத்துக் கூறுகளின் மாறுபாட்டையும் புலப்படுத்தும்.

இவ்வகையில் தமிழ்ப் புதுக்கவிதைகளில் இடம்பெறும் கருத்துக் கூறுகளைக் கணக்கிட்டால் அவை உணர்த்தும் பொருள்களையும் அவற்றின் வருகை முறையையும் (occurence) பாடலின் ஒட்டுமொத்தக்கருத்தோட்டத்தில் அவற்றின் பங்கையும் அறியலாம். இக்கருத்துக் கூறுகளுள் தமிழர்களின் எதிர்காலம் பற்றிய கருத்துக்கள் எத்தகையனவாய் அமைகின்றன? அவை எதிர்காலத் தமிழர் வாழ்வோடு எத்தகைய தொடர்புடையன? உண்மையிலேயே நன்மை பயப்பனவா? அல்லது வெறும் உரத்த குரலில் அமையும் முழக்கங்கள்தானா? குறிப்பிட்ட கவிதையின் ஒட்டுமொத்தப் பொருளோடு எவ்வகையில் தொடர்புடையன? அவை கவிதையில் இடம்பெறும் இடம் எது? எக்கவிஞர்களின் கவிதைகளில் மிகுதியும் இடம்பெறுகின்றன? அக்கவிஞர்தம் வாழ்க்கைப் பின்னணியின் தாக்கம் இவ்வெதிர்காலச் சிந்தனை குறித்த கருத்துக் கூறுகள் அவர்தம் கவிதைகளில் அமைதலுக்கு ஒரு காரணமாகுமா? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணும் நோக்கில் இக்கட்டுரை அமையும்.

எதிர்காலவியற் சிந்தனையாளர்கள் (Futurists) கூறும் எதிர்காலம் குறித்த கருத்துக்கள் புதுக்கவிதையாளர்களின் சிந்தனையோட்டங்களில் இருக்கின்றன என்பதைக் கருதுகோளாகக் கொள்கிறது இக்கட்டுரை. இன்ன கருத்துள்ள பாடல்களில்தான் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளைக் காண முடிகின்றது. இன்ன கருத்துள்ள பாடல்களில் காணமுடிவதில்லை என்று குறிப்பிட்டுக் கூற முடியுமா என்பதையும் இக்கட்டுரை ஆராயும்.

பொதுவாக, தமிழ்ப் புதுக்கவிதைகளில் தமிழர்கள், தமிழ்நாடு முதலியவற்றின் நிலை குறித்துப் பேசும் கவிதைகளில் எதிர்காலச் சிந்தனைகள் காணப்படுகின்றன. ஏனெனில், அங்கு இன்றைய நிலை பற்றிப் பேசும்போது, நாளைய நிலை பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறார்கள் கவிஞர்கள். அதே நேரத்தில் சில கருத்துக்கள் அடங்கிய கவிதைகளில் எதிர்காலம் பற்றிப் பெரும்பாலும் சிந்திக்கப்படுவதில்லை. சான்றாக, ‘காதல்’ பற்றிய கவிதைகள் பெரும்பாலும் தலைவியின் அழகு, அது தலைவனைப் பாதித்துள்ளமை, அதனால் அவனது தற்போதைய நிலை முதலியவற்றையே அதிகமாகப் பேசுகின்றன.

‘கவிபாடும் கிராமம்’ என்ற மு. மேத்தாவின் கவிதையில் (மு. மேத்தா, ஊர்வலம், ப.95) முன்பாதியில் கிராமத்தின் அழகு, அங்கு நிலவும் உண்மைக் காதல், அமைதி, சிறிதளவே கற்றவர்கள் அங்குள்ள கல்லாத பேர்களை ஏமாற்றுதல் முதலியன பேசப்படுகின்றன. நகரங்களுக்கே எல்லா வசதிகளும் போய்ச் சேர,

கிராமங்கள் வசதிகளற்றவைகளாக இனி இருக்கலாகாது. எனவே, இனிப்புதுப்புதுத் திட்டங்கள் தீட்டப்பட்டு அவை கிராமங்களில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று பின்பாதியில் கூறுகிறார் கவிஞர். எனவே இக்கவிதை,

இயற்கை வர்ணனை + கிராம மக்கள் வாழ்க்கைநிலை + அவ்வாழ்நிலையில் வரவேண்டிய மாற்றம் என்ற மூன்று கருத்துக் கூறுகளைக் கொண்டதாக அமைகிறது. இறுதிப் பகுதியில் எதிர்காலம் பேசப்படுகிறது.

விலாசங்களாகவும்
முகவரி தெரியாத மூலைமுடுக்குகளே
ஏழை கிராமங்களாகவும்
இனியிருக்கலாகாது
பொங்கக் கூடாததற்கெல்லாம்
பொங்கிப்
பொங்க வேண்டியதற்குப்
பொங்காதிருக்கின்ற
பொங்கல் இனியில்லை
பொங்கிப் பெருகிப் புதுப்பாதைபோட வரும்
புதுவெள்ளிப் பொங்கலிது

என்று கிராமங்களில் ஏற்பட வேண்டிய மறுமலர்ச்சி குறித்துக் கவிஞர் சிந்திக்கிறார். இத்தகைய நம்பிக்கையூட்டல்கள் எந்த அளவிற்கு மக்களைப் போய்ச் சேருகின்றன, அப்படியே போய்ச் சேர்ந்தாலும் எத்தனை பேரால் இதன்படிச் செயலாற்ற இயலுகிறது என்பது ஆராயத்தக்கது. எனவே, இத்தகைய வரிகள் வெற்று ஆரவாரங்களாகிவிடுகின்றனவா என்பதும் கேள்விக்குரியது.

DR. A. ALICE THE ROLE OF THE FUTURISTIC THINKING IN THE STRUCTURE OF THE TAMIL NEW VERSES

Knowing the structure of the poetry, would certainly help to identify its motifs, the importance of their occurences and also the changes of the motifs in the structure of the poems through ages. If we analyse the motifs of the Tamil new poetry in this regard, we shall come to know the content of the motifs, their occurences and their role in the total enjambment of the poetry. What are the content of the motifs of the futuristic thinking?

How far they are relevant with the life of the future Tamils? Whether they are meaningful really? or whether they are mere shoutings? How they are connected with the total meaning of the poem? In which part of the poem they occur? Who are the poets prefer this motif? Whether the life background of those poets causes this occurrence? This essay would try to get the answers for the above questions as having the Tamil New poetry as the basic source.

The idea that there are some ideas in Tamil New poetry which are of also the Futuristis', would be the hypothesis of this essay. This article would also see that whether we could predict that the motifs of the futuristic thinking would occur only in some of the poems which have certain themes and not in others.

It is most common that the futuristic thinking could be seen in the free verses which talk about the conditions of the Tamils and Tamil Nadu. Because, the poets face the situation of thinking about the future while they talk about the present condition. At the same time, we could not see the motifs of the futuristic thinking mostly in some poems which talk about some theme, such as `love'.

For example, the poem `Kavipāḍum Kirāmām' of Mu. Metha (Mu. Metha, Urvalam, P.95) has the following motifs in the following order:

Natural Description + The Life level of the Villagers + The change which should come in that life level.

Veḷiccañgaḻ naharattiṉ
Vilāsañgaḷāhavum
muhavari teriyāta mûlaimuḍukkuhaḻê
êḻai kirāmañkaḷāhavum
iṉi irukkālāhatu
poñgak kûḏātatarḵellām
poñgip
poñga vêṇ ḍiyatarḵup
poñgātirukkiṉṟa
poñgal iñiyillai

poṅgip peruhip putuppāṭai pōḍavarum
putuveḷḷap poṅgaḷitu

Thus he talks about the reformation which should emerge in the villages. How far the encouragements of this kind reach the people? Even if they reach some public, how many of them are able to function according to this? are to be found. It is also doubtful that perhaps the lines of this kind become mere shouting slogans.

இரவீந்திரன், முனைவர் க. தமிழகத்து நாடகப் பரிசோதனை - பாலர் சபை நாடக முறை

'பாலர்சபை' எனவும் 'பாய்ஸ் கம்பெனி' (Boys Compay) எனவும் பெயரிடப்பெற்று, சிறுவர்களை மட்டுமே நடிகர்களாகக் கொண்டு நடத்தப்பெற்ற நாடகக்குழுமுறை தமிழ் நாடக மேடையில் மட்டுமே நிழ்ந்த தனித்தன்மை வாய்ந்த 'மேடைப்புரட்சி' எனலாம். அதுவரை வழக்கிலிருந்த தமிழ் நாடக மேடையை முழுவதுமாகவேறுபடுத்திக் கதையமைப்பு, மேடையமைப்பு, பாத்திரப்படைப்பு ஆகிய நிலைகளில் மக்கள் விரும்பும்வண்ணம் புதிய முயற்சிகளை மேற்கொண்டு, ஈடுபாடுமிக்க பயிற்சிமுறையின்மூலம் நாடகங்களைப்படைத்து வழங்கித் தமிழ் நாடகமேடைக்கு நல்ல கலைஞர்களையும் நல்ல பார்வையாளர்களையும் உருவாக்கியமை பாலர்சபை நாடக முறையின் மிகப்பெரிய 'கொடை' எனவே கருதப்படுகிறது.

பொதுவாக நாடகக் குழுக்கள் தொழில்முறை (Professional) பயின்முறை (Amateur) என்ற அமைப்பு நிலைகளில் செயல்பட்டுவந்தமை பிற மாநிலங்களைப்பேலவே தமிழகத்திலும் வழக்கில் இருந்து வந்தது. பாலர்சபை நாடகமுறை இவ்விரு நிலைகளையும் ஒருங்கிணைக்கும்வண்ணம் தொழில்முறை அமைப்பில் தொழில்முறை சார்ந்த நாடகங்களோடு பயின்முறைக்கான மேனாட்டு மரபுசார்ந்த நாடகங்களையும் படைத்தளித்துத் தமிழ் நாடகக் கலைக்குப் புதிய பரிணாமத்தினை ஏற்படுத்தியது.

1910-இல் தாப்பாவெங்கடாசலம் செட்டியார் நலுங்கு நிகழ்ச்சியொன்றில் சிறுவர்களை மட்டும் அறிமுகம் செய்து பெற்ற வெற்றி, 1918-இல் தவத்திரு சங்கரதாசசுவாமிகள் 'மதுரை தத்துவ மீனலோசனி வித்துவபாலசபா' என்ற பெயரில் முழுக்க முழுக்கச்

சிறுவர்களை மட்டுமே கொண்ட நாடகக்குழுவைச் சோதனை முயற்சியாகத் தோற்றுவிக்கத் தூண்டுகோலாக அமைந்தது. பெரியவர்களை அப்புறப்படுத்திவிட்டு மேடையில் சிறுவர்களை மட்டுமே அறிமுகம் செய்து நாடகம் படைத்தளித்து அடுத்தகட்ட நாடகக்கலையினைப் புதிய கோணத்தில் வளர்த்தெடுக்க மேற்கொள்ளப்பெற்ற இந்தப் புதுமையான முயற்சியினைத் தமிழகம் விரும்பி ஏற்றுக்கொண்டது. புதிய நாடகத்தலைமுறை பாலர்சபை நாடகமுறையின்கீழ் உருவாக்கம் பெறலாயிற்று.

சங்கரதாசுசுவாமிகளின் நாடகக்கோட்பாடுகளை அடியொற்றிய பாலர்சபைநாடகமுறை,நாடகத்தை ஒரு கல்விமுறையாக்கிக்காட்டியது. பாலர்சபைகள் குருகுல முறையிலான நாடகப் பயிற்சிப் பள்ளிகளாகவே விளங்கின.

திரைப்படத்தின் செல்வாக்கு திறமைமிக்கபாலர்சபை நாடகக்கலைஞர்கள் பலரைக்கவர்ந்துகொண்ட நிலையில் ‘பாலர்சபை நாடகமுறை’ செயல்பாடு இழக்கலாயிற்று. எனினும் தமிழ் நாடக மேடையை அதன் தளத்தில் நிறுத்தச் சிறுவர்களைக் கொண்டு நாடகப்பரிசோதனை செய்து அதில் வெற்றியும் கண்ட பாலர்சபை நாடகமுறைக் காலகட்டம் தமிழ் நாடகக்கலை வரலாற்றில் புதிய மாறுதலுக்கான காலகட்டம் என்பதை உறுதிசெய்வதே இவ்வாய்வு.

இராசகோபால், முனைவர் அருணா வேளாண்மையில் அறிவியல் தமிழ்

தமிழ் மொழியில் வேளாண் அறிவியலை வெளியிடுவதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. அண்மைக்காலத்தில் வேளாண் தொழில் நுட்பங்களை உழவர்கள் கருத்தோடு பயின்று, பின்பற்ற விரும்புகின்றனர். உழவர்கள் தங்களின் வேளாண் உற்பத்திக்குத் தேவையான அறிவியல் செய்திகளைப் பெறுவதில் தமிழ் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறது. வெகுமக்கள் அளவில் எளிமையான தமிழில் சுருக்கமாகவும், செறிவாகவும் செய்திகள் சொல்லப்படுகின்றன. வெகுமக்களுக்கான அறிவியல்தமிழ் ஒருவகையில் அளவான கலப்புத்தமிழ், பாமரத்தமிழும்கூட. இதேபோல் வானொலி, தொலைக்காட்சி, காணிணி (Video) கோளினி (Audio) ஆகியவற்றிலும் இந்தத் தமிழே பயிலப்படுகிறது. இதில் சில பற்றாக்குறைகளும் உள்ளன.

அறிவியல் வேளாண்மையை வளர்க்கும் அறிவியல் முயற்சிகள் உற்பத்திக்காக மேற்கொள்ளப்படுகின்றன. அதே சமயம்,

வேளாண்மை அறிவியலுக்கு ஏற்றவாறு தமிழ்மொழியின் ஆற்றலையும் பெருக்கவேண்டும். இயற்பியல், வேதிஇயல், தாவரஇயல், விலங்கியல், கணிதம், பொருளாதாரம், சமுதாய இயல் போன்ற துறைகளின் சொல்லீடுகளைப் பயன்படுத்திக் கொண்டு படைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறைக்கே உரிய பிரிவுகளான உழவியல், தோட்டவியல் துறைகளும் புதுச் சொல்லீடுகளைப் புனைந்து கொண்டு வளம் பெறுகின்றன.

வேளாண்மை அறிவியலில், - உழவியல்,- மரபியல்,- தோட்ட இயல்,- பயிர் நோய் இயல், பூச்சி இயல், கண்இயல் (பழ இயல்),- காய்கறி இயல் (தினை இயல்)., மலரியல் போன்ற பிரிவுகளில் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல்கள் பல நிலைகளில் பயன்பட வாய்ப்புள்ளன.

வேளாண்மைப் பட்டையப் படிப்பு (Diploma) மாணவர்கள் அறிவியல் படைப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பட்டையப்படிப்பு படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகும். பொறியியல் பட்டையப்படிப்பு மாணவர்கள் எண்ணிக்கைபோல் மாவட்டந்தோறும் வேளாண்மைப் பட்டையப்படிப்புப் பயிலகங்களில் (Poly technique) இடங்கள் உயர்த்தப்பட்டு மாணவர்கள் எண்ணிக்கை உயரவேண்டும். இதனால் வேளாண்மையும் வளரும் வேளாண்மைக் கல்வி வாய்ப்பும், தமிழில் வேளாண்மை வெளியீடுகளும், நூல்களும் பெருகும்.

வேளாண்மைப் பட்டப்படிப்பு மாணவர்கள் நூலக அளவில், நூலக மொழியாகத் தமிழைப் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன. வகுப்பறையில் ஆங்கிலப் பயிற்றுமொழி ஊடகத்தின் வழியே பயில உதவியாக வேளாண்மைத் தமிழ் நூல்கள் பயன்படும். ஓய்வு நேரங்களில், வகுப்பறைக்கு வெளியே தமிழ்வழிச் செய்திகளைக் கற்று மனத்தில் கொண்டால் மாணவர்கள் கல்வியில் மேம்பாடு அடைய முடியும்.

இராசாமணி, டாக்டர் தி.ச. இயங்கியலும் ஹோமியோபதியும்

பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியும் அறிவியல் உலகின் விடிவு காலமாகும்.

லூயி பாஸ்டியர் நுண்ணுயிரிகளின் அமைப்பைப் பற்றிய தன் கருத்தினை வெளியிட்டபோது நுண்ணுயிர்களே உடல்

நலிவுக்குக்காரணம் என்று கூறினார். நோய், பிணிகளுக்குக் காரணம் அந்நுண்ணுயிர்களே என்று உலகம் நம்பியது. அலோபதி மருத்துவர்கள் அந்நுண்ணுயிர்களையும் நச்சுயிர்கள் போன்றவற்றையும் தேடி அழிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

உயிராற்றல் (Vital force) நலிவுறுவதாலேயே நோய், பிணி என்பன தோன்றுகின்றனவென்று டாக்டர் ஹானிமன் கூறினார். உயிர்ப் பாற்றலின் நலிவை அகற்றுவதன் வாயிலாக உடலிலுள்ள தன்னியக்க ஆற்றல் உடலை ஒழுங்குப்படுத்துகிறது என்ற உண்மையை வெளியிட்டார்.

இயற்கையின் இயக்கத்தை, நுட்பத்தை, விதிமுறைகளைக் கூறுவதே இயங்கியல். இதனை முதன்முதல் அறிந்து வெளியிட்ட பெருமை கிரேக்கப் பேரறிஞர் ஹெராக் லிட்டஸ் (Heraclitus 540-480 B.C.) அவர்களையே சாரும் என்றாலும் இதனை வளர்த்த பெருமை ஹெகல் (Hegel கி.பி. 1770 - 1831), காரல் மார்க்ஸ் (1818 - 1883) பிரட்டரிக் ஏங்கெல்ஸ் (கி.பி. 1820 - 1895), லெனின் போன்ற அறிஞர்களைச்சாரும். அவர்கள் இயங்கியலை இயற்கை, சமுதாயம் சிந்தனை ஆகியவற்றில் பொருத்திப் பார்த்துச் செழுமைப்படுத்தினர்.

இயற்கையின் முதிர்ந்த வடிவம் மனிதன். அவனுடலில் இயங்கியல் விதிகளை டாக்டர் ஹானிமன் பொருத்திப் பார்த்து ஹிப்போசிரட்டிஸ் (460 - 377) அறிந்து சொன்ன ஒத்தவை விதியை ஹெகல் வளர்த்த இயங்கியல் வழி கொண்டு மருத்துவத்தில் புகுத்திப் புதிய நடைமுறையைக் கண்டார். இலை மறை காயாகவே இயங்கியல் விதி ஹோமியோபதியில் இடம் பெற்றது.

ஓர் அறிவியல் உண்மை முழுமையாக ஒரே நேரத்தில் கண்டுபிடிக்கப்படுவதில்லை. படிப்படியாக மெல்ல மெல்லத்தான் கண்டுபிடிக்கப்படுகிறது. இம்முறையிலேயே மார்க்ஸ் முதல் மாவோ வரை செழுமைப்படுத்திய இயங்கியலை என் பல்லாண்டுப் பட்டறிவின் வாயிலாக ஹோமியோபதியில் இணைத்துள்ளேன். அதன் வழிமுறையில், நடைமுறையில் உடலின் பல்வேறிடங்களில் தோன்றிய புற்றுப் பிணிகளை நலமாக்கியுள்ளேன். இன்றும் வருங்காலத்திலும் எப்பிணியையும் ஹோமியோபதியில் நலமாக்க முடியும் என்பதை நான் பல்லாண்டுகளாகக் கட்டுரை வாயிலாக வலியுறுத்தியுள்ளேன். இதற்கு இயங்கியல் என்ற மெய்யியலின் கருவில் மலர்ந்த ஹோமியோபதி வழிகாட்டிற்று. இதனையே இவ் ஆய்வுக் கட்டுரை விளக்கும்.

இராசு, புலவர் செ. வெளிநாடுகளில் புதிய தமிழ்க் கல்வெட்டுக்கள்

சோழர் காலத் தக்கோலமாகக் கருதப்படும் தாய்லாந்து நாட்டுத் தகுவாபாவிலும், பர்மா நாட்டுப் பாகாங் என்னும் இடத்திலும், சீனநாட்டுச் சூவான்சூ நகரிலும் சில தமிழ்க் கல்வெட்டுக்கள் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் மேலும் சில கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

1. எகிப்து நாட்டில் செங்கடல் துறைமுகமான சூசெயிர் - அல்-காதிம் என்ற ஊரில் அமெரிக்கர்கள் நடத்திய அகழாய்வில் கணன், சாதன் எனத் தமிழியில் எழுதப்பட்ட ஓடு கிடைத்துள்ளது. இதனைக் கண்ணன், சாத்தன் என்று படிக்கலாம். இவை கி.பி. 2-3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

2. தாய்லாந்துநாட்டில் கிளோங்தோம் என்ற பழந்துறைமுகநகரில் நடந்த அகழாய்வில் கி.பி. 3-4ஆம் நூற்றாண்டில் தமிழியில் பெரும்பதன்கல் என எழுதப்பட்ட கல் கிடைத்துள்ளது. பெரும்பத்தன் என அதனைப் படிக்கலாம்.

3. இலங்கையின் ஆனைக்கோட்டையில் நடைபெற்ற அகழாய்வில் கோவேந்(தன்) எனப் பொறிக்கப்பட்ட முத்திரை ஒன்று கிடைத்துள்ளது. சிந்துவெளிக் குறியீடுகள் போல் இணையான தொடரும் எழுதப்பட்டுள்ளது. கி.பி. 3-4ஆம் நூற்றாண்டுப் பொறிப்பு.

4. அமெரிக்கநாட்டு மூன்றாம் ராக்பெல்லர் கலைத்தொகுப்பில் தாமரைப்பீடத்தில் நின்ற நிலையில் 68.1 செ.மீ. உயரமுள்ள புத்தரின் செப்புப் படிவம் உள்ளது. அதன் பீடத்தில் இராஜேந்திரசோழப் பெரும்பள்ளி, அக்கசாலைப் பெரும்பள்ளிப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சிறுதவூர் நாலாங்குணாகர உடையார் செய்தளித்த விவரம் உள்ளது. கி.பி.1100-ஆம் ஆண்டைச் சார்ந்த எழுத்துப் பொறிப்பு.

5. சுமத்ராவில் ஜாகர்த்தா அருங்காட்சியகத்தில் கி.பி. 1258 ஆம் ஆண்டு ஜாவா மொழியிலும் தமிழிலும் எழுதப்பட்ட இருமொழிக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது. மகாசேனாபதி தீபங்கர என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

6. தாய்லாந்து நாட்டுத் தகுவாபாவில் நக்கோள் சி தம்மராத்தில் உள்ள பெரிய புத்தர் கோயிலில் கி.பி. 1183 ஆம் ஆண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு உள்ளது. தர்ம சேனாபதி சொற்படி அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

7. சுமத்ரா நாட்டு ஜாகர்த்தாவில் லோபோதோவவில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டைப் பற்றி உல்சு (1891-92) கல்வெட்டு ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தெளிவில்லாத மைப்படியைக் கொண்டு இரண்டு வரிகள் மட்டுமே படித்து நீலகண்டசாஸ்திரி கட்டுரை எழுதியுள்ளார். அக்கல் திசையாயிரத்து ஐநூற்றுவர் பற்றியது. ஏறக்குறைய 26 வரிகள் கொண்ட அக்கல்வெட்டு முழுமையாகப் படிக்கப்பட்டுள்ளது. மரக்கல நாயகன் என்ற தொடர் வருகிறது.

இக்கல்வெட்டுக்களில் வணிகர், படைத்தலைவர்கள் குறிக்கப்பெற்றுள்ளனர். தமிழ் வணிகக் குழுவினரும், படைவீரர்களும், கட்டடக் கலைஞர்களும், கல்வெட்டுப் பொறிப்போரும் தொடர்ந்து அங்கு இருந்துள்ளனர்.

தாய்லாந்தில் சங்ககாலச் சோழரின் புலிக்காசு கிடைத்துள்ளது.

கெய்ரோ அருங்காட்சியகத்தில் பானை ஓட்டிலும், வியன்னா அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளிலும் எழுதப்பட்ட ஆவணங்கள் சங்ககாலக்கடல் வாணிகம் பற்றிய மிகவும் அரிய செய்திகளைத் தருகின்றன.

இராசேந்திரன், முனைவர் ம. பண்டை இலக்கிய மொழிபெயர்ப்பில் பிரச்சினைகள்

பனுவலின் மேலோட்டமான கருத்துக்கும் ஆழ்நிலைக் கருத்துக்கும் கவிதைகளில் இடைவெளி அதிகம் இருப்பதால் கவிதைகளை மற்றொரு மொழியில் கவிதையாகவே மொழிபெயர்ப்பதில் குறிப்பிட்ட சில பிரச்சினைகளை மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதிலும் பண்டைய இலக்கியங்கள், உரைகளை அடிப்படையாகக் கொண்டே விளங்கிக் கொள்ளப்படுகின்றன. உரைகளும் பனுவலுக்குத் தன்காலத்திய பொருளையே தருகின்றன. அதனால் சில தேர்வுகளில் உரைகள் பனுவலை உரியவாறு புரிந்து கொள்ள உதவாமல் போய்விடுகின்றன. பண்டைய இலக்கியங்களை, உரைகளை அடிப்படையாகக் கொண்டே மொழிபெயர்க்கிறார்கள். அது பனுவலுக்குரிய முழுமையான மொழிபெயர்ப்பாக அமைவதில்லை.

இதற்குக் குறுந்தொகைப் பாடல் (8) சான்றாக விளங்குகிறது.

"கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மில் பெருமொழி கூறித் தம்மில்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே"

இதில் 'ஆடிப்பாவை' என்பதற்குக் 'கண்ணாடியில் தோன்றுகின்ற பாவையாகிய நிழலுரு' என்ற வகையிலேயே, திருக்கண்ணபுரத்தான் சௌரிப் பெருமாள் அரங்கன் வெளியிட்ட குறுந்தொகையின் (முதல்) பதிப்பிலிருந்து (1915) தமிழ்ப்பல்கலைக் கழகப் பதிப்பு (1985) வரையில் பொருள் கூறப்பெற்றுள்ளது. பேராசிரியர், நச்சினார்க்கினியர், உ.வே. சா.ரா. ராகவ ஐயங்கார் உட்பட அனைத்து உரையாசிரியர்களும் இந்தப் பொருளில் மாறுபடவில்லை.

இந்தப் பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த, ஏ.கே. ராமானுஜம் (The Interior Land Scape Love Poems from a classical Tamil Anthology) எம்.எல். தங்கப்பா, (Hues amd Harmonies from an Ancient Land) டாக்டர் முத்து சண்முகம், டேவிட் (Kurunthokai an anthology of classical Tamil love poetry) ஆகியோர் உரையாசிரியர்களின் கருத்தை ஒட்டியே மொழிபெயர்த்துள்ளனர்.

சங்க இலக்கியத்தில் 'ஆடிப்பாவை' குறுந்தொகையில் (8) மட்டுமே இடம் பெறுகிறது. சங்க இலக்கியத்தில் 53 இடங்களில் 'ஆடி' என்ற சொல் வந்துள்ள போதிலும் கண்ணாடி என்ற பொருளில் வரவில்லை. 77 இடங்களில் 'பாவை' என்ற சொல் வந்துள்ள போதிலும் 'கண்ணாடியில் தெரியும் நிழலுரு' என்ற பொருளில் வரவில்லை.

குறுந்தொகைப் பாடல், பரத்தை தலைவியைக் குறை கூறுவதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியின் கைப்பாவையாக இயங்குகிறான். இயக்குபவள் தலைவி; இயங்குபவன் அவன். மறைவாக இருந்து ஆட்டிவைக்கும் தலைவியையும் அதற்கேற்ப ஆடும் தலைவனையும் கூறுவதற்குத்தான் 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை' உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கண்ணாடியில், முன் நிற்பவர் வடிவமும் செயலும் மட்டுமே தெரியும். பின்னிருந்து இயக்குவதற்கேற்ப இயங்குதல் என்பதற்குக் கண்ணாடி நிழலுரு உவமையாக அமையாது.

பாகவத புராணத்தில் பாவைக் கூத்துக்காரனின் கயிற்றியக்கத்திற்கேற்ப ஆடும் மரப்பாவை உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. கூளப்ப நாயக்கன் விறலிவிடுதூது, ஞானாமிருதம், சிவஞான சித்தியார் சுபக்கம், பட்டினத்தார் பாடல், திருவாசகம், சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நூல்களில் 'பாவைக் கூத்து' பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. எனினும் குறுந்தொகைப் பாடலின் ஆடிப்பாவைக்கு யாரும் பாவைக் கூத்தோடு தொடர்புபடுத்திப் பொருள் காணவில்லை. அதனால் மொழியாக்கங்களும் உரையாசிரியர்களின் கருத்துப்படியே அமைந்துள்ளன.

எனவே உரைகளையே முழுமையான கருத்தாடல்களாகக் கொண்டு பண்டைய இலக்கியங்களை மொழிபெயர்த்தால் அது பனுவலின் முழுமையான மொழிபெயர்ப்பாக அமையாது என்பதையும் உரைகளை மேலும் முழுமையான கருத்தாடல்களாக மாற்றிப் பனுவலைப் புரிந்து கொண்டு மொழிபெயர்க்க வேண்டும் என்பதையும் விளக்குகிறது இக்கட்டுரை.

DR. M. RAJENDRAN PROBLEMS IN THE TRANSLATION OF ANCIENT LITERATURE (WITH SPECIAL REFERENCE TO TAMIL)

Most often, translators face some unique problems in translating the poetry from source language to target language, preserving the poetic form. One of the problems is, the surface or overt meaning of the text may be different from the underlying or the original intended meaning of the source poetry.

Furthermore. generally the ancient literatures are being understood with the help of the existing commentaries for the texts. The above such commentaries attempt to interpret the texts not only with the meanings of the language found in the text, but also with the contemporary outlook or view of the commentators. This, sometimes, may mislead the readers by misrepresenting the original meaning of the text. However, it is the usual practice of the translators of the ancient literatures to depend more on the commentaries in their translation. Because of this dependency, sometimes, the products of translation would seem merely the translation of the commentary instead of the original text.

The present article is an attempt to discuss the above problem in translation, having taken one piece of Sangam Literature (Kurunthokai 8). In the above poetry, a word `Adipppavai' is found. This word is mostly being interpreted as `Mirror image'. Almost all the commentators of Sangam Literatures have agreed with this meaning. Practically, there is no difference of opinion among the commentators regarding this interpretation, (from the first edition of Kurunthokai (1915) edited by Thirukkannapuratan Sowriperumal Arangan to the latest edition by M. Shanmugam Pillai (1985), published by the Tamil University, Thanjavur, and from the commentators like Peraciriyar, Nachinarkiniyar to U.Ve. Sa., Ra. Ragavayyangar.

A.K. Ramanujam (`The Interior Landscape Love poems from a classical Tamil Anthology) M.L. Thangappa (Hues and Harmonies from an ancient land) and Muthushanmugam and David have translated this poetry into English. They have interpreted the word `Adippavai' as `mirror image', in the footsteps of the ancient commentators.

The word `Adippavai' occurs in the Sangam literature only in Kurunthokai (8). In no other Sangam poetry, it is found. The word `Adi' occurs in 53 instances in Sangam Literature. However, these occurrences do not stand for the meaning `mirror'. And there are 77 occurrences of the word `Pavai' in the Sangam Litereature; but in those occurrences, this word does not give the meaning `image'

Even in the above referred Kurunthokai poem, a harlot blames the heroine that the hero dances according to her tunes who is the mother of his son. He raises his legs and hands as she commands. In this context, the harlot uses the word `Adippavai' to indicate that the hero behaves like `Adippavai'. If the word `Adippavai' in this context, refers to the meaning `mirror image', the simili used by the harlot could not help her to express what she wants to convey; because, here, according to the harlot, the heroine directs or commands the hero indirectly. So, the interpretation `mirror image' is not an proper and suitable to refer to the actions of the hero and heroine.

In the `Bhagavatha Puranam', there is one reference to

From the above discussion, the present article emphasizes the fact that in translatiion, what we do is, we expand a text of the source language (expressed through a particular language) into discourse (the intended concept of the author) first, and then we reduce once again the above discourse into the text of the target language. In the above expansion process, the commentaries may be used as a means, but it should not be considered as a full pledged discourse. That is, to understand the intention of the author, we should not fully depend upon the commentaries which could be considered only as the intermediate discourse. The translators' outright dependence on the commentaries or their consideration of the commentaries as the fully expanded discourse may mislead the translation. Especially, in the translation of ancient literatures, the translators should take into consideration not only the existing commentaries but also should utilize any contemporary knowledge or means which are accessible and useful to them to expand the text into discourse to understand the original concept of the source text. Then only, they could fully expand the source text into a full discourse which the author had in his mind and then reduce the arrived discourse into the text of the target language by using the textualization process which may be specific to the target language.

இராதாகிருட்டிணன், முனைவர் ச. மொழிபெயர்ப்பும் மொழியியலும்

ஒரு மொழியிலிருந்து வேறு ஒரு மொழியில் மரபு வழியாக மொழி பெயர்ப்பதையும் மூலமொழியின் அமைப்பு இலக்கு மொழியின் அமைப்பு ஆகியவற்றை மொழியியல் நோக்கில் பார்த்து மொழிபெயர்ப்பதையும் ஒப்பிட்டு நோக்கி இவ்விருவகைகளுள் எளிமையான மொழிபெயர்ப்பு எதுவெனக் கண்டறிதல் வேண்டும். மொழியியலின் பயன்பாடு மொழிபெயர்ப்பிற்கு எந்த வகையில் துணைபுரியும் என்று பார்ப்பது அறிவியல் அடிப்படையில் கணிப்பொறிக்காலமான இந்த நாட்களில் நமக்கு மிகவும் தேவையானதாகும். மொழிபெயர்க்கும் போது சொல்லியல், தொடரியல், பொருண்மையியல் நோக்கில் ஒரு மொழியின் ஒழுங்கமைப்பும், அதன் ஒழுங்கின்மையமைப்பும் எவ்வாறு எதிர்கொள்ளப்படுகின்றன என ஆராய முற்படுவதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழியின் ஒழுங்கமைப்புகளையும், ஒழுங்கின்மையமைப்பு களையும் மொழியியல் அடிப்படையில் தெரிந்து செயற்படுவது மொழிபெயர்ப்பிற்குமட்டுமல்லாது கணிப்பொறிமொழிப் பயன்பாட்டிற்கும் நேரடியாக உதவுவதாகும். தமிழ் இலக்கிய உரைநடையில் ஒரு சில பத்திகளை எடுத்து மொழிபெயக்கும்போது மொழிக்கூறுகள் மேலே குறிப்பிட்ட மொழியியல் போக்கிலும், மரபு வழிப்போக்கிலும் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

இராபர்ட் சத்திய சோசப், முனைவர் தா. சமூக மாறுதல்களும் தமிழக மக்களின் உறவுமுறையும்

இக்கட்டுரை தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சில கிராம சமுதாயங்களில் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டதாகும். சமுதாயத்தில் மாறுதல்கள் ஏற்படும்போது குடும்ப அமைப்பு, திருமணம், உறவுமுறைத் தொடர்புகள், உறவுமுறைச் சொற்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

கல்வி, வேலை ஆகியவை மக்களின் இடப்பெயர்ச்சிக்கும் சமூக மாறுதல்களுக்கும் முக்கியக் காரணங்களாக உள்ளன. குறிப்பாகத் தொழில்மயமாக்கப்பட்ட சமுதாயங்களில் இத்தகைய மாறுதல்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

சமூக மாறுதல்களினால் கூட்டுக் குடும்பங்கள் தனிக்குடும்பங் களாக மாறுவதையும், சில சூழ்நிலைகளில் தனிக்குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக மாறுவதையும் காணலாம். மக்கள் தங்கள் உறவினர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படும்போது உறவினர்களோடுள்ள தொடர்பு குறைவதும் உறவினர் அல்லாதவர்களோடுள்ள தொடர்பு அதிகரிப்பதும் உண்டு. இத்தகைய மாறுதல்களினால் மேற்கத்திய சமுதாயங்களில் உறவுமுறையானது அதன் முக்கியத்துவத்தை இழந்து வருவதாகவும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இந்தியச் சமுதாயத்தில், குறிப்பாகத் தமிழகக் கிராம சமுதாயங்களில் உறவுமுறை அடிப்படையிலான தொடர்புகள் அதிகமாக இருப்பதுண்டு. தமிழகக் கிராம சமுதாயத்தில் மாறுதல்கள் ஏற்படும் போது உறவுமுறை அதன் முக்கியத்துவத்தை இழக்கிறதா? அல்லது பாரம்பரிய உறவுமுறை மாற்றி அமைக்கப்படுகிறதா? என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழக மக்கள் தொலைவிடங்களில் வாழ்ந்து வந்தாலும் தங்கள் உறவினர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதையும், தங்கள் சொந்தக் கிராமத்தில் சொந்த வீடு அல்லது சிறிதளவு நிலம் வைத்திருப்பதையும் காணலாம். இவர்களின் தூரத்தது உறவினர்களோடுள்ள தொடர்பு குறைவதுண்டு. சில சூழ்நிலைகளில் உறவுமுறைத் தொடர்புகள் முதல்நிலை, இரண்டாவது நிலை அல்லது மூன்றாவது நிலை உறவினர்களோடு நின்று விடுவதுண்டு. தூரத்து உறவினர்களோடுள்ள தொடர்பு முற்றிலும் நின்றுவிடுவதுமுண்டு.

திருமண முறையை எடுத்துக்கொண்டால் பரவலாக எல்லாச் சாதியினரிடமும் காணப்பட்ட சகோதரி மகள் மண முறையானது அதன் முக்கியத்துவத்தை இழந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. கற்றவர்களிடையே சகோதரி மகளை மணப்பது அறிவியல் அடிப்படையில் நல்லதல்ல என்ற எண்ணம் காணப்படுவதும் வளர்ந்துவரும் வரதட்சணை முறையும் இதற்கு முக்கியக் காரணங்களாகும். முற்காலத்தில் குறிப்பிட்ட சில உயர்சாதி மக்களிடையே காணப்பட்ட வரதட்சணை முறையானது அனைத்துச் சாதியினரிடமும் பரவிவருகிறது.

தமிழகக் கிராம சமுதாயங்களில் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் தந்தை பெரியார் இயக்கக் கொள்கைகளின் தாக்கத்தால் பாரம்பரியமாக வெவ்வேறு சாதி மக்களிடையே காணப்பட்ட உறவுகளிலும் திருமணச் சடங்குகளிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இராமசுவாமி, முனைவர் மு. அர்ச்சுனன் தபசுமரம் ஏறல் எனும் வளமைச் சடங்கு

தமிழகத்தின் வடமாவட்டங்களில் திரௌபதியம்மன் கோயில் வழிபாட்டில் இணைந்துள்ள பாரதவிழாக்களின் ஒரு பகுதியாக நிகழ்த்தப்படுகிறது பாரதக்கூத்து. பாரதக்கூத்தின் நான்காம்நாள் நிகழ்ச்சியாக நடத்தப்படுவது அர்ச்சுனன் தபசு என்னும் கூத்து. அதைத் தொடர்ந்து, அர்ச்சுனன் தபசுமரம் ஏறல் என்னும் நிகழ்ச்சி காலையில் நிகழ்த்தப்பெறுகிறது. அர்ச்சுனன் வேடம் தாங்கிய கூத்துக்கலைஞர் வழிபாடு செய்து, பூமியில் நடப்பட்ட அறுபது அல்லது எழுபது அடி உயரமுள்ள காய்ந்த பனைமரத்தின்மேல் ஏறி, சிவனிடம் பாசுபதம் பெறுவதற்கான தவம் செய்யும் காட்சியை

நிகழ்த்திக் காட்டுவார். இந்நிகழ்வு ஒரு நாடகம் போலவே நடத்தப்படுகிறது.

அர்ச்சுனன் தபசு செய்ய மரமேறுதல்

துரியோதனன், தபசைக் கலைப்பதற்காகப் பன்றி உருவெடுத்து வருதல்

பார்வதியும் பரமசிவனும் வேடன் வேட்டுவச்சியாக உருமாறி வந்து பன்றியைத் துரத்துதல்

துரியோதனன் அர்ச்சுனனிடம் அபயம் கேட்டல்

அர்ச்சுனனுக்கும், பார்வதி பரமசிவனுக்கும் இடையில் நடைபெறும் வாக்குவாதம்

துரியோதனன் மன்னிக்கப்படல், கடவுளர் அர்ச்சுனனுக்கு வரமருளுதல் ஆகிய காட்சிகள் நடித்துக் காட்டப்படுகின்றன.

இக்கூத்தை நிகழ்த்துவோர் பாரம்பரியத் தெருக்கூத்துக் கலைஞராவார்.

இந்நிகழ்வானது அரங்கியல் தன்மையில் பூரணம் பெற்று, செங்குத்து நிலையில் வெளியை ஆக்கிரமித்து, நிகழ்பொருளின் பார்வைப் படிமத்தைப் பார்வையாளரிடம் அருமையாக உணர்த்துகிறது. மேலும், இந்நிகழ்வில் பார்வையாளராகப் பங்கு பெறும் பெண்கள் (இவர்களே முதன்மைப் பங்கேற்பாளர்கள்) தமக்குக் குழந்தையுண்டாக வேண்டும் என்ற ஆவலில் அர்ச்சுனன் தவம் செய்து மேலிருந்தபடி வீசும் பிரசாதப் பொருட்களைப் பெறும் சடங்கு முக்கியமானது.

மரமேறும் நிகழ்வில் பங்குபெறும் பொருட்கள், பங்கு பெறுவோரின் தன்மை ஆகியவற்றை உளவியல் அணுகுமுறையில் இருமை எதிர்வுகளாக (Binary Opposition) வைத்துப் பார்க்கும் பொழுது வளமைச்சடங்கின் ஒரு பகுதியாக இந்நிகழ்வு அமைந்திருப்பதை உணர இயலும். மேலும் ஓர் இனக்குழு மக்கள் மற்றோர் இனக்குழு மக்களிடம் மண உறவு கொள்ளுதல் என்னும் சடங்கியல் எச்சமாகவும் 'அர்ச்சுனன் தபசுமரம்ஏறல்' வழிபாடு அமைகிறது என்பதையும் விரிவாக விளக்க இயலும்.

இராமசுவாமி, முனைவர் திருமதி செண்பகம் *சிலப்பதிகாரத்தில் தொன்மமும், பழந்தமிழ்ச் சமுதாயமும்*

பழங்கால மக்களின் கூட்டுவாழ்வில் ஏற்பட்ட கூட்டுச் சிந்தனையாகிய தொன்மத்தின் தொடர்ச்சியில் முகிழ்த்தவையே புராணங்களும், பழங்கதைகளும் என்னும் மானுடவியலார் கருத்தைத் தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் பொருத்திப் பார்க்கும்பொழுது சிலப்பதிகாரம் பல்வேறு தொன்மங்கள் நிறைந்தது என்பது புலப்படுகிறது.

இக்கட்டுரையில், இன்றுவரை நீடிக்கும் வலுவான பெருங்கதை, சடங்கு, கலைவடிவம் ஆகியவை தொன்மம் (Myth) எனவும் உலகளாவிய நிலையில் மீண்டும் தொன்மங்களில் காணப்படும் கூறுகள் மரபுப்படிவங்கள் (Archetypes) எனவும் குறிக்கப்படுகின்றன.

கண்ணகி வழிபாடு, சமூகத்தலைவர் ஆற்றல், மாந்தரும் இயற்கையும் எனும் தொன்மங்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

நளாயினி, அனுசூயை, அருந்ததி போன்ற அற்புதங்கள் நிகழ்த்திய கற்பரசிகள் கதை தமிழ் மண்ணில் இல்லாமையை இட்டு நிரப்பும் தேவையால், ஆணாதிக்கச் சமூகத்தின் பத்தினிகளை உருவாக்கும் சமூகவிழைவால் கண்ணகி தொன்மம் உருவானது. தமிழ்ப் பெண்களின் கற்புக்கு வடமீன்தான் உவமையாகிறது. மற்றொரு சூழலும் இத்தொன்மம் உருவாகக் காரணமானது. சிலப்பதிகார காலத்தில் தேய்ந்து வந்த தமிழ்ச் சமூகத்தின் பழம்பெரும் பெண் தெய்வமான கொற்றவை வழிபாடு என்னும் பழைய தொன்மம் கற்பில் சிறந்த கண்ணகி என்னும் புதிய தொன்மத்துடன் இணைந்தது. பெண்ணாதிக்க காலத்துத் தெய்வங்கள் பற்றிய தொன்மம் தேய்ந்து வந்தமைக்கு மதுராபதி தெய்வம், ஏனைய பெண் தெய்வங்கள் சான்றுகளாகும்.

சிலப்பதிகாரத்தில் சமூகத்தலைவராகிய அரசரும், காப்பியத்தின் மையக் கதைமாந்தராகிய 'கோவலனும் கண்ணகியும்' என இரண்டு வகையான தலைவர்கள் குறிக்கப்படுகின்றனர்.

சமூகத்தலைவர், தேவர், அசுரர், பிற அரசர், இயற்கை என எவரையும் எல்லாவற்றையும் வெல்லும் வியத்தற்குரிய ஆற்றல் கொண்டவர் என்னும் கற்பனையில் பழங்கால மனிதர் பல்வேறு மரபுப்படிவங்களை உருவாக்கியிருந்தனர். சிலப்பதிகாரத்தில்

இத்தகைய மரபுப்படிவங்கள் பலஉள. சமூகத்தலைவர்க்கான மரபுப்படிவங்கள், காப்பியத் தலைவனாகிய கோவலனுக்கு உருவாயின. விண்ணவருடன் தொடர்பு, உயிர்ப்பலியாதல், உயிர்த்தெழல், கானுறை தெய்வத்தை வெல்லுதல் ஆகிய மரபுப்படிவங்களைக் கோவலன் பண்பாக்கத்தில் காணமுடிகிறது. சமூகத்தலைவருக்கான 'தேடல்' அல்லது 'பயணம்' என்னும் மரபுப்படிவமும் கோவலனுக்கு அமைகிறது.

பகை நீக்கம் என்னும் மரபுப்படிவம், கண்ணகி பாண்டியனின் மகள் எனக் கூறுவதில் அமைகிறது.

கோவலன், கண்ணகி இருவரும் பல்வேறு தொன்மங்களுடன் இணைக்கப்படுகின்றனர். சமூகத்தின் கூட்டுக்கனவுக்கு 'ஐவகை மன்றங்கள்' என்னும் கருத்தாக்கம் சான்றாகிறது.

நாட்டு நலனுக்கான தலைவனின் உயிர்ப்பலி, பாண்டியன் மரணத்தில் அமைகிறது. பிரேசரின் 'உயிர்ப்பலி' என்னும் கருத்துக்கு மாறாக, அரசர்க்கான எதிர்நிலை என்னும் சமூக வாழ்வியலின் மரபுப்படிவமாகவும் இதைக் கொள்ளலாம்.

ஆற்றல் மிக்க மனிதர், இயற்கைக்கு உறவாதலும் இயற்கையைப் பகைத்து வெல்லுதலும் மரபுப்படிவங்களாகும். சிலப்பதிகாரத்தில் அரசருக்கும் மையக் கதைமாந்தருக்கும் இத்தகைய ஆற்றல் காணப்படுகிறது.

சிலப்பதிகாரத்தின் தொன்மங்கள் வழியே தொன்மைத் தமிழ்ச் சமுதாயத்தை அறிய முடிகிறது.

தொன்மவியல் அறிஞர்களான மாலினாங்கி, ராபார்ட் கிரேவ்ஸ், லெவிஸ்ட்ராஸ், நார்த்ரோ பிரை, யுங் போன்றவர்களின் கருத்துக்கள் கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன.

இராமநாதன், முனைவர் ஆறு. மாறிவரும் சமுதாயத்தில் நாட்டுப்புறப் பாடல்களைக் கற்றலும் கற்பித்தலும்

பார்த்தல், கேட்டல், படித்தல் போன்ற பல நிலைகளில் கற்றல் நிகழ்கிறது. முறையாகக் கற்பிக்கப்படும் நவீனக் கல்வியைக் கற்கும் ஒருவர் மாறிவரும் சமூகத்தில் உலகளாவிய நிலையில் வாழ்வதற்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்கிறார். நாட்டுப்புற இலக்கியங்கள் உள்ளிட்ட வழக்காறுகள் வாயிலாகவும் பாரம்பரியமாகவும் பெரும்பாலும் வாய்மொழியாகவும் கற்பிக்கப்படும் மரபுவழிக்

கல்வியைக் கற்கும் ஒருவர் ஒரு சமூகக் குழுவில் வாழ்வதற்கான தகுதியையும் ஒரு சமூகக் குழுவின் அங்கத்தினர் என்னும் அடையாளத்தையும் பெறுகிறார். நவீனக் கல்விமுறை வளர்ச்சியடையாத காலத்தில் மரபுவழிக் கல்வி முதன்மை பெற்றிருந்தது. தற்போதைய மாறிவரும் சமுதாயத்தில் நவீனக்கல்விமுறை மரபுவழிக் கல்வியைக் கற்றலிலும் கற்பித்தலிலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதில் ஐயமில்லை. இம்மாற்றம் காலங்காலமாக மரபுவழியாக வழங்கிவரும் நாட்டுப்புற இலக்கியங்களின் எதிர்காலம் குறித்து ஐயத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

இந்த ஆய்வுக்கென ஒரேவொரு குடும்பத்தில் மூன்று தலைமுறையினரிடையே வழங்கிவரும் நாட்டுப்புற இலக்கியங்கள் - குறிப்பாகப் பாடல்கள் - முழுமையாகச் சேகரிக்கப்பட்டன. அச்சேகரிப்பின் வழி நாட்டுப்புற இலக்கியங்களைக் கற்றல் - கற்பித்தல் எவ்வாறு நிகழ்கின்றன என்பது ஆராயப்படுகிறது. கணவன் மனைவியரிடையேயும் பெற்றோர் பிள்ளைகளிடையேயும் சகோதர சகோதரர்களிடையேயும் குடும்பத்தில் புதிதாகச் சேரும் மருமகள் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களிடையேயும் எவ்வாறு கற்றலும் கற்பித்தலும் நிகழ்கின்றன என்பது முதலாவதாக ஆராயப்படுகிறது. பின்னர் குடும்ப உறுப்பினர்கள் தாங்கள் வாழும் சமூகக் குழுவினரிடமிருந்து எவ்வாறு கற்றுக் கொள்ளுகிறார்கள் - கற்பிக்கிறார்கள் என்பதும் ஆராயப்படுகிறது. நாட்டுப்புற இலக்கியங்களை நன்கு அறிந்த மூத்த உறுப்பினர்கள் குடும்பத்திலேயே இருந்தாலும் குடும்பத்திலிருந்து கற்றல் - கற்பித்தல் என்பதைவிடத் தாங்கள் வாழும் சமூகக் குழுக்களிடமிருந்து கற்றல் - கற்பித்தல் என்பதே அவர்களிடம் மிகுதியாக நடக்கிறது என்பதை இந்த ஆய்வால் அறிந்து கொள்ள முடிகிறது. ஒரு தனி மனிதரின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவர் வாழும் குடும்பத்தை விடவும் அவர் சார்ந்திருக்கும் சமூகம் மிகந்த பங்களிப்பினைச் செய்யும் என்பதையும் இதன்வழி ஊகிக்க முடிகிறது. மேலும் நான்கு தலைமுறைகளுக்கிடையே வழங்கிவரும் நாட்டுப்புற இலக்கியங்களை நோக்குகையில் மூத்த தலைமுறையினரைவிட இளைய தலைமுறையினரிடம் கற்றலும் கற்பித்தலும் எவ்வாறு குறைந்து வருகிறது என்பதையும் அதற்கான சமூகக் காரணங்களையும் பழைய வழக்காறுகளின் இடத்தினைப் புதிய வழக்காகள் எவ்வாறு இட்டு நிரப்புகின்றன என்பதையும் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. அத்துடன் நாட்டுப்புற இலக்கியங்களின் பரவல் குறித்தும் நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

ஒரு குடும்பத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வின் முடிவுகளைப் பொதுமைப்படுத்த இயலுமா என்ற வினா எழுவது இயல்புதான். பொருளாதாரத்திலும் கல்விநிலையிலும் இக்குடும்பத்தினையொத்த இலட்சக் கணக்கான குடும்பங்களுக்கு இந்த ஆய்வு முடிவுகள் பொருந்தக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு.

இராமர் இளங்கோ, முனைவர் சா.சு. நகரதூதனில் பாரதிதாசன் படைப்புக்கள்

நகரதூதன் இதழில் பாரதிதாசன் எழுதிய படைப்புக்கள் இங்குச் சிறப்பு நிலை கருதி ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாய்வுக் கட்டுரை

1. நகரதூதன் இதழின் தோற்றமும் வளர்ச்சியும்

2. நகரதூதனில் வெளிவந்த பாரதிதாசனின் படைப்புக்கள்

3. படைப்புக்கள் உருவான காலப்பின்னணி என்ற முப்பெரும் தலைப்புகளில் அமைந்துள்ளது.

1. அ. 929 - ஆம் ஆண்டு உருவான தன்மான இயக்கத்தின் (சுயமரியாதை இயக்கம்) இதழாக வெளிவந்தது நகரதூதன்.

அவ்விதழ் திருச்சி உறையூரில் இருந்து 1930 முதல் 1946 வரை வார இதழாக வெளிவந்துள்ளது. அவ்விதழின் ஆசிரியர் மணவை திருமலைசாமி ஆவார். 'பேனா நர்த்தனம்' என்ற பகுதியில் "கேசரி' என்ற புனைபெயரில் இவர் எழுதிய தலையங்கங்கள் தனிச்சிறப்புடையவை.

ஆ. 1938-ஆம் ஆண்டு திருமதி குஞ்சிதம் குருசாமி 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுப்பை வெளிக்கொணர்ந்தார். அத்தொகுப்பு வெளிவருவதற்கு முன் பாரதிதாசன் பல்வேறு இதழ்களில் தம் படைப்புக்களை வெளியிட்டு வந்தார். அவற்றுள் ஒன்று நகரதூதன்.

2. அ. சோபன அறை, தொழிலாளர் கேள்வி, பட்டாளம் சேருதல், இந்திப் போருக்கு அழைத்தல், என்தாயே, குடுகுடுப்பைக்காரன் முதலிய நூல்வடிவம் பெறாத கவிதைகளும், மாண்டவன் மீண்டான், தமிழ்க்கொலை, தமிழ்நாட்டிற் சினிமா, இந்தி எதிர்ப்புக்குத் தியாகம் வேண்டல், பன்னீர்ச்செல்வம் மறைவு, பணமும், புத்தக சாலை முதலிய நூல்வடிவம் பெற்ற கவிதைகளும்

இடம் பெற்றுள்ளன.

ஆ. நூல் வடிவம் பெற்ற கவிதைகளில் பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்களின் ஆளுமையும், வர்ணமெட்டுக்களின் செல்வாக்கையும் அப்பாடல்கள் உணர்த்துகின்றன. இயல்பாகவே வடசொல் கலந்து எழுதுகின்ற நடையியல் பாங்கையும் காணமுடிகிறது.

இ. பாரதியாரைப் பற்றிப் பாரதிதாசன் எழுதிய பாரதியும் பெண்களும். கத்திச் சண்டை பார்க்கிறார் கவியரசர் பாரதி, பாரதி திருநாள் ஆகிய நினைவுக் கட்டுரைகளும், பாலாமணி திரைப்படப்பாடல் தொடர்பாகப் பத்மநாபப்பிள்ளை எழுதிய திறனாய்வுக்கு மறுப்பு தெரிவித்து எழுதிய கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. மேலும் "துவேஷம்' என்ற பெயரில் பாரதிதாசன் எழுதிய சிறுகதையும் காணப்படுகின்றது.

3. அ. காலமும் இலக்கியப் படைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. பாரதிதாசன் எழுதி நகரதூதனில் வெளிவந்த படைப்புக்கள் அக்காலகட்டத்தை நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

ஆ. பொதுவுடைமைக் கோட்பாடு, விதவை மறுமணம், முதல் இந்தி எதிர்ப்புப்போர், வடமொழி ஆதிக்க எதிர்ப்பு, தெலுங்கு இசை ஆதிக்க எதிர்ப்பு, பெரியார் சிறை செல்லல், பன்னீர்ச் செல்வம் மறைவு, நூலறிவு, பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், தேசிய இதழ்களின் குறுகிய சிந்தனைகள், பாலாமணி திரைப்படம் தொடர்பான செய்திகள் ஆகிய பதினொரு உள்தலைப்புகளில் பாரதிதாசன் படைப்புகள் வெளிவரத் துணை நின்ற காலப்போக்குகள் கணிக்கப்படுகின்றன.

இயக்கமும் இலக்கியமும் பிரிக்க முடியாதவை. தன்மான இயக்கக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட பாரதிதாசனின் வெளிப்பாடாக அவருடைய படைப்புக்கள் நகரதூதனில் வெளிவந்துள்ளன.

DR. SA.SU. RAMAR ILANGO BHARATHITHASAN WRITINGS PUBLISHED IN NAGARA THUDHAN

Non Brahminism and labour movement were the twin principles of Nagara Thudhan weekly. Bharathithasan wrote poems, essays and short stories in this weekly. Here we are specially analysing the writings of Bharathithasan in this weekly.

The research paper is divided into three chapters:

1. The form and development of Nagara Thudhan

2. `Bharathithasan's writings published in Nagara Thudhan

3. The background period of Bharathithasan's writings

Let us summarise the above chapters:

I. Self respect movement was initiated by Periyar E.V. Ramaswamy in 1929. `Nagara Thudhan' was a media speed up this movement. This magazine was published in Uraiyur of Tirchy from 1930. The editor of the magazine was Manavai Thirumali Swamy. His satirical writings under the title of `Penanarathnam' where welcomed by one and all.

Mrs. Kunjitham Guruswamy copiled and published Bharathithasan's poems first volume in book form in 1938. Before this Bharathithasan wrote many poems and articles for various self respect movements among which `Nagara Thudhan' was one. We can see Bharathithasan's earlier writings before 1938 in `Nagara Thudhan'.

II Out of 13 Bharathithasan's poems 6 of them are yet to be compiled in book form. For the 7 which were compiled in book form these was a lot of texutual criticism.

Majority of Bharathithasan's poems were a perfect form of lyric and folklore. The initial works of Bharathithasan show no omission of sanskrit words. Bharathithasan write articles about his Guru Bharathiar. He recollected his green memories with his guru. Padmanaba Pillai criticised Bharathithasan's cinema songs in Palamani. Bharathithasan replied to their criticism in Nagara Thudhan. Apart from his writings, Bharathithasan wrote a short story named `Thuvesham' published in this weekly.

III Every writer reflects his era of which Bharathithasan is not exempted. Bharathithasan's writings in Nagara Thudhan amonasised on communism, widow remarriage, anti sanskrit, Hindi and domination of music in Telugu. He also wrote about Periyar's imprisonment in Jail, memories of Paneerselvam, li-

brary, memories of Bharathiyar, the cruel mentality of State National Congress leaders and Palamani cinema.

In this chapter the impact of the background period of Bharathithasan's writings is emphasised.

Bharathithasan a powerful product of self respect movements expressed the movement's ideologies through his writings in `Nagara Thudhan'.

இராமானுசம் சே. தமிழ் மரபு நாடகங்களும் நடிகனின் சுயம் மறைதல் பாங்கும்

கிழக்கு மேற்கு அரங்கப் பரிவர்த்தனையும் நவீன நாடகப் பாங்கில் கீழைய பங்களிப்பும் - தமிழகத்துப் புத்தாக்க நாடகக் கலைஞர்களிடத்து நவீன நாடகத்தின் கோட்பாட்டுத் தாக்கம் - தமிழ் மரபு நாடகத்தின் இன்றைய பொருத்தப்பாடு - மரபு நாடகங்கள் பற்றிய சில விளக்கம் - சுயம் கரைதல் ஒரு விளக்கம் - சுயம் கரைதலில் அக நிகழ்வு: 1. மனஒருமைப்பாடு 2. இடைவிடாத பயிற்சி 3. உடலின் கட்டுப்பாடு 4. தளம், காலம் ஆகியவற்றின் சூழ்நிலைப் பிரச்சனைகள். - புற உத்திகள்: 1. முகப் போலிகளும் போலி அனைய ஒப்பனைகளும் 2. ஆடை அணியின் மிகைப்படுத்தம் 3. கையாளும் பொருட்களின் குறியீட்டுத் தன்மை - நாடகப் படைப்பு நகல் என்பதைத் தாண்டிச் சுயம் கரைதல் தன்மையுடன் மேடை நிகழ்வு ஆக்கத்திற்கு உதவுதல் - ஆகியன கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன.

PROF. S. RAMANUJAM, THE PROCESS OF IMPERSONALIZATION IN TAMIL TRADITIONAL THEATRE

Introduction - East West interaction in theratre and Oriental contribution to Modern Theatre practice.

Influence of Modern Theatre concepts among the serious innovative theatre workers in Tamil Nadu.

Relevance of Tamil Traditional Theatre to Modern Theatre concepts.

A brief description of Traditional Tamil Theatre.

Definition of impersonalization.

Internal Process in Traditional Theatre towards impersonalization

(a) Control over the body (b) Constant practice (c) Concentration (d) Transcedental consciousnes in space & time.

External Devices (a) Mask and Mask - like makeup (b) Exaggeration in costumes (c) Symbolization in properties.

Impersonalization as an element to make the theatre performance a presentation than mere representation.

இலக்குவனார் திருவள்ளுவன் இன்றைய தேவை குறுஞ்சொற்களே

கலைச்சொற்களை உருவாக்கும்பொழுது கூடியவரை தனிச் சொற்களாக அமைக்க வேண்டும்; இவையும் மூன்று அல்லது நான்கு எழுத்துகளுக்கு உட்பட்ட சொற்களாக இருத்தல் வேண்டும் என வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அயற்சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை உருவாக்குகையில் பெரும்பாலானவை பொருள் விளக்கமாய் அமைகின்றன. வினைவடிவம், பெயர் வடிவம் என்பன போன்று வெவ்வேறு வடிவங்களில் இவைபோன்ற சொற்களைக் கையாளுகையில் இடர்ப்பாடு ஏற்படுகின்றது. இதுபோல் முன்னொட்டு அல்லது பின்னொட்டு சேர்க்க வேண்டிய நேர்வுகளிலும், கூட்டுச்சொல் உருவாக்கப்படும் நேர்வுகளிலும் 'சொல்' மறைந்து 'தொடரே' நிற்கின்றது. ஏழெழுத்துகளுக்கு மேல் சொற்கள் இல்லாத தமிழ்மொழியில் ஈரெழுத்துச் சொற்கள் அடிப்படைச் சொற்களாய் அமைந்துள்ள தமிழ்மொழியில் 'தொடர் சொற்கள்' உருவாக்கப்படுவதால் இவை உரிய பயன்பாட்டை இழந்து விடுகின்றன. எளிமை, வளமை என்னும் போர்வைகளில் அயற்சொற்களே நிலைத்து விடுகின்றன.

பயன்பாடு இல்லாத சொல் இருந்து பயன் என்ன? எனவே, நாம் கலைச்சொற்களை உருவாக்குவதன் நோக்கம், 'அவை அயற்சொற்களை அகற்றி அல்லது அயற்சொற்களுக்கு இடந்தராமல்,

நின்று நிலைக்க வேண்டும்' என்பதே. இதைக் கருத்தில் கொண்டு சொல்லாக்கத்தில் ஈடுபடவேண்டும்.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட நெடுஞ்சொற்களையும் தொடர் சொற்களையும் குறுஞ்சொற்களாக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நாம் தீயணைப்பு நிலையம், காவல் நிலையம் எனக்குறிக்காமல், தீயணைப்பகம், காவலகம் எனலாம். இவற்றை மேலும் சுருக்கும் வகையில் சொற்களை உருவாக்கலாம். பதிவேடு என்னும் சொல் மற்றொரு சொல்லுடன் சேர்க்கப்படுகையில், பணஏடு, அனுப்புகைஏடு என்பனபோல் சுருக்கலாம். நுழைவுச்சீட்டை நுழைமம் எனலாம் (ஒப்புநோக்குக உரிமம்), நுண்ணுயிரியை 'நுண்ணி' எனலாம். (ஒப்புநோக்குக உண்ணி) எனினும் ஏற்கெனவே ஏற்கப்பட்ட சொல்லைச் சுருக்குகையில் வேறு புதுச்சொல் என்ற குழப்பம் இல்லாதவகையில் தொடக்கத்தில் நெடுஞ்சொற்களை அடைப்பில் குறிக்கலாம்.

பழந்தமிழ்ச் சொற்களை மறந்து விடுவதாலும் தொடர் சொற்கள் அமைகின்றன. சான்றாக 'அருவியை' மறந்துவிட்டு 'நீர்வீழ்ச்சி' என்கிறோம். 'துரவு' என்பதை மறந்துவிட்டு 'இறங்கும்படிகள் கொண்ட கிணறு' என்கிறோம். பழந்தமிழ்ச் சொற்கள் இருக்கும்பொழுது அவற்றை உலவவிட்டு உயிர் கொடுக்க வேண்டுமேயல்லாமல் தொடர் சொற்களையமைக்கக்கூடாது.

"SUGAR CANE" என்னும் சொல் இப்பொழுது அறிமுகமாகும் புதிய சொல்லாய் இருப்பின் நாம் சீனிப்பிரம்பு, சருக்கரை மூங்கில் என்பனபோல்தான் குறிப்பிடுவோம். ஆனால் முன்னவர்களோ அப்போதைய அதன் பெயரைப் பற்றிக் கவலைப்படாமல், நிறத்தின் அடிப்படையில் 'கரும்பு' எனக் குறிப்பிட்டனர். புதிதாக இறக்குமதியான கிழங்கின் பெயரைப் பொருட்படுத்தாமல் வடிவ அடிப்படையில் உருளைக்கிழங்கு எனப் பெயர் சூட்டினர். இப்பொழுது நாம் உருவாக்க வேண்டிய கலைச்சொற்கள் "சொல்லுக்கச் சொல்லான பொருள் தொடராய் அமையாமல் இவைபோல் குறுஞ்சொற்களாயும் தனிச்சொற்களாயும் அமைதல் வேண்டும். இத்தகைய சொற்களே நின்று நிலைத்துப் பயன் தந்து மொழிக்கு வளம் சேர்க்கும்.

நெடுஞ்சொற்களும் கூட்டுச் சொற்களும் இருப்பின் அவை எளிமையின்மையால் அயற்சொற்களையே நிலைக்கச் செய்யும். எனவே துறைதோறும் துறைதோறும் தமிழ் வளர இன்றைய உடனடித் தேவை குறுஞ்சொற்களே.

இளமுருகன், முனைவர் அங்கயற்கண்ணி இசை இலக்கண வளர்ச்சிக்குத் திருப்புகழின் பங்களிப்பு

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ்ப் பாடல்கள் எக்காலத்திற்கும் எல்லோர்க்கும் பொருந்தக்கூடிய இசைப் பாடல்களாகும். இப்பாடல்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருப்பினும் 19-ஆம் நூற்றாண்டுகளில்தாம் இசையுலகுக்குப் பரவலாக அறிமுகமாகியுள்ளன. இவை இசை இலக்கண வளர்ச்சிக்கு, குறிப்பாகத் தாள இலக்கண வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளன என்னும் உண்மையைத் திருப்புகழ்ப் பாடல்களின் சந்தங்கள் பற்றிய ஆய்வுகள் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன.

இசை ரீதியாகக் கருநாடக இசையரங்குகளில் திருப்புகழ்ப் பாடல்கள் கிருதி, பதம் போன்ற உருப்படிகளைப் போன்று முதன்மை இசை உருப்படிகளாக அமையாமல், 'துக்கடா' நிலையிலேயே சென்ற நூற்றாண்டு வரை இருந்தன. தற்போது திருப்புகழ்ப் பாடல்களையே முழுமையாகக் கொண்ட திருப்புகழ் அரங்குகளும் நிகழ்வதைக் காண்கிறோம்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் திருப்புகழ்ப் பாடல்களின் அமைப்பையும், இப்பாடல்களின் சந்தங்கள் உணர்த்துகின்ற தாளங்களையும் தற்கால இசை இலக்கணங்களுடன் பொருத்தி இக்கட்டுரை ஆராய்கின்றது. மேலும் திருப்புகழ்ப் பாடல்கள் கருநாடக இசையரங்குகளில் இடம்பெறும் பாங்கினையும் திருப்புகழின் சந்தங்கள் இசையரங்குகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் வளர்ச்சிகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

திருப்புகழில் ஒரு குறிப்பிட்ட அடிப்படைச் சந்தம் மூன்று முறை ஒரே சீராக மடங்கி வந்து இறுதியில் 'தனதானா' என்னும் தனிச் சொல்லுடன் முடிவடைகின்றது. இச்சொல் இசைமரபில் 'தொங்கல்' என்று கூறப்படுகின்றது. திருப்புகழ்ப் பாடல்களின் அமைப்புச் சிறப்பிற்கு இத்தொங்கலே முக்கியக்காரணமாகும். இசையரங்குகளில் தொங்கல் அதன் சந்த எண்ணிக்கையினின்றும் கூடுதலாக நீட்டிப்பாடப்படுகிறது. இவ்வாறு நீட்டிப்பாடுதல் சரியா தவறா என்பதையும் தொங்கலை நீட்டிப்பாடும்போது கையாளவேண்டிய நெறிகளையும் ஆராயவேண்டுவது அவசியம்.

அடிப்படைச் சந்தம் மூன்று முறை ஒரே சீராக மடங்கி வருகின்ற திருப்புகழின் அமைப்பு, இசையரங்குகளில் கல்பனா சுரங்கள் பாடுமுறையிலும் தாள இசைக்கருவிகளின் வாசிப்பிலும்

தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம். கிருதிகளில் கல்பனா சுரங்கள் பாடிக்கொண்டே வந்து இறுதியில் முடிக்கும்போது குறிப்பிட்ட சுரக்கோர்வைகள் மூன்று முறை ஒரே சீராக மடக்கிப் பாடப்படுகின்றன. இவ்வாறே தாள இசைக்கருவிகளிலும் தனி ஆவர்த்தனத்தின் இறுதியில் ஒரு குறிப்பிட்ட தாளச்சொற்கள் மூன்று முறை ஒரே சீராக வாசிக்கப்படுகின்றன. எனவே இவ்வாறு பாடுகின்ற, வாசிக்கப்படுகின்ற நெறிக்குத் திருப்புகழ்ப்பாடல்களின் அமைப்பு ஆதாரமாக உள்ளது என்று கூறலாம்.

திருப்புகழ்ச் சந்தங்களைத் தற்போதைய தாள இலக்கணத்துடன் பொருத்தி ஆராய்கையில் இவை எல்லா நாட்டு இசைக்கும் பொதுவானவை என்று கருதப்படும் மூன்று, நான்கு (திச்ரம், சதுரச்ரம்) கால அளவுகளையும் இவற்றின் விரிவுகளான கண்டம், மிச்ரம், சங்கீர்ணம் ஆகிய கால அளவுகளையும் அவற்றின் விரிவுகளையும் கலப்புகளையும் உள்ளடக்கியவை என்றறிய முடிகிறது.

கருநாடக இசையின் ஆரம்பப்பாடங்களுள் ஒன்றான ஏழு தாள அலங்காரங்களுக்கும் 35 தாள பிரிவுக்கும் திருப்புகழ்ப் பாடல்களே ஆதாரங்களாக உள்ளன என்று கூறலாம். இதைத் தவிர திருப்புகழ்ச் சந்தங்களினின்றும் பல்வேறுபட்ட தாள அமைப்புகளை உருவாக்கலாம். இவற்றைப் 'புதிய தாளங்கள்', 'திருப்புகழ்த் தாளங்கள்' என்று கூறின் அது மிகையாகாது. இவ்வகைத் திருப்புகழ்த் தாளங்களுக்குரிய இலக்கணத்தை வரையறை செய்வது தாள இலக்கண ஆய்வில் ஒரு புதிய பரிணாமத்திற்கு வழிவகுக்கும். இருபத்தோராம் நூற்றாண்டுச்செவ்வியல் இசைவளர்ச்சிக்குத் திருப்புகழ்த் தாள இலக்கணம் பெருந்துணை புரியுமாற்றையும் விரிவாகக் கண்டு தெளியலாம்.

DR. ANGAYARKANNI ELAMURUGAN

THIRUPPUGAZH - ITS CONTRIBUTION TO THE FIELD OF MUSICOLOGY

Saint Arunagirinathar, an architect of the musical form "Thiruppugazh" will ever be remembered by the musicians and musicologists for his contribution to the field of music especially to the growth and development in the 15th century only in the 19-20th century these songs were introduced and popularised to the music world.

In the Carnatic music concerts Thiruppuazh stoods as "Miscellaneous Items" (Thukkada), so long as in the last century. But at present, the concerts exclusive of Thiruppugazh songs may also be seen performed. The rhythmic aspects of Thiruppugazh have been one of the important and fascinating topics in the music studies by the music scholars and musicians as early as the Thiruppugazh flourished as a musical form.

Bearing these points in mind, the structure of Thiruppugazh and the talas revealed from the Thiruppugazh Chandams have been compared and studied with the present day musicology in this paper. The place of Thiruppugazh songs in the Carnatic music concerts the impact and the developments made by the Thiruppugazh chandams in the present day concerts have also been treated in this paper.

In the structure of Thiruppugazh a particular chandam repeated thrice and ends with a "separate word" having "Thanathana" as its chandam. This word is called "Thongal" in the musical terminology. This Thongal is responsible for the unique structure of Thiruppugazh.

In the concerts Thongal has been extended to some extent and sung by the musicians . It is necessary to view the diverse opinions by the musicians and music and Tamil scholars as regards the singing of Thongal

It may be said that the structure of the basic chandam repeated thrice is influenced in the Korvai and Makuṭṭam in the singing of Kalpana svaras and in the percussion ensemble in the music concerts.

An analytical study of the Thiruppugazh chandams reveals the fact that Arunagirinathar dwelt the prastara (permutation and combination), creating a good number of new talas, the names and the grammar of which are yet to be decided. In this paper an attempt has been made to classify and derive the grammar to these "Thiruppugazh talas".

The study also reveals that Thiruppugazh is the authentic lakshya (composition) for the basic vocalises, seven talas and the 35 tala scheme.

Thus the grammar of Thiruppugazh structure and the Thiruppugazh talas will be an useful addition to the Musicology of the 21st century.

ஈசுவரபிள்ளை, முனைவர் தா. *திருமந்திரத்தில் சமுதாயச் சிந்தனைகள்*

தனி மனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பே சமுதாயம் ஆகும். சமுதாயம் சீராக இயக்குவதற்கும், சமுதாய உறுப்பினர்கள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் சமுதாயத்தில் பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. குடும்பம், கல்வி, அரசு, பொருளாதாரம் போன்று சமயமும் ஒரு சமுதாய நிறுவனம் ஆகும். சமயம் குறித்துச் சமூகவியலாளர்கள் பல்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர். சமயமானது சமூக ஒழுங்கை நிலைநாட்டல், சமூகக் கட்டுப்பாட்டைக் காத்தல், சமூக மதிப்புகளைப் பேணல் போன்ற சமுதாயச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளமையையும் சமூகவியலாளர் விளக்குகின்றனர்.

சமயம் என்ற நிறுவனத்தைச் சார்ந்து எழுந்தனவே பக்தி இலக்கியங்கள். பக்தி இயக்கம் தோன்றிய காலச் சமுதாயத்தில் மக்கள் சாதி, பொருளாதாரம் முதலியவற்றின் அடிப்படையில் தரப்படுத்தப் பெற்றிருந்தனர். தாழ்நிலையுற்றிருந்த மக்கள் சமுதாய, பொருளாதார நிலைகளில் இயலாமையுடன்வாழ்ந்துள்ளனர். சமண, பௌத்த சமயங்கள் பாமர மக்களால் பின்பற்ற இயலாத அளவுக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதித்தன. துறவு நெறிக்குத் தடையானவர் எனக் கருதிப் பெண்களை ஒதுக்கி வைத்தன. இச்சூழலில் பக்தி இயக்கம் சமுதாய மக்கள் அனைவரும் அனைத்துநிலைகளிலும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன் தோன்றி, மக்களின் பேராதரவைப் பெற்றது. எனவே, பக்தி இலக்கியங்களிலும் சமுதாயச் சிந்தனைகள் பல இடம் பெறக் காணலாம்.

பக்தி இலக்கியங்களில் ஒன்றாக விளங்கும் திருமந்திரத்தைத் திருமூலர் இறையனுபவம், பக்தி உணர்வு, சித்தாந்தக் கருத்துக்கள், தத்துச் சிந்தனைகள் முதலியன வெளிப்படும்வண்ணம் இயற்றியிருப்பினும், சமூக நலனை, மக்களின் மேம்பாட்டை மனத்திற்கொண்டு சமுதாயச் சிந்தனைகள் பலவற்றையும் வெளிப்படுத்தியுள்ளமையையும் காணமுடிகின்றது.

சமுதாயத்தில் பிறப்பின் அடிப்படையில் அந்தணர்கள் உயர்ந்தோராகவும், சிலர் தாழ்ந்தோராகவும், தீண்டத்தகாதவராகவும்

கருதப்பெற்றதைக் கண்ணுற்ற திருமூலர் ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டே உயர்வு, தாழ்வு கருதவேண்டும். பிறப்பை அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. இறைவன் முன்னர் அனைவரும் சமம். மக்கள் அனைவரும் கருவில் இருக்கும்போதே தீட்டு ஏற்பட்டு விடுகின்றது. எனவே, தீண்டாமை எண்ணம் கூடாது என்பன போன்ற சமத்துவச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார். இதைப் போன்று, பொருளாதார நிலையிலும் சமத்துவம் காணப் பல கருத்துக்களைக் கூறுகின்றார்.

சமுதாயம் மேன்மையுற அதன் பண்பாடு சிறக்க வேண்டும். எனவே, பண்பாட்டின் கூறுகளுள் ஒன்றாகிய சமுதாய மதிப்புக்கள் பலவற்றை வலிவுறுத்துகின்றார்.

இன்றைய சமூகவியல், பொருளியல் அறிஞர்கள் சமுதாய உயர்வுக்காகக் கூறும் கருத்துக்களை அன்றே திருமூலர் வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகின்றது.

திருமூலரின் சமுதாயச் சிந்தனைகளை ஏற்று நாம் வாழ்வோமானால், வருங்காலத்தில் சாதி, பொருளாதார வேறுபாடுகளற்ற, சமயக் காழ்ப்பில்லாத சிறந்த சமுதாயத்தைப் படைக்கமுடியும் என உறுதியாகக் கூறலாம்.

உண்ணாமலை, முனைவர் வீ. ஹைக்கூ கவிதைகளில் தத்துவம்

1. தத்துவம் அதன் விளக்கம் என்னும் பகுதியில் தத்துவம் என்றால் என்ன? அதன் பொருள் யாது? ஆகியன இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

2. மரபிலக்கியங்களில் ஹைக்கூக் கவிதைகளின் அமைப்பும் தத்துவக் கூறும் என்னும் பிரிவில் தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு, மணிமேகலை, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய இவ்விலக்கியங்களில் உள்ள செய்யுட்களில் தத்துவக் கூறுகளைக் கண்டறிந்து, ஹைக்கூச் சாயலில் உள்ளவற்றை ஹைக்கூவாக மாற்ற முடியும் என்பதனை இப்பகுதி உறுதி செய்கிறது.

3. 1. புத்திலக்கியங்களில் ஹைக்கூக் கவிதைகளின் சாயலும் தத்துவக் கூறுகளும் எனப்படும் பகுதியில் தமிழகத்தில் தொடக்க காலத்தில் பௌத்தம் இருந்தநிலை, கீழை, மேலை நாடுகளில் பரவிய விதம் ஜென் பௌத்தம் உருவானவிதம், அதன் வளர்ச்சிக்குப்

பாடுபட்டவர்கள், அதன் கோட்பாடு, ஜென்படைப்பாக்க மனநிலை ஆகியன ஆராயப்பட்டுள்ளன.

2. தமிழ் ஹைக்கூக் கவிதைகளில் உள்ள தத்துவ நிலைகளை 1. தொடக்க காலத்தில் ஹைக்கூ வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களின் ஹைக்கூக் கவிதைகளை ஆராய்தல்.

3. புதுக்கவிதை நூல்களில் உள்ள புதுக்கவிதைகளில் ஜென் தத்துவச் சாயலைக் கண்டறிந்து அக்கவிதைகளை ஹைக்கூவாக உருவாக்கல்.

4. புதுக்கவிதை நூல்களில் உள்ள ஹைக்கூக்களில் உள்ள தத்துவங்களைக் காணல்

5. முழுக்க முழுக்க ஹைக்கூக் கவிதைகள் அடங்கிய நூல்களில் உள்ள ஹைக்கூக்களில் தத்துவக் கூறுகளைத் தெளிதல். 5. மொழி பெயர்ப்பு நூல்களில் உள்ள ஹைக்கூக்களில் தத்துவக் கூறுகளை அறிதல் என்பவை ஆராயப்பட்டுள்ளன.

6. ஜப்பானியக் கவிதைகளில் காணப்படும் தத்துவத்தாக்கமும் அதன் வரலாறும் ஜப்பானியக் கவிஞர்கள் ஜென் கோட்பாட்டைப் புகுத்தியுள்ள திறனும் ஆயப்பட்டுள்ளன.

7. தமிழக ஹைக்கூக்களில் காணப்படும் தத்துவம் எனும் இப்பிரிவு தமிழ் ஹைக்கூக் கவிஞர்கள் ஜென் தத்துவக் கூறுகளைப் புகுத்திக் கவிதைகள் புனைந்த பாங்கினைத் தெளிவுப்படுத்துகிறது.

8. ஹைக்கூக் கவிதைகளில் தத்துவத்தின் வளர்ச்சி நிலைகள் எனும் இத்தலைப்பு இன்றை ஹைக்கூக் கவிஞர்கள் ஜென் கோட்பாட்டைப் பயன்படுத்தி வளர்ச்சி நிலைப் படிகளில் முன்னேறுவதை இப்பகுதி உறுதி செய்கிறது.

ஏசுதாசன், முனைவர் ப.ச. தமிழ்க் கிறித்துவ இலக்கிய மரபுகள்

தமிழ் இலக்கியம் பல்வேறு இலக்கிய மரபுகளைத்தன்னகத்துக் கொண்ட ஒன்று. தமிழகத்தில் வழங்கும் சமயங்கள் பலவும், தமிழிலக்கிய மரபுகளை ஏற்றுத் தத்தம் சமய இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளன. அவற்றுள் ஒன்றான கிறித்துவ சமயமும் பல்வேறு செய்யுள் இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளது. தமிழிலக்கிய மரபுகள் பலவும் அவற்றுள்

காணுதற்குரியனவாக உள்ளன. மேலும் தனக்கெனச் சில புதிய மரபுகளை உடையதாகவும் உள்ளது.

மரபு இலக்கிய வகைகள் - பேரிலக்கியங்கள் - சிற்றிலக்கியங்கள்- சாத்திரநூல் - தோத்திரநூல் - பாவகைகள் - நூல்அமைப்பு - காப்புச் செய்யுள் - அவையடக்கம் - மங்கலச் சொல் - வாழ்த்து - திருவடிபோற்றல் - நூற்பயன்கூறல் - கேசாதிபாதவர்ணணை - அங்கமாலை - எண்மாலை - தசாங்க வர்ணணை - வண்ணம், கொடி, வாகனம் கூறல் - இறைவனுக்குக் குணங்கள் கூறல் - நிந்தாஸ்துதி - நாயகன், நாயகி பாவம் - தமிழ்ப்பற்று - நாட்டுப்புறப்பாடல் வடிவம் என்பன தமிழிலக்கிய மரபுகள்.

முற்றுருவகம் - சிற்றின்பம் பாடாதநிலை - உரைநடைநூல், செய்யுள் நூலானமை - கிறித்துவத்திருமறை செய்யுள் வடிவம் பெற்றது - வர்ணணையில் தனித்தன்மை - புதிய இலக்கிய உறுப்புகளைத் தோற்றுவித்தமை - தன்னாக்கத் தேவியலை உருவாக்கியமை ஆகியன புதிய கிறிஸ்தவ இலக்கிய மரபுகள்.

Dr. P.S. JESUDASON LITERARY CONVENTIONS IN TAMIL CHRISTIAN LITERATURE

Tamil has a vast fund of literary conventions to its credit. The religions of Tamilnadu have picked up a few of these, according to their needs, and used them in their literatures. Accordingly, Christianity has also adopted some of the conventional devices in its literary creations; It has also added a few innovations of its own to Tamil.

Conventional methods in Tamil:

Traditional genres - classical literatures and inferior literatures - canonical literature and devotional literature - verse forms - obeissance to the assembly - Auspicious initial words - Benediction - Praising the feet of the Lord - Declaration of the message - Head to foot description (of the physical form of the Lord) - Praising the form - Eight characteristics - Description of the Ten External Features - Describing the complexion, the flag, and the mount - Praising the Lord's qualities - Praise through disparage - The Spousal relationship of God and the Devotee - Love of Tamil - using forms of folk literature.

New Systems:

Allegory - Eroticism free literature - Prose to verse transformation - The Bible rendered poetic - Uniqueness in description - Creation of new literary devices - Indegenisation of Theology.

கடிகாசலம், முனைவர் ந. தமிழ் சீனப் பண்பாட்டில் ஒப்புமைக் கூறுகள்

பழமையான பண்பாட்டைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் சீனாவும் முன்னணியில் நிற்கின்றன. தமிழகத்திற்கும் சீனாவுக்கும் இடையில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு நிலவி வந்துள்ளது.

சில ஒப்புமைக் கூறுகளைத் தமிழ், சீனப் பண்பாட்டில் காண முடிகிறது. இலக்கியம், வரலாறு ஆகியவற்றினால் இதை உறுதிப்படுத்த இயலுகிறது. சீனாவில் ஏழாண்டுக்காலம் தங்கிப் பணிபுரிந்த தமிழன் என்ற நிலையில், சீன மக்களுடன் நேரில் பெற்ற தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

இவ்விரு பண்பாட்டிலும் காணக்கிடக்கும் ஒப்புமைக் கூறுகளை, 1. பழக்க வழக்கங்கள், 2. நம்பிக்கைகள், 3. விழாக்கள், 4. சடங்குகள், 5. வாழ்வியல் முறை ஆகியவற்றில் காணலாம்.

விடுதலைக்கு (1949-க்கு) முந்திய சீனாவில் அன்றைய மக்கள் தமிழர்களைப் போலவே பல்வேறு பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டிருந்தனர். சான்றாகச் சகுனம் பார்த்தலைச் சுட்டலாம்.

விழாக்கள் என்ற நிலையில், கார்த்திகை தீபம் போல, விளக்கு விழாவை (Lantern Festival) அவர்கள் கொண்டாடுகின்றனர். குடும்பத்தில் உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்பவும் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் வேண்டியும் அதிகமாக விளக்கேற்றி வைக்கும் சீன மக்களும் காணப்படுகின்றனர்.

வேளாண்மையோடு தொடர்புடைய சடங்குகளில் வளமைச் சடங்கைக் குறிக்கலாம். தமிழரைப் போலவே சீன மக்களும் அதிக விளைச்சல் வேண்டி சடங்கு செய்வதுண்டு. கோதுமை மாவால் ஆன பருத்திக் காய் உருவத்தை நிலத்தில் புதைத்து, கையில் ஊதுபத்தியுடன் சுற்றி வந்தால் விளைச்சல் அதிகரிக்கும் என்று

அவர்கள் நம்புகின்றனர்.

விழாக் காலத்தில் தமிழர் புலிபோல் வேடமிட்டுப் புலி நடனம் ஆடுவது போல் சீனாவில் சிங்க நடனம் பரவலாக ஆடப்படுகிறது. பேயை விரட்டும் நடனமாக உருவான இது தற்போது மகிழ்ச்சியூட்டும் நடனமாக மாறிவிட்டது.

வாழ்வியல் முறையில், முதிய பெற்றோரைப் பாதுகாக்கும் பொறுப்பைப் பிள்ளைகள் ஏற்கும் நிலை நீடிக்கிறது.

இவை போலப் பல ஒப்புமைக் கூறுகளைக் காணமுடிகிறது. அவற்றின் காரணங்களை ஆய்ந்து வெளிப்படுத்தல் பயன் தரும்.

கமலி, முனைவர் திருமதி தி. தமிழரது பெண்மைக் கருத்தாக்கம் - பழைய புதிய பரிமாணங்கள்

மனிதரை 'ஆண்' என்றும், 'பெண்' என்றும் உடலியல் அடிப்படையில் பாகுபடுத்துவது வழக்கம். ஆனால் 'ஆண்மை' (Masculinity) 'பெண்மை' (Femininity) கருத்தாக்கங்கள் அவ்வப்பாலுக்கே உரிய குணநலன்களா? அல்லது பயிற்றுவித்தலால் வருவனவா? இவற்றின் பழம் பரிமாணங்கள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன (தொல் பொருள் களவியல்).

இப்பரிமாணங்கள் இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நட்ப வளர்ச்சிக்கேற்ப மாற்றம் பெற்று வருகின்றன.

'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்கும் செம்மை மாதர் குணங்கள்' என்று பாரதி புதிய பரிமாணத்தைச் சுட்டிக் காட்டினார்.

இக்கருத்தாக்கம் பற்றிச் சமகாலத்துத் தமிழர்களிடையே கருத்துக் கணிப்பு வினா நிரல் மூலம் கருத்துக்கள் சேகரிக்கப் பட்டன.

பழைய, புதிய பரிமாணம் பற்றிய இலக்கியச் சான்றுகளுடன், சம காலத்தினரின் கருத்துக்களையும் பரிசீலித்துத் தமிழரது பெண்மைக் கருத்தாக்கம் குறித்தும் இருபத்தோராம்

நூற்றாண்டுக்குத் தமிழ்ப்பண்பாட்டின் பங்களிப்பு இன்னதென்றும் இவ்வாய்வுக்கட்டுரை எடுத்தியம்ப உள்ளது.

DR. (MRS) T. KAMALI TAMIL CONCEPT OF FEMINITY - OLD AND NEW PERSPECTIVES

The division of `Male' and `Female' is based upon the biological ground of each sex. But what about masculisity and femininity? These concepts are the result of learned behaviour due to the process of socialization or the peculiar inborn characteristic features of each sex? References are available in Tamil literature. Tolkappiyam Portrays the old perspective of these concepts.

Due to the development of Science and Technology, many age old concepts are now getting new dimension. Regarding these concepts, our modern poet Bharathi gave new perspective through his poems.

What about the opinion of contemporary people? An opinion poll is also conducted to collect their views thus a comparative study is done with literary references and contemporary ideas.

This research article is the result of this study which assess the contribution of Tamil culture to the twentyfirst century in this area.

கரிகால் வளவன், சுப. தமிழர் குடிபெயர்வு

அந்தமான் நிக்கோபார் தீவுக்கூட்டங்களில் தாய்த் தமிழகத்திலிருந்து வந்து குடியமர்ந்தோரின் காலம், வாழ்வியல் முறைகள், கலை, கல்வி, கலாச்சாரப் பண்பாட்டு வளர்ச்சி குறித்து ஆராயும் இக்கட்டுரை,

1. நாட்டு விடுதலைக்கு முன்

2. நாடு விடுதலையான பின்

3. தற்போதைய நிலைகள்

எனும் மூன்று பிரிவுகளை உடையதாய் அமைகிறது.

சோழர்கள் குறிப்பாக இராசேந்திர சோழன் பர்மா, மலை நாடு (மலேயா, சிங்கை) இவற்றை வென்று திரும்பிய போது இங்கு வந்துறைந்ததாகவும் அவர்கள் தோண்டிய கிணறுகள் உண்டு

எனவும் அவை பிற்காலக்கட்டங்களில் மறைக்கப்பட்டு விட்டன எனவும் இதற்குச் சான்றுகள் தஞ்சைக் கோவில் கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றன எனவும் பகருகின்றனர்.

மணிமேகலைக் காப்பியத்தில் வரும் வணிகன் சாத்துவன் என்போன் வழிதவறி இங்கு வந்தபோது உடைகளின்றி, நாகரீகம் இன்றி வாழ்ந்தவர்களைக் கண்டு 'நக்கசாரணர்' என உரைத்ததாகவும் அதுவே நக்கவாரம் ஆகிப் பின்னர் நிக்கோபார் ஆயிற்று என்றும் உரைப்பர்.

1789 வாக்கில் லெப்டிணன்ட் ஆர்ச் பால்டு பிளேயர் என்ற கடற்படை ஆய்வாளரின் வழி குடியேற்றம் துவங்கியது. அந்தக் காலக்கட்டங்களில் தமிழர் வந்ததாக ஆய்வில் கிடைக்கவில்லை. 10-12-1882-ல் தான் முத்துசாமி என்பவர் கொலைக் கைதியாகக் கொண்டு வரப்பட்டப்பின், வைஃபர் எனும் தீவில் தூக்கில் இடப்பட்டார். 1870-ல் பிம்பிள்டான் எனும் சிற்றூர் துவக்கப்பட்டது. 1889-ல் நான்கு தமிழ்க் கைதிகள் கொண்டு வரப்பட்டனர். இதற்கு முன்பாகவும் இருந்திருக்கலாம். இதற்குப் பின் படிப்படியாக மருத்துவர்களாகவும் கைதிகளாகவும் ஊழியர்களாகவும் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர்.

"1955 களில் 51 தமிழர் குடும்பங்கள் குடியேற்றம், படிப்படியாக 1955, 56 களில் மாயாபந்தர், புதுமதுரை சோல்பே (தென் அந்தமான்) டிக்லிபூர் - மிலன் கிராம் ஆகிய பகுதிகளில் குடியேற்றம்.

முன்நாள் இந்தியத் தலைமை அமைச்சர் சாஸ்திரி ஸ்ரீமாவோ ஒப்பந்தப்படி இலங்கைத் தமிழர்கள் கச்சால், சிறிய அந்தமான் ஆகிய பகுதிகளில் குடியேற்றம்."

என்றவாறு தொடங்கி 1981 கணக்குகெடுப்பின்படி வங்க இனமக்கள் 44147 என்ற முதல் இடத்தையும், தமிழர்கள் 26485 என்ற அளவில் மூன்றாம் இடத்தையும் அடைந்தனர்.

தற்போதோ இரண்டாவது இடத்தைப் பெற்றுவிட்ட நிலையில் தாய்த் தமிழகத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர் தமிழர்கள்.

இதற்கேற்றவாறு அவர்தம் தொழில், கல்வி, கலாச்சாரப் பண்பு நிலைகள், அமைப்புகள், தெய்வ வழிபாட்டுத்தளங்கள், வணிகப் பிணைப்புகள், அரசியல் உணர்வுகள், அத்தோடு கூடிய பிரச்சனைகள் எனவும் விரிவடைந்து வருகின்றன.

பழைய புதிய அரசு ஆவணங்கள், கல்கி, கே.ஏ. நீலகண்ட-

சாஸ்திரி போன்றவர்களின் நூல்கள், தீவுத்தமிழ் இதழ்கள், மொழி ஆய்வுணர்வால் தோன்றிய கருத்துக்கள் போன்றவை இக்கட்டுரைக்கான ஆதாரங்களாகும்.

கருப்பண்ணன், இராம சுப. தொல் பழந்தமிழர்கள் - ஓர் அறிமுகம்

தொல் பழந்தமிழகம் எது? அங்கு வாழ்ந்த மனித இனங்கள் எவை? என்ற இரண்டு கருத்துக்களைக் கட்டுரை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறது. இன்றைய தென்புலமும் கடல் கொண்டநாடும் இணைந்த நிலப்பகுதியே தொல்பழந்தமிழகமாகும்.

இப்பகுதியைப் புவிஇயலார் 'கோண்டுவானா' என்பர். கோண்டுவானா என்பது தூய தமிழ்ச்சொல். கொன்றைவனம் என்பதன் மருவிய வடிவே கோண்டுவானாவாகும். இக்கண்டத்தில் தான் சிவ வழிபாடுதோன்றியது. கொன்றைமலரை முடியில் வேய்ந்தவன் கொன்றைவேந்தன் எனப்பட்டான். புராணங்கள் இந்த நாட்டைக் 'கொன்றாவூர்' எனக்குறிப்பிடுகின்றன.

வரலாற்றாசிரியர் கருத்துக்களும் மீட்டோ சொண்ட்ரியல் DNA எனப்படும் மரபியல் கணிப்பீடும் இந்த நாட்டில்தான் மனித இனம் தோன்றியது என்கின்றன. ஆன்மீக உலகு சொல்லுகின்ற 'ஆதாம்' மனிதன் பிறந்த இடமும் 'ஏதன் தோட்ட' மென்பதும் இந்த நாடே. ஆன்மீக உலகு குறிப்பிடும் சொற்கள் 'அதம்' என்பதினின்று தோன்றியவை. அதம் என்பது இன்றும் தோடர் மொழியில் காணப்படுகிறது. அதம் என்றசொல் இன்று ஆதவன் என மருவியுள்ளது. இந்த அத வழிபாட்டை ஏற்படுத்தியவர்கள் தங்களைக் 'கிருதர்' என்றும் தங்கள் மொழியைக் 'கிருதம்' என்றும் அழைத்தனர். கிருதம் என்பது இரு அதம் எனப்பிரியும். கிருதர் என்ற சொல் ஆரியர் வேதத்திலும் நமது இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

தொல்பழந் தமிழகம் எனப்படும் கோண்டுவானா நடுக்கோட்டிற்குத் தெற்குவரைப் பரவி இருந்தது. நமது இலக்கியங்கள் கூறுகிறபடி பார்த்தால் ஒன்பதினாயிரம் மைல் வரைப் பரவி இருந்ததாகத் தெரிகிறது.

சமுத்திரவியல், புவிஇயல், தாவரவியல், விலங்கியல் ஆகிய அறிவியல் துறைகளில் மேற்சொன்ன நிலப்பரப்பு இருந்துள்ளது என்பதைக் காட்டும் பல சான்றுகள் உள. நமது நாட்டுப்

புராணங்களில் மட்டுமல்ல நடு ஆசியப் புராணங்களிலும் நிறைய சான்றுகள் கிடைக்கின்றன. அந்தநாடு கடல் கொண்டதற்கும் கூடப் புராணங்கள் சான்றுகள் தருகின்றன.

எழுதாக்கிளவியாகத் தமிழர்களிடம் நிலவுகின்ற தொல்பழஞ்சிந்தனைகள் மேற்சொன்ன கருத்தை வலியுறுத்துகின்றன. இவை அறிவியல் பார்வையில் மனித வாழ்வில் நிகழ்ந்த தாக்கங்களின் வெளிப்பாடாகும். உளவியலார் இதனை நனவிலி மனத்தின் வெளிப்பாடு என்பர். நனவிலிமனமே மனிதனின் நடத்தையைத் தீர்மானிப்பது.

உலகின் பல பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டை யோடுகளும் ஒரிணை மனிதர்கள் இருந்துள்ளதைக் காட்டுகின்றன. முப்பதாயிரம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்ட இருவேறுபட்ட உடல் கூறுகள் கொண்ட மனித எலும்புக் கூடுகள் இருவகை மனித இனங்கள் இருந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றன. தொல்பழந் தமிழக மனிதர்களின் சமயக் கூறுகளும் அவ்வாய்வு மூலம் கிடைத்துள்ளன.

தொல்பழந்தமிழக மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் தங்களது வாழ்க்கைத் தத்துவங்களை வலிந்து திணிக்க முயன்றுள்ளனர். இதுவே இரண்டு இனங்களுக்கும் இடையே பெரும் போராட்டங்களாக மாற்றமடைந்தது. இதுவே தேவ அசுரப்போராட்டம் எனப்படுகிறது. ஒருவரைவிட ஒருவர் மேலானவர், பலமுடையவர் என்பதைக் காட்ட வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பெயர்களை வைத்துகொண்டுள்ளதைக் காணுகிறோம். போராட்டங்களின் வெம்மையை அப்பெயர்கள் நமக்கு அறிவிக்கின்றன.

எகிப்தியரும் சுமேரியரும் தொல்பழநாகரீக மக்கள் ஆவர். இவர்களின் மொழி, சமயம் என்பன தமிழர்களின் மொழியும் சமயமுமே எனத் தெரிகிறது. சுமேரியர் தங்களைத் தமிழர் என்றே கூறிக் கொள்கின்றனர். தமிழகத்தைத் 'தில்மம்' என்கின்றனர். இது 'தாமெல்' என்பதன் தொல்பழவடிவாகும்.

எகிப்தியர்கள் 'பண்டுக்கள்' எனப்படும் பாண்டிய மக்களுடன் தொடர்புடையவர்கள். எகிப்தியர்கள் பாண்டியர்களை அமு நாட்டார் என்கின்றனர். அம்மனை வணங்கும் மக்கள் என்பது இதற்குப் பொருள். இன்றைய நமது ஆலயங்களில் நடைபெறும் அதே முறையிலேயே ஆலய வழிபாடு நடைபெற்றுள்ளது. ஆலயங்களைத் திராவிடப் பாணியில் கட்டியுள்ளனர். ஆடையற்ற

நிலையில் அருகில் சிங்கம் நிற்க வடிக்கப்பட்ட அம்மன் சிலைகள் சுமேரியாவிலும் எகிப்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தொல்பழந் தமிழர்கள் பயன்படுத்திய இருவகைச் சித்திர எழுத்துக்களையே இவர்களும் பயன்படுத்தினர் எனத் தெரிகிறது.

உலகமொழிகளில் காணப்படும் உழவு, கல்வி, நெசவு, வணிகம் தொடர்பான சொற்களின் வேர்கள் தமிழ் மொழியில் தான் காணப்படுகின்றன. உழவு, கல்வி, நெசவு, வணிகம் ஆகியவற்றை உலக மக்களுக்குக் கற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள் என்பதை இது காட்டுகிறது.

புத்தாய்வின் அடிப்படையில் புதிய தமிழக வரலாறு மாற்றி எழுதப்படவேண்டும் . துணைக்கண்ட தொல்பழ வரலாறு என்பது. தமிழக வரலாறே ஆகும். செத்தில் வட்டாரத்தில் தொடங்கி, தாமிரபரணி நதிக்கரையில் இருந்து தொடங்கி புதிய வரலாறு உடனே எழுதப்படவேண்டும்.

கருப்பையன், முனைவர் வி. தமிழர் பண்பாட்டு மரபினைக் கூறும் தஞ்சைக் கள்ளர் பட்டப்பெயர்கள் ஒரு மானிடவியல் ஆய்வு

தமிழர் பண்பாட்டு மரபுக் கூறுகளை வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள், கலைவடிவங்கள், எழுதப்பட்ட இலக்கியங்கள், எழுதப்படாத நாட்டுப்புற இலக்கியங்கள் மற்றும் இன்றைய சமுதாய, பொருளாதார, அரசியல் வாழ்க்கை நிலைகளை வைத்து உய்த்துணர்ந்து உறுதிப்படுத்த முடிகின்றது. மொழியியல் மற்றும் மானிடவியல் அறிஞர்கள் மொழியின் பல்வேறுபட்ட கூறுகளைக் கொண்டும் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளை விளக்கிக் காட்டியுள்ளனர். அதைப்போலவே இடப்பெயர்கள் மற்றும் பட்டப்பெயர்கள் ஆகியவற்றின் பொருள் விளக்கத்தின் வாயிலாகவும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டு மரபினை வெளிக்கொணர இயலும். குறிப்பாக ரா.பி. சேதுப்பிள்ளை தனது 'ஊரும் பேரும்' என்னும் நூலில் தமிழர்களின் பண்பாட்டு மரபுகளை விளக்கிக் காட்டியிருப்பது போற்றத்தக்கதாகும்.

தஞ்சைக் கள்ளர் பெருமக்களிடம் காணப்படும் நூற்றுக்கணக்கான பட்டப்பெயர்களை வரலாறு மற்றும் மானிடவியல் பார்வையில் ஆய்வு செய்து, அப்பட்டப் பெயர்கள் அன்றும் இன்றும் தமிழர் பண்பாட்டு மரபுகளை எவ்வாறு எடுத்தியம்புகின்றன என்பது இவ் ஆய்வுக்கட்டுரையில்

விளக்கப்பட்டுள்ளது. தஞ்சைக் கள்ளர்களின் பட்டப் பெயர்கள் சேர, சோழ, பாண்டிய மற்றும் பல்லவ மன்னர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. அதோடு இப்பட்டப் பெயர்கள் அவர்களுடைய குருதி உறவினர்களையும், மண உறவினர்களையும் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய குலப்பெயர்களாகவும் இருந்து வருகின்றன. அப்பட்டப் பெயர்களையுடைய சில கள்ளர் குடும்பங்கள் தஞ்சை மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதிக் கிராமங்களுக்கு நாட்டாண்மைக் காரர்களாக இருந்து சமுதாயக்கட்டுப்பாட்டிற்கும் தெய்வ வழிபாட்டு முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் உதவிவருவதும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

கல்யாண சுந்தரம், முனைவர் ந. உலகியலுக்கு இந்து சமயம் உதவும் தன்மை - அன்றாட வாழ்வில் கணபதி வழிபாட்டின் வழி சித்தமருத்துவம் பயன் தருதல்

இந்துசமயம் இம்மைக்கும் நன்மை தரும் சமயமாகும். அன்றாட வாழ்வில் இச்சமயம் எவ்வாறு ஊடுருவி உள்ளது என்பதைக் கணபதி வழிபாட்டின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கணபதி இந்தியா முழுவதிலும் வழிபடப்பெறும் கடவுள். நன்மை, தீமை, திருவிழா முதலிய சடங்குகளில் முதலில் கணபதி வழிபடப் பெறுகிறார். அவரது வழிபாடு சிறப்பிடம் பெறுவது ஆராயப்படுகிறது. கணபதி வழிபாடும் சித்த மருத்துவமும் எவ்வாறு இணைந்துள்ளன என்பதும் ஆராயப்பெறும். மருத்துவத் தாவரங்கள் கணபதி வழிபாட்டில் இடம்பெற்றுள்ள தன்மையைப் பின்வரும் 1. திருவுருவ அமைப்பு, 2. மரங்கள், 3. மலர்கள், 4. உணவுப் படையல் எனும் நான்கு பகுதிகளில் காணலாம்.

1. கணபதியின் திருவுருவங்கள் மஞ்சள், சந்தனத்தூள், களிமண், வெல்லம், ஆவின்சாணம், முத்து, பவளம், வெள்ளெருக்கின் வேர் முதலிய பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன.

2. கணபதி மரங்களின் கீழ் அமர்ந்து அருளுகிறார். அரசு, வேம்பு, ஆல், மா, வில்வம், வன்னி, களா, மகிழ், பனை முதலிய மருந்தாகித் தப்பா மரங்களின் கீழ் அமர்த்தப்பட்டுள்ளார். இம்மரங்களின் கொழுந்து, இலை, பூ, காய், கனி, பால், பட்டை, வேர் முதலியன தனியாகவும்வேறு பொருட்களோடு கூட்டாகக் கலந்தும் மருந்தாகிப் பயன்படுகின்றன. இம்மரங்கள் அமைந்துள்ள ஊர்களின் பெயர்களும் இம்மரங்கள் தீர்க்கும் நோய் விவரங்களும் இங்கு ஆராயப்படும்.

3. கணபதி வழிபாட்டில் இருபத்தொரு வகையான மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு இம்மலர்களால் தீர்க்கப்பெறும் நோய்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

4. கணபதிக்குப் படைக்கப்படும் உணவுப்பண்டங்களும் இருபத்தொரு வகைப்படும். இவற்றின் மருத்துவப் பயன்களும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

கணபதி வழிபாடு மண்ணில் நல்ல வண்ணம் வாழத் துணை செய்கிறது. உடல் வளர்த்து உயிர்வளர்க்க உதவுகிறது. குளிர்ச்சிக்கும், உடல் உரத்திற்கும் மகப்பேற்றிற்கும் வழிவகுக்கிறது.

Dr. N. KALYANASUNDARAM PERVASIVENESS OF HINDU RELIGION IN THE SECULAR LIFE IN TAMILNADU A STUDY WITH SPECIAL REFERENCE TO THE CULT OF GANAPATHY

Hinduism is more a way of life than a religion in the sense in which it is used in the west. Every department of secular life has something to do with the religious aspect thus day to day life and religion are inextricavely interwovern.

Ganapati is the pan - Indian God who is the best example of idea suggested above. It is well known that all auspecious and religious functions begin with a prayer to this God.Researchers show that his domain is more pervacive than hitherto known.

This paper is a humble attempt to show how the cult of Ganapati and the Siddha medicinal system are very much corre-lated. This paper shows how the highly potent medical herbs are associated with Ganapati, either in the form of worship offer-ings or food offerings.

This paper deals with the subject under the following four headings.

I. The objects out of which Ganapati idols are made and their medicinal value. They are turmeric powder, sandal wood powder, clay, jaggery, cowdung, pearl, coral and madar.

II. Trees - There are certain trees considered sacred such

connected with Ganapati, the worship of Ganapati or the trees underwhich the sculpture of Ganapati installed are as follows.

1. The peepal tree, 2. The neem tree, 3. The banyan tree, 4. The mango tree, 5. The bael tree, 6. The country fig tree, 7. The vanni tree, 8. The bengal currants tree, 9. The makil tree, 10. The Palmyra palm. This paper deals that all the above trees are considered important in the Tamil system of medicine known as Siddha system.

III. Flowers - There are nearly twenty one types of flowers considered to be sacred to Ganapati. These flowers are also medically important in the Siddha - Pharmacobia.

IV. Food offering - As in the case of flowers twenty one kinds of food stuff are offered to Ganapati. This paper deals with the medical property of these food offerings also.

கலைக்கோவன், டாக்டர் இரா. புதிய பார்வையில் சாரங்கபாணி கோயில் கரணங்கள்

குடந்தை சாரங்கபாணி திருக்கோயில் கோபுரத் தாங்கு தளத்தில் அமைந்துள்ள கரணச் சிற்பங்கள் இதுநாள் வரையிலும் பல அறிஞர்களின் ஆய்வுகட்கு உள்ளாகியுள்ளன. இங்குள்ள கரணச் சிற்பங்கள் யாரைச் சுட்டுகின்றன என்பதையே முதன்மைக் கேள்வியாக்கிய அறிஞர்கள் அதற்கு விடையும் தந்துள்ளனர். சிவராமமூர்த்தி இச்சிற்பங்கள் கண்ணனைச் சுட்டுவதாகவும் பத்மா சுப்ரமண்யம் சிவபெருமானைச் சுட்டுவதாகவும் தி.நா. இராமச்சந்திரன் மனித வடிவமென்றும் கூறியுள்ளனர்.

கபில வாத்ஸ்யாயனின் ஆய்வுகள் சிற்பங்களைக் காலவமைப்பு அடிப்படையில் வகைப்படுத்தி, அவை எந்தக் கரணத்தை வெளிப்படுத்துகின்றன என்பதை அடையாளம் காணும் நிலையில் அமைந்துள்ளன.

மா. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம் இச் சிற்பங்களை முழுமையாக ஆய்வு செய்து இவை நாட்டிய சாத்திர மரபையொட்டி அமைந்திருப்பதைக் கண்டறிந்தது. இங்குள்ள கரணச் சிற்பங்களுடன், அக்கரணங்களைக் கண்டுணர்வது போல் மற்றொரு சிற்பத் தொகுதியும் இடம் பெற்றுள்ளது. இச்சிற்பத் தொகுதியைக் கபில வாத்ஸ்யாயன் தவிர எனைய அறிஞர்கள்

தங்கள் கட்டுரைகளில் சுட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கபில வாத்ஸ்யாயன் இவர்களை நடன ஆசிரியர்களாய் அடையாளம் காட்டியுள்ளார்.

நாட்டிய சாத்திரத்தில் சிவபெருமானின் முன் பிரம்மாவும் பரதரும் நாட்டிய நிகழ்ச்சியை நடத்திய போது சிவபெருமான் தொடக்க நிகழ்ச்சியாகக் கரணங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு பிரம்மாவிடம் கூறுகிறார். கரணங்களைப் பரதருக்குக் கற்றுத்தருமாறு தண்டுவிடம் பணிக்கிறார். தண்டு கற்றுத் தந்த கரணங்களைப் பயின்றதாகப் பரதரும் நாட்டிய சாத்திரத்தில் பேசுகிறார். இந்த மரபு அப்படியே சாரங்கபாணி கரணச் சிற்பங்களில் பின்பற்றப்பட்டுள்ள முறையை இக்கட்டுரை சான்றுகளுடன் விளக்குகிறது.

காசிராசன், முனைவர் இரா. *நீலகேசியில் சாங்கியச் சிந்தனை*

சமண தத்துவ விளக்கமாக அமையும் நீலகேசி தமிழில் சிறுகாப்பியமாக எண்ணப்படுகிறது. தருக்க சிந்தனைக்கு (Logic) முன்னோடியாகத் திகழ்கிறது இக்காவியம். இங்குப் பௌத்தம், ஆசீகம், சாங்கியம், வை சேடிகம், வேதம், பூதவாதம் ஆகிய சமயச் சிந்தனைகள் தருக்க ரீதியாக மறுக்கப்பட்டு, வீடுபேற்றிற்குரியது சமண தத்துவமே என்பது நிறுவப்படுகிறது. இவற்றில் சாங்கியச் சிந்தனை பற்றிய தருக்கவியல் விவாதமே கட்டுரைப் பொருள்.

சாங்கிய தத்துவத்தை 25- ஆக வகைப்படுத்துகிறது காவியம்.

அவையாவன:

1. உயிர் - பிரகிருதி, மான், செருக்கு, மனம் என ஐந்து..

2. அறிகருவி - மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்து .

3. செயற்கருவி - மொழி, கால் கை, கருவாய், எருவாய் என ஐந்து.

இவற்றில் செயல் - பேசுதல், நடத்தல், கொள்ளுதல், இன்புறல், கழித்தல் - என ஐந்து .

4. தன்மாத்திரை - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் - என ஐந்து.

5. பூதம் - நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என ஐந்து.

இவற்றில் பரமாத்துமன் (உயிர்) செயலிலான், குணம் ஒன்று இலன், தத்துவன், இன்பன், சுபேதன் (வேறுபடுதல் இலன், சுலேபகன் (பற்றிலன்), நித்தியன், எங்கும் உளன், நெடுங்காட்சியன் (முற்றிவுடையவன்) (துத்தல் உடையன்) (நுகர்ச்சி உடையவன்) என்றும், பிரகிருதி அருவமாய், யாண்டும் நிறைந்து புடைபெயர்தல் இன்றி, நிலையுறல் உடைத்தாய், பொறி அறிவிற்கு அப்பாலதாய் ஒன்றாகிச் செயலிலதாகும் இப்பிரகிருதியிலிருந்து மான் பிறக்கும், மானிலிருந்து அகங்காரம் பிறக்கும் அகங்காரத்திலிருந்து தன் மாத்திரை தன் ஐந்து,அறிகருவி ஐந்தும், தொழிற்கருவி ஐந்தும் ஆகிய 16 - தத்துவம் பிறக்கும். தன்மாத்திரை ஐந்திலிருந்து பூதம் ஐந்தும் பிறக்கும் - என்றும் சாங்கியத் தத்துவஞானி பராசரன் விளக்குகிறான். இத்தத்துவம் அனைத்தும் குற்றமுடையது பொய்யானது எனத் தர்க்க ரீதியாக நீலகேசி மறுத்துரைக்கின்றாள். இம் மறுப்புரையின் வன்மை - மென்மைகளை விளக்குகிறது கட்டுரை.

காஞ்சனா, முனைவர் இரா. ஹைகூவும் கவிதை முடிப்பும்

கூறவந்த கருத்தை வெளிப்படுத்தும் பாங்கே ஒரு கவிதையை அனுபவிக்கும் வாசகனின் மனத்தில் என்றும் நிலைக்கச் செய்கிறது. இவ்வெளியீட்டு முறைகளுக்கு ஏற்பக் கவிதையின் வடிவம் மாறுபடுகிறது. ஜப்பானிய ஹைகூ உலக அங்கீகாரத்தையும் புகழையும் பெறக் காரணிகள் பல உண்டு. அவற்றுள் மிக முக்கியமானது அதனுடைய வாமன ரூபம். இச்சின்னஞ்சிறு யாப்பு வடிவத்தில் சொற்செட்டுடன், எளிய சொற்களில் இயற்கையின் இனிய இயல்புகளில் இருந்து அழகான, பௌத்த ஜென் தத்துவங்கள் வரை, இப்பிரபஞ்சத்தின் எல்லைகளைத் தன் வீச்சுகளில் அடக்கிக் காட்டுகிறது ஹைகூ. சிலவாகிய சொற்களால் பல கருத்து அடுக்குகளைக் குறிப்பாகச் சுட்ட இதில் படிமங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இதில் சொல்லப்படுவதை விடச் சொல்லாமல் விடுபட்டவையே அதிகம். இவ்வாறு சொல்லாமல் விடுபட்டவற்றை வாசகன் தன் மனத்தில் மேலே மேலே எழுதிச் செல்ல வாய்ப்பளிப்பது ஹைகூவின் மூன்றாவது வரி. வாசகன் விண்ணோடும் மண்ணோடும் மானுடத்துடனும் இறைமையுடனும் கொண்டுள்ள மன நெருக்கத்தை உணரவைத்து அவனை வியக்க வைப்பது, அதிர்ச்சிக்குள்ளாக்குவது ஹைகூவின் முடிவே.

5, 7, 5 என்ற அசைக் கணக்கில் மூன்றடிகளைக் கொண்ட யாப்பு வடிவத்தில் முதல் இரண்டு அடிகள் ஒரு கருத்தாகவும் மூன்றாவது அடி ஒரு கருத்தாகவும் அமைந்து எவ்வாறு திடீர்த்

திருப்பத்துடன் கவிதை அனுபவத்தை முழுவதுமாக வாசகனைப் பெற வைக்கிறது ஹைகூ என விளக்குகிறது இக்கட்டுரை.

இங்கு ஹைகூவின் சிறப்பே இந்த முடிப்பில்தான் உள்ளது என்பது எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுவதுடன் தமிழில் சங்க இலக்கியங்களில் உள்ள இக்குறிப்புப் பொருளும் கவிதை முடிப்பும் ஹைகூவின் கவிதை முடிப்புடன் ஒப்பிடப்பட்டுக் காட்டப்படுகின்றன.

உறகூவின் இறுதியில் கவிஞன் இறங்கிக் கொள்ள வாசகன் அதன் மீது பயணத்தைத் தொடர்கிறான் என்பதை விளக்குகிறது கட்டுரை. அர்த்தத் தொடர்ச்சியும் படிம வளர்ச்சியும் எவ்வாறு அதன் வடிவில் சாத்தியமாகின்றன என்பதைச் சுட்டும் பொழுதே முதல் இரண்டு அடிகளில் நேரடியாகவோ படிமமாகவோ கூறப்படும் ஒரு பொருளின் நிறம், வடிவம், நிகழ்வு அல்லது ஒரு உணர்வு மூன்றாவது அடியில் அமைக்கப்பட்ட இரண்டாவது படிமம் ஒன்றினால் எவ்வாறு அழுத்தமும் ஆற்றலும் கொண்டு வெளிப்படுகிறது என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

இங்கு ஹைகூவின் முன்றாவது அடி எவ்வாறு

1. வாசகன்தானே கவிதை அனுபவத்தை முழுமையாக்கிக் கொள்ள வழிவகுக்கிறது?

2. எதிர்பாராத வெளிச்சத்தைத் தந்து பொருள் உணர்வை விரித்துக் கொண்டே செல்ல வைக்கிறது.

3. குறிப்பாற்றல் மிக்கதாக அமைக்கப்பட்டுள்ளது.

4. கவிதையின் உயிர்நாடியான பொருள் வெளிப்பாட்டிற்குச் சொற்பிரயோகங்கள் எவ்வாறு பயன்படுகின்றன ?

5. பெரும்பாலும் பெயர்ச்சொற்களைக் கொண்டே முடிவுறுவதால் அப்பெயர்களுக்கு இடையேயான இயைபு முரண் அல்லது அப்பொருளின் காட்சியால் ஏற்படும் உணர்ச்சி வெளிப்பாட்டில் முரண் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வேற்றுமையில் ஒற்றுமையையும் ஒற்றுமையில் வேற்றுமையையும் உணர வைக்கிறது.

6. கவிஞனின் உள்ளுணர்வுடன் ஒருங்குணர்வு கொண்ட வாசகனிடம் இரசிப்புத் தன்மையை மீண்டும் உருவாக்க உதவுகிறது என எடுத்து விளக்குகிறது இக்கட்டுரை.

மறித்து மறித்து நோக்கிப் பயன் கொள்ளும் தமிழ்த் திறனாய்வு முறையை விளக்கும் தொல்காப்பியரின் நோக்குக் கோட்டினை இங்கு ஒப்பிட்டுக் காட்டிப் படைத்தலுக்கும் படைப்பைப் படித்துச் சுவைத்தலுக்கும் உள்ள இயைபை விளக்க முயல்கிறது இக்கட்டுரை.

கவிதை முடிபை இருவகைகளில் நோக்குவர். ஒன்று கருத்து முற்றுப் பெறும் முடிவு. மற்றொன்று கவிதை முடிந்தும் கருத்து வாசகனின் மனத்தில் தொடர்வது. இந்த நிலை ஹைகூவிலும் இன்றைய தமிழ்ப் புதுக்கவிதைகளிலும் அமைந்துள்ள தன்மை ஒப்பிடப்படுகிறது.

DR. R. KANCHANA HAIKU AND POETIC CLOSURE

A poetic work stands for a long time in the memory of its reader only by its artistic expression and revealing power. The form of the poetry changes according to the manner in which the content is expressed. There are several outstanding characteristics of Japanese Haiku which gained the world acceptance. The primary one is its brevity and pointedness. In its constricted form, depicts the whole universal in a nutshell. It portrays significant inexhaustible treasures of Nature loveliness and wonders of Nature in simple word's which are suggestive, embodying Zen Buddhistic philosophy.

As it has a very shorter form it depends upon more suggestive and symbolic but simple words, revealing layers of meaning which extend their hards to measure the whole universe. Omissions and left overs are more than embodied. The reader is to fill in, and has to find the connection between the unconnected, between the two pictures, lightly sketched in the two units of the three lined metre.

The third line of this Haiku is more important here which enhances the reader to go on searching the layers of meaning that makes him understand his relationship with the universe, with the coexisting men, and with God. He receives a sudden shock when he encounters with the facts which are exposed by the concluding part of the poem.

The meaningfull third line which forms a single unit gives a twist to the meaning understood from the first two lines which

form another unit. Only the closure of the poetry enables the reader to understand it to its fullest degree and gives him the poetic experience.

This essay tries explain how the poetic closure in Haiku is responsible for this experience, as the poet glides from it and allows the reader to ride on it in search of further meaning and how the symbols and suggestions are used for it and they are compared with those of Sangam Poems.

This paper enumerate the following factors: How

1. The third line of Haiku enables the reader to have the poetic experience by himself.

2. To have unexpected insight and vision to understand its meaning more and more.

3. Is suggestive and is comparable with the Tamil poetic closure.

4. Is full of poetic diction to throw light on the previous unit.

5. Drives the reader to find concurrency between the dissimilitudes by the slightest hint or artifice with absolute sincerity.

6. It enriches the poetic taste in its reader who is made to converge within himself with unity of feelings and thoughts.

Some poetic theories of Tolkappiar like `Nōkku' `Kuripppu'. Kuṟippeccam `Iṟaicci' & `Uḷḷurai' are compared with this poetic diction.

Poetic closure is of two types. One is that in which the meaning ends with the closure of the poetry. In the next one the meaning is extended in the minds of the reader. In this article it is explained and compared how the extention of meaning is facilitated in Modern Tamil Poetry, Sangam Poetry and Haiku.

கார்லோஸ், முனைவர் எஸ். இலக்கியத் திறனாய்வு, மேற்கும் கிழக்கும்: கோட்பாட்டுச் சிக்கல்களும் தீர்வுகளும்

இலக்கியத்திறனாய்வானது மேற்கத்திய கல்விமுறை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டபின் இந்திய மொழிகளில் உருவாயிற்று. இன்று மேற்கில் இலக்கியத் திறனாய்வு (literary criticism) இலக்கியக்கோட்பாடாக (literary theory) வளர்ந்துள்ளது. இக்கோட்பாடு உருவானபின் இலக்கியக்கல்வி அறிவியல் பண்பைப் பெற்றுள்ளது. இதனால் பொது அளவைகளுக்கு உட்படும் ஒரு துறையாக இலக்கியக்கல்வி மாறியுள்ளது.

கிழக்கில் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் இலக்கியச்சிந்தனை மரபு இருந்தாலும் இலக்கியத்திறனாய்வு இருக்கவில்லை எனலாம். இலக்கியத்திறனாய்வு, படைப்பிலக்கியத்தோடு ஒட்டி வளர்வதாகும். இத்துறை இந்திய மொழிகளில் மேற்கத்திய இலக்கியக்கல்வியின் தாக்கத்தோடுதான் உருவானது. இன்று இலக்கியத்திறனாய்வு கோட்பாடாக மாறியுள்ளதால், பழைய நம் மரபின் இலக்கியச் சிந்தனைகளில் உள்ள சில கூறுகளைத் தனியாகப் பிரித்தெடுத்துப் பொது அளவைகளாக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்குச் சமஸ்கிருத இலக்கியச் சிந்தனையும் அவற்றோடு மாறுபட்ட மற்றொரு இந்திய மரபைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களின் இலக்கியச்சிந்தனையும் பயன்படும்.

இந்நிலையில் தமிழை முதன்மைப்படுத்தி அதன் இலக்கியக்கருத்தாக்கங்களைக் கோட்பாடாக வளர்த்தெடுக்கும் போது ஏற்படும் சிக்கல்களை ஆயவேண்டும். சமஸ்கிருதப் பாதிப்புக்குட்பட்ட தமிழகக் கருத்தாக்கங்களும் உட்படாக் கருத்தாக்கங்களும் தமிழிலக்கியச் சிந்தனையில் உண்டு. இரு மொழிக்கலாச்சாரங்களும் தத்தம் மொழி எல்லைகளைத் தனித்தனியான சட்டகங்களாகக் கட்டுகின்றன. இது இந்தியக் கலாச்சாரத்தின் பன்முகத்தன்மை மற்றும் பல்தளத்தன்மை ஆகியவற்றைக் காட்டுகிறது. இது போல் மேற்கத்திய கலாச்சாரம் இந்தியக்கலாச்சாரத்தோடு தொடர்பு ஏற்படுத்துகையில், இந்திய தமிழ்க் கலாச்சாரம் தனக்கான மேற்கை உருவாக்குகிறது.

இலக்கியத்திறனாய்வில் கோட்பாடுகள் உருவாக்கும் போது கிழக்கத்திய கருத்தாக்கமும் மேற்கத்திய கருத்தாக்கமும் எவ்வாறு மறு உருவாக்கத்திற்கு (reinterpretation) உட்படுகின்றன என்பது முக்கியமான கேள்வியாகும். இவ்வாறு கிழக்கு மற்றும் மேற்கின் கோட்பாடுகளைச் சார்ந்து உருவாக்கப்படும் இலக்கியத்திறனாய்வில்

எழும் சிக்கல்களும் தீர்வுகளும் ஓரிரு எடுத்துக்காட்டுகளின் மூலம் ஆராயப்படுகின்றன.

கிருட்டினமூர்த்தி, முனைவர் சா. *தமிழ்* **இலக்கியங்களில் கலைச்சொற்கள்**

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் எந்த ஒரு மொழியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் தன்மையன. தமிழ்மொழியும் இதற்கு விதிவிலக்கன்று. இவற்றால் ஏற்படும் மொழிப் பாதிப்பு என்பது மொழியின் வளர்ச்சிகுறித்த ஒன்றாகவே அமைந்துவிடுகின்றது. தாய்மொழிவழி அறிவியல் தொழில்நுட்பக் கருத்துகளை அளிக்க முடியும் என்ற நிலை உருவாகும் போதுதான் மொழி வளர்ச்சியடைந்ததாகக் கருதமுடியும். எனவே, தாய்மொழிவழி அறிவியல் தொழில்நுட்பக் கருத்துகளைத் தருவதற்குப் பல மொழிக்கூறுகள் தேவைப்படும் என்றாலும் கலைச்சொற்கள் அவற்றுள் முதலிடம் பெறுகின்றன என்று கூறலாம்.

இந்நிலையில் தமிழைப் பொறுத்தவரை, பயிற்றுமொழி எனும் வகையில் கலைச்சொல் என்பது பெருந்தடையாக இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். ஆயினும்கலைச்சொல்லை உருவாக்கிய பிறகுதான் பயிற்றுமொழி சாத்தியமாகும் என்று கருதப்படுவதால் இன்றைய சூழலில் கலைச்சொல்லை உருவாக்கி அளிப்பது என்பது பெரும்பணியாகவே கருதப்படுகின்றது. தொடர்புடைய மொழியில் முன்பே நிலவுகின்ற (இலக்கியங்கள், பிற ஆதாரங்கள்) சொற்களை ஏற்புள்ள இடங்களில் பயன்படுத்துவது என்பதும் கலைச்சொல் உருவாக்கக் கோட்பாடுகளுள் ஒன்றாகும். இலக்கிய இலக்கண வளம் செறிந்த பழமையான மொழிக்கு இது பொருந்துவதாகும்.

தமிழ் இத்தகைய மொழி என்பதால் இதன் இலக்கியங்களுள் கலைச்சொற்கள் பரவலாகக் காணக்கிடக்கின்றன என்பதை அறிஞர் பெருமக்கள் பலரும் எடுத்துக் கூறியுள்ளனர். தமிழ் இலக்கியப் பரப்பை உற்றுநோக்குகின்ற போது அரிய பல கலைச்சொற்கள் விரவியிருப்பதை நம்மால் காண முடிகின்றது. இக்கலைச்சொற்களைத் தொகுத்துக் காண்பதன் மூலம் சில பயன்பாட்டையும் நெறிமுறையையும் நாம் பெறமுடியும்.

1. இன்றைய கலைச்சொல்லாக்கத்திற்கு அச்சொற்களைப் பயன்படுத்திக் கொள்வது.

2. கலைச்சொல்லாக்கத்திற்கென ஏதேனும் நெறிமுறைகள் அமைந்துள்ளனவா என அறிவது.

பண்டைத் தமிழ்க் கலைச்சொற்களை இப்பொழுது நாம் 'பயன்படுத்திக் கொள்ள நினைக்கும்பொழுது அச்சொற்களின் பொருத்தப்பாட்டையும் நாம் சிந்தித்தாக வேண்டும். ஒரு சொல்லின் பயன்பாடு அதிகமாகும் பொழுதுதான் அச்சொல்லின் சுருக்கத்தன்மையும் தகுதிப்பாடும் வெளிப்படும். பயன்பாடு அதிகமானதால் உயிரினப் பாகுபாடுகளுள் ஒன்றான 'நீர்வாழ் உயிரினங்கள்' (Aquatic creatures) எனும்சொல் 'நீர்வாழ்வன' எனச் சுருங்கிய வடிவினதாகி வழங்குவதைக் காணமுடிகின்றது. இதையும், கலைச்சொல் சுருக்கம் கருதி இன்னும் சுருங்கிய பொருட் பொருத்தமுடைய சொல்லாக நாம் ஆக்கிக் கொள்ள முடியும். அவ்வாறு ஆக்கக் கருதும்பொழுது தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டு வரும் 'நீரி' என்ற சொல்லை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதுபோன்ற சொற்களை அவர்கள் எத்தகைய நெறிமுறையில் ஆக்கியிருப்பர் என்று காண்பதும் பயனுடையதாகும். நீர் என்ற சொல்லுடன் - இ என்ற விகுதி சேர்ந்து நீரி என்று ஆகும்பொழுது 'நீரின்கண் இருப்பன' எனும் பொருளுண்டாகின்றது. -இ விகுதியைச் சேர்ப்பதன் மூலம் உடைமைப் பொருள், கருவிப்பொருள் போன்ற பொருண்மைகளையுடைய சொற்களை முன்னர் உருவாக்கியிருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. இலக்கியங்களிலிருந்து சொற்களைத் தேடித் தொகுத்துக் காண்பதன் மூலம் இதுபோன்ற வேறுபிற சொல்லாக்க இலக்கண நெறிகளையும் நாம் இனம் பிரித்துக் காணமுடியும்.

இலக்கியங்களுள் காணப்படும் கலைச்சொற்கள் பலவற்றை எடுத்துக் காட்டி அவற்றின் இன்றைய தேவையையும், சொல்லாக்க முறைகளையும் இக்கட்டுரை ஆய்ந்து கூறுகின்றது.

கிருட்டினன், முனைவர் அ. ஆவணங்களில் அடிமைகள் விற்பனை முறை

மனித இனத்தை அடிமையாக்கி விலைபேசி விற்ற இழிநிலை இம்மண்ணில் இருபதாம் நூற்றாண்டுவரைத் தொடர்ந்தது. பலர் கொத்தடிமைகளாகக் கோவில்களில் விற்கப்பெற்றனர். இவ்வாறு விலைபேசி விற்ற ஆவணம் 'ஆள்விலைப் பிரமாண இசைவுத்திட்டு, ஆள் ஒத்திச்சீட்டு, அடிமைச்சீட்டு, அடிமைச் சாதனம், அடிமை விலைஓலைக்காரணம், அடிமைச் சாதனமுறி எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

கல்வெட்டுக்களில் இத்தகைய பல சான்றுகள் காணக்கிடக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டம் திருமறைக்காட்டில் அரியான் பிச்சனான எதிரிலிச்சோழ கங்கை நாடாழ்வான் என்பவன் கி.பி. 1219-ஆம் ஆண்டு முதல் இருபத்தியொரு ஆண்டுகள் அடிமைகளைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து விற்பனை செய்தான். அவ்வடிமைகள் பெற்றெடுத்த பிள்ளைகளையும் விற்பனை செய்யும் உரிமையைப் பெற்று இருந்தான். கி.பி. 1201-இல் வெள்ளாளன் ஒருவன் தன்னையும், தன் பெண் மக்கள் இருவரையும் பஞ்சத்தின் காரணமாகக் கோவில் மடத்திற்கு 110 காசுகளுக்கு விற்றுக்கொண்ட செய்தி இடம் பெற்றுள்ளது.

ஓலை ஆவணங்களில், பன்னிரண்டு பொன்னும் ஒரு பணமும் பெற்றுக்கொண்டு தன்னையும் தன் அன்னையையும் திருமணமாகியிருந்தால் தன் மனைவியையும் அடிமையாக விற்றுக் கொண்ட செய்தி இடம்பெற்றுள்ளது. பிறிதொரு ஓலை ஆவணத்தில் எட்டரை வராகனுக்குக் குடும்பத்திலுள்ள எழுவரை ஏலமுறையில் விற்பனை செய்து 'பறையடிமை விலைப்பிரமாணம்' செய்து கொடுத்த செய்தியும் குழந்தைகள் பலர் ஏலமுறையில் விற்பனை செய்யப் பெற்ற செய்தியும் இடம் பெற்றுள்ளது.

சமுதாய நிலையிலும், பொருளியல் நிலையிலும் பின்தங்கிய, தாழ்த்தப்பெற்ற மக்களே சந்திராதித்தருள்ள வரை வழி வழியாக விற்கப்பெற்றுள்ளனர். இத்தகைய இழிநிலையை நீக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கிருஷ்ணமூர்த்தி, முனைவர் வெ. தமிழ் பற்றிய சில மென்பொருட்கள்

கடந்த சில ஆண்டுகளில் தமிழ் தொடர்பாக வடிவமைக்கப்பட்டு வரும் சில மென்பொருட்களைப் (Software) பற்றிய கட்டுரை இது. மாணவர்கள் தமிழில் தொழில்நுட்பக் கட்டுரைகள் எழுதும் போது தேவையான கலைச் சொற்களை அறிந்து கொள்ளவும், புதிய சொற்கள் உருவாக்கப்படும் போது அவற்றைச் சேர்த்துக் கொள்ளவும் உதவும் ஒரு சிறு அகராதி உருவாக்கியை முதலில் காண்போம். தமிழ் கற்கும் மாணவர்கள் எழுத்துக்களை அடையாளம் தெரிந்து கொள்வது, அவற்றின் இனத்தைக் கண்டு கொள்வது போன்ற திறமைகளை வளர்த்துக் கொள்வது அவசியம். இவற்றை விளையாட்டுக்கள் மூலம் செய்யும்போது சிறுவர் மிக ஆர்வத்துடன் கற்றுக்கொள்வார்கள். இதற்காக வடிவமைக்கப்பட்ட சில விளையாட்டுகள் இங்கு விவரிக்கப்படுகின்றன. தமிழர் பண்பாட்டின் ஓர் அங்கமான

கோலத்தைக் கணிப்பொறியைக் கொண்டும் போடச் செய்யலாம். கணிப்பொறி அறிந்து செயல்படும் விதத்தில் நாம் அதற்குச் சொல்ல ஒரு புதுக்கோலமொழி உருவாக்கப்பட்டு வருகிறது. இயற்கையாக அமையுமாறு இந்த மொழிவடிவமைக்கப்படுகிறது. அந்த மொழியின் ஒரு அறிமுகத்தையும் இங்குக் காணலாம்.

கிருஷ்ணன், முனைவர் என். தகவல் தொடர்பு மாதிரிகள்

தகவல் தொடர்பையும் தகவல் தொடர்பு மாதிரிகளையும் முக்கியக் கோட்பாடகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

தகவல் தொடர்பு என்பது தகவல் அல்லது கருத்துக்களை, ஒரு மனிதர் பிற மனிதருக்கோ அல்லது குழுவினருக்கோ தெரியப்படுத்துதல் ஆகும். இத்தகவல் தொடர்பு பல்வேறு வகைப்படும். தனி மனிதத் தகவல் தொர்டபு, இரு மனிதத் தகவல் தொடர்பு, தன்னுடன் தான் கொள்ளும் தகவல் தொடர்பு, சொல் சார்ந்த தகவல் தொடர்பு, சொல் சாராத் தகவல் தொடர்பு, குறியீட்டுத் தகவல் தொடர்பு, அகத்தகவல் தொடர்பு, புறத் தகவல் தொடர்பு, நேரடித் தகவல் தொடர்பு, மறைமுகத் தகவல் தொடர்பு, வதந்தித் தகவல் தொடர்பு, கிசுகிசுத் தகவல் தொடர்பு, மக்கள் தகவல் தொடர்பு என்பனவாகும். ஒவ்வொரு வகைத் தகவல் தொடர்புக்குள்ளும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மக்கள் தகவல் தொடர்பு என்பது தகவல், எண்ணங்கள் அல்லது நடத்தைகளைத் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழியாகப் பலதரப்பட்ட மக்களுக்குத் தெரியப்படுத்துதல் ஆகும். முக்கியமான தகவல் தொடர்புச் சாதனங்களை மரபுவழிச் சாதனம், அச்சு வழிச் சாதனம், மின்னணுச் சாதனம் எனப் பாகுபடுத்தலாம். இவற்றில் மின்னணுத் தகவல் தொடர்புச் சாதனம் பிற தகவல் தொடர்புச் சாதனங்களை விடச் சக்தி வாய்ந்தது ஆகும்.

தகவல் தொடர்பில் 'மாதிரி' முக்கியக் கோட்பாடாகத் திகழ்கிறது. தகவல் தொடர்புச் செயல்முறையில் உள்ள முக்கியக் கூறுகளைப் பற்றியும், அக்கூறுகளுக் கிடையேயுள்ள தொடர்பினைப் பற்றியும் தகவல் தொடர்பு மாதிரி விளக்குகிறது. மேலும் தகவல் தொடர்பிலுள்ள அநாவசியமான விளக்கங்களை நீக்கிவிட்டு இன்றியமையாத அம்சங்களை மட்டும் விளக்குகிறது.

தகவல் தொடர்பு மாதிரி இரு வகைப் பணிகளை மேற்கொள்கிறது. தகவல் தொடர்புச் செயல்முறையை வரைபடத்தின் மூலம் தெரிவிக்கிறது. தகவல் தொடர்பை

எளிமையாகத் தெரிவிக்கிறது. எனவே தகவலை எளிதில் புரிந்து கொள்வதில் இடர்ப்பாடு இருக்காது.

தகவல் தொடர்பு மாதிரிகளைப் பலவகையாகப் பாகுபடுத்தலாம். அவை குறியீட்டு மாதிரிகள், சொல் மாதிரிகள், வரைபட மாதிரிகள், உடலியல் மாதிரிகள், கணிதவியல் மாதிரிகள், ஒத்த உறுப்பு மாதிரிகள் போன்றனவாகும்.

தகவல் தொடர்பு மாதிரியின் அடிப்படைக் கோட்பாடானது தகவல் அனுப்புகின்றவர், தகவல், தகவல் தொடர்புச் சாதனம், தகவலைப் பெறுபவர், விளைவு என்ற கூறுகளைக் கொண்டுள்ளது. இக்கோட்பாடு எளிமையானது ஆகும். மேலும் இக்கோட்பாடே தொடக்க காலத் தகவல் தொடர்பு மாதிரியாகும். இக்கோட்பாட்டை விளக்கியவர் லாஸ்வெல் என்ற விஞ்ஞானி ஆவார். மேலும் பல தகவல் தொடர்பு மாதிரிகள் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டன. அவை ஷனன் மற்றும் வீவர் தகவல் தொடர்பு மாதிரி, சார்லஸ் ஆஸ்குட் மாதிரி, வில்பர் ஷ்ரம் மாதிரி, டான்ஸி ஹெலிக்கல் மாதிரி, நியூ கேரமின்சமூக உளவியல் மாதிரி, வாயில் காப்போன் மாதிரி என்பனவாகும்.

தகவல் தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை இம்மாதிரிகளால் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

DR. N. KRISHNAN COMMUNICATION MODELS

The central concept of this article is to explain communication and models for communication.

Communication means transmission of information or ideas from one person to another person or group. Communication is classified into different types. They are personal communication, Interpersonal communication, Intra personal communication, Verbal communication, Non verbal communication, Direct communication, Indirect communication, Rumour communication, Gossip communication, Mass communication etc. These communications are different from one another.

Mass communication means delivering information or ideas and attitudes to a sizably and diversified audience through use of a media. The important media of mass communication are Traditional media, Print media and Electronic media. Electronic

media is more powerful than the other two media.

Model is an important concept for communication. A model seeks to show the main elements of any structure or process and the relationship between the elements of communication. It is also used to delete the unnecessary explanations of communication.

Models have an organizing function as weel as heuristic function. Organizing function order and relates systems to each other and gives a general picture of a range of different particular circumstances. Heuristic function explains by providing in a simplified way information which would otherwise be complicated or ambiguous.

Models are classified different types. They are symbolic models, Verbal models, Diagrammatic or Graphic models, Physical models, Analog models etc.

The basic concept of communication models is source, message, channel, receiver and effect. It is the simplest and the earliest communication model. This earliest communication model is explained by Harold D. Lasswell. Many communication models are explained by other scientists. Some important communication models are Shannon and Weaver's communication model, Osgood and Schramor circular model, Dance's helical model, Gerbner's General model, New Comb's ABX model, Gate Keeper's model etc. We clearly understand that these communication models show the development of communication.

கிருஷ்ணன், திருமதி இந்திரா கேலிப்படத்தின் மூலம் மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துதல் - ஓர் ஆய்வு

சிங்கப்பூரிலுள்ள இந்திய மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலுகின்றனர். மேலும் பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரில் தமிழ் மாணவர்கள் அவர்களின் அண்டை வீட்டாராகப் பிற இனத்தவர்களையே பெற்றுள்ளனர். அவர்களிடம் பேசும்பொழுது ஆங்கிலத்தையே அதிகம் பயன்படுத்துகின்றனர். பெற்றோர்களும் ஆங்கிலத்திலேயே உரையாடுகின்றனர். இதனால்

தமிழ் மாணவர்கள் தமிழில் பேசத் தயங்குகின்றனர். இவ்வாறு மாணவர்கள் தமிழ் பேசத் தயங்குவதையும் வெட்கப்படுவதையும் நீக்கவும், அதற்கு ஒரு நல்ல தீர்வு காணவும் விரும்பியதால், அதன் அடிப்படையிலேயே ஒளி ஒலி நாடாவின் வழி, 'கேலிப்படத்தின் மூலம் மாணவர்களின்பேச்சுத்திறனை மேம்படுத்துதல்' என்னும் ஆய்வினைத் தொடங்கி, அதன் வழி முன்னிலைத் தேர்வு, பின்னிலைத் தேர்வு கொடுத்து மாணவர்களின் தரமும் மேம்பாடும் கண்டறியப்பட்டன.

தொடக்கப் பள்ளி மூன்றாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் இவ்வாய்வில் பங்குபெற்றனர். இவ்வாய்வு பத்து வாரங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் கலந்து கொண்ட மாணவர்கள் முன்னிலைத் தேர்வுக்கு ஒரு கேலிப்படத்தைப் பார்த்தனர். அதைப் பார்த்துப் பேசும்பொழுது அவர்கள் செய்த பிழைகள் ஐந்து கட்ட அளவு கோல்களாகப் பிரிக்கப்பட்டு, மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. அப்போது அவர்கள் செய்த பிழைகளைக் காரணங்களாக வைத்து அவற்றைக் களைவதற்கான முறைகளை ஆராய்ந்து அமைக்கப்பட்ட இந்தக் கற்பித்தல் நடவடிக்கைகள் எட்டு வாரங்களுக்கு நடைபெற்றன.

இந்தப் புதிய அணுகுமுறை நடவடிக்கைகளால் மாணவர்களின்பேச்சுத் திறனில் மேம்பட்ட இயல்பினை மேம்படுத்தப் பின்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டபோது, மாணவர்கள்பேச்சுத் திறனில் உயர்ந்திருப்பதைக் கண்டறிய முடிந்தது. இதனையே இந்த ஆய்வு விளக்குகிறது.

கிருஷ்ணஸ்வாமி, எஸ். தமிழகத்தில் தத்துவ சமய வளர்ச்சி

ஒரு நாட்டின் தத்துவ சமயநிலைகளைத் தெளிவாகக் காட்டுவனஅந்நாட்டின் இலக்கியங்களேயாகும். தொல்காப்பியமும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்ககாலத் தொகுப்பு நூல்களும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தமிழ்நாட்டில் எழுந்த நூல்களாகும். இவற்றில், குறிப்பாக எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் கடவுள் குறிப்புகளும் அந்நாட்டில் நிலவிய தத்துவ சமயக் குறிப்புகளும் மிகுந்து விளங்குகின்றன. இவற்றை ஆராய்ந்தால், சங்ககாலத்தில் வடமொழி மறையான வேதத்திற்குத் தலைசிறந்த மதிப்பு அளிக்கப்பட்டிருந்தமையும், பாஞ்சராத்ர அகமத்தைப் பின்பற்றிய முக்கோற்பகவர்கள் தலைசிறந்த சான்றோர்களாகக் கருதப்பட்டமையும், வேதம் வல்லவர்கள் திருமாலையே முழுமுதல் கடவுளாகக் கொண்டிருந்தமையும் விளங்குகின்றது. தத்துவத் துறையில் பௌத்தம், ஜைனம் முதலான

வேதத்திற்குப் புறம்பான சமயங்களும், உலகம் பொய், ஜீவனும பரமனும் ஒன்று என்று கூறும் அத்துவிதக் கோட்பாடும் சான்றோர்களால் ஏற்கப்படவில்லை என்றும் விசிட்டாத்துவித வைணவக்கோட்பாடே சான்றோர்களால் ஏற்கப்பட்டிருந்தது என்றும் விளங்குகிறது. சங்க காலத்திற்குப் பிறகு பௌதம், ஜைனம் முதலான மதங்களும் சிவனைப் பரம்பொருளாகக்கூறும் சைவமதமும் தமிழகத்தில் வளரத்தொடங்கின தொடக்கத்தில் சைவம், சைவாகமங்களில் சொன்ன காபாலிகம், காளாமுகம் முதலான இழிந்த ஒழுக்கங்களைக் கொண்ட காபாலிகர்களையும் காளாமுகர்களையும் தன்னுள் கொண்டிருந்தது. கள்ளுண்ணால் புலாலுண்ணல் முதலான இந்த இழிந்த ஒழுக்கங்கள் சங்ககாலச் சான்றோர்களான முக்கோற் பகவர்கள் பரப்பி வந்த ஒழுக்கத்திற்கு நேர்மாறானவை. இந்நிலையில் மக்கள் நெறி தவறிப் போய்விடக் கூடாது என்றே சங்ககாலத்தையொட்டித் தோன்றிய திருவள்ளுவர் தாம் முக்கோற்பகவர்களைப் பின்பற்றியவரே என்பதைக் காட்டிக் கொண்டு 'ஆதிபகவன் முதற்றே உலகு' *(1)* என்று நூலைத் தொடங்கி பொருட்பாலில் 'அடியளந்தான் தாஅயதெல்லாம் ஒருங்கு" *(610)* என்று உலகனைத்தையும் அளந்த திருமாலின் பெருமையைப் பேசி, காமத்துப் பாலில் தாமரைக் கண்ணான் உலகு' *(1103)* என்று தலைசிறந்த உலகம் தாமரைக் கண்ணனாகிற செங்கண்மாலின் உலகமே என்று கூறி முக்கோற்பகவர்கள் பரப்பி வந்த கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை முதலான நல்லொழுக்கங்களைத் தம் திருக்குறளில் தொகுத்துக் கூறினார்.

சங்க காலத்திற்குப் பிற்காலத்தில் பௌத்தம், ஜைனம் முதலான வேதத்திற்குப் புறம்பான மதங்களும், முற்கூறியபடி சைவ மதமும் வளரத் தொடங்கியதைக் கண்டு மனம் வெதும்பி, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஆழ்வார்கள் தம்முடைய திவ்விய பிரபந்தங்களில் சங்ககாலத் தமிழர் கண்ட சமயமான விசிட்டாத்துவித வைணவ மதத்தையும் முக்கோற்பகவர்களும் திருவள்ளுவரும் வலியுறுத்திய நல்லொழுக்கங்களையும் பரப்பினார்கள். ஆழ்வார்களையொட்டித்தோன்றிய நாயன்மார்கள் தங்களுடைய தேவாரம், திருவாசகம் முதலானவற்றில் சைவாக மங்களைப் பின்பற்றிச் சைவ சமயத்தைப் பரப்பினார்கள். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கேரளத்தில் காலடியில் தோன்றிய ஆதிசங்கரர் வடிமொழியில் அமைந்த வேதங்கள், கீதை, பிரம்மசூத்திரம் முதலானவற்றுக்கு உரையெழுதி அவற்றில் 'உலகம் பொய்' ஜீவனும் பரமனும் ஒன்றே' என்னும் அத்துவிதத் தத்துவத்தை வேதக் கொள்கையாகப் பரப்பினார். ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆதிசங்கரரும் பௌத்தம், ஜைனம் முதலான

மதங்களைத் தம் நூல்களில் மறுத்து நலிவுறச் செய்தனர். சங்ககால நூல்களிலும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் தொடர்பில்லாமையாலே வேதத்திற்கு அந்நூல்களில் காட்டப்பெற்ற உண்மைப் பொருளைக் காணத்தவறி ஆதிசங்கரர் அவப்பொருள் கூறிவிட்டாரே'' என்று மனம் வெதும்பிய நாதமுனிகள் யாமுனமுனிகளாகிற ஆளவந்தார், இராமாநுஜசாரியர் முதலான ஆசாரியர்கள் சங்ககாலத் தமிழர்களும் ஆழ்வார்களும் கண்ட வேதவிழுப் பொருள் விசிட்டாத்துவித ஸ்ரீவைணவ மதமே என்று ஸ்ரீபாஷ்யம் முலான எண்ணற்ற நூற்களிலும் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களுக்கு அமைந்த வியாக்கியானங்களிலும் நிலை நாட்டினார்கள்.

இந்த வைணவ ஆசார்யர்களின் தாக்கத்தினாலேயே சைவமும் கள்ளுண்ணல், புலாலுண்ணல் முதலான தீயொழுக்கங்களைக் கைவிட்டு ஸ்ரீராமாநுஜர் காலத்திற்குப் பிறகு சைவசித்தாந்தமாக உருப் பெற்றது. அதற்குப் பிற்காலத்தில் 'சக்தியே பரம் பொருள்' என்று கூறும் சாக்த மதம் உருவாயிற்று. அதிலும் மகார பஞ்சகம் முதலான பலதீய ஒழுக்கங்கள் காணப்படுகின்றன. மிகப் பிற்காலத்தில், அத்துவிதமதத்தைப் பரப்பிய ஆதிசங்கரரைச் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு மதங்களை ஸ்தாபித்தவராகக் கற்பித்து ஆதிசங்கரரின் பெயரில் தோன்றிய மடாதிபதிகள் இந்த ஆறுமாதங்களையும் சங்கரரே நிறுவினார் என்னும் கற்பனையைச் சங்கர விஜய நூல்களில் புகுத்தி அதற்குத் தக்கவாறு பல தெய்வங்களைப் புகழும் துதிகளை வடமொழியில் இயற்றி அவற்றை ஆதிசங்கரர் செய்ததாகப் பிரச்சாரம் செய்தனர். குலோத்துங்க சோழ மன்னன் ஒருவனால் பல வைணவ ஆலயங்கள் இடிக்கப்பெற்று ஸ்ரீராமாநுஜர், பெரியநம்பி,கூரத்தாழ்வான் முதலான ஆசாரியர்களுக்குப் பல தீங்குகளும் இழைக்கப்பெற்றன. இத்தகைய சமயப் பூசல்களைத் தவிர்ப்பதற்காக மிகப்பிற்காலத்தில் தாயுமானவரும், வடலூர் இராமலிங்க அடிகளாரும், சில சித்தர்களும் 'எம்மதமும் சம்மதம்' என்னும் சமரச வாதத்தைப் பரப்பினர்.

இப்படித் தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருமாலையே பரம்பொருளாகக் கொண்ட ஒரே மதமாக விளங்கிய வைதிக மதம் இன்று முற்கூறிய பல மதங்களாகப் பிரிந்து இந்து மதம் என்னும் பொதுப் பெயரைப் பெற்று விளங்குகிறது.

கீதா, திருமதி எஸ். இராஜசிம்மன் கோயில் தாங்குதளங்கள் - ஓர் ஒப்பீட்டாய்வு

செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம், சுதை போன்ற பொருட்களால் எழுப்பப்பட்ட கோயில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் கல்லைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. மகேந்திரனின் குடைவரைகள் மலைச் சரிவுகளில் அமைந்தன. கல்லில் குடையப்பட்ட இந்தத் தொடக்க நிலையைப் பின்பற்றிப் பின்னால் சிறு குன்றுகளையே கோயில்களாக்கியும், கற்களை அடுக்கிக் கோயிலமைத்தும் புதுமுறைகள் உருவாயின. இந்த அணுகுமுறைகளை முதன் முதலாகப் பயன்படுத்திப் பார்த்த பல்லவ மரபின் சிறப்புக்குரிய மன்னன் இராஜசிம்மன் தமிழகக் கலை வரலாற்றில் தனியிடம் பெறுகிறார்.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனைமலை எனப் பல இடங்களில் இம்மன்னனின் மூன்று வகையான கோயில்கள்காணக் கிடைக்கின்றன. குடைவரைகள், ஒருகல் தளிகள், சுற்றளிகள் என்னும் இக்கோயில்கள் அனைத்துமே அறிஞர்களின் ஆய்வுப் பார்வைக்கு உட்பட்டுள்ளன. இக்கோயில்களைப் பற்றி ஆய்வு மேற்கொண்ட மா. இராசமானிக்கனார் வரலாற்று ஆய்வுமையமும், சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத் துறையும் அவற்றை ஒப்பிட்டு நோக்கிச் சில செய்திகளைத் தொகுத்துள்ளன.

இராஜசிம்மன்காலத்துக் கோயில்கள் சிலவற்றைத் தேர்ந்து அக்கோயில்களின் தாங்குதளங்களை மட்டும் ஆய்வுக்குட்படுத்தி அந்நிறுவனங்களின் ஒத்துழைப்போடு கண்டறிந்த கட்டடக் கலைத் தகவல்கள் தமிழர்களின் கலைத்திறன், கற்பனையாற்றல், அறிவியல் நுட்பம் ஆகியவற்றை நிறுவுவனவாக அமைந்துள்ளன.

குணசேகரன், முனைவர் கே.ஏ. தமிழ் நாடக அரங்கியல் கூறுகளும் அடிச்சுவடுகளும்

தமிழறிஞர்கள் இலக்கியத்தின், இலக்கணத்தின், இசையின் பாரம்பரியம் பற்றிப் பேசும் அளவுக்கு, எழுதும் அளவுக்கு ஆட்டம், கூத்து போன்ற பாரம்பரியக் கலைகளில் ஆர்வம் காட்டவில்லை.

செந்நெறி நாடகம் 'மார்க்கம்' என்றும் அந்தந்த வட்டார ஆட்டங்கள், கூத்துக்கள் போன்றவை 'தேசி' என்றும் நமது நாடக மரபுகள் இருவகைப்பட்டனவாயுள்ளன. பெருங்கோயில்கள்

(கோபுரங்கள்) ஏற்பட்டபோது, ஏகாதிபத்தியப் பேரரசு ஆட்சி ஏற்பட்டபோது, அரண்மனைக்கலைகள் எனத் தனித்து வளர்ந்த போது மேற்சொன்ன பிரிவுகள் அரங்கியலில் ஏற்பட்டன. தொழிலிலும், சாதியிலும், பொருளாதாரம் மற்றும் வாழ்வியல் ரீதியிலும் குறைந்த மதிப்பு பெற்றிருந்த சாதாரண மக்களின் கலைகள் 'தேசி' என்ற பகுப்பில் உள்வாங்கப் பெற்றிருக்க வாய்ப்பில்லை.

செவ்வியல் நாடகக் கூறுகளில் கதை, ஒழுக்கம் கற்பித்தல், குறிப்பிட்ட உணர்வுகள் போன்றவை முக்கியமாய் இடம்பெறும். பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் குரவை, துணங்கைக் கூத்து, கொற்றவை ஆடல், வெறியாடல் போன்றவற்றில் இனக்குழுச் சமூகத் தாக்கங்கள் கொண்ட வேட்டைத் தொழில், கதைகள், அம்மக்களின் வாழ்வியலைப் பேசும் ஒழுக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

பழந்தமிழ்க் கலைவடிவங்களில் இசைக்கருவிகள் பயன்பட்ட நிலைகள், வேடங்கள் புனைந்த நிலைகள், பூசைப் பொருட்களைக் கொண்டவிதங்கள், ஆடல், பாடல், பலர் இணைந்த கூட்டுச் செயற்பாடு, வேறொருவராகப் பாவித்து நடித்தல், களன் அமைத்தல் போன்ற பல நாடகக் கூறுகளுடன் பொருந்தியுள்ளன. ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, பள்ளு, குறவஞ்சி போன்றவற்றின் வட்டார மொழி நடைகள், இசைவகைகள், வசன முறைமைகள், ஏசல் முறைமை, பாத்திரத் தன்மைகள் போன்ற பலவும் நாடகக் கூறுகள் ஆகும்.

DR. K.A. GUNASEKARAN THE BASIC ELEMENTS AND COMPONENTS OF THE TAMIL THEATRE

The intellectuals of Tamil language and literature are not so concerned with folk art forms, such as dances and dramas, as they do with the classical art forms in their writings and speeches.

Our traditional Tamil Theatre is classified into two major categories called "Maargam" and "Desi". The classical dramas are called 'Maargam' where as the dances and dramas, performed by the origional ethnic groups in various regions are called 'Desi'. These classification come into existence during the period of foreign monarchy and when the constructions of big temples took place in the early centuries. During this period the

classical arts were performed in the palaces and there would have been no chance to inbibe the art forms of the down-trodden people who were treated as backward by their castes, professions, economical and social status.

In the classical theatre, the story of the play teaches morality and some times it develops a particular human feeling of love etc. In Kuravai Thunangai Koothu, Korravai Adal, Veri Adal and the like which we find in our ancient Tamil literature, the story reveals the nature of the social life of the common fold (down-trodden), their profession (hunting) the morality followed by them in their life and so on.

The way of using the musical instruments, make-up, costumes, characterisations, handling of pooja articles, their songs, dances, group activities and scence setting which are found in the ancient Tamil art forms are quite similar to the modern theational components. The style of dialogue, music, direction, characterifation of 'Aaytchiyar Kuravai', 'Vettuva vari', 'Pallu', 'Kuravanji' are various characteristics of the theatre.

குணசேகரன், மா. *21 ஆம் நூற்றாண்டிற்குத் தமிழகக் கட்டடக் கலைஞர்களின்பங்களிப்பு*

இந்தியத் துணைக் கண்டத்தில் பழம்பெரும் சிறப்பு வாய்ந்த தமிழகப் பண்பாட்டை, உலக நாடுகளுக்குப் பறைசாற்றுவன தமிழ்நாட்டின் தொல்கட்டடங்கள் ஆகும். தமிழகக் கட்டடக்கலை தனித்த மரபையும் நீண்ட வரலாற்றையும்கொண்டது. இந்தியத் திருநாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் தான் கோயில்கள் எண்ணற்ற அளவில் உள்ளன. இவை கால வெள்ளத்தால் அழிந்தவை போக எஞ்சிய படைப்புகள் ஆகும்.

தமிழ்த்திரு நாட்டின் காலம் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகளைநிர்ணயிக்கக் கூடிய அரிய கலைக் கட்டடங்களை உருவாக்கிய கலைஞர்கள் யார்? அவர்கள் எந்த நூலை அடிப்படையாகக் கொண்டு வியப்பூட்டும் மாமல்லபுரம், தஞ்சை, காஞ்சி, சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை போன்ற இடங்களில் கோயில்களை உருவாக்கினார்கள்? அவர்களின் வழி வந்தவர்கள் யார்? இன்றைய சிற்பிகளா? அல்ல ஸ்தபதிகளா? இவர்களது படைப்புக்கள் யாவை? இவர்களின் இன்றைய நிலை என்ன? 21-ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ள இருக்கும் இக்கலைஞர்களின்கலை

மரபு மாற்றங்கள் யாவை? இன்று பரவலாகப் பேசப்படும் மயன், விசுவகர்மா என்போர் இவர்களின் முன்னோர்களா? இவர்கள் எவ்விதக் கலைப் படைப்புக்களை உருவாக்கினார்கள்? எம் மொழியில் சிற்ப நூல்களை உருவாக்கினார்கள்? இம்மரபைச் சார்ந்தவர்கள் மட்டும் தான் சிற்பிகளா? அச் சமூக மரபைச் சாராத பிற தமிழ் இன மக்கள் இக்கலைத் தொழிலில் எவ்வகையில் ஈடுபட்டுச் சிறப்புப் பெற்று உள்ளனர்? இன்றைய கலைக் கல்வியில் ஏற்பட்டமாற்றங்கள் என்ன? அரசின் உதவி என்ன? தனியார் படைப்புக்கள் எவை? எனும் கேள்விகளுக்குப் பதில் கூறும் முகமாக இக்கட்டுரை அமைகிறது. இச்சிறப்பு மிக்க கலைப் படைப்புக்கள் உலக நாடுகளில் எவ்வாறு பரவியுள்ளன? இதற்கு உதவிய பெருங்குடிகள் யார்? யார்? என்பனவற்றுடன் இக்கால ஓட்டத்தில் ஏற்பட்ட தொய்வு, அத்தொய்வினை மாற்றுவதற்குரிய எதிர்கால வழிமுறைகள் போன்றவற்றையும் முதன்மையாகக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குமரன், சுப்பிரமணியன் அகப்பொருள் இலக்கியத்தில் பெண்களின் நிலை

சங்க இலக்கியம் என்று கூறும்போது எட்டுத்தொகையும் பத்துப் பாட்டுமாகிய பதினெட்டு மேற்கணக்கு நூல்களே சிந்தையில் நிற்கின்றன. அகம், புறம் என வாழ்க்கை நிலையை இரு வேறுபட்ட கோணங்களில் தமிழ்ப் புலவர்கள் நோக்கியுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. இந்த இரு வேறுபட்ட வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த மாந்தர்களும் மாறுபட்ட வாழ்க்கை முறையையே கொண்டிருந்தனர். பொதுவாகச் சங்க இலக்கியத்தில் ஆண், பெண் இருபாலரும் மிக முக்கியமானவர்களாகக் கருதப்படினும் பெண்களே இவ்விலக்கியத்திற்கு ஜீவ நாடியாக விளங்கினர்.

இக்கட்டுரை, அகப்பொருள் இலக்கியத்தை மையமாகக் கொண்டு எழுதப்படுகிறது. இலக்கியத்தில் பெண்களைப் பல நிலைகளில் அறிகிறோம். அக வாழ்க்கையில் நிலங்களுக்கேற்ற வாழ்க்கையைப் பெண்கள் பெற்று வாழ்ந்தனர். நிலங்களுக்கேற்பப் பெண்களின் தொழில்களும், திறனும், சிந்தனையும், பொறுப்புக்களும் மாறிவந்துள்ளன. இக்கட்டுரையின் நோக்கம் பல நிலையிலான பெண்கள் வாழ்க்கையை ஆய்வதேயாகும். தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய், விறலியர், பரத்தையர் எனப் பல நிலையில் பெண்கள் வாழ்வு ஆராயப்பட்டுள்ளது.

பூப்பெய்திய மங்கையான தலைவி, களவு வாழ்க்கையில் தலைவனுக்கு உரியவளாக வாழ்கின்றாள். தலைவனின் தூய

அன்பிற்கே தினமும் ஏங்கி உருகுபவளாக வாழ்கின்றாள். இத்தலைவி தலைவனை மணந்து கற்பு வாழ்வில் ஈடுபட்டபோது ஒழுக்கமிகு இல்லாளாகவும் தன் குழந்தையையும் கணவனையும் பேணும்போது தாயாகவும் மாறிவிடுகின்றாள். இல்லறப் பண்பான விருந்தோம்பலையும் இடைவிடாது கைக்கொள்ளுகிறாள். மருதநிலத் தலைவனான தன் கணவன் பரத்தையரை நாடித் திரும்பும்போது அவனை மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் நிலையில் பண்புமிக்க குலப்பெண்ணாக வெளிப்படுகிறாள்.

தலைவியினுடனுறையும் பெண்ணாகத் தோழி விளங்குகிறாள். பின்பு, செவிலித்தாயாக மாறுகின்றாள். இந்த இரு நிலையிலும் தலைவியை நல்வாழ்வுபடுத்தும் அரிய முயற்சிகளை மேற்கொள்வதோடு அவ்வப்போது ஏற்புடைய நல்லாலோசனை களையும் வழங்கத்தவறாள். களவு வாழ்க்கையிலும் சரி கற்பு வாழ்க்கையிலும் சரி தலைவியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயரிய ஜீவனாகத் தோழி விளங்குகின்றாள் என்பதில் ஐயமில்லை.

அகப்பொருள் இலக்கியத்தில் பரத்தமை என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக விளங்குகிறது. மருதநில வாழ்க்கையில் செல்வச் செழிப்போடு வாழும் தலைவனின் இச்சைகளுக்கு ஏற்பத் தம்மை மாற்றிக்கொள்ளும் திறன்மிக்க பெண்களாகப் பரத்தையரைப் பார்க்கின்றோம். இப்பிரிவினர் இருப்பதாலே தலைவியின் இல்லற மேன்மை மற்றும் உயர்பண்பு வெளிப்படுகின்றது.

பிறிதொரு வகுப்பினராக விறலியர் விளங்குகின்றனர். இயல்பாகவே சிறந்த இசை ஞானத்தைப் பெற்றுள்ள இவர்கள் பாணர்களோடு இணைந்து தலைவனுக்குத் தூதுவர்களாகச் செயல்படும் நிலையையும் அகப்பொருள் இலக்கியம் தெளிவுபடுத்துகின்றது. தலைவனின் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் சாதனமாகவும் இவர்கள் உலவுகின்றனர்.

அகப்பொருள் இலக்கியத்தில் பொதுவாகவே பெண்கள் ஐந்திணை நிலத்திற்கு ஏற்ற தொழில்களைச் செய்தனர். நிலங்களுக்கு உரிய வாழ்க்கை நெறிகளையும் முழுமையாக ஏற்று வாழும் உன்னத நிலையை நாம் காண முடிகிறது. அக்கால மக்களின் வாழ்க்கை முறையைத் தெளிவாக அறிந்துகொள்ள உதவும் காலக் கண்ணாடியே தமிழ் இலக்கியம் என்பது அறிஞர்களின் முடிபு. மேற்கண்ட கருத்துக்களைத் தக்க சான்றுகளோடு விளக்குவதே இவ்வாய்வுக் காட்டுரையின் நோக்கம்.

குமரேசன் டாக்டர் மு. தமிழ் மருத்துவச் சொல்லாக்கம்

மருத்துவச்சொல் என்பது ஒரு தனிப்பட்டமொழியாகும். இதற்கெனத் தனி இலக்கணம் உண்டு. இதன் இலக்கணத்தை மருத்துவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள முன் வரவேண்டும். உடம்பில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் தூய தமிழ்ச் சொற்கள் உண்டு. ஆனால் நோயினால் உருமாறும்போது அவை வேறொரு பெயரில் அழைக்கப்படுகின்றன. அந்த உருமாற்றத்திற்குத் தகுந்த பெயர்கள் தமிழில் இல்லை. இதற்கான சொற்களை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். ஆங்கிலச் சொற்களை Word Root, Prefix, Suffix என்று பாகுபடுத்திக் கூறுவார்கள். இவையாவும் இணையும் பெழுதுதான் சொற்கள் உருவாகின்றன. ஆதாரமான சொல்லுக்கு முன்னால் உள்ளது பகுதி எனவும், பின்னால் உள்ளது விகுதி எனவும் குறிப்பிடப்படுகின்றன. உதாரணமாக ஆங்கிலத்தில் உள்ள Epigastric (எபிகேஸ்டிரிக்) என்ற சொல்லை EPI-Gastric என்று பிரிக்கலாம். EPI என்ற பகுதியும் பின்னால் உள்ள IC என்ற விகுதியும் Gastr என்ற மூலத்தோடு சேரும்போது EPIGASTRIC என்ற சொல் உருவாகிறது. இதனால் குறிப்பிட்ட அர்த்தமுள்ள சொல்லாக உருப்பெறுகிறது. இதைப்போல் புண்ணாவதை LARYNX INFLAMATION என்று கூறாமல் LARYN-GITIS என்று கூறுகிறார்கள். இவை போன்ற சொற்கள் தமிழில் இல்லை.

ஆங்கிலத்தில் PHARYNX, LARYNX என்பவெல்லாம் தொடர்புடைய வார்த்தைகளாக வருகின்றன. ஆகவே, தொண்டையோடு தொடர்புடைய குரல்வளையைக் குரலண்டை என்று கூறலாம். மூக்கோடு தொடர்புடைய தொண்டையை மூக்கண்டை என்றும் உணவுக்குழலோடு தொடர்புடைய தொண்டையை உணவுத்தொண்டை எனவும் கூறலாம். அவரவர் தனித்தனியாகத் தமிழில் நூல்கள் எழுதிக்கொண்டிருந்தால் தமிழ் மருத்துவ இலக்கணம் தானாகவே உருவாகிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. இம்மாதிரியான சொற்களை உருவாக்க இலக்கண வல்லுநர்கள் முன்வரவேண்டும்.

DR. M. KUMARESAN TAMIL MEDICAL LANGUAGE

To build a medical word we have to learn a separate language. It will have its own grammar. This grammar forms fundamental for knowing medical words. Tamil language is having

vast number of words. But this does not created the medical language. Every stages of diseases can be easily studing in English. They devide the basic word structure into combining forms, Suffixes and Prefixes. The main goal is to learn the tools of word analysis. This will make the understanding of complex terminology easier. Work beginning is called as Prefix, word ending is called as Suffix. The foundation of the word is called as word root. In a word "Epigastric" Epi-is prefix, gastr-is word root and ic-is suffix.

We can give few examples. When "Larynx" get inflamed it is not written as "Larynx inflammation" It is called as "Laryngitis" Similar combining forms is not available in Tamil language. The English word Pharynx, Larynx clearly indicate the anatomical relation of these two structures. We call "Pharynx" as தொண்டை so "Larynx" can be called as குரலண்டை. Similarly "Nasopharynx" can be called as மூக்கண்டை and "Hypopharynx" can be called as உணவுத்தொண்டை. So all Tamil literary poets can work together and create a separate Tamil Medical Language.

குருநாதன், முனைவர் வ. புறநானூற்றில் புலமையறம்

சங்கத்தொகை நூல்களுள் புறநானூறு பண்டைத் தமிழரின் பல்வேறு வாழ்வியல் அறங்களையும் வரலாற்றுக் களங்களோடே நடைமுறைப் பான்மையில் நவில்கின்றது. ஈதலறம், வாழ்தலறம், காதலறம், அரசியலறம், போரறம் போன்ற ஏனையறங்களையெல்லாம் எடுத்துப்பாடுகின்ற புலவர்களின் புலமையறம் தனிச்சிறப்பு மிக்கது.

புறநானூற்றுப் புலவர்கள் ஆங்காங்கே சென்று அரசர்களையும் வள்ளல்களையும் கண்டு தம் புலமையை வெளிப்படுத்தி அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனராயினும், அவர்கள் அதுமட்டுமே நோக்கமாகக் கொண்ட தொழில்முறைப் புலவர்களல்லர். அவர்கள் தம் புலமைக்கென்று உயர்நிலை அறங்கள் பலவற்றை உடையவர்களாயிருந்தனர். பரிசில் வேண்டிப் பாடும்போது பாடப்படுவோரின் படைவலிமிக்க செல்வநிலையை மதியாது, பாடறிந்தொழுகும் வண்மை நிலையை மதிக்கும் வரையறையும், பாடிவந்த தமக்குப் பரிசில் கொடுப்போரை ஏத்திப் பாராட்டில் பரிசில் கொடாத மன்னரை பழித்துரைப்பதோடு

பின்னர் எவருமே அவரைப் பாடாமல் புறக்கணிக்கும் போக்கும், தம்மைத் தரமறிந்து சிறப்பிக்கும் தகுதியில்லாத மன்னரின்வரிசையறியாப் பரிசிலை வாங்க மறுப்பதோடு தாமே அவர்க்குப் பரிசில் கொடுத்து அவரது சிறுமையை இடித்துரைக்கும் பெருமையும் காணப்படுகின்றன.

அரசியல் தவறுகின்ற அரசர்களை அணுகி நின்று ,அஞ்சாதே இடித்துரைத்து அவர்க்குச் செவியறிவுறுத்தலாகிய சீரிய அறத்தினைப் புறநானூற்றுப் புலவர்களிடம் பரவலாகப் பார்க்கலாம். அரசியல் வாழ்விலேயன்றி அரசர்தம் இல்லற வாழ்வில் பிழைபடுகின்றபோது இதனை நயமுற எடுத்துக்கூறி அவர்தம் வாழ்வினை செம்மைச் செய்யும் பொறுப்பையும் காணலாம்.

அரசன் தன் பக்கத்தே தரமறியாச் சுற்றத்தினரை அமர்த்திக்கொண்டு, அவர்கள் மொழிவதற்கேற்ப நாட்டு மக்களிடமிருந்து வரிவசூலை மிகைபட வாங்கும் நிலையில் மக்களின்சார்பிலே புலவர்கள் போய் மன்னனிடம் எடுத்துப் பேசி வரிச்சுமையைத் தவிர்க்கும் வன்மையும், நாட்டிலே வேளாண்மை பெருகவேண்டி நீர்நிலைகளைப் பெருக்கி நீர்ப்பாசன ஏற்பாடுகளைச் செய்யுமாறு அரசனுக்கு அறிவுறுத்தும் அக்கறையும் அறியப்படும்.

அரசர்கள் தமக்குள் முரண்பட்டு மோதிப் போர்புரிய முனையும்போது, ஏற்படவிருக்கும் அழிவுகளை எடுத்துக்கூறி அவர்களிடையே போரைத் தவிர்க்கும் பொறுப்பும் பகையரசனின் மக்களைப் பிடித்துவந்து கொலைபுரியத் துணிந்த அரசனின் கண்ணோட்டமற்ற செயலைக் கண்டித்து மாற்றும் அருளாண்மையும் பரிசில் பெறவந்த பாவலனை ஒற்றனெனக் கருதிக் கொல்லத் துணிந்த அரசனிடம் புலமையறத்தினைப் புலப்படக் கூறிக் கொலைமுயற்சியைத் தடுத்த தகைமையும், வேற்றரசர்-தம்மரசர் என்ற வேறுபாட்டைக் கடந்து நல்லவர் யாராயினும் அவருடைய நன்மையைத் துணிந்து பாராட்டும் போக்கிலேயேதீமையைக் குத்திக் காட்டுகின்ற திறமையும், ஒன்றுபடாத வேந்தர்கள் தம்முள் ஒன்றுபட்டுச் சேர்ந்திருக்கும் நன்னிலையைக் காணுங்கால் அந்நிலையை நயந்து வாழ்த்தும் நல்லறமும் காணத்தகும்.

எந்தக் காலத்திற்கும் வேண்டப்படுகின்ற இத்தகைய புலமையறங்களை இந்தக்காலக் கவிஞர்கள் எடுத்துக்கொண்டு, இயலுமளவில் கடைப்பிடித்தால் அவர்தம் சமுதாயக் கடமை

சான்றாண்மை மிக்கதாகும்.

குலேந்திரன், முனைவர் திருமதி. ஞானா தமிழர் வளர்த்த ஆடலிசை மரபும் மாற்றங்களும்

பரதநாட்டியம் என்ற பெயரில் உலகப் புகழீட்டி வரும் ஆடற்கலை தமிழக மண்ணில் பல நூறு ஆண்டு காலமாக வளம்படுத்தப் பெற்ற ஒரு மரபுக் கலை வடிவமாகும். இக் கலையோடு இணைந்து அதற்கென்றோர் இசை மரபும் வழிவழியே காக்கப்பெற்று வந்துள்ளது. இது குறித்த செய்திகள் பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களிலும், நிகண்டுகளிலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன; பழந்தமிழகக் கோயில்களில் சிற்ப ஓவியச் சான்றுகளும் கிடைக்கின்றன.

யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்
இயைந்த பாடல் இவையுடன் படுத்து...

என்ற சிலப்பதிகாரக் (கி.பி. 2-ஆம் நூ.) குறிப்பின்படி மிடற்றிசை, நரம்புக் கருவியிசை, காற்றுக் கருவியிசை, தோற்கருவியிசை ஆகிய ஐவகை இசையும் பழந்தமிழர் ஆடலில் இடம் பெற்றதாகத் தெரிகிறது. பதினொரு ஆடல்வகைகளுக்கான பாடல், கருவியிசை ஆகியவற்றை ஆடலாசான், இசையாசிரியன், யாழாசிரியன், தண்ணுமை ஆசிரியன் என்னும் இசைத் தகைமையாளர் ஆடல்நெறிகளுக்கமையப் பண் இசையில் வழங்கினர் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது. நாட்டியமாடுபவருக்கு உறுதுணையாய் இவர்கள்ஆடலரங்கில் உடனிருந்து இசை வழங்கினர்.

இத்தகையோர் ஆடலிசை மரபு தலைமுறை தலைமுறையாகக் காக்கப்பெற்றமையைச் சோழ மாமன்னன் இராசராச சோழன் (கி.பி. 11-ஆம் நூ.) கல்வெட்டொன்று தெளிவாக உறுதி செய்கிறது.

ஆடற்கலையையும் அதன் இசை மரபையும் காத்த கலைஞர் பரம்பரையில் பிற்காலத்தில் சிறப்பிடம் பெற்றவர்கள் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய தஞ்சை நாட்டிய சகோதரர் நால்வராவர் (கி.பி. 19-ஆம் நூ.). பொது அரங்க நிகழ்ச்சிக்கேற்ப அவர்கள் வகுத்துக்கொடுத்த கலைமுறைகளைக் காத்த நாட்டியப் பரம்பரையினரின் வழி வந்த கலையே இன்று 'பரதநாட்டியம்' என்ற பெயர் கொண்டு விளங்குகிறது. பழந்தமிழர் பாடிய பண்ணிசைவழி வந்த கருநாடக இசை வடிவங்கள் பரநாட்டிய உருப்படிகளுக்கு அடித்தளம் என்பது குறிக்கத்தக்கது.

பரதநாட்டியக் கலை தற்போது இந்தியாவில் மட்டுமன்றி உலகின்பல நாடுகளிலும் நாளுக்கு நாள் பிரபலமடைந்து வருகின்றது. இந்தியப் பண்பாட்டுப் பின்னணி இல்லாதோரும் இக்கலையை விரும்பிப் பயின்று வெளிநாடுகளில் அரங்கேற்றி வருகிறார்கள். பெருகி வரும் அறிவியல் தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாடும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் வேகமாக இடம்பெறத் தொடங்கிவிட்டது. நாட்டிய அரங்கில் புதிய ஆக்கங்கள் குறித்த நோக்கில் கலைஞர்களும் தலைவர்களும் பேரார்வம் காட்டி வருகிறார்கள்.

இவைபோன்றஇன்னும் பல காரணங்களால் மரபுவழி ஆடலிசை, மாறிவரும் ஒரு போக்கைப் பெறத் தொடங்கியுள்ளது. அ) தென்னக இசை உருப்படிகளைவிடுத்துக் கயால், தும்னி, தரானா, பஜன் முதலான இந்துஸ்தானி இசை வடிவங்கள் பரதநாட்டி உருப்படிகளாக நிகழ்த்தப் பெறுகின்றன. ஆ) பக்க இசையாளர் நாட்டிய நடிகருடன்அரங்கில் உடனிருந்து இசை வழங்கும் முறை அருகி, ஒலி நாடாக்களும் இசைத் தட்டுக்களும் அரங்கில் பயன்படுத்தப்படுகின்றன. இ) ஆடல் நெறியாளராகிய நட்டுவ ஆசான் இல்லாது நிகழ்ச்சிகள்நடைபெறுகின்றன. ஈ) ஒழுகிசையாம் (Melody) இந்திய இசைக்கு வேறான ஒத்திசை (Harmony) உத்திகள் நாட்டிய இசையில் இடைபுகுகின்றன.

உலகளாவியநிலையில் ஏற்பட்டுவரும் கலை, பண்பாட்டு அறிவியல் மாற்றங்களால் மரபுக் கலைகளில் தாக்கங்கள்ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கலை நோக்கில் அது முற்றிலும் தவறானதுமல்ல. இருப்பினும் இம் மாறிவரும் போக்கு ஒரு மரபுக் கலையின் அடிப்படைத் தகைமைகளை உருக்குலைக்குமா? பழமை பேணி மரபுச் செல்வம் பாதுகாக்கப்படுவது அவசியமா? எத்தகைய மாற்றங்கள் ஏற்றம் தரும், அல்லது ஏற்புடையவை? இவை போன்ற நோக்கில் இக்கட்டுரை நுணுகி ஆராய்ந்து தரப்படுகிறது.

குழந்தைவேலு, முனைவர் இரா. குறள் காட்டும் காலம்

தமிழுலகம் காலத்தைப் பெரும்பொழுது என்றும் சிறுபொழுது என்றும் பிரித்துப் பெயர் வகுத்தது. ஆண்டு அளவில் எல்லைகளைக் கொண்ட பெருங்கூறுகளே பெரும் பொழுதுகள்; நாள் அளவில் எல்லைகளைக் கொண்ட சிறுகூறுகளே சிறுபொழுதுகள்.

குறள்களில் காலம், பருவம், பொழுது, நாள், நெருதல், இன்று என்னும் வழக்குகள் உண்டு; காலை, பகல், மாலை, இரா, யாமம்,

என்னும் வழக்குகளும் உண்டு.

அக்குறள்களின் பல்வேறு நிலைகளிலும் ஒத்து நிகழும் பொதுநிலைக் கருத்துக்களைக் குறள்களைக் கொண்டு குறுக்க அளவில் கண்டறிந்து காட்டும் நோக்கத்தில் எழுவது இக் கட்டுரையாகும்.

காலம் என்னும் கருத்துக்களைக் குறித்து இங்கு ஆராய்தற்குப் பொருந்தும் (அ) பொது நோக்கில் காலம் (ஆ) நாள் நோக்கில் காலம் கூறுகள் வருமாறு அமைகின்றன.

(அ) இது முதலாவது கூறு ஆகும். காலம், பருவம், பொழுது என்னும் வழக்குகள் இங்கு ஆராய்தற்கு இருக்கின்றன.

குறள்களில்பொதுவாகக் காலம் என்பது ஒருவர் செயலாற்றும் எல்லையைக் குறிப்பதாகும். சூழ்நிலை நோக்கில், கால நோக்கு விரும்பத்தக்கது என்பது குறள் கருத்து. ஒருவர் தாம் கருதும் கருத்து, செயலாகச் சிறந்தொளிர்தற்குக் காலமும் இடமும் அடிப்படையாக அமைதல் வேண்டும். குறள்கள் காட்டும் கால மெய்ம்மைகள், ஆள்வினைக்குப் போற்றிக் கொள்ளத்தக்கவை.

பருவம் என்னும் வழக்கு, ஓர் ஆண்டினைப் பிரிவாக்கிப் பிரித்த ஆறு பெரும்பொழுதுகளும் ஒன்றனைக் குறிக்கும் குறிப்பிட்ட பொருளைக் கொடுக்காது, பொதுவாகக் காலம் என்னும் பரந்த பொருளில் குறள்களில் வந்திருக்கிறது. பலவகையாலும் எழும் வெற்றி நிலைக்குப் பருவம் என்னும் கால நோக்கு வேண்டும் என்பது குறள் கூறும் கருத்தாகும்.

(ஆ) இரண்டாவது கூறு இது. இங்கு நாள், நெருதல், இன்று, காலை பகல், மாலை, இரா, யாமம் என்னும் பொழுது வழக்குகள் ஆராய்தற்கு இருக்கின்றன.

நாள்அளவில் பிரிவாகும் வேளையே குறள்களில் பொழுது என்று வழங்கும் வழக்காகும்.

வாழ்க்கைக்குக் கால எல்லை இல்லை. வாழ்க்கையின் காலக் கூறே பொழுது ஆகும். நாளின் சிறுபொழுதுகளும், குறள்கள் கண்ட வழக்குகளில் இருக்கின்றன. இராப் பகல் என்னும் இரு தொகுதிகளின் எல்லையில், பொதுவாக நாள் எல்லைப் பொருள் அமைந்திருக்கிறது.

திங்களின் கூறுகளாகும் நெருநல், இன்று என்னும் வழக்குகளும் குறள்களில் பதிந்திருக்கின்றன.

காலை, பகல், மாலை என்னும் சிறுபொழுதுகள் ஒரு நாளின் ஒளிவிளங்கும் அரைநாள் பகுதியில் பயின்றவை என்று குறள்கள் காட்டுகின்றன. இந்தக் கருத்து ஆராய்ச்சி உள்ளது மலர்ந்து பெருகும் பெருக்கமுறையைப் பின்பற்றிக் குறளில் ஓங்குகிறது. பகுத்துணரும் ஒருவகையில் நோக்கும் போது ஓர் அகநிலை ஆராய்ச்சிக்கு மாலைப் பொழுது இடந்தருகிறது.

யாமம் என்பது நள்ளிரா வேளை எனச் சொல்லப்பெறும் நடுநாளாகும். உயிர்களுக்கெல்லாம் உறக்கம் அளித்து அமைதி தருவது யாமமாகும். பொழுதுகளைப் பகையாகக் கொள்ளுதற்கு இடம் இல்லை என்பது குறள் தரும் சிந்தனையாகும்.

மனப்போக்கும் பொழுதும் குறித்த ஒப்பியல் வழிச் சிந்தனைக்குக் குறள் இடமளிக்கிறது.

வாழ்வே காலம் இருக்கிறது என்பதனைக் குறள்கள் முடிவாகக் காட்டுகின்றன.

DR. R. KULANDAIVELU THE KURAL CONCEPT OF K ĀLAM

Thiruvalluvar, being a great poet and researcher employs the term 'kālam' in many of his kurals with great interest and meaning.

Tamil people and literature have classified kālam as 'perumpoluthu' refers to seasons and long periods such as years. 'Sirupoluthu' refers to different periods of a day (nāḷ) like kālai (morning), pagal (day) , mālai (evening), irā (night) and yāmam (midnight).

The aim of this paper is to present briefly the concept of kālam as depicted in the kural

The views regarding kalam as presented in the kural can be investigated from two angles:

(a) Kālam from the comprehensive point of view

(b) Kālam from the point of view of a day (nāl)

(a) Terms such as 'Kālam', 'Paruvam', 'poluthu' are under

investigation here.

The term kālam in the kural, generally refers to one's period of activity. The kural emphasises the importance of surrounding and kālam. For the successful implementation of ideas into action suitable kālam and place are indispensable.

The term 'paruvam' (season)refers to any one of six divisions of time of a year. It does not have a specific meaning. It occurs in the wider concept of kālam in the kural. The kural hold that success depends on paruvam.

(b) Terms such as nāḷ (a day), nerunal (Yesterday). inru (today), kālai (morning), pagal (day), mālai (evening). irā (night), yāmam (midnight) are under investigation here.

Divisions of time in a day are mentioned as 'poluthu' in the kural.

Further division of time in a day, known as 'sirupoluthu' are also used in the kural. The term 'irāppagal' is used to refer to the particular duration of time in a day.

The term 'nerunal' (yesterday), inru (today) are also used in the kural.

kālai (morning), pagal (day), and mālai (evening) are the terms used to refer to the different periods of time between sunrise and sunset. These ideas are symbolic of the development of human activity. A closed analysis will reveal that 'mālai' (evening) is associated with love.

Yāmam (midnight) is a term used to refer to the midpoint in a nāl (a day). Yāmam is the time for peaceful sleep and rest. Man should be in harmonious company with 'poluthu' for happiness. The kural shown the way of happy life where 'manap pōkku' (thought of mind) and 'poluthu' go hand in hand.

The kural emphatically shows that kālam is for worth living.

குளத்தூரான், முனைவர் க. தஞ்சை நாயக்கர் கோயிற் கட்டடக்கலை

தஞ்சை நாயக்கர்கள் விஜயநகரக் கலை மரபுகளைப் பெரும்பான்மையும் பின்பற்றியுள்ளனர் என்பது வெளிப்படை. அவ்வாறெனில் விஜயநகரகோயில் கட்டடக்கலை மரபுகளை நாம் முதலில் அறிந்துகொள்வது அவசியமாகின்றது. விஜயநகரக் கலைஞர்கள், ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியில் காணப்பட்ட முந்திய அனைத்துக் கலைமரபுகளையும் ஒருங்கிணைத்துத் தங்கள்புதுமைக் கூறுகளையும் இணைத்துப் படைத்துள்ளனர். விஜயநகர மன்னர்களின்ஏகாதிபத்திய உணர்வு தங்கள் ஆட்சிப் பகுதியிலுள்ள அனைத்துக்கலைமரபுகளையும் ஒருங்கிணைக்கும் நிலையை அவர்களிடம் தோற்றுவித்தது. இதனால் அவர்கள் ஹொய்சாள, காளத்திய, சாளுக்கிய, சோழ, பாண்டிய மரபுகளிலிருந்து தங்களின் கோயிற்படைப்புகளுக்குத் தேவையான உத்திகளையும் திறமைகளையும் பெற்றுக்கொண்டனர். இத்துடன் தங்கள் புதியபடைப்புக் கூறுகளையும் இணைத்துக்கொண்டனர். இதன் விளைவாக அவர்களின்கீழ் அரசாண்ட தஞ்சை நாயக்கர்களும் அம்மரபுகளையே பின்பற்றினர். ஆயினும் தஞ்சை நாயக்கர்களின் கோயில் கட்டடக் கலையின் புதுமை அல்லது தனித்தன்மை ஏதாவது காணப்படுகிறதா என்பது ஆய்விற்குரியதாகும்.

அடுத்து விஜயநகர கால மரபில் சராசெனிக் கலைக்கூறுகளின் தாக்கம் பெரிதும் காணப்பட்டது. ஆதலால் அம்மரபு தஞ்சை நாயக்கர் கோயிற் கட்டடக்கலை மரபிலும் தாக்கத்தை ஏற்படுத்தியமைக்குக் காரணம் உள்ளது. இதனையும் இங்கு ஆராய வேண்டியுள்ளது.

மேலும் தஞ்சை நாயக்கர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியில் மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்த சோழமரபுகளையும் பின்பற்றியுள்ளனர் என்பதும் இங்கு ஆய்வுக்குரியதாகும். இதனால் தஞ்சை நாயக்கர் கோயிற் கட்டடக்கலையின் தனித்தன்மையையும் பாணியையும் (Style) தெளிவாக வரையறுக்க இயலும்.

தஞ்சை நாயக்கர் கோயிற் கட்டடக்கலையை மதுரை, செஞ்சி நாயக்கர் கோயிற் கட்டடக்கலையுடன் ஒப்பிட்டுக்காணும்போது அதன்தனித்தன்மை வெளிப்படுகிறது. தஞ்சை நாயக்கர் கோயிற் கட்டடக்கலை பெரும்பான்மையும் விஜயநகரக்கட்டடக்கலை மரபுகளைஅப்படியே பின்பற்றி வந்துள்ளது. புதுமைக் கூறுகளையும் புதிய மரபு உருவாக்கங்களையும் அதிகமாகக் காணமுடிவதில்லை. விஜயநகர மரபுகளின் தொடர்ச்சி நிலைகளை நாயக்கர்

கட்டடக்கலையில் காணலாம். ஆனால் மதுரை நாயக்கர் படைப்புகள் விஜயநகரக் கட்டடக்கலைத் திறமைகளையும் மிஞ்சும் வண்ணம் உயர்ந்த நிலையை எட்டியுள்ளன. ஏராளமான புதுமைக் கூறுகளை அவர்கள் உருவாக்கியுள்ளனர். அதே வேளையில் தஞ்சை நாயக்கர்களின் கோயிற் கட்டடக்கலை எளிமையாக அமைந்துள்ளது. மதுரை நாயக்கர்கள் தஞ்சை, செஞ்சி நாயக்கர்களைவிட ஏராளமான கோயில்களையும் மண்டபங்களையும் கட்டியுள்ளனர். தங்கள் ஆட்சிப் பகுதியிலுள்ள பாண்டிய மரபுகளை அவர்கள் பெரும்பான்மையும் விஜயநகர மரபோடு இணைத்துப் படைத்துள்ளனர். செஞ்சி நாயக்கர் கோயில்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன் அவர்கள் படைப்புகளில் எத்தகைய தனித்தன்மையும் புதுமையும் காணப்படவில்லை. இத்தகைய வேற்றுமைகளையும் ஒப்பிட்டு ஆய்கிறது இக்கட்டுரை.

உறம்பி, கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு முதலிய பகுதிகளில் காணப்படும்விஜயநகரக் கட்டடக்கலை மரபு பெரும்பான்மையும் சோழ, ஹெய்சா, காகத்திய, சாளுக்கிய மரபுகளைப்பின்பற்றியே அமைக்கப்பட்டதாகும். இருப்பினும் விஜயநகரக் கோயிற்கட்டடக்கலை மரபில் சில புதியமரபுகளையும் கண்டுபிடிப்புகளையும் காணலாம். மேலும் கர்நாடக ஆந்திர மாநிலங்களில் காணப்படும் விஜயநகரக் கட்டடக்கலையின் அமைப்புக் கூறுகளைத் தமிழ்நாட்டில் காணப்படும் விஜயநகரக் கட்டடக்கலை அமைப்புகளைவிடச் சிறந்ததாகக் கூறமுடியாது. சோழ, பாண்டிய, பல்லவ கட்டடக்கலை மரபுகளின் வியக்கத்தக்கவளர்ச்சியே அதற்கு அடிப்படையான காரணமாகும்.

DR. G. KULATHURAN TEMPLE ARCHITECTURE OF THE TANJORE NAYAKS

Whether the Tanjore Nayaks show distinct style of their own when comparing to other Nayaks or they adopted the local tradition of their provinces. They are problems for the present study. Moreover it is to be probed whether the Tanjore Nayaks followed the Islamic art tradition as followed by the Vijayanagar rulers. These above hypotheses are tested and studied here to identify the originality of the Tanjore Nayaks art.

The Tanjore Nayaks temple architecture is unique in nature when compared to Senji and Madura Nayaks. All the Nayaks of Tamil region simply followed the tradition of Vijayanagar architecture. The

Continuation of the Vijayanagar tradition reached its culmination in the Nayaks architecture. Though the Madura Nayaks achieved tremendous advancement in art and architecture than their predecessors, the Vijayanagara artists, the Nayaks of Tanjore show simplicity and not much innovations. The Madura school of Nayak artists built innumerable temples in their provinces which excel even their predecessors, the Vijayanagara artists, because the native Pandya and other artists surviving in their region gave much impetus for their art. Of course, the Vijayanagara structures in Hampi and other places show marked influence of the Chola architecture as well as Hoysala and Kahatiya architecture. The temples built by the Vijayanagara artists, in the Tamil region are comparatively remarkable in production than those of the structures present in the Karnataka and Andhra regions. This is because of the already well developed tradition of the Tamil region especially of the Chola, Pandya and Pallava traditions. An unique style is well developed by the Madura Nayaks. But the other Nayaks, Tanjore and Senji, show not much development and innovations except in few cases.

குளோறியா சுந்தரமதி, முனைவர் இலா. தொல்காப்பியப் பொருளதிகாரம் - பண்டைத் தமிழரின் கவிதையியல்

1. தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பழந்தமிழ்க் கவிதையின் இயல்புகளை விளக்கும் கவிதையியலாக அணுகும் சிந்தனையை வலியுறுத்தல்.

2. பொருளதிகாரத்தின் இயல் அமைப்புக்களை ஒட்டிக் கவிதையின் வெவ்வேறு தளங்களை இனங்காணுதல்.



3. அகத்திணையியல் புறத்திணையியல்களில் அறிமுகம் செய்யப்படும் கவிதை பற்றிய கோட்பாடுகள்.

அ) கவிதையாக்கத்தில் பொருந்தும் மூன்று பொருள்தளங்கள். (கவிதையின் உள்ளார்ந்த ஒருமை பற்றிய இலக்கியக் கோட்பாடு)

ஆ) அகத்திணையேழும் இவற்றின் இணையாகப் பொருந்தும் புறத்திணையேழும் சங்க இலக்கியத்தில் இவ்வியைபு கவிதை நெறியாகவெளிப்பட்டு நிற்கும் நிலை.

இ) திணை மயக்கமும் அதன்வாயிலாக வெளிப்படும் கவிதை நெறியும்.

ஈ) தொல்காப்பியத்தின் திணைக்கோட்பாட்டை உலகளாவிய இலக்கியக் கோட்பாட்டு நெறியாகக் காணும் தற்கால இலக்கியச் சிந்தனை.

உ) அகப்பாட்டு மாந்தர் பற்றிய சிந்தனையும் பெயர் சுட்டாமரபின் நுட்பமும்.

ஊ) புலனெறிவழக்கு என்ற கவிதை நெறி.

எ) குறிப்புப்பொருள் அகப்பாட்டு நெறியாகப்பொருந்தும் நிலை.

4. களவியல் கற்பியல்களில் புலப்பட்டு நிற்கும் கூற்றுக் கோட்பாடு, கூற்றின் தகுதிப்பாடு (ஔசித்யம்) பற்றிய சிந்தனை.

5. செய்யுளியல் வழங்கும் கவிதையின் செறிவமைப்பு, கவிதை பல தளங்களாலான முழுமை என்பது வலியுறுத்தப்படுவது.

6. பொருளியல் வழங்கும் கவிதை மொழி பற்றிய சிந்தனை.

7. ஏனைய இயல் செய்திகள் புலப்படுத்தும் கவிதை நெறி.

கோபாலையர், தி. வே. தமிழ நன்னூல் துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்

சங்ககாலத்தை அடுத்த காலத்தில் தமிழகத்தில் மாயோனை வழிபடுவதன்சிறப்பை விளக்கி அருளாளர்கள் அருளிய தமிழ்ப்பாடல்களின் தொகுப்பு நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் என்ற பெயரால் வழங்குகிறது. இப்பாடல்களை அருளிச்செய்தவர் பன்னிருவர். இவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் தொகை இருபத்துநான்கு. இப்பிரபந்தங்களுக்குப் பாயிரம் போல வைணவச்சான்றோர் அருளிச்செய்த பாடல்கள் தனியன்கள் என்ற பெயரால் தமிழில் யாக்கப்பட்டு, பயில வழங்குபவை முப்பதும் பயில வழங்காதவை ஆறும் உள்ளன.

இவற்றுள் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்களுக்கு எம்பெருமானார், கூரத்தாழ்வான், எம்பார், பிள்ளைத்திருநறையூர் அரையர் என்பவர் அருளிச்செய்த தனியன்கள் உள்ளன. அவற்றுள் மொழியைக்கடக்கும் பெரும்புகழார் ஆகிய கூரத்தாழ்வான் அருளிச்செய்த தனியன் பின்வருமாறு.

நெஞ்சுக்கு இருள்கடி தீபம்; அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம்; தமிழ நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம்; ஆரணசாரம்; பரசமயப்
பஞ்சுக்கு அனலின் பொறி; பரகாலன் பனுவல்களே

இவ்வாழ்வாரொருவருடைய பாசுரங்களே தமிழ நன்னூல்துறைகள்அஞ்சுக்கு இலக்கியம் என்று போற்றப்படுகின்றன. ஆழ்வார்காலத்தில் தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்பினதாகவே இருக்கவும், தனியன் பாடிய

கூரத்தாழ்வான்காலத்தில் அவற்றோடு யாப்பு, அணி என்ற பகுப்புக்களும் சேரத் தமிழிலக்கணம் ஐந்து பகுப்பினதாயிற்று. ஆழ்வார் பாசுரங்கள் தமிழ நன்னூல்துறைகள்ஐந்தனுக்கும் இலக்கியம் ஆமாறு இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

எழுத்துப் பற்றிய செய்தியில் அறுவகைச் செய்யுள்விகாரங்கள், மூவகைக்குறைகள், எழுத்துப் போலியாக வந்த சொற்கள் முதலியன குறிப்பிடப்படும்.

சொல்பற்றிய செய்தியில் ஆழ்வார்பாசுரங்களில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொற்களின் நிலை, தொடரமைப்பு நிலை என்பன குறிக்கப்பெறும்.

பொருள்பற்றிய செய்தியில் மக்களிடையே நிகழும் காதல் இறைவனிடத்துக் காதலாக அமையும் நிலையில் உள்ள தலைவிகூற்று, செவிலிகூற்று என்பனவும், புறப்பொருள் பற்றிய பொங்கத்தம் பொங்கம், குழமணிதூரம் போல்வனவும் இடம்பெறும்

யாப்புப்பற்றிய செய்தியில் இவ்வாழ்வாருடைய பாசுரங்களில் அமைந்த யாப்புப்பற்றிய செய்திகள் விளக்கப்பெறும்.

தமிழில் தனித்து அணியிலக்கணநூல்கள் தோன்றுவதன்முன் அருளப்பெற்ற இவ்வாழ்வாருடைய பாடல்களில் உவமம், உருவகம், பின்வருநிலை, தற்குறிப்பு, நிரல்நிறை, புணர்நிலை முதலிய அணிகள் அமைந்துள்ளமை சுட்டப்பெறும்

சுருங்கக்கூறின், இவ்வாழ்வாரின்இறைத்தொண்டு தமிழ்த்தொண்டு ஆமாறு இக்கட்டுரையில் இடம்பெறுகிறது.

கோபிநாத்,முனைவர் திருமதி ஜலஜா சமண் சமய அருத்தசாத்திரமும் திருக்குறள் பொருட்பாலும் - ஒப்பீடு

இந்தியாவில் அர்த்தசாத்திர மரபு கி.மு. முதற்கொண்டே உண்டு. வடமொழியில் பல அர்த்தசாத்திர நூல்கள் உண்டு. பல இந்து சமயம் சார்ந்தவை. தமிழில் வள்ளுவரின் முப்பாலில் பொருட்பால் அதாவது அர்த்த சாத்திரம் உண்டு. வடமொழியில் சமண் சமயம் சார்ந்த ஹேமச்சந்திரர் (12-ஆம் நூற்றாண்டு) 'அர்கந்நீதி' என்னும் அர்த்தசாத்திரம் எழுதியுள்ளார். அது சமண் சமயக் கொள்கைகளைக் கொண்டிருக்கலாம்; இடைக்காலத்தது, கவுடல்யரின் அர்த்தசாத்திரத்தோடும் சுக்கிரநீதியோடும் திருக்குறளின் பொருட்பால்

ஒப்பிடப்பட்டுள்ளது. ஹேமச்சந்திரரின் அர்கந்நீதியுடன் திருக்குறளின் பொருட்பாலை முதன் முதலாக ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சியை இக்கட்டுரை மேற்கொள்கிறது.

12-ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய நாட்டை ஆண்ட குமாரபாலன் என்னும் அரசனுக்குப் பாடநூலாக 'அர்கந்நீதி' அவன் ஆதரவில் வாழ்ந்த ஹேமச்சந்திரர் என்னும் சமணப் பெரியாரால் இது எழுதப்பட்டுள்ளது.

அர்கந்நீதியிலும் திருக்குறளிலும் காணப்பெறும், அரசனைப்பற்றிய கருத்துக்களை மட்டும் ஒப்பிட்டுத் திருக்குறளின் சிறப்பினை உணர்த்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இரண்டு நூல்களும் அரசநீதியை உணர்த்தும்போது அரசனின் பண்புகள், கடமைகள் ஆகியவற்றை விரிவாக விளக்குகின்றன. அரசன்நாட்டின் தலைவன், அச்சாணி போன்றவன். ஒருநாட்டின் அரசியலை அமைப்பவை நான்கு. அவை அரசன், ஆட்சிமுறை, போர், தூது என்பன. அரசன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருத்தல் வேண்டும். அரசன் உடலமைப்பில் 32 இலட்சணங்கள் கொண்டவனாக விளங்க வேண்டும். அவன் நொண்டியாகவோ, குருடனாகவோ இருத்தல் கூடாது என்கிறார் ஹேமச்சந்திரர்.

வள்ளுவரோ தம்குறளில் ஓரிடத்திலேனும் அரசனின் உடலமைப்புப் பற்றியோ மரபுவழி, குலம் குறித்தோ கூறவில்லை.

அரசன் பண்புகள் - அரசனுக்கு இயற்கையிலேயே தலைமைதாங்கும் ஆற்றல், நீதி வழங்கும் நேர்மை, துணிவு, பெருமித மனப்பாங்கு, குடிமக்களிடம் அன்பு பாராட்டல், பெரியோர் சொற்கோடல், கடுஞ்சொல் தவிர்த்தல், வழிநடத்துதலில் மகிழ்ச்சி போன்ற பண்புகளை ஹேமச்சந்திரர் வற்புறுத்துகின்றார்.

வள்ளுவரும் அஞ்சாமை, அறிவு, ஊக்கம், தூங்காமை, துணிவுடைமை, செவிகைப்பச் சொற்பொறுத்தல், அளி, எளிமை, கடுஞ்சொல் இன்மை, பெரியாரைத் துணைக்கோடல், மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை முதலான பண்புகளுடன் அரசன் விளங்க வேண்டும் என்பார்.

கல்வியறிவுடையவனாக அரசன் விளங்க வேண்டும் என்று இரண்டு நூல்களும் கூறுகின்றன. ஹேமச்சந்திரர் அரசன் ஆட்சிமுறை செலுத்துதல், மக்கள் நலன்பேணல், போர்நெறி ஆகியவற்றில் சிறந்து கற்று விளங்கவேண்டும் என்கிறார். வள்ளுவரோ கல்வி என்று பொதுவாகக் கூறினார்.

அரசன் இயல்புகள் - பொதுநலம் பேணல், நேர்மை, மகிழ்வு ஆகியவை தாம் ஒரு நாட்டிற்கு நல்லாட்சி வழங்க முடியுமேயன்றிப் பயமுறுத்தல், கொடுமைப்படுத்துதல் ஆகியவை ஒருபோதும் அவ்வரசனைத் தலைவனாக்காது என்பதால் கடுமையாக உழைத்தல், விடாமுயற்சி, விரிந்த மனப்பான்மை, சமயப்பொறுமை, நேர்மை, தன்கொள்கையில் தளராமை போன்ற இயல்புகள் அரசன் கொண்டிருக்கவேண்டும் என்பார் ஹேமச்சந்திரர்.

வள்ளுவரும் அரசனின் இயல்புகளை விரிவாகக் காட்டுகிறார். ஆயின் சமயப் பொறுமை பற்றி எங்கும் குறிப்பிடவில்லை.

பெண்வழிச்சேறல், சூதாடுதல், மது அருந்துதல், வேட்டையாடுதல், கொடுஞ்சொல் சொலல் ஆகியவற்றை நீக்குதலோடு வெற்றி ஏற்படும் போது செருக்கு கொள்ளலும் இடுக்கண் நேர்கையில் உளவலிமை அழிதலும் கூடாது என்கிறது அர்கந்நீதி. யாருக்கும் தலைவணங்காத அரசன் கடவுள், குரு, அந்தணர், குடும்பத்தில் மூத்தோர், துறவி ஆகியோரை வணங்கலாம் எனவும் உணவு, உடை, இருக்கை, படுக்கைபோன்றவற்றை அரசன் பிறருடன் பகிர்ந்து கொள்ளல் கூடாது எனவும் கூறுகிறார் ஹேமச்சந்திரர்.

வள்ளுவர் அரசன் நீக்க வேண்டியவற்றைக் குறளில் வகுத்திருந்தாலும் வேட்டையாடுதல், தலைவணங்கல், பகிர்ந்து கொள்ளல் பற்றிக் கூறவில்லை.

கடமைகள் - ஹேமச்சந்திரர் அரசனுக்குரிய கடமைகளாக தீயவரைக் களைதல், நல்லோரைப் போற்றுதல், பொருளீட்டல், தற்சார்பற்றஆட்சிநடத்தல், பகைவரிடமிருந்து நாட்டைக் காத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார்.

மக்களுக்கு உணவு, உடை, உறையுள், நீர் வழங்குதல் அரசனின் கடமை என்கிறது அர்கந்நீதி.

சமண நீதிநூல் தண்டனைநெறியை உரைக்கும்போது எளிமையான தண்டனை முறைகளை மேற்கொள்ளவேண்டும் என்கிறது. வள்ளுவரும் செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்தசெய்யாமை வழித்தண்டனை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஹேமச்சந்திரர் பாடநூல் எழுதினார். அரசனுக்கு வேண்டியவற்றை விரித்துக்கூறினார். வள்ளுவர் அரசியலுக்கான பொதுக் கருத்துக்களை மட்டும் பொதுமைப்படுத்திக் கூறினார்.

கோவிந்தசாமி, என். பயன்பாட்டு முறையில் வல்லொற்றுச் சந்தி கற்பித்தல்

வல்லொற்று மிகுதல் தொடர்பான ஒரு பயன்பாட்டு ஆய்வை 1990-ஆம் ஆண்டில் நிகழ்த்தினேன். ஆய்வு முடிவின் வழி ஒரு புதிய கற்பித்தல் முறையை உருவாக்கி ஆசிரிய, மாணவர்களுக்குக் கற்பித்துக்கொண்டிருக்கிறேன். எனது அனுபவத்தை ஆய்வரங்கில் பகிர்ந்துகொள்வது கட்டுரையின்நோக்கம்.

வல்லொற்று மிகுதல் ஆய்வில் 28 எழுத்தாளர்களின் 28 உரைநடைப்பகுதிகள் மாதிரிகளாகக் கொள்ளப்பட்டன. தற்காலத் தமிழில் வல்லொற்றுகளின் புழக்கத்தை ஆய்வது ஆய்வின் நோக்கம். 28 பகுதிகளில் இடம்பெற்றிருந்த வலி மிகுதல் அடையாளம் காணப்பட்டு 20 வகைகளாக வகைப்படுத்தப்பட்டன.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், வல்லொற்றுச் சந்தியை ஒரு புதிய கற்பித்தல் முறையை 1990-ஆம் ஆண்டிலிருந்து கற்பித்துக்கொண்டிருக்கிறேன். ஆசிரியப் பயிற்சிபெறும் பயிற்சி ஆசிரியர்கள் ஒற்றுப்பிழை இல்லாமல் எழுதுவதற்காக இது கற்பிக்கப்படுகிறது. சொல்வது எழுதுதல் பாடத்தோடு இம்முறையை இணைத்து 15மணி நேரப்பாடமாக இப்புதிய முறை கற்பிக்கப்படுகிறது. வாரத்திற்கு ஒரு மணிநேரம் வீதம் 15 வாரங்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. ஆய்வில் வகைப்படுத்தப்பட்ட பத்து விதிகளே, முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்கப்படுகின்றன. அவையாவன ,

1. இரு பெயர்த் தொகைகளில் வலி மிகுதல்.
2. அகர, இகர ஈற்று வினையெச்சங்களிலும். ஆய், ஆக, போய் ஆகிய வினை அடைச்சொற்களிலும் வலி மிகுதல்.
3. இரண்டாம் வேற்றுமைக்குப்பின் வலிமிகுதல்.
4. வன்தொடர்க் குற்றயலுகரத்தின் பின் வலி மிகுதல்.
5. நான்காம் வேற்றுமைக்குப் பின் வலி மிகுதல்.
6. சுட்டுச் சொற்களின் பின்வலி மிகுதல்.
7. தனி நிலை இடைச் சொற்களிலும், ஒட்டு நிலை இடைச் சொற்களிலும் வலி மிகுதல் (இனி, தனி, மற்ற, தவிர, போல, விட, கூட, மிக, பற்றி என போன்றவை)

9. பெயர்த் தொகை வடிவில்லாமல் வரும் ய், ர், ழ் ஆகிய எழுத்துகளுக்குப் பின் வலி மிகுதல்.

10. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயர் எச்சத்திற்கு பின் வலி மிகுதல்.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் சில விதிகள் அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கற்பிக்கப்படுகின்றன. சில விதிகள் அதிக அழுத்தம் இல்லாமல் கற்பிக்கப்படுகின்றன.

அதோடு சில முக்கியமான வலி மிகாத விதிகளும், இப்பாடத்தில் கற்பிக்கப்படுகின்றன. மாணவர் செய்த பிழைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு இவை கற்பிக்கப்படுகின்றன.

அவையாவன ,

1. மென்தொடரின் பின்

2. பெயர் எச்சம், பெயர் அடைகளின் பின்

3. படி என்னும் பின் ஒட்டின் பின்

4. எழுவாய்த் தொடரில்

5. இரண்டாம் வேற்றுமைத் தொகையில்

6. நான்காம் வேற்றுமைத் தொகையில்.

இந்த ஆய்வு மூலமாகத் தற்காலத் தமிழ் உரைநடையில் புழங்கும் வலி மிகுதல் பற்றிய ஓர் சிறு அகராதித் தொகுப்பு முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தக் கட்டுரை 1990-ஆம் ஆண்டில் நான் மேற்கொண்ட ‘வலி மிகுதல் புழக்கம் ஓர் ஆய்வு’ என்ற ஆய்வின்முடிவுகளையும் முடிவுகளின்வழி உருவான கற்பித்தல் முறையையும் விளக்கமாகக் கூறிட முயலும். அதோடு பயன்பாட்டு ரீதியில் கணினி வழியில் நான் தொகுத்துக் கொண்டிருக்கும் வலி மிகுதல் அகராதியையும் அதன் பயன்பாட்டையும் விளக்கிடும்.

கோவிந்தசாமி, முனைவர் பெ. தமிழில் தலித் நாடகங்கள்

நவீனத் தமிழ் நாடகங்கள் குறிப்பாகத் தலித் நாடகங்கள் தலித் மக்களின்விழிப்புணர்வுக்கு ஆற்றும் பங்குபணிகளைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுவதே இவ்வாய்வின் நோக்கம்.

முதற்கண் எல்லா வகையிலுமுள்ள ஒடுக்கு முறைகளை எதிர்த்துக் குரல்கொடுக்கும் இலக்கியங்கள்யாவும் தலித் இலக்கியங்களே என்பதை மராட்டிய இலக்கியச் சான்றுகளோடு கட்டுரை நிறுவுகிறது.

தலித் மக்களைப்பற்றியும் அவர்களது வாழ்வியல் சிக்கல்களைப் பற்றியும் தலித் எழுத்தாளர்கள் எழுதியவற்றையும் சாதி, மத, அரசியல் ஆகியனவற்றிற்கு அப்பால் நின்று தலித் மக்கள் மீது உண்மையான பரிவும் ஈடுபாடும்கொண்டு அவர்களை நேசிக்கக் கூடிய எழுத்தாளர்கள் எழுதியவற்றையும் ஒப்பீட்டு நோக்கில் ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமைக்கட்டுகளை அறுத்தெறிந்து எழுவார்களாயின் அது தங்களின் ஆதிக்க வாழ்வுக்கு ஆபத்தாகும் என்று மேல் சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களை அடிமைகளாகவே வைத்து ஆதாயம் தேட முயல்வதைத் தலித் நாடகங்கள் கூர்மையாகவே கூறிச் செல்கின்றன.

நாள்தோறும் தலித் சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும் சரியான சமூக அறிவியல் பார்வைில் தலித் நாடகங்கள் காட்டி நிற்கின்றனவா என்பதும் இவ்வாய்வில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

சமுதாய, அரசியல், சமய, பொருளாதார நிலைகளில் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டிருக்கும் தலித்இன மக்களின் பிரச்சனைகளைப் பேசும் இந்நாடகங்கள் தமிழ் நாடக வளர்ச்சிக்கு எந்த அளவுக்குத் துணை நிற்கின்றன என்பதும் இறுதியில் ஆராயப்படுகின்றது.

கோவிந்தன், க. இந்திய தேசிய விடுதலைக்கு முன்வந்த தமிழ் பேசும் படங்களில் காணப்படும் சாதி பேதச் சிக்கல்கள்

இந்திய தேசிய விடுதலைப்போராட்டம் முனைப்பாகநடந்த வேளையில் தமிழில் பேசும்படக் கலை பிறந்தது. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய மக்களை ஒருங்கு திரட்டிய தேசியத் தலைவர்கள், மக்களிடம் நிலவி வந்த ஆண் - பெண் பால் பேதம், சாதி பேதம், மொழி இனப்பண்பாட்டுப் பேதங்கள் - மத பேதம் - பொருளாதார பேதம், சிந்தனை பேதம் முதலான அகமுரண்பாடுகளை நீக்க அல்லது குறைக்க முற்பட்டனர். அவை அவர்களின் பணிக்கு அவசியமாகவும் இருந்தன. மேலும் அக்காலகட்டத் தமிழ்ப் படங்கள் பெரும்பாலும் இதிகாசம், புராணம்,

இராசா இராணி சரித்திரம் முதலானவற்றோடு சில சமூகக் கதைகளைக் கூறினாலும் சமகால நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கத் தவறவில்லை. இந்திய மக்களிடம் நிலவிய மேற்சொன்ன அகமுரண்பாடுகளைநீக்கத் தேசியத் தலைவர்கள் பாடுபட்டது போலவே அக்காலத் தமிழ் பேசும்படங்களும் அவற்றை நீக்க முயன்றன.

1. இந்திய மக்களுக்குள்ளிருந்த அக முரண்பாடுகளில் சாதிபேதம் மிக முக்கியமானதாகும். இதனால் அவர்கள்இரத்தம் சிந்தி அவர்களின் புறமுரண்பாடான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போராட்டத்தில் பின்னடைவு அடைய நேரிட்டதுமுண்டு. தாழ்த்தப்பட்டோர் தம் சொந்த நாட்டு மக்களாலேயே அடிமைகளிலும் கீழாக நடத்தப்பட்டனர். இழப்பதற்கு எதுவுமிலா அம்மக்களின் ஒருங்கிணைந்த சக்தி தேசிய விடுதலைப்போராட்டத்திற்கு மிகவும் தேவைப்பட்டது. அதற்கிசைவாக இந்திய விடுதலைக்கு முன்வந்த தமிழ் பேசும்படங்கள் சாதி பேதக் கொடுமைகளுக்கு எதிரான கருத்துக்களை ஆங்காங்கே சித்தரித்தன.

2. இப்படங்கள் ஒரே சாதிக்குள் நடக்கும் அக முரண்பாடுகளையும் வெவ்வேறு சாதிகளிடையே நடக்கும் புற முரண்பாடுகளையும் விளக்கியுள்ளன. அவையன்றி அவர்கள் ஒற்றுமையுடன்வாழ்ந்ததையும் காட்டத் தவறவில்லை. சாதிக் கட்டுப்பாடு, உயர்ந்த சாதியாளரைக் காட்டிலும் தாழ்த்தப்பட்டோரை எல்லா நிலைகளிலும் ஒடுக்கியதை அவை உருக்கத்துடன் உணர்த்தின.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலய நுழைவு உரிமை, குடிநீர் உரிமை, சமபந்தி உரிமை, பிற சாதியில் பெண் எடுக்கும் மன உரிமை, தொடுகிறஉரிமை, தன்மானத்தோடு வாழும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, சமூக வாய்ப்புகளைப் பெறும் உரிமைகள், பொருளாதார வளம் பெறும் உரிமை முதலான உரிமைகளின்றி அவதிப்படுவதையும் அவர்கள் அவற்றைப் பெறுவதற்குப் போராடுவதையும் அதற்கு உயர்ந்த சாதி மக்களும் கூட உதவுவதையும் அப்படங்கள் காட்டியுள்ளன. உயர்ந்த சாதியார் இத்தகைய படங்களை இயக்கித் தயாரித்ததுடன் அவற்றில் நடித்துமிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

கோவிந்தன், கே.ஆர். பொறியியற் கல்வி - தமிழ்வழி பரப்பல் - சாத்தியக் கூறுகள்

ஒரு நாட்டை எல்லா வகையிலும்மேன்மை பொருந்தியதாகக் கொள்ளவேண்டும் எனில் அந்நாட்டின் தொழில் வளமும், பொருளாதாரச் செழிப்புமே அளவு கோல்களாகப் பயன்படும். இதற்கு அந்நாட்டில் காணப்படும் அறிவியல் அறிவேஆதாரம் ஆகும்.

தமிழ்நாடு ...
186012
சென்னை-600 008

இவ்வறிவியலில் முக்கியமாகப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை ஆகிய துறைகள்அடையும் முன்னேற்றம்தான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

பொறியியலை, அனைத்துச்சாராரும் ஆக்கப் பணிக்கேற்றவாறு நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டுமெனில், அவரவர் தாய்மொழியில் கற்பிப்பதே சாலச் சிறந்தது ஆகும்.

தமிழ் மொழியை மேன்மைப் படுத்தப் பொறியியலைத் தமிழ்வழி கற்பித்தால்தான் அது மொழி வளர்ச்சிக்கும், மொழி பரவலுக்கும் ஊன்று கோலாக இருக்கும் என்ற விவாதத்தை இக்கட்டுரை முன்வைக்கவில்லை. எந்தக் கருத்தினையும் கவனத்துடன் கேட்டு அறிந்து மனத்தில் ஆழமாகப் பதியவைக்கத் தாய்மொழி வழி கற்பித்தலே மிகச் சிறநதது என்பதை அனுபவரீதியாக இக்கட்டுரை தெளிவாக்குகிறது.

இக்கட்டுரை பொறியியற் கல்லூரி மாணவர்கள் தமிழில் கற்பதையே பெரிதும் விரும்புகிறார்கள் என்பதையும் அதனால் முழுப்பயனையும் பெறுகிறார்கள் என்பதனையும்ஆதாரப் பூர்வமாக விளக்குகிறது.

மாணவர்களின்புரிந்துகொள்ளும் திறனும் சிந்திக்கும்திறனும் தாய்மொழி வழி கற்பித்தலால் மட்டுமே வளரும் என்பதனை இக்கட்டுரை நிரூபிக்கிறது. பொறியியல் கல்வியைத் தமிழ்மொழி வழி கற்பித்தலுக்கு, தனிக் கல்லூரியோ, பல்கலைக் கழகமோ தேவையில்லை. மேலும் அதனை வரவேற்கும் மாணவர், ஆசிரியர் சமுதாயம் முழுமையான அளவில் இருக்குமா என்பதும் சந்தேகமே. எனவே பெருந் தொண்டாற்றிவரும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் உள்ள இதரப் பல்கலைக்கழகங்கள், பயிலகங்கள்ஆகியவற்றுடன் கூட்டு முயற்சியாகத் தமிழ்வழி பொறியியல் கற்பித்தலில் பெரும் பணியாற்ற முடியும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழில் அறிவியல், பொறியியல் நூல்கள், கலைச் சொல் அகராதிகள், ஆய்வுக்கட்டுரைகள், கலைக்களஞ்சியம், அறிவியல் தமிழ்ப் பத்திரிகைகள், அனுபவமும் தகுதியும் வாய்ந்த தமிழ் ஆர்வம் உள்ள பொறியியல் ஆசிரியர்களின் பணி ஆகியவற்றினை ஒருசேரப் பயன்படுத்தும் வழிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. செய்தித் தொடர்புச் சாதனங்கள், அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள், அறிவியல் போட்டிகள், அறிவியல் இரதங்கள், தமிழ் வழி மாதிரி வடிவங்கள், ஒலி-ஒளி நாடாக்கள் மற்றும் கணிப்பான் போன்ற

நவீன அமைப்புகள் போன்றவை தமிழ்வழி பொறியியல் கற்பிப்பதற்கு எங்ஙனம் உதவுகின்றன என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

முத்தமிழ் என்று கூறப்பட்டுவந்த தமிழ் மொழி கடந்த சில காலமாக, தமிழ்ப் பல்கலைக்கழகப்பணியினால் நான்காம் தமிழான அறிவியல் தமிழாகவும் எங்ஙனம் —சிறப்புற வளர்ந்துவருகிறது என்பதும் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

மொழித்தூய்மை ஒன்றினையேவரன்முறையாகக் கொண்டால் கலைச்சொல் ஆக்கத்தில் பிரச்சினை உண்டாகலாம். எனவே மொழித்தூய்மை, இலக்கண அமைப்பு போன்றவற்றைக் கலைச்சொல்லாக்கத்தில் சிறிது சிறிதாகத்தான்வழக்கில் கொண்டுவரமுடியும். மேலும் தொழில் நுட்பவியலைத் தமிழில் கற்பிப்பதில் ஆசிரியருக்கும் பயிற்சி தேவை என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிறைவாக அனைத்துச் சாராரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமிழ்வழி பொறியியல் கல்வி போதித்தலின் நிறை குறைகள், பிரச்சினைகள் , தீர்வுகள், இதுகாறும் உள்ள வாய்ப்பு வசதிகள், இனி மேற்கொள்ள வேண்டியபணிகள் என்பனவும் ஆராயப்பட்டுள்ளன.

சக்திவேல், முனைவர் சு. தமிழ் நாட்டுப்புறவியலும் ஆய்வுக் கோட்பாடுகளும்

மனித இனம், மொழி பேசத் தொடங்கிய அன்றே நாட்டுப்புற இலக்கியமும் தோன்றிவிட்டது எனக் கூறலாம். மண்ணின் மைந்தர் தம் மனக் கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர் பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்ற நாட்டுப்புற மக்களின் வாழ்வையும் வாழ்வுக் கூறுகளையும் படம் பிடித்துக் காட்டும் இயல் நாட்டுப்புறவியல். நாட்டுப்புறமக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியல். நாட்டுப்புற இயலை நாட்டுப்புற மக்களின்மரபுவழிப்பட்ட படைப்புக்கள் (Traditional Creations) என்றும் பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (Cultural survival) என்றும் கூறுவர். நாட்டுப்புற வழக்குகளை அறிவியல் அடிப்படையில் ஆராய்வது நாட்டுப்புறவியல்.

தமிழகத்தில் நாட்டுபுறவியல் வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாகும். தமிழகத்தில் நாட்டுப்புறவியல் ஐம்பதுகளில் முகிழ்த்து அறுபதுகளில் அரும்பி எழுபதுகளில் போதாகி எண்பதுகளில் மலர்ந்து

இன்று மணம் பரப்பி வருகிறது. கடந்த 15 ஆண்டுகளாகத் தான் நாட்டுப்புறவியல் ஆய்வு வீறு கொண்டுள்ளது. இவ்ஆய்வுகளில் மதிப்பு ஏற்பட்டதுடன்பல்கலைக்கழகங்களிலும் பாடப் பொருளாய், ஆய்வுப் பொருளாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாட்டுப்புறவியல் புதியபரிமாணங்களைப் பெற்றுள்ளதோடு அதன்களங்களும் விரிந்துள்ளன. பல்துறை ஆய்வும் (Inter disciplinary study) கோட்பாட்டு ஆய்வும் (Theory oriented) பெருகலாயின.

அமெரிக்க நாட்டுப்புறவியல் பேரறிஞர் ரிச்சர்ட் டார்சன் (Richard M. Dorson) பன்னிரண்டு கோட்பாடுகளைப் பற்றித் தனது நூலில் (Curent theories of folklore) விளக்கியுள்ளார். அவற்றுள் மீட்டுருவாக்கக் கோட்பாடு, வாய்மொழிக் கோட்பாடு முதலியவை சமூகக்கதைப் பாடலுடனும் அமைப்பியல் கோட்பாடு தமிழ் விடுகதையுடனும் அரை உலகக் கோட்பாடு தமிழகத்திற்கு வந்து குடியேறிய ஒரு இனத்தாரின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலியவற்றுடனும் பொருத்தி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

தமிழக நாட்டுப்புறவியலின்பல்வேறு கூறுகள்அண்மைக் காலமாகப் பல்துறை அணுகுமுறையிலும் ஆய்வுக் கோட்பாடுகளைப் பின்பற்றியும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சண்முகசுந்தரம், டாக்டர் எஸ். கால்நடை மருத்துவ அறிவியலில் தமிழும் கலைச்சொல்லாக்கமும்

கால்நடை மருத்துவ அறிவியலில் தமிழின் நிலையையும் கலைச் சொல்லாக்கம் செய்யப்பட்ட முறைகளையும், தமிழின் பயன்பாட்டிற்கு இனிக் கால்நடை மருத்துவ அறிவியலில் கலைச்சொல்லாக்கம் செய்யக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளையும் கலைச்சொல்லாக்க வளர்ச்சிக்கு இருக்கிற இடர்ப்பாடுகளையும் ஆய்வதே இக்கட்டுரையின்நோக்கம் ஆகும்.

இதுவரை வந்துள்ள கால்நடை மருத்துவ அறிவியல் நூல்களிலும் இதழ்களிலும் மேற்கொள்ளப்பட்ட காலைச்சொல்லாக் உத்திகள்,

1. மொழி பெயர்ப்பு முறைகள் - நேரடி மொழிபெயர்ப்பு இடத்துக்கேற்ற மொழிபெயர்ப்பு, தழுவல் மொழிபெயர்ப்பு, புதிய சொல்புனைதல்.
2. நாட்டுப்புற வழக்குச் சொற்கள்
3. இலக்கியச் சொற்கள்

4. எளிய சொற்கள்

5. ஒலிபெயர்ப்பு

6. அப்படியே எடுத்தாளப்பட்ட குறியீடுகள் மற்றும் சூத்திரங்கள் எனும் பல்வேறு தலைப்புகளில் ஆராயப்படவுள்ளன.

மேலும் கால்நடை மருத்துவக் கலைச்சொல்லாக்கத்தில் எதிர் கொள்ளப்படும்,

1. ஆங்கில மொழியில் உள்ள சில சொற்களின் ஒலிப்பு முறையைத் தமிழில் அவ்வாறே குறிக்கத் தகுந்த எழுத்துக்கள் இல்லாமை.

2. தமிழில் இல்லாத சில ஒலிகள் ஆங்கிலத்தில் உள்ளமை எனும் சிக்கல்களுக்கு மொழியியலாரும் இலக்கணவியலாரும் வழிகாட்ட வேண்டிய நிலை குறித்தும் ஆராயப்படும்.

கால்நடை மருத்துவ அறிவியலில் தமிழும், கலைச் சொல்லாக்கமும் மேம்பட மேற்கொள்ளப்படவேண்டிய பின்வரும் வழிமுறைகளும் இவ்வாய்வில் பரிந்துரைக்கப்படவுள்ளன.

1. சுவடிகள், வாகடங்கள் ஆகியவற்றில் உள்ள அறிவியல் செய்திகளையும் கலைச் சொற்களையும், தொகுக்கத் தொடர்புடைய அறிஞர்கள் ஒன்றுகூடி முயற்சிக்க வேண்டும்.

2. இதுவரை வந்துள்ள நூல்கள், இதழ்கள் ஆகியவற்றில் உள்ள கலைச்சொற்கள் தொகுக்கப்பட வேண்டும்.

3. கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுக் கால்நடை மருத்துவ அறிவியல் தொடர்பான வட்டார வழக்குச் சொற்கள் தொகுக்கப்பட வேண்டும்.

4. கால்நடை மருத்துவ அறிவியலின் பல்வேறு துறைகளிலும் பாட நூல்கள் எழுதப்பட வேண்டும்.

5. பொதுவான கலைச்சொற்கள் ஒவ்வொரு துறையிலும் ஒரே விதமாக உருவாக்கப்பட வேண்டும்.

6. தொகுத்த கலைச்சொற்களைத் தரப்படுத்திச் செழுமை செய்திட வேண்டும்.

சண்முகசுந்தரம், முனைவர் சு. சுடலைமாடன் வழிபாடு - படிநிலைக் கட்டமைப்பு ஆய்வு

சமயம் நிறுவனச் சமயம், நாட்டுப்புறச் சமயம் என இருவகைப்படும். இரண்டும் வெவ்வேறானவை. இரண்டுக்கும் உறவுண்டு.

சுடலைமாடன் தமிழ்நாட்டின் தென் பகுதியில் உள்ள நெல்லை, குமரி மாவட்டத்துச் சிறுதெய்வம். மாடனுக்கும் சிவனுக்கும் ஒற்றுமையும் உறவும் உண்டு. தொழில் - அழித்தல், ஆயுதம் - சூலம், பிரசாதம் - திருநீறு, வாழிடம் - சுடலை மற்றும் மரத்தடி, உருவம் - செவ்வகக் கல்லும் லிங்கமும். சுடலைமாடன் கதையில் சிவபுராணக் கதைகள் இணைக்கப்படல் - மாடன் சிவனின் அம்சம் அல்லது மகன். சுடலை மாடன் கோவில் திருநீற்றுக் கொப்பரை சிவன் அணியும் கபால வடிவம் எனப் பல ஒற்றுமைகள் உண்டு.

மாடன் பிணந் தின்றதால் கைலாசத்திலிருந்து வெளியேற்றப்படல் - புலையன் மகனைப் பலியுண்ணல். இது காட்டுமிராண்டிக்காலச் சுவடு.

முன்னோர் வழிபாடே மாடன்வழிபாடு. மாடன் வழிபாடு மனித வழிபாட்டின்குறியீடாகிக்குறி அல்லது லிங்க வழி பாடாயிற்று. பன்றி, ஆடு, கோழி, முட்டை ஆகியவற்றைப் பலியுண்ணும் மாடன் சைவமாகிய நிலையில் சிவனாதல். தக்கன் யாகத்தின் போது சிவனைத் தென்னாட்டுத் தெய்வம் என்று இழித்துப் பழிக்கிறான். மாடனின்பரிணாமமே சிவன். தென்னாட்டில் மீனாட்சி, பகவதி, காந்திமதி ஆகிய சக்திக்கடவுளின் காவல் தெய்வமாகவும் முருகனின் கொடிமரத் தெய்வமாகவும் இருக்கிறான்.

தமிழ்நாட்டின் தென்பகுதியிலுள்ள தலித் மற்றும் பிற்பட்ட மக்களின் தெய்வமான மாடனே ஆரம்பகாலத் திராவிடத் தெய்வம் என்பார் கே.கே. பிள்ளை. எனவே, சிவனின் முந்தைய ஆதிவடிவமே சுடலைமாடன் என்ற முடிவுக்கு வரலாம்.

DR. S. SHANMUGASUNDARAM, SUDALAI MADAN CULT

In religion, two division, systematic or Institutionalised religion and folk or popular religion. Even though these are different, they had some relationship.

Sudalaimadan is a folk deity. It is worshiped in the south part of

Tamilnadu, particularly in Tirunelveli and Kanyakumari districts. There are some similarities and relationship between Sudalaimadan and Siva. Profession - Destruction - Weapon -Sulam . Prasatham - ash, temples - under the trees and cremation ground. Cone like lingam but in rectangular shape.

The modern story, Sivapurana sotries are clled interweaved, Madan is the son of 'avathara' of Siva. The ash vessel of Madan is like Skull (Kabalam).

Madan ate human flesh in Kailasa. So he was sent out from there. Then he drank the blood of Pulaian's daughter. These are the cannibalistic nature of the ancient Madan cult.

Ancestor worship is the base of Sudalaimadan cult. Then it became the linga cult which is semiatic form phallic symbol. Pig, goat, cock and egg are given to Madan as sacrifices. Then it became pure vegetarian as Siva cult. Thakkan scolded Siva as a South Indian God Madan also belongs to south end of Tamil. Nadu. He is considered to be gatekeeper of Meenakshi, Bagavathi, Kandhimathi and Lord Murugan those are related to Siva.

Thus we can come to the conclusion that Sudalaimadan belong to non-brahmin or dravidian deity. At the same time he is considered to be proto Siva cult.

சண்முகம், எஸ். அகம்/புறம் கோட்பாட்டுப் பின்னணியில் மேற்கத்திய கவிதைகள்

அகம்/புறம் என்பது இலக்கியம் மற்றும் வாழ்வியலுக்கான கோட்பாடாகத் தொல்காப்பியத்தில் விளக்கப்படுகிறது. தமிழிலக்கிய வரலாற்றின் ஊடாக உரையாசிரியர்கள் அகம்/புறம் மரபைத் தங்கள் நோக்கில் அணுகிவந்துள்ளார்கள். பிற இலக்கண ஆசிரியர்கள் இந்த மரபைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கோட்பாட்டுரீதியாக மட்டுமின்றிப் படைப்பு என்ற அளவிலும் அகம்/புறம் மரபு தமிழ் இலக்கியத்தில் செயல்பட்டு வந்துள்ளது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலான சங்க இலக்கியங்களில் படைப்புரீதியாகப் பல்வேறு தொனிகளுடன் அது வெளிப்படுகிறது.

அகம்/புறம் மரபு இன்றைய தமிழ்க்கல்வியில் பெரிதும் பயிற்றுவிக்கப்படும் ஒன்று. ஆனால் தற்கால இலக்கியத்தை

அணுகுவதுதென்று வரும்போது இந்த மரபு எடுத்தாளப்படுவதில்லை. மாறாக, இலக்கியத்திறனாய்வில் பொருத்தப்பாடு பற்றிய ஆய்வு இன்றி மேற்கத்திய அளவுகோல்கள்பயன்படுத்தப்பட்டுள்ளன. தங்கள் மரபில் மிக முக்கியமான இலக்கியக் கோட்பாடாகக் கருதப்பட்ட அகம்/புறம் சிந்தனை தற்கால இலக்கியத்தை அணுக ஏன் பயன்படுத்தப்படுவதில்லை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இந்நிலையில் மீண்டும் அகம்/புறம் சிந்தனை மரபைத் தற்கால இலக்கியத் திறனாய்வில் பயன்படுத்தும் சாத்தியப்பாட்டை அமைப்பியல் போன்ற மொழிசார்ந்த சிந்தனைத்துறைகள் ஏற்படுத்தியுள்ளன.

அகம்/புறம் சிந்தனை தோன்றி வளர்ந்த சூழலும் காலகட்டமும் இன்று மாறிவிட்டிருக்கின்றன. அகம்/புறம் சார்ந்து உருவாகவிருக்கும் கோட்பாடு அணுகவுள்ள இலக்கியப்படைப்போ மிகவும் வேறுபட்ட உளவியல்தன்மைகள் கொண்டதொரு காலச்சூழலிலிருந்து வந்ததாகும். எனவே அகம்/புறம் சிந்தனையைத் தக்க முறையில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் இன்று ஆங்காங்கே நடைபெறத் துவங்கியுள்ளன. நாட்டுப்புறவியல் ஆய்வுக்கு அகம்/புறம் கோட்பாட்டைப் பயன்படுத்த முடியுமா என்று ஏ.கே. ராமானுஜன் செய்துள்ள முயற்சியை ஒரு தொடக்கமாகக் கொள்ளலாம்.

அகம்/புறம் சிந்தனை மரபை மேலும் வளர்க்கும் முகமாகத் தமிழ்க் கலாச்சாரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட மேற்கத்திய கலாச்சாரத்தின் தற்காலக் கவிதைகளைச் செய்முறைத் திறனாய்விற்கு உட்படுத்திச் சில முடிவுகளுக்கு வருகிறது இக்கட்டுரை.

சண்முகன், முனைவர் ச. கொடுமுடி முதியோர் அறிசுவடி

தமிழ் எழுத்துகள் ஒலி வடிவின. உயிர் (12), மெய் (18), உயிர்மெய் (216), ஆய்தம் (1) ஆக 247. இவற்றுள் உயிர் (12), மெய் (18), ஆயுதம் (1) தமிழில் மட்டும் புழங்குகிற கிரந்த எழுத்துக்கள் 6.

நாம் முன்வைக்கும் அரிச்சுவடி எளிமையானது. 10 உயிர்மெய் நேரிசையிலும் ஒன்றோ, இரண்டோ பக்கக் குறிசேர்த்தால் உயிர்மெய் உருவாகிவிடுகிறது. ஆக 180 உயிர்மெய் எழுத்துகளுக்கும், 18 மெய் எழுத்துகளுக்கும் ் ா ி ீ ெ ே ள என்ற ஏழு குறியீடுகள் போதும். ஆக உயிர் 10, மெய் 18, ஆய்தம் 1, உயிர்மெய் 180 ஆக 199 எழுத்துகளுக்கு உயிர் 10, உயிர்மெய் 18, ஆய்தம் 1 குறிகள் 7 என 38 வடிவங்கள் போதும்.

இராசராசன் காலத்தில், தமிழ்நாட்டிலேயே தொண்டை மண்டலம், பாண்டி மண்டலம், கொங்குமண்டலம் ஆகிய பகுதிகளில் எழுத்துகள்மிகுந்த வளைவுகளைப் பெற்று வட்ட வடிவாயின. வட்டெழுத்து எனப் பெயரும் பெற்றன. இராசராசன் ஆணையிட்டுத் தமிழகம் முழுவதும் ஒரே எழுத்தை வைத்தான். சேரமண்டலம் மட்டும் வட்டெழுத்தை ஏற்றுக் கொண்டு மலயாளம் ஆகிவிட்டது.

23 ஆண்டுகட்கு முன்னால், கேரள அரசு ஓர் அரசாணையின் மூலம் உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளை உடைத்து அகரமேறிய வடிவோடு ஒரு பக்கம் குறியிட்டு எழுத ஆணை பிறப்பித்தது.

ஜுரம், ஜூலை போன்றவை வடமொழி எழுத்தெனப் பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். வடமொழி வரிவடிவில் இவை இல்லை. ஏழாம் நூற்றாண்டில் வடமொழிக்கான நாகரி எழுத்தை அனுமதிக்க விரும்பாமல், தமிழர் தாமே அமைத்ததுதான் கிரந்தம். இந்தக் கிரந்த எழுத்தை முழுக்கத் தமிழ்நாட்டு எழுத்து என்பர். ஜுரம், ஜூலையில் உள்ளவாறு எழுதிக்கொள்ளலாம். ு ூ இரண்டு குறிகளையும் செங்குத்தாகப்பயன்படுத்துகிறது கேரள அரசு.

இந்த அறிசுவடியில் கீழ்க்கண்ட குறியீடுகள் அமையும்

் , ா, ி, ீ , ு, ூ, ெ, ே, ை.

சதாசிவம், ப. சங்கஇலக்கியச் சொற்கள் - கணிப்பொறி வழி ஆய்வு

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருக்கும் நாம் தகவல் நுட்பத்தினைக் கணிப்பொறி உதவி கொண்டு திறம்பட ஆண்டு கொண்டுள்ளோம். எங்கும் கணிப்பொறி எதிலும் கணிப்பொறி என்ற காலகட்டத்தில் இருந்துவரும் நாம் கணிப்பொறி உதவியுடன்தான் தானியங்கி மொழிபெயர்ப்பு, கல்வி கற்பித்தல், மொழி ஆய்வு, இயற்கை மொழியில் உரையாடல், அகராதி தயாரித்தல் போன்ற ஆய்வுகளை மேற்கொண்டு ஓரளவு வெற்றியும் கண்டு வருகின்றோம்.

அகராதிகள் உருவாக்கும் பணியில் கணிப்பொறியின் பங்கு இன்றியமையாதது எனக் கூறலாம். நூல்அகராதிகள் தயாரிக்க விடுபட்டுப் போகாமல் விரைவாகத் துல்லியமாக அகரவரிசையில் சொற்களை அடுக்கக் கணிப்பொறி மிகவும் பயன்படுகிறது.

சங்க இலக்கிய அகராதி தயாரிக்கும் பொருட்டுக் கணிப்பொறி வழி சங்கப் பாடல்களின் சொல்லடைவு ஒன்று உருவாக்கப்பட்டது.

அந்தச் சொல்லடைவை அடிப்படையாய்க் கொண்டு பல்வேறு சொல்லடைவுகளைப் பெறுவதற்கான நெறிமுறைகள் குறித்தும் சங்கச் சொற்றொகுதியின் மொழி நிலைகள் குறித்தும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. சொற்களின் வருகை (Frequency) அடிப்படையிலான வரிசை முறை
2. சொற்களின் முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்களின் வருகை நிலை
3. தனிப்புலவர் சொற்றொகுதி
4. சொற்களின் சொல்லிணைவு நிலை (Collocation)
5. சொற்களில் எழுத்துக்களின் இணைவு மற்றும் வருகை நிலை
6. சங்கப்பாடல்களின் யாப்பு
7. ஒத்த தொடர்ப் பயன்பாடுகள் (Phrase)

எனும் மேற்குறிப்பிட்ட பல்வேறு நிலைகளில் பெறப்படும் சொல்லடைவுகளின் அடிப்படையில் சங்க மொழியின் பல்வகைத் தன்மைகளும் இக்கட்டுரையில் விளக்கப்பட உள்ளன.

சம்பத், முனைவர் இரா. புதுக்கவிதையை வளர்த்த இலக்கிய இயக்கங்கள்

புதுக்கவிதை இன்றைய இலக்கிய வகைகளுள் ஒன்று. இலக்கணமின்மை, எதனையும் சுருக்கமாவும் தெளிவாகவும் சொல்லும் திறன், கருத்தைமட்டும் நாடும் திறன், நடப்பியல் நிகழ்வுகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளமை ஆகியனவற்றை வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுக்கவிதைகொண்டுள்ளது. இப்புதுக்கவிதை மேலை நாடுகளில் தோற்றம் பெற்ற குறியீட்டியம் (Symbolism), படிமவியம் (Imagism), மீமெய்ம்மையியம் (Surrealism), மார்க்சியம் (Marxism) ஆகிய இலக்கிய இயக்கங்களினால் வடிவம், உள்ளடக்கம் ஆகிய இரு நிலைகளிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. எனவே, தமிழ்ப்புதுக் கவிதை வளர்ச்சிக்கு மேலைநாட்டு இலக்கிய இயக்கங்கள் அளித்த பங்கினை ஆய்வு செய்வது இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

தமிழ்ப்புதுக்கவிதையின் ஒட்டுமொத்தமான வடிவ, உள்ளடக்க வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் மேலைநாட்டு இலக்கிய இயக்கங்கள் எந்த அளவிற்குத் துணை செய்துள்ளன என்பதை வெளிக்கொணர்தல் என்னும் குறிக்கோளை எட்டும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆய்வினை நிகழ்த்துவதன் வாயிலாக மேலைநாட்டு இலக்கிய

இயக்கங்களைப் பற்றித் தமிழ் இலக்கியத் திறனாய்வுக்குப் புதிய செய்திகளைக் கொண்டுவருவதற்கும் தமிழ்ப்புதுக்கவிதையின் வளர்ச்சியில் மேலைநாட்டு இலக்கிய இயக்கங்களின் இடத்தினை மதிப்பிடுவதற்கும் வாய்ப்புகள் உண்டு.

குறிப்பிட்ட சில கவிஞர்களின் கவிதைகள் மட்டுமே இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. குறியீட்டியம், படிமவியம், மீமெய்ம்மையியம், மார்க்சியம் ஆகிய நான்கு இயக்கங்கள் தமிழ்ப்புதுக்கவிதையில் மிகுதியாக இடம்பெற்றிருப்பதால் இவை மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

குறியீட்டியத்தின் பங்கு என்ற பகுதியில் தமிழ்ப்புதுக்கவிதையின் வடிவ அமைப்பிற்குக் குறியீட்டியம் பயன்பட்டு வந்துள்ளமை விளக்கப்படுகிறது. குறியீட்டியத்தின் தாக்கத்தினால் புதுக்கவிதை வடிவத்திற்குக் கிடைத்த சுருக்கம், தெளிவு, செறிவு ஆகிய பண்புகள் சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன.

'படிமவியத்தின் பங்கு' எனும் பகுதியில் தமிழ்ப்புதுக்கவிதையின் வடிவச் செறிவிற்கும், உள்ளடக்க வெளியீட்டிற்கும் படிமவியம் பயன்பட்டிருப்பது எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகிறது. வளர்ச்சி நிலை புதுக்கவிதையின் வடிவம், உள்ளடக்க வெளியீட்டுக் கருவி, குறியீட்டுக்கு உதவுதல் எனும் மூன்று நிலைகளில் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகிறது.

கவிதை புறவுலகப் பொருட்களின் தூண்டுதலினால் நிகழாமல் மனத்தின் இயக்கம் காரணமாக நடைபெறவேண்டும் என்பது கவிதை பற்றிய மீமெய்ம்மையாளரின் கருத்தாகும். இக்கருத்தினால் தமிழ்ப்புதுக்கவிதை உள்ளடக்கத்திலும், வெளிப்பாட்டு நிலையிலும் பெற்ற வளர்ச்சி மீமெய்ம்மையியத்தின் பங்கு எனும் பகுதியில் சுட்டிக்காட்டப்படுகிறது.

'மார்க்சியத்தின் பங்கு' எனும் நான்காவது பகுதியின்கண் மார்க்சியத் தாக்கத்தினால் தமிழ்ப்புதுக்கவிதை உள்ளடக்க நிலையில் பெற்றிருக்கும் வளர்ச்சி எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கப்படுகின்றது. இந்த வளர்ச்சி, உள்ளடக்கத்தில் உலகளாவிய பார்வை, அறிவியல் கண்ணோட்டம் ஆகிய இருநிலைகளில் அமைகிறது.

சம்பத், முனைவர் ஆர்.எஸ். இந்திய நாட்டின் வெளியுறவுக் கொள்கையும் தமிழர் நலமும்

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை ஆட்சி செய்ய ஆரம்பித்த பிறகும் அதற்கு முன்னால் கிழக்கிந்தியக்கம்பெனி ஆட்சி செய்தபோதும் இந்தியாவிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கூலிகளாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, ஹாங்காங், வியட்நாம், கம்போடியா, பிஜி தீவுகள், மொரிஷியஸ், ரியுனியன் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று அங்கே பலநூறு ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்ட போது இந்திய அரசாங்கத்தினடைய வெளிநாட்டுக் கொள்கை எப்படி இருந்தது என்பது பற்றியும் இந்தியச் சுதந்திரத்திற்கும் பின்னால் படிப்பிற்காகவும் உயர் வேலைகளுக்காகவும் இந்தியாவிலிருந்து உலகமுழுவதும் குறிப்பாக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் குடியேறியவர்களுக்குப் பிரச்சினைகள் வந்தபொழுது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை எப்படி இருந்தது என்பதைப் பற்றியும் இந்த கட்டுரை ஆராய்கிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாட்டில் குடியேறியவர்கள் இந்தி மொழியை அடிப்படையாகக் கொண்டவர்கள், திராவிட மொழிகளை அடிப்படையாகக் கொண்டவர்கள் என இருவகைப்படுகின்றனர். இவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும்பொழுது அரசாங்கத்தினுடைய அணுகுமுறை எப்படி இருக்கிறது; குறிப்பாக இந்தியத் தமிழர்கள் பிரச்சினையை எப்படி அணுகினார்கள், இந்தியத் தமிழரல்லாதார் பிரச்சினைகளை எப்படி அணுகினார்கள் என்பன பற்றிய ஒரு ஒப்பீட்டு ஆய்வுக்கட்டுரையாக இது அமையும்.

சாந்தா, முனைவர் அ. தொல்காப்பியரின் தகவலாடல் தத்துவம் - ஒரு பெண்ணியப் பார்வை

தமிழர் நாகரிகத்தின் தனிப்பெரும் சிறப்பாகக் கருதப்படும் அகத்திணையைப் புதியதோர் கண்ணோட்டத்தில் இக்கட்டுரை அணுகுகின்றது.

‘சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅ’ அகன் ஐந்திணை தமிழ்ப் பண்பாட்டில் தனித் தன்மை வாய்ந்தது எனப் போற்றிப் பாராட்டப்படுகிறது. அகஉணர்வு என்பது சாதி, சமய, பொருளாதார, சமூக வேறுபாடுகளைக் கடந்தது; மாந்தர் அனைவர்க்கும் பொதுவானது என்ற கருத்தின் அடிப்படையில் எழுந்த இக்கோட்பாடு

தமிழர் நாகரிகத்திற்குத் தனிச் சிறப்பைத் தேடித்தந்திருக்கிறது. இங்ஙனம் மனிதர் அனைவர்க்கும் பொதுவான உணர்வை இனம் கண்ட தமிழினம் அவ்வுணர்வு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது என்பதை மறந்தது அல்லது மறைத்தது.

அகத்திணைக்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியர் தலைவன், தலைவி நிகழ்த்தக்கூடிய கூற்றுகளை வரையறுக்கும் போதும் தலைவன் தலைவிக்கிடையேயான தகவலாடலை நெறிப்படுத்தும் போதும் ஆணை உயர்வானவன் என்றும் பெண்ணைத் தாழ்வானவள் என்றும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகிறார்.

'பாலது ஆணையால்' ஒத்த கிழவனும் கிழத்தியும் எதிர்ப்பட்டு மேற்கொள்ளும் களவொழுக்கம் பற்றிப் பேசுங்கால் தலைவன் 'மிக்கோனாயினும் கடிவரையின்றே' என்று கூறி எக்காரணத்தை முன்னிட்டும் தலைவி மிக்கோளாய் இருத்தலாகாது என்பதைக் குறிப்பாலுணர்த்தினார். இந்த அடிப்படையில் தலைவனும் தலைவியும் உறவாடும்போதும், உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும் செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்ததன்று' என்பதைத் தலைவி மனங்கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை *(பொருளதிகாரம் 116).*

தற்புகழ் கிளவி கிழவன் முற் கிளத்தல்
எத்திறத்தானும் கிழத்திக் கில்லை *(பொருளதிகாரம் 178).*

எனவும் கூறித் தலைவனின் உயர்வை உறுதிப்படுத்துகிறார் தொல்காப்பியர்.

தலைவன் தலைவிக்கு இடையே நிகழும் உரையாடல் இருவரது சொந்த வாழ்க்கையில் நிகழ்வது. அதற்கு வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிப்பது அவர்களது அந்தரங்கத்தில் தலையிடுவதற்கு ஒப்பானது.

இங்ஙனம் தொல்காப்பியர் ஆணை உயர்வாகக் கருதக் காரணம் என்னவென்று ஆராயுங்கால், அரிஸ்டாட்டில், செயின்ட் தாமஸ் ஆகியோரைப் போன்று இவரும் பெண் என்பவள் முழுமை பெறாத ஆண் என்று கருதியிருக்கிறார் என்பதை உணர முடிகிறது. அதனாலேயே ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியான பேடி என்பதன் பயன்பாடு பற்றிக் கூறும்போது பேடி வந்தான் என்ற ஆட்சியை அனுமதிக்காதவர் பேடி வந்தாள் என்ற பயன்பாட்டை அனுமதிக்கிறார். *(சொல்லதிகாரம் 12)*

ஒரு சமுதாயத்தில் தனிமனிதத் தகவலாடலுக்கான வரையறைகள் நிலைபேறு அடையும்போது அவை சமூக அமைப்பு முறை என்ற பொதுப்பெயரால் வழங்கப்பெறும். நான்கு அடிப்படையான கருத்துப் படிவங்களின் வழி சமூக அமைப்பு முறை புரிந்து கொள்ளப்படுகின்றது. அவை சமுதாயப் பங்கு நிலைகள் (roles), ஒழுகலாறுகள் (norms), அதிகார வரிசை (ranking), அங்கீகாரம் (sanctions) என்பன.

இவற்றுள் அதிகார வரிசையை நிர்ணயம் செய்யும் தொல்காப்பியர் ஆணை உயர்ந்தவனாகவும் பெண்ணைத் தாழ்ந்தவளாகவும் இனம் காட்டுகிறார். அந்த அடிப்படையிலேயே அவளுக்குரிய பங்கு நிலைகளையும் ஒழுகலாறுகளையும் அங்கீகாரங்களையும் அறுதி செய்கிறார்.

இங்ஙனம் அதிகார வரிசையை அக வாழ்க்கையிலேயே அறுதி செய்து விடுவதன் மூலம் பெண்ணடிமை என்பது மிக நுட்பமாகத் தமிழர் நாகரிகத்தில் நுழைக்கப்பட்டுள்ளது. எனவேதான் பிற நாகரிகங்களை விட இங்கு ஆணாதிக்கம் மிக அழமாக வேரூன்றி இருக்கிறது.

சாம்பசிவனார், முனைவர் ச. தொல்காப்பியர் காட்டும் தமிழர் பண்பாடு

தொல்காப்பியர், பண்டைத்தமிழரின் பண்பாடுகள் சிலவற்றைத் தமதுநூலின்கண் எடுத்துரைத்துள்ளார். அவைகுறித்து ஒருசிறிது ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

காலத்தால் மிகவும் தொன்மையான தமிழ் முழுமுதல் நூல் தொல்காப்பியம். தமிழர்தம் பழைமையையும் நாகரிக மேம்பாட்டையும் தெள்ளத்தெளிவாக விளக்குவது.

'பண்பாடு' என்பதற்குப் பல்வேறு விளக்கங்களை அறிஞர் தருவர். 'பண்பு' எனும் சொல்லினடியாகப் பிறந்தது 'பண்பாடு' - 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்'. ஒரு சமுதாயத்தில் வழிவழியாகத் தொடர்ந்து வருவது; குணங்களினின்று வழுவாமல் பிறரின் இயல்பு அறிந்து ஒழுகுவது; சிறந்த உளப்பாங்கின் வெளிப்பாடு; ஒரு சமுதாய வரலாற்றை ஏனையோரும் அறியத் துணைபுரிவது.

அக்காலத் தமிழர்களின் பண்பாட்டைத் தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் இம் மூன்றின் வாயிலாக அறியலாம். அவற்றுட் சில

1. சொல்லைக்கூட, இனிமையாகக்கூறவேண்டும், அதனாற் றான், 'அம், இன்' சாரியைகள் சொல்லோடு இணைக்கப்பட்டன.

2. பிறரை வாழ்த்துவது தமிழர் பண்பு.

3. பிற கூத்தினின்றும் வேறுபடுத்தத் 'தமிழ்க் கூத்து' இருந்தது.

4. சொல் குற்றம் இன்றி இருக்கவேண்டும் என்பதற்காகவே 'கிளவியாக்கம்'

5. அமங்கலத்தையும் மங்கலமாகக்கூறுதல் தமிழர் பண்பு

6. அஃறிணை விலங்கினையும் பெயரிட்டு அழைத்த பண்பு

7. அகத்திணை, புறத்திணை இரண்டும் ஒழுக்க அடிப்படையில் அமைந்தமை

8. நானில அமைப்பும், பெரும்பொழுது சிறுபொழுதுகளும் ஒழுக்க அடிப்படையிலமைந்தமை

9. தலைவன், தலைவி இருவரும் ஒத்தநிலையினர். அகவாழ்வில் பாங்கனுக்குச் சிறப்பிடம் இல்லாதது தமிழர் பண்பைச்சுட்டும்

10. களவொழுக்கம் ஒழுகுவோரைப் பெரியோர் கடிந்து கூறுவதில்லை

11. இல்லறத்தின் முடிபு, காமத்தில் பற்றின்றி வீடுபேற்றுக்கு வழிவகுத்தனர்

12. தலைவன் தவறுசெய்தபோது அதனை நயத்தக்க நாகரிகமாகச்சுட்டுவது தலைவி பண்பு

13. போரிலும் அறநெறியைக் கடைப்பிடித்த பண்பு

14. தமிழ்ப் புலவர், பாப்புனைதற்கெனஉளச் சில பண்பாடுகள். இவைபோன்ற இன்ன பிறவற்றைத் தொல்காப்பியர்தம் நூலகத்துக் கூறியுள்ள நுட்பம் எண்ணத்தக்கது.

சாமி ஐயா, முனைவர் சு. சேனாவரையர் - நச்சினார்க்கினியர் - ஒப்பீடு

தொல்காப்பியச் சொல்லதிகாரம் பல உரைகளைப் பெற்றுள்ளது. 'அறுவர் உரை' என்னும் நிலையில் இது பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சொல்லதிகார உரையாசிரியர்களில், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் உரைகளில் பல இடங்கள் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டுக்களில் வேறுபாடு

காணப்படுகின்றது. அவற்றையெல்லாம் ஒப்பு நோக்கி ஆராய்தல் இன்றியமையாததாகும். வண்ணச் சினைச் சொல் வழக்கில் மாறுபடாது என்பது சேனா வரையர் கருத்து. முதலில் ஒருவண்ணம் வந்து, அடுத்துச் சினைவந்து அதனை அடுத்து முதல்வருமானால் அது வண்ணச் சினைச் சொல் என்னும் பெயர்பெறும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. கிளவியாக்கத்தில் அமைந்துள்ள வேறுபாடுகளை மட்டில் ஆராய்ந்து உண்மை காண்பதே கட்டுரையின் நோக்கமாகும்.

சாரங்கபாணி, முனைவர் இரா. புறநானூறு காட்டும் கொடைக் கோட்பாடு

சங்க இலக்கியங்களுள் புறநானூறு தமிழர்தம் பண்பாடு, நாகரிகம், கொடை, வீரம் முதலியவற்றைப் புலப்படுத்துவதில் தலையாயதாகும். சங்க காலத்தை வீரயுகம் என்பர். அதனைக் கொடையுகம் எனவும் கருதலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த எழுவள்ளல்கள், அரசர்கள் முதலியோரின் கொடை இயல்புகளை நோக்கின் அவர்தம் கொடை நெறிகள், நோக்கங்கள் கொடை குறித்த நம்பிக்கை ஆகியவற்றை உணரலாம்.

பாரி தன் பறம்பு நாட்டிலுள்ள முந்நூறு ஊரையும் பரிசிலர்க்கு நல்கினான். காரி தன் மனைவி தோள் தவிரத் தனக்கு எப்பொருளையும் உரிமையாகக் கொள்ளாமல் எல்லாவற்றையும் ஈந்தவன். இக்கொடைமிகுதி பாராட்டுக்குரியதெனினும் நடைமுறைக்கு ஏலாமை கண்டு கொடையிலும் அளவு வேண்டும் என அறநூல்கள் வலியுறுத்தலாயின (குறள் 480 திரிகடுகம் 21).

பேகன் மயிலுக்குப் போர்வை அளித்ததும், அரிசி வேண்டிய ஔவைக்கு நாஞ்சில் வள்ளுவன் களிறளித்ததும் கொடைமடச் செயலாகும். இதனைத் தேற்றா ஈகை என்பர்.

அதிகனை 'அலத்தற் காலை யாயினும் புரத்தல் வல்லன்' என்பார் ஔவையார். ஈர்ந்தூர்கிழான் தோயன் மாறன் இரப்பவர் உண்ணாமருங்குல் காட்டிக் கொல்லனை வேல் வடித்துக் கொடு என்பான். வாளையும், சீறியாழையும் பணையம் வைத்து விருந்தோம்பினான் மறவன் ஒருவன் (316). விதைக்கு வைத்திருந்த தினையைக் குற்றி விருந்துபுரந்தந்தாள் மடந்தை ஒருத்தி (333). இது வறுமையிற் கொடை.

விளம்பரம் அற்ற கொடைக்கு நள்ளி வன்பரணர்க்கு மான்

தசையுணவு நல்கியதோடு மார்பிலணிந்த முத்து மாலையையும் கைக்கடகத்தையும் அளித்துத் தந்நாடு தன் பெயர் யாது? எனக் கேட்டபோது அடக்கத்துடன் இருந்தமையைக் கூறலாம்.

பெருந்தலைச்சாத்தனாருக்குக் குமணன், தன் தலையைப் பரிசிலாகக் கொடுக்க முன்வந்தது ஈதல் இயையாக்கடை சாதலும் இனிது என்பதைக் காட்டும்.

புகழ்ந்து பாடாதார்க்கும் பரிசில் நல்கல் (200), நல்ல நாள் பார்க்காமலும் புள் நிமித்தம் பார்க்காமலும் கொடுத்தல் (124), கள்ளுண்டு மயங்காத நிலையில் அளித்தல் (123), வெல்லாத போதே பகைவர் அரணை உறுதி பற்றிப் பாணர்க்கு நல்கல் (203) குறிப்பறிந்து கொடுத்தல் (3), மீண்டும் பிறர்பால் இரவாத வண்ணம் மிகுதியாக வழங்கல் (68), முன்னே கொடுத்தோம் என்று பின்னே மறாது நல்கல் (171), ஒருநாள் செல்லினும் இருநாள் செல்லினும் பலநாள் பலரொடு செல்லினும் தலைநாள் போல விருப்புடன் தருதல் (101) முதலியன பிறகொடை நெறிகள் ஆகும்.

மேலுலக வாழ்க்கை விரும்பிச் சிலர் கொடையீந்தனர் (27). மேலுலகம் இல்லெனினும் ஈதல் நன்று எனச் சிலர் கொடை மேற்கொண்டனர். பேகனின் கொடை மறுமை நோக்கவில்லை பிறர் வறுமை நோக்கியது (141). அண்டிரன் இம்மை செய்தது மறுமைக்கு ஆகும் என்று அறவிலை வாணிகம் செய்யவில்லை சான்றோர் சென்ற நெறியெனக் கொடை செய்தான் (134) என்ற குறிப்புகள் கொடை நோக்கம் பற்றிவிளக்குகின்றன.

பகைவரை வெல்லுவதற்குக் குடிபுரந்தருதலும் (35) அறநெறியும் (55) காரணம் எனப் புறநானூறு கூறுவது போலவே கொடையையும் காரணமாகப் புகலும் (27).

சாரதாம்பாள், முனைவர் செ. ஹைகூ கவிதைகளில் உருக்காட்சி

புலவன் கவிதைகளில் தான் சொல்லவரும் கருத்தை மேலும் வலியுறுத்தவும், படிப்பவர் மனத்தில் ஆழ நிற்குமாறு செய்யவும் சில இலக்கிய உத்திகளைப் பயன்படுத்துகின்றான். உவமை, உருவகம், படிமம், சொல்லாட்சி போன்றவற்றை இலக்கிய உத்திகளாகக் குறிப்பிடலாம். இவ் இலக்கிய உத்திகளில் ஒன்று தான் உருக்காட்சி. இவ் உருக்காட்சி ஓர் உத்தியாக இலக்கியக் கொள்கையாகப் புதிய திறனாய்வில் பெரிதும் பேசப்படுகிறது.

புதுக்கவிஞர்கள் தம் புதுக் கவிதைகளில், கவிதைகளைப் படித்த பிறகும் அவற்றின் கருத்துச் செறிவுகள் வாசகனின் மனக்கண்முன் காட்சிகளாக விரிந்து பரந்து நிற்பதையே பெரிதும் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

புதுக்கவிதைகளில் ஒரு வகையாகக் கருதப்படும் ஹைகூ கவிதைகள் இயற்கையழகின் அடிப்படையில் எழுந்துள்ளன. இயற்கையின் சிறு சிறு அசைவுகளையும் அதில் வெளிப்படும் கருத்துக்களையும் காட்சியாக மனத்தில் பதியச் செய்வது ஹைகூ கவிதைகளின் அடிப்படைப் பண்பாக உள்ளது.

எனவே ஐம்புல உணர்வுகளின் வழி எழுப்பப்படும் மனக்காட்சியாகிய உருக்காட்சி ஹைகூ கவிதைகளில் அமைந்துள்ள தன்மையைக் காண்பது மிகவும் இன்றியமையாதது.

கவிதைகளில் தேர்ந்தெடுத்த சொல்லாட்சியும் அடைமொழியும் உருக்காட்சியை நல்க மிகவும் துணைபுரிகின்றன.

திராட்சை மது சிவப்பு மது (wine and red wine) என்கிறபோது, அது மனத்தில் மதுவின் இயல்பை அப்படியே புலப்படுத்தாது. ஆனால் அதேநேரம் ‘இரத்தச் சிவப்பு மது’ (Blood red wine) என்று அடைமொழிப்படுத்தும்பொழுது அத்தொடர் மதுவின் ருசி, அதன் சிவப்பு நிறம் என்ற அனைத்தையும் மனத்தில் காட்சிப்படுத்தி விடுகிறது.

இங்கனம் கவிதைகளில் சொல், தொடர், அடைமொழி, உவமை, உருவகம், சொற்சித்திரம், மோனை என்ற எதுவும் உருக்காட்சியை நல்கும்.

ஹைகூ பாடுபொருள் வரையறைகளைக் கடந்து சுவை மிகுந்த கருத்துப் பொருண்மைகளை, காட்சிகளை வெளிப்படுத்தும் தன்மையுடையது. அதிலும் மென்மையான சோகமான அமைதியான வாழ்க்கைக் கூறுகளின் காட்சியை அழுத்தமாய்ச் செறிவாய், ஆர்வமாய் 17 அசைகளில் கோடிட்டுக் காட்டும் தன்மையுடையது.

இயற்கையழகிற்கு அப்பாலுள்ள ஆழமான, விரிவான எல்லைகளைத் தொடுகிறது. கவித்துவ மென்மையை, காட்சியழகின் விரிவை, அதிர்ச்சி தரும் மெல்லிய வியப்பினை முடிவில் காட்டும் தன்மையுடையது.

17 அசைகளில் கருத்துக்களின் ஒருமையை ஓவியமாக்கிக் காட்டும் “ஹைகூ” ஒவ்வொன்றும் ஓர் உருக்காட்சியே ஆகும்.

1. ஒருங்கிணைந்த உருக்காட்சி (Integral Imagery)

2. சொல்லாட்சியும் உருக்காட்சியும் (Diction with Imagery)

3. இயற்கையின் ஆட்சியும் உருக்காட்சியும் (Paradisical Imagery)

4. ஜென் புத்த கருத்துக்களும் உருக்காட்சியும் (Zen Buddism & Imagery)

5. ஹைகூ கவிதை முடிவும், உருக்காட்சியும் (Psetic closure in Haiku & Imagery)

ஆகிய உருக்காட்சிப் பாகுபாடுகள் சான்றுகளுடனும், திறனாய்வு நோக்கின் அடிப்படையிலும் இக்கட்டுரையில் விளக்கப்படும்.

DR. C. SARADHAMBAL IMAGERY IN HAIKU POEMS AND WHAT IT TELLS US

The term Imagery is one of the most important techniques in Modern criticism. The poet adopts many techniques like simile, mataphor, symbol etc., to express his themes and to stress his ideas. Based on the imagery employed by poets of many languages, many theories have been expounded.

This paper purports to bring forth the importance of imagery in the Haiku poems in general and Japanese Haiku in particular.

The modern poets use imagery to provoke thought waves and to echo their ideas again and again in the minds of his readers.

Serene beauty is the fundamental element of most Haiku poems. The Haiku poems depicts even the little movements of nature. By these picturizations the reader can catch hold of the mental images which the poet aims at. In these ways, every Haiku poem depict a single miniature picture.

Imagery is a mental picture which is claimed, are experienced by the reader of a poem, in totality of elements which make up that poem.

C.D. Lewis in his 'Poetic Image' says that an image is a picture made out of words and that a poem may itself be an image com-

posed and metaphors.

Imagery is used to signify all the objects and qualities of sense perception expressed in a poem or in the analogues used in its similes and metaphors.

Imagery includes auditory, tactile, olfactory, gustatory or kinesthetic (sensations of perception) as well as visual qualities.

Thus Imagery, functions as an essential component in poetry, and as a major clue to poetic meaning, structure and effect.

Poetic Diction plays an important role in making the imagery. For example the words like wine and red wine in poems will not give any effective meaning. But when it is epithetized as `Blood red wine' the readers' imaginary power is evoked to visualize the wine's concentration, and to thirst for the kicking, may be stimulated.

Haiku extends the meaning and improves unity of ideas beyond the limits of its small condensed form. It describes the very soft, meloncholic, peaceful characteristics of nature in brief. Sublime senses and aesthetic fealings, and surprise shocking are all expressed at the closure of the Haiku poems. Atlast, the imagery found in Haiku poems can be classified as follows:

1. Integral Imagery
2. Imagery with diction
3. Paradisical Imagery in reflecting Nature
4. Purgatorical Imagery
5. Imagery in Haiku at clousure

This paper also explains how these kinds of imagery are embodied in the Haiku poems.

சானகிராமன், முனைவர் க. இளமதி சித்தர்களின் உயிர்க்கோட்பாடு

இவ்வுலகில் தோன்றிய பல தத்துவ ஞானிகள் தங்களது உயரிய

ஞானத்தால் இவ்வுலகம், உயிர், உடல், உளம் எனும் இந்நான்கு பொருள்களின் தத்துவ நேர்மையினைக் கண்டு வெளியிட்டுள்ளனர். பல சமயவாதிகளும் இப்படியே. சமயவாதிகளின் கருத்துக்களில் பல, தத்துவ ஞானிகளின் கருத்துக்களுடன் ஒத்தும் முரண்பட்டும் அமைகின்றன. இவர்களுடன் அறிவியல் அறிஞர்களும் இவற்றின் உண்மைத் தன்மையினை அறிவியல் கண்கொண்டு உலகுக்கு உணர்த்தி வருகின்றனர். இவற்றுள் சித்தர்களின் கருத்துக்களும் அறிவியலாளர்களின் கருத்துக்களும் எவ்வெவ்விடங்களில் ஒன்றுபடுகின்றன எவ்வெவ்விடங்களில் மாறுபடுகின்றன; சித்தர்களின் உயிர்க்கோட்பாட்டின் சிறப்புகள் யாவை என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உயிரின் தோற்றத்தைக் கூறும் பொழுதே சித்தர்களும் அறிவியலாளர்களும் உலகத் தோற்றம் குறித்தும், அதன் தன்மைகள் குறித்தும் கூறுகின்றனர். இந்த ஒற்றுமை இரு பாலாரும் அறிவுக்கண் கொண்டு ஆய்கின்றனர் என்பதைத் தெளிவாக்குகின்றது.

“சூரியனிலிருந்து தெறித்து விழுந்த பாகம் நெருப்புப் பிழம்பாக இருந்து பின்னர் குளிர்ந்தது. சுற்றியிருந்த வாயுக்கள் குளிர்ந்து மேகமாகி மழையைப் பொழிந்தன. உலகின் பள்ளப் பகுதிகளில் இந்நீர் தங்கிச் சமுத்திரங்கள் உண்டாயின. சமுத்திரங்களில் கரைந்து கிடந்த உப்புப்பொருள்கள், வாயுக்கள், கரி முதலானவை ஏதோ ஒரு விசேடமான முறையில் கலக்கவே தற்செயலாக உயிர் உண்டாயிற்று” - என்று அறிவியலாளர் கூறுவர். சித்தர்களின் கருத்துக்கள் இக்கருத்துக்களுடன் சிறிது மாறுபடுகின்றன. ஏதோ ஒரு விசேஷமான முறையில் என்ற புரியாத நிலையைச் சித்தர்கள் விரிவாக விளக்குகின்றனர்.

நீருள்ள இடங்களிலேயே உயிர்கள் பிறக்கின்றன என்ற கருத்து இருபாலருக்கும் உடன்பாடே. சித்தர்கள் கோட்பாட்டின்படி உயிர் என்பது ‘அ’ கரம் ஆகும். ஓம் எனும் பேசுமெழுத்தால் அமைந்தது. இவ்வுயிர்தான் உடல் எடுப்பதற்கு முன் ‘அப்பு’வில் நிற்கும். தான் செய்த வினைக்கீடாக உடலை எடுக்கும். உடலை விட்டு நீங்கிய பிறகு எந்த உருவத்தில் இருந்து தோன்றியதோ அந்த உருவத்தைச் சென்று சேர்ந்து விடும். இப்படிப்பட்ட முடிவு நிலையை அடையும் உயிரை வெட்ட வெளியில் இணைக்க வேண்டும். அதற்கு யோகமும் ஞானமும் வேண்டும். உயிர் வெட்டவெளியில் கலக்கும்போதே துன்பங்கள் நீங்கும்; தத்துவங்கள் மறையும் உயிர் அனுபவங்களைப் பெறும். வெட்டவெளியில் நுழைந்து தாங்கள் கண்ட அனுபவங்களையும் சித்தர்கள் பாடியுள்ளனர்.

சித்திரபுத்திரன், முனைவர் எச். தமிழ் அகராதிப் பொருள் விளக்கத்தில் குறிப்பான்களின் (labels) பங்கு

அகராதித் தொகுப்பின் பல பணி நிலைகளில் பொருள் விளக்கமும் ஒன்று. அகராதிப் பொருள் விளக்கத்திற்குப் பல உத்திகள் கையாளப்படுகின்றன. அகராதியின் வகை, நோக்கம், மூலமொழியின் தன்மை, நோக்காளர் திறன் என்ற பல பண்புகளின் அடிப்படையில் அகராதிச் சொல்தொகுப்பு நிலையிலே உத்திகளின் பயன்பாடு முடிவு செய்யப்படுகிறது.

தலைச்சொல் மற்றும் பொருளின் சிறப்புக் கூறுகளையும் தனித்தன்மையையும் வெளிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பெறும் ஓர் அகராதியியல் உத்தியே குறிப்பான்களின் பயன்பாடாகும். குறிப்பான்கள் அகராதிப்பொருள் விளக்கத்தில் இன்றியமையாத இடத்தைப்பெறுகின்றன. இவை அகராதியின் தலைச்சொல் பகுதியிலும் (lemma part) பொருள் விளக்கப்பகுதியிலும் (meaning part) பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பான்கள் தலைச்சொல் மற்றும் பொருளுடன் நேரடித்தொடர்பு கொண்டிராவிட்டாலும் தலைச்சொல்லிற்கும் பொருளுக்கும் கூடுதல் விளக்கங்களைத்தருகின்றன. தலைச்சொல் சார்ந்துள்ள காலம், இடம், சொற்பிறப்பு போன்ற பல செய்திகளைச் சுட்டி நிற்கின்றன. பொருள்விளக்கப் பகுதியில் இடம்பெறுபவை பொருள்களின் வகை, உறவு, பொருள் சார்ந்துள்ள துறை, காலம், இடம் முதலியனவற்றையும் பல்வேறு குறிப்புப்பொருள்களையும் வெளிக்காட்டி நிற்கின்றன. குறிப்பான்கள் பெரும்பாலும் சொற்களின் குறுக்கங்களாக (பெ.), (வி.), (சோதி.), (பழம்.) என்றாற்போல் அடைப்புக்குறிக்குள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ் அகராதிகளில் குறிப்பான்களின் பயன்பாட்டை வரலாற்று நிலையில் காணுகையில் அகராதிகளுக்கிடையே வேறுபாடு காணப்படுகின்றது. இவ்வேறுபாடு ஒருமொழி, இருமொழி அகராதிகள் என்ற நிலையில் அமைவதையும் காணமுடிகின்றது. தமிழ் ஒருமொழி அகராதிகள் குறிப்பாகப் பழம் அகராதிகள் சொற்களின் பொருளை எவ்விதக் குறிப்பான்களும் இன்றிச் சில நிறுத்தல்குறிகள் மூலம் வரிசைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தலைச்சொல்லிற்குரிய இலக்கணக்குறிப்புகள் கூட இவ்வகராதிகளில் இடம் பெறவில்லை. எடுத்துக்காட்டாகச் சதுரகராதி (1734), மானிப்பாய் அகராதி (1842), ஜூபிலி தமிழ்ப் பேரகராதி (1935), தமிழ் - தமிழ் அகரமுதலி (1985) போன்றவற்றில் இப்பண்புகளைக் காணமுடியும். என் - கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ப் பேரகராதி (1899) இதற்கு ஒரு

விதிவிலக்காகும். இவ்வகராதியில் தலைச்சொற்களின் இலக்கணப்பொருள்கள் குறிப்பான்களுக்கு இணையாகச் சில குறியீடுகள் (symbols) மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழ் ஒரு மொழி அகராதிகள் தோன்றிய காலகட்டத்திற்கு முன் தோன்றி வளர்ந்துள்ள மேனாட்டினரின் தமிழ் - ஆங்கில அகராதிகள் குறிப்பான்களின் பயன்பாட்டில் முன்நிற்கின்றன. பெப்ரீசியஸ் (1779) அகராதியின் முதல் பதிப்பில் குறிப்பான்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க நிலையில் இல்லை என்றாலும் அதற்குப்பின் வந்த பதிப்புக்களில் இலக்கணக் குறிப்பான்களுக்கு முதல் இடம் அளிக்கப்பெற்றுள்ளது. ராட்லர் (1834) அகராதியில் பலவகையான குறிப்பான்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறிஞர்கள் வியந்து பாராட்டத்தக்க முறையில் பலவகையான குறிப்பான்களைப் பயன்படுத்தியுள்ள பெருமை வின்சுலோவைச் சாரும். இலக்கணம், துறை (field), நிலை (status) தொடர்பான பல குறிப்பான்கள் சரளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வின்சுலோவின் (1862) தமிழ் - ஆங்கில அகராதிக்குப்பின் வந்த அகராதிகளில் குறிப்பாக ஒருமொழி அகராதிகளில் குறிப்பான்கள் இடம்பெறவில்லை. இவ்வகராதிகள் எதேனும் ஒருவழியில் அகராதியைச் சீரமைக்க எண்ணினும் சொல், பொருளின் எண்ணிக்கையைக் கூட்டுவதிலும் குறைப்பதிலும் அதிக கவனம் செலுத்தியுள்ளன. பள்ளி மாணவர்களுக்கெனத் தொகுக்கப்பட்ட அகராதிகளில் கூடக் குறிப்பான்கள் தெளிவாகக் கையாளப்படவில்லை (தற்காலத் தமிழ்ச் சொல் அகராதி, 1926).

ஜூபிலி போன்ற அகராதிகளில் சோதிடம், மருத்துவம் போன்ற அறிவியல் துறை சார்ந்த பல சொற்கள் சேர்க்கப்பட்டிருப்பினும் அவை குறித்த குறிப்பான்கள் இல்லை.

தமிழ் அகராதி வரலாற்றில் வின்சுலோ அகராதியை அடுத்துக் குறிப்பான்கள் பரவலாகவும் முறையாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளதைத் தமிழ்ப் பேரகராதி (1924) பெருஞ்சொல்லகராதி, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (1992) போன்றவற்றில் காணமுடிகின்றது.

இக்கட்டுரையில் தமிழ் அகராதிகளில் பயன்படுத்தப்படும் குறிப்பான்கள் விளக்க நிலையிலும் வரலாற்று நிலையிலும் ஆராயப்படுகின்றன. தமிழ் அகராதிப்பொருள் விளக்கத்தில் குறிப்பான்கள் அடைந்துள்ள வளர்ச்சியும் அதற்கான தேவையும் விளக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் தொகுக்கப்படவிருக்கும் தமிழ்

அகராதிகளுக்கு உதவும் வகையில் குறிப்பான்களைக் கையாளுவதற்குரிய விதிமுறைகளும் இக்கட்டுரையில் பரிந்துரைக்கப்பெற்றுள்ளன.

சிவக்குமார், முனைவர் சி. பழங்குடி (Tribal) மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தல், ஊக்குவித்தலில் (Motivation) ஏற்படும் உளமொழியியல் சிக்கல்கள்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள இருளர், பணியர், குறும்பர் முதலிய பழங்குடி மாணவர்களின் தாய்மொழி (முதன்மொழி) வேறாகவும் பள்ளி மொழி வேறாகவும் உள்ளன. பள்ளிச் சூழலுக்கு வரும் வரை இவர்களின் செய்திப் பரிமாற்றம் தாய்மொழி மூலமே நடைபெறுகிறது. பள்ளிச் சூழலுக்கு வந்தபிறகும் வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் உரையாடல் தவிர மற்ற நேரங்களில் அவரவர்களின் தாய்மொழி மூலமாகவே செய்திப்பரிமாற்றம் நிகழ்கிறது. இதனால் இவர்களின் கற்றல் திறன் எதிர்பார்த்த அளவு வளரவில்லை எனலாம்.

கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறை இதற்காக மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன உதவியோடு பல ஆய்வுகளை மேற்கொண்டு ஆசிரியர் கையேடும் ஒலி நாடாச் சுருளும் தயாரித்ததோடு இப்பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல பயிற்சிகளையும் அளித்துள்ளது. இவர்களின் கற்றல் திறன் வளர இது தொடர்பாக இன்னும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில் இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு முன்னோடியாக அமையும் எனலாம்.

இக்கட்டுரை பழங்குடி மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடம் கற்பிக்கும்பொழுது ஊக்குவித்தலில் எற்படும் சிக்கல்களை மையமிட்டு உள மொழியியல் காரணங்களுடன் ஆய்வு செய்கிறது.

இக்கட்டுரை பின்வரும் கூறுகளை உள்ளடக்கியுள்ளது. 1 பாடநூல் கருத்துகள்/மொழியமைப்புகள், 2. மாணவர்களில் மொழித் தொடர்பான மனப்பாங்கு, 3. ஆசிரியர் மாணவர் கலந்துரையாடல், 4. பண்பாடு மொழியியல் கூறுகள்.

மேற்குறித்தநிலைகளில் ஊக்குவித்தலில் ஏற்படும் சிக்கல்களையும் அதற்கான தீர்வுகளையும் இக்கட்டுரை ஆய்கிறது.

சிவகாமசுந்தரி, முனைவர் திருமதி சு. தமிழ் இலக்கியத்தில் விரிவாக்கப் பணிகள்

தமிழ் மக்களின் வாழ்வியல் ஒரு பெருங் கலை - அறிவியல் - உள்ளாழம் கொண்டதாகும். 'நான்' என்ற நிலையில் வாழ்வினை எண்ணாமல், நடத்தாமல் 'நாம்' என எண்ணி நடத்தியவர்கள் தமிழர்கள். தமிழர்களது வாழ்வு எல்லையில்லாத அன்பையும், பொறுமையையும், வீரத்தையும், ஈரத்தையும் மையப்படுத்தித் தனக்கென வாழாது பிறருக்காக வாழ்கின்ற வாழ்க்கையாக அமைந்தது. இதுவே விரிவாக்கப் பணிக்கு வித்திட்டு அணி செய்து உலகோர் நெஞ்சில் நிலைத்து நிற்பதாயிற்று. அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்து நிற்காமல், உள்ளொன்று நினைத்துப் புறமொன்று கூறாமல் தனது நெஞ்சு அறிவதை நேருக்கு நேர் சொல்லி, பாடறிந்து ஒழுகுகின்ற பண்பாடு என அமைந்ததே விரிவாக்கச் சிந்தனையினால்தான்.

சமூக நலம் - நலவாழ்வு, தொழில் வளம், அனைவருக்கும் கல்வி, குழந்தைப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துணவு, பசுமைப் புரட்சி, குடும்ப நிருவாகம், பெண்கள் முன்னேற்றம் ஆகியன குறித்துச் சிந்தித்துச் சமுதாயத்தில் அவற்றை நிலைநாட்ட நினைப்பது விரிவாக்கப் பணிகளின் குறிக்கோளாகும். இந்தச் சிந்தனை 'தேசியம், மாநிலம், மாவட்டம், வட்டாரம், ஊராட்சி, கிராமம், தனிமனிதன் வரை வளர்க்கப்படவேண்டுமென்பது விரிவாக்கப் பணிகளின் செயல்பாடாகும். ஆய்வுக் கூடங்களில் சோதனையாகத் தொடங்கப்பெறும் பணிகளின் பயன்கள் இடையீட்டாளர்கள், தகர்ப்பாளர்கள், திசை திருப்பாளர்கள் யாருமின்றி நேரிடையாக நாட்டு மக்களைச் (Lab to Land) சென்று சேருவது என்பதே விரிவாக்கப் பணியின் முக்கிய இலட்சியமாகும்.

சங்கத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் விரிவாக்கப் பணிகளின் நாடிநரம்பைத் தொட்டுப் பார்த்து ஆட்சி நடத்தியவர்கள். பல நாடுகளை வென்று ஆட்சியை விரிவுபடுத்தித் தங்கள் கலைச் செல்வங்களை, மனித நேய வளத்தை, உயிரிலும் சிறந்த பண்பாட்டை நிலைநாட்டி அன்பெனும் பிடிக்குள் விரிவாக்கப் பணிகளைக் கொண்டு வந்து செயல்படுத்திய தனித்திறமே விரிவாக்கப் பணிகளைப் பிறர் ஏற்க, பின்பற்ற, பாராட்ட வகை செய்தது.

தமிழர் தம் வாணிகத்திறனும் ஒழுக்கமும் அயலகங்களில் விரிவாக்கப் பணிகள் செயல்பட உதவிற்று. தமிழ் இலக்கியங்கள் உணர்த்திய மனித நேயம், உலகத்தை முன்னிறுத்திப் பாடிய ஏற்றம், நயத்தக்க நாகரிகம் விரிவாக்கப் பணி வளர்ச்சிக்கு உதவின.

தமிழக மனைகளில் நடத்திய தொடர் விருந்தோம்பல், மாமன்னர்களால் அமைக்கப்பெற்ற 'அறநிலைஇய அகனட்டில்' வழங்கிய பெருஞ்சோறு, ஒரு வீட்டார் வழங்கிய உணவை ஒரு முறை உண்டு உயிர் வாழ்ந்த 'ஓரில் பிச்சையார்' பற்றிய சங்கக் குறிப்பு, 'சில்லொழுக் கேய்ப்பச் சோறுடைக் கையர்' நிலை, - இவ்வாறு இல்லார்க்கு உணவளித்த தமிழனுக்குக் கிடைத்த பட்டங்கள் விரிவாக்கப் பணிகளுக்குக் கிடைத்த மெய்க்கீர்த்திகளாகும். 'இல்லோர் செம்மல்', 'இல்லோர் ஒக்கல் தலைவர்', 'பாண்பசிப் பகைஞன்', 'பசிப்பிணி மருத்துவன்' யாவும் தொண்டுக்களிக்கப்பட்ட முதல் பட்டங்களாகும்.,

பெய்யும் மழை நீர் உடனே கடலிற் கலக்காது தடுத்து அணைகட்டி, ஏரி, குளங்களில் சேர்த்துப் கழிவு நீரை அகற்றித் தூய்மைப்படுத்தி உண்ணவும், வேளாண் வளம் பெருகவும் செய்த விரிவாக்கப் பணிகளைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

நாட்டின் வளங் காக்கவும், அமைதியை நிலை நாட்டவும், சமாதானத் தூது நடத்திப் போரைத் தவிர்த்து, பொருளாதாரத்தை உயர்த்துவதை விரிவாக்கப் பணியின் சிறப்பாகக் கருதலாம்.

குழந்தைகளின் நலம் பேணுவது விரிவாக்கப் பணியின் உயிர் மூச்செனலாம். ஈன்றபின் எக்காரணம் குறித்தோ தெருவில் விட்டுச் செல்லும் குழந்தைகளை எடுத்து வளர்க்கக் குழந்தைக் காப்பகங்கள் சங்க காலத்தில் இருந்துள்ளன. குழந்தைகளுக்கு நல்ல ஊட்ட உணவு தருதலில் விரிவாக்கப் பணியாளர்கள் (Extension workers) கவனம் செலுத்தினர். என்ற குறிப்பும் கிடைக்கப் பெறுகிறது.

மரம் நட்டு, சாலை அமைத்து, கல்வியைப் பொதுவாக்கி அறிவை வளர்த்தனர். 'மயக்கும் கள்ளின்' கொடுமை கூறி மருந்துண்டு மயங்குவதின் தீமை காட்டியுள்ளனர் விரிவாக்கப் பணியாளர்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கூறிச் சாதியைப் பற்றிய சிந்தனையிலிருந்து ஒதுங்கி விலகியிருப்பதே விரிவாக்கப் பணியெனக் கருதப்பட்டது.

தமிழ் இலக்கியத்தில் குறிப்பாகச் சங்க இலக்கியத்தில் விரிவாக்கப் பணிகட்கு முதல் இடம் தந்து கலை, இலக்கியம், மொழி, பண்பாடு அனைத்தின் வகையாலும் மாறுதல்களை உணர்ந்து வளரும் மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்துவதைக் காட்டுவதே விரிவாக்கப் பணியின் நோக்கம்.

'உலகத்தோடு ஒட்டஒழுகும் மனிதனை'க் காண்பதே தமிழ்

இலக்கியத்தின் நோக்கம். இந்த நோக்கம் வேர்கொண்டு, கிளைபரப்பி வளர்ந்தது, வளருவது விரிவாக்கப் பணியினால்தான் என்பதை விரித்துக்காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

சிவகாமி, முனைவர் ச. பெண்ணியப் பார்வையில் சிலப்பதிகாரம்

அறிவுத் துறைகளின் வளர்ச்சி இலக்கியத் திறனாய்விலும் எதிரொலிக்கின்றது. இதனால் எவ்வகை இலக்கியமும் எக்கால இலக்கியமும் மீள்வாசிப்பிற்கு, மறு ஆய்விற்கு உட்படுகின்றது. இன்று பரவலாகப் பேசப்பட்டுவரும் பெண்ணியச் சிந்தனை இலக்கிய ஆய்விலும் கால்கொண்டுள்ளது. இதனால் பெண்டிரின் பின்னடைவிற்குக் காரணமான தொன்மைப் படிமங்கள், குறியீடுகள், தாய்மை - பெண்மை ஆகிய கருத்தாக்கங்கள் இனங் காணப்படுகின்றன. பண்பாட்டில் எந்தெந்தக் கூறுகள் ஆண் பெண் சமநிலையின்மையை நிலைநிறுத்தும் பணியைச் செய்கின்றன? இலக்கிய உத்திகள் எங்ஙனம் இதற்குத் துணைபோகின்றன? என்பனவற்றை அறுதியிட முடிகிறது.

1. சிலம்பில் பெண் எங்ஙனம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாள்? 2. பெண்ணியப் பார்வையில் மறுசிந்தனைக்கு இடமளிக்கும் கதை நிகழ்வுகள், கதைமாந்தர், 3. பெண்ணியச் சிந்தனையில் வெளிப்படும் இளங்கோ எனும் மூன்று பார்வைகளின் அடிப்படையில் கட்டுரை அமைகிறது.

கற்பு எனும் கருத்தாக்கம், ஆண் உயர்வாகவும் பெண் தாழ்வாகவும் கருதப்பெற்ற சங்ககால நிலையிலிருந்து மேலும் வீழ்ச்சியுறச் செய்திருப்பதை உணரமுடிகிறது. ‘தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை’ எனும் குறளே, சிலப்பதிகாரமாக விரிவடைந்துள்ளதோ எனத் தோன்றுகிறது.

பெண்ணின் தகுதியை, மதிப்பினைக் குறைத்துரைப்பதில் சமயத் தத்துவங்கள், சமயக் கற்பிதக் கதைகள், துணை நின்றதை மாதவியின் பிறப்பு, கீரிப்பிள்ளையின் கதை, கண்ணகியின் ‘பீடன்று’ எனும் உரை முதலானவற்றைக் கொண்டு வலியுறுத்தலாம்.

ஒட்டுமொத்தமான பொதுப்பார்வையில் இளங்கோ ‘ஆண் பெண்ணியச் சிந்தனையாளர்’ராகக் காட்சியளிக்கிறார்.

சிவகாமி, பா. தமிழில் தலித் இலக்கியப் போக்கு

தலித் இலக்கிய இயக்கம் இன்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் விரிந்து எல்லா இந்திய மொழிகளிலும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இந்த இலக்கியம் சமுக, பொருளாதார மற்றும் பண்பாட்டு ஏற்றத்தாழ்வுகளுக்குப் பலியாகிப்போன தீண்டப்படாத தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையோடு நெருங்கிய தொடர்பு உடையது. தலித் இலக்கியம் என்பது சீரழிவுற்ற சமுக அமைப்புக்கு எதிரான கிளர்ச்சிகரமான எதிர்மறுப்பு வாதமான, அறிவியல் அணுகுமுறை சார்ந்த ஒரு உணர்வால் குணாம்சப் படுத்தப்பட்டுள்ளது.

தலித் இலக்கியம் தமிழில் அதற்கே உரிய கூறுகளுடன் அதிக அளவில் படைக்கப்படவில்லையெனினும் சொல்லக்கூடிய படைப்புக்கள் இன்று தமிழில் வந்துள்ளன.

டானியலின் பஞ்சமர், கானல் இதைத் தொடங்கி வைத்தாலும் தமிழ் மண்ணில் பூமணி, சிவகாமி, இதயவேந்தன், பா. செயப்பிரகாசம் போன்றோரும் இன்னும் பிறரும் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

இந்த ஆய்வு பூமணி முதல் பாமா வரையுள்ளவர்களின் படைப்புகளை எடுத்து இலக்கியக் கூறுகளையும், கலகக்கூறுகளையும் முன்வைக்கும்.

இந்த இலக்கியப்போக்கு சமுகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும், இதன்மீது வந்துள்ள விமர்சனங்களையும் முன்வைக்கும்.

அத்தோடு மட்டுமின்றி இலக்கிய உத்தி, நோக்கம், தலித் இலக்கிய அரசியல் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கும்.

இந்த ஆய்வு தலித் இலக்கியப் படைப்புகளின், படைப்பாளிகளின் ஏறக்குறைய முற்றுமுதலான பட்டியலோடு அவர்களுடைய பங்களிப்பை விவரிக்கும்.

சிவசுப்பிரமணியன், ஆ. பரதவர்களின் மேசை எதிர்ப்புப் போராட்டம்

பொருளாதார மற்றும் உயர் பதவியின் அடிப்படையில் ஒரு சாதிக்குள் 'மேலோர் குழு' (Elite Group) ஒன்று உருவாவது இயல்பாகும். இவ்வாறு உருவாகும் 'மேலோர் குழு' தன் சாதியில் அடித்தளமக்களாக

(Subalterns) விளங்குவோர் மீது தனது மேலாண்மையை (hegemony) நிலைநிறுத்தும்.

ஒரு சாதியின் அடித்தளப் பிரிவினர் மேலோர் குழுவின் மேலாண்மையை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டாலும், வாய்ப்பு நேரிடும்போது தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவர். சில நேரங்களில் இவ்வெதிர்ப்புணர்வு கிளர்ச்சியாக உருவெடுத்து வெற்றியடையவும் செய்யும்.

இதற்கு எடுத்துக்காட்டாகத் தூத்துக்குடி நகரில் கடல் தொடர்பான தொழில்களைச் செய்து வாழும் பரதவர் என்ற சாதியினரிடையே நிகழ்ந்த மேசை எதிர்ப்புப் போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், மீன் பிடித்தல், சரக்குகளைக் கொண்டு செல்லும் பெரிய தோணிகளை இயக்குதல் என்பன பரதவரின் பாரம்பரியத் தொழில்களாகும். கடின உடலுழைப்பு தேவைப்படும் இத் தொழில்களிலிருந்து விலகி வாணிபம் செய்த பரதவர்கள் வளமான நிலையில் இருந்தனர். உடலுழைப்பிலிருந்து அந்நியமான இவர்கள், தூத்துக்குடி நகரில் வாழ்ந்த போர்ச்சுக்கீசிய உயரதிகாரிகளுடனும் கத்தோலிக்கச் சமயக் குருக்களுடனும் நெருங்கிப் பழகினர். அவர்களுடன் சமமாக மேசையின் முன் அமர்ந்து உணவருந்தினர். பின் அவர்களைப் போன்றே தமது இல்லங்களிலும் மேசையைப் பயன்படுத்தினர். சமூக உயர்மதிப்பின் குறியீடாக மேசை அமைந்துள்ளது. இதன் காரணமாக இவர்கள் 'மேசைக்காரர்' எனப்பட்டனர்.

உடலுழைப்பை மேற்கொண்டு வாழ்ந்த பரதவர்கள் 'கம்மாரக்காரர்' என்றழைக்கப்பட்டனர். எண்ணிக்கையில் இவர்கள்தான் மிகுதியானவர்கள். இவர்களிடையே உருவான புதிய செல்வந்தர்களில் சிலர் சடங்குகளின் வாயிலாக மேசைக்காரர்களாக மாறித் தம் சமூக மதிப்பை உயர்த்திக் கொண்டனர். ஆனாலும் மேசைக்காரர் மீது கம்மாரக்காரர்களின் எதிர்ப்புணர்வு தொடர்ந்து இருந்து வந்தது. துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகக் கம்மாரக்காரர்கள் தங்களது மேசையெதிர்ப்புணர்வை வெளியிடத் தொடங்கினர். புதிய பணக்காரர்களாக உருவாகி அதே நேரத்தில் மேசைக்காரராக மாறாத கம்மாரக்கார வணிகர்கள் - ஏற்றுமதி முகவர்கள் மற்றும் மத்தியதர வர்க்கத்தினர் இப்போராட்டத்திற்குத் துணை நின்றனர்.

1948 ஆகஸ்ட் 5-ஆம் நாள் பனிமயமாதாவின் தேரோட்டத் திருவிழாவை யொட்டி இவ்வெதிர்ப்புணர்வு தீவிரமடைந்தது. தேர்

வடத்தை முதலில் தொட்டிழுக்கும் ஜாதித் தலைவரின் உரிமை எதிர்ப்புக்குள்ளானது. வலுவான இவ்வெதிர்ப்பின் விளைவாக ஜாதித் தலைவரின் இத்தனிச் சிறப்புரிமை தடைப்பட்டது.

அத்துடன் ஏற்கனவே எண்ணிக்கையில் குறைவான மேசைக்காரர்கள் பொருளாதார நிலையில் வலுக்குன்ற, கம்மாரக்காரர் பிரிவிலிருந்து வந்த வணிகர்கள் பொருளாதார நிலையில் வலுப்பெறத் தொடங்கினர். மத்தியதர வர்க்கமும் இவர்களிடையே உருவானது. இதன் விளைவாகப் பரதவர் சமுதாயத்தில் மேசைக்காரர் செல்வாக்கு சரிந்தது.

இக்கட்டுரை களஆய்வின் மூலம் பெறப்பட்ட வாய்மொழி வரலாற்றுச் சான்றுகளையும் துண்டுப் பிரசுரங்களையும் முதல் நிலை ஆதாரங்களாகவும் வரலாறு மற்றும் சமூகவியல் நூல்களையும் கட்டுரைகளையும் இரண்டாம் நிலை ஆதாரங்களாகவும் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

A. SIVASUBRAMANIAN THE STRUGGLE OF THE PARATHAVA SUBALTERNS AGAINST MEJAI

It is quite natural that within a caste an elite group evolves based on economic and higher echelons of power. Such an elite group tends to exercise its hegemony over the subalterns of its caste.

The subalterns of a caste group though subjugated to the hegemony of the elite group against their will, do show their resentment over it whenever occasion arises. At times this resentment assumes rebellious proportions and brings them victory.

Parathavas living around Tuticorin depend on sea-faring for their livelihood and their rebellion against Mesaikarars amplifies this phenomenon.

The traditional occupations of the Parathavas are diving for pearls and chanks, fishing and navigating the big cargo boats. Parathavas who opted to become tradesmen were freed from the hardwork their traditional occupations entailed and were by and large prosperous. The Parathavas alienated from such hard work started moving very closely with the Portuguese officials and Catholic Priests of the town. This proximity enabled the Parathavas to sit at their dining tables as equals. Later the Parathavas too introduced dining ta-

bles in their homes. The dining table has become a status symbol. Such of these Parathavas who had dining tables at home came to be called 'Mesaikkarars' (People who dine on a table.)

Parathavas who eked out their living by the sweat of their brow were called 'Kammarakkarars'. They were larger in number. A few among them also became rich and those neo-rich too became `Mesaikkarars' by performing certain rituals. However, the resentment of the Kammarakkarars against the 'Mesaikkarars' continued. The Kammarakkarars gave vent to their feeling of resentment over Mesaikkarars through handbills. They were supported by the middle class, the export import agents and those neo-rich Kammarakkarars who resisted becoming `Mesaikkarars.

This pent-up resentment flared up on August - 1947 on the eve of the car festival of Our Lady of Snows. The Privilege of the caste leader to pull at the rope as the initiator of the ceremony was objected to. This objection was convincingly and volubly made and as a result, the special privilege of the caste leader was curtailed.

Besides the few mesaikkarars started sliding down economically and they were outnumbered by a sizeable number of neo-rich Kammarakkarars who had consolidated their economic status. A middle class too evolved. All these factors contributed to the decline of the popularity of the mesaikkarars.

This write-up has been written using the oral historical sources and handbills collected through extensive field work as primary source and books articles on history and sociology as secondary sources.

சிவராமன், டாக்டர் பி.கி. தஞ்சை மாவட்டப் பெண்களின் ஆரம்பகால மார்பகப் புற்றுநோய்

புற்றுநோய் என்பது கட்டுப்பாட்டிற்கு அடங்காமல் வளர்ச்சி விதிகளுக்கு உட்படாது பலனற்றுப் பெருகி வளரும் திசுத்திரளாகும்.

புற்றுநோய் நமது உடல் வளர்ச்சியின் ஒரு மாறுபாடுதான். அது நுண்கிருமிகளால் எற்படும் ஒரு நோயன்று. எனவே நம் உடல் தன் சொந்தத் திசுக்களில் ஏற்படும் மாறுபாட்டை உணர்வதில்லை. இதனால் ஒரு வலியோ சுரமோ, சுகமின்மையோ, வேறு எந்தத் தொந்தரவோ இன்றி வளர்வதால் புற்றுநோய் மறைமுகமாக வளர்கிறது.

அதன் ஆரம்பகால அறிகுறிகளை அறிய முடிவதில்லை. புற்றுநோய் 1 செ.மீ. அளவை அடையும்பொழுதே சுமார் 10 லட்சம் செல்களாகப் பெருகிவிடுகிறது. எனவே இந்த நிலையிலேயே ஸ்வீடன் தேசத்துப் புற்றுநோய்க் கருத்தரங்க ஆய்வின்படி 50 விழுக்காடு உடலின் மற்ற இடங்களுக்கு ஊடுருவிவிட வாய்ப்புண்டு. 1 செ.மீ. அளவுக்குக் குறைவாகவும், கட்டியாகத் தோன்றுவதற்கு முன்னும் உள்ள நிலையே ஆரம்பப் புற்றுநோயாகும்.

நான் எனது 30 ஆண்டுகால அனுபவத்தில் தமிழகத்தில் கண்ட புற்றுநோய்கள் அத்துணையும் முற்றிய புற்றுநோய்களே. புற்றுநோய் முற்றிய நிலையில் வருபவர்கள் வாழ்வது ஒரு சில ஆண்டுகளே. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் போல அவர்களுக்கு மரணம் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. ஆனால் என்று மரணம் என்று தெரியாது. இவர்களை 5லிருந்து 10 ஆண்டுகள் வாழவைத்து விட்டால் அதை ஒரு பெரிய சாதனையாகக்கருதுவது இன்றைய மருத்துவ நிபுணர்களின் நிலை. முற்றிய நிலையில் புற்றுநோயைக் குறைக்கலாமே தவிரக் குணப்படுத்த முடியாது. அதன் ஆரம்பகால அறிகுறிகளையும் அது யாரைப் பாதிக்கிறது என்ற விவரத்தையும் முடிந்தால் அதன் மூலகாரணத்தையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். 'யானை வரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே' என்ற பழமொழியின்படி மார்பகப் புற்றுநோய் வருமுன் காக்கும் வழிகளையும் அதன் ஆரம்பகால அறிகுறிகளையும் அறிந்து அதை அழித்து நோயாளிக்குப் பூரண குணம் அளிக்க முடியும் எனக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

சிவலிங்கனார், ஆ. தொழிற்பெயர் விகுதிகள்

தொழிற்பெயர் விகுதி 'தல்' என்பது (உதாரணம் வருதல், போதல்), 'தல்' என்பதன் இடத்தில் ஆல், அம், ஐ, கை, வை, கு, வு, பு, உ, தி, சி, வி, உள், மை, து, காடு, பாடு, பாக்கு, அரவு, ஆணை, மானம் என்பன வரும். உதாரணம் ஆடல், ஆட்டம், நிறை, செய்கை, பார்வை, போக்கு, தேர்வு, காப்பு, கொளு, செய்தி, மகிழ்ச்சி, கேள்வி, செய்யுள், ஆண்மை, வரத்து, சாக்காடு, கோட்பாடு, வேபாக்கு, தோற்றரவு (தோற்றம்), வாரானை, வருமானம்.

தொழிற்பெயர் விகுதிகள் யாவும் முதலில் தொழிலின் பெயரையுணர்த்திப் பின் தொழில் நிகழ்ச்சியையுணர்த்தும். உதாரணம் - ஆடல் நன்று.

'ஆல்' முதலிய விகுதிகள் தொழில் நிகழ்ச்சியுள்ள பொருள், இடம்,

காலம், சினை, குணம் என்னும் ஐந்தினையும் காரண நிலையில் உணர்த்தும். உதாரணம். - வற்றல் உண்டான் - பொருள். படுக்கை - 'கை' இடப்பொருளையுணர்த்தும்.

நேரம் - 'அம்' நேரும் காலத்தை உணர்த்தும். ஆண்மை - 'மை' குணத்தையுணர்த்தும்.

சினைப் பொருளுக்கு முதல் நிலைத் தொழிற்பெயராக வரும். உதாரணம் - மலர்தல் - மலர், அரும்பல் - அரும்பு, கிளைத்தல் - கிளை

சில விகுதிகள் வினை முதல், கருவி, செயப்படுபொருள்களில் வரும். உதாரணம் - வை - வியர்வை, போர்வை, தீர்வை.

ஐ - தடை, எடை, விடை
பு - வாய்ப்பு, சீப்பு, கோப்பு
அம் - தேக்கம், ஏற்றம், ஆக்கம்

பகுதி ஒன்றாய் இருக்க, அதில் சேரும் விகுதிகளால் பொருள் தனிச் சிறப்படைதல் உண்டு.

உதாரணம்:
கல் + தல் - கற்றல் - (தொழில்)
கல் + ஐ - கலை - (Art)
கல் + வி - கல்வி - (Education)
கல் + பு - கற்பு - (ஒழுக்கம்)

சில விகுதிகள் செய்யுளுக்குப் பயன்படுதல் உண்டு.

சீதளா, முனைவர் திருமதி சி. பெண்ணிய நோக்கில் திறனாய்தல்

ஒவ்வொருவரும் உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே சமுதாயத்தின், இலக்கியத்தின் நோக்கம் .

உரிமை மறுக்கப்பட்ட பெண் மாந்தரைத் திறனாய்வு செய்தல் - பெண்ணுரிமை - தன்னுரிமை - மீட்சி - சிட்டுக்குருவியைப் போல விட்டு விடுதலையாகி நிற்பதன்று - பொறுப்பேற்று உரிமை அடைதல்.

தன்னுரிமை இழக்கக் காரணங்கள் இரண்டாம் நிலை ஆளுமைப்பண்புகளை வெளிப்படுத்த இயலாமை - பாலியல்

வேறுபாடுகள்

பிறப்பில், வளர்ப்பில், வாழ்க்கையில், திருமணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடுகள் - பாலியல் வன்முறையின் பாதிப்பு - கற்பு - கோட்பாடு பற்றி ஒப்பீட்டு முறைத்திறனாய்வு.

உளவியல் நோக்கையும் சமுதாய நோக்கையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்தல் - தேவதைக் கதைகளை (Fairy Tales) ஆராய்தல் - வீரகாவியப்பாடல்களை (Legends) ஆராய்தல் - தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களில் பெண்களின் நிலை.

கதைக்கருவிற்கு ஏற்பப் பெண்ணிய நோக்கு - விடுதலைப் போரை அடித்தளமாகக் கொண்ட கதைகள் - வர்க்கச் சமூகம் - நிலவுடைமைச் சமுதாயம் ஊதியத்தில் வேறுபாடுகள் - பூர்ஷ்வா சமுதாய அமைப்பு பற்றிய படைப்பிலக்கிய வெளிப்பாடுகளை ஆய்தல்.

சமய இலக்கியங்களில் - பெண்களை மேல்நிலைப்படுத்தும் மாயத்தோற்றம் - கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மெய்க்கீர்த்திகளில் உள்ள செய்திகளை இணைத்துப் பகுத்துச் சான்றுகள் வழி பொதுமைகாணல் - நடுகற்கள் - மாஸ்திக்கல் என்னும் மகாசதிக்கல் - தாய்த் தெய்வவழிபாடு - இறையியல் முறைத்திறனாய்வு

பங்கு நிலைப் போராட்டம் (Role conflict), தானாக அமையும் பங்கு நிலை (Ascribed Role), முயற்சியால் பெறும் பங்கு Achieved தந்தை வழிச் சமுதாய அமைப்பு (Patrilineal family) தாய்வழிச் சமுதாயம் (Matrilineal family) மறையக் காரணம் - இருவேறு நிலை தெய்வம் அல்லது அடிமை - பொதுமகள் தனியுடைமை - பெண்களைக் கட்டுப்படுத்தும் மரபுமுறைகளும் கட்டுப்பாடுகளும் (Traditions & Conventions) முதலியவற்றைத் தற்கால இலக்கியங்களில் ஆராய்தல்.

மலடி - சுமங்கலி; விதவை - வாழ்வரசி; தேவரடியார் - குலமகள் ஆண்களுக்கு இச்சொற்கள் இல்லாமை - இதற்கான காரணங்களை ஆராய்தல்

நனவிலி மனத்தின் வெளிப்பாடுகள் - அகத்திற்கும் புறத்திற்குமிடையே எற்பட்ட பிளவில் உள்ள ஆபத்தை உணர்த்தும் கிர்கெகார்டுகோட் வெளியீட்டுக் கொள்கை (Expressionism) - புறநிலை அகநிலைப் பண்பாக்கங்கள் - முரண்பாடுகள் - தனித்து வாழும் பெண்ணுக்கும், சார்ந்து வாழும் பெண்ணுக்கும் மனநிலை வேறுபாடுகள் - வயது, சூழ்நிலை, குடும்பம் குறித்து மனவியல் நோக்கில் பெண்ணியம் பற்றிய ஆய்வு.

தீவிரவாதப் பெண்ணியம் - மிதவாதப் பெண்ணியம் - சமூக வியல் பெண்ணியம் - கல்வியும் கல்லாமையும் - இக்கட்டுப்பாடுகளை மீறும் பெண்கள் - நெறிபிறழ்ந்த மகளிர் - மணவிலக்குப் பெற்றமகளிர் - விதவையர் பற்றிச் சமூகவியல் நோக்கில் ஆராய்தல்.

சீனிச்சாமி, முனைவர் து. சி. சுப்பிரமணியபாரதியின் கவிதைமொழி

தமிழ்ப் புத்திலக்கிய வளர்ச்சிப் போக்கில், முதலாவதாகக் குறிக்கத்தக்க பெருங்கவிஞர் (Major Poet) சி. சுப்பிரமணியபாரதி. இந்திய விடுதலைக்கான போராட்ட உணர்வுகள் உருவாகி வளர்ந்துவந்த காலப் பின்னணியில் வாழ்ந்து கவிதைகள் எழுதியவர். ஒரு பெரிய மகான் என்ற அளவுக்கு எல்லாப் பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவர். 1925-இல் இந்தியாவில் பொதுவுடைமை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே வாழ்ந்து மறைந்த பாரதி. இன்று பொதுவுடைமை இயக்கங்களால் வழிகாட்டி என்ற அளவில் போற்றத்தக்கவராகப் பாராட்டப்படுகிறவர். எல்லா அரசியல் கட்சிகளும் ஏகமனதாக எவ்வித விமர்சனங்களுமின்றிப் பாரதியை ஏற்றுக்கொள்கின்றன. கவிஞர்களுக்கு இத்தகைய விமர்சனமற்ற ஏற்பு கிட்டுவது என்பது, மனிதனுடைய ஜனநாயகபூர்வமான பண்பாட்டை நோக்கிய தரநிலை மாறுதலுக்கு உகந்ததாக அமைய உதவாது. இத்துடன் கவிதை பற்றிய அறிதலுக்கும் ஆராய்ச்சிக்கும் இத்தகைய பொதுப்புத்தி (Common Sense) சார்ந்த நம்பிக்கைகள் பயன்படாது. மேலும் , ஒரு கவிஞன் வாழ்ந்து, கவிதைகள் படைத்து, மறைந்த கவித்துவ இயக்கம் பற்றிய வரலாற்று உண்மைகளோடு, அவன் கவிதைகளை இணைத்துக் காணும் அறிவுநிலையும் சிதைந்துபோகும். இம்மூன்று நிலைகளுமே கவிதை பற்றிய கோட்பாட்டு முறையிலான அணுகுமுறை சார்ந்தவை. பாரதியின் கவிதைமொழி பற்றிய இக்கட்டுரை பாரதி கவிதையின் அடிப்படைகளை அடையாளங்காணும் முயற்சியாகும்.

பாரதியின் கவிதைமொழி என்பது பொதுவாக எளிமை மிகுந்ததாக எல்லோராலும் அறியப்பட்டுள்ளது. ஆயினும், தொடக்ககாலம் முதல் இறுதிவரை எளிய சொல்லமைந்த பாடல்கள் மட்டுமின்றி, பழைய கடினச் சொல்லமைந்த (Archaic) பாடல்களையும் பாரதி எழுதியுள்ளான் என்ற உண்மை (Fact) பலரால் உணரப்படாமல் இருந்து வருகிறது. இத்தகைய எளிமை - கடினம் என்ற எதிர் இணைவு நிலை பாரதியிடம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காட்டுவது - இம்மொழிக்கான காரணம் என்ன என்பதைப்

பார்ப்பது - பாரதியியல் பற்றிய ஆராய்ச்சியில் முக்கியமான களம் எனலாம். கவிதையில் மட்டுமின்றி, கருத்து அளவிலும்கூடப் பாரதியிடம் எதிர் இணைவு காணப்படுகிறது. மரபு - நவீனம் என்ற நிலைகளில் இது அமைகிறது. பின்செல்லல் முன்னேறல் ஆகிய நிலைகளாக இதனை விளக்கலாம். இக்கருத்து நிலைகளும் கவிதைமொழி நிலைகளும் ஒன்றுக்கொன்று சாராதவையல்ல. இவற்றிற்கான பொது ஆதாரநிலைகள் உண்டு. இவை, கவித்துவ மனத்தின் இருகூறான மனநிலை (Ambivalant) இன் வெளிப்பாடாக அமைந்துள்ளன. மனித மனத்தின் ஆழ்ந்த நனவிலி நிலையை (Unconsciousness) உலகிற்கு வெளிக்காட்டி விளக்கியவர் சிக்மண்ட் பிராய்டு. பிராய்டு பற்றிய பல விமர்சனங்களை மீறி, இன்றும் அவருடைய நனவிலி நிலை விளக்கம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கவிஞனின் படைப்பாளுமையிலும் நனவிலி நிலை உண்டு. நனவிலி நிலையை அறிந்துகொண்டு அதன் சார்பில் இயங்கும் கவிதை மொழியை அணுகும்போது, கவிஞனின் நோக்கு, மனஇறுக்கம் மற்றும் பிற படைப்புநிலைச் சிக்கல்களை உணரமுடியும். இத்தகைய அணுகுமுறையில் சி. சுப்பிரமணியபாரதி என்ற கவிஞனை ஆராய்ந்தால், பின்செல்லல் - முன்னேறல் ஆகிய இரண்டு நிலைகளுக்கான தத்துவச் சிக்கலின் மொழியாக, பாரதியின் கவிதைமொழி ஆக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ளலாம்.

சீனிவாசவர்மா, முனைவர் கோ. தமிழ் எண்கள் - குறியியல் விளக்கம்

தமிழ் மொழியில் உள்ள உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்கள் மரபு வழியாகப் பல மாற்றங்களுடன் இன்று நம்மிடையே வழங்கி வருகின்றன. எண் கணிதத்திலும் தமிழுக்கென்று ஒருமுறை உள்ளது. இளைய தலைமுறையினருக்கு ஒருவேளை அம்முறையைப் பற்றிய முழுவிவரமும் கிடைக்கவில்லையென்றாலும் அம்முறை உள்ளது என்பதையேனும் கேள்விப்பட்டிருப்பார்கள். உலகில் வழங்கும் பல எண்கணித வரிவடிவத்திற்கும், அவ்வவ்வாறு உள்ள முறைகட்கும், தமிழ் எண்கணித முறைக்கும் ஏதேனும் அடிப்படை ஒற்றுமை உள்ளதா அல்லது முற்றிலும் வேறு அடிப்படையில் உருவாகி வழங்கிவருகின்றதா? என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

அரபு மொழியில் மெய்யெழுத்துக்களே ஆரம்ப நிலையில் ஒன்று, இரண்டு, முன்று என்று வழங்கலாயின. இன்றும் வழங்கி வருகின்றன. மேலும் ஒருசில உட்குறியீடுகளுடன் மேல்நிலை எண்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் வழங்கிவரும் எண்கணித முறையையே இன்று பலரும் 'அராபிக் எண்கள்' என்று தவறாக எண்ணி வழங்கிவருவது வருந்தத்தக்கது. இந்தியாவிலிருந்து அராபியர்களால் வெளிநாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டால் ஒருவேளை அப்பெயர் பெற்றதோ என்ற ஐயப்பாடும் உண்டு.

தமிழ் எண்கள் - ஒன்றும் அதற்கு மேலும் உள்ளவை

க,	உ,	ங,	கூ,	ரு,	சா,	எ,	அ,	கூா	ய/க0,	ள,	த்
1	2	3	4	5	6	7	8	9	10	100,	100

என்பன ஒன்றுக்குக்கீழ் இலக்கங்களான பின்னங்களும் அவற்றைக்குறிக்கத் தனித்தனிக் குறியீடுகளும் உள்ளன.

தமிழ் எண் வரிவடிவத்தை ஆராயும்பொழுது, அக்குறியீடுகளின் வடிவமும், உணர்த்தும் பொருளும் எவ்வாறு அமைந்துள்ளன என்று சுருக்கமாகக் காண்போம். அகரம் மெய்யெழுத்து வடிவிலேயே, மற்றொரு 'குறி'யாக 'ஒன்று' என்ற பொருள் தரும் எண்வடிவமாக வழங்குகிறது. உகரம் வடிவில் மாற்றமின்றி இரண்டினைக் குறிக்கிறது. நுகர வடிவில் மேல்எழும் சிறு கோடு நீக்கப்பட்ட வடிவில் மூன்றினைக் குறிக்கிறது.

இம்முறையில் 'ள' கரம் மெய்யெழுத்துக்குரிய வடிவம் எண் கணிதத்தில் 'நூறு' என்ற பொருளைத் தருகிறது. தமிழ் முறையில் மெய், உயிர், மற்றும் உருவமாற்றமடைந்த குறியீடுகள் பயன்படுகின்றன. பிற மொழிகளில் மெய்யெழுத்துக்கள் மட்டுமே சிறசிறு மாற்றங்களுடன் எண்களைக் குறிக்கும் குறியீடுகளாக வழங்கி வருகின்றன. ஆதலின் தமிழ் எண்கணித முறை குறியீட்டியல் முறையில் ஆராய்ச்சிக்குரியது. அதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சீனிவாசன், முனைவர் இரா. நாட்குறிப்பு வேந்தர் ஆனந்தரங்கப்பிள்ளை காலத்துக் குற்றங்களும் தண்டனைகளும்

ஆனந்தரங்கப்பிள்ளை புதுச்சேரியில் வாழ்ந்த காலகட்டத்தில் (1725-1761) நிகழ்ந்த குற்றங்களையும் அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகளையும் ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பின் வழிநின்று இக்கட்டுரை விளக்குகின்றது.

திருடினால் திருடனுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது

திருட உதவி செய்தவர்களை ஐம்பது அடி அடித்து இரண்டு காதுகளையும் அறுத்து ஊரைவிட்டு வெளியே துரத்திவிட்டனர்.

சாராயம் குடிப்பது குற்றமாகக் கருதப்பட்டுச் சாராயம் குடிப்பவர்க்கும் விற்பவர்க்கும் ஆயிரம் வராகன் அபராதத்துடன் ஒரு வருடம் சிறைக்காவலும் கொடுக்கப்பட்டது.

லஞ்சம் வாங்குவது குற்றமென இக்காலத்தில் கருதப்படுகின்றது. முசே தும்மா புதுச்சேரி கவர்னராவதற்கு மினிஸ்தருடைய வேலைக்காரனுக்குப் பத்தாயிரம் வராகன் லஞ்சம் கொடுத்தார். பதவியில் இருக்கும்வரை ஒவ்வொரு வருடத்திற்கும் 2000 வராகன் வீதம் அவ்வேலைக்காரனுக் கொடுத்தார். தலைமைத்துவிபாஷியாக நியமனம் செய்ய 6500 வராகன் லஞ்சம். 1100,000 வராகன் லஞ்சம் வாங்கிக் கொண்டு சென்னப்பட்டணத்தை இங்கிலீஷ் காரனுக்கு விற்றமை. 200 வராகன் வாங்கிக் கொண்டு சிறைக் கைதியைச் சிறைக்காவலர் விடுதலை செய்தார்.

பொன் மாத்து குறைந்தால் ஆயிரம் வராகன் அபராதமும் கோணக்கு முத்திரையும் போட்டுத் தண்டனையும் வழங்கப்பட்டது.

புதுச்சேரியில் உள்ள செய்திகளைத் தேவனாம் பட்டணத்திற்கு அனுப்பி வைத்ததைக் கண்டுபிடித்துச் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

பட்டணத்து வீதியில் மலஜலம் கழித்தால் ஆறு பணம் அபராதம் விதிக்கப்பட்டது. காவலில் இருந்தவர்களைத் தப்புவிக்கச் செய்யச் செயல்பட்டமைக்காகத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. வேறு ஒருவரின் மாட்டைப்பிடித்து அறுத்த குற்றத்திற்குச் சிறையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

சீனிவாசன், சு., ச. பாஸ்கரன், முனைவர் இராம. சுந்தரம்

ஜிப்பின் நியதி - தமிழ்மொழியில் ஓர் ஆய்வு

அகராதி உருவாக்கும் பணியில் புதுமைகள் பல நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. அன்றாட வாழ்வை வழிநடத்திச் செல்லவும் இடம்பெயரும் புதிய மக்கள் சூழலுக்கு ஏற்ப அடிப்படை வழக்குச் சொற்களைத் (Vocabulary) தெரிந்துகொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆங்கில மொழியில் உரையாடல் நிகழ்த்த அதில் அதிகம் பயன்படும் ஆயிரம் சொற்களை அறிந்தால் போதுமானது என உணரப்பட்டுள்ளது. மேலும் தெளிந்து பேசவேண்டுமெனில் 5000 சொற்களுக்கு மேல் தேவைப்படா.

இத்தகு சொற்களைத் திரட்டுவது எவ்வாறு என்பது அடுத்தெழும் கேள்வி. இதற்கு உரையில் வெளிவந்துள்ள பகுதிகளை ஆராய்ந்து அவற்றிலிருந்து புழக்கம் மிக்க சொற்களைத் தொகுக்க வேண்டும். இவ்வாறு அமையும் சொற்களை நிகழ்வெண் (Occurance) அடிப்படையில் பட்டியலிட்டுப் பொருள் கூறுதல் வேண்டும். அதிகம் கையாளப்படும் ஆங்கிலச் சொற்களின் பட்டியலில் முதல் பத்து இடமதிப்பிற்குள் the. of, and, to, a, I ஆகிய சொற்கள் அமைகின்றன. இப்படி நிகழ்வெண் அடிப்படையில் உருவாகும் அகராதிகள் புதுமொழி கற்போருக்கு அருட்கொடையாக உதவுகின்றன. குறிப்பாகச் சிக்கல் மிகுந்த எழுத்துகள் கொண்ட சீன, ஜப்பான் மொழிகளைக் கற்க, நிகழ்வெண் அடிப்படையில் அமைந்த அகராதிகள் கைகொடுக்கின்றன. தமிழிலும் இத்தகு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மொழிகள் பலவற்றில் சொற்களை நிகழ்வெண் அடிப்படையில் வரிசைப்படுத்தியபோது அதில் ஒரு நியதியை ஜிப் (Zipf) எனும் அறிவியலாளர் கண்டார். அந்நியதி இன்றும் அவர் பெயராலேயே வழங்கப்படுகிறது. ஒரு சொல்லின் நிகழ்தகவு (Probability) அதன் வரிசை இடமதிப்புடன் (Word-order number) எதிர்விகிதத்தொடர்பு கொண்டிருக்கும் என்பது ஜிப்பின் நியதி. இதன் மெய்ப்பாடு பல மொழிகளிலும் சரிபார்க்கப்பட்டு வருகிறது. மூவாயிரம் ஆண்டு வரலாறு கொண்ட சீனமொழியில் இந்நியதியின் மெய்ப்பாட்டில் விலக்கம் (deviation) இருப்பதாக அண்மையில் சிலர் ஆய்ந்து வெளியிட்டுள்ளனர்.

சீனமொழியை ஒத்த பழமை வாய்ந்த தமிழ் மொழியில் வழங்கும் சொற்கள் ஜிப்பின் நியதியைத் தழுவி அமைகின்றனவா என இங்கு ஆராயப்பட்டிருக்கிறது. திருக்குறளிலிருந்து சொற்கள் திரட்டப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் சொற்களின் நிகழ்வெண்ணும் வரிசை இடமதிப்பும் பட்டியல் இடப்பட்டு ஜிப்பின் நியதி சரிபார்க்கப்பட்டிருக்கிறது.

S. SRINIVASAN S. BASKARAN, DR. RM. SUNDARAM ZIPF'S LAW: A PERSPECTIVE STUDY IN TAMIL

The art of dictionary making and compiling encyclopaedia are undergoing continuous change. Attempts are being made to enable acquisition of vocabularies of interest under differing socio-cultural environs. It is learnt that a thousand word vocabulary in English is

just sufficient to manage everyday affairs and transact business. In general to communicate without much ambiguity one would not require more than 500 words. The question that comes to the mind at this point is how to collect these words. This is generally done by carefully analysing the prose material in a language and identifying the more frequently occuring words. These words could then be arranged with their appropriate meanings in the order of their word occurances.

The most frequently occuring words in English occupying the first ten positions include words like `the', `of', `to', `a',`and', `I'. The dictionaries formed on this basis render great help to novices and neoliterates. Especially in languages like Chinese and Japanese which have a lot of complexities, such dictionaries can really make learning the language all the more easier. It is necessary that such attempts are made in Tamil language too.

When words of a given language were arranged according to their frequency in a monotonically decreasing order there emerged a law which was first noticed by the scholar G.K. Zipf a noted scientist. This law states that the occurance probability of a word is inversely proportional to it's sequential number. The validity of this law has been verified in many of the world languages. A recent study on the 3000 year old Chinese language revealed that there is a deviation in the applicability of Zipf's law.

The Tamil language is also known for it's antiquity and a study was carried out to check the validity of this law. The treatise chosen for this study was Thirukkural. The number of subtitles in which the 1330 verses are presented, cover almost all the aspects of human life. Therefore it was considered to be a typical representation of Tamil language usage. The conclusions derived are presented in this paper.

சுசீலா, முனைவர் எம். பழந்தமிழில் முழுமை மாற்றிடு பெயர்

மொழிகள் காலந்தோறும் மாறும் தன்மை வாய்ந்தவை. ஒரு மொழியின் ஒலிகளும் ஒலியின் அமைப்பும் சொல் அமைப்பும் சொல்வகைகளும் சொற்களஞ்சியமும் சொற்களின் பொருளும் தொடரியல் அமைப்புகளும் காலத்திற்குக் காலம் மாறுபட்டு

விளங்குகின்றன. எந்த ஒரு மொழியிலும் ஒருசில நூற்றாண்டுகளுக்கு முந்திய நூல்களை நோக்கின் இந்த உண்மை தெள்ளத்தெளிவாக விளங்கும். இந் நூல்களில் காணப்படும் மொழியின் அமைப்பு தற்கால மொழியின் அமைப்பினின்றும் ஓரளவேனும் மாறுபட்டு இருப்பதைக் காணலாம். ஒரு மொழியின் ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த நூல்கள் அம்மொழியின் அக்கால அமைப்பைக் காட்டி நிற்பவை. ஆகவே ஒவ்வொரு காலகட்டத்திலும் அம்மொழி கொண்டிருந்த அமைப்புகளின் அடிப்படையில் தனித்தனியான இலக்கணங்கள் வரைந்து ஒப்பிடுகையில் அம்மொழியின் இலக்கண மாற்றங்களும், அவற்றிற்குக் காரணமாய் அமைந்த மொழிக்கூறுகளும், மக்களின் மொழி தொடர்பான உளவியல் கூறுகளும் ஆய்வுக்குரியனவாக அமைகின்றன.

இக்கட்டுரையில் தமிழ்மொழி இலக்கணத்தில் ஒரு சிறிய கூறான முழுமை மாற்றிடு பெயர்கள் மட்டும் (Pronouns of totality) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தமிழ்மொழி மிகப் பழைமையான வற்றாத ஜீவநதியைப் போன்ற இலக்கிய, இலக்கணப் பாரம்பரியத்தைக் கொண்ட மொழி. அதன் நீண்ட நெடிய வரலாற்றில் நூற்றுக்கணக்கான புலவர் பெருமக்கள் அரிய இலக்கியப் படைப்புகளைப் படைத்துத் தந்து சென்றுள்ளனர். இவையே இம்மொழியின் வரலாற்றை அறிய அடிப்படையாக அமைபவை. இக்கட்டுரையில் பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமே ஆய்வுக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இலக்கியவளம் மிகுந்த தமிழ்மொழி தனக்கென அவ்வப்பொழுது எழுந்த பல இலக்கணங்களையும் கொண்டுள்ளது. இவற்றுள் தொல்காப்பியம் முதன்மையானது. ஆகவே இவ்விலக்கணம் இம்மாற்றிடு பெயர் குறித்துக்கூறும் இலக்கண வரைவும் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது.

சுந்தரம், முனைவர் இராம. தமிழில் குழந்தைகளுக்கான அறிவியல் இலக்கியம் - ஓர் ஆய்வு

பள்ளி செல்லும் குழந்தைகள் புரிந்துகொள்ளும் வண்ணம் தொடக்க நிலை அறிவியல் முதற்கொண்டு வளர்ந்துள்ள அறிவியல் வரை அனைத்துச் செய்திகளையும் புலப்படுத்தும் நூல்களும், கட்டுரைகளும், செய்தித் துணுக்குகளும் வினாவிடைப் புதிர்களும் கணிசமான அளவு தமிழில் வெளிவந்துள்ளன. குழந்தைகளுக்கான அறிவியல் இதழ்களும் வெளிவருகின்றன. இப்படைப்புக்களுள் மொழிபெயர்ப்பும் உண்டு தற்படைப்பும் உண்டு. கடந்த 10 ஆண்டுகளில் வெளிவந்துள்ள குழந்தைகள் அறிவியல் தமிழ்

இலக்கியங்கள் சிலவற்றைத் தரவாகக் கொண்டு, அவற்றின் உள்ளடக்கம், உத்தி, உரைக்கட்டு (discourse), புலப்பாட்டுத் திறன், புரிதிறன் முதலியவற்றை இக்கட்டுரை நுணுகி ஆராய்கிறது. குழந்தைகளின் வயது, பக்குவம், புரிதிறன் அடிப்படையில் உள்ளடக்கத்தேர்வு அமைந்துள்ளமை, அதனை வெளிப்படுத்தும் உத்தி வகைகள், கையாளப்படும் மொழிநிலை, உரைக்கட்டின் இயல்பு, ஆசிரியரின் புலப்பாட்டுத் திறன், வாசகனின் புரிதிறன் இயல்பு முதலியன இவ்வகை ஆய்வில் முதன்மை பெறுகின்றன. குழந்தைகளின் சொற்கோவை (Vocabulary) இலக்கண அறிவுக்கு ஏற்ப இவ்வறிவியல் இலக்கியம் அமைந்துள்ளதா என்பது இக்கட்டுரையின் முதன்மைக் கூறாக அமையும். தமிழ்மொழி வகுப்பிலும், வாழும் சூழலிலும் இடம்பெறாத மொழிக்கூறுகள் அறிவியல் இலக்கியங்களில் இடம் பெறுதல் உண்டு. அவை குழந்தைகளின் புரிதிறனில் உண்டாக்கும் விளைவு பற்றி அறிய இக்கட்டுரை தூண்டும். மொழிபெயர்ப்புப் படைப்புகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், அவற்றுக்கான தீர்வுகள் பற்றியும் இக்கட்டுரை விளக்கும். அறிவியல் தமிழில் நிகழ்ந்து வரும் மாற்றங்களையும் இத்தரவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. இவ்வகை ஆய்வு பற்றித் தமிழில் கட்டுரைகள்/ நூல்கள் அதிகம் வராத நிலையில் இக்கட்டுரை குழந்தை எழுத்தாளர்களுக்குப் பெரிதும் உதவக்கூடும்.

சுந்தரேசன், முனைவர் சி. சமுதாயத்தில் நாட்டுப்புறக் கதைகளின் செயற்பாடுகள்

கதைகள் கேட்பதும் கதைகள் சொல்வதும் மாந்தர்க்குக் களிப்பூட்டுவன. உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவானவை. ஆளுக்கு ஆள் ஊருக்கு ஊர், நாட்டிற்கு நாடு பரவுவதால் நாடோடிக்கதைகள், செவிவழியாகப் பரவி வருவதால் செவிவழிக்கதைகள், வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் வாய்மொழிக்கதைகள், மரபுவழியாகப் பரம்பரையாக வழங்கப்படுவதால் மரபுவழிக் கதைகள் அல்லது கர்ணபரம்பரைக்கதைகள், கற்பனையாகக் கட்டப்படுவதால் கட்டுரைகள் என்றெல்லாம் நாட்டுப்புறக் கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மனித இன வரலாற்றில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகிறது. ஒருவனின் ஆசைகள், அவலங்கள், விருப்புவெறுப்புகள், கனவுகள், கற்பனைகள் எல்லாமே கதைகளாகின்றன. இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம்காணும் முயற்சி, அச்சஉணர்வு, வாழ்வியலில் நேர்ந்த பாதிப்பு, உயர்வுதாழ்வு, அறம் உரைத்தல் முதலியனவும் கதைகள் தோன்றக் காரணங்களாக அமைகின்றன.

உலகின் துன்பங்கள், அறிவியல் ஆக்கங்கள், சுற்றுப்புறச் சூழல் ஈர்ப்புகள், கொடுமைகள், கோழைத்தனங்கள், சமுதாய வளர்ச்சி ஆகியனவும் கதைகளின் கருப்பொருட்களாயின. நீதிகளைச் சிலகதைகள் மறைமுகமாகவும், சில கதைகள் நேரடியாகவும் கொண்டிருக்கும். முதியோர், இளையோர் என்ற வயது வேறுபாடுகளையும் கடந்து அனைத்து நிலையினரையும் கவர்ந்து சிறந்த பொழுதுபோக்குச் சாதனங்களாயும் விளங்குகின்றன. வளரும் குழந்தைகளைப் பக்குவப்படுத்தித் தயார்ப்படுத்தும் திறனையும் பெற்றுள்ளன. சமூகத்தையும் அதன் உறுப்பான குடும்பத்தையும் சித்தரிக்கின்றன. குடும்ப உறுப்பினர்களிடையே நிலவும் உறவுகளைச் சித்தரித்துச் சிக்கல்களைச் சுட்டிக் காட்டுகின்றன.

சில கதைகள் பண்பாட்டை விளக்குவனவாகவும் சில கதைகள் அப்பண்பாட்டிற்கு மாறுபட்டும் காணப்படுகின்றன. ஆத்திரம்கொள்ளும்போதும் பொய் சொல்லும்போதும் திருடும்போதும் பண்பாடின்றி நடந்துகொள்ளும்போதும் தோன்றும் விளைவுகளைக் கதைகள் காட்டுகின்றன.

கதைகளின் மூலமாக ஒருவன் தனக்குமேல் உள்ளவரின் குற்றங்குறைபாடுகளை வெளிப்படுத்தலாம். அவர்தம் பேராசையை, பொறாமையை, ஏமாற்றுமியல்பை, வேறு விரும்பத்தகாத பண்பை ஒரு விலங்குக் கதையின் மேலேற்றி எள்ளிநகையாடலாம்.

கோடைக்காலங்களில் நிலா வெளிச்சத்தில் அமர்ந் திருக்கும்போதும் மழைக் காலங்களில் அடைமழை பெய்யும்போதும் குழந்தைகள் உணவு உண்ணாமல் உறங்காமல் அடம் பிடிக்கும் நேரங்களிலும், சிறார்களும் பெரியோர்களும் சின்னச்சின்ன சிக்கல்களில் மாட்டிக்கொள்ளும் போதும் குறும்பு செய்யும்போதும் பலரைவைத்து வேலை வாங்கும்போதும், நீண்டநேரம் ஒரே இடத்தில் வேலைபார்க்கும் சூழ்நிலையிலும் வேளாண்மைத் தொழில் செய்யும்போதும் கதைகளைச் சொல்லுகின்ற வழக்கம் இருக்கின்றது.

இக்கதைகள் காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மாறித் தோன்றுவதையும் பார்க்கலாம். மனித வாழ்வின் இயல்புகளையும் மனவளர்ச்சியின் போக்கையும் ஓரளவு அறிய உதவும் வாயிலாகவும் இவற்றைக் கொள்ளலாம். எத்தகைய சமூகமாக இருப்பினும் அதற்கேற்ற வகையில் கதைகள் உருவாகின்றன. அவை பழமை வாய்ந்தனவாகவும் புதுமைவாய்ந்தனவாகவும் இன்றைய நிலையில் உள்ள பண்பாட்டைக் காட்டுவனவாகவும் திகழ்கின்றன.

சுப்பிரமணியபிள்ளை, முனைவர் சி. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் ஆராய்ச்சித் திறன்

தத்துவப் பேராசிரியரான சுந்தரனார் (1855-1897) ஆங்கிலத்தில் 'திராவிட சிசுவின்' காலம் குறித்து எழுதிய ஆய்வு நூல் தமிழிலக்கிய வரலாற்றிலும், தென்னிந்தியப் பண்பாட்டு வரலாற்றிலும் ஒரு மைல்கல் எனலாம். தமிழாய்வுத்துறையில் 100 ஆண்டுகளுக்கு முன்னரே கால ஆராய்ச்சி நெறிமுறைக்குப் புதியதொரு அணுகுமுறையைத் தந்துள்ளார். பேராசிரியருக்குப் பின் கால ஆராய்ச்சியில் ஈடுபட்ட வெங்கையா, சேஷா ஐயர், வையாபுரிப்பிள்ளை, ஔவை துரைசாமிப் பிள்ளை போன்றோர் இவரது அணுகுமுறைகளையும் ஆய்வு நெறிமுறைகளையும் அடியொற்றியே ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

கால ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பேராசிரியரின் கட்டுரைகள் பலவும் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் திங்களிதழ்களில் பல காலகட்டங்களில் வெளியாயின.

1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி (The Ten Tamil Idylls, 1890-1891, pp.661-669; 1891-92,pp.114-119)

2. திருஞானசம்பந்தர்காலம் (The age of Thirujana Sambandhar a question of south Indian Archaeology, 1891-92,pp. 343-54; 435-47; 505-5; 676-83. 1895-இல் பேராசிரியர் இதனை நுலாக வெளியிட்டுள்ளார்).

3. நம்பியாண்டார் நம்பிகளின்காலம் (The date of Nambi Yandar Nambi, பேராசிரியர் வெங்கையா. 1896-97,pp. 289-98).

பேராசிரியரின் நூலாராய்ச்சி அறிவுத்திறத்தால் மேனாட்டாரின் விழுமிய கருத்துக்களை நம் நாட்டவரும், நம் நாட்டு முன்னோர் கருத்துக்களை மேனாட்டாரும் அறிந்து கொள்வதற்கு இவரது நூல்களும் தமிழிலக்கியம் கல்வெட்டு, தமிழ்மொழி, தத்துவம் குறித்த கட்டுரைகளும் மிகுதியும் பயன்பட்டுள்ளன.

இக்கட்டுரையில் சம்பந்தர் கால ஆராய்ச்சியே முதன்மைப் பொருளாகவும் ஆய்வுப் பொருளாகவும் எடுத்துக்கொள்ளப்படு கின்றது.

பேராசிரியர் தம் ஆய்வில் மேற்கொண்ட கருதுகோள்கள் சிலவற்றை இங்குச் சுட்டலாம்.

1. வீரசோழியம் பற்றி டாக்டர் பர்ணல் குறிப்பிட்ட கருத்துக்களும், செய்திகளும்.

2. ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் தமிழ் குறித்தமைந்த கட்டுரையின் கருத்தாழமின்மை.

3. டாக்டர் கால்டுவெல், டாக்டர் நெல்சன், டாக்டர் லோவேந்தல், டாக்டர் கூல்ஸ் போன்றோர் சம்பந்தர் காலம் பற்றி உண்மைக்குப் புறம்பாகக் கூறியமை.

4. மேனாட்டு யாத்ரீகர்களின் குறிப்புகளின் அடிப்படையிலான தவறான கருத்துக்கள்.

5. வரலாற்றாய்வாளர்களான ரஜீதின், வாஸப் ஆகியோரின் முரண்பாடான கருத்துரைகள்.

இவை அனைத்தையும் மறுத்துரைத்து, தன் கருத்துக்களை ஏற்புடைத்ததாகக் கூறும் திறன் கட்டுரையின் முதற்பகுதியில், இடம் பெறும்.

இலக்கியக் கருத்துக்கள், வரலாற்று நூல்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், புராணங்கள், பட்டயங்கள், ஊர்ப்பெயர், மொழிமைப்பு போன்றவற்றை அடிப்படைத் தரவுகளாகக் கொண்டு ஆய்வு அமைந்துள்ளமை அடுத்த நிலையில் விளக்கப்படும்.

பேராசிரியர் ஆய்வில் மேற்கொண்ட விளக்கமுறை விவாதமுறை, ஒப்பீட்டு முறை போன்ற ஆய்வு அணுகுமுறைகள் அனைத்தும் தெளிவு செய்யப்படும்.

சைவத்தின் சிறப்பு - சம்பந்தர் பெருமை - அவரது இறைக்கோட்பாடு, உயிர்க்கோட்பாடு ஆகியனவும், 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அமைந்திருந்த வடமொழிச் செல்வாக்கு - பிராமணர் எதிர்ப்பு - தனித்தமிழியக்கம் - திராவிட நாட்டுணர்வு - பேராசிரியரின் தமிழ்ப்பற்று - தேசியப்பற்று ஆகிய சமுதாய வரலாற்றுப் பண்பாட்டுச் சூழல்கள் தெளிவு செய்யப்படும்.

கால வரலாறு சமூகத்திற்குத் தேவையானது. அது செயல்முறை கருதிய பயனாய்வு (Applied Criticism) எனும் கருத்து இக்கட்டுரையில் வலிமை பெறும்.

இலக்கியங்களின் நம்பகத் தன்மையையும், ஏற்புடைமையையும் (Realibility and Validity) உறுதி செய்து அதனடிப்படையில் இலக்கியங்களைத் தக்கதொரு வரலாற்றுச் சான்றாதாரங்களாகக் கொள்ளவும் மதிப்படையச் செய்யவும் இயலும் எனும் கருத்தேற்றத்தின் அடிப்படையில் செய்திகள் தரப்பட்டுள்ளன.

இறுதிப் பகுதியில் பேராசிரியரின் ஆய்வுத்திறன் குறித்த மதிப்பீட்டுக் கருத்துக்கள் விளக்கமாகவும், விரிவாகவும் இடம்பெறும்.

சுப்பிரமணியபிள்ளை, முனைவர் கோ. கற்றலில் மின்னணுவியல் மற்றும் கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பங்களின் பங்கு

எத்துறையிலும் ஏற்படுகின்ற பிரச்சனைகளைத் தீர்த்துக் கால, பண, ஆள் விரயங்களைத் தவிர்த்துச் சிக்கனமாக ஆனால் அதே நேரத்தில் அதிகபேருக்குப் பயன்படுகின்ற வழிமுறைகளை வகுத்துக் கொடுக்கும் திறனுடையதையே தொழில்நுட்பம் என்கிறோம் இந்தியாவில் இன்றைய சூழ்நிலையில் கல்வியை நாடி வருவோர் எண்ணிக்கை நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. குறைந்த நேரத்தில் கூடுதலானோருக்கு அதிக அறிவைச் சிறப்பாகக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மாணவர்களது கற்றல் திறனும் காலத்திற்கு எற்ப அதிகமாக்கப்பட வேண்டும். இவற்றை அடைவதற்குக் கல்வித் தொழில்நுட்பம் ஒன்றே வழியாகும்.

கல்வியியல் உளவியல், சமூகவியல் ஆகியவை கண்டுள்ள புதிய அறிவுக்கூறுகள் மின்னணுவியல் மற்றும் சாதனங்களின் உதவியினாலோ அல்லது தனியாகவோ மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் சார்ந்த பிரச்சனைகளைத் தீர்க்கப் பயன்படுத்தப்படுவதையே கல்வித் தொழில்நுட்பம் என்கிறோம். இவ்வகைத் தொழில்நுட்பம் தனிப்பட்ட மாணவன், பல மாணவர்களடங்கிய சிறு குழுக்கள் மற்றும் பல்வேறு இடங்களிலுள்ள பலதரப்பட்ட மாணவர்களை அதிகமாகக் கொண்ட பெருங்குழுக்கள் ஆகியோரின் கற்றல், கற்பித்தல் செயல்களுக்கானதாக அமைகின்றது. மின்னணுவியலின் முன்னேற்றங்கள் முன்கூறப்பட்ட நிலைகள் ஒவ்வொன்றையும் மற்றொன்றிற்காக எளிதில் மாற்றிக் கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டன. இத்தொழில் நுட்பங்கள் மூலம் ஆசிரியர் மாணவர் செயல்முறைகளில் பெருத்த மாற்றம் ஏற்படுகிறது. ஆசிரியர் இன்றியே மாணவர்கள் கருவிகளை மையமாகக் கொண்டு தக்க மென்பொருட்கள் மூலம் ஆசிரியருடன் ஏற்படுத்திக்கொள்ளும் பல்செயல்களையும் ஏற்படுத்திக் கொண்டு பயன்பெறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இம்மென்பொருட்களைப் பாதுகாத்து வைக்கும் தன்மையால் அவை மீண்டும் மீண்டும் விரும்பியபோதெல்லாம் பயன்படுத்திக்கொள்ளும் நிலையிலும் உள்ளன. தொலைக்காட்சி வழி கற்றலில் நாட்டின் எங்கோ ஒரு மூலையிலுள்ள மாணவன் தொலைக்காட்சி நிலையத்திலுள்ள ஆசிரியரோடு தொடர்பு கொண்டு அவர் நடத்திய பாடத்தில்

சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள முடிகிறது. மாறிவரும் இவ்விதச் சூழ்நிலைகளுக்கேற்பத் தங்கள் மாணவர்களின் கற்றலில் உதவியுரியத் தன்பங்கினையும் பணியினையும் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர்.

சுப்பிரமணியன், முனைவர் பெ. தமிழ் நாட்டுப்புறக் கதைகளில் அமைப்பு முறைகள்

நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாக மக்கள் மத்தியில் வழங்கப்பட்டு வருவன. பெரும்பாலும் மக்களின் பேச்சு மொழியில் அமைந்தவை; எளிமையானவை. ஒவ்வொரு சூழலுக்கும், வட்டாரத்திற்கும் ஏற்பக் கதைகள் வழங்கி வருகின்றன.

இன்று அமைப்பியல் அணுகுமுறை (Structural Approach) செல்வாக்குப் பெற்ற அணுகுமுறையாகக் கருதப்படுகின்றது. நாட்டுப்புறவியல், மானுடவியல், சடங்குகள், திருவிழாக்கள், மொழியியல் ஆகிய துறைகளில் அமைப்பியல் பெரிதும் பயன்படுத்தி ஆராயப்பட்டு வருகின்றது.

தொல்காப்பியர் நாட்டுப்புறக் கதைகளை இரண்டாய் வகைப்படுத்திக் கூறியுள்ளார். அவையாவன,

1. பொருளில்லாத கட்டுக்கதைகள், 2. பொருளுள்ள நகைச்சுவைக் கதைகள்.

“பொருளொடு புணர்ந்த நகைமொழி”, “உரையொடு புணர்ந்த பழமை” எனும் தொடர்கள் மூலம் கதைப் பொருளோடு இணைந்தமைந்த அமைப்பியல் கூறுகளையும் (Structural elements) கருத்தில் கொண்டே தொல்காப்பியர் கதைகளை வகைப்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

பிராப் (Propp) செயலை (Function) அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புறக் கதைகளின் அமைப்பினை ஆராய்கிறார். மானுடவியல் அறிஞர் லெவிஸ்திராஸ் புராணக் கதைகளில் அமைந்துள்ள அமைப்பு, எதிர்நிலை அமைப்பு முறைகளை (Binary opposition) ஆராய்ந்து கூறியுள்ளார். ஆலன்டாண்டஸ், லிண்டாடேக், ராட்கிளிப்பிரௌன், டிப்ரிமாண்ட் (Claude Bremond) ஆகியோர் அமைப்பியல் ஆய்வு முறைபற்றிக் கூறியுள்ளனர்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், கோவை, பெரியார் மாவட்டங்களில் திரட்டப்பட்ட நாட்டுப்புறக்கதைகள் மட்டுமே இங்கு

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

பிராப், லெவிஸ்திராஸ் ஆகியோர் குறிப்பிடும் அமைப்பியல் கோட்பாடுகள் ஆய்வில் பொருத்திப் பார்க்கப்பட்டுள்ளன.

ஆய்விற்கு எடுத்துக்கொண்ட நாட்டுப்புறக் கதைகளில் அமைந்துள்ள அமைப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

1. ஒரே தன்மையுடைய கதைகளாக அமைந்துள்ள அமைப்பு முறை
2. இருநிலை எதிர்வு அமைப்பு (Binary opposition) - முறைக் கதைகள்
    அ. செயல், எதிர்ச் செயல் அமைப்புடைய கதைகள்
    ஆ. உடன்பாட்டு எதிர்மறை அசைவு அமைந்த கதைகள்
3. சங்கிலித் தொடர்பான செயல்கள் அமைந்த கதைகள்
4. வட்டச் சுழல் அமைப்பு முறை அமைந்த கதைகள்
5. சிக்கல் ஏற்படுதலும், சிக்கல் விடுவிக்கப்படலும் என்ற அமைப்புடைய கதைகள்

இவ்வாறு தமிழ் நாட்டுப்புறக் கதைகளில் பல்வேறு வகையான அமைப்பு முறைகள் காணப்படுகின்றன. அமைப்பியல் ஆய்வின் மூலம் தமிழ் நாட்டுப்புறக்கதைகளை ஆராயும்போது நாட்டுப்புறக் கதைகளின் கதைப் பின்னல், கதை சொல்லும் முறை, உத்தி முறைகள், கதைகளில் அமைந்துள்ள நுட்பமான பொருண்மை ஆகியனவற்றை அறிய முடிகின்றது.

சுப்புரெட்டியார், முனைவர் ந. கவிமணியின் கவிதைகளில் பளிச்சிடும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை திருவிதாங்கூரைச் சேர்ந்தவர். பாரதியின் கவிதைப் பரம்பரையினர். இவர்தம் கவிதைகளில் நாட்டுப்பற்றின் நறுமணம் கமழாவிடிலும் தமிழ்ப்பண்பாட்டின் பெருநலமே நிரம்பித் ததும்புகின்றது. இதுவே இவர்தம் கவிதைகளின் உயிர்நாடி. தமிழ்ப்பற்று மிக்கவர். இவர் தம் தமிழ்ப்புலமையும் அறிவியல் பயிற்சியும் இவர்தம் பண்பாட்டுணர்ச்சியை மேலும்

உரம்பெற்றுச் செழித்து வளரச் செய்தது.

உண்மையான பண்பாடு கால தேச நியதிகளுக்குள் கட்டுப்படுவதன்று. பிறநாடுகளிலும் பிறசமயங்களிலுமுள்ள பெரியோர்களையும் பாராட்டிப் போற்றும் இயல்புவாய்ந்தது. இயேசு பெருமானைக் குறித்து இரட்சகர் என்ற தலைப்பில் இவர் இயற்றிய கவிதைகள் இந்த உண்மைக்குத்தக்க சான்றாகும். நமது நாட்டுப் பெரியோர்களாகிய வள்ளுவர் பெருமான், புத்தர், ஔவைப்பாட்டி, கம்பநாடன், பாரதியார் இவர்களையும் மறக்காமல் இவர்களைப் பற்றியும் இயற்றியுள்ள கவிதைகள் தமிழ்ப்பண்பாட்டை இவர் எவ்வாறு அனுபவித்துள்ளார் என்பதை விளக்க வல்லன.

இயங்குதிணை நிலைத்திணை அனைத்திலும் இறைவன் அந்தர்யாமியமாக உறைகின்றான் என்பது இந்தியப் பண்பாட்டின் அடிநிலைக் கொள்கைகளுள் ஒன்று. இதற்காக இவர் கிளி முதலிய பறவைகளைக் குறித்தும், ரோஜா முதலிய செடிகொடிகளைக் குறித்தும், ஆறு கடல் ஆகியவற்றைக்குறித்தும் குழந்தைகளைக் குறித்தும் அருமையாகப் பாடியுள்ளார். இவற்றாலும் இவர்தம் பண்பாட்டுணர்ச்சியின் பெருமை புலனாகிறது.

தமிழ்ப்பண்பாட்டின் அடிநிலைக் கொள்கைகளுள் மற்றொன்று நிலையாமையை வற்புறுத்தி நிலைத்த இன்பத்தைத் தரும் வீடுபேற்றை உணர்த்துவது. இக்கருத்து இவர்தம் பாடல்களில் பளிச்சிடுகின்றது. பண்பாட்டிற்குப் பகையாகி நின்று இடையூறு விளைத்துவரும் சமுதாய ஒழுக்கங்களைப் பெரிதும் இகழ்ந்து வெறுப்பதையும் இவர்தம் பாடல்களில் காணலாம்.

மக்கட் பண்பைப் பேணும் தன்மையும் பண்பாட்டுக் கொள்கைகளுள் பிறிதொன்று. இதனையும் விளக்கும் பாங்கில் இவர்தம் பல பாடல்கள் அமைந்துள்ளன. பண்டைய இலக்கியங்களில் காணப்படும் இக்கொள்கை தமிழின் மறுமலர்ச்சியிலும் பொங்கி வழிகின்றது. என்பதற்கும் இவர்தம் பாடல்கள் சான்றாக அமைகின்றன. வினையே ஆடவர்க்கு உயிர் என்ற பண்டைய கொள்கையும் பாடல்களில் பாங்குற அமைந்துள்ளது.

சுபாசுசந்திரபோசு, முனைவர் பெ. சமூக வளர்ச்சியில் இதழியலின் பங்கு

இதழியல் வரவு மானுட வரலாற்றில் ஒரு புதிய பரிணாமம். நாட்டின் தகவல் ஓட்டத்துக்கும், கருத்துப் பரிமாற்றத்திற்கும்,

தொடர்பியல் சாதனத்தில் முதன்மையானது இதழியல். தொடர்பியல் சாதனங்களில் அச்சுச் சாதனமே இதழியல். இதை அச்சு இதழியல் என்றும் கூறுவர்.

இதழியல் என்பது செய்திகளையும், கருத்துக்களையும் சேகரித்து, செப்பனிட்டுக் குறிப்பிட்ட காலத்தில் சட்டவரையறையோடும், சமூகப் பொறுப்போடும், நடுநிலையில் சமுதாய விழிப்புணர்ச்சிக்காகச் செய்யும் பரப்பியல் பணி.

இதழியல் சமூகத்துக்குள் ஒரு உறவு நிலையை உருவாக்கும் ஒரு சமூகச் செயற்பாடு. தொடர்பியல் சாதனங்களில் இதழியல்துறை தனியாரால் நிறுவன அமைப்பில் நடத்தும் தொழில், கலை, அறிவியலாகும்.

இதழியல் நாட்டைக் கண்காணிக்கும் நான்காம் தூண். இதழியல் வெளியீட்டின் முதன்மையானது இதழ்கள். இதழ்களைக் கால அடிப்படையிலும், உள்ளடக்க அடிப்படையிலும் பாகுபடுத்தலாம். இதழ்களை நாளிதழ்கள், கால இதழ்கள் என்று வகைப்படுத்தல். நாளிதழ்களை நடுநிலை இதழ்கள் அரசியல் இதழ்கள் என்றும் கால இதழ்களைச் செய்தி இதழ்கள், கருத்து இதழ்கள், பொழுதுபோக்கு இதழ்கள் சிறப்பு இதழ்கள் என்றும் பிரித்து விளக்குதல்.

இதழ்களின் அடிப்படைப்பணிகள் - சிறப்புப்பணிகள் - யுனஸ்கோ அறிக்கை குறிப்பிட்டுள்ள தொடர்பியல் சாதனப்பணிகள் - மக்களாட்சியில் இதழ்களின் பணிகள் - பற்றி விளக்குதல்.

சமுதாய வளர்ச்சியில் கூர்மையான வீச்சை ஏற்படுத்தி வருவது இதழியல். இது சமுதாயக்கல்வியாகவும், கல்விக்குத் துணைசெய்யும் கருவியாகவும், படிப்புத்துறைகளில் புதிய பாடமாகவும் செயல்படுதலை விவரித்தல்.

முடிவில் இன்றைய இதழ்களின் பணிகளையும், விளைவுகளும் சமூகநோக்கில் மதிப்பீடு செய்தல்.

DR. P. SUBASCHANDRA BOSE THE ROLE OF JOURNALISM IN SOCIAL DEVELOPMENT

The emergence of Journalism is a new development in human history. Journalism is a prime means of communication in the country as it plays a pivotal role in the spread of news and in the exchange of ideas. Of the many means of communication, printing

essentially constitutes journalism. Hence, journalism is often referred to as Print Journalism.

Journalism is a field in which news and views are gathered, edited and objectively disseminated at the appropriate time within legal limits and with a sense of social responsibility. Journalism aims at social awakening.

Journalism is a social activity which leads to social cohesion. Of the many media of communication Journalism is an institution run by individual managements. Journalism is at once an industry, an art and a science.

Journalism is the Fourth Estate which supervises the happenings in the country. Of the journalistic publications, journals are of prime importance. Journals can be classified in terms of period or content. Journals can be classified as dailies (newspapers and periodicals. Dailies are of two types viz. Objective journals (or neutral, impersonal journals and political) or polemical journals. Periodicals can be News Journals, Views Journals, Passtime Journals and Special Journals.

The basic duties of Journals - Special duties - The duties of the communication Media as outlined by UNESCO - The duties of journals in a democracy - explanation.

Journalism plays a vital role in social development. It works as Social Education, a tool for Education, and as a novel academic syllabus.

Conclusion - evaluating the functions and the influence of today's journals from a socilogical angle.

சூசை, இ. தமிழ் இலக்கணத்திற்குக் கிறித்தவர்களின் கொடை

புடைமாற்று ஒப்புமை இலக்கணம் - உறழ்வு இலக்கணம் - ஒப்பிலக்கணங்கள் பற்றிய சு. இராசாராம் கருத்து விளக்கம் - மேனாட்டுக் கிறித்துவ அறிஞர்கள் தமிழ்மொழி இலக்கணத்தைப் புடைமாற்றம் செய்து ஒப்புமை செய்த பாங்கு - கிறித்தவர்கள் தமிழிற்கு அளித்த மரபு இலக்கணங்கள் - ஒப்பிலக்கணங்களை ஆய்தல்.

அண்டிறீக்கு அடிகள், வீரமாமுனிவர், வால்டோ, சீகன்பால்கு, கால்டுவெல், ஜி.யு. போப் மற்றும் 20-க்கும் மேற்பட்ட ஐரோப்பிய அறிஞர்களின் இலக்கண நூற்பட்டியல் சிறுவிளக்கங்கள்.

வாடிகன் நகர நூலகத்தில் உள்ள பௌலினஸின் அவர்களின் தமிழ் இலக்கணப் பிரதி, மற்றும் ஐரோப்பிய நூலகங்களில் உள்ள ஐரோப்பியக் கிறித்தவர்கள் படைத்த அச்சேறாத நூல்கள், சென்னை கீழ்த்திசை (ஓலைச்சுவடி) ஆவணக் காப்பகத்தில் உள்ள வீரமாமுனிவர் எழுதியதாகக் கூறப்படும் செய்யுள் இலக்கணம், தொன்னூல், திறவுகோல் இலக்கணங்களில் உள்ள யாப்பிலக்கணச் செய்திகளை ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டு ஆய்ந்து முடிவு கூறுதல்.

அண்டிறீக்கு அடிகள் எழுதிய மலபார் மொழி இலக்கணத்தில் கூறப்படும் இலக்கணக் கோட்பாடுகளை ஆய்தல் - இந்நூல் கிடைக்கவில்லை எனக்கூறும் புகழ்பெற்ற அறிஞர்களுடைய கருத்தை மறுத்தல் - அரிதாக மேனாட்டு நூலகங்களில் மட்டுமே உள்ள தமிழ் இலக்கணம் பற்றிய நூல் விவரங்களை அளித்தல்.

தொன்னூல் விளக்கத்தின் சென்னை உ.வே.சா. நூலகச் சுவடி - கீழ்த்திசை ஆவணக் காப்பகச் சுவடி - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி - இவற்றுடன் களத்தூர் வேதகிரி முதலியார் பதிப்பு வேறுபடுவதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி வீரமாமுனிவர் எழுதிய உரையை நிறுவுதல்.

I. **SUSAI** CONTRIBUTION OF CHRISTIAN SCHOLARS TO TAMIL GRAMMAR

Transfer grammar - contrastive grammar - Descriptive comparative grammar - Explanation by Dr. Rajaram - transfer grammar popularised in European languages by christian scholars 16-th, 17-th and 18-th centuries...

Henrique Henriques - Viramamunivar (Fr. Beschi)- Ziegenbalg - Walter - Caldwell - G.U. pope - others.

Paulinus a Semeto Bartholomaeo (1748-1806) - A Latin manuscript of Tamil Grammar entitled "GRAMMATICA TAMULICA IN COMPENDIO REDACTA" list of OTHER Scripts in Archives of Vatican and other renowned Libraries. Fr. Beschi's prosody grammar manuscript in oriental library of Madras. A comparative approach between the prosody and Thonnul Villakkam.

Arte da lingua malabar - written between and in Portuguese by the Jesuit Missionary - In national library of Lisbon Portugal - Brief sketches of this grammar book-outline of other transfer grammar by European scholars.

Comparative study between the copies of Palmleaf Thonnul Villakkam and printed tonnul by Vedagiri Mudaliar. Examples from the above books.

செல்லப்பன், முனைவர் இராதா அறிவியல் மொழிபெயர்ப்பு

தமிழிலே அறிவியல் இலக்கியங்களை இரு வகைகளிலே படைக்க முடியும். ஒன்று மூலநூலாகவே படைப்பது. மற்றொன்று, ஆங்கிலம் போன்ற பிறமொழி நூல்களிலிருந்து மொழிபெயர்ப்பது. தமிழ்வழிக் கல்வியை முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாததற்கு முக்கியமான ஒரு காரணம் போதிய பாடநூல்களும் குறிப்புதவி நூல்களும் தமிழிலேயே இல்லை என்பதாகும். பாடநூல்கள், குறிப்புதவி நூல்கள், பொதுமக்களுக்கான நூல்கள் எனப் பலவகை நூல்களும் இன்றையகாலகட்டத்தின் முக்கியத் தேவைகள்.

தமிழில் அறிவியல் மூலநூல்களைவிட மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கையே அதிகம். இருப்பினும் இம்மொழிபெயர்ப்பு நூல்கள் பெரும்பான்மையும் நல்ல மொழிபெயர்ப்புகளாக அமையவில்லை. கருத்துத் தெளிவின்மை முக்கியமான ஒரு குறைபாடாக உள்ளது. மூலநூல் கருத்தை மாற்றமின்றித் தெளிவாகத் தரும் வகையில் மொழிபெயர்ப்பு அமையவேண்டும். இந்த மொழிபெயர்ப்பு நெறி தமிழில் உள்ள பெரும்பாலான மொழி பெயர்ப்புகளில் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை.

அறிவியல் மொழிபெயர்ப்பாளர்களின் கலைச்சொல் பெயர்ப்பு முறைகளிலும் ஒருமைப்பாடு காணப்படவில்லை. எனவே மொழிபெயர்ப்பு முறைகளை அறிந்து செயல்படவேண்டுவது இன்றியமையாததாகிறது. ஆகையால் மொழிபெயர்ப்பு முறைகளும் இக்கட்டுரையில் சுட்டப்பெறுகின்றன. சான்றாக, மருத்துவக் கலைச்சொல் ஒட்டுக்களை மொழிபெயர்க்கும் முறையைக் கூறலாம். - ectomy, - ostomy ஆகிய இரு ஒட்டுகள் அறுவை மருத்துவக் கலைச்சொற்களில் உள்ளவை. இவை அறுவைச் சிகிச்சையின் இருநிலைகளைச் சுட்டுகின்றன. நோய்கண்ட உறுப்பினை முழுவதுமாக அகற்றும் நிலையை - ectomy என்ற ஒட்டு சுட்டுகிறது. இந்த உறுப்பில் ஒரு திறப்பினை அமைப்பது மற்றொரு சிகிச்சை. இதனை - ostomy என்ற பின்னொட்டு குறிக்கிறது. இந்தக் கிரேக்க ஒட்டுக்களின்

பொருளை அகராதி மூலம் அறிந்து அவற்றைத் தமிழிலே பெயர்க்கலாம். - ectomy, - ostomy இவற்றை முறையே எடுப்பு, திறப்பு எனப்பெயர்க்கலாமா? என்பதையும் சிந்திக்கலாம்.

தமிழ் மொழியின் மரபிற்கேற்ப, சொல்லமைப்பு, சொற்றொடரமைப்பு வாக்கியங்கள் தொடரும் முறை ஆகியன அமையவேண்டும். அதுவே கருத்துத் தெளிவிற்கு வழிவகுக்கும் என்பதையும் மொழிபெயர்ப்பாளர்கள் உணர்ந்து செயல்படவேண்டும். ஆங்கில மரபுப்படி இவை அமைந்தால் கருத்துத்தெளிவு ஏற்படுவதில்லை. காட்டாக, கீழ்வரும் மொழிபெயர்ப்பு வாக்கியத்தைச் சுட்டலாம்.

"வயது, அனுபவம், பல்வேறு காலப்பருவங்கள் மற்றம் இதர தனிமனிதப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினால் நுரையீரல் நோய்கள் ஏற்படும் தன்மையும் ஆய்வு செய்யப்பட்டன".

இவ்வாக்கியத்தில் பின்வருமாறு உரிய மாற்றங்களைச் செய்வதன் மூலம் கருத்துத் தெளிவு ஏற்படுகிறது.

"வயது, அனுபவம், பல்வேறு பருவகாலங்கள், இதர தனிமனிதப் பழக்கவதுக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்து ஏற்படும் நுலையீரல் நோய்களின் தன்மைகள் ஆய்வு செய்யப்பட்டன" என்றதால் வாக்கியம் எளிமையடைகிறது.

மொழிபெயர்ப்பு நூல்களை முக்கியமாக, பொறியியல், மருத்துவ நூல்களைத் தரவு நூல்களாகக் கொண்டு சொல்நிலையிலும் வாக்கியநிலையிலும் ஏற்படும் மொழிபெயர்ப்புக் குறைபாடுகளைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கம். குறைபாடுகளை அடையாளம் கண்டுகொள்வதனால் மட்டுமே செம்மைப்படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிய முடியும். எனவே கருத்துத் தெளிவின்மைக்கான காரணங்களை அடையாளம் கண்டு அவற்றிற்கான தீர்வுகளைக் காணுவதன் மூலம் இனி வெளிவரவிருக்கும் மொழிபெயர்ப்பு இலக்கியம் செம்மையுற இக்கட்டுரை உதவும்.

செல்லையா பிள்ளை, முனைவர் சு. மாறனகப்பொருள் நூலும் அகமரபுகளும்

தமிழுலகம் இதுவரை முழுமையாக அறிந்திராத அகப்பொருள் நூலாகிய மாறனகப் பொருளின் அகத்திணையியல், ஒழிபியல் ஆகிய இரு இயல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து கண்டறிந்து அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும்

ஐந்து இயல்களைக் கொண்டதாக இந்நூல் பதிப்பிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அகத்திணையியல் - 128 நூற்பாக்கள், களவியல் - 62 நூற்பாக்கள், வரைவியல் - 34 நூற்பாக்கள், கற்பியல் - 10 நூற்பாக்கள், ஒழிபியல் - 126 நூற்பாக்கள் - என மொத்தம் 360 நூற்பாக்களைக் கொண்டது இந்நூல்.

மாறனகப்பொருள் நூல் அதன் முன் தோன்றிய அகப்பொருள் நூல்களில் கூறப்பட்டுள்ள அகமரபுகளை மீறாது, நம்பியகப்பொருள் நூலைத்தழுவி, அதன் அமைப்பை அடியொற்றி இயற்றப்பட்டுள்ளது. இருப்பினும் கால மாறுபாட்டால் சில இடங்களில் நம்பியகப்பொருளிலிருந்து வேறுபட்டும், விரித்துக் கூறவேண்டிய செய்திகளை விரித்துக்கூறியும் புதுவிளக்கங்கள் தந்தும் புதிய சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியும் புதுமையாக விளங்குகிறது .

ஆசிரியர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருக்குருகைப் பெருமாள் கவிராயர் ஆவார். குலம் - வேளாளர் குலம். சமயம் - வைணவ சமயம். நம்மாழ்வாரிடத்து மிகுந்த பக்தி கொண்டவர். தமது இலக்கணப் படைப்புகளாகிய மாறனலங்காரம், மாறன் பாப்பாவினம், மாறனகப்பொருள் என்ற நூல்களை நம்மாழ்வார் என்ற மாறன் பெயரிலேயே படைத்துள்ளார்.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் அகப்பொருள் இலக்கணத்தைப் புதிதாய்ப் படைக்கவில்லை. தனக்கு முன் தோன்றிய அகப்பொருள் இலக்கண நூல்களைக் கற்று, வழக்கு மொழியினையும் செய்யுள் மொழியினையும் ஒரு சேரத் தொகுத்து வகுத்தார் எனலாம். மாறனகப் பொருள் நூலில் வரும் 'இசைத்தனர் புலவர்' (48) 'உணர்த்தினர் புலவர்' (277) 'என்ப' (23, 56, 305) 'என்மனார்' (99) 'கழறுவர்' (46) 'செப்புவர்' (308) செப்பினர் புலவர்' (342) 'நிகழ்த்தினர் புலவர்' (300) 'மொழிந்தனர் புலவர்' (40, 59) 'மொழிந்துமுளர்' (296) 'மொழிப' (108, 326, 341, 349) போன்ற சொற்றொடர் ஆட்சிகள் ஆசிரியர் மரபுவழி நூல் செய்தார் என்பதற்குச் சான்று பகர்கின்றன.

தமிழகத்தில் வாழும் மக்கள் வாழ்க்கை முறைகளையும் பழைய இலக்கிய இலக்கண நூல்களையும் கற்றுணர்ந்து ஐந்திணைகளை விளக்குதற்பொருட்டு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மரபுகளை உணர்த்துகிறார்.

அன்பின் ஐந்திணை மாந்தர்கள் அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் உடையவர்களாகவே இருப்பர். ஒருதலைக் காமமும் பொருந்தாக்காமமும் இழிந்தோரிடத்தில்தான் காணப்படும்.

இவ்விழிந்தோர் தலைமக்களாக வருவது மரபன்று.

களவிலும் கற்பிலும் இன்னின்னார் இன்னின்னாரோடு இன்ன இன்ன முறைகளில் தான் பேசவேண்டும் என்ற வரையறையை வற்புறுத்திக் கூறுவது மரபு. அயலார், ஊர்மக்கள், சேரியோர், நோய்மருந்தறிஞர், தந்தை, தன்னை என்று இவர்கள் கூற்று நிகழ்த்துதற்கு உரிமை இல்லை (244).

தலைவன், தலைவி, பாங்கி, செவிலி, நற்றாய், கண்டோர், கேட்போர் ஆகியோர்க்குரிய மரபுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தலைவன் பொருள், தூது, கல்வி காரணமாகப் பிரிவுழித் தலைவியை உடன்கூட்டிச் செல்லும் மரபு கிடையாது (87).

மடலேறுதல், அறத்தொடுநிற்றல் என்பவற்றிலும் மரபுநிலை வலியுறுத்தப்படுகிறது. அகப்பொருள் பற்றிய செய்திகள் புனைந்துரையாகவும் (நாடகவழக்கு) உலகியலாகவும் கூறப்படுவது மரபு ஆகும் (3).

'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு' - (நன்னூல் - 388)

என்னும் நன்னூலார் கூற்றுப்போலக் காலத்தின் மரபினைப் போற்றி மாறனகப்பொருளும் மரபுநிலை தவறாது அகப்பொருள் கருத்துக்களை நிறுவியுள்ளது எனலாம்.

செல்வகணபதி, முனைவர் சண்முக. பாரதிதாசன் கார்ல் சான்ட்பர்க்கு பாடல்கள் - ஓர் ஒப்பியலாய்வு

தமிழ்த் தேசியக்கவி பாரதியின் வழியில் தோன்றி, தந்தை பெரியாரின் பாதையில் நடைபோட்ட பாவலனாகப் பாரதிதாசனும் அமெரிக்கத் தேசியக்கவி வால்ட் விட்மன் வழியில் தோன்றி ஆபிரகாம்லிங்கனின் பாதையில் நடைபோட்ட பாவலனாகக் கார்ல் சான்ட்பர்க்கும் விளங்குகின்றனர். காலத்தின் குரலாகவும், பாமர மக்களின் பங்காளியாகவும், தொழிலாளர்களின் தோழர்களாகவும், ஒடுக்கப்பட்டவர்களின் குரலை எடுத்து முழங்குபவர்களாகவும் இலக்கியம், வரலாறு, நாட்டுப்புறம், இசை, உளவியல், சமூகவியல் போன்ற பல்துறை வல்லமை நிறைந்தவர்களாகவும் விளங்குகின்றனர்.

இருவரும் இயற்கையின் பேரமைதியில் இன்பம் காண்கின்றனர். சமூகப் புரையோடல்களால் பாதிக்கப்பட்ட இக்கவிஞர்களுக்கு இயற்கை இதம் நல்கும் மருந்தாகிறது. குழந்தை நிலையில் இயற்கையின் அழகையும் ஆற்றலையும் கண்டு இன்புறுகின்றனர்.

நாட்டுப்புற வாழ்க்கை இசையில் முகிழ்த்து இயற்கையில் வளர்கிறது. இவ்விரு கவிஞர்களும் நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்கள், இசை, ஆடல் போன்ற பாட்டுக் கூறுகளையும் கவிதைகளில் எதிரொலிக்கின்றனர்.

இருவரும் சிறுவர் இலக்கியத்தை அதற்கான பாடுபொருள், எளிமையான நடை, இசையமைதி போன்ற இலக்கண அமைதியோடு சிறப்பாகப் படைத்துள்ளனர்.

முறையான கல்விப் பயிற்சியும், தமிழ் இலக்கியத் தாக்கமும், பாரதியின் ஈடுபாடும் பாரதிதாசனின் பாடல்கள் நிறைவான கவித்துவ நிலையோடு அமையக்காரணமாயின. எட்டாம் வகுப்பிற்கு மேல் பயில இயலாத இளமை வாழ்வும், உலகம் என்ற பயிலகத்தில் கற்ற அனுபவக்கல்வியின் தாக்கமும், விட்மன் ஈடுபாடும் சான்ட்பர்க்கின் கவிதைக்கு ஆதாரமாயின.

தொழில் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நன்கு வளர்ந்துள்ள அமெரிக்கச் சமுதாயத்தின் எதிரொலியாக விளங்கும் சான்ட்பர்க்கின் பாடல்களையும் அத்துறையில் நடைபோடும் பாரதிதாசன் பாடல்களையும் ஒப்பிட்டு அறிதல் மூலம் அவை வளர்ச்சி நோக்கி நடைபோடும் நமக்கு வழிகாட்டும் வழிகாட்டியாக அமையும் எனலாம்.

மனிதநேயத்தைப் பாடும்பொழுது சிறந்த மனிதாபிகளாகவும், சமுதாயத்தைப் பாடும் பொழுது சமுதாயச் சிற்பிகளாகவும், இயற்கையைப் பாடும்பொழுது இயற்கைப் பாவலர்களாகவும் சிறுவர் இலக்கியப் படைப்பில் குழந்தைக் கவிஞர்களாகவும் கவித்துவ நிலையில் சிறந்த கவிஞர்களாகவும் திகழ்கின்றனர். இலக்கியத்தை இலக்கியத்திற்காக மட்டும் படைக்காமல் மக்களுக்காகவும் படைத்த இவர்கள் இடம், பண்பாடு, மொழி, இனத்தால் வேறுபட்டும் பாடுபொருளால் ஒன்றுபட்டும் விளங்குகின்றனர்.

DR. SHANMUGA SELVAGANAPATHY
COMPARATIVE STUDY OF THE POETRY OF BHARATHIDASAN

With a view to free Tamil Nadu from the social evils of casteism, untouchability, child marriages, misery, unsuitable mismarriages, and the evils perpetuated in the name of God, time gave the poet, Bharathidasan.

In the same way Carl Sanburg is a close follower of Walt Whitman, the national poet of America, and is an ardent follower of Abrahan Lincoln. They are the voices of time. Both the poets are the partners of common people, fellows of labourers and workers and they have vociferously championed the cause of the oppressed people. Though the two poets are different in the matter of literature, history, country, but in music, psychology and social science they are experts in those fields.

Both derive great pleasure in the great tranquility of nature. The poets who are afflicted much by the existing social evils find solace and comfort in Nature. As a child they enjoy the natural beauty and power of nature. The Village life blossoms in music and grows in nature. Both the poets have expressed in their poems, habits and customs of the Rural people, music and dance of their respective countries.

Both have sung child literature, with its simple style and light music, the marked characteristic of child literature.

The poems of Bharathidasan sparkle with the skill of a poet who had regular study, and the great facets of Tamil literature are revealed. But in respect of Carl Sandburg he could not study above VIII std., but he learnt his poetry with his experience in the world and he has followed Whitman and these have contributed to the raw nature of his poems.

America which is highly advanced in industry and economy and the American society is echoed in the poems of Carl Sandburg. When we compare it with the poems of Bharathidasan it is a guide to our advancement towards growth.

The wheel of time has given us these two famous poets. They speak of humanity, and they are great persons and are social Architects. They are also nature poets when they are social valued in nature. They are also great children poets and their poems are sublime in these respects. They have written poems not for their literary excellence but also for the advancement of society. Though by birth they belong to different countries and speak different languages, they are one in the subject matter of their great poems.

செல்வராசு, முனைவர் சி. இன்றைய ஆட்சிக்கு அன்றைய இலக்கியங்களில் காணப்பெறும் ஆட்சிச்சொற்கள்

தலைப்பின் நோக்கம் - 'ஆட்சிச் சொல்' சொற்பொருள் விளக்கம் - ஆட்சிச் சொல்லுக்கான மூலங்கள் - அன்றைய இலக்கியங்கள் - அதன் எல்லை.

பண்டைய காலம் - தொல்பழங்காலம் - சங்ககாலம் - சங்க மருவிய காலம் - தொல்காப்பியத்தில் இன்றைய ஆட்சிக்குத் தேவையான சொற்கள் - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகியவற்றில் கிடைக்கும் ஆட்சிச் சொற்கள் - திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் கிடைக்கும் ஆட்சிச்சொற்கள்.

இன்றைய ஆட்சியில், சங்க, சங்கமருவியகால இலக்கியங்களிலுள்ள ஆட்சிச் சொற்களின் தாக்கம்.

முடிவுரை - சங்க, சங்கமருவிய கால இலக்கியங்களில் காணப்பெறும் ஆட்சிச்சொற்கள் இன்றைய பரந்துபட்ட ஆட்சிக்குப் போதாமையும் அவற்றிற்கான தீர்வுகளும், எனும் நிலைகளில் இவ்வாய்வுக்கட்டுரை அமையும்.

சோதிநாயகம், டாக்டர் ஏ.த. விலங்கியல் மற்றும் தமிழியலில் உயிர்வாழ் நிலப் பாகுபாடு

தமிழியல் ஆய்வில் ஈடுபடுவோர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழி விலங்கியல், தாவிரவியல், வானியல், புவியியல் போன்ற பல்வேறு அறிவுத்துறை சார்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்வதைக் கண்டு மகிழ்வுறல் திண்ணம். தமிழியலில் விலங்கினம் பற்றி ஏராளமான குறிப்புகள் காணப்படுதல் தமிழியலுக்கும் விலங்கியலுக்குமிடையே அமைந்த தனிப்பட்ட உறவை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

விலங்கியலில் அமைந்த சூழலியல் (Ecology) என்னும் பிரிவின் கீழ் நில உலகை ஆறு உயிர்வாழ் பெருநிலப் பகுதிகளாக (Biogeographic realms) விலங்கியல் நிபுணர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இவற்றினுக்கு அடுத்த நிலையில் அப்பெரு நிலப்பகுதிகளுக்குள்ளமைந்த ஒரு குறிப்பிட்ட காலநிலை பௌதீக நிலை, தாவர இனங்கள், விலங்கினங்கள் உள்ளடக்கிய நிலப்பகுதிகள் உயிர்வாழ் நிலங்கள் (Biomes), என வகுக்கப்பட்டுள்ளன. இவை பனியுறை உயிர்வாழ் நிலம் (Tundra Biome), உயர்நிலை உயிர்வாழ் நிலம் (Highaltitude

Biome), காட்டு உயிர்வாழ் நிலம் (Forest Biome), புல்வெளி உயிர்வாழ் நிலம் (Grassland Biome), பாலை உயிர்வாழ்நிலம் (Desert Biome) என்பனவாகும். இரு உயிர்வாழ்நிலங்கள் இணையுமிடத்தில் இரு நிலங்களுக்குமான தனித்தன்மை மயங்கி நிற்றல் 'சூழல் மயக்க நிலம்' (Ecotone) எனப்படும்.

பண்டைத் தமிழ்மக்கள் தமிழுலகை ஐவகை நிலங்களாகப் பாகுபடுத்தி அவற்றை ஐந்திணைகள் என வகுத்து வழங்கினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகள் பற்றிய விளக்கங்கள் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் அடங்கியிருத்தல் காண்கிறோம். இருதிணைகள் இணையுமிடத்தில் அவ்விருதிணைகளுக்குமான பண்புகள் மயங்கி நிற்றல் 'திணை மயக்கம்' எனப்பட்டது.

தமிழிலக்கியங்களில் அமைந்த இத்துணைப் பாகுபாடும் விலங்கியலில் அமைந்த உயிர்வாழ் நிலப்பாகுபாடும் ஒரே கருத்தினைக் கொண்டதாகவும் அடிப்படை நோக்கில் இணையானதாகவும் அமைதலை நாம் காணமுடிகிறது. விலங்கியல் மற்றும் தமிழியலில் காணும் வாழ்நிலப்பாகுபாட்டினைப் பற்றிய ஒப்பாய்வு இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளது.

DR. J.T. JOTHINAYAGAM BIOGEOGRAPHIC DIVISION IN ZOOLOGY AND TAMILOLOGY

A student of 'Tamilology' will certainly be impressed by the amount of knowledge pertaining to Zoology, Botany, Mateorology, Geology and other such scientific displines that Tamil language possessed even before years. The fact that so many references to animal life are found in Tamil Literature is indicative of the special relationship that exists between 'Tamilology' and Zoology.

Ecology is a branch of Zoology under which Zoologists have divided the earth into six major Biogeographic realms. Next to and within the Biogeographic realms are large terrestrial areas with characteristic climate, physical factors, animals and plants, called Biomes. The Biomes thus required are Tundra Biome, High Altitude Biome, Forest Biome, Grassland Biome and Desert Biome. The transitional zone where two Biomes meet is termed Ecotone.

Early Tamils divided Tamil land into five types of Biogeographic regions and called them 'Iynthinaikal'. Descriptions of the 'Iynthinaikal'

namely 'Kurunchi', 'Mullai', 'Marutham', 'Neithal', and 'Palai' are found in many old Tamil literary works. The area where two 'Thinaikal' merge possess characteristics of both and is called 'Thinaimayakkam'.

We find that 'Biomes' in Zoology and 'Iynthinaikal' in Tamil literature pertain to the same subject and are parallel to each other in fundamental approach. The present paper is based on a comparative study of the Biogeographic divisions found in Zoology and 'Tamilology'.

தங்கத்துரை, முனைவர் சு. ஞானவாசிட்டமும் பகவத்கீதையும்

மகாபாரதத்தில் பகவத்கீதை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறதோ அதேபோன்று மகாகாவியம் என்று குறிப்பிடப்படும் இராமாயணத்திலும் சிறப்பு வாய்ந்த அறிவுரைப்பகுதி இருந்திருக்க வேண்டும் என்ற ஆய்வின் முயற்சியால் ஞானவாசிட்டம் இருப்பது தெரியவந்தது. அதை ஆய்வு செய்ததில் பல செய்திகளை அறிய முடிந்தது. ஒப்பாய்வு நோக்கில் ஆய்வு செய்தபோது கிடைத்த கருத்துக்களின் அடிப்படையில் இந்தக்கட்டுரை அமைந்துள்ளது.

ஞானவாசிட்டமும் பகவத்கீதையும் நீதியைப் புகட்ட எழுந்தநூல்கள். இருநூற்களும் உரையாடல் அமைப்பில் உள்ளன. கண்ணனால் அருச்சுணனுக்கு அறிவுறுத்தும் செய்திகளைக்கொண்டது பகவத்கீதை. அருச்சுணனுக்குக்கூறிய செய்திகளில் சிலவற்றை ஞானவாசிட்ட நிருவாணப்பிரகரண ஐந்தாவதுபிரிவில் அருச்சுணன் கதை என்ற ஒன்றில் காணமுடிகிறது. அதில் உள்ள கருத்துக்கள் பகவத்கீதையின் கருத்துக்களுடன் ஒத்து அமைவது ஆய்வு செய்யப்படுகிறது. இந்தப் பொருட்கட்டுரை களம், நோக்கம், உடனிருந்தோர், உரையாடல் அமைப்பு, செய்திகள், பயன், முடிவு என்ற நிலைகளில் அமைகின்றது.

ஞானவாசிட்டம், வீரை ஆளவந்தாரால் தமிழில் எழுதப்பட்ட நூல். இதன் மூலநூல் வால்மீகியால் எழுதப்பட்ட யோகவாசிட்டமாகும். இராமாயண பாலகாண்ட கையடைப்படலத்தில் தசரதனது அரசவையில் இராமனுடைய வேண்டுதலினால் விசுவாமித்திர வசிட்டர்களால் அறிவுறுத்தப்பட்ட நூலே ஞானவாசிட்டமாகும். ஞானத்தைப்பற்றி இராமனுக்கு வசிட்டர் அறிவுரை செய்ததினால் ஞானவாசிட்டம் எனப்பெயர் பெற்றது என்பர். ஞானவாசிட்டத்தில் ஆறு பிரகரணங்களும், முப்பத்தேழு

கதைகளும் இரண்டாயிரத்து ஐம்பத்தைந்து ஆசிரிய விருத்தப்பாக்களும் உள்ளன.

பகவத்கீதை பதினெட்டு யோகங்களைப்பற்றி எழுநூறு சுலோகங்களில் விளக்கப்பட்ட நூல்.

இரு மகாகாவியங்களிலும் உள்ள அறிவுரைப்பகுதிகளை ஆய்கின்றபோது இரண்டும் வேறுவேறு சூழலில் அறிவுறுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. அதை வெளிப்படுத்துவதும், ஞானவாசிட்ட அருக்சுணன் கதையில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை பகவத்கீதையோடு ஒப்பிட்டு அதன் சிறப்புகளை வெளிப்படுத்துவதும் இந்தப் பொருட்கட்டுரையின் நோக்கமாகும்.

பின்வருவன இவ் ஆய்வு செய்தபோது கிடைத்த செய்திகளின் சுருக்கம்.

1. இராமனது பற்றற்ற நிலையும், அருச்சுணனின் பந்தநிலையும் அறிவுறுத்தலுக்குக் காரணமாயிற்று.

2. இராமனுக்கு எல்லாம் தெரிந்திருந்தும் மக்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதைச் சுட்டி இராமனின் வைராக்கிய நிலையைக் காட்டி அறிவுறுத்தியிருக்கலாம். அருச்சுனன் தன்னுடன் இருப்பவர் தெய்வ அவதாரம் எனத் தெரியாமல் இருந்தான். பின் கண்ணனுடைய புரியட்டக நிலையையும் பெரிய உருவ நிலையையும் வெளிப்படுத்தியபிறகு நம்பிக்கை ஏற்பட்டது. அதன் பின்பே அறிவுறுத்தியிருக்கலாம்.

3. ஞானவாசிட்டத்தில் எல்லாம் பரப்பிரம்மம் என்றும் அது ஒன்றே நிலையானது மற்றவை நிலையற்றவை என்றும் அதை அடைய ஞானமே வழி என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பகவத்கீதையில் எல்லாம் தானே, தானே நிலையானவன், மற்றவை நிலையற்றவை என்றும், அதனால் தன்னையே நம்புங்கள் என்றும் கண்ணன் கூறுவதைக் காணமுடிகிறது.

DR. S. THANGADURAI GNANAVACITTAM AND BHAGAVATH GEETHA - A COMPARATIVE STUDY

This Essay is fully based on comparative study on Gnanavacittam and Geetha. The essence of the teachings of Lord Krishna is an important in Mahabaratha as that of Vasista in Ramayana; this par-

ticular point of view has appeared in our maid only recently, that book is called Gnanavacittam.

Gnanavacittam and Bhagavath Geetha are created with a definite purpose of teaching Mankind the ethical codes of life. The style employed in these two books is discursive method. The substance of the message of Lord Krishna's teachings to Arjuna is found in sixth chapter (Nirvana pragrana) fifth division of Gnanavacittam namely ``Arjuna's story''. The similar philosophical notions from the above said books are taken here for a comparative study. This study is made on the following areas such as kalam (Field, hypothesis, the words of the conversationists, the structure of discussions, the message, benefits and results.

In the seventeenth century, Gnanavacittam was written by Veerai Alavandar. The sources are drawn from Yogavacittam written in Sanskrit by Valmiki. Vishwamithra and Vasista were Gurus to the family of Dhasaratha. Rama asked them to teach him the ethical and moral code of life. Thus the teachings of Vasista became Gnanavacittam. Gnanavacittam contains six Pragaranams, thirty seven stories and two thousand fifty five stanzas.

Geetha consists of eighteen Yogas in seven hundred slogas.

When a comparative study is made, we understand a fact that the two above said teachings were done under different situations. The purpose of the essay is to bringout the salient and similar features found in both Geetha and Gnanavacittam. Especially Arjunan's study in Gnanavacittam echoes the salient feature of Geetha.

The following are the findings and results of the comparative study made on Geetha and Gnanavacittam.

(i) The attachment of Arjuna to the mundane life, and the detachment of Rama from the worldly life are the causative reasons for the teaching of Lord Krishna and Guru Vasista.

(ii) Rama was showed as tough and inflexible character in Gnanavacitta so as to bring out a fact to the world that the stiffness in one's character will be of no use. So this might be the reason for the introduction of the teachings passage in Gnanavacittam by Valmiki. In Mahabaratha, Arjuna also shows inflexibility which

has been completely changed by revealing the fact about Lord Krishna that he was none else but the Avatar of God.

(iii) Gnanavacittam says that Brammam is STABLE the restore unstable. Gnanavacittam says that knowledge is the only way to attain Brammam. In Geetha Lord Krishna says that he is everything, he is the origin and he is the end. So everybody should believe him.

தர்மாரெட்டி, முனைவர் என். தமிழ் தெலுங்கு நாட்டுப்புறப் பாடல்களில் பண்பாடு

தமிழ், தெலுங்கு இரண்டும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த மொழிகள். அக்கம் பக்கம் வாழ்ந்து வரும் மொழிகள். இந்த மொழிக்குரிய தமிழர்-தெலுங்கர் பண்பாடுகள் வேறு வேறு அல்ல.

ஒரே மரத்தில் பழுத்த பழங்களுக்கு ஒரே சுவை இருப்பது போன்று இந்த இரு நாட்டு மக்களின் பண்பாடுகளும், சில நேரங்களில், பழுக்கும் பக்குவம் பற்றி ஒரே மரத்துப் பழங்களிலும் சுவையில் வேறுபாடுகள் காண்பது போன்று, இந்த இரண்டிலும் கூடச் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படும். இந்த உண்மையை இந்தக் கட்டுரை எடுத்தியம்புகிறது.

நாட்டுப்புற மக்களின் கலைகள் - இலக்கியங்கள் - பழக்க வழக்கங்கள் - நம்பிக்கைகள் ஆகிய வாழ்வு நெறிகளை அறிந்து கொள்ளும் நாட்டுப்புறவியல் பற்றிய அறிமுகம்.

தமிழ், தெலுங்கு நாட்டுப்புற இலக்கியத்தின் சேகரிப்புப் பணிக்கு, ஆராய்ச்சிக்கு வித்திட்ட தமிழ் நாட்டார், ஆந்திர நாட்டார் மற்றும் அயல் நாட்டார், இரு மொழிகளிலும் இத்துறையில் பணிபுரிந்தோருள் சிறப்புக்குரியவர் ஆகியோர் பற்றிய அறிமுகம்.

பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடல்கள் - கதைகள் - ஆடல்கள் - கூத்துக்கள் - பழமொழிகள் - விடுகதைகள் - கதைப்பாடல்கள் - விளையாட்டுகள் - கைவினைக் கலைகள் - நடை உடை பாவனைகள் - சடங்குகள் - புராண இதிகாசங்கள் முதலிய நாட்டுப்புறவியலின் வகைகளைக் குறிப்பிடுதல்.

கிராம மக்களால் கிராம மக்களுக்குப் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றிய அறிமுகம், நாட்டுப்புறப் பாடல்களின் தன்மைகள் பற்றிய செய்திகள்.

குழந்தைப் பாடல்கள் - விளையாட்டுப் பாடல்கள் - உறவுப் பாடல்கள் - காதல் பாடல்கள் - திருமணப் பாடல்கள் - தொழில்

பாடல்கள் - வேடிக்கைப் பாடல்கள் - நகைச்சுவைப் பாடல்கள் - தெய்வப் பாடல்கள் (பக்திப் பாடல்கள்) - நாடோடிப் பாடல்கள்- ஒப்பாரிப் பாடல்கள் முதலிய நாட்டுப்புறப் பாடல்களைப் பற்றிய விளக்கம்.

பண்பாடு - விளக்கம் - தமிழ் .- தெலுங்கு நாட்டுப்புறப் பாடல்களில் அறிலாகும் பண்பாடுகள்.

'கன்னியா சுல்கம்' (இளம் பெண்களை முதியோர்க்குத் திருமணம் செய்யும் பழக்கம்) பழக்கத்தில் இருந்தமை - உரிய காலத்தில் திருமணம் ஆகாத பெண்களை அவர்களைக் காட்டிலும் இளையோர்க்குக் கொடுத்துத் திருமணம் செய்யும் பழக்கம் இருந்தமை - இவற்றால் வரும் கேடுகள் - உறவிலேயே திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் - பலதார மணம் போற்றப்பட்டமை- திருமண விலக்கு செய்து கொள்ளுதல் - சில சாதியாரில் மாமனாரே மருமகளுக்குக் கணவனாக இருந்தமை முதலிய செய்திகளை இருநாடுகளிலுமுள்ள நாட்டுப்புறப் பாடல்கள் வழி கண்டு தெளிவு பெறுதல்.

தாய்வீட்டில் பெண்களுக்கு வருடந்தோறும் மஞ்சள் குங்குமம் கொடுக்கும் பழக்கம் இருந்தமை - பரத்தையர் பழக்கத்தைத் தவறாக ஏற்றுக் கொள்ளாமை - ஆண்களும் பெண்களும் செய்து கொள்ளும் அலங்காரங்கள் முதலியன.

கண்ணேறு கழித்தல் (பிறர் கண்பட்டால் திருஷ்டி வரும்) - சகுனம் பார்த்தல் - மருந்தால் வசப்படுத்திக் கொள்ளுதல் - மந்திர தந்திரங்கள் இவற்றில் நம்பிக்கை இருந்தமை ஆகிய செய்திகளை நாட்டுப்புறப் பாடல்கள் வழி காணுதல்.

நாட்டுப்புறப் பாடல்களில் காணலாகும் பல வகையான கைவேலைகளைப் பற்றிய செய்திகளை எடுத்துக் காட்டுதல்.

ஐங்கத்தார் (தேவர்), குறவர், போயர் (வட்டான்), இடையர், உடையார் போன்ற சாதியார் பற்றியும் அவர்கள் செய்யும் தொழில்கள் பற்றியும் அன்றைய மக்களிடையே சிறந்த சாத்திர ஞானம், மருத்துவம் செய்தல் இருந்தமையையும் நாட்டுப்புறப் பாடல்களைக் கொண்டு விளக்குதல்.

தமிழர்-ஆந்திரர் இவர்களின் இந்தப் பண்பாடுகளை ஒப்பிடுதல்-இவை எந்த அளவுக்குத் தேவை, தேவையில்லை என்பதைக் காரணத்தோடு தெளிவு படுத்துதல் ஆகிய செய்திகள் இந்தக் கட்டுரையில் இடங்கொள்ளுகின்றன.

தாமசு, முனைவர் அன்னி பழந்தமிழரின் காலக் கணிப்பு முறை

கி.பி. நான்காம் நூற்றாண்டில், ரோமையரதாட்சிக் காலத்தில் ஜூலியஸ் சீசரின் ஆட்சியில் முதல்முதலாக ஒரு முழுமையான 'நாட்காட்டி' தயாரிக்கப்பெற்று அது ஜூலியன் காலண்டர் என்ற பெயரையும் பெற்றது என்பது வரலாறு. இதற்குமுன் நாட்காட்டி வழக்கில் இல்லையா? இருந்ததென்றால் அதன் அமைப்பென்ன? பண்டைத் தமிழரின் நாளறியும் முறை என்ன? என ஆய்வது இவ்வாய்வின் நோக்கம். கிமு இறுதி மற்றும் கிபி தொடக்கத்துடன் இணைக்கப்படுகின்ற பண்டைத் தமிழ்ப் படைப்புகளான தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களைக் களனாகக்கொண்டு தமிழர் பின்பற்றிய காலக்கணிப்பு முறை தேர்ந்து கொள்ளப்பெறும்.

நாளின் பகுதிகளைச் சிறுபொழுது எனவும் ஆண்டின் பகுதிகளைப் பெரும்பொழுது எனவும் கணிக்கத்தக்க குறிப்புகளும் விளக்கமும் தொல்காப்பிய அகத்திணையியலில் கிடைப்பினும் 'நாள்', 'ஆண்டு' என்ற சொல்வழக்காறுகளும் 'கிழமை', 'வாரம்', என்று இன்று அமையும் வழமைகளும் இருந்தனவா என்பது ஐயம். 'திங்கள்' பற்றிய எண்ணம் எவ்வாறமைந்தது? வார நாட்களின் பெயர்கள் மற்றும் திங்கள்களின் பெயர்கள் எவ்வாறமைந்தன? ஆண்டுகளின் தொகுப்பு எவ்வாறு கணக்கிடப்பட்டது? (இன்று நூற்றாண்டு என்ற கணக்கு /60 ஆண்டு என்ற கணக்குப்போல -) தமிழ்ப் பெயர், தமிழல்லாதபெயர் என்ற நிலை உண்டா? சந்திரனை (திங்கள்) வைத்தே திங்கள் கணக்கிடப்பட்ட குறிப்புண்டா? கோள்களை வைத்துத்தான் கிழமை கணக்கிடப்பட்டதா? ஆண்டுக்கு எத்தனை நாள், திங்களுக்கு எத்தனை நாள், வாரத்திற்கு எத்தனை நாள் என்பன இன்றைய நிலையினின்றும் எவ்வாறு வேறுபடுகின்றன? என்பன ஆராயப்பெறும்.

தாமோதரன், முனைவர் அ. நன்னூல் பதிப்புவரலாறு - சில குறிப்புகள்

திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற தமிழ் நூல்கள் சிலவற்றுக்குத் தனித்தனி நூலடங்கல்கள் வெளிவந்திருந்தாலும் தொல்காப்பியம் தவிர பிற தமிழ் நூல்களின் பதிப்புவரலாறு முறையாக எழுதப்படவில்லை. தொல்காப்பியப் பதிப்புகளைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளக் குறைந்தது நான்கு கட்டுரைகளும் மூன்று நூல்களும் இருப்பது போல வேறு எந்தத் தமிழ் நூலுக்கும் இல்லை. சென்ற நூற்றாண்டில், அச்சுச்சட்டம் அமுலானதற்குச் சிறிது முன்பு இன்னும் சரியாகச் சொன்னால் சாலிவாகன சகாப்தம் 1756

(1834) ஜய வருஷம் முதல் அச்சாகத் தொடங்கிய நன்னூல் பதிப்புகளின் வரலாறு நீண்டது; கொஞ்சம் சிக்கலானதுங்கூட. இந்த நூற்றறுபது ஆண்டுகளில் நன்னூலுக்கு ஏறக்குறைய நூறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. மறுபதிப்புகளையும் கணக்கில் கொண்டால் கிட்டத்தட்ட இருநூறு பதிப்புகள் இருக்கலாம். இந்தப் பதிப்புகளை வெளியிட்ட பெரும் பணியில் தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பாசிரியர்களாகிய விசாகப்பெருமாளையர், இராமநுசகவிராயர், ஆறுமுகநாவலர், சந்திரசேகரகவிராஜ பண்டிதர், திருமயிலை சண்முகம் பிள்ளை, சடகோபராமாநுஜாசாரியர், சாமிநாதையர், நமச்சிவாய முதலியார், பவானந்தம் பிள்ளை, தண்டபாணி தேசிகர் போன்றவர்கள் தொண்டாற்றியுள்ளனர். இவர்களுடைய பங்களிப்பை ஒப்பிட்டுக் கணிப்பதற்கு மிகவும் உதவக் கூடியது நன்னூலின் பதிப்புவரலாறு. இந்த வரலாற்றை எழுத இவை தவிர இன்னொரு வலிவான காரணமும் உண்டு. சென்ற நூற்றாண்டில் வெளியான பழந்தமிழ் நூல்களில் பெரும்பகுதி நன்னூல் பதிப்புகளே. ஆங்கிலப் பயிற்சி அதிகம் இல்லாத தமிழ்ப் பதிப்பாளர்கள் தங்கள் பதிப்புகளில் பயன்படுத்தியுள்ள பதிப்பு நுணுக்கங்கள், நெறிமுறைகள் முதலியவற்றை விரிவாக ஆராய்ந்து மதிப்பீடு செய்தால் தமிழ்ப் பதிப்புக்கலைக்கு அது ஒரு அறிமுக உரையாக அமையும் என்பது உறுதி.

திண்ணப்பன், முனைவர் சுப. கணினிவழி தமிழ்கற்பித்தலில் சிங்கப்பூரின் பங்கு

இன்றைய அறிவியல் உலகில் ஏற்றமிக்க அற்புதக் கண்டுபிடிப்பு கணினி. இன்று இதனைப் பயன்படுத்தாத துறைகளே உலகில் இல்லை. மொழி கற்பித்ததல் துறையிலும் கணினியைப் பயன்படுத்தும் முயற்சியை மேனாட்டறிஞர்கள் மேற்கொண்டனர். இம்முயற்சிகள் தமிழ்மொழி கற்றல் - கற்பித்தல் துறைக்கு விரிவுபடுத்தப்பட்ட பாங்கினையும் அதற்குச் சிங்கப்பூர் ஆற்றிய பங்கினையும் விளக்கிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1987-க்கு முன்னும் பின்னும் மேற்கொண்ட தொடக்ககால முயற்சிகளை விளக்கிய பின்னர், கல்விக்கழகம், கல்வி அமைச்சு, தமிழாசிரியர் சங்கம், மக்கள் கழக இந்தியர் கணினிக் குழு, சிண்டா எனப்படும் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம் முதலிய அமைப்புகள் கணினிவழி தமிழ்கற்பித்தல் பணிக்கு ஆற்றிய பணிகளை விவரிக்கிறது இக்கட்டுரை.

இக்கட்டுரையில் சிங்கப்பூர் ஆற்றிய பணிகளாகப் பின்வரும் கூறுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. கருத்தரங்குகள் வாயிலாக முன்னோடி முயற்சி
2. புதிய விசைப்பலகை உருவாக்கம்
3. ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி
4. பயிற்று கருவிச் சாதன உருவாக்கம்
5. பலநிலைகளில் கணினியின் பயன்பாடு
6. டெலிவியூவழி தமிழ்
7. குறள் கோவை
8. மரபுவழி விளையாட்டு
9. பண்பாட்டுக் கூறுகள்
10. கலைகள் கற்றல்
11. பஞ்சாங்கம் போன்ற மரபுவழி நாட்காட்டி
12. மக்கள் தொடர்புச் சாதனப் பயன்பாடு

திருமலை, முனைவர் ம. ஐக்கூ கவிதைகளில் இயற்கைப் புனைவு

தமிழ் நவீன இலக்கியத்தில் புதுக்கவிதை இலக்கிய வகையில் இன்று பேசப் பெறுவது ஐக்கூ கவிதையாகும். ஜப்பானிய ஜென் புத்த தத்துவத்தின் இலக்கிய வெளிப்பாடாக அமைந்த இந்த ஐக்கூ கவிதை தமிழ் இலக்கியத்தில் எழுபதுகளில் மிகப் பிரபலமடைந்தது. இன்று ஏறத்தாழ இருபது ஐக்கூ தொகுதிகள் தமிழில் வெளிவந்திருக்கின்றன.

ஜென் புத்த தத்துவங்கள் பல ஜப்பானிய ஐக்கூ கவிதைகளில் சொல்லப்பட்டன். சுயமிழப்பு, தனிமை, மௌனம், அறிவு சாரா நிலை, எளிமை, பொருள் சார்பு நிலை, அன்பு முதலான பண்புகள் ஐக்கூ கவிதைகளில் சொல்லப்பட்டன. இவை அனைத்துமே இயற்கைப் புனைவு என்ற அம்சத்துடன்தான் கவிதைகளில் சொல்லப்பட்டன. ஐக்கூ கவிதைகளில் உயிர் நாடியாக இயற்கைப் புனைவுகள் அமைந்தன.

தமிழ் ஐக்கூ கவிதைகட்கு முன்னோடியாக மூலமாக (source) அமைந்த ஜப்பானிய ஐக்கூ போலவே தமிழ் ஐக்கூ கவிதைகளும் இயற்கையைப் பிரதானப் படுத்துகின்றன.

இயற்கைக்குத் திரும்புதல், இயற்கையின் மடியில் மன அமைதியை உணர்தல், இயற்கையின் வழி மன எழுச்சி பெறுதல், இயற்கையை உயிருள்ள ஒன்றாகக் கருதுதல், மனிதனின் முரண்களை இயற்கையின் மூலம் உணர்த்துதல், இயற்கையைச் சமகால வாழ்வின் வெளிப்பாடாகக் காணுதல் முதலியவற்றைத் தமிழ் ஐக்கூ கவிதைகளில் காணமுடிகிறது.

இயற்கையாகப் பூத்திருக்கும் மல்லிகை மலர்கள் கவிதை எழுதுவற்கான மன எழுச்சியைத் தருவதாக ஒரு ஐக்கூ கவிஞர் குறிப்பிடுகின்றார்.

பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் ஒருவர் பூட்ஸ் கால்களால் புல்லை மிதிக்கிறான் என்று மனிதனின் செயல்களில் காணப்படும் முரண்பாட்டை விளக்குகிறார் பிறிதொரு கவிஞர்.

ஐக்கூ கவிதைகளில் இயற்கை பலவாறாகப் பாடப்படுவதை உணர முடிகிறது. மரபிலக்கியத்தில் இயற்கை மனித வாழ்க்கைக்குப் பின்னணியாக அமைந்தது. இடைக்கால இலக்கியங்களில் இயற்கை மிகைப் புனைவாக ஆயிற்று. இன்றைய இலக்கியங்களில் ஐக்கூ கவிதைகளில் - மீண்டும் இயற்கைக்குத் திரும்புதல் என்ற மனநிலை வெளிப்படுகின்றது. ஐக்கூ கவிதைகள் இந்த உண்மையைத்தான் உணர்த்துகின்றன.

DR. M. THIRUMALAI TREATMENT OF NATURE IN TAMIL HAIKU POEMS

The formal element of Haiku poems find a popular place in Modern Tamil poety. Haiku poem, a literary byproduct of Zen buddhism in Japan had influenced Tamil poety to a larger extent. From the period of its introduction, we could trace atleast twenty Haiku collections in Tamil; criticism are also available in Tamil. The influence of Haiku poetry in Tamil shows the need for adequate and categorical criticisms.

Many ideas of Zen buddhism became the origin of Haiku poems of Japan. Selflessness, solitude, speechlessness, nonintellectuality, contradiction, simplicity, materialistic, love etc., are some of the important ideas expressed in Haiku poems all these are expressed through nature. So a close observation of Japaness Haiku poems reveal the fact that treatment of Nature is the soul of Haiku poems.

Tamil Haiku poems have similar expressions with a difference. Some important aspects regarding the treatment of nature in Tamil Haiku poens are returning back to nature, feeling a sense of peacefulness in the lap of nature, getting inspiration through nature, considering nature as a human being portraying the contradictions of mankind through nature. For example we can cite a poem; the poet says that he gets inspiration to write poems when he sees jasmine flowers.

An observation of the published Haiku collections reveal a fact that treatment of nature is the major poetical aspect. In the ancient Tamil literature nature stood as a background for human life; only with that background all human feelings have been expressed in poetry. In the medieval period when religion became an established institution, religious ideas became predominent and nature's importance had been relegated to mere lifeless background.

In the 20 th century once again nature gains its importance in the literary genre especially in Haiku poems. "Returning back to nature" is a slogan in Haiku. A reader of Haiku poems can observe a hypothesis that is Haiku poems treatment of nature stand as an alternative for the existing mechanical way of human life; this will be proved in this paper with relavant evidences from Haiku works.

திருமுருகன், முனைவர் இரா. இசையமைப்பும் யாப்பமைப்பும்

இசைத்தமிழ்ப் பாடல்களுக்குரிய இலக்கணங்கள் மறைந்துபோயின. அதனால் அவற்றைப் பயின்று இசைத் தமிழ்ப்பாடல்களின் யாப்பிலக்கணங்களை அறியும் வாய்ப்பும் இன்றில்லை. எனவே இன்று பெரும்பாலான இசைத்தமிழ்ப் பாடல்கள் தவறாகச் சீர்பிரித்து அச்சிடப்படுகின்றன; பாடப்படுகின்றன. இந்நிலைமைகளையும் இவற்றைச் சீர்திருத்தும் வழிவகைகளையும் ஆராய்கிறது இக்கட்டுரை.

தேவாராம், நாலாயிரப்பிரபந்தம், திருவாசகம் முதலியவற்றில் உள்ள இசைப்பாடல்கள் இயற்றமிழ்ச் செய்யுள்களாகக் கருதப்பட்டுத் தவறாகச் சீர்பிரித்து அச்சிடப்படுகின்றன. அவற்றின் சந்த அமைப்பு கருத்தில் கொள்ளப்படவில்லை. யாப்புக்குறிப்புகளும் இயற்றமிழ்ச் செய்யுள்களுக்குரியனவாக உள்ளன. அவை பொருத்தமாகவும் இல்லை. இவ்வுண்மை, 'வேயுறு தோளி பங்கன்', 'விடையுயர் வெல்கொடியான்' முதலிய தேவாரப்பாடல்களைக்கொண்டும், 'தாயே தந்தை யென்றும்', 'திருத்தாய் செம்போத்தே' முதலிய நாலாயிரப்பனுவற் பாடல்களைக் கொண்டும் ஆராயப்படுகின்றது.

தேவார, திருவாசக, நாலாயிரப்பனுவல்களில் உள்ள சந்தப்பாடல்களையும் திருப்புகழில் உள்ள வண்ணப் பாடல்களையும் அவை அடங்கும் எண்ணிக்கையுடைய, இன்று வழக்கில் உள்ள 35 தாளங்களில் ஏதாவது ஒன்றில் அடக்கிப்பாடும் வழக்கம் பாடகர்களிடையே காணப்படுகிறது. பாடலில் சந்த அமைப்பைச்

சரியானபடி உணர்ந்து அது புலப்படும் வகையில் தாளம் போட்டுப் பாடப்படுவதில்லை. இச்செயல் பாடல் இயற்றியோர் அவற்றில் அமைத்த சந்த அழகைக் குலைத்துவிடுகிறது. எனவே அவற்றைப் பழைய முறைத்தாளத்தில்காணப்படும் 16 உறுப்புகளில் பொருந்துவன கொண்டு உறுப்புதானம் (அங்கதானம்) போட்டுப் பாடலாம்.

உறுப்படிகள் (கீர்த்தனை) எதுகை, மோனை, இயைபு முதலிய தொடைநயங்கள் உணரப்படாவண்ணம் கண்ட இடங்களில் நீட்டியும் துணித்தும் பாடப்படுகின்றன. இச்சீர்கேடுகளை நீக்க வழிவகை காண்கிறது இக்கட்டுரை.

பல் உயிரினப் பாதுகாப்பும் பல்வகை உயிரினங்கள் பற்றிய ஆய்வுகளும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. நாம் பயனற்றவை என ஒதுக்கித்தள்ளிய உயிரினங்களை நுணுகி ஆய்கையில் அவை பலவகைகளில் பயனுள்ளவை என்பது புலனாகின்றது. கல்பாசிகள் தாவர உலகின் ஓர் விந்தை என்பது மிகையாகாது. பாசி இனம் ஒன்றும் பூஞ்சை இனம் ஒன்றும் இணைந்து கூட்டு வாழ்க்கை வாழும் நிலையும் மிக வேறுபட்ட எவ்விதச் சூழலிலும் வளரும் தன்மையும் இன்னும் புதிராகவே இருக்கும் புதுமைகள்.

உயிரியல் ஆய்வுகளில் கல்பாசி இயல் தெளிவற்ற ஒன்றாகவே அண்மைக் காலம் வரை இருந்து வந்தது. தற்போது வேதியியல் மற்றும் உயிர்வேதிஇயல் முன்னேற்றத்தால் இத்துறையும் புத்துயிர் பெற்றுள்ளது. தற்போதைய ஆய்வில் கல்பாசி வகைகள், இவற்றைப் பாகுபடுத்தும் முறை, வெளித்தோற்றம், உடற்கூறு, வளர்ச்சி, இனப்பெருக்கம், பயன்கள் ஆகியவை பற்றித் தெளிவுபடுத்தவும் இந்த இயலில் பயன்படுத்தத் தேவையான அறிவியல் தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கல்பாசிகள் ஆய்வில் பயன்படுத்தப்படும் அடிப்படைச் சொற்களைத் தமிழில் உருவாக்கல், கலைச் சொற்கள் ஆக்கம், கலைச் சொற்களும் பொருள் விளக்கமும் என்பன இக்கட்டுரையின் நோக்கங்கள்.

தேவதாஸ், முனைவர் திருமதி சோதிபாய் திணைக்கோட்பாடு உணர்த்தும் பண்பாடு

மனித வாழ்க்கையானது பல்வேறு தேவைகளை நிறைவு செய்து கொள்வதை ஒட்டியது. பழந்தமிழ் அகப்புற வாழ்வு இத்தன்மையதே. உலகியலை ஒட்டி அமையும் அகப்புற இலக்கியங்களும் இலக்கணங்களும் அத்தேவைகளின் குறியீடாகவே அகத்திணை, புறத்திணை எனப்பெயர் பெற்றுள்ள. அமெரிக்க நாட்டு மாஸ்லோ (Maslow) என்ற சமூக உளவியல் அறிஞர் இன்று குறிப்பிடும் 'தேவைப்

படிநிலைகள்' (Hierarichy of needs) ஐந்தும் பண்டைப் புலவர்களாலும் தொல்காப்பியராலும் நன்கு உணரப்பட்டிருந்தன. அவை

1. அடிப்படை உடலியல் தேவைகள் (**Basic Physiological needs**),

2. காப்பும் பாதுகாப்புறுதியுமான தேவைகள் (**Safety and Security needs**),

3. உடைமையும் சமூகமுமான தேவைகள் (**Belonging and Social needs**),

4. மதிப்பும் அந்தஸ்துமான தேவைகள் (**Esteem and Status needs**),

5. தன்னிறைவும் முழுமைபெறலுமான தேவைகள் (**Self-actualization and fulfillment needs**),

1. அகத்திணையிலுள்ள குறிஞ்சித்திணை புணர்தலும் புணர்தல் நிமித்தமும் பற்றியது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம், இரவுக்குறி, பகற்குறி போல்வன அடிப்படை உடலியல் தேவையான பாலுணர்வோடு தொடர்புடையன. புறத்திணையிலுள்ள வெட்சித்திணை பண்டமாற்றுப் பொருளான மாடு, அதைத் தந்து பெறும் கள் முதலான உடலியல் தேவைகளோடு தொடர்புடையது.

2. முல்லைத்திணை பாதுகாப்பு உணர்வோடு போர்வினையின் மேற்சென்ற தலைவன் திரும்பி வரும்வரை தலைவி தன் கற்பெனும் காப்பால் ஆற்றியிருத்தல் பற்றியது. புறத்தில் உள்ள வஞ்சித்திணை அஞ்சா மண்ணசை வேந்தனிடமிருந்து தன் மண் காக்கப் படையெடுப்பது பற்றியது.

3. மருதத்திணை ஓராடவனுக்கு உடைமையான இற்கிழத்தி, காமக்கிழத்தி ஆகியோரோடும் சமுதாயத்தின் கலைகளை வளர்க்கும் பரத்தையரோடும் அவன் கொள்ளும் தொடர்பால் ஏற்படும் ஊடலும் ஊடல் நிமித்தமும் பற்றியது. உழிஞைத்திணையோ செல்வக் களஞ்சியமான வேறொருவன் கோட்டையையும், குடிகளையும் ஓரரசன் தனக்குரியதாக்கிக் கொள்வதாகும்.

4. நெய்தலில் தன் உயர்வினையையும் வலிமையையும் வெளிப்படுத்த வணிகத்திற்கோ, மீன்பிடிக்கவோ சென்ற தலைவன் வராததால் உண்டாகும் மனைவியின் இரக்கம் பற்றியது. தும்பைத்திணையோ உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத்தில் தம் ஆண்மையை வெளிப்படுத்த முனைந்து பொருவது பற்றியது.

5. பாலையானது குடும்பத்திற்கும் விருந்தோம்பற்கும் உரிய பொருள் நாடிச் செல்வதால் ஏற்படும் தலைவன் தலைவி பிரிவு வருத்தம் பற்றியது. பிரிவானது குறிக்கோள் நிறைவில் ஏற்படும் உயர்நிலை சுட்டும். வாகை வீரம் மிக்க அரசர்களும் சமுதாய உளுப்பினர்களும் குற்றமற்ற கொள்கையோடு தத்தம் துறைகளில் பெறும் வெற்றி பற்றியது. வெற்றிக்கு மேல்வெற்றி பெறும் ஒருவன் ஒருகணத்தில் நிலையாமையை உணர்வான் (காஞ்சி). நிலைத்த ஒன்றை நாடியபோது இல்லென வந்து இரப்போர்க்கு வாரி வழங்கிப் பாராட்டப்படுவான் வாழ்வில் முழுமை உணர்வான் (பாடாண்திணை).

இவ்வாறு தன்னலம் மறந்து பிறர்நலம் பேணும்போது வாழ்க்கை முழுமை அடைகின்றது என்ற உயரிய பண்பாட்டையே திணைக்கோட்பாடு நமக்கு வழங்குகின்றது.

நஞ்சுண்டன், ஜி. மேற்கத்திய திறனாய்வு நோக்கில் பழங்கவிதையும் புதுக்கவிதையும்

தமிழில் கவிதைச் சிந்தனை மரபு இருந்தாலும், இலக்கியத் திறனாய்வு என்பது மேற்கத்திய இலக்கியத்துடனான தொடர்பினாலேயே உருவானது எனலாம். இத்தொடர்பு ஏற்பட்ட காலத்தில் நாம் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்தோம். இக்காலகட்டத்தில் மேற்கத்திய சிந்தனையின் உயர்வை நாம் அனைவரும் ஏற்றிருந்தோம். அதன் காரணமாக, நம் சிந்தனைகளையும் மேற்கத்திய சிந்தனைகளோடு பொருத்திப்பார்த்து மகிழ்ந்தோம். தமிழ்ப் பண்புகொண்ட இலக்கியத் திறனாய்வைப் பண்டைய தமிழ் இலக்கணச் சிந்தனைகளிலிருந்தும் செய்யுள் பற்றிய சிந்தனைகளிலிருந்தும் வளர்த்தெடுக்க முயற்சிக்கவில்லை. தமிழ்க் குணம் கொண்ட ஓர் இலக்கியத் திறனாய்வு முறையை வளர்க்கும் நோக்கத்தோடு மேற்கத்திய அமைப்பியல் திறனாய்வில் பயன்படுத்தப்படும் கருத்தாக்கங்களான ‘ஆகுபெயரன்’ (Metonymy) மற்றும் ‘உருவகம்’ (Metaphor) ஆகியவை இக்கட்டுரையில் அணுகப்படுகின்றன.

ஆங்கில அணி இலக்கணத்தில் ஆகுபெயரன் (Metonymy) என்பது முழுமையைக் (Whole) குறிக்கும் ஒரு பகுதி (part) எனப்படுகிறது. உருவகம் (Metaphor) என்பது ஒன்றைப் பதிலி (Substitute) செய்யும் மற்றொன்று. இவ்விரு கருத்தாக்கங்களும் இவற்றோடு தொடர்புடைய, தமிழ் இலக்கணத்தில் நன்கு அறியப்பட்ட 'ஆகுபெயர்' மற்றும் 'உருவகம்' ஆகியவற்றுடன் ஒப்பிடப்படுகின்றன. பின் மேற்கத்திய மற்றும் தமிழ்க் கருத்தாக்கங்களிலிருந்தும் வேறுபட்ட கருத்தாக்கம் வளர்ந்தெடுக்கப்படுகிறது. இவ்வாறு நீட்சிப்படுத்தப்பட்ட கருத்தாக்கத்தை (extended concept) அடிப்படையாகக் கொண்டு சங்ககாலத் தமிழ்க் கவிதையான பட்டினப்பாலையும் நவீன புதுக்கவிதை ஒன்றும் திறனாயப்படுகின்றன.

இவ்வாறு நீட்சிப்படுத்தப்பட்ட மேற்கத்திய கருத்தாக்கத்தின் மூலம் இருவேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட இரு தமிழ்க் கவிதைகள் ஆயப்படும்போது எழும் சிக்கல்களும் தீர்வுகளும் விவாதிக்கப்படுகின்றன.

நடராசன், டாக்டர் தாரா தாய்ப்பாலிற் சிறந்ததொரு தனிப்பாலில்லை

உலகம் தோன்றி காலத்திலிருந்தே மனித இனமும் விலங்கினமும் இனப்பெருக்கம் கொண்டனவாய் அமைந்தன. பிறந்த குழந்தைகளைச் சீராகப் பாலூட்டி நோய்நொடியின்றி வளர்ப்பது தாயின் கடமையாகும். "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே" என்பார் புறநானூற்றுத்தாய் (312).

பண்டைக் காலத்தில் தாய்மார்கள் குழந்தைகளுக்குத் தம் பாலைத் தவிர வேறு உணவை ஊட்டியதாகத் தெரியவில்லை. அக் குழந்தை தளர் நடையிட்டு நடைவண்டி ஓட்டும் பருவம் வரையும் தாய்ப்பாலால் வளர்ந்தான் என்பது கலித்தொகை காட்டும் உண்மை (மருதக்கலி 20).

பாலூட்டுவதைத் தாய் தன் கடமையாக மட்டுமின்றிப் பெருமிதம் கொண்டதாகவும் கருதுகிறார். இம் மதிப்பின் அடிப்படையில்தான் பரம்பொருளையே "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" (திருவாசகம் 37-9) என அருள்புரியும் பெரும்பொருளாகக் காணமுடிகிறது.

அரச குடும்பங்களில் அரசியர் சிலர் தம் மக்களுக்குப் பாலூட்டவே செவிலியர்கள் சிலரை அமர்த்தியிருந்தனர். தமிழ் இலக்கியங்கள் இவர்களை முலைத்தாயர் என வழங்கும் (சிந்தாமணி

3096) இன்றும் பல இடங்களில் பாலூட்டும் தாய் இறந்துவிட்டால் அச்சேய்க்கு மற்றொரு தாய் பாலூட்டும் வழக்கம் உள்ளது. இவ்வாறு பாலூட்டுவதை மகிழ்ச்சியான கடமையாகத் தமிழ்நாட்டின் சிற்றூர்களில் தாய்மார்கள் இன்றும் கருதுகின்றனர்.

இவற்றால் குழந்தைகளுக்குத் தாயப்பால் மட்டுமே தரப்பெற்றது என்பதையும், ஆவின் பாலோ மாவின் பாலோ ஊட்டுவது பற்றி அவர்கள் அறியார் என்பதையும் உறுதியாக அறியலாம்.

முதல் உலகப் போர் முடிந்ததும் இந்த நிலை மாறியது. பொருளாதாரக் காரணங்களால் பெண்டிர் அலுவலகப் பணிக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. பலமணி நேரம் புறத்தே பணியாற்ற வேண்டிவந்ததால் தாயால் மகவுக்குப் பாலூட்ட இயலவில்லை. இதனால் குழந்தைக்கு மாற்றுப் பாலை ஊட்ட வேண்டிய கட்டாயம் நேர்ந்தது.

தாய்ப்பாலின் இன்றியமையாமையும் சிறப்பும் பொதுமக்களுக்கு, குறிப்பாக மகப்பேற்று மகளிருக்கு வானொலி, செய்தித்தாள், தொலைக்காட்சி வாயிலாகப் பரவலாக உணர்த்தப்படுகின்றன.

பழங்காலந்தொட்டே தமிழகத்தின், விழுமிய மரபாகக் கருதப்படும் தாய்ப்பால் ஊட்டுகையை இப்போது அனைத்து நாடுகளும் வலியுறுத்துவதை நோக்கும்போது தமிழ் மரபின் மாட்சியை நாம் அறிந்துமகிழலாம். "தாய்ப்பாலிற் சிறந்ததொருபால் இல்லை" என்பதையே ஒரு பொன்மொழியாக நாம் எழுதிவைத்தாலும் பொருத்தமாகும்.

DR. TARA NATARAJAN BREAST FEEDING IS THE BEST FEEDING

Ever since the existence of the world started the most imprtant aspect was the growth and promotion of each species. This is true for both mankind and animal world. In this respect it was essential for the mother of each species to suckle her own child and promote the growth of the baby in a healthy way. As per this rule the human mother also gave her breast milk only to her child to build him into a healthy adult.

Throughout sangam literature there is evidence only for the mothers to have fed their babies with their milk and never with milk from other species like the cow, goat, ass etc. 'milk is species specific'.

Things changed after the first world war, when the mother due to economical reasons had to take up jobs and go out of the house for more than ten to twelve hours continuously when she couldnot breast feed. Under misconceptions and added influence of the western world where feeding with artificial milk was in vogue the mother in India, poor and rich bought artificial milk likes cows milk, buffaloes milk, powdered milk and fed the babies in their absence. These artificial milks where given in very diluted forms and under unhygeinic conditions. This resulted in severe grades of malnutrition in these children compared to those fed with only breast milk. This gave rise to many problems to the child and they became to prey of many diseases. The infant mortality was very high.

Many studies of infant feeding practices in India were undertaken. It was found that breast milk is the best for each and every child and all measures should be taken up to promote breast feeding by all mothers exclusively upto to months and continue beyond or years also. Not only breast feeding save babies but it also saves lot of money for the family and nation.

நடராசபிள்ளை, முனைவர் ந. கருத்துப் பரிமாற்றத் திறன் வளர்த்தல்

மொழி கற்பிப்பதற்கு எனப் பலவகையான கற்பித்தல் முறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மொழி அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து அமைப்பு மொழி கற்பித்தல் முறையும் மொழி பயன்படுத்தப்படும் கூறுகளின் அடிப்படையில் பயனியல் முறையும் தற்போது கருத்துப் பரிமாற்றத் திறனை அடிப்படையாகக் கொண்டு கருத்துப் பரிமாற்ற அணுகுமுறையும் எழுந்துள்ளன. இக்கட்டுரை முந்தைய முறைகள் எங்குத் தவறியுள்ளன என்பதை விளக்கி, கருத்துப் பரிமாற்றத் திறனை வளர்ப்பதற்கான உத்திகளையும் தருகிறது. இன்றைய மொழிகற்பித்தல் உலகில் முக்கியமாகப் பேசப்படுகிற அணுகுமுறையே இது.

உளவியல் கோட்பாடுகளான கேட்டுப் பேசல் வழக்கப்படுத்தும் கோட்பாடு, ஓர்தல் விதிபயில் கோட்பாடு ஆகிய இரண்டும் இரண்டாம் மொழி கற்பித்தல் துறையில் பல நிறை குறைகளை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய தகவல் யுகத்தில் செய்திக்கு முக்கியத்துவம் அளித்து மொழி கற்பிக்கப்படுவதால் கருத்துப் பரிமாற்றத் திறன் சிறப்புப்பெறுகிறது. இக்கட்டுரை இத்திறனை எவ்வாறு வளர்ப்பது என்பதைப் பற்றி ஆராய்கிறது.

நடராஜன், முனைவர் ஜி.வி. தமிழ்நாட்டில் சிறுபான்மையினருக்குப் பள்ளிகளில் தமிழ் கற்பித்தல்- சில அணுகுமுறைகள்

மனிதனின் அரிய கண்டுபிடிப்பாகிய மொழி மனித சமுதாயத்தின் கருத்துப் பரிமாற்றக் கருவியாகவும் பண்பாட்டை உணர்த்தும் கருவியாகவும் அமைந்திருக்கிறது. இத்தகைய மொழி செம்மை பெறுவது ஒரு குழந்தையினுடைய தொடக்கக் கல்வி நிலையிலேயேயாகும். இன்றைய கல்வி நிலையில் பள்ளியிலே மொழிப்பாடம் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்.

மொழி கற்பித்தல் என்பது மாணவரை மையமாகக் கொண்ட ஒரு செயல். எனவே மாணவர்தம் வீட்டு மொழியின் அறிவு, அவர்களுடைய சமுதாயப் பின்னணி, மொழிச்சூழல், வட்டார வழக்கு போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மொழி ஆசிரியர் செயல்படவேண்டும். மேலும் தற்போதுள்ள பாடப் புத்தகங்கள் தமிழை வீட்டு மொழியாகக் கொண்ட மாணவர்களை மட்டுமே கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. எல்லையோர மாவட்டங்களில் வாழும் சிறுபான்மையினரான தமிழ் பேசுவோர் கருத்திற் கொள்ளப்படவில்லை. ஆகவே, சூழலுக்கேற்ப மொழி ஆசிரியர் கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஏற்ப மொழி கற்பித்தலிலும் மாற்றங்கள் தேவை. இது காலத்தின் கட்டாயமாகும்.

அவற்றையொட்டித் தொடக்கப்பள்ளிகளில் குறிப்பாக மொழிச்சிறுபான்மையினர் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பித்தலுக்கான சில அணுகுமுறைகள் இக்கட்டுரையில் விவரிக்கப்படுகின்றன. குறிப்பாக, தமிழ் கற்றலில் தாய்மொழி இடையீடு, தமிழின் இருநிலை வழக்கு, குழந்தைகளின் சொற்களஞ்சியம் பெருக்குதல், கற்றலில் அகராதிகளின் பங்கு ஆகியவை ஆராயப்படுகின்றன.

நயினார் முகம்மது, முனைவர் சி. இசுலாமிய இலக்கியங்களில் சமய நல்லிணக்கம்

இன்று சாதி, சமய, இன, மொழி, ஆதிக்க வெறி முதலியவற்றால் பூசலும் போரும் மூண்டு மனித வாழ்வை அலைக்கழிக்கின்றன. இவற்றுள் மனத்தைப் பதப்படுத்தி மாந்தரை அறவழிநடத்தி, அமைதிக்கு ஆற்றுப்படுத்தத் தோன்றிய சமயங்களின் பெயரால் பகையும் படுகொலையும் நடப்பது வேதனைக்குரியது. இவ்வவலநிலை

நீங்காதா? 21-ஆம் நூற்றாண்டிலாவது அமைதி தவழாதா? என்ற ஏக்கம் சான்றோர் நெஞ்சைக் கவ்விப் பிடித்துள்ளது.

இன்பமூட்டி அறிவு புகட்டும் இலக்கியப் பயிற்சி இவ்வேக்கத்தைத் தணிக்கவல்லது. அத்தகு இலக்கியங்கள் இசுலாமிய இலக்கிய வரலாற்றில் நிரம்ப உள்ளன.

மனித சமுதாயம் தந்தை ஆதம் நபியிலிருந்து தோன்றிப் பல்கிப் பெருகி உலகெங்கும் பரவியுள்ளது. இந் நபி முதலாக, காலந்தோறும் இனந்தோறும் வழிகாட்டிகள் தோன்றி மக்களை நன்னெறிப்படுத்தியுள்ளனர். இறுதியாக வந்த வழிகாட்டியே முகம்மது நபி. இவ்வழிகாட்டிகளுக்கு அவ்வப்போது வோத வசனங்களும், வேதங்களும் இறைவனால் அருளப்பட்டன. இவற்றின் மூலக் கொள்கையில் மாறுபாடில்லை. ஒரிறைவனை நம்பி வழிபட்டு நற்செயல்கள் செய்தால், நற்கதி உண்டு. ஒன்று இறை ஒன்று மக்கள் சாதி என்பதே இசுலாத்தின் கோட்பாடாகும். இஃதே இசுலாமிய இலக்கியங்களின் பொருண்மையுமாகும்.

இவ்விலக்கியங்களில் இசுலாமியக் கொள்கைகள் விளக்கமுறுவதுடன் முகம்மது நபியும் அவர்தம் தோழர்களும் இறைநேசச் செல்வர்களும் துன்பம் செய்த பிறசமயப்பகைவர்களுக்கு அன்புகாட்டி இன்பம் செய்த நிகழ்ச்சிகளும் சித்தரிக்கப்படுகின்றன. இவையன்றி இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் சமய நல்லிணக்கத்தைக் காட்டும் அறிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. நான்காவது இசுலாமிய இலக்கியம் என்று கருதப்படும் மிகுராசு மாலையின் ஆசிரியர் ஆலிப் புலவரை ஆதரித்தவர் பாவாடைச் செட்டியாராவார். இவ்விலக்கிய அரங்கேற்றத்தின் போது பார்வையற்ற இப்புலவரின் விழிகள் ஒளிபெற்றன என்பர்.

இசுலாமிய இலக்கியப் பதிப்புகளில் சமய நல்லிணக்கம் சிறந்து விளங்கக் காணலாம். அச்சான முதல் முசுலிம் காப்பியம் உமறுப்புலவரின் சீறாப்புராணம். இப்பேரிலக்கியம் இதுவரை 13 பதிப்புகளைக் கண்டுள்ளது. இவற்றுள் 11 பதிப்புகள் இந்து அச்சகங்களில் பதிப்பாகியுள்ளன. குணங்குடி மசுதான் சாகிபு திருப்பாடல்திரட்டு 21 பதிப்புகளைக் கண்டுள்ளது. இவற்றுள் நான்கு பதிப்புகளே சாகுல்அம்தியா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. முசுலிம் பதிப்பாசிரியரைக் கொண்டவை பத்து, முசுலிம் வெளியீடுகள் நான்கு. உரையாசிரியர்களுள் இருவர் இந்துசமயப் புலவர்களே ஒருவர் முசுலிம்.

இந்து முசுலிம் ஒற்றுமை சிங்காரத் தங்கப்பாட்டு, சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் முதலிய இலக்கியங்களைப் படைத்திருப்பதுடன்

இந்து சமயப் பெரியார்களைப் பற்றிய இலக்கியங்களையும், சிவன், திருமால், கணபதி, முருகன், மலைமகள், திருமகள், கலைமகள் முதலிய தெய்வங்கள் பற்றிய பாடல்களையும் தோற்றுவித்துள்ளது.

பதின்மூன்றுக்கும் மேற்பட்ட இசுலாமியப் பொருண்மை கொண்ட இலக்கியங்களை இந்து சமயப் புலவர்கள் இயற்றியதுடன் பல இசுலாமியப் பாடல்களையும் புனைந்துள்ளனர்.

இனிய பலஇலக்கியங்களைப் படைத்த முசுலிம் புலவர்கள் இந்து சமயப் புலவர்களின் மாணாக்கரே. இவ்வாறே பிறசமயப் புலவர்கள் பலர் முசுலிம் புலவர்களிடம் பாடங்கேட்டுள்ளனர்.

செயற்கரிய சதாவதாணம் செய்த செய்குத்தம்பிப் பாவலர் அருட்பா மருட்பா பூசலில் குதித்து அருட்பாக் கட்சிக்கு வாகை சூட்டியதுடன் சைவ வைணவ இலக்கிய உரை நிகழ்த்துவதில் சிறந்து விளங்கினார்

கேட்பார் பிணிக்கக் கம்பராமாணயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ள கம்பராமாயண சாகிபுகளின் பணி இங்கு நினைவு கூரத்தக்கது.

சமய வேறுபாடு கருதாமல் வாரி வழங்கிய வள்ளல் சீதக்காதியைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். முசுலிம் புலவர் பெருமக்களை ஆதரித்த இந்து சமயப் புரவலரும் பலர் உள்ளனர்.

இவ்வரிய செய்திகளையெல்லாம் கற்றுணர்ந்தார் பகைமை மறையும் அன்பும் அமைதியும் தவழும், பல்வேறு சமயங்களைச் சார்ந்தவரும் மகிழ்வில் திளைப்பர்.

நரசிம்மன், முனைவர் பி.ஆர். இந்திய மெய்ப்பொருளியல் காட்டும் உடலியல் கருத்துகள்

இந்திய மெய்ப்பொருளியல் முறைமைகளில் வேதங்கள், வைசேடிகம், சாங்கியம், அத்துவிதம், விசிட்டாத்துவைதம், சைவ சிந்தாந்தம் ஆகியவை உடலியல் கூறுகள், படிமுறை வளர்ச்சி நிலைகளில் எவ்வாறு உருப்பெறுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

வேதங்கள், படைப்பு முழுமையானது, அது பிரஜாபதி என்னும் படைப்புத் தோற்றுவாயிலிருந்து படிமுறைவளர்ச்சி நிலைகளில் தோன்றுகின்றது எனக் கூறுகின்றன. பிரஜாபதி பரமேஸ்தியாகவும், பரமேஸ்தி சூரியனாகவும், சூரியன் பூமியாகவும், பூமி சந்திரனாகவும்

படிமுறை வளர்ச்சி நிலையைப் பெறுகின்றன. இருநான்கு படி முறை வளர்ச்சி நிலைகளின் அடிப்படை இயல்புகளுக்கேற்பவே மனிதனின் உடல்கூற்று இயல்புகள் அமைகின்றன என்றும் வேதங்கள் கூறுகின்றன.

திரவ்யம் உள்ளிட்ட ஏழுசொற்பொருள் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றில் திரவ்யம் என்னும் பொருள் நிலம், நீர், தீ, காற்று, வெளி, காலம், இடம், உணர்வு, மனம் என்னும் ஒன்பது வகைப்படும் என்கின்றது வைசேடிகம். இவ்வொன்பது பொருள்களும் அடிப்படையில் அணுக்களாகவே அமைந்தவை. இவற்றின் அணுக்கள் முதலில் இரண்டு இரண்டாகவும் பின்னர் இரண்டின் தொகுதிகள் மும்மூன்றாகவும், அதன்பின் மூன்றின் தொகுதிகள் நன்நான்காவும் இணைகின்றன. இவ்வாறு அவை தொடர்ந்து கொண்டே சென்று படைப்பு முழுமையாகவும் அதன் பல்வகைப்பட்ட பொருள்களாகவும் மாறுகின்றன என்று வைசேடிகம் தனது அணுக்கொள்கையில் கூறுகின்றது.

சாங்கியம், பிரகிருதியை மனிதன் உள்ளிட்ட படைப்பு முழுமையின் தோற்றுவாயாகக் கருதுகின்றது. இப்பிரகிருதி புருடனின் அருகாமையினால் உரிய தூண்டலைப் பெற்றுப் பிரகிருதியின்கூறுகளின் மேலோங்கிய நிலைகளில் பத்தொன்பது படிமுறைவளர்ச்சிநிலைகளைப் பெறுகின்றது. இவற்றின் இறுதி நிலையிலுள்ள ஒலி உள்ளிட்ட தன்மாத்திரைகள் பஞ்சீகரணம் என்னும் சேர்க்கை முறைமையின்படி பஞ்ச பூதங்களாகவும் பின்னர் இவற்றிலிருந்து மனிதன் உள்ளிட்ட படைப்பு முழுமையின் பொருள்கள்உண்டாகின்றன என்று சாங்கியம் கூறுகின்றது.

அத்துவித மெய்ப்பொருளியல், ஒரே உள்பொருளான பிரமன் படைப்பு முழுமையைத் தோற்றுவிக்கத் தன்னைத் தானே வரம்புக்குட்படுத்தி ஈசுவரன் ஆகிறது என்றும் பின்னர் ஈசுவரன்விராட், இரணியகர்ப்பன், பிரித்தறியும் அறிவு, மனம், ஐந்து தன் மாத்திரைகள் இதிலிருந்து ஐந்து பஞ்ச பூதங்கள் ஐந்து புலனுறுப்புகள் ஆகியன ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றுகின்றன என்றும் கூறுகின்றது. அடுத்துப் பூமியிலிருந்து உணவும், உணவிலிருந்து நான்கு வகையான உயிரினங்களும் தோன்றுகின்றன என்றும் இம்மெய்ப்பொருளியல் கருதுகின்றது.

உணர்வு அல்லாததன் அடிப்படையையும் பண்பாகக் கொண்ட பிரமன் தன்னிலிருந்து தொடங்கி இருபத்தைந்து படிமுறை வளர்ச்சி நிலைகளாகப் பஞ்சபூதங்கள் வரையிலான படைப்பு முழுமையை உண்டாக்குகின்றது என்று விசிட்டாத்துவைதம் கூறுகின்றது. படைப்புத் தோற்றுவாயான பிரகிருதியிலிருந்து பஞ்சபூதங்களின்

வெளிப்பாடுகள்வரை விசிட்டாத்துவைதமும் சாங்கியமும் ஒரே மாதிரியான படிமுறை வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடுகின்றன.

சைவசித்தாந்த மெய்ப்பொருளியல் தன் பெயருக்கேற்பப் படிமுறைவளர்ச்சி பற்றிய முடிந்த முடிவாகஅனைத்தையும் உள்ளிட்ட வகையில், படைப்புத் தோற்றுவாயான மாயையிலிருந்து படைப்பு முழுமையானது முப்பத்தாறு படிமுறை வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடுகின்றது. இம்முறைமையிலும் சாங்கியம், விசிட்டாத்துவைதம் போன்று பிரகிருதியிலிருந்து பஞ்சபூதங்கள்வரை இருபத்து நான்கு படிமுறை வளர்ச்சிநிலைகள்இருப்பினும் அவை பல மாறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றன.

Dr. P.R. NARASHIMMAN THE PHYSIOLOGICAL IDEAS IN INDIAN PHILOSOPHY

Among the Indian schools of philosophy the vedas, vaisesikas sankhya, Advaita, Visistadvaita, and Saiva siddhanta state how the physiological aspects develop through the evolutionary process.

The vedas tell that the universe evolves out of prajapati. The prajapati first evolves into paramesthi, paramesthi into sun, sun into earth and earth into moon. The physiological aspects of human beings and the division of the society into four classes are formed on the basis of these evolutions according to the vedas.

The Vaisesika system recognises seven categories. The substance in the first one. There are nine substances. They are earth, water, fire, air, ether, time, space, spirit and mind. The atoms of these nine substances combine to form the universe. For example two earth atoms combine to form a dyad, three dyads combine to form a triad, and four triads combine to from a quadrad. This process goes on till the evolution of the physical universe according to the vaisesika atomic theory.

Prakrti is the material cause of the universe according to the sankhya. When the purusa comes near to the prakrti it begins to evolve. It gives rise to twenty four tattvas during its evolutionary process. The last five evolutes come into existence by means of pancikarana. The last five evolutes namely the pancabhutas transform into the objects and bodies of the universe.

According to advaita the non dualistic reality Brahman in order to create the appearance of the universe delimits itself and becomes Isvara. Isvara then changes into virat, Hirangarbha, Buddhi, mind, five tanmatras. From the five tanmatras appear the pancabhutas the sensory organs. From earth food evolves. From food evolves four types of living beings.

According to visistadvaita the qualified Brahmas is the unconscious substrate of the universe. Brahman really transforms into the universe through twenty five tattvas including itself. The evolutionary process is similar to that of the sankhya.

The saiva siddhanta philosophy is the end of the ends of all philosophies according to the connotation of the term siddhanta. Maya is the material cause of the material universe. The evolutionary process consists of thirty six tattuvas and pure and impure universe. The twenty four impure tattuvas which comes out of the impure maya differ in its order from that of the sankhya and the visistadvaita philosophies.

நரேந்திரன், டாக்டர் சு. கலைச்சொல்லாக்கத்தில் இரு நிலை வழக்கு

தமிழில் அறிவியலைக் கற்பிக்கும் முயற்சியில் கலைச்சொல் உருவாக்கம் முதன்மை இடத்தைப் பெறுகிறது. எனவே, கலைச்சொல்லாக்கம் அறிவியலின் பலதுறைகளிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மருத்துவத்துறையில் கடந்த 150 ஆண்டுகளாகக் கலைச்சொல்லாக்கம் நடைபெற்று நூற்றுக் கணக்கான சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மருத்துவக் கட்டுரைகளிலும், நூல்களிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், வகுப்பறைகளிலும் மருத்துவ ஆலோசனைக் கூடங்களிலும் பெரும்பாலும் ஆங்கிலமே பயன்படுத்தப்படுகிறது. எழுத்து வழக்கில் பயன்படும் தமிழ்க் கலைச்சொற்களை நடைமுறைப் பேச்சு வழக்கில் பயன்படுத்த இயலாத ஒரு இருவழக்கு நிலை தமிழில் இருக்கிறது. ஆங்கிலச்சொல் பழக்கப் பட்டதாகவும் எளிதாகவும் இருப்பது ஒரு காரணம் ஆகலாம். (எ.டு.) Endoscope எனும் சொல் பழக்கப்பட்டுப்போன நிலையில் 'இரைப்பை உள்நோக்கி' எனும் தமிழ் கலைச்சொல் புதிதாகவும் கடினமாகவும் உள்ளது. இந்த இருவழக்கு நிலை மாறப் பயிற்று மொழியாகத் தமிழ் மட்டுமே பயன்படவேண்டும். இக்கட்டுரை இந்த இருநிலை வழக்கால் ஏற்படும் சிக்கல்களையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் அறிவியல்பூர்வமாக ஆராய்கிறது.

நலங்கிள்ளி, முனைவர் அரங்க. தமிழ்மொழி - ஒரு பெண்ணிய நோக்கு

இன்றைய சமுதாயம் ஆண்தலைமைச் சமுதாயம் என்பது ஐயத்திற்கு அப்பாற்பட்டது. ஆண்தலைமைச் சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், மொழி, கலை இலக்கியங்கள் போன்ற அனைத்தும் ஆண் தலைமையில் உருவாக்கப் பட்டவையே. பண்பாட்டுக் கூறுகள் அனைத்தையும் ஆண் உருவாக்கியதால் அவற்றைத் தனக்குச் சார்பாகவே ஆண் ஆக்கிக்கொண்டான். இதன் விளைவால் பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் பெண்ணுக்கு எதிராக அமைந்தன. அவ்வகையில் மொழியும் ஆணுக்குச் சார்பாகவே விளங்கிற்று. மொழி ஆணுக்குச்சார்பாகவும் பெண்ணுக்கு எதிராகவும் இயங்கும் தன்மையை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சொல் என்ற நிலையில் பார்க்கும்போது பெண்பாற் சொற்களெல்லாம் பெரும்பாலும் ஆண்பாற் சொற்களினின்றே உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது ஆண்பாற் சொற்களையே சற்று முன்பின் மாற்றிப் பெண்பாற் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறுபான்மைச் சொற்கள் பெண்பாலுக்கென்றே தனியாக ஆக்கப்பட்டிருப்பின் அவை பொருள்தரும் நிலையில் பெண்ணுக்கு எதிராகவே செயல்படுகின்றன. உதாரணத்திற்கு ஆண், பெண் என்ற இரு சொற்களையும் எடுத்துக் கொள்ளலாம். ஆண் என்ற சொல் ஆளுமை என்ற பொருளிலும் பெண் என்ற சொல் பெட்பு என்ற பொருளிலும் பயன்படுகின்றன. ஆண், பெண் தொடர்பான பெரும்பாலான சொற்களையும் அதன் பொருளையும் நோக்கும்போது அவை பெரும்பாலும் ஆணை உயர்வுபடுத்தும் போக்கிலும் பெண்ணை இழிவுபடுத்தும் நிலையிலும் உள்ளன.

மொழி, இலக்கியம் என்பவற்றை வரையறை செய்ய வந்த தொல்காப்பியர் மற்றும் தொல்காப்பிய உரையாசிரியர் ஆகியோர் ஆண் சார்புத் தன்மையுடனேயே மொழி இலக்கியம் என்பவற்றைத் திட்டவட்டப் படுத்தியுள்ளனர். தொல்காப்பியப் பொருளதிகாரம் பாலியல் பற்றி விரிவாகப் பேசிச் செல்லும் வேளையில் பெண்பாலியல் தொடர்பான சிந்தனைகளை அறிவுக்குப் புறம்பான நிலையில் நின்று விளக்குகிறது. பெண்பாலியல் என்பது இழிந்தது எனும் கருத்தாக்கம் ஆண்தலைமைச் சமுதாயத்தில் திட்டவட்டப் படுத்தப்பட்டதால் பெண்பாலியல் தொடர்பான சொற்கள் மொழியில் ஆக்கப் படாமலேயே தவிர்க்கப்பட்டுள்ளன. பெண்பாலியல் உண்மையான வகையில் எத்தகு சொல்லாலும் மொழியில் பேசப்படவே இல்லை.

மொழி, பொருள் என்பன பெரும்பாலும் ஆணைச் சார்ந்தே அறியப்பட்டு வருவதால் இன்றைய பெண்ணியவாதிகள் பெண்ணுக்கான மொழி ஒன்று தேவை என்று வற்புறுத்தி வருகின்றனர். பெண்மொழி மற்றும் அதன்பொருள் என்பன பெண் பற்றிய உண்மையை எடுத்து விளக்குவனவாக இருத்தல் வேண்டும். பெண்ணின் உண்மையான இயல்புகளை எடுத்துக் கூறும் வகையில் தற்போதுள்ள சொற்களின் பொருள் விரிவுபடுத்தப்படவேண்டும். அதேபோல் பெண்பொருள்தரக் கூடிய புதிய சொற்கள் உருவாக்கப்பட வேண்டும். அதேபோல் பெண் பொருள் தரக் கூடிய புதிய மொழி, புதிய பொருள் என்பனவெல்லாம் பெண் அனுபவத்தினின்றே உருவாக்கப்படல் வேண்டும் எனப் பல்வேறு கருத்துகளைப் பெண்ணியவாதிகள் முன்வைக்கின்றனர்.

நெடுமாறன், முரசு மலேசியத் தமிழ்க் கவிதை - தோற்றமும் வளர்ச்சியும்

மலேசியாவிற்கும் (1963-ஆம் ஆண்டிற்கு முன் மலாயா) தமிழகத்திற்கும் கி.மு. முதலாம் நூற்றாண்டு முதலே தொடர்பிருந்து வந்ததை, வரலாற்றாசிரியர் சான்றுடன் குறிப்பிட்டிருக்கின்றனர். மலாய் மொழியில் ஆயிரக் கணக்கான தமிழ்ச்சொற்கள் கலந்திருப்பதும், மலாய்க்காரர் பண்பாட்டில் தமிழ்ப்பண்பாடு இரண்டறக் கலந்திருப்பதும் தக்க அகச் சான்றுகளாய் விளங்குகின்றன.

இப்போது இங்கு வாழும் தமிழர்க்கும் பன்னெடுங் காலத்திற்கு முன்பு இங்குப் பண்பாட்டுத் தூதுவராய் வணிகர்களாய், படை நடத்துநராய் (இராஜேந்திர சோழன் காலம்) இங்குவந்த தமிழர்க்கும் தொடர்பில்லை.

இப்போது இங்குவாழும் தமிழர், 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெள்ளையர்களால் தமிழகத்திலிருந்து ஒப்பந்தக் தொழிலாளராய்க் கொண்டுவரப்பட்டவரின் கால் வழியினர் ஆவர். ஒப்பந்தத் தொழிலாளர் என்போர் ஓர் அடிமை நாட்டிலிருந்து மற்றோர் அடிமை நாட்டிற்கு எந்த வகையான பாதுகாப்பு உறுதியும் இன்றி ஏதிலிகள்போல் கொண்டு வரப்பட்டவர் என்பது இங்குக்குறிப்பிடத் தக்கது.

மலேசியத் தமிழ், இலக்கியத் தோற்றம் என்பது, வறண்ட பாலை நிலத்தில் அரிதின் முயன்று வளர்க்கப்பட்ட ஒரு பசுஞ்செடிக்கு ஒப்பானதாகும். ஆம், ஒளியே புகாத இருண்ட வாழ்வுத் தடத்தில் எண்ணற்ற தடை முடைகளோடு ஊர்ந்த அந்த ஒப்பந்தத் தொழிலாளரிடத்தேயும் நாட்டுப் புறப்பாடல்களாக மலேசியத் தமிழ்

இலக்கியம் வெளிப் போந்தது. இங்குத் தேர்ந்த புலவர்களால், 1866 ஆம் ஆண்டு முதல் இலக்கியம் தோன்றியிருந்தாலும் இந்த நாட்டு மண்ணில் தமிழர் சிந்தியகுருதியின் குறியீடாக விளங்குபவை ஒப்பந்தத் தொழிலாளர் உணர்வுகளாய்ப் பிறந்த நாட்டுப் புறப் பாடல்களே ஆகும்.

இங்கு 1887-இல் முதல் கவிதை நூல் வெளிப் போந்த தென்றலும் தமிழ்க்கவிதைத் துறை வளர்ச்சிக்கு நாள், வார, மாத இதழ்களே அடித்தளமாய் விளங்கிவந்துள்ளன. 1957-ஆம் ஆண்டிற்கு (விடுதலைக்கு) முன்பு வரை மனநிறைவளிக்கத் தக்க அளவு மிகுதியான நூல்கள் வெளிவரவில்லை. 1960-ஆம் ஆண்டிற்குப் பின்னரே நூல்கள் அடுத்தடுத்து வெளிவரத் தொடங்கின.

மலேசியத் தமிழ்க் கவிதை வடிவங்கள் தமிழக மரபு சார்ந்தே வளர்ந்து வந்துள்ளன. இவை சொல் புதிது; சுவை புதிது என்று சொல்ல முடியாவண்ணம் தமிழகக் கவிதைகளோடு பேரளவு வேறுபாடு இன்றியே விளங்கின. வெண்பா, கலிப்பா, (வஞ்சிப்பாக்கள் அரிதாகவே உள்ளன) அகவற்பா ஆகியனவும் விருத்தம் முதலாய பாவினங்களும் பயின்று வந்தன. பிள்ளைத் தமிழ் முதலாய சிற்றிலக்கிய வடிவங்களையும் காணமுடிகிறது. குழந்தை இலக்கியமும் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவு வளர்ந்துள்ளது என்பதோடு, 'புதுக்கவிதை' என்று சொல்லப்படும் உரை வீச்சும் இங்கு வளரத் தொடங்கிவிட்டது.

தொடக்க காலத்தில் நாட்டுப்புறப் பாடல்களைத் தவிர மற்றவையெல்லாம், பிரபந்தங்களாகவும், வெள்ள, கொலைச்சிந்துகளாகவும், உல்லாச லாவணிகளாகவும் இருந்தன. 1947-இல் மறு மலர்ச்சிக்காலம் மலர்ந்தது. அதன் பின்னரே பாடுபொருள்கள் விரிவடைந்தன. 1957 வரை இந்திய விடுதலை உணர்வுகளே, நேத்தாஜி அவர்களின் எழுச்சி உணர்வுகளே பாடல்களில் கொப்பளித்தன. 1957-ஆம் ஆண்டிற்குப் பின்னரே, உண்மையான மலேசிய இலக்கியம் "ஆதிகாரப்பூர்வமாக"ப் பிறந்தது. பாடுபொருள் சமுதாய உணர்வுகளாக, தொழிலாளர்துயரங்களாக, காதலாக, இயற்கை உணர்வுகளாக, வாழ்த்தாக, இரங்கலாக விரிவுகண்டது.

தற்போது மலேசியத் தமிழ் இலக்கியத்தில் இரண்டு துறைகள் நன்குவளர்ந்துள்ளன. ஒன்று சிறுகதை; மற்றொன்று கவிதை கவிதைகள் இன்று இதழ்களில் பூத்துக் குலுங்குகின்றன. கவியரங்குகளில் மணம் பரப்புகின்றன; நூல்களாகப் பிறப்பெடுக்கின்றன; வானொலியில் ஒலியேறுகின்றன; கல்வி ஒலிபரப்பில் பள்ளிகளில் களி நடனம்

புரிகின்றன; மேடைகளில் இசைத்தேரேறி வலம்வருகின்றன.

மலேசியத் தமிழ்க் கவிதைகளில் பாரதி, பாரதிதாசன் தாக்கங்கள் மிகுந்திருந்தாலும் இலங்கை நாட்டைப்போன்று தனக்கென ஒரு தனி மரபை இன்னும் வகுத்துக் கொள்ளவில்லையென்றாலும் அந்த நோக்கைக் குறியாகக் கொண்டு நடைபோடத் தொடங்கியிருக்கிறது என்று கூறலாம்.

பக்தவத்சல பாரதி, சீ. தமிழர் சடங்குக் குறியியல்

பண்பாடு குறியீடுகளின் ஒழுங்கமைந்த தொகுதி. இந்த ஒழுங்கமைந்த தொகுதியின் பௌதிக இயக்கத்தில் சடங்குகள் பல்வேறு உள் அமைப்பொழுங்குகளோடு (Sub-systems) பல நிலைகளில் உறவுகொள்கின்றன. இவற்றின் உறவால் அமையும் பொருண்மையே சடங்குக் குறியியல் (Ritual Symbolism). ஒவ்வொரு பண்பாடும் அதன் அமைப்பிற்கான, இயக்கத்திற்கான, நிலைபேற்றிற்கான கருத்தாக்கங்களை ஆழ்நிலையாகவோ வெளிப்படையாகவோ சடங்குக் குறியியல் மூலம் உணர்த்தி நிற்கும் தன்மையது. இக்கருத்தாக்கங்களின் பொருண்மை சடங்குகள் உறவு கொள்ளும் எந்த ஓர் உறவுத் தளத்திலும் உய்த்துணரக்கூடியதாக இருக்கும். உய்த்துணர்தலின் அளவும் வீச்சும் அந்தந்த உறவுத்தளத்தில் உறவுகொள்ளும் உட்கூறுகளின் இயங்கியலைப் பொருத்தமையும். உட்கூறுகளின் உறவுகள் நீண்ட வரலாற்றுக் காலகட்டங்களைக் கடந்து வரும்போது அவற்றின் உறவுகளும், உறவுகளால் அமையும் பொருண்மைகளும் இறுக்கமான குறியீட்டுத்தன்மை பெற்றுவிடுகின்றன.

தமிழர் வாழ்வில் இடம்பெறும் சடங்குக் குறியியல் குறித்த இக்கட்டுரையில் ஒரு சுழற்சித் தளத்தில் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் சடங்குகள் ஆய்வுக்குட்படுத்தப்படும். இதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. குறுகிய கட்டுரை என்ற எல்லைக்குள் தமிழர் சடங்குக் குறியியலின் பன்முகப் பொருண்மையைச் சுட்டிக்காட்டவேண்டுமென்பது ஒரு நோக்கம். சமூகம், சமயம், பொருளாதாரம் போன்ற பல உள்அமைப்பொழுங்குகளில் காணப்படும் சடங்குக் குறியியலை ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் தமிழர் வாழ்வியலின் விரிந்த பரப்பில் சடங்குக் குறியியல் எவ்வாறு உருவாக்கம் பெற்றுள்ளது என்பதை அறிதல் மற்றுமொரு நோக்கமாகும்.

தமிழர் சடங்குகளில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கை வட்டச் சடங்குகள் (Rites of passage) தனிமனித நிலையிலும் சமூக நிலையிலும் ஏற்படும் நிலைமாற்றத்தைப் பண்பாட்டு ரீதியாகத் தன்வயப்படுத்தும் செயல்பாட்டைச் செய்கின்றன.

இச்சடங்குகளுள் மற்றொரு பிரிவாக வாழ்வு, சாவு எனும் இருமை அமைகிறது. இவ்விரண்டு சடங்கு வரிசைகளிலும் அடிப்படையில் ஒரேவகையான சடங்குப் பொருட்கள் இடம்பெறுகின்றன. ஆயினும் இவ்விரண்டுக்குமான சடங்குக் குறியியலானது 'ஈரியல் சீர்மை' - 'ஓரியல் சீர்மை' (Symmetrical Asymmetrical) என்னும் கருத்தாக்கத்தைக் கொண்டுள்ளது.

தமிழரின் சமயவாழ்வில் பொங்கலிடுதல் என்பது ஒரு மூலப்படிவக் குறியீடு (Archetypal Symbol). இக்குறியீட்டோடு உயிர்ப்பலிச் சடங்குகளும் பிற சடங்குகளும் உணர்த்தும் குறியீடுகளும் இணைகின்றன. இவையனைத்தும் அம்மன் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் நிகழ்த்தப்படும்போது அவை உணர்த்தும் சடங்குக் குறியியலானது அம்மனின் தொன்மத்தோடு தொடர்புறுவதையும் திருவிழாத்தளத்தில் சமூகத்தின் இயல்பான படிநிலை உடைக்கப்படுவதையும் எவ்வாறு மனிதர் - கடவுள் புழங்கு தளங்கள் இடைமாற்றீடு செய்யப்படுகின்றன என்பதையும் உணர முடியும். மேற்கூறிய சமூக, சமயச் சடங்குக் குறியியல் தவிரத் தமிழர் பொருளியல் வாழ்வில் நிகழும் பல சடங்குகள் வளமையை மையப்படுத்துகின்றன. இவையனைத்தையும் ஒருங்கிணைத்துச் 'சடங்குக் குறியியல்' என்னும் தலைப்பின் கீழ் நோக்கும்போது தமிழரின் வாழ்வியல் சடங்குகள் உணர்த்தும் பல்வேறு கருத்தாக்கங்களை அறியஇயலும்.

S. BHAKTHAVATSALA BHARATHI
RITUAL SYMBOLISM: ON THE MEANING AND SYMBOLIC PROCESS OF RITUALS AMONG TAMILS

Rituals and their symbolism are at the core of cultural construction of all societies. Yet each society has its own hegemony and varies considerably to form the symbolic expressions within its own cultural framework. This epistemological concern poses two questions: on the one hand, the cross-cultural data on ritual symbolism yield to conceive of the universality of the phenomenon, but on the other hand the ontological nature of symbolic expressions of each culture also yields to conceive the pragmatic discourse of the hegemony of its own culture. The Tamil data on ritual symbolism yield a wide array of symbolic discourses. For this paper data are deliberately drawn from a wide variety of ritual genres ranging from an archetypal symbol of *ponkal* (ritually cooked rice) to the explicit na-

ture of gender behaviour. This choice is intended, as said earlier, to know how the Tamil rituals and their symbolism can be understood within the framework of its cultural construction.

For Tamils, the ritual symbolism of *ponkal* is an archetype in nature. Scholars offer different discourses on this. Yet this paper concretizes to emphasis that this symbolism is enacted to recapitulate the mythic association of the goddesses to whom the festival is arranged. The social life is rejuvenated and the social structure is revitalized through the recalling of this mythic association. Besides this, to participate in a temple festival is to enter into a complex web of transactional relationship. The temple provides an absolute symbol of kingship. The relationship between the devotee and the god conceptually emulates the 'servant-master' analogy. This analogy is diachronically evolved power structure, replicating the relationship between the people and the king. It is often held that festival breaks social hierarchy. The Tamil festival symbolism provides us that though it seems to dissolve the hierarchy at the manifest level, it transcends the hierarchy and renunciates it latently. The ritual symbolism of *kollai vitutal* (the excess yield offered to god is taken away by the poor devotees) and other associated rituals amply demonstrate the continuance of prototype redistributive system operating in Tamil kingship.

The Tamil data on other aspects of ritual symbolism are quite hegemonical, whose paradigm though implies several co-implicated conceptions, dominantly centre around 'hierarchy'. This dominant symbolism can be explained in terms of antithetical pairs such as right/left, symmetrical/asymmetrical, north/south, elaborate ritual/ less elaborate ritual, auspicious woman/ inauspicious woman, superordination/subordination, prior/later, and the like. As has been briefed earlier, the data are drawn from wider domains (from rites of passage to economic rituals) in order to comprehend wider symbolic genres and their logical processes and relations operating at different domains. Through this excercise, this paper also tries to understand the highly coded and rigidly marked symbolism on the one hand and the loosely or manifestly attributed symbolisms on the other hand. At the outset the paper will try to identify the hegemonic paradigm operating in the ritual symbolism of Tamils.

பசும்பொன், முனைவர் க. கேட்டல் திறனும் பாடநூல் பயிற்சிகளும்

மொழி கற்றலுக்குரிய நான்கு வகை அடிப்படைத் திறன்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவை ஆகும். இவை முக்கியத் திறன்களாகக் கருதப்படுகின்றன. மொழிக்கல்வித் திட்டமிடுவோரும் மொழி ஆராய்ச்சியாளர்களும் இத்திறன்களில் மிகவும் கவனம் செலுத்திவருகின்றனர். பொதுவாகக் கேட்டல் திறனைக் கொள்திறன் (receptive skill) என்பார்கள். அன் அன்டர்சன், டோனிலஞ்'ஓ (1988) இருவரும் கேட்டல் திறன் ஒரு கொள்திறன் அல்ல என்றும் அது ஒரு ஆக்கத்திறன் (active or productive sklill) என்றும் கூறுகிறார்கள். எவ்வாறு எனில் கேட்பவர் பேசுபவரின் பேச்சின் பொருளை உணர்ந்து கொள்பவராக மட்டும் இல்லாமல் பிற விசயங்களையும் தூண்டிவிடுகிற முக்கியமான வேலையைச் செய்கிறார். மேலும் அது தொடர்பான செய்திகளையும் பகிர்ந்து கொள்கிறார்.

கேட்டல் திறன் பலவகையான திறன்களை உள்ளடக்கியது. கேட்டல் திறன் சிறப்புற வெளியில் கேட்கிற பல சப்தங்களிலிருந்து பேச்சுச் சப்தத்தை அறிந்து கொள்ள வேண்டும். தொடர்ப் பேச்சுக்கள் பிரிக்கப்பட்டு, தெரிந்த சொல்லாக மாற்றப்பட வேண்டும். ஒருவர் பேசிய தொடரை எந்தப் பொருளில் பேசினார் என்று தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் பேசப்படுகிற தொடர் சரியானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளதா என்பதை அறிய அவருடைய மொழி அறிவைப் பயன்படுத்த வேண்டும்.

கேட்பவர் பேசுபவரின் பேச்சை நன்றாகக் கேட்டு பேசுபவருக்குப் பொருத்தமான விளக்கத்தை (content interpretation) கொடுப்பதை முழுமை பெற்ற கேட்டல் திறன் (successful listening) என்கிறோம்.

விடோசன் (1983) பொருள் உணர்தல் செய்திகளாக (information source in comprehension) பின்னணிச்சூழல் அறிவில் உண்மை நிகழ்ச்சியோடு தொடர்புடைய அறிவையும் (factual) சமுகக்கலாச்சார ரீதியான அறிவையும் நடைமுறை சார்ந்த அறிவியல் (procedural knowledge) பேச்சில் மொழியின் பயன்பாடு பற்றியும் சூழமைவு அறிவியல் (knowledge of situation) இடத்தையும் பங்குபெறுவோரையும் எழுத்து மொழி அறிவையும் மொழியமைப்பு அறிவில் (knowledge of language system) பொருண்மையியல், தொடரனியல், ஒலியனியல் அறிவையும் கூறுகிறார்.

இவ் ஆய்வுரை கேட்டல்திறன் பற்றிய விரிவான விளக்கமும் தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ், பீஜி, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தமிழ்ப்பாடநூலில் கேட்டல்திறன் வளர்ப்பதற்குரிய பயிற்சிகள் எவ்வாறு உள்ளன என்பது பற்றியும் இத்திறன் மேலும் மேம்படப்பயிற்சிகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றியும் ஆய்கிறது.

மேலும் கேட்டல் திறனுக்கும் பேசுதல் திறனுக்கும் உள்ள உறவு, கேட்டல்திறனுக்கும் படித்தல் திறனுக்கும் உள்ள உறவு பற்றியும் பேசுகிறது. தாய்மொழியாளரின் கேட்டல் திறன் இரண்டாம் மொழியாளரின் (அயல்) கேட்டல் திறனிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதைப் பற்றியும் இக்கட்டுரைவிரிவாக ஆய்கிறது. ஒவ்வொரு படிநிலையாகக் (graded) கேட்டல் திறனை எவ்வாறு மேம்படச் செய்யலாம் என்றும் வகுப்பறையில் கேட்டல் திறனைச் சோதித்தறிவது பற்றியும் இது ஆராய்கிறது.

தமிழகத்தைப் பொருத்தவரையில் கேட்டுப்பொருளுணர் திறன்களாக மாணவர்கள் கதை சொல்லுதல், ஆசிரியர் - மாணவர் உரையாடல், மாணவர்கள் உரையாடல், பாடம் சொல்லுதல், மாணவர்கள் பாடத்தை உரக்கப் படிப்பதை அனைவரும் கேட்டல், குழந்தைப் பாடல்களைப் (nursery rhymes) பாடி அனைவரும் கேட்டல், நுண்ணிய வேறு பாட்டுச் சொற்களைச் சொல்லி வேறுபாட்டை உணரச் செய்தல், கேட்டெழுதும் பயிற்சி போன்ற பயிற்சிகள் உள்ளன. மலேசியா, சிங்கப்பூர்த் தமிழ்ப்பாட நூல்களில் கேட்டல் திறனுக்கான பயிற்சிகள் அதிகம் கொடுக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வுரை கேட்டல்திறனை மேலும் மேம்படுத்தப் பல்வேறு நிலைகளில் (elementary, secondary, higher) பயிற்சிகளைக் கொடுத்தல் பற்றியும் கூறுகிறது.

பரமசிவம், முனைவர் த.கோ. மைந்த சொல்லாய்

ஓதுவார் மூர்த்திகளால் தொடர்ந்து பயிலப்பெற்று வரும் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பாடல்களில் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. தவறான பாடங்களே சில இடங்களில் நிலைத்துவிட்டன. இக்கட்டுரை மூலபாட ஆய்வின் வழிநின்று தேவாரத்தில் காணப்பெறும் பாடவேறுபாடுகளுள் சிலவற்றைச் சுட்டி, ஞானசம்பந்தரின் பதிகம் தவறான பாடத்தைக் கொண்டே ஓதப்பெறுவதை எடுத்துக்காட்டிப் பக்திப்பனுவல்களிலும் ஒட்டுமொத்த மூலபாட ஆய்வு தேவை என்பதைக் காணமுயல்கிறது.

'அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதி தவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்'

இதனை ஓதுவார் பலரும் நிலாவியமைந்த(து) சொல்லாய், அமைந்த சொல்லாய் மைந்த, சொல்லாய் எனப் பிரித்து உரைகண்டுள்ளனர். எனினும் தேவார யாப்பமைதி, பொருளமைதி, நூலின் ஒட்டுமொத்தக் கோட்பாடு ஆகியவற்றைக் காணும்போது மைந்த சொல்லாய் எனும் பாடமே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது என்பதை இக்கட்டுரை உரிய மேற்கோள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி நிற்கும்.

பரிமளா, முனைவர் ச. தமிழ் இலக்கியமும் தொல் அறிவியலும்

தமிழ்மொழி இலக்கிய வளத்தில் மட்டுமின்றி இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கும் முன்னோடியான சில அடிப்படைக் கருத்துக்களுக்கு ஈடுகொடுக்கும் பல நுட்பமான செய்திகளை நிரம்பப் பெற்றுள்ளனதெனலாம்.தமிழ் இலக்கியப் படைப்புக்களின் வழி, பண்டைத்தமிழர்களது அறிவியல் திறனை, அவர்தம் அனுபவ அறிவினை நாம் உணர்வது கண்கூடு.

வேளாண்மை, தாவரவியல், உயிரியல், கடலியல், புவியியல், மருந்தியல், மண்ணியல், விண்ணியல், கணிதவியல், சிற்பக்கலை, கட்டடக்கலை போன்ற பல்வேறு துறைகளில் அற்றைத் தமிழர்கள் பெற்றிருந்த அறிவியல் திறனை இவை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

சிறுபாணாற்றுப் படை (242 - 243) சூரியனைச் சுற்றி வருகின்ற கோள்களின் தன்மையினை, வானவியலைப்பற்றிய (Astronomy) செய்தியினை எடுத்துரைக்கிறது.

புறநானூறு (3:2) (58:22) உலகம் நீர் சூழ்ந்துள்ள பரப்பு என்னும் புவியியல் (Geography) செய்தியினைக் கூறுகின்றது.

இக்காலத்தில் 'Harpoon' என்னும் குத்தீட்டி கொண்டு மீனவர்கள் சுறா மீன்களை வேட்டையாடுவது போலவே அக்காலத்திலும் திமில் என்னும் பெரிய படகுகளில் ஏறிப் பரதவர்கள் கடலுக்குச் சென்று எறியுளி கொண்டு கோட்டுமீன் எனப்படும் சுறா மீன்களை வேட்டையாடிய மீனியல் (Fishery Biology) செய்தியினைக் குறுந்தொகை (304:1-4) விவரிக்கின்றது.

"சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை" (நற்றிணை 19:2) என்னும் பாடல் சுறாமீனின் கொம்புப் பகுதியைத் தாழை மடலுக்கு உவமையாக்கித் தற்கால இரம்பச் சுறா இனத்தைச் சார்ந்த Pristis

SPP சுறாக்களை நமக்கு வகைப்படுத்திக் காட்டுகிறது.

இன்று புன்னைக் கொட்டைகள் எண்ணெய் எடுக்கப் பயன்பட்டு வருவதைப் போலவே புன்னையின் காய் நெய் தரும் என்பதை விளக்கிக்கிளைகள் தோறும் புன்னையில் பசுங்காய்கள் காய்த்துத் தொங்கும் தன்மையினைக் கூறி அத்தாவரவியல் (Botany) உண்மையினை நற்றிணைப்பாடல் 278 உணர்த்துகின்றது.

நத்தையைக் குத்தித் தமக்கு உணவாக உட்கொள்ளும் ஒருவகை நத்தைகுத்தி நாரையைப் பற்றிய குறிப்பு இன்று பறவையியல் (Ornithology) நூலில் உள்ளது. இதனை, பதிற்றுப்பத்து (23:21) 'நந்துநாரை' என்று அழகுறக் குறிப்பிடுகின்றதெனலாம்.

"புலம்பெயர் மருங்கில் புள்ளெழுந்தாங்கு" (அகநானூறு 113) என்பது நெடும்பயணம் செல்லும் பறவைகளைப் 'புலம்பெயர் புள்ளினங்கள்' (Migratory Birds) என்று பொருத்தமுற அழைக்கின்றது.

கலைமான் தன் கொம்புகளை உதிர்த்தல், பின் புதிய கொம்புகள் முளைத்தல், அவை முதலில் மெல்லிய தோலாலும் பின் சிறிய முடிகளாலும் மூடப்பட்டிருத்தல் என்னும் விலங்கியல் (Zoology) தொடர்பான செய்திகளை அகநானூற்றுப் பாடல் (291) விளக்குகின்றது.

இயல்பொலி உண்டான அதேவேளையில் எதிரொலி உண்டாகும் என்பதுடன் உயர்ந்த மலைப்பகுதி, பள்ளத்தாக்கு, விரிந்து உயர்ந்த மதில்களால் சூழப்பட்ட பகுதிகளில் மட்டுமே இவ்வெதிரொலிகள் உண்டாகும் என்னும் இயற்பியல் (Physics) தத்துவத்தை எடுத்துரைக்கின்றது மலைபடு கடாம் (344).

'பாழ் என, கால் என, பாகு என ஒன்று என
இரண்டுஎன மூன்றுஎன நான்குஎன ஐந்துஎன"

- பரிபாடல் 3

என்று தொடரும் பாடல் இன்றைக்கும் நாம் பயன்படுத்தி வரும் எண்களின் வரலாற்று உண்மையினைக் கணிதவியல் (Mathema tics) செய்தியினைச் சுட்டிக்காட்டுகின்றது.

பலதரப்பட்ட துறைகளுக்கென்று தனித்தனிப் பாடநூல்களாக நமக்குத் தமிழ் இலக்கியங்கள் அமைந்திடவில்லை எனினும், கற்பனை வளத்துடன் இயற்கையுடன் இயற்கையாகப் பல அறிவியல் கருத்துக்களை அள்ளித்தரும் தமிழ் இலக்கியங்களின் இத்தகு அறிவியற்கருத்துக்கள் இக்கட்டுரையில் விளக்கமுற விவரிக்கப்பட்டுள்ளன.

DR. S. PARIMALA TAMIL LITERATURE AND ANCIENT SCIENCES

It can be said that the Tamil language know for not only its ancientness but also its sweetness and literary wealth, contains quite a few interesting data which can bear favourable comparison with the advances made in modern science. We can learn by a study of literary works of many Tamil poets dating back to many scientific knowledge was!

Tamil Literature has embedded within it quite a storehouse of scientific information in various branches of study both in arts and sciences, now known as Agriculture, Botany, Biology, Oceanography, Geology, Medicine, Geography, Astronomy, Mathematics, Sculpture, Architecture, etc.,

Lines 242 and 243 of an ancient Cankam Classic called `Cirupanarruppatai' reveal the astounding knowledge possessed by the ancient Tamils,.of the heliocentric theory of universe which was propounded by the astronomer Copernicus only in the 17th century. The lines depict the radiant sun being the centre of the solar system with the planets going around it.

So also 'Purananuru' (3) has lines which describe the earth as being surrounded by the sea revealing their correct knowledge of Geography.

'Kuruntogai' -304 refers to fishermen of those days sailing into the sea in big boats armed with long javelins to hunt the horned sharks even like the whales of the present day, using harpoons to hunt them. Yet another work called 'Narrinai' (19:2) as a line which compares the long tooth (or horn) of the shark to the broad leaf of the screwpine tree a most apt comparison to a species of shark known to modern fishery biology as `Pristis spp'

The Ancients also knew the arts of extracting oil from 'Punnai fruit' (Alexandrian Laurel) as we do even now in our villages botanical knowledge of the poets.

Antlered deer moult or shed their old horns which are in course of time replaced by new ones first covered by tender skin and later

soft hair. This zoological truth finds a reference in 'Ahananuru' - (291).

In 'Malaipadukatam' (344) there is a reference to the occurence of echo only in elevated places like lofty hills or in narrow valleys with cliffs on either side or high walls, reflecting the well-known law of modern physics.

'Paripatal' (3) refers to the numerals in use now in order and their philosophical signification.

Thus, though we do not have individual literary works each one separate for one branch of science it cannot be gainsaid that along with their rich imaginative felicity the deathless Tamil classics possess many scientific ideas, facts and truths dis- covered by the ancient Tamils. This article is an attempt to highlight a few of their scientific ideas.

பழநியப்பன், முனைவர் வெ. தொல்காப்பியம் பகர வகரப் பாடங்கள்

பாட வேறுபாடுகளின் ஆய்வு முன்னோடியர் உரையாசிரியர்கள். இதில் தொடர்ந்து பணியாற்றியோர் உ.வே.சா. மற்றும் பிற அறிஞர் பெருமக்கள்.

பாடவேறுபாட்டின் பயன் - மூலப்படி - நகல்படி - வழிப்படி எனப்பல நிலைகள் - நூலாசிரியர் பயன்படுத்திய சொல்லாட்சி மூலபாடம் - இச்சொல்லாட்சிக்கு இணைந்த பிற்காலத்தில் நுழைந்த பொருளுடைய (அ) பொருளற்ற சொற்கள் - பாடவேறுபாடுகள் - பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பகுப்பு பாடபேதம் - ரூபபேதம் உச்சாரண பேதம்.

பலரால் பல்வேறு நிலைகளில் படி எடுத்தல் - ஏடு பார்த்து நகல் எடுத்தல் - கொள்கைக்கேற்பத்திருத்தல் - பாடல் நினைவில் வாராதபோது இடத்திற்குத்தகச் சொற்களை அமைத்தல் - எதுகை மோனை அமைப்புக்கு ஏற்றவாறு அமைத்தல் - விரும்பிய பாடத்தை ஏற்றல் - ஒலி ஒப்புமை உருவ ஒப்புமை - சந்தி சேர்த்தல் - பிரித்தல் - பிழைபட்ட இடங்களை நிரப்பும் முயற்சி - மத வேறுபாடு - நூலைக் கற்போர் தொகைப் பெருக்கம்.

மேலைநாட்டு நெறி 1. குடி வழிக்கேற்பப் பாடங்களைத் தொகுத்தல் - பாடங்களை ஆராய்ந்து நிறுத்துதல் -

பொருட்சிறப்பில்லாப் பாடங்களை விலக்குதல் - சான்றுகளின் அடிப்படையில் பாடங்களைத் தெரிவுசெய்தல் - எதுகை - மோனை - சந்தம் முதலிய யாப்பு நோக்கித் துணிதல் - ஆசிரியர் மொழி நடையை ஆயும் மொழி நோக்கு.

தொல்காப்பியத்தில் பகர - வகர மயக்கம் - எழுத்துநிலை - அளபு - அளவு, உருபு - உருவு சொல்நிலை உருபு - உருவு, உருபின - உருவின, பிரிவு - பிரிபு, உயர்பு - உயர்வு, கவர்பு - கவர்வு, பொருள்நிலை சார்பு - சார்வு, இழிபு - இழிவு, திரிபு - திரிவு, உயர்பு - உயர்வு, வருப - வருவ

அளபு - அளவு பொருள் வேறுபாடுடையன - அளபு - மாத்திரை, அளவு - அளத்தல் தொழில் - உருபு - உருவு பொருள் வேறுபாடுடையன - உருபு - வேற்றுமை உருபு முதலியன, உருவு - வடிவம். பிரிவு - பிரிபு, திரிவு - திரிபு என்ற பாடங்கள் இருப்பினும் பொருள் வேறுபாட்டு நிலையில் பிரிவு - திரிபு என்பனவே காணத்தக்கவை.

பாலசுப்பிரமணியம், முனைவர் பெ. தமிழில் சொல்லாக்கம் - ஒரு மொழியியல் ஆய்வு

மொழியியல் நடவடிக்கையைச் சார்ந்த சொல்லாக்கமானது எந்த அளவுக்குத் தமிழில் சொற்கோவைப் பெருக்கத்திற்குத் துணை புரிந்து மொழியை வளம்பெறச் செய்துள்ளது என்பதை இக்கட்டுரை ஆராயமுற்படுகின்றது.

புதுப்புது எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளியிட அவ்வப்போது உருவாகிவரும் தேவையைப் பூர்த்தி செய்யும் நிமித்தம் சொல்லாக்கம் இன்றியமையாததாகின்றது. புதுச் சொற்களும் சொற்றொடர்களும் அத்தேவையைப் பூர்த்தி செய்யத் தொடர்ச்சியாகத் தேவைப்படுகின்றன. எனவே சொல்லாக்கம் என்பது மொழி வளர்ச்சியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் ஓர் இன்றியமையாத நடவடிக்கையாகும்.

சொல்லாக்கம் என்பது சொற்களை உருவாக்குதல் என்பதாகும். புது எண்ணங்கள், கருத்துக்கள் ஆகியவற்றை வெளியிட ஒரு மொழியில் சொற்கள் இல்லாத நிலையில் புதிய சொற்கள் உருவாக்கப்படுகின்றன. சொற்களும் சொற்றொடர்களும் புதியன. சொல்லாக்க நடவடிக்கை பழையது. இரவல் வாங்குதல், மறைமுக இரவல் வாங்குதல், சொற்களைக் கட்டுதல் போன்ற வழிகள் சொல்லாக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இரவல் வாங்குதலில் இரவல் புதுச் சொற்கள் வாங்குதலில் மொழி பெயர்ப்பு, சொல்

உருவாக்கம், 'கல்க்' பொருள் விரிவாக்கம் போன்றவை அடங்கும். மொழிபெயர்ப்பில் பெரும்பாலும் ஆங்கில மூலச் சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்படுகின்றன. சொல் உருவாக்கத்தில் ஆங்கிலத்தில் உள்ள சொற்றொடர்களிலிருந்து பெறப்பட்ட கருத்தைக் கொண்டு தமிழ்ச் சொற்கள் பெறப்படுகின்றன. ஆங்கில மொழியில் நிலையாக உள்ள சொற்றொடர்களை மொழிபெயர்த்து - அவற்றைத் தமிழில் வழங்கிவருவது 'கல்க்' வகையைச் சார்ந்தது. ஒரு சொல் ஏற்கனவே உள்ள அதன் பொருளுடன் சேர்ந்து புதிதாக மற்றொரு பொருளையும் பெறும்போது அச்சொல்லின் பொருள் விரிவாக்கம் அடைகிறது. இது பொருள் விரிவாக்கம் எனப்படும்.

மொழியில் ஏற்பட்டுள்ள தேவையைப் பூர்த்தி செய்ய சில வேளைகளில் மொழியில் உள்ள சொற்களைக் கொண்டு புதிய சொற்களைக் 'கட்ட' வேண்டியுள்ளது. இவ்வகையில் பெறப்படும் சொற்களை 'கட்டிய வழக்கு' என்பர். ஆக, சேகரிக்கப்பட்ட சொற்றொடர்களை ஆராய்ந்ததிலிருந்து பெரும்பாலானவை நேரடி மொழி பெயர்ப்புச் சொற்களாகவும் அதனையடுத்து முறையே கட்டப்பட்ட சொற்கள், பொருள் விரிவாக்கம் ஆன சொற்கள் உருவாக்கப்பட்ட சொற்கள், கலவைச் சொற்கள், 'கல்க்' என ஐவகைச் சொற்றொடர் வகைகள் சொல்லாக்கத்தில் அடங்கியுள்ளன என்பது தெளிவாகிறது.

DR. P. BALASUBRAMANIAM LEXICAL INNOVATION IN TAMIL: A LINGUISTIC STUDY

This paper attempts to describe how lexical innovation as a linguistic process helps to enlarge the vocabulary of Tamil and subsequently enriches it. This is essential for to the increasing need to meet the evergrowing demand for the language to express new ideas, values and concepts. New words and phrases are continuously required to meet such a demand. Hence lexical innovation is an essential on-going process in language development. Lexical innovation is basically word formation in a language to fulfill the demand for expressing new ideas, values and concepts because the language do not as yet have the equivalent terms for that purpose.Word formation processes are not new in language development. What is new are the terms and pharses that are being added daily to the lexical inventory of the language. Borrowing, indirect borrowing and coinage are the main methods that are employed for the above process. In borrowing the borrowed words undergo assimilation and integra-

tion. Under borrowing compund loanblends will be discussed. Indirect borrowing consists of loan translation, loan rendition, calque and semantic extension. In loan translation, the model is reproduced element by element. In loan rendition, the model only furnishes a general hint for the reproduction. Calques consists of phrases which are direct translations of fixed expressions in English. The dominant process involved in semantic extension is where the word acquires a new meaning while retaining its original one. In coinage the word or phrase is invented and fabricated using material already existing in the language. In conclusion it can be said that based on the data collected, the majority of the terms belong to the loan translation variety followed by coinage, semantic extension loan redition, loan blends and calque.

பாலசுப்ரமணியன், முனைவர் சி. திணை மயக்கம்

நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் ஐம்பூதமும் தம்முள் மயங்கியதால் உலகில் எல்லாப் பொருள்களும் தோன்றின. அது போலவே உலகத்தில் ஓர் இடத்தில் தோன்றிய பொருள்கள் மற்றோர் இடத்திலே சென்று அங்கு உள்ளவர்களுக்குப் பயன்படுவதால் உலகியல் வளர்கின்றது.

இலக்கணநூலில் இதனை மயக்கம் என்றார் தொல்காப்பியனார். மூன்றாம் வேற்றுமை இன்ன இன்ன பொருளில் வரும் என உணர்த்தும் இடத்து 'அதனொடும் மயங்கல்' என்னும் பொருளிலும் அவ்வேற்றுமை வரும் என்பர். எனவே மயங்குதல் என்னும் பலபொருள் ஒரு சொல் விரவுதல், கலித்தல் என்னும் பொருள்களில் வந்துள்ளது.

எழுத்ததிகார மயக்கம் தனி மொழியாக்கத்திற்கும் தொடர் மொழியாக்கத்திற்கும் பயன்படுகிறது. பொருளதிகார மயக்கத்தில் இதனைத் திணை மயக்கம் என்பர். ஒரு திணைக்குரிய கருப்பொருள்கள் மற்றொரு திணையிலே சென்று மயங்கினால் திணை மயக்கம் என்பர். இத்திணை மயக்கம் சங்கப் புலவர் பாடல்களிலும் பிற்காலப் புலவர் பாடல்களிலும்மிக்க தலையாகக் கூறப்பட்டுள்ளது. சூளாமணியில் மருத நிலப்பெண்களால் களையாகப் பறிக்கப்பட்டு எறியப்படும் குவளை மலர்கள் நெய்தல் நிலப் பெண்களின் கூந்தலில் தோன்றுகின்றன. பரஞ்சோதியார் திருவிளையாடல்புராணத்தில் இம்மயக்கம் சமுதாய நலத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது. பாரதியாரின் 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' என்னும் பாடலும் திணை மயக்கம் கூறும் பாடலே. பாரதியார் இதனை அழகான

ஒலியமைப்புடைய பாடலாக நல்ல வடிவு தந்து உணர்ச்சி பொங்கி வழியக் கற்பனை மிகச் சிறந்து விளங்கப் பாடியுள்ளார்.

பாலசுப்ரமணியன், குடவாயில் கல்வெட்டுக்கள் காட்டும் தஞ்சைநகர அமைப்பு

இக்கட்டுரை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முத்தரைய மன்னன் சுவரன் மாறனின் கல்வெட்டில் காணப்பெறும் தமிழ்ப்பாடல்கள் வாயிலாகத் தஞ்சை நகரத்தினை அறிமுகம் செய்கின்றது. பின்னர் கி.பி. 850-இல் விசயாலய சோழன் தஞ்சையைக் கைப்பற்றியபோது! அந்நகரம் எவ்வாறு திகழ்ந்தது என்பதனையும், அங்கு நிசும்பசூதனிக்குக் கோயில் எடுத்து விரிவு செய்ததையும் புதியகோணப்பார்வையில் விவரிக்கின்றது. திருவாலங்காட்டுச் செப்பேட்டு வரிகளையும் கன்னியாகுமரி கல்வெட்டையும் காட்டித் தஞ்சை நகரின் எழிலமைப்பை எடுத்துரைக்கின்றது. மாமன்னன் இராஜராஜனது கல்வெட்டுகள் வாயிலாக அரண்மனை உள்ளாலை புறம்படி, பெருந்தெருக்கள், பேரங்காடிவீதிகள், பழம்பெரும் கோயில்கள் ஆகியவற்றைப் பற்றி விவரித்து அவை இருந்த இடங்களைத் தொல்லியல் சான்றுகளோடு குறிக்கின்றது. சந்தரபாண்டியனால் செந்தழலுக்கு இரையாக்கப்பட்ட தஞ்சை மீண்டும் பாண்டிய மன்னனது சாமந்தன் தொண்டைமானின் ஆக்கத்தால் எவ்வாறு மலர்ந்தது என்பதனைச் சாசனச் சான்றுகளோடு எடுத்துரைக்கின்றது. அழிவுக்கு இலக்கான மும்முடிச் சோழன் மதிலும், சாமந்த நாராயண விண்ணகரமும் எங்குள்ளன என்பதையும் வரைபடத்தோட விவரித்துத் தஞ்சைநகரைக் கண்முன் நிறத்தி நிறைவு செய்கின்றது.

பாலாஜி, முனைவர் ப.தே. பல்லவர் காலச் சிற்பங்கள் - திருபெரும்பூதூர் வட்ட ஆய்வு

பல்லவர்கள் காஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை, கி.பி.6 முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர். இவர்கள்தான் முதன்முதலாகப் பாறையைக் கொண்டு குகைக் கோயில்களைத் தமிகத்தில் எழுப்பித்தனர். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனால் விழுப்புரம் - இராமசாமி படையாச்சி மாவட்டத்தில் மண்டகப்பட்டு என்னும் இடத்தில் குடையப்பட்டுள்ள குகைக் கோயிலும் அங்குச் செதுக்கப்பட்டுள்ள அம்மன்னனது கல்வெட்டும் இதனை உறுதிப்படுத்தும்.

குகைக் கோயில்களைத் தொடர்ந்து மாமல்லையிலுள்ள கடற்கரைக் கோயில் போன்ற கட்டுமான கற்கோயில்கள் பலவற்றையும்

பல்லவர்கள் தங்களது ஆட்சிக்காலத்தின் போது பல இடங்களில் கட்டினர். கட்டுமான மூலப் பொருளாக 'Sand Stone' என அழைக்கப்படும், எளிதில் செதுக்குவதற்கு ஏற்புடையதான ஒருவகைப் பாறையைப் பயன்படுத்தினர். இவ்வகைப் பாறையில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், கட்டுமானங்கள் தக்க பராமரிப்பு இல்லையென்றால் இயற்கையின் சீற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைந்துவிடுகின்றன. இவ்வாறு சிதைந்த பல்லவர்களது பல அரிய சிற்பங்களை இன்றும் அவர்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட பல இடங்களில் காண முடிகிறது. இவ்வனைத்து இடங்களையும் களஆய்வு செய்து அங்கு இருக்கும் பல்லவர் சிற்பங்களைக் கண்டு அறிவது சிரமமான செயல் ஆதலால், தொண்டை மண்டலத்திலுள்ள ஒரு சிறு பகுதியை உதாரணமாக, தற்கால ஆட்சிப்பிரிவான ஓர் வட்டத்தை, களஆய்வு செய்து அங்கு இருக்கும் பல்லவ சிற்பங்களைப் பதிவு செய்து அவற்றின் கலை நுணுக்கத்தையும் சிறப்பையும் பற்றி ஆராய்ச்சி நடத்துவது பயன்தருவதாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் பல்லவர்கள் தலைநகரமாக விளங்கிய காஞ்சி அமைந்துள்ள காஞ்சி வட்டத்தை ஒட்டி, அதற்கு வடகிழக்கே அமைந்திருக்கும் திருபெரும்பூதூர் வட்டம் இவ்வகை ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் காஞ்சி வட்டத்தை அடுத்துத் திருபெரும்பூதூர் வட்டத்தில் தான் அதிகக் கோயில்களும், கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் இவ்வட்டத்தில் இன்றும் பிள்ளைப்பாக்கம், மணிமங்கலம் ஆகிய இடங்களிலும், அவர்களது கல்வெட்டுகள் மாங்காடு, திருநின்றவூர், பிள்ளைப்பாக்கம் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் இவர்களது காலத்தைச் சார்ந்த தனிச் சிற்பங்கள் மாங்காடு, சிவன் கூடல், மணிமங்கலம், குன்றத்தூர், மதுரமங்கலம், பூந்தமல்லி, திருமுல்லைவாயில், சிறுகளத்தூர் எனும் பல இடங்களில் உள்ளமை இக்கட்டுரை ஆசிரியரால் கள ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பல்லவர் காலத்தில் கோயில்கள் இவ்விடங்களில் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு இவ்வட்டத்தில் சிதறிக்கிடக்கும் பல்லவகாலச் சிற்பங்களைத் தொகுத்து, வரிசைப்படுத்தி, காலங்களை நிர்ணயித்து ஒவ்வொரு சிற்பத்தின் கலைச்சிறப்பையும் சிற்ப வரலாற்றில் அதன் முக்கியத்துவத்தை இக்கட்டுரை விவரிக்கிறது.

பாஸ்கரபால்பாண்டியன், அ. மூவருலா குறிப்பிடும் குறுநிலத்தலைவர்கள்

தமிழக வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளாக இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பழஞ்சின்னங்கள், திருக்கோயில்கள் ஆகியன விளங்குகின்றன. ஆயினும் இலக்கியங்களே மிகச் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்கள் அந்தந்த காலகட்டத்தின் வரலாற்றை விளக்கவல்ல சான்றுகளாக அமைந்துள்ளன. பிற்காலச் சோழர்களின் வரலாற்றைத் தரும் இலக்கியங்கள் மிகுதியாக உள்ளன. ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலாவும் செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும் பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் அரிய சான்றுகள். மூவருலா இதில் சிறப்பிடம் பெறுகிறது.

விக்கிரமசோழன்மீது பாடப்பெற்ற விக்கிரமசோழனுலா, இரண்டாம் குலோத்துங்கன் மீது பாடப்பெற்ற குலோத்துங்க சோழனுலா, இரண்டாம் இராசராசன் மீது பாடப்பெற்ற இராசராசசோழனுலா மூன்றும் இணைந்தது மூவருலா.

மூவருலாவை ஒரு வரலாற்றுப் பெட்டகம் எனலாம். சோழ அரசர்கள், அரசமாதேவியர், குறுநிலத்தலைவர்கள் பற்றி அறிந்து கொள்ளவும் அரசியல் முறைகள் முதலானவற்றை அறிந்து கொள்ளவும் மூவருலா பெரிதும் பயன்படுகிறது.

மன்னன் உலாவரும்போது அவனைச் சூழ்ந்து கொண்டு குறுநிலத்தலைவர்கள் பலர் வந்ததாக மூவருலா குறிப்பிடுகிறது. மூவருலா குறிப்பிடும் குறுநிலத்தலைவர்களின் வரலாற்றை ஆய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கம். இலக்கியச் செய்திகளை முதன்மைச் சான்றுகளாகவும், கல்வெட்டுச் செய்திகளை இரண்டாம் நிலைச் சான்றுகளாகவும் கொண்டு குறுநிலத் தலைவர்களின் வரலாறு ஆராயப்படுகிறது.

அரசியலில் குறுநிலத்தலைவர்கள் முக்கியப்பங்கு வகித்தனர் என்பது தெரிய வருகிறது. பேரரசரது படைத்தலைவர்களாகவும், அரசியல் அதிகாரிகளாகவும் இவர்கள் விளங்கி வந்துள்ளனர்.

கருணாகரத் தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், மறையோன் கண்ணன், வரிசிலைக்கை வாணன், காலிங்கர் கோன், செஞ்சியர் கோன் காடவன், வேணாடர் வேந்து, அநந்தபாலன், வத்தவன், சோழியர்கோன், காரணகாவலன், அதிகன், வல்லவன், திசுத்தன் ஆகிய பதினைந்து குறுநிலைத் தலைவர்கள் மூவருலாவில்

குறிப்பிடப் பெற்றுள்ளனர். இவர்களது வரலாற்றினை ஆய்வதே நோக்கம்.

தமிழக வரலாற்றில் இடம்பெறும் பேரரசர்களைப் பற்றிப் பெரிதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. ஆனால் குறுநிலத்தலைவர்கள் பற்றிய ஆய்வுகள் மிகுதியாக மேற்கொள்ளப்படுவது அவசியம் என்பதால் இக்கட்டுரை எழுதப் பெறுகின்றது.

பாஸ்கரன், ச. கணிப்பொறியுடன் தமிழில் உரையாடல்

கணிப்பொறி என்பது கணிப்பொறியியல் துறை வல்லுநர்களால் தொழில் நுட்பப் பணியாளர்களால் மட்டுமே இயக்கக்கூடிய ஓர் உயர்தொழில் நுட்பக்கருவியாக விளங்கியது. இந்நிலையிலிருந்து மாறி யாவரும் எத்துறைக்கும் பயன்படுத்துவதற்கேற்ப உயர் தொழில்நுட்பத்துடன் அமைந்த ஆனால் மிக எளிதாக இயக்கக்கூடிய ஒரு கருவியாகத் தற்பொழுது வடிவமைக்கப்படுகிறது. நமது வாய்மொழிக்கட்டளைகளை ஏற்றுச் செயற்படும் வகையிலும் கணிப்பொறிகள் வடிவமைக்கப்படுகின்றன. இருப்பினும் 'கணிப்பொறி மொழி' என்னும் 'ஒரு மொழிக்கருவி' கணிப்பொறிக்கும் பயன்பாட்டாளருக்கும் ஒரு தடையாய் விளங்குகிறது. இக்குறைபாட்டினை நீக்கும்வண்ணம் கணிப்பொறிக்கும், பயன்பாட்டாளருக்கும் இடையே நிகழ்கின்ற செய்தித்தொடர்பு மக்கள் பேசும் இயல்பான மொழியில் அமைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நமது எண்ணங்களை வெளியிடுவதற்கும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் மொழியைப் பயன்படுத்துகின்றோம். ஒரே செய்தியை அல்லது தகவலைப் பலர் வெளியிட நேரின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்ல அல்லது எழுத நேரிடுகிறது. ஒருவரே ஒரே கருத்தைப் பல்வேறு சூழலில் கூற நேரிடின் கேட்பவரின் மனநிலை, ஆர்வம் போன்றவற்றைப் பொறுத்துப் பலவிதமாகச் சொல்லவேண்டியுள்ளது. கருத்துகளை வெளியிடுவதற்குச் சொற்களைத் தெரிவு செய்வது, சேர்ப்பது, வாக்கியங்கள் அமைப்பது போன்ற திறன்களைப் பெற்றிருக்கிறோம். எந்தச் சூழ்நிலையில் எந்தக் கருத்தை யாரிடம் எப்படிச் சொல்வது போன்றவற்றை மனத்தில் கொண்டு செய்திப்பரிமாற்றம் செய்து கொள்கிறோம். ஒருவர்சொல்ல வந்த கருத்தைத் தெளிவாகச் சொல்லாமல் அரைகுறையாகச் சொன்னாலும் அவர் சொல்ல வந்த கருத்தைப் புரிந்து கொள்கிறோம். எழுத்துப்பிழை, உச்சரிப்புப்பிழை, இலக்கணப்பிழை போன்ற பிழைகளைப் பொறுத்துக் கொள்கிறோம். இவ்வாறு மொழியை உணர்தலில் உருவாக்குதலில் மனிதச் சிறப்புகளை, திறன்களை,

பண்புகளைக் கொண்டமைந்த கணிப்பொறிகளை உருவாக்கக் கணிப்பொறி வல்லுநர்களின் தனிமுயற்சி மட்டும் போதுமானது அன்று. இப்பணிகளுக்கு மொழியியல் வல்லுநர்களின் ஒத்துழைப்பும் தேவை. உளவியல் நிபுணர்களின் பங்கேற்பும் இன்றியமையாதது ஆகும்.

மனித உரையாடல் என்பது உரையாடலின் சூழ்நிலை, ஒதுக்கப்பட்ட நேரம்; பொருள், பொருள் பற்றிய அறிவு, ஆர்வம், மனநிலை, மனக்கிளர்ச்சி, மொழித்திறன், உரையாடல் மேற்கொள்பவர்களின் உறவுகள், சமூக மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுகிறது. இவ்வாறு கருத்துப் பரிமாற்றங்களுக்கு மனிதன் மொழியைப் பயன்படுத்தும் கலையை ஆராய்ந்து 'மொழி அறிவை'க் கணிப்பொறிக்கு ஊட்டும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இவற்றின் பயனாய் மனிதனுக்கும் கணிப்பொறிக்கும் இடையே நிகழ்கின்ற உரையாடல் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையே நிகழ்கின்ற உரையாடல் போல இயற்கையாய் அமைவதற்கேற்பக்கணிப்பொறி நிரல் தொகுப்புகள் உருவாக்கப்படுகின்றன.

கணிப்பொறியுடன் தமிழில் உரையாடல் மேற்கொள்வதற்கேற்ற நிரல் தொகுப்புகளை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுபாடுகளை ஆய்வு நோக்கத்துடன் விவாதிப்பதே கட்டுரையின் மையக் கருத்தாக அமையும்.

பிச்சமுத்து, முனைவர் ந. இந்தியப் பண்பாட்டிலும் மரபிலும் தமிழ்ப் பெண்களின் நிலை

கி.மு. 300 முதல் கி.பி. 700 வரையிலான சங்கம், சங்கம் மருவிய காலப் பண்பாட்டிலும் மரபிலும் பெண்களின் சமூகப் பொருளாதார நிலையைத் திறனாய்வு முறையில் அணுகுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

பெண்களின் நிலையைக் கொண்டே ஒரு சமுதாயத்தின் நாகரிகப் பண்பாட்டுச் சிறப்புகளை அறிய முடியும். எனவே பெண்களின் நிலை பற்றிச் சொல்வதற்குச் சமுதாய அமைப்பு பற்றி அறிந்திருப்பது இன்றியமையாதது.

கிடைக்கும் சான்றுகளின் மூலம் சங்ககாலம் நில உடைமைச் சமுதாயம் என்று தெரிகிறது. அங்கு அரசர்களும் நிலப்பிரபுக்களும் இருந்ததைப் போலவே நிலமற்ற ஏழை விவசாயக் கூலிகளும் இருந்தனர். வருணாசிரமமும் சாதி முறையும் நிறுவப்பட்டு விட்டன.

திருமண முறை மூலம் ஆணாதிக்கம் முழுமையாக நிறுவப்பட்டது. பெண்களின் நிலை தாழ்வடைந்தது. அவள் இல்லத்தரசி என்று அழைக்கப்பட்டாலும் அடிமைகளின் நிலைக்குத் தள்ளப்பட்டதே அவள் நிலை.

தமிழ்ப்பண்பாடு, மரபுகளின்படி, பெண்களின் நோக்கமே ஆண்பிள்ளைகளைப் பெறுவதுதான். பெண் பிள்ளையைப் பெறுவது வெறுக்கத்தக்க செயல். மனைவியின் கற்புடைமைக்கு உத்தரவாதம் தரும் வகையில், அதாவது பிள்ளைகளின் தந்தை இன்னார் என்பதைக் காட்டும் வகையில் பெண் ஆணின் முழுமையான கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டாள். இதுவே நம் பழந்தமிழ்ப் பெண்களின் நிலை.

சங்ககாலத்தில் உயர் சாதியினருக்கு மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் உரிமை இருந்தது. அதுவும் பெற்றோர்களின் உடன்பாட்டோடுதான். காதல் மணம் சொல்லளவில் தான் இருந்தது. அடியோர், வினைவலர், இழிசினர் ஆகியோர் காதலிக்கவோ மணம் செய்து கொள்ளவோ உரிமையில்லை.

கற்புடைமை பெண்களின் இயல்பிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு முக்கியமானதாகக் கருதப்பட்டுத் திணிக்கப்பட்டது.

விதவை மறுமணம், உடன்கட்டை ஏறல், விபசாரம், வரதட்சிணை போன்ற தொடர்புடைய பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன.

கிடைக்கும் சான்றுகளிலிருந்து, பெண்களை ஆண்களின் பரிபூரணக் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்காக, பெண்கள் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாதவாறு தடுக்கப்பட்டனர். கற்புக்கரசி என்று முகத்துதி செய்வதன் மூலம் அவளின் அடிமைத்தன்மையை நிலைநிறுத்தி அடுப்படியில் அடைக்கப்பட்டாள்.

DR. N. PICHAMUTHU THE POSITION OF WOMEN IN INDIAN CULTURE AND TRADITION WITH SPECIAL REFERENCE TO ANCIENT TAMILNADU

An attempt has been made to review critically the socio-economic condition of women in ancient Tamilnadu from 300 B.C. to 700 A.D. . The source materials for the investigation of the problem are largely literature.

To say something meaningful about the position of women we

must know something about the structure of the society.

From the evidences available, it is clear that the sangam age begins with the advent of landed aristocracy. As there were kings and feudal lords, there were also landless agriculture labourers. The varna and caste systems were well established.

As the patriarchal rights were deep-rooted, through the institution of marriage, the position of women was subordinated to that of man. Though she has been called the 'queen of the house', practically her position was reduced to the level of slavery.

According to Tamil culture and tradition, the sole purpose of the woman was to give birth to a male child. Procreation of female child was an abominable act. Inorder to guarantee the fidelity of the wife, the woman was placed in the man's absolute power. Actually this is the position of our women in ancient Tamilnadu.

During the sangam age the upper caste people alone had the right to marry, that too with the consent of the in-laws. The slaves, wage-earners and the servants had no right to love or marry.

Chastity was recognised as the central and most inseparable aspect of woman's character. Purity of sexual life was insisted upon women through ages.

Other related questions like *Widow Remarriage, Sattee, Prostitution, Dowry* etc. are discussed in detail.

We can inevitably infer from the evidences available that in order to keep the woman under the stringent control of the man she has been debarred from the socio-economic activities. She has been flattered into chastity so as to consolidate her enslavement.

பிரகாசம், டாக்டர் ஏ.எஸ். தமிழ்ச் சமுதாயத்தில் திரைப்படங்களின் தாக்கம்

இந்தியச் சமுதாயம் வரலாற்றின் சில நூற்றாண்டுகளில், சமயம், சாதி, அந்நியர் படையெடுப்பு ஆகியவற்றின் தாக்கத்திற்கு ஆட்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்வி, கலை, அறிவியல், நாட்டுப்பற்று, இதழ்கள் ஆகியவற்றின் தாக்கத்திற்கு உட்பட்டது. இந்த நூற்றாண்டிலோ இந்தியச் சமுதாயம் மிகத் தாக்கத்திற்கு உள்ளானது,

திரைப்படங்களால்தான். அதுமட்டுமல்லாமல் சமுதாயத்தில் இத்தனை ஆண்டுகள் தாக்கம் எற்படுத்திய சமயம், சாதி, கல்வி, அறிவியல், கலை,நாட்டுப்பற்று, இதழ்கள் ஆகியவை திரைப்படங்களின் தாக்கத்திற்குள்ளாயின.

சமுதாயத்தில் திரைப்படங்களின் தாக்கம் ஏற்பட்டது போல, திரைப்படங்களிலும் சமுதாயத் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தக்கொடுக்கல் வாங்கலில் இரண்டுக்கும் சமபங்குண்டு. இதில் யார் முதலில் வாங்கியது என்ற கேள்விக்குப் பதில், 'அண்ணலும் நோக்கினான் - அவளும் நோக்கினாள்' என்பது தான்.

திரைப்படங்களின் சமுதாயத்தாக்கத்தால் நன்மைகளும் விளைந்தன, தீமைகளும் விளைந்தன.

திரைப்படங்களின் தாக்கத்தை, நாகரீகத்தில் ஏற்பட்டதாக்கம் பண்பாட்டில் ஏற்பட்ட தாக்கம் என இருபகுதிகளாகப் பிரிக்கலாம்.

நாகரீகம் என்பது உண்ணும் உணவு, உடுத்தும் உடை, இருக்கும் இல்லம், பயன்படுத்தும் கருவிகள் ஆகியவற்றால் அறியப்படுவது - திரைப்படங்களைப் பார்த்து மக்கள் அதைப் பின்பற்றத் தொடங்கினார்கள் - திரைப்படங்களும் மக்களைப் பார்த்துப் பின்பற்றத் தொடங்கின. ஆடை அணிகள், வீடுகள், அழகுப் பொருட்கள் ஆகியவற்றில் தாக்கம் ஏற்பட்டது.

வெளித் தோற்றங்களை நாகரீகம் என்றும் உள்ளத் தோற்றங்களை பண்பாடு என்றும் கூறலாம். பாலுணர்வு, கொலை, கொள்ளை, காமக்குற்றங்கள் சமுதாயத்தையும், திரைப்படங்களையும் தாக்கின. ஏழைகளின் எழுச்சியும் அரசியல் தெளிவும் பாமரரின் கல்வித் தாக்கத்தின் விளைவாகும். நாத்திகமும் ஆத்திகமும் மொழி மறுமலர்ச்சியும் திரைப்படத்தின் தாக்கத்தில் ஊக்குவிக்கப்பட்டன.

திரைப்படங்களின் மீது அது துயாரிக்கப்படும் காலத்தின் நிழல் படிந்துள்ளது. காலத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. இனியும் அடுத்த நூற்றாண்டிலும் பாதிக்கப்படும்.

திரைப்படங்களால் கலை, கலாச்சாரம், அத்தனையும் தாக்கமடைந்தன. சமுதாயத்தாக்கத்தில் இதழ்கள் அதிகம் பங்குபெற்றன. அதெல்லாம் திரைப்படங்கள் வருவதற்கு முன். திரைப்படங்களால் இதழ்களும் பாதிக்கப்பட்டன.

இந்தியாவில் ஆறாவது பெரிய தொழில் திரைப்படத்தொழில். தமிழ்த் திரைப்படங்கள் பெரிய பொருளாதாரச் சுழற்சியில்

ஈடுபட்டுள்ளதால் அவை தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

தமிழ்த் திரைப்படங்கள், தொலைக்காட்சிக்குப் பெரிய வரவேற்பை நல்குகின்றன. வரும் நூற்றாண்டில் பெருந்திரைபோல் சின்னத் திரையும் தனித்து நின்று வளர்ச்சி பெறும்.

A.S. PRAGASAM THE INFLUENCE OF CINEMA ON TAMIL SOCIETY

The Indian Society as a whole has been variously influenced by religion, castes, foreign invasion, etc., during the course of its chequered history. During 19th Century education, Art, Science, patriotism, and press etc., had their own influences in society. But 20th century society has been subsequently influenced by cinema. Not only that the powers that influenced society during the past several centuries had themselves been influenced by cinema.

The influence of cinema over the community and vice versa has been reciprocal. Who was the first to influence the other is a moot question. When the eyes meet each other we can only say as Kamban said, 'When the Lordogled, Her ladyship did so too'.

Of the several categories of pictures, the ones with social themes were powerful in producing good as well as evil consequences. Sinister superstitions were identified while at the same time certain noble tradtions belittled.

Films can be classified according to how - they are influenced by culture and civilazation.

Certain kinds of pictures bring forth charges in customs and manners in daily life, introduce new styles in food habits, dress and up keep of household, reshape social attitude towards politics, religious beliefs, refinement of language, uplift of the down trodden quality of education etc.,

Their Civilization impact promote, with a mixture of the decent and the decadent,new understanding in approaches to problems of individual life, love and sex, moral rectitude and criminal proclivity violence and non-violence, curruption and sacrifice.

The Cinema bears the shadow of the times when it is produced. They are immensely biased by the context. Films had been, are, and will continue to be affected by topical interests of every period, even in the century to come.

Even as the arts and the crafts, language and literature, the various media viz., the Fourth Estate, the Radio and the T.V. are subject to its power.

Of the many major industries of the land, cinema production enjoys the sixth place from the top. In Tamilnadu with crores of rupees invested and earned every year its effects on economics is substantial.

பிரேமா, டாக்டர் சே. அறிவியல் நோக்கில் சித்தமருந்துகள்

சித்தமருந்துகள் பற்றிய குறிப்புகள் சுவடிகள், கையெழுத்துப்பிரதிகள், அச்சுநூல்கள் போன்றவற்றில் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் அனுபவத்தில் அறியப்பட்டவை என்பதில் ஐயமில்லை. சித்த மருந்துகளை அகமருந்துகள் 32, புறமருந்துகள் 32 என இருவகையாகப் பிரித்துள்ளனர். மருந்து செய்வதற்கான உபகரணங்கள், பாகசாலை விதிமுறைகள், மூலப் பொருட்கள் பற்றி அறியவேண்டியவை, மருந்து செய்யும் போது கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகள், மருந்துகளைப் பக்குவத்தில் செய்து பத்திரப்படுத்த வேண்டிய முறைமை ஆகிய அனைத்தையும் பாகுபடுத்தி மிகச் சிறப்பாகக் கூறியுள்ளனர். ஆனால் இன்றைய அறிவியல் யுகத்தில் சித்த மருந்துகளைச் செய்வதில் மட்டுமின்றி அவற்றை உட்கொள்வதிலும் கூடப் பலவித இடையூறுகள் உள்ளன.

சித்த மருந்துகளின் செயல்திறன் அனுபவ ரீதியில் சொல்லப்பட்டிருந்தாலும் கூட இன்றைய அறிவியல் முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் செயல் திறனை அறிவியல் பூர்வமாக விளக்கிக் கூற வேண்டி உள்ளது. எடுத்துக்காட்டாக, கீழாநெல்லி என்னும் மூலிகை காமாலை நோய்க்குக் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அறிவியல் வழி ஆய்வு செய்து வெளியிட்ட பின்னரே அனைவரும் இதனை ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சித்த மருந்துகளைப் பற்றிய அறிவியல் ஆய்வுகள் ஆங்காங்கே நடைபெற்று வந்தாலும் கூட இவைபற்றிய ஒருங்கிணைப்பு இன்னும் நடைபெறவில்லை என்றே கூறவேண்டும். சித்த மருந்துகள் குறித்த அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வதிலும் நிறையச் சிக்கல்கள் உள்ளன.

சித்தர் நூல்களில் கூறியுள்ளபடி சித்த மருந்துகளைச் செய்வதற்கும் தற்போது இயலுவதில்லை. மருந்துகளை உரிய முறைப்படி உண்பதிலும் அனுபானம், பத்தியம் இவற்றைக் கடைபிடிப்பதிலும் நிறைய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுவது மிகவும் அவசியமாகிறது.

இருபதாம் நூற்றாண்டில் சித்த மருந்துகள் தயாரிக்கப்பட்ட விதம் குறித்தும் இருபத்தோராம் நூற்றாண்டில் இவை அடைய வேண்டிய மாற்றங்கள் குறித்தும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

புகழேந்தி, க. ஓவியங்களில் சமூக வெளிப்பாடு

கலைகள் ஒரு தேசத்தின் அல்லது ஒரு தேசிய இனத்தின் நாகரீகம், பண்பாடு ஆகியவற்றைக் கணக்கிடவும் பிரதிபலிக்கவும் உதவும் காலக் கண்ணாடிகள்.

ஓவியம், சிற்பம் போன்ற எந்தக் கலை வடிவமானாலும் அவை நம் முன்னோர்கள் வாழ்ந்த விதம் பற்றியும் அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்கள் பற்றியும் தெரிந்து கொள்ளப்பெரிதும் துணைநிற்கின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட (Pre-historic) ஓவியங்கள் எனப்படுகின்ற பாறை ஓவியங்களும் குகை ஓவியங்களும் கற்கால மனிதன் வாழ்ந்த வாழ்க்கை நிலைகளை நமக்குச் சுட்டுகின்றன. அஜந்தா குகை ஓவியங்கள் தொடங்கி, தஞ்சைப் பெரியக் கோவில் சுவர் ஓவியங்களும், சித்தன்னவாசல் ஓவியங்களும் இதற்குச் சான்றுபகர்கின்றன.

இப்படி, ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்தக் காலச் சமூகத்தின் வெளிப்பாடுகள் கலைப் படைப்புகளாக வெளிப்பட்டு இருக்கின்றன.

ஓவியத்திற்கு எல்லையற்ற ஆற்றல் உண்டு. கிழிக்கப்படுகின்ற ஒவ்வொரு கோட்டுக்கும் உள்ள வலிமைமிக்க சக்தி அளவற்றது. தீட்டப்படுகின்ற ஒவ்வொரு வண்ணத்திற்கும் அணுவைப் போல் அளவிட முடியாத ஆற்றல் உண்டு.

கலைஞர்கள், குறிப்பாக ஓவியக் கலைஞர்கள் இந்தச் சமூகத்திற்கும் தமக்கும் எவ்விதச் சம்மந்தமும் இல்லாதது போல - வேற்று உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள் என்ற கருத்து பரவலாக இருந்து வருகின்றது. இக்கருத்தில் ஓரளவு உண்மை உள்ளது என்பதை வரலாறும் நமக்கு உணர்த்துகிறது.

இவ்வகையான வரலாற்றுப் பின்னணியில் ஓவியர்கள் தத்தம்

படைப்புகளில் சமூகத்தை எவ்வாறு வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று ஆராய்வது அவசியம்.

தமிழகச்சூழலில் மட்டுமல்லாது உலகலாவிய கண்ணோட்டத்தில் பார்ப்போமேயானால் பிக்காசோ - கோயாபோன்ற மாபெரும் கலைஞர்கள் எம்.எப். உசேன், சந்தானம், ஆதிமூலம், சந்துரு, மருது மற்றும் என்போன்றவர்களின் படைப்புகளில் சமூக வெளிப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

வருங்காலச் சந்ததியினருக்கு, இருபதாம் நூற்றாண்டின் வன்முறையைச் சொல்லிக் கொண்டிருக்கும் பிக்காசோவின் மாபெரும் படைப்பான 'குவர்னிக்கா' என்ற ஓவியம் எம்.எப். உசேனின் சப்தர்ஹஷ்மி கொல்லப்பட்டபோது படைத்த ஓவியம், சந்தானத்தின் ஈழவரிசை ஓவியங்கள், ஆதிமூலத்தின் ஓவியங்கள் மற்றும் என்னுடைய ஓவியங்களில் சமூக வெளிப்பாடுகளைக் காணலாம்.

புருடோத்தமன், செ. கரிகாலனும் காவிரிப் பாசனத் திட்டமும் - ஓர் ஆய்வு

1. இப்பொழுது காவிரி என்றழைக்கப்படும் ஆறானது மேல் அணையிலிருந்து கீழ் அணை வரையிலும் இயற்கையான ஆற்றிற்குண்டான அடிப்படை இயல்புகள் எதனையும் பெற்றிருக்கவில்லை யாதலால் இந்த நெடுஓட்டம் முழுவதும் கரிகால் சோழனால் கட்டுவிக்கப்பட்டதாகும் என்பதில் உண்மை பொதிந்திருக்கிறது.

2. ஆறெனின் பள்ளத்தாக்கில்தான் ஓடும். அப்படி ஓடும் ஆற்றிற்குப் போடப்பட்ட கரையும் கட்டப்பட்ட கலிங்கலும் இருக்காது. ஆனால் மேல் அணையிலிருந்து கீழ் அணை வரையிலுமாகக் காவிரி இரண்டையும் பெற்றிருக்கிறது. ஆகவே இது ஆறல்ல.

3. இயற்கைஆறுகள் உற்பத்திப் பகுதிகளில் குறுகலாக ஓடிக்கீழே செல்லச் செல்ல விரிவடைந்து அகலமாக ஓடுவது இயல்பு. ஆனால் வெட்டப்பட்ட கால்வாய்களில் தலைமடைப் பகுதிக்கால்வாய் அகன்றும் கடைமடைப் பகுதிக்கால்வாய் குறுகியும் இருப்பது இயல்பு. கீழ் அணையிலிருந்து வங்கம் வரை ஓடும் காவிரி கால்வாயின் இயல்புகளையே பெற்றிருக்கிறது.

சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் பாசன முறையைப் பின்பற்றிக் கரிகாலசோழன் காவிரிப்பாசனத் திட்டத்தை உருவாக்கினான். கரிகால்சோழனைப் பின்பற்றி அவன்பின் ஆண்ட

மன்னர்கள் பாசன வசதிகளைப் பெருக்கினர். இவ்வழியில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை வடிகால் நீர் அனைத்தையும் பயனுக்குக் கொணர்ந்து சிறப்படைந்துள்ளது.

இனிவரும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நிலத்தடி நீர்ச் செயல்பாடுகளில் தமிழ்நாடு பொதுப்பணித் துறையின் கவனம் நிச்சயம் செல்லும். அப்படிச் செல்லும்பொழுது வறண்ட நிலத்தடி நீர்ப்பகுதிக்கு உபரி நிலத்தடி நீர்ப்பகுதியினின்றும் நீரைக் கொணரும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம். இவ்வாய்வுகள் மேம்பாடடைந்து ஏனைய கண்டத்திலுள்ள மக்களும் இதைப் பின்பற்றிச் செயல்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்புக்கள் பெருகலாம். இதுவே பாசன முறையில் தமிழகம் உலகிற்கு அளிக்கும் கொடையாகவும் விளங்கலாம்.

C. PUSHOTHAMAN KARIKALAN AND CAUVERY IRRIGATION PROJECT - REVIEW

1. The so called river Cauvery from the upper anicut to its confluence into Bay of Bengal does not possess even the basic character of any natural river. Therefore it could be termed a canal of river size excavated by the King Karikalan with the formation of banks on both sides.

2. Natural rivers flow only in Valleys. Such rivers would not have either formed banks or any constructed surplus weirs. But the stretch of Cauvery from upper anicut to lower anicut is having former banks and constructed surplus course. Therefore it is not a river.

3. Natural rivers are generally narrow in upper reaches and wider in lower reaches. In contrast the upper reaches of the canals would be wider and the lower reaches would be narrow.

The Cauvery from the lower anicut to Bay of Bengal bears only the character of a canal and therefore it is not a river.

The above Cauvery Project advented by Karikalan developed technological skill among the Tamil Kings first and later among the officers of the Engineering Department. This development went to the extent of exhausting the harnessing of entire surface water. As an alternative the future generation would develop technology to such an extent to divert water from surplus underground areas to scarcity under ground areas as Karikalan diverted ground water from surplus area to scarcity area.

பூபதி, முனைவர் எஸ். தமிழ்நாட்டின் மொழிச்சூழலும் மொழி மாறுபடும் தன்மையும்

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் பலமொழிகள் பேசப்படும்போது, அவற்றின் ஒட்டுமொத்தமான விளக்கத்தை 'மொழிச் சூழல்' எனலாம். மொழிச் சூழலை விவரித்துக் காட்டுவது சமுதாய மொழியியலின் மிக முக்கியமான பிரச்சனைகளுள் ஒன்று (நிகோல்ஸ்கி 1967). மக்கள் தொகைக் கணக்கீடு தரும் தகவலின் அடிப்படையில் ''மொழிச்சூழல் 'இருமொழியம்' மற்றும் 'பன்மொழியம்' பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வீயின்ரிச் 1956, கிரின்பர்க் 1956, ஃபெர்கூஸன் 1977). 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீட்டின் அடிப்படையில் தமிழ்நாட்டின் மாவட்டங்களையும் மாநகரங்களையும் இருவகைகளாகப் (ஒருமொழிச் சூழல், பன்மொழிச் சூழல்) பிரிக்கலாம். எழுத்தறிவு, மாவட்ட, நகர்ப்புற அமைப்பு ஆகிய பன்மொழிச் சூழலுக்கு ஆதாரமாகின்றன.

பலமொழிகள் ஒரு சமுதாய அமைப்பிலோ அல்லது ஒரு நாட்டிலோ பரவலாகப் பேசப்படும்போது, அவை ஏற்படுத்திக் கொள்ளும் 'மொழி மாறுபாடு தன்மை'யை அளந்தறிய வழிமுறைகளை கிரீன்பர்க் (1956) விளக்கியுள்ளார்.

ஓர் எல்லைக்குள் பேசப்படும் தாய்மொழிகள் எல்லாவற்றின் 'தொடர்புச் சாதன சாத்தியக் கூறு'களையும் கூட்டி, வரும் மொத்த எண்ணிக்கையை 1-இல் இருந்து கழித்தால் கிடைக்கும் தொகையை 'மொழி மாறுபடு தன்மை' என்கிறார் கிரீன்பர்க். கிரீன்பர்க்கின் 'மொழி மாறுபடு தன்மை'யின் அடிப்படையில் தமிழ்நாட்டில் பேசப்படும் மொழிகளுக்கிடையே உள்ள 'தொடர்புச் சாதன சாத்திக் கூறு'களை இக்கட்டுரை விளக்குகிறது. தமிழ்நாடு 'ஒரு மொழிய மாநிலம் என்பதும், ஆங்கிலம், உருது ஆகிய மொழிகள் மிகக் குறைந்த விழுக்காட்டினரால் தாய்மொழிகளாகப் பேசப்பட்டாலும், தொடர்புச் சாதன சாத்தியக் கூறுகளைப் பொறுத்தவரை இருமொழிய மொழிகளாக அதிகவிழுக்காட்டினரால் பேசப்படுவதும் இவ்வாய்வின் மூலம் தெளிவாகிறது. மேலும் ஒருமொழிய மாவட்டமான திருநெல்வேலியில் மொழி மாறுபடு தன்மை குறைவாக இருப்பதையும், பன்மொழிய மாவட்டமான நீலகிரியில் மொழிமாறுபடு தன்மை மிக அதிக அளவில் உள்ளதையும் இவ்வாய்வு புலப்படுத்துகிறது.

பூவண்ணன், முனைவர் சிறுவர் இதழ்கள்

சிறுவர் இதழ்கள் - நோக்கமும் பயனும் - முதன் முதலாகத் தோன்றிய சிறுவர் இதழ்கள்- தமிழில் இதழ்கள் - முதல் சிறுவர் இதழ் - 1840-இல் தோன்றிய 'பாலதீபிகை' - அதன் தோற்றம் - வளர்ச்சி - இதைத் தொடர்ந்து வந்த சிறுவர் இதழ்கள் - சிறுபிள்ளைகளின் நேசத் தோழன் - இலங்கையின் முதல் சிறுவர் இதழ் - பாலியர் நேசன் - கிறித்துவர்கள் சிறுவர் இதழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி.

அரை நூற்றாண்டின் சிறுவர் இதழ்வறுமை - ஓரிதழும் தோன்றாத வெறுமை - சுப்பிரமணியபாரதி தொடங்கிய பாலவிநோதினி - இதன் 15 ஆண்டுக்காலச் சேவை.

1924 -இல் கிறித்துவ இலக்கியக் கழகம் (CLS) தோற்று வித்த சிறுவர் இதழின் தொண்டு.

சிறுவர் இதழ்களின் மறுமலர்ச்சிக்காலத் தோற்றம் - 1942- புதுக்கோட்டை சிறுவர் இலக்கியக் கோட்டை யாதல் - பாப்பா மலர் - பாப்பா - சிறுவர் அறிவுக்கதிர் - வள்ளியப்பாவின் வருகை- வெ.சுப. நடேசன், வள்ளியப்பா ஆகிய இருவர் இணைப்பில் வந்த இதழ்கள் - பாலர் மலர் - டமாரம் - சங்கு.

விடுதலை ஆண்டு 47-இல் அணில் உதயம் - தமிழ்வாணன் தொண்டு - அதன்பின் வெளியான - சுமார் அரை நூறு சிறுவர் இதழ்கள் - அவற்றின் தோல்வி - தோல்வியின் காரணங்கள்.

சிறுவர் இதழ்களின் வகைகள் - சீர்திருத்த - பகுத்தறிவுக் கொள்கை இதழ்கள் - தமிழ்ப் பற்றுச் சிறுவர் இதழ் - பாட்டிக்கதைகளை போற்றும் இதழ்கள்.

சிறுவர் இதழ்வரலாற்றில் சாதனை இதழ்கள் - கண்ணன் - பூஞ்சோலை - கரும்பு - சிறுவர் இதழ்களின் இருண்ட காலம் - அதன் காரணம்.

நாளிதழ்கள் இணைப்பாக வெளியிடும் சிறுவர் இதழ்கள் - தினத்தந்தியின் தங்க மலர் - தினமலரின் சிறுவர் மலர் - இவற்றின் தன்மை.

சிறுவர் இதழின் இன்றைய தன்மை - சிறுவர் இதழ் வளர்ச்சிக்கான கருத்துக்கள்.

சிறுவர் இதழ் வளர்ச்சிக்குப் பெற்றோர் - பள்ளிகள் - அரசு ஆகிய முக்கூட்டுச் சக்தி துணை செய்தால் வரும் நன்மைகள்.

பெரியகருப்பன், முனைவர் இராம. சங்க இலக்கியத்தில் நுண்பொருள் மெய்ப்பாடும் பருப்பொருள் மெய்ப்பாடும்

சங்க இலக்கியம் இயற்கையை உள்ளது உள்ளவாறு படப்பிடிப்புச் செய்கிறது; மனவுணர்வு நிலைகளையும் படம்பிடிக்கிறது.

ஓவியமாகத் தீட்டுவதில் புனைவியலிடம்பெறும்; ஒளிப்படம் பிடித்தால் நடப்பியலே பெரிதும் தென்படும். புனைவியலும் நடப்பியலும் கலந்ததுதான் செவ்வியல். கால வளர்ச்சியில் பின்னேதான் அவை இனம்பிரிந்தன. சங்கச் செவ்வியலில் இரண்டுமுண்டு. இக்கட்டுரை நடப்பியல் சார்ந்த பகுதிகளைப் பிரித்துக் காட்டமுயல்கிறது.

தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்பதை ஒரு கோட்பாடாக்கினார். மெய்யின்கண் தோன்றும் அபிநயமாம் மெய்ப்பாடு நாடகத்திற்குரியது. நாடகத்திலிருந்து இலக்கியத்திற்குப் பெறப்பட்டபின் 'மெய்ப்பாடு' என்பது என்ன?

'மெய்ப்பாடு என்பது பொருட்பாடு அஃது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றால் வெளிப்படுவது'.

- பேராசிரியம்

'உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளால்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்'

- தொல்காப்பியம் - செய்யுளியல்

நுண்பொருளையும், பருப்பொருளையும் வாசகனுக்கு - கேட்பவனுக்கு உருக்காட்சி (Image) ஆக்கிக்காட்டுவதே மெய்ப்பாடு. மேலோட்டமாகப் படித்தவுடனேயே மெய்ப்பட - உருத்தோன்ற வேண்டும். 'எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்' என்றதுமே பிள்ளை துள்ளி விளையாடுவது புலப்படவேண்டும் கண்ணுக்கு!

'செந்தார்ப் பைங்கிளி', 'சிறுகண் யானை' 'நெடுஞ்செவிக் குறுமுயல்' என அடைமொழிகள் கூட அக்கிளியை யானையை முயலை மனக்கண்முன் கொண்டுவர முயல்கின்றன. இங்ஙனம் பருப்பொருள்களை உருக்காட்சியாக்கிக் கண்ணாற் காணவும் காதால் கேட்கவும் தொட்டுணரவும் என ஐம்புல அனுபவமாக்கும் சங்கப் பாடல்கள், நுண்பொருள்களாம் (abstract) மனவுணர்வுகளையும் உருக்காட்சியாக்கிப் படம்பிடித்து வைத்துள்ளன. இதனை ஓர் ஐந்தாறு பாடல்களால் நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

குறுந்தொகையில் வரும் 'நீகண்டனையோ, கண்டார்க் கேட்டனையோ, ஒன்று தெளிய நசையினம் மொழிமோ?' (75) என்ற பாடல் ஓர் ஆர்வமனநிலையைப் படம்பிடிக்கிறது.

நம் மகன் இரண்டுமுறை தேர்வெழுதித் தோற்றபின் மூன்றாம் முறையாக எழுதியுள்ளான். நண்பர் ஒருவர் தொலைபேசியில் 'உங்கள் பையன் 'பாஸ்'ஆகிவிட்டான்' என்று கூறினால் நாம் எத்தகைய ஆர்வத்தை வெளிப்படுத்துவோம். 'நீங்களே பார்த்தீர்களா? பத்திரிகைகளில் வெளி வந்துள்ளதா? ஆங்கில இதழிலா? தமிழ் இதழிலா?' என இவ்வாறு கேள்விக் கணைகளைத் தொடுப்பதோடு, அஃது உறுதிப்பட்டால் அவர்க்கு என்னவேண்டுமானாலும் செய்யலாம் உதவலாம் என்று நம் மனம் துள்ளுமல்லவா?

இம் மனநிலை அருவப் பொருளேயாயினும் அதற்கு உருக்கொடுத்துப் பதிந்துவைக்கப்பட்டிருக்கிறது. பருப்பொருட் பதிவு எளிது; நுண்பொருட் பதிவு கடினம். சங்கப் பாடல் அருவப் பொருளான மனவுணர்வு நிலைகளையும் அழியாத சித்திரப் படங்களாய்ப் பதிந்துவைத்திருப்பதனால்தான், அவற்றுக்கு இன்றும் உயிர்ப்பும் வாழ்வும் உளவாகின்றன.

பெருமாள், முனைவர் திருமதி சக்தி தமிழ் இலக்கியத்தில் கற்புக் கோட்பாடு

ஆணும் பெண்ணும் கணவன் மனைவியென்ற நிலையில் ஒருவன் ஒருத்தியிடத்திலும் ஒருத்தி ஒருவனிடத்திலும் மனத்தாலும் வாக்காலும் செயலாலும் நிலைத்த பற்றுடையராய், இன்பம் துய்க்கும் வாழ்க்கை முறைமையே கற்புநெறி.

1. தொல்காப்பியர் காலம் முதல் பாரதி காலம் வரைப் பெண்ணோடு மட்டுமே இணைத்துப் பேசப்படும் சொல் கற்பு.

2. ஆடவன் வதுவைச் சடங்குடன் ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ளுதலைத் தொல்காப்பியம் கற்பு என்று குறிப்பிடுகிறது.

3. ஒருத்திக்கு ஒருவன் என்றிருந்ததுபோல், ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறை இல்லை.

அ. ஆடவன் பல பெண்களை மணந்து கொண்டான்.

ஆ. காமக்கிழத்தியர், காதற்பரத்தையர் உறவு இருத்தல்.

இ. பிறன் மனைவியை ஆடவன் விரும்புதல் மட்டுமே கடியப்பட்டது.

4. ஆடவன் நலனை மையப்படுத்தியே பெண்ணுக்குக் கற்புக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டன.

அ. கணவனின் காமக்கிழத்தியரை மனைவி உடன்பிறந்தவராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆ. கணவன் பரத்தையிடம் சென்றுவந்தாலும், அது வெளியே தெரியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இ. கணவன் இறந்தால் அவனுடன் மனைவி சாகவேண்டும். இல்லாவிட்டால் கடுமையான கைம்மைநோன்பு மேற்கொள்ள வேண்டும்.

5. சங்ககாலத்திற்குப் பின் பெண்களுக்குரிய கற்புவிதிகள் கடுமையாக்கப்பட்டன.

அ. பெண் பிறன் ஒருவனை விரும்பாதது மட்டுமின்றிப் பிறன் உள்ளத்தில் இடம்பெற்றுவிடாதபடி கவனமாக இருக்கவேண்டும்.

ஆ. கணவனுடன் மனைவி சாவது தலைக்கற்பு, எரியில் விழுந்து சாவது இடைக்கற்பு கைம்மை நோற்பது கடைக்கற்பு.

6. பெண்களைக் கற்பு நெறியில் ஊக்குவிக்க அவர்களுக்கு இயற்கையிறந்த ஆற்றல்கள் படைக்கப்பட்டன.

அ. கற்புடைய பெண் பெய்யெனப் பெய்யும் மழை.

ஆ. ஏவல் கேட்டு நெருப்பு எரியும், அல்லது அவியும் - கண்ணகி சீதை வரலாறு.

7. இடைக்காலக் காப்பியம், புராணங்கள் - (கந்தபுராணம் முதல் காசிகண்டம் வரை) கற்பு என்ற பெயரில் பெண்ணைக் கணவனின் கொத்தடிமையாகக் காட்டுகின்றன.

8. பெண்களை அச்சுறுத்தி நெறிப்படுத்தப் பல மிரட்டல்கள் விதிகளாயின.

அ. கணவனை எதிர்த்துப் பேசினால் மனைவி நாயாக, நரியாகப் பிறப்பாள்.

ஆ. கணவன் விரும்பிய பெண்ணை மனைவி ஏற்றுக் கொள்ளாவிட்டால் கூகையாகப் பிறப்பாள்.

இ. அவள் அடுத்தவனை விரும்பினால் பேயாவாள். கணவனுக்கு முன் உண்டுவிட்டால் பன்றியாகப் பிறப்பாள்.

9. ஆசை காட்ட, பெண் கற்புடையவளாக இருந்தால் வீடு பேறு கிடைக்கும் என்று பேசப்பட்டது.

10. பாரதி காலம் - முற்போக்குச் சிந்தனைகள்.

அ. கற்பு நிலை இருவருக்கும் பொது.

ஆ. ஆணுக்குப் பெண் அடிமையில்லை.

இ. கணவனையிழந்த பெண் மறுமணம் செய்து கொள்ளல் கற்பினுக்கு இழுக்கன்று.

ஈ. மணமுறிவு உரிமை இருவர்க்கும் பொது.

1 ஆடவனின் உடைமை பெண் - கற்பு அவளுக்கு வேலி; இருபதாம் நூற்றாண்டு வரை.

2. பலதார உரிமை ஆடவனுக்கு

3. பெண்ணை ஆறறிவுயிராகக் கருதத் தொடங்கும் நிலை இருபதாம் நூற்றாண்டிலேயே என்பன ஆய்வு முடிவுகள்.

பெருமாள், முனைவர் ஏ.கே. வலங்கை இடங்கைச் சாதிகளும் வலங்கைக் கதைப்பாடல்களும்

பிற்காலச் சோழர் காலத்திலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டங்களில் தமிழகத்தில் வழக்கில் இருந்த வலங்கை, இடங்கைச் சாதியமைப்பு சமூகவியல் ஆய்வாளர்களுக்கும் புரியாத புதிராக உள்ளது. இப்பாகுபாட்டின் தோற்றம், வகைப்படுத்தப்பட்ட முறை, இவ்விருவகைச் சாதிகளுக்குரிய உரிமைகள், சலுகைகள் ஆகியன குறித்த ஆதாரப் பூர்வமான சான்றுகள் குறைவாகவே கிடைக்கின்றன.

பிற்காலச் சோழர் காலத்திலும், மதுரை நாயக்கர் காலத்திலும் உள்ள சில கல்வெட்டுக்கள், கிறித்துவப் பாதிரிகளின் கடிதங்கள்,ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தீர்ப்புகள், தஞ்சைமோடி ஆவணங்கள் ஆகியன வலங்கை, இடங்கைச் சாதிகளைப்

பற்றிக் குறிப்பிடுகின்றன. இச்சாதியமைப்பைப் பற்றி ஆராய்ந்தவர்கள் இச்சான்றுகளையே பெரிதும் பயன்படுத்தி உள்ளனர். இச்சான்றுகள் அல்லாமல் வலங்கை, இடங்கைச் சாதிகள் பற்றி ஆறு கதைப்பாடல்கள் உள்ளன. அவை, 1. இடங்கை வலங்கைச் சாதியர் வரலாறு, 2. வலங்கை நூல் கதை, 3. வலங்கை நூல் கும்மி, 4. சப்தகன்னிகைகதை, 5.வெங்கலராசன் கதை, 6. பத்திரகாளி கதை ஆகியன.

இந்த ஆறு கதைப்பாடல்களில் வெங்கலராசன் கதையும், பத்திரகாளி கதையும் அச்சில் வந்துவிட்டன. பிறநாட்டுப் பாடல்களில் இடங்கை வலங்கைச் சாதியர் வரலாற்றுக் கதை ஏடு சென்னை அரசுக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளது. பிற மூன்று கதைகளும் வ.உ. சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட ஊர்களில் கிடைக்கின்றன. இம்மூன்று ஏடுகளுள் இக்கட்டுரை ஆசிரியரிடமும் உள்ளன.

வெங்கலராசன் கதையும், பத்திரகாளி கதையும் வலங்கைநூல் கதையின் தொடர்ச்சியாகவும் சுருக்கப்பதிப்புகளாகவும் உள்ளன. இடங்கை வலங்கைச் சாதியர் வரலாறு தமிழகச் சாதிகளின் பட்டியலை விரிவாகக் கூறுகிறது. வலங்கைநூல்கதை, சப்த கன்னிகை கதை ஆகிய இரண்டும் வலங்கைச் சாதியர் சோழ நாட்டிலிருந்து தென்பகுதிக்குக் குடிபெயர்வதற்கு உரிய காரணங்களையும், வலங்கை இடங்கைப் பூசலையும் கூறுகின்றன. வலங்கைநூல்கும்மி இவ்விரு நூல்களின் சுருக்கப்பதிப்பு அச்சில் வராத இவ்வேடுகள் வலங்கையரின் பிறப்பை ஒருவகைப் புராணக் கண்ணோட்டத்தில் வருணனை செய்கின்றன.

கல்வெட்டுக்கள் வலங்கை இடங்கைச் சாதிகளின் தோற்றத்தை மூன்றாம் குலோத்துங்கனுடன் தொடர்புபடுத்தும். இதைத் தென் பகுதியில் கிடைக்கும் வலங்கை தொடர்பான கதைப்பாடல்களும், களியலாட்ட இடைநிகழ்ச்சி உரைநடையும் உறுதிப்படுத்தும்.

இருவகைச் சாதிகளின் பிறப்பை மெகன்ஸியின் கையெழுத்துப் பிரதியும், கல்வெட்டுக்களும் புராணத்தன்மையுடன் கூறுகின்றன. இவ்வலங்கை நூல் கதை இச்சாதிகளை யாகத்தில் பிறந்தனவாக வருணனை செய்யும்.

1. இக்கதைப்பாடல்களின் வழி சோழர் காலத்தில் வலங்கையர் சிலர் தென் தமிழகத்திற்குக் குடிபெயர்ந்தனர் என்று தெரிகிறது.

2. முதல் ராஜராஜனின் பிரகதீஸ்வரர் ஆலயம் தந்தைவழி வழிபாட்டை முன்னிறுத்தியது. அவன் தாய்த்தெய்வ வழிபாட்டிற்கு முன்னுரிமை வழங்கவில்லை. இது வைதீகவழி ஆரிய அந்தணரின்

ஆளுமையால் உருவானது. இச்செயலால் மாறுபாடு கொண்ட முதல் ராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தலைநகரை மாற்றினான் என்ற கருத்து உண்டு. இக்கருத்தை வலங்கைக் கதைப்பாடல்கள் உறுதிப்படுத்தும். திராவிடக் கலாச்சாரத்தில் பெருமளவு நம்பிக்கை உடைய வலங்கையர் தந்தை வழிபாட்டை எதிர்த்திருக்கலாம். வலங்கையர் தாய்த் தெய்வத்தின் குழந்தைகள் என்பதை மூன்று கதைப்பாடல்களும் கூறுகின்றன. எனவே ஆரிய திராவிட, தந்தைத் தெய்வ - தாய்த் தெய்வ மாறுபாட்டால் திராவிட வலங்கையர் சோழநாட்டிலிருந்து தென்பகுதிக்குக் குடிபெயர்ந்தனர் என்று கொள்ளலாம்.

சாதிகளின் முகங்களை உருவாக்கியவர்கள் பிராமணர்களே என்று வலங்கைக் கதைப்பாடல்கள் கருதியதால் பிராமணர்களை வெறுக்கவும் செய்தன. இதை ஒரு கதை நிகழ்ச்சியின் வழி வலங்கை நூல்கதையும், சப்தகன்னிகை கதையும் காட்டுகின்றன.

அரசியல் நிர்வாகத்திற்கும், வணிகச் செல்வர்களுக்கும் உள்ள மாறுபாடு காரணமாக வலங்கை இடங்கைப் போராட்டம் நிகழ்ந்தது என்ற கருத்தைக் கதைப்பாடல்களும் காட்டுகின்றன. சோழ அரசனே இடங்கை வலங்கையர்களின் எழுச்சியை அடக்க வலங்கையரைத் தூண்டி விட்டான் என்பதை இலங்கைக் கறையானை வலங்கைக் கருடன் கொத்தித்தின்றது எனக்கதைப்பாடல்கள் கூறும்.

பழையகுடிகளின் (வலங்கை) ஆளுமையைத் தாங்கமுடியாத நிலையில் புதிய குடியேற்றங்கள் (இடங்கை) ஏற்படுத்திப் போராட்டத்தை உருவாக்கிய சோழ மன்னனின் உத்தியைக் கதைப்பாடல் 'தெற்கத்தி இடங்கையதைக் குடியேற்றித் தூண்டிவிட்ட சோழனும்தான்' என வருணிக்கிறது.

ஏதோ ஒரு வகையில் ஒற்றுமை உடையவர்களை ஒன்றுபடுத்தி வகைப்படுத்துவது அவர்களுக்கிடையே போராட்டத்தை உருவாக்கும் என்று கதைப் பாடல்களின் போக்குக் கூறுகிறது.

மங்கையர்க்கரசி, முனைவர் சிவ. பண்பாட்டுக் கலப்பும் சமய வளர்ச்சியும்

பண்பாட்டுப் பரிவர்த்தனை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சிந்தனைப் போக்குகளிலும், சமுதாய அணுகுமுறைகளிலும், கலை இலக்கியப் படைப்புகளிலும், சமயக் கோட்பாடுகளிலும் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துகின்றது. பண்பாட்டுக் கலப்புகளால் சமயம் வலுப்பெற்று வளர்ந்துள்ள பாங்கினைக் காணமுடிகின்றது. சங்ககாலம்

தொடங்கி இன்றுவரைப் பல பண்பாட்டுக் கூறுகள் தமிழர்களிடம் சங்கமமாகியுள்ளன. ஏனெனில் மிகப் பழங்கால நிகழ்ச்சிகள் கூடத் தற்காலத்தோடு நேரடியான தொடர்புடையவை.

'இந்திய ஆன்மீகம்' என்ற கருத்து மறுபரிசீலனைக்குரியது. இந்தியப் பண்பாட்டின் தோற்றத்தை ஆரிய இனத்தோடு தொடர்புபடுத்துவது தறவாகும். எத்தனையோ பண்பாடுகளில் கலப்பில் இந்தியப் பண்பாடு உதயமாயிற்று. அவற்றுள் முக்கியமான பண்பாடுகள் ஆரியப் பண்பாடு, திராவிடப் பண்பாடு என்று அழைக்கப்படும் இரு பண்பாடுகளாகும். இந்திய நாட்டின் தொன்மைச் சமயம் முற்றிலும் வேறுபட்ட இரண்டு சமுதாயங்களின் பண்பாட்டுக் கலப்பாகும். ஆரிய சமயம், திராவிட சமயம் ஆகிய இரண்டு சமயங்களின் இணைப்பே இந்து சமயம்.

இந்து சமயத்தின் திராவிடக் கூறுகளாவன நிலையாமைக் கொள்கை, தீவிரத் துறவு, யோக முறைகள், மாயோன் - சேயோன் வழிபாடு மற்றும் கொற்றவை வழிபாடு ஆகியவை. வேதகாலத்தில் வேள்வி வழிபாடே பெரிதும் இடம் பெற்றது. ஆற்றோரங்களிலும், மலர்ச்சோலைகளிலும் வழிபாடு நடந்து வந்தது. எந்தெந்த விருட்சங்களின்கீழ் வழிபாடு நடைபெற்றதோ அவை எல்லாம் நாளடைவில் தல விருட்சங்கள் ஆயின. பின்பு ஆகமத்தை அனுசரித்து ஆலயங்கள் கட்டப்பட்டன. ஆரிய திராவிடக் கூறுகள் இணைந்த பின்னர்தான் இந்து சமயத்தில் உருவ வழிபாடு சிறந்து வளர்ந்தது. கோயில்கள், உருவ வழிபாடுகள் ஆகியவை ஆரியர்களிடம் இல்லை. வேள்விகள், பலிகள் ஆகியவை ஆரியரின் முதன்மைக் கொள்கைகளாகும். திறந்த வெளியில் அல்லது வீட்டில் தீ வளர்த்து யாகம் செய்து பலிகொடுப்பது ஆரிய வழிபாடாகும்.

மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாய்வுகளுக்கு முன்னர்வரை இந்துசமய வளர்ச்சி என்பதே ஆரிய சமயக் கோட்பாடுகளின் முகிழ்ப்பு என ஆய்வாளர் நம்பினர். ஆரிய இனம் என்பது இந்திய மரபிற்கு அந்நியமானது. ஆரியர் வருகைக்குப் பின்னர் வடநாட்டுச் செய்திகள் அனைத்தும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டமையே இந்நம்பிக்கைக்குக் காரணமாயிற்று. மொகஞ்சதாரோ புதைபொருள் ஆய்வின் விளைவாக இன்றைய இந்து சமயத்தில் ஆரியருக்கு முன்னிருந்த ஆற்றல்மிக்க தொன்மைச் சமுதாயத்தின் ஆளுமையை ஆய்வுலகம் அறிந்து கொண்டது.

வேதகால மக்களே இந்திய நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் என்ற கருத்து தவறானது. ஹாரப்பர்களிடமிருந்தே இந்திய நாகரிகத்தின் துவக்கத்தைக் காணவேண்டும். ஏனெனில் ஹாரப்பா நாகரிகம் என்றும், சிந்துவெளி நாகரிகம் என்றும் அழைக்கப்படும் முன்னேற்றமடைந்த

பண்பாடு கி.மு.3000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் நிலைகொண்டிருந்தது. ஆரியமொழி பேசும் மக்கள் வடஇந்தியாவிற்குள் குடியேறி அங்கு வாழ்ந்த மக்களோடு கலந்தனர் என்பதே வரலாற்றுச் சான்றுகளுக்குப் பொருத்தமான முடிவாகும். பின்னர் உருவான பண்பாடு இவ்விருவகை மக்கட் குழுவினரின் கலப்பின் விளைவாகத் தோன்றியதாகும். பண்பாட்டு மறுமலர்ச்சி சமய உணர்வோடு இணைந்து வளர்ச்சி பெற்றது. தூய இனம் என்று ஒன்று நெடுநாள் கலப்புறாமல் அவ்வாறே இருக்க முடியும் என்பதை உயிரியல் விஞ்ஞானம் மறுக்கிறது. சமய உணர்வின் இயல் தன்மையும் கட்டமைப்பும் சமூக உருமாற்றங்களை ஒட்டி மாற்றம் காணும் தன்மையன. எனவே, சமயம் தோன்றிய நாளிலிருந்து வழிபாட்டு முறையில் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மதியழகன், முனைவர் ம. தமிழில் கால ஆராய்ச்சியும் அதன் பின்புலங்களும்

தமிழில் இலக்கிய கால ஆராய்ச்சி என்பது அந்த இலக்கியத்தோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. அவ்வாறே ஆராய்ச்சியாளரின் ஆய்வு நெறிமுறைகளோடு மட்டும் தொடர்புடையதன்று. அதற்கும் அப்பாற்பட்டு அரசியல், சமய, மொழிப் பின்னணிகளின் ஊடாட்டங்களினால் ஓர் இலக்கிய கால ஆராய்ச்சி நிர்ணயம் செய்யப்படுகிறது.

இராபர்ட் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) என்ற நூலிலிருந்து மொழிகளின் கால ஆராய்ச்சி, மொழி, இனம் சார்ந்து மிகவும் தொன்மையான இலக்கிய வளங்கொண்ட மொழி என்ற போக்கிலும் தமிழின் பல்வேறு இலக்கிய வளத்திற்கு மூலம் சமஸ்கிருதமே என்ற கருத்தின் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களின் காலத்தைப் பின்தள்ளிப் பார்க்கின்ற போக்கிலும் சென்றது.

மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளையை முதன்மையாகக் கொண்ட அணியினரின் கால ஆராய்ச்சியும் எஸ். வையாபுரிப் பிள்ளை வழியில் மேற்கொண்ட கால ஆராய்ச்சியும் என இரு நிலைகளில் கால ஆய்வுப் போக்கைப் பிரித்துணரலாம். இவ்விரு கால ஆராய்ச்சிப் போக்கிற்கும் தமிழ்நாட்டின் அரசியல், இன, மொழிப் பின்னணிகளின் போக்கிற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவை மிகத் தொன்மையானவையாகக் கருதப்பட்டு, தமிழ் இலக்கிய வரலாறும், தமிழக வரலாறும் எழுதப்பட, அவை கிபி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று எஸ். வையாபுரிப்பிள்ளை கால நிர்ணயம் செய்தார்.

இதற்கான பின்னணிகளைச் சுட்டி, கால ஆய்வின் போக்கை விவரிக்கின்றது இக்கட்டுரை.

மறையரசன், மருத்துவர் மொழியாக்கம் - சில முரண்பாடுகள்

மொழி - மாந்தனின் அரிய கண்டுபிடிப்பு. கலை - இலக்கியம் வரலாறு, பிற தரும் ஒரு வடிவம்.

மொழி - வடிவங்கள் ஒலிவடிவம் - வரிவடிவம் வாய்மொழி இலக்கியம் - ஒலிவடிவம் - எழுத்து வடிவத்தில் தாக்கம் -

மொழியாக்கம் - மொழிபெயர்ப்பு - வேறுபாடு - மொழியாக்கம் - சான்று - கம்பன், பாரதி, மொழிபெயர்ப்பு - காண்டேகர் புதினங்கள் - மொழிபெயர்ப்பு (காஶ்ரீஶ்ரீ) - தற்பவம் - தற்சமம் -

மொழிஞாயிறு பாவாணர் வழி . ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்வேர் - மொழியாக்க முறை - ஒப்பொலிமுறை - வேர்முறை - முதல் எழுத்துமுறை - சிறப்புமுறை - பழக்கமுறை - சான்றுகள் - ஆங்கிலேயர் பலுக்கு (உச்சரிப்பு) முறை - ஊர்ப்பெயர்கள் - தின்னவேலி - கல்கட்டா - ஒடகமண்ட் - ட்ரங்குபார் - டாஞ்சூர், பெயர்ச் சொற்கள் மொழிபெயர்ப்பு - சான்றுகள் - ஃபோர்ட்மன்டன் - கோல்டன் ராக்-

தமிழில் மொழி பெயர்த்தல் ஏற்காதது - ஆக்சுபோர்டு - எருதன்துறை.

ஒலி வடிவத்திற்கேற்ப மாற்றுதல் - சான்று Shakespeare - சேக்ஸ்பியர் - சேக்சுபியர் . செகப்பிரியர் நேரடியாக மொழிபெயர்த்தல் தேவையில்லை - எடுத்துக்காட்டு - தேர்வுக்கு முன்னால் பணம் கட்ட வேண்டும் - Tie the Money infront of Examination.

பயன்பாட்டுச் சொற்களைத் தேடிப் பயன்படுத்தல்: Small pox - சிறிய கொப்புளம் அல்ல - சிறிய அம்மையும் அல்ல - பெரிய அம்மை.

முரண்பாடுகள் - ஒரே சொல்லுக்குப் பல சொற்களைப் பயன்படுத்துதல் - சான்று : Centre - மையம், நடு சென்டர் - நடுவம் - Epiderm - புறத்தோல் - வெளித்தோல் - மேல்தோல் - Epi - புற வெளி மேல் - Epigenous Stem - தரைமேல் தண்டுகள் - Endo - உள் - அக - Endogenous - அகத் தோன்றி - Epigenous - தரைமேல் தண்டுகள் - முரண்பாடு -

அறிவியல் பாடப் புத்தகம் Volume - ஏழாம் வகுப்பில் கன அளவு - ஒன்பதாம் வகுப்பில் பருமன் அளவு - வேறு வேறு என மயக்கம் தரும் - ஒருமித்த சொற்களையே பயன்படுத்தல் வேண்டும்.

சொல்மயக்கம் கூடாது : AIDS - வலி இழப்பு - வலிமை இழப்பு - வலியின்மை - Loss of pain - திருமரைக்காடு - திருமறைக்காடு - வேதாரண்யம் - வடமொழி ஆளுமை - தமிழ் மொழியாக்கமல்ல - வேதாரண்யம் - மயிலாடுதுறை - கபித்தலம் - விருத்தாசலம்.

Digestive System - ஜீரண மண்டலம் - Respiratary System - சுவாச மண்டலம் - ஆளுமை கலையப்படவேண்டும்: பொருள் பொதிந்த சொற்களாக இல்லாதிருத்தல் - ஒரே சொல் பயன்படல் Health - Welfare - Sanitation - Hygene - சுகாதாரம் முரண்பாடு - அவற்றின் தனித்தனிப் பொருளார்ந்த சொற்கள் - நலம் - நல்வாழ்வு - துப்புரவு - தூய்மை. Myocardits - தசை நெஞ்சழற்சி - Pericardium - நெஞ்சமேலுறை - வடமொழித் தாக்கம் - Heart - உஹ்ருதய - இருதய - இதயம் - நெஞ்சம் - அச்சுப் பிழைகள் - பொருள்மாற்றம் தருதல் - Covalent - சகப்பிணைப்பு - சமப்பிணைப்பு

துறை அறிஞரும் மொழி அறிஞரும் இணைந்து செயல்படாமை - முறையான கலைச் சொல்லாக்கம் இல்லாமை - (சொல்லுக்கு) - முன்னரே மொழியாக்கம் செய்த சொல்லுக்குப் புதிய சொல்-மீளாய்வு செய்யாமை - தத்தம் நோக்கில் ஒரே சொல்லுக்குப் பல்வேறு சொற்களை மொழி பெயர்ப்பாகப் பயன்படுத்துதல் சான்று: AIDS - ஏப்பு - ஏம இழப்பு - (ஔவை நடராசன்) - வலி இழப்பு - தடுப்பாற்றல் குறைநோய் - எதிர்ப்பாற்றல் இழப்பு - சுவர்தல் நோய் - 'எஇசு' நோய் தகையான சொல் எது எனப் படைத்தல்.

MARUTHTHUVAR, MARAIYARASAN
TRANSLATION - MISNOMER (SOME CONTRADITIONS)

Language - A fine invention by Man - A Shape offered by Literature, History Etc.,

Language : Shapes - Phonetics, Letters - Folk Literature - Phonetics - Influence of Letters -

Translation - Difference in Translation - Mozhiyakkam - Mozhipeyarppu - Mozhiyakkam Evidence : Kamban - Bharathi.

Mozhipeyarppu Evidence : Novels of Kandekar - Translator Ka. Sri. Sri. Tharpavam - Tharsamam.

Method of Translation -

Method followed by Mozhi Gnayiru Paavaanar - Finding Tamil roots for English words - Method - Similar sounding words - method - first Letter method - Special method - habits evidences. pronounciation method followed by the English - Name of the Towns - Evidences : Thinnaveli, Calcutta, Odagamund, Trankuber, Tanjore. Translation of Propernouns : Fort Mountain, Goldeen rock - following Translation in Tamil Lanaguage is not accepted Oxford - *Eruthanthurai* -

Coinaging or Translating it to the equal sound pattern - Evidence - Shakespeare - Shakesupeare - Sekapiriyar.

Direct Translation not necessary - Evidence : *Thervukku Munnal Panam Katta Vendum* - (Pay the Exam, fees prior to Examination) can be misunderstood as 'TIE THE MONEY INFRONT OF EXAMINATION' - Using the appropriate terms from the current language of the people - Translation likes SMALL POX It is neither *chiriya koppulam* nor *chiriya ammai* -it is *periyar ammai* - It is totally contradictory if it is so Translated.

Contradictions : Using Several words to mean one word - Evidence : . Centre - *Maiyam - Nadu Centre - Naduvam* . 2 Epiderm means - Purathol - *Velithol - Melthol - Epi - Pura - Veli - Mel* - Similarly Endo - for *Ul* - Aga - Epigenous stem - *Tharaimel Thandugal* - Endo - Ul - Aga Endogenous - *Agathontri* - Epigenous - *Tharaimel Thandugal* - Contradiction in VII Standard Science Books `Volume' is Translated as *Kana alavu* in IX Standard Science it is translated as *Paruman alavu* may mean different words - should use similar words.

Avoiding, Words Causing Confusion - (*Cholmayakkam* - AIDS- *Vali Izhappu - Valimai Izhappu - Vali Inmai* - Loss of pain -

Thirumaraikkadu - Thirumaraikkadu - Vedharanyam - Influence of Sanskrit. Not Proper/Ideal - Tamil Translation Evidence: *Vedharanyam - Mayiladuthurai - Kabithalam - Virudhachalam.*

Digestive System - *Geerana Mandalam* - Respiratory System -

As *Suvasa Mandalam* - Removing Totally the influence of other Languages.

Words having no meaning or empty words - Using one word instead of Several words - Health - Welfare - Sanitation - Hygene- *Sugatharam* a contradiction - have the own separate meaning - individual meaning for each word - *Nalam - Nalvazhvu - Thuppuravu - Thooimai -*

Myocarditis - *Thasai Nenjalarchi* - Pericardium - *Nenjamelurai* Influence of Sanskrit : Heart as Hirdhaya - *Irudhaya - Idhayam Nenjam.*

Printing Mistake - makes the meaning different - Covalent - *Sagappinaippu - Samappinaippu*

Reasons : Language experts and Field experts have not joined together - Solving this problem non-availability of glossary - Not doing any revision work if new words are found appropriate to the word already translated - For one single word making several translation possible to their choice - Evidence : AIDS - *EEPPU - eema Izhappu* - (Dr. Avvai Natarajan) *Vali Izhappu - Thaduparral Kurai Noy - Ethirparral Izhappu Suvarthal Noy* ` AESU' *AESU Noy*- coining apt terms while translating words.

மன்சூர், முனைவர் பீ.மு. இந்திய மெய்யியல் வரலாற்றின் மீட்டுருவாக்கத்தில் நீலகேசியின் பங்களிப்பு

இந்திய மெய்யியல் மீட்டுருவாக்கத்தில் பொதுவாகத் தமிழ்மூலங்கள் - சிறப்பாக நீலகேசிக்காப்பியத்தின் பயன்பாட்டினை உணர்தலும், உணர்த்துதலும் ஆய்வுநோக்கம். இராதாகிருட்டிணன், தாஸ் குப்தா, என்ரிச் சிம்மர், சார்பே, ஆர்ன்லே போன்ற இந்தியவியல் அறிஞர் பெரும்பாலும் காலத்தால் பிந்திய சர்வதரிசன சங்கிரகம் போன்ற வடமொழி நூல்களையே ஆதாரமாய்க் கொண்டுள்ளனர். தமிழ் நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு தற்சார்பின்றி ஆய்வு நிகழ்த்தினால் இந்திய மெய்யியல் வரலாற்றில் புதிய வெளிச்சங்கள் பிறக்கும்.

சமணம், பௌத்தம், ஆசீவகம், சாங்கியம், வைசேடிகம், மீமாம்சம், உலகாய்தம் ஆகிய இந்திய மெய்யியல் பள்ளிகள் பற்றிய விரிவான கருத்துக்கள் நீலகேசியிலும், சமய திவாகரவாமன முனிவர் உரையிலும் காணப்படுகின்றன. அவ்வருங் கருத்துக்கள் இந்திய மெய்யியல்

சிந்தனைகளில் புதிய பரிமாணங்களை உருவாக்கி மீட்டுருவாக்கத்தின் இன்றியமையாமையை உணர்த்தும் என்பதைச் சான்று வழி நிறுவுவதே ஆய்வாளர் நோக்கம்.

சமயவியல், பிரபஞ்சவியல், வாழ்வியல், தத்துவவியல், அளவையியல் அடிப்படைகளில் சமணவியல் நீலகேசியில் நுண்ணிதின் இடம்பெற்றுள்ளது. உயிருக்குப் பருமை கூறும் சமயக் கருத்தியல் உயிருக்கு உருவம் கூறும் ஆசீவகக் கருத்தினின்று மாறுபட்டது. சமணத்தின் இலேசியக் கோட்பாடு ஆசீவகத்தின் அபிசாதிக் கொள்கையின் முதிர்ந்த வடிகம். அநேகாந்தவாதம் சப்தபங்கி அஸ்திநாஸ்திவாதம் ஆகியன இயைபுடையன.

ஆசீவகம் சமணத்தின் ஒரு பிரிவு என்ற கருத்து மயக்கம் சைவசித்தாந்த சாத்திர நூல்கள் காலந்தொட்டு இன்றைய சமய அறிவியல் கலைக் களஞ்சியம் வரை நிலை பெற்றுள்ளது. அம்மயக்கம் நீக்குவது நீலகேசி. அவிசலித நித்தியத்துவம் நீலகேசியில் மட்டும் இடம் பெற்றுள்ள தனிநெறி. நீலகேசியில் தொண்டர் வரலாற்றியல் (Hagiology) இறையியலாக (Theology) வளர்ச்சி பெறல்.

ஐங்கந்தங்கள் - பாரமிதை, துதாங்கம் ஆகிய பௌத்தக் கருத்துக்கள் நீலகேசியில் தனித்தன்மையுடன் இடம் பெறல்.

உலகாயதர் கூறும் அடிப்படைத் தனிமங்கள் நான்கு அல்லது ஐந்து என்ற கொள்கையை மொழிச் சார்புடன் நோக்கும் பிழைபட்ட ஆய்வுப்போக்கிற்கு நீலகேசி தீர்வளிக்கும். கே.கே. மித்ராவின் உலகாயதர் தம் ஒழுக்கவியல் கருத்தினை நீலகேசி அரண் செய்தல்.

இறையேற்புச் சாங்கியம் மகாபாரதத்துடன் இயைபுடையது. உயிருக்கு மூன்று நிலைகள் என்பது புதிய கருத்து.

வைசேடிகக் கொள்கை பிரசத்தபாதர் நெறிவழி நீலகேசியில் இடம்பெறல். அஸ்தித்துவம் அஃதில்லாதன என்ற பகுப்பு - குணம் குணி பற்றிய ஆராய்ச்சி நீலகேசியின்றி முழுமையுறாது.

இவ்வகையில் இந்தியமெய்யியலுக்கு நீலகேசியின் பங்களிப்பினை ஆய்வுக்கட்டுரை சான்றுடன் விளக்கியுரைக்கும்.

மாசிலாமணி, டாக்டர் பா. சீர் மிகுந்த சித்தமருத்துவம்

சித்த மருத்துவம் என்பது சித்தர்கள் உருவாக்கிய மருத்துவமாகும். இது தமிழ்நாட்டு மருத்துவம் என்று சொல்லப்படுகிறது. இம் மருத்துவத்தை மக்கள் நலம் கருதிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு

முன்னர் குருமுனிவர் முதல் குதம்மை சித்தர் வரையில் இன்னும் பல சித்தர்களும் தங்கள் தீர்க்கமான ஆராய்ச்சிகளைக் கொண்டு ஆராய்ந்து தீர்வுகளை எழுதி வைத்துச் சென்றனர். இவை யாவையும் ஏட்டுச் சுவடியில் பொறிக்கப்பட்டன. இச்சுவடிகளை ஆராய்ந்து உண்மையான சுவடிகள் எனத் தெரிந்து புத்தக வடிவாக்கி அழிந்தவை போக மிஞ்சியவை இப்பொழுது பயன்படுகின்றன.

சித்த மருத்துவம், நோயை நிர்ணயம் செய்யும் முறை அலாதியானது. மனித உடலில் இயங்கும் நாடிகள் நோயின் தன்மைகளை அறியச் செய்கின்றன. எந்த நோய் உடலைப் பற்றியது என்பதை நாடி துல்லியமாகத் தெரிவிக்கிறது. மேலும் நோய்க்கான உட்காரணங்களையும் மனத்தில் எற்படும் காரணங்களையும், வசிக்கும் இடத்தையும், உணவுக்ளையும் தெரிந்து கொண்டு மனத்தில் ஏற்படும் நோயின் ஆணி வேரை அறவே ஒழிக்க முடிகிறது. மற்ற மருத்துவ முறைகளில் இந்நிலை காணப்படுவது இல்லை. மனிதனுக்கு நச்சுக் கிருமிகள் தீண்டிச் செயல் இழந்த நிலையிலும் அவனுடைய 10 இடங்களில் இருக்கும் நாடிகளைப் பரிசோதித்து எந்த வகையில் மருந்தைச் செலுத்தலாம் என்பதைத் தீர்மானித்து அவனை உயிர் பிழைக்கச் செய்யலாம். இவ்வகை சித்த மருத்துவத்தால் முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒரு பெண் கருவுற்று இருக்கிறாளா என்பதை அவளுடைய சிறுநீரைப் பரிசோதித்த பின்பு ஓரளவு இருக்கலாம் என்று கூறுகிறார்கள். பிறகு நவீன மருத்துவ முறையில் சோனோகிராம் என்னும் கருவியைக் கொண்டு சோதனை மூலம் தெரிந்துகொள்கின்றனர். இதனால் சில சமயம் ஏமாந்துவிட முடிகிறது. ஆனால் வழக்கமாகப் பெண்களுக்கு வரும் விலக்கம் நின்று 10-நாளிலிருந்து 30-நாளுக்குள் கருவைப் பெற்றுள்ளாரா என்பதை அவருடைய நாடியைப் பரிசோதித்துத் துல்லியமாகக் கூறமுடியும். அப்பெண் ஒரு வார்த்தையும் கூறாத நிலையிலும் இடது கை நாடியைப் பார்த்துப் பரிசோதித்துக் கூறமுடியும். இதற்கு எந்தமருத்துவ முறையிலும் பயிற்சியோ வழியோ இல்லை.

சரியான முறையிலும் பத்திய முறையிலும் மருந்துகளை எடுத்துக்கொள்வதால் பழங் காலத்தில் நோயைத் தீர்த்தனர்.

பாஷாணங்களையும் உலோகப் பொருள்களையும் பஸ்பம், செந்தூரம், ஜெயநீர், கட்டு, கலங்க இவற்றை நல்ல முறையில் செய்து நோய்க்கு ஏற்ற வகையில் கொடுத்துப் பூரண குணத்தை எற்படுத்தி நல்ல நிலையில் மனிதனை வாழ வைப்பதே சித்த மருத்துவமாகும்.

நீரிழிவு நோய், காசநோய், இழுப்பு நோய், பக்கவாத நோய் இரத்த அழுத்த நோய், குண்ம நோய், மூட்டு வலி , இருதய நோய், சிற்றின்ப நோய், பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை, மேக நோய், கருப்பையில் ஏற்படும் பல நோய்களுக்குச் சித்த மருத்துவத்தில் சிறந்தவழி முறைகள் நிறைந்து உள்ளன.

மனிதன் உணவிற்குக் கீரைகள், கிழங்குகள் பருப்பு வகைகள், எள் எண்ணெய், உருக்கியநெய், சிலுப்பிய மோர், இளவென்னீர் இவற்றைத்தான் அருந்தவேண்டும். சித்த மருத்துவப் பத்தியங்கள் இவை.

இப்படியே ஒவ்வொரு வியாதிக்கும் எளிய மருந்துகளையும் அல்லது வியாதிக்கு ஏற்ற தக்க மருந்துகளையும் கொடுத்தும் உணவுக் கட்டுப்பாட்டை விதித்தும் நோயாளிக்குச் சித்த மருத்துவம் செய்வோமானால் பயன் பெறலாம்.

மாணிக்கம், வி.ஆர்.பி. சிங்கையில் கடந்த பத்தாண்டுகளில் கவிதை வளர்ச்சி

சிங்கப்பூர் வாழ் தமிழ்க் கவிஞர்கள் 1980-ஆம் ஆண்டு முதல் 1990-ஆம் ஆண்டு வரை, தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை இக்கட்டுரை ஆராயும்.

சிங்கப்பூரில் நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் உள்ளனர். இவர்கள் செய்தித்தாள்கள் வரா, மாத இதழ்கள் ஆகியவற்றில் கவிதைகளை எழுதியும் வானொலியில் வாசித்தும் வருகின்றனர். இவர்களுள் சிலரே தம் கவிதைகளை நூல் வடிவாக்கியுள்ளனர். தம் கவிதைகளை நூல் வடிவாக்கியுள்ள பதினொரு கவிஞர்களின் (பாவலர் முல்லைவாணன், கவிஞர் பரணன், தமிழாசிரியர் மு. தங்கராசன், கவிஞர் ந. பழநிவேலு, கவிஞர் க.து.மு. இக்பால், கவிஞர் சுகுமாறன், கவிஞர் ஞானப்பிரகாசம் மொனிக்கா, கவிஞர் ராஜசேகர்) 23 நூல்கள் இங்கு ஆய்வுக்கு உட்படுகின்றன. இக்கவிஞர்கள் பலவிதக் கருப்பொருள்களைத் தம் கவிதைகளுக்குக் களமாகக் கொண்டுள்ளனர். எனவே, ஆய்வை ஓர் எல்லைக்குள் நெறிப்படுத்த மொழி, நாடு, சமூகம் என்ற முக்கூறுகளுக்குள் நின்று இக்கட்டுரை ஆராயும். கவிஞர்களின் சிந்தனைச் சிதறல்கள் மரபுக் கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றின் வழி எடுத்தியம்பப்படும்.

1970கள் வரைத் தமிழ் நாட்டுச் சமூக வாழ்க்கை, மலேசிய இணைப்பு, இந்தோனிசிய எதிர்ப்பு ஆகியவற்றைத் தம் கவிதைகளுக்குக் கருவாகக் கொண்டிருந்த கவிஞர்களின் எண்ணப் போக்கில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் இக்கட்டுரை விவரிக்கும்.

மாதையன், முனைவர் பெ. தமிழ் அகராதிகளில் பல்பொருட்சொல், ஒப்புருச்சொல் பதிவமைப்பு

இன்றைய சூழலில் அகராதியியல் வளர்ந்து வரும் ஒரு துறையாக உள்ளது. அகராதியியல் ஆய்வுகள் பலவும் தொடர்ந்து வெளிவந்த வண்ணமுள்ளன. இவ்வாய்வுகள் எதிர்கால அகராதி உருவாக்கத்திற்கு வளஞ்சேர்ப்பனவாய் அமைதல் வேண்டும். இவ்வடிப்படையில் முன் வரலாற்றில் படைக்கப்பட்ட அகராதிகளின் பதிவமைப்பு நெறிமுறைகள் குறித்து ஆராய வேண்டுவதும் அவசியமாயுள்ளது. அவ்வகையில் இவ்வாய்வு தமிழ் ஒருமொழி, இருமொழி அகராதிகளின் பல்பொருட்சொற்கள் (Polysemous words) ஒப்புருச்சொற்களின் (Homonyms) பதிவமைப்பு வளர்ச்சிப் போக்கையும் நெறிமுறைகளையும் எதிர்கால அகராதி உருவாக்க அடிப்படையில் ஆராய்கிறது.

பதிவமைப்பு முறையில் ஒரு மொழி அகராதி மரபு, இருமொழி அகராதி மரபு எனத் தமிழில் இருவகை மரபுகள் உள்ளன. ஒருமொழி அகராதிகளில் இவ்விருவகைச் சொற்களின் பதிவமைப்பில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வளர்ச்சி ஏதும் இல்லை. சான்றாக அணை என்பது இவ்வகராதிகளில் பெயர், தன்வினை, பிறவினை எனும் அடிப்படையில் அணை, அணைதல், அணைத்தல் என மூன்று பதிவுகளாய்த் தரப்பட்டுள்ளது. இம்மூன்று சொற்களின் பொருளுறவு, பொருளுறவின்மை, சொல் மூலம் பற்றிய செய்தி ஏதும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. தொடர்புடைய, தொடர் பில்லா அனைத்துப் பொருட்களும் ஒருமித்த போக்கில் ஒரே பதிவில் அகரநிரலில் தரப்பட்டுள்ளன. பொருள்களின் தொடர்போ, அவற்றின் காலவளர்ச்சியோ இங்குக் கவனிக்கப்படவில்லை. இத்தகைய பதிவமைப்புக்குள்ளேயே குறிப்பிட்ட பொருட்களுக்கான வடசொல், பிறசொல் மூலம் காட்டும் முயற்சிகளும் நடந்துள்ளன.

இருமொழி அகராதிகளில் ஐரோப்பியர் உருவாக்கிய அகராதிகள் பல்விதமான பதிவமைப்புக் கூறுகளை உள்ளடக்கி உருவான போதிலும் பல்பொருட்சொல் பதிவமைப்பில் பேரளவில் மாற்றம் எதையும் கைக்கொள்ளவில்லை. ஒப்புருச்சொற்களான அகம் என்பது போன்ற சில சொற்களுக்குப் பல பதிவுகளும் கவலை, மாலை என்பன போன்றவற்றுக்கு ஒவ்வொரு பதிவும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பதிவமைப்பு நெறி வரையறுத்த ஒரே போக்கில் அமையவில்லை. பதிவுச் சொற்களுக்குத் தலைப்பெண்ணும் தரப்படவில்லை.

தமிழறிஞர் உருவாக்கிய சென்னைப் பல்கலைக்கழக அகராதி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி போன்றவற்றில் சொல் மூலம் அடிப்படையாய்க் கொள்ளப்பட்டு ஒப்புருச் சொற்கள்

தனித்தனிப் பதிவுகளாய் உரிய தலைப்பெண்ணுடன் தரப்பட்டுள்ளன. பல்பொருட் சொல்லான அசை என்பது அசை, அசை-தல், அசை-த்தல் எனத் தனித்தனிப் பதிவுகளாய்த் தரப்பட்டாலும் அவற்றின் சொல்மூல இயைபுகள் பதிவில் காட்டப்பட்டுள்ளன. குறுக்குநோக்கீடு (Cross-Reference) தருதற்கு ஏற்ப அசை1, அசை2-தல், அசை3-த்தல் எனத் தலைப்பெண்களுடன் பதிவுகள் தரப்பபட்டுள்ளன. பல்பொருட்கள் ஒருமித்த போக்கிலன்றி வேறுபட்ட நிலைகளில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

இவ்விருமொழி அகராதி மரபு ஒருமொழி அகராதி மரபையும் ஆட்கொண்டது. தமிழ்ப் பல்கலைக்கழகப் பெருஞ்சொல்லகராதியில் அகம் என்பதற்கு 14 பதிவுகளும், அரி என்பதற்கு 59 பதிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. முந்தைய அகராதிகளைப் போல் இவ்வகராதி சொல்மூலத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை.

பல்பொருட்சொல் ஒப்புருச்சொல் பதிவமைப்பில் சொல்மூலம் (Origin), சொற்பிறப்பு (Etymology) என்பன ஒரு நிலையிலும் அகராதிக்கலைஞரின் உள்ளுணர்வு (intuition) என்பது பிறிதொரு நிலையிலும் அடிப்படைகளாய்க் கொள்ளப்பட்டுள்ளன. முதலாவது அடிப்படையில் அகராதிக் கலைஞரிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வவ் அகராதிக்கலைஞரின் மொழியாய்வுப் போக்கு வேறுபாடே இதற்குக் காரணமாய் உள்ளது. உள்ளுணர்வு அடிப்படையில் பதிவமைக்கும் அகராதிகளுக்குள்ளும் வேறுபாடு உண்டு. இதன் காரணங்களும் ஆராயப்படும்.

இத்தரவுகளின் அடிப்படையில் உள்ளுணர்வு, சொல்மூலம் எனும் இருநிலையிலும் பல்பொருட்சொல், ஒப்புருச்சொல் பதிவமைப்பில் நேர்ந்துள்ள சிக்கல்களும் ஒருமித்த போக்கில் அமையாப் பதிவுக் குறைபாடுகளும் ஆராயப்பட்டு எளிய பயன்பாட்டு அடிப்படையிலும் இடச்சிக்கன அடிப்படையிலும் எதிர்கால அகராதிகளில் இப்பதிவுகள் அமைய வேண்டிய முறைகளும், இப்பதிவமைப்புக்குத் துணையாகும் வகையிலான மொழியாய்வின் தேவைகளும் முன்வைக்கப்படவுள்ளன.

மீறான் பிள்ளை, திருமலர் எம்.எம். முசுலிம் புலவர்கள் அறிமுகப்படுத்திய புதிய இலக்கிய வகைகள்

'சைவரும் வைணவரும் பாடிய பிரபந்தங்களைப் பாடுவதோடு இசுலாமியர் நின்று விடவில்லை. அவர்கள் பலபுதிய பிரபந்தங்களையும் தமிழிற் புகுத்தித் தமிழன்னையைப் பொலிவுடன் வாழச் செய்திருக்கின்றனர்', என்பார் இலங்கை அறிஞர் சு. வித்தியானந்தன்.

'ஐந்து வகையான புதிய துறைகளையும் முசுலிம் புலவர்கள் தோற்றுவித்தனர்' என்பது அறிஞர் வ.அய். சுப்பிரமணியத்தின் கருத்து. கிஸ்ஸா, நாமா, முனாஜாத், படைப்போர் என்பனவாகும் இப்புதிய இலக்கிய வகைகள்.

அறபு இலக்கியத்தைத் தழுவி எழுந்த வகை கிஸ்ஸா. கிஸ்ஸா எனின் சொல்லுதல், எடுத்துரைத்தல் எனப்பொருள்படும். கதையடிப்படையில் புனையப்பட்ட இவ்வகை இலக்கியங்கள் செய்யுளிலும், உரைநடையிலும், இரண்டுங் கலந்தும் அமைந்தன. அலியார் கிஸ்ஸா, அபூசகுமா கிஸ்ஸா, இசுவத் நாச்சியார் கிஸ்ஸா, சைத்தூன் கிஸ்ஸா, யூசுபு நபிகிஸ்ஸா, முகம்மதனீபா கிஸ்ஸா போன்ற இருபத்திமூன்று வடிவங்கள் இவ்வகையில் காணப்படுகின்றன.

பாரசீக இலக்கியத்தைத் தழுவி அமைந்தது நாமா. நாமா எனின் கதை, வரலாறு, நூல் எனப்பொருள்படும். கதை, பொருள் அடிப்படைகளில் அமைந்த இந்நூல்கள் செய்யுளில் அமைந்தன. அலியார் நாமா, மிகுறாசு நாமா, தஜ்ஜால் நாமா போன்ற பதினேழு வடிவங்கள் இவ்வகையில் அடங்கும்.

'மசலா' எனும் அரபுச் சொல்லுக்கு வினவுதல், வேண்டுதல் என்பன பொருள்களாகும். சமயம் தொடர்பான ஐயங்களை வினா-விடை அமைப்பில் கதை கலந்தும் கலவாமலும் செய்யுளிலும் உரைநடையிலும் விளக்கியமைவன மசலா இலக்கியங்கள். ஆயிர மசலா, நூறு மசலா, வெள்ளாட்டி மசலா, மணம்புரி மசலா, அயாயெசீதுல் புஸ்தாமி மசலா ஆகியவை இவ்வகையில் அமைவனவாகும்.

அரபு மொழியில் 'முனாஜாத்' எனின் இரகசியம் பேசுதல் என்பது பொருளாகும். நேரடியாகவும், இறைநேசர் வழியாகவும் இரகசியமாக இறைவனிடம் தன் குறைகளைக் கூறி அருள் தேடுதலைப் பொருளாகக் கொண்டவை முனாஜாத் இலக்கியங்கள். செய்யுளிலமைந்த இவ்வகையில் நாற்பதிற்கும் மேற்பட்ட வடிவங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அல்லாஹ் முனாஜாத், அல் முனாஜாத், நபிநாயக முனாஜாத், மீரான் சாகிபு முனாஜாத் ஆகியன குறிப்பிடத்தக்க வடிவங்களாகும்.

முசுலிம் புலவர்கள் அறிமுகப்படுத்திய புதிய வகைகளில் தமிழில் பெயர்பெற்ற ஒரே வகை படைப்போர் ஆகும். அரபு மொழியிலுள்ள போர்ப் பாடல்களைத் தழுவியமைந்தவை இவை. படைகள் நடத்துகின்ற போரைப் பற்றியதாதலினும் கொடிய எதிரிகளால் வலிந்து படைக்கப்பட்ட போர்களைப்பற்றியாதலினும் இப்பெயர் பெற்றன.

இவை காப்பியங்களாகவும், நாட்டுப்புறக் கதைப்பாடல்களாகவும், வசன காவியங்களாகவும் அமைகின்றன. அலியார் படைப்போர் இபுறாகீம் சகீது படைப்போர், இபுலீசு படைப்போர், கஃகாத்துப் படைப்போர், சூறாவளி படைப்போர். செய்தத்து படைப்போர், மலுக்கு முலுக்கின் படைப்போர், காசீம் படைப்போர் ஆகியவை இவ்வகையில் அடங்குவனவாகும்.

முகம்மது உசேன், முனைவர் மு.அ. சீறாப்புராணத்தில் சிற்றிலக்கியக் கூறுகள்

சீறாப்புராணம் - அறிமுகம் - இஸ்லாமியத் தமிழ்க் காப்பியம்- 'சீறத்'- வரலாறு - நபிகள் நாயகத்தின் வரலாறு கூறும் காப்பியம் - ஆசிரியர் உமறுப்புலவர் - காலம் 17-ஆம் நூற்றாண்டு - காப்பிய அமைப்பு - காண்டங்களை உடையது - விலாதத்துக் காண்டம் - மாநபியின் பிறப்பு கூறும் பகுதி, அவரது இளமை பற்றியும் பேசுகிறது. நுப்புவத் காண்டம் - தீர்க்க தரிசனம் கண்டு நபிப்பட்டம் பெற்றமை கூறும் பகுதியாகும் - ஹிஜ்றத்துக் காண்டம் - மக்காவிலிருந்து மதினாவிற்கு இடம்பெயர்ந்த நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்த நிகழ்ச்சியும் கூறும் பகுதியாகும்.

காப்பிய இலக்கணம் - சீறாப் புராணத்தில் இடம்பெறும் காப்பியக் கூறுகள் - முதன்மை மற்றும் துணைப்பாத்திரங்கள் பற்றிய விளக்கம். சிற்றிலக்கியம் - சிற்றிலக்கிய இலக்கணம் - அறம், பொருள், இன்பம், வீடுபேறு உடையது பேரிலக்கியம் - இதில் ஒன்றோ பலவோ குறைவது சிற்றிலக்கியம் - சிற்றிலக்கியம் - பிரபந்தம் - சிற்றிலக்கிய வகைகள். இவ்வகைகளை விலக்கி உமறுப்புலவர் சீறாப்புராணத்தில் கையாண்டுள்ள விதம் குறித்து ஆராயப்படுகிறது. சிற்றிலக்கியம் பெரும்பாலும் சிற்றின்ப வெளிப்பாடு என்ற போதிலும் உமறுப்புலவர் அவற்றைத் தவிர்த்து எழுதும் பாங்கும் எடுத்துரைக்கப்படுகிறது.

பிறகாப்பியங்களில் சிற்றிலக்கியக் கூறுகள் - கம்ப இராமாயணத்தில் சிற்றிலக்கியக் கூறுகள் - சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள கூறுகள் - இக்காப்பியங்களோடு சீறாப்புராணம் ஒப்பிடப்பட்டுச் சிற்றிலக்கியக் கூறுகளை இக்காப்பிய ஆசிரியர்கள் கையாண்டுள்ள திறம் வெளிப்படுத்தப்படுகிறது.

சீறாப்புராணத்தில் சிற்றிலக்கியக் கூறுகள் - பிள்ளைத்தமிழ், உலா, பள்ளு, உழத்தியர் பாட்டு, பரணி முதலியவை கையாளப்பட்டுள்ளதிறம் - பிறஇலக்கிய மாண்பு வீரத்துடன் பேசும் திறம் - சீறாப்புராணத்தில் சிற்றிலக்கியக் கூறுகள் இடம்பெறும் நோக்கும் போக்கும் பற்றி விளக்குதல்.

முத்து, நெல்லை சு. அடுத்த நூற்றாண்டின் அறிவியல் தமிழ் - கருத்தும் எழுத்தும்

அறிவியல் தமிழின் பரிமாணங்களை கருத்து, எழுத்து ஆகிய இரண்டு பகுதிகளில் ஆராய்கின்றது இக்கட்டுரை. அடுத்த நூற்றாண்டின் அறிவியல் - தொழில் நுட்பம் - பயன்பாடு ஆகிய மூன்று தளங்களில் 'அறிவியல் தமிழ்'க் கருத்துக் கோவைகளை ஆய்வின் முதற்பகுதி விவரிக்கிறது.

தத்துவ மலர்ச்சியாகிய 'புதிய தத்துவமே' இன்றைய மேனாட்டு அறிவியல். தொழில் நுட்பவியலும் இதில் அடங்கும். தூய அறிவியல் (Pure Science) - பயன்பாட்டு அறிவியல் (Applied Science) அல்லது மெல்லறிவியல் (Soft Science) - வல்லறிவியல் (Hard Science) ஆகிய வகைப்பாடுகளில் 'அறிவொளி'யை விடவும் 'பயன்கனி' பற்றிய சிந்தனையே தமிழிலும் இன்று ஓங்கி வருகிறது.

தொழில் நுட்பக் கலைச் சொல்லாக்கம் பற்றிய கருத்தோட்டத்தில் மொழிபெயர்ப்பு (Translation), ஒலிபெயர்ப்பு (Transliteration), வரி பெயர்ப்பு (Transcription) கலந்த தமிழ்ப்படைப்பாக்கம் (Transcreation) பலவகை நிலைகளில் சுட்டப்படுகின்றது.

தவிரவும், பயன்பாட்டுத் தமிழ் என்கிற துணைத் தலைப்பில் அறிவியல் தமிழ்ப் படைப்பின் கட்டமைப்பு அலசி ஆராயப்படுகிறது.

தொழிற்கூடங்களில் செயல்தமிழ், கல்விக்கூடங்களில் பாடத்தமிழ், மக்கள் தொடர்பு ஊடகத்தமிழ் ஆகியன குறித்துப் பத்து நிலைகள் பேசப்படுகின்றன. அறிவியல் தமிழ் மூலவர், பரப்பும் முறை, பயன்பெறுவோர் தன்மைகள், மொழிப்படைப்பாக்க முறைகள் ஆகிய விபரங்கள் புள்ளியியல் நுட்பத்தின் படி முக்கோண வரைபடமாக எடுத்துக்காட்டப்படுகின்றது. அந்த அறிவியல் தமிழ்ப் படைப்பாக்க முக்கோணத்திலிருந்து பெறப்படும் உண்மைகளும் அடுத்த நூற்றாண்டை நோக்கிய அறிவியல் தமிழ்ப் பயணமும் கோடுகாட்டப்படுகின்றது.

அறிவியல் தமிழ்-அச்சு, ஒலி, ஒளி, செயல் ஊடகங்களின் ஊடே கட்டுரை, கவிதை, கதை, புதினம், இசைப்பாடல் வடிவங்களில் - பயிற்றுமொழி - (Instruction Language), பரப்பு மொழி (Information Lanugage) யாகக் கையாளப்படும் நுட்பங்களுடன் ஆய்வின் முதற்பகுதி நிறைவுபெறுகிறது.

இரண்டாம் பகுதி அறிவியல் தமிழினை அறிவியலுக்கு உகந்த தமிழாக - அடுத்த நூற்றாண்டின் கணினித்தமிழாக மாற்றுதற்குரிய

உத்திகள் ஆராயப்படுகின்றன. கணினிக்கேற்பத் தமிழில் தேவைப்படும் ஒலியன்கள் (Phonemes), குறியீடுகள் (Signs) குறித்த புதிய சிந்தனைகள் முன்மொழியப்படுகின்றன.

தமிழின் ஒலி, எழுத்துச்சீர்மை - அறிவியல் தமிழினை வெறும் அச்சுத்தமிழாகவோ, பேச்சுத்தமிழாகவோ, அன்றி, கணிப்பொறி உடனான உரையாடலுக்கு உகந்த எந்திரத் தமிழாக மாற்றவும் உதவும். மேலும் கணிப்பொறி ஆற்றலை விரயமாக்காமல் அதன் நினைவுக் கிடங்கில் சேமித்து வைக்கப்படும் குறைந்த அளவு ஆணைத்தொகுப்பினால் கணினி என்கிற கருவியினை தொழிற் நுட்பத்தில் பல்வேறு துறைகளிலும் எளிதில் கையாளும் வியூகம் பரிந்துரைக்கப்படுகிறது.

தமிழ் வழியே அறிவியலும் தொழில் நுட்பமும், பயன்பாடும் பெருகிட வாய்ப்புள்ளது என்கிற உண்மை இந்த ஆய்வின் முடிவாகும்.

அறிவியல் தமிழால் - தமிழினத்தோடு மட்டுமின்றி இந்திய நாட்டின் ஏனைய மொழியினரோடும், உலகின் அனைத்து நாட்டினரோடும் இருவழித் தொழில்நுட்ப நல்லுறவுகளை வகுத்துக் கொள்ள முடியும். இங்ஙனம் அடுத்த நூற்றாண்டில் அறிவியல் தமிழ்ப் பண்பாடு உலகளவில் நிலைபெறும் என்பது திண்ணம்.

NELLAI SU. MUTHU SCIENTIFIC TAMIL OF NEXT CENTURY - CONTENT AND SCRIPT

The paper deals with the various dimensions of Scientific Tamil mainly on its content and script in two separate sections. Section - analyses the scientific content in three distinct levels - Science, Technology and Application.

In western countries today's science evolved only trhough Ethical Renaissance in philosophy and the 'New Science' which later turned out as Industrial Technology. Among either Pure Science and Applied Science: or Soft Science and Hard Science, as per statistical survey, it was demonstrated that people need only 'Fruits' of science rather than its 'Light'.

When this modern science and technology calls for popularisation in our mother tongue, there is a liguistic warrant to coin equivalent technical terms and standardise them. In this effort without much time, Transcreation has to play a high and unique role in Scien-

tific Tamil wherein a ternary system comprising of Translation, Transliteration and Transcription of the scientific and technical words becomes critical.

Moreover, Applied Scientific Tamil and its infra-structure are discussed in detail in this section -

Right from Working Tamil in Industries through Academic Tamil taught in Educational Institutions to the Popular Media Tamil for common man, different stages are explicitly reported. Scientific Tamil sources, transmitting means and media, the receivers (readers/consumers) aimed at and the transcreation methods are depicted in a ternary diagram. The results and conclusions derived from this Transcreation Ternary Diagram lucidly points out the direction towards the Twenty First Century scientific Tamil voyage.

The section-winds up with a note on Tamil as an Instruction Language and Information Language for propagating science and technology in various forms such as essays, poetry, short stories, fictions and lyrics, through print, audio, video and multi-media.

Section-2 of this paper attempts to convert Scientific Tamil into Tamil for Scientific applications, largely for interacting with computers. In this venture, necessary phonemes and signs to be adapted so as to make it compatible to computer phonemically and scriptually. Hence arises an urge to reduce the number of signs and alphabets of Tamil and reuse some of the alphabets which are almost obselete.

Tamil being already phonemically rich with is natural consonants and phonemes, the reformed and abridged character set of only 34 (including signs and phonemes) as proposed in this paper, can function as Computer Tamil. The manners of articulation of Vallinam, Mellinam and Idayinam and other allophones are catagorised phonologically in this paper.

An element of Physics and Electronics into the Voice synthesiser and Optical Character Recogniser make it simpler for computers to speak and read Tamil. By the way of extending the present system of available signs and alphabets, marginal reduction in the number of character is achieved, simultaneously gaining almost all the phonemes available in English as well as in Sanskrit. No other language has this capability to be easily plasticised like this for machine inter-

action. As the RAM (Random Access Memory) of the computer software system is not overloded with the Reformed Computer Tamil, excess byte capacity can be utilised for other operational purposes.

It is concluded that Tamil can flourish through all the three levels of Scientific Tamil, namely Science, Technology and Application.

With the suggested reformations in our Tamil embibing standardisation, popularisation and modernisation of Scientific Tamil in its content and script will fetch us not only intra-national but also international bilateral accomplishments all through the 21st century.

முத்துப்பிள்ளை, கோ. ஆட்சிமொழிச் சொல்லாக்கம்

தமிழ்நாட்டு ஆட்சிமொழித் திட்டம் தனிப்பெரும் வெற்றிபெறவேண்டுமென்பதில் அனைத்து அறிஞர் பெருமக்களும் ஆர்வங்காட்டி வருகின்றனர். ஆட்சிமொழி என்றால் என்னவென்பதும், அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதென்பதும், முதற்கண் எழுகின்ற முக்கிய வினாக்களாகும். அரசு அலுவல்கள், எந்த மொழியில் நடைபெறுகின்றனவோ அந்த மொழிதான் ஆட்சிமொழி என்பதில் ஐயமில்லை. பண்டைக் காலத்தில் தமிழே ஆட்சிமொழியாக அரசோச்சி வந்ததென்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன. இடைக் காலங்களில் சிறுசிறு தொய்வுகள் ஏற்பட்டபோதிலும், ஆங்கிலேயர்கள் அடியெடுத்து வைத்ததற்கு முந்திய நீண்ட காலத்தில், தமிழன்னையே அரியணையில் அழகுற அமர்ந்திருந்தாள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியைத் தழைக்கச் செய்வதில் ஊக்கங்காட்டியதில் வியப்பில்லை. ஆங்கிலம் அரியணையேறி ஏறக்குறை இருநூற்றைம்பது ஆண்டுகள் இந் நாட்டில் இடம்பிடித்துக் கொண்டுவிட்டது. நாடு விடுதலை பெற்ற பின்னர், தமிழன்னையை மீண்டும் அரசுகட்டிலில் அமர்த்த நல்லறிஞர் பெருமக்கள் நாட்டடங்கொண்டனர். 'தமிழ் மாநிலத்தில் ஆட்சிமொழி தமிழாக இருக்கும்' என்று 1956-ஆம் ஆண்டில் தமிழகச் சட்டப் பேரவையில் சட்டம் கொண்டுவரப்பெற்று, பெரு மகிழ்வுடன் நிறைவேற்றப்பெற்றது. அதன் பின்னர் நாம் எந்த அளவிற்குச் செயற்பட்டுள்ளோம், எந்த அளவிற்கு வெற்றி பெற்றுள்ளோம், இனி நாம் செய்யக்கடவது என்ன என்பவையே இக்கட்டுரையில் ஆராயப்பெற்றுள்ளன.

முத்தையா, முனைவர் சொ. தமிழும் டாகூரும்

ரபீந்திரநாத்டாகூர் ஓர் உலகமேதை. பல துறை ஆற்றல் நிறைந்தவர். கவிஞர், பலமொழி அறிஞர். சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், வரலாற்றுக் கட்டுரைகள், ஆய்வுத்திறன் கட்டுரைகள், தத்துவநூற் கட்டுரைகள், கவிதைகள் முதலிய பலதுறைப் படைப்புகளிலும் வல்லுநர். இசையால் வங்காள மக்களை உயர்த்தியவர். ஓவியம் வரைவதிலும் ஒப்பற்றவர். குறிப்பாகவும், சிறப்பாகவும் வங்காள இலக்கியங்களில் முதலிடம் பெறுபவர். அவர் தொடாத பகுதிகளே இல்லை என்லாம். அந்த அளவுக்கு அவர் ஒரு தலைசிறந்த படைப்பாளராக விளங்குகிறார்.

நோபல் பரிசு ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து 1912 வரை வெள்ளையர் அல்லாதாருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதே இல்லை. முதலாவதாக அந்தப் பரிசைப் பெறும் பேறு மகாகவி ரபீந்திரநாத் டாகூருக்கே கிடைத்தது. நோபல் பரிசு வந்து, இல்க்கிய உலகில் இந்தியாவின் புகழை உயர்த்தியவர்.

உலகம் முழுவதும் இன்று அவரை கமாகவிகளுள் தலைசிறந்தவராக மதிக்கிறது. அவருடைய படைப்புகள் காலம், நாடு, மொழி இவற்றைக் கடந்து நிற்கின்றன.

காலம் கவிஞர்களைத் தோற்றுவிக்கிறது. பல இனங்களில், மொழிகளில் கவிஞர்கள் தோன்றுகின்றனர். எங்கு தோன்றினும் சிந்தனையால் ஏதாவது ஒரு விதத்தில் ஒன்று பட்டவர்களாகவே விளங்குவார்கள். பல இனங்களில் மொழிகளில் தோன்றிய கவிஞர்களுக்கிடையே சிந்தனை ஒருமைத் தன்மை கொண்டு மிளிர்வதை அவர்தம் படைப்புகள் புலப்படுத்துகின்றன. எந்த நாட்டு இலக்கியத்தை எடுத்துப் படித்துப் பார்த்தாலும், கவிஞர்களின் சிந்தனையில் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். பொதுவாக எடுத்துப் பார்ப்போமேயானால், இயற்கையைப் போற்றாத, காதலைப் பாராட்டாத, தாய்மொழியைப் புகழாத, தான் வாழ்கின்ற சமுதாயத்தை, உலகத்தை நோக்காத கவிஞர் இல்லை எனலாம். உலகில் தோன்றிய கவிஞர்களுக்கு இடையே இக்கருப் பொருட்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆயின் கவிதையைப் புனையும் முறையில் வேறுபடுகின்றனர். எடுத்துச் சொல்லும் கவிதை நடையில் மக்கட்கு எளிதில் புரியும் வண்ணம் அந்தந்த இன மொழிக் கவிஞர்கள் கவிதைகளையும், பிற படைப்புகளையும் படைக்கின்றனர். டாகூர் படைப்புகளை ஆய்வு எண்ணத்தோடு நோக்கும் பொழுது தமிழில் சங்க இலக்கியச் சான்றோர் சிலர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமலிங்க அடிகள், தாயுமானவர், அதிவீரராம பாண்டியர்,

சுப்பிரமணிய பாரதி ஆகிய சான்றோர்கள் நம் கண் முன் காட்சி அளிக்கின்றனர். அச்சான்றோர் தம் கருத்துகள் டாகூரின் படைப்புகளில் எதிரொலிக்கின்றன. இருவகைப்பட்ட மொழிகளில் காணப்படும் கருத்தொற்றுமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கம்.

DR. C. MUTHIAH TAMIL AND TAGORE

Rabindranath Tagore was a world renowned navant, highly gifted with a natural flair for several fields. He was a poet and master of many languages. His extraordinary creativity was manifested in diverse areas-writing short stories, novels, plays, historical and research articles, philosophical essays and poems. He proved himself a thorough master of all these. By his musical innovations, he elevated the Bengali People. He was also an incomparable painter. Most notably, his name is known as a leading luminary of Bengali as well as English Literature. One can boldly assert that there is nothing he has not touched. There is none to compare with him in his stupendous creativity in so many areas of human endevour.

From its inception till 1912, the Nobel Prize has never been awarded to a non-white. The great pride of winning this prize fell to the lot of Rabindranath Tagore. By securing the Nobel Prize for Literature 1913, he placed Indian Literature on a sublime level. There is hardly any country which has not invited or honoured him.

Though a noble son of Bengal, the whole of India - why, the entire world respects him as a great savant and poet. His productions stand today, transcending time, nation and language.

Time creats poets - amongst many races in many languages. Whereover they rise, great poets, by the pwer of some thought unite in some way, they stand together. This unity of thought among great savants and poets which transcends time and lanugage, is found reflected in Tagore's poems. We can perceive this unity of thought in the great poets of any nation of race. Can we come across any poet who fails to lavish praise on the beauty of nature? Is there any poet who has not sung the praise of love? Is there any poer who has not extolled his own language? The society the world where he originates and lives, is there my poet who did not have a perspective

on it? These characteristics, themes are to be readily found in all the great poets of the world. Nevertheless, they differ in their mode of creativity and the styles of their expressions. The poets create, apart their poetry, other forms of literature in such a way that their respective peoples can comprehend it easily. When we view Tagore's creations with a researcher's eye,. we can see beofre our eyes, the savants of Tamil Cankam Literature, Alwars, Nayanmars, Ramalinga Adikal, Tayumanavar, Adiveerarama Pandiar and Subramania Bharathi. The thoughts of these ancient and modern Tamil savants finds echoes in Tagore's creations. The purpose of this research paper is to bring to light the unity of thought between Tamil and Bengali.

முப்பால்மணி, முனைவர் கி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்து உலகாயதம்

மத்தியகால உலகாயதத்திற்கும், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இயக்கவியல், வரலாற்றியல் பொருள் முதல்வாதங்கள் பொலிந்த உலகாயதத்திற்கும் இடைப்பட்ட நிலையிலிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டு உலகாயதத்தினை எடுத்துக்கூற இக்கட்டுரை முயல்கிறது. அதே நேரத்தில் புதியதாகக் கண்டெடுக்கப்பட்ட ஆதாரத்தினை முன்வைக்கிறது.

1750-1800 காலப்பகுதி சார்ந்த கிறித்தவ உரைகளும் 1854-இல் மதுரை அமெரிக்கத் திருச்சபையினர் விவரித்த இயற்கைத்தத்துவமும், ஜே.என்.மில், காம்டி, ஹெர்பர்ட் ஸ்பென்சர் விளக்கி வந்த நேர்க்காட்சிவாதமும், அதன் நாத்திகப்பக்கமும், டார்வின், லெக்கி, பேக்கன் வழியிலான பரிணாமக்கோட்பாடும், பொருள் முதல்வாதமும், இதன் நாத்திக விசாரணைகளும், கல்விமூலம் அப்போதைய அறிவியல் கருத்துக்களும் 1870 காலத்திய படித்தவர்களை உருவாக்கியிருந்தன; இதன்மூலம் உலகாயதிகள், பிரம்மசமாஜிகள், சித்தாந்திகள், வேதாந்திகள் எதிர்ப்பும் ஊக்கமும் பெற்றனர்.

• இதனால் உலகாயதிகள் சென்னையில் ஒரு சபையை நிறுவினர். 1878-1881-களில் 'தத்துவவிசாரணி' இதழை நடத்தினர். 4.12.1881 இதழில் அப்போதைய உப்பு வரியை எதிர்த்தனர். 1882- களில் 'தத்துவவிவேசினி' இதழை நடத்தினர். 1882-இல் டி. முனுசாமியும், 1885-இல் சோமையாவும் ஆசிரியர்கள். பின்னவர் 'திங்க்கர்' ஆங்கில இதழையும் நடத்தினார்.

1841-இல் இந்தியச்சார்வாகத்தைக் கிறித்தவர் சந்தேகவாதம்

எனக்கருதி ஐரோப்பிய நேர்க்காட்சி வாதத்தோடு ஒப்பக் கருதினர். என்றாலும் இங்கிருந்த உலகாயதிகள் மரபான சுபாவாதத்துடன் இயற்கையின் சுயசெயலை எடுத்துரைத்தனர். இது 1879-இல் பிரம்மசமாஜிகளால் மறுக்கப்பட்டது. 1880களில் இயக்கவியல், இயற்கையின் தன்செயல் வாதமான பரிணாமம், உலகை அடிப்படையாகக் கொண்ட அறிவு நிலைகளை எடுத்துக் பேசினர். இதைச் சித்தாந்த சைவர் மறுத்தனர். அதற்குப்பின் 1886-இல் சங்கரஅகவயஅத்வைதிகள் மறுத்தனர், அப்போதைய பிரம்மவித்யா இதழில் நமச்சிவாயசெட்டி, இந்து என்ற பெயரில் உலகு அசத்து என உறுதிபட எழுதினார். இதை எதிர்த்துத் தத்துவவிவேசினி 26-9-1886 இதழில் ஹிதோபதேசி என்ற பெயரில் சோமையா உலகம் அசத்தா? சத்தா? என வினவிச் சத்து என நிறுவினார்.

'உலகம் அசத்தா? சத்தா?' என்ற கட்டுரை உலகாயத வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிடைக்கப்பெறும் இணைப்புக் கண்ணியாகும். அப்போது வாழ்ந்த உலகாயதி ஒருவரால் எழுதப்பட்டது என்ற முறையில் தமிழகத் தத்துவத்துறையில் விதந்து எடுத்துக்காட்டுதற்குரிய அரிய ஆதாரம் ஆகும்.

உலகம், வஸ்து என்பது என்றும் எங்கும் உள்ள உண்மை. இதன் அடிப்படையாக நான்கு பூதம் என்பதற்கு மேலும் நுட்பமாகத் தனிப்பட்ட சுபாவமுடைய பலபொருள்கள் உள்ளன. அனு தரும சம்பந்த ஆற்றல் என்று குறிக்கப்பட்டது.

பொருள் தனக்கென ஒரு வடிவம் கொள்ளாமல் பலவடிவங்கள் உடையது. ஆற்றல், இயக்கம், கவர்ச்சி, திரிபுகளைத் தன்னோடு பிரிவின்றிக் கொண்டுள்ளது. அதேபோன்று பொருளும் பண்பும் பிரியாதவை.

பல பொருள்களின் சேர்க்கை- பிரிவுகளினால் பொருள்கள் பன்மையாக உள்ளன. தனிப்பட்ட பொருள்களே நிலை, பொருள் என்ற பொதுமைநிலை கற்பிதமே, அதாவது சிந்தனையில் தோன்றுவது.

பொருள் தனது இயக்கத்தில் உருத்திரிகிறது, புதிய பொருளாய் ஆவதில்லை. பொருளைக் காரியம் என நோக்கும் போது காரணம் இன்மையாய்க்காணப்படும்: காரணம் என நோக்கும்போது காரியம் இன்மையாய்க் காணப்படும், அதேசமயத்தில் உலகத்துத் தர்க்க வாதிகள் சொரூபத்தை-வடிவம்-நோக்கியே காரணம் காரியம் பற்றிக் கூறினர். உலகாயதம் பொருளை நியதமாகக்கொண்டு கூறியது. அதே சமயத்தில் காரணம், காரியம் சங்கிலித் தொடர்பு போன்று முடிவின்றி நிற்கும்.

முறையியலில், ஒரு பொருளை நிறுவும்போது அப்பொருளுக்கு இலக்கணம் கூறி, அதன் வழியில் விளக்கம் கூறி, நியாயங்கள் மேற்கொண்டு நிறுவியது. புறத்தில் தொடங்கி அகத்திற்குச் சென்று புறத்தில் முடித்துப் பேசியது.

பொருள் முதல்நோக்கு, பரிணாமக்கோட்பாடு, இவைதழுவிய அறிவுவாதம் பொலிய விளங்கியது.

முருகன், திருமதி புஷ்பம்மாள் 1920 முதல் 1975 வரை முனிசீப் வீடமைப்பில் வாழ்ந்த தமிழர் - தென்னாப்பிரிக்கா

டர்பன் நகரில் முனிசீப்பில் பணியாற்றியவர்களுக்குப் பல இடங்களில் இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. போர்க்காலத்தில் வெடி மருந்து (Magazine) வைத்திருந்த பேரக்ஸ், போர் முடிந்ததும் முனிசிப் வேலை ஆட்களுக்கு இருப்பிடங்களாகத் தரப்பட்டன. இரண்டு வாடைகளாகத் தொடங்கி 1950 ஆண்டுக்குள் புதிய கட்டடங்கள் எழுப்பி 6000 மக்கள் தங்குவதற்கு வீடமைப்பாக விரிவானது. அங்கே பல ஆண்டுகாலமாக நான்கு தலைமுறையினர் தொடர்ந்து வாழ்க்கை நடத்திவந்தனர்.

ஒரு குடும்பத்திற்கு ஒரே குழந்தையானாலும் 9 பிள்ளைகளானாலும் ஒரே அறைதான் (10x10) அளிக்கப்பட்டது. அதனுடன் ஒரு சிறிய சமையல் அறையும் உண்டு. அந்த ஒரு அறை வரவேற்பறையாகவும் உணவு அறையாகவும், படுக்கை அறையாகவும் பயன்பட்டதுடன் அல்லாமல் தமிழ் வகுப்பறையாகவும் பயன்பட்டது.

டிராமா (கொட்டாய்) ஹால் திருமணம் விழா முதலிய நிகழ்ச்சிகளுக்குப் பயன்பட்டது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, முஸ்லிம் மொழி இனத்தவர் தத்தம் மொழி, சமயம், பண்பாட்டை அமைதியாக வளர்த்துப் பாதுகாத்து வந்தனர்.

மாதச் சம்பளத்துடன் உணவு ரேஷனும் விறகு , மண்ணெண்ணெயும் கொடுக்கப்பட்டன.

ஜனவரி மாதத்திலிருந்து ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல், காவடி, கெங்கை அம்மன் திருவிழா, குருபூசைகள், மாரிஅம்மன் திருவிழா, புரட்டாசி விரதம், சரஸ்வதி பூசை, தீப ஒளி விழா, கார்த்திகை தீபம், கிருஸ்தமஸ் பண்டிகை முதலிய விழாக்கள் திசம்பர் வரை கொண்டாடப்பட்டன.

முதற்பரம்பரை இயல் இசை நாடகத்தமிழுக்கு அமைத்த அடித்தளத்தின் அடிப்படையில் முத்தமிழ் நான்கு தலை முறையாக உயர்ந்து சிறந்தோங்கி விளங்கியது.

பல நாடகக்குழுக்கள், இசைக்குழுக்கள், தமிழ்ப் பள்ளிக் கூடங்கள், அதனுடன் தெருக்கூத்துகள் ஆகியவற்றை ஆண்டு தோறும் நடத்தி இச்சமுதாயம் தமிழ்க் கலையையும் தமிழ்ப்க கல்வியையும் வளர்த்து வந்தது.

எலும்புருக்கி நோயாளிகள் அவர்கள் குடும்பங்களின் நலன்களைக் காப்பாற்றுதற்கு F.O.S.H. (Friends of the Sick Association), விதவைகளையும் தந்தையில்லாக் குழந்தைகளையும் காப்பாற்றுதற்குக் குழந்தை நலங்காப்பாற்றும் கழகம் (Child Welfare Society), பணியாட்களின் நன்மைக்கா D.I.M.E.S. (Durban Indian Municipal Employees Society), Dimes விளையாட்டுக் குழுக்கள், தாய்மொழியை வளர்த்துப் பரவச்செய்யும் (School Board) சமயத்தைக் காக்கக் கோயில் வழிபாடு, சீர்திருத்த வழிபாட்டுக் கழகங்கள், இளைஞர் கூட்டங்கள், செஞ்சிலுவை, செய்ண்ட் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் (St. John's Ambulance) முதலிய கழகங்கள் சமூகச் சேவை செய்து வந்தன.

கணவர் கொண்டு வந்த சம்பளம் கைக்கு வாய்க்கு மட்டுமே எட்டும் அளவில் இருந்தது. அதனால் மனைவியும் மக்களும் ஒத்துழைத்து முன்னேறினர். சிறு வியாபாரம் செய்தும் பல இடங்களில் வேலை செய்தும், பல தொழில்கள் செய்தும் பணத்தைச் சேர்த்து வெள்ளையன் திகைக்கும்படி சொந்த நிலங்கள் வாங்கிச் சொந்த ஊர்திகள் வாங்கி வாழ்க்கையில் முன்னேறினார்கள்.

இவ்வாறு ரயில்வெய், ஸ்டைபில், பொய்ண்ட், டிரேம் போக்ஸ் வாசிகள் தமிழ்க் கல்வி, இசை, நாடகம், சமயம் முதலிய துறைகளில் இணைந்து தமிழ் மக்களை மேலோங்கச் செய்தனர். இப்பரம்பரையில் தோன்றிய நான்காம் ஐந்தாம் தலைமுறையினர் பெரும்பாலோர் இன்று ஷேட்ஸ்வோத்தில் கட்டிய வீடமைப்பில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் பலர் தம் முன்னோர் போல முனிசீப்பில் பணிபுரிந்து வருகின்றனர். ஆனால் அவர்கள் முன்னோர்கள் நூறாண்டுக்கு முன் பட்ட துன்பங்களை இவர்கள் அனுபவிக்கவில்லை. ஆயினும் அம் முன்னோர் செய்த சமூகச் சேவைகளை இவர்கள் செய்து வருகின்றனர். எல்லாத் துறையிலும் இவர்களுடைய உழைப்பைக் காணலாம்.

காடு வெட்டி நாடாக்கி மலையை வெட்டித் தெருவாக்கி உழைத்தும் அவர்கள் இலட்சியத்தை மறவாது காத்த இத்தமிழருக்குத் தென்னாப்பிரிக்க வரலாற்றில் சிறந்ததோர் இடமுண்டு.

முருகானந்தம், முனைவர் ச. பாலியலும் இறையியலும் - பண்பாட்டு மானிடவியல்

இறைபற்றிய உணர்வு, அதனை அடைய, அதனோடு கலக்க முயலும் முயற்சி, இறையுடன் தொடர்புடைய திருக்கோயில் அமைப்பு, சிலை, சிற்பங்கள், வழிபாட்டு முறைகள், விழாச்சடங்குகள், இன்ன பிறவற்றோடு பாலியல் சிந்தனைகள் கலந்துள்ளன. மேற்குறிக்கப்பட்டனவற்றின் அடியூற்றாகப் பாலியல் சிந்தனை விளங்குகிறது எனின் அது மிகையாகாது. தெய்வநிலைக்குச் செல்லும் வழிமுறையாகவும் அது கருதப்படுகிறது. இவை பற்றிய விளக்கமே இக்கட்டுரையாகும்.

1. நாற்பொருளில் மூன்றாவதாகிய இன்பம் அல்லது காமம் பாலியல் தொடர்புடையது. இதனை அடுத்தே வீடு பேறு அமைகிறது. காமத்தைத் துய்த்த பின்னரே துறவுநிலை எய்தலும் வீடுபேறடைதலும் இயலும்.

2. வாழ்வின் நான்கு நிலைகளில் புலனுணர்வு அனுபவத்திற்குக் களமாகிய கிருகஸ்தத்திற்குப் பிறகே வனப்பிரஸ்தமும் சந்நியாசமும் மேற்கொள்ளப்பட்டன.

3. இன்பநுகர்ச்சிக்குப் பிந்தைய துறவே சரியானதும் முறையானதும் ஆகும்.

4. கலவியின்பம் யோகநிலைக்கு வழிகாட்டுகிறது. இக்கலவியின் உச்சமே யோகநிலையின் முதல்படியாகும். கலவியும் யோகமும் இவ்வம்சத்தில் இணைகின்றன. முன்னதன் முடிவு பின்னதன் தொடக்கமாகும்.

5. இதனாலேயே வீடுபேற்றை வற்புறுத்தும் துறவியர் இருப்பிடங்களில் பாலுறவுச் சிற்பங்கள் நிறைந்துள்ளன.

6. கர்ப்பம், அமணம், நிர்வாணம் ஆகிய சொல்லாய்வுகள் பாலியலுக்கும் இறையியலுக்கும் மெய்யியலுக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகின்றன.

7. இலிங்க வழிபாடு, கிருஷ்ணலீலை, அர்த்தநாரீஸ்வரவடிவம் ஆகியன பாலியல் சார்ந்தன.

8. ஜீவாத்மா-பரமாத்மா எனும் ஆன்மப் பாகுபாடும் நாயகி-நாயகன் பாவமும் இவற்றின் தாக்கம் உடைய நாட்டியக்கலையும் பாலியல் தொடர்புடையன.

9. தேவரடியார் எனும் சமூக அமைப்பும் இத்தொடர்புடையதே ஆகும்.

10. கோயில் அமைப்பு, அங்கு உள்ள சிற்பங்கள், கோபுரச் சுதைகள், தேரில் காணும் மரச்சிற்பங்கள் ஆகியன பாலியலைக் கொண்டுள்ளன.

11 முளைப்பாரி, அவ்வையார் நோன்பு, அம்மன்கோயில் படையல், மயானக்கொள்ளை, கும்பவழிபாடு, தேவராட்டம் ஆகிய சமயஞ்சார்ந்த வழிபாட்டுச் சடங்குகளிலும் பாலியல் ஆதிக்கம் செலுத்துகிறது.

12. பாலியலுக்கும் இறையியலுக்கும் இடையே ஆழ்ந்த தொடர்பு இருக்கிறது. ஒன்றன் அனுபவம் பிறிதொன்றன் அனுபவமாகிறது.

இவற்றால் இறையியல் சிந்தனைகளில், செயல்பாடுகளில் பாலியல் செலுத்தும் ஆதிக்கம் தெளிவாக அறியப்படுகிறது.

முருகேசன், முனைவர் கு. பொய்க்கால் குதிரையாட்டம்

பொய்க்கால் குதிரையாட்டம் - பெயர்க் காரணம் - விலங்குகள் நடனம் - பொய்க்கால் குதிரையாட்டப் பின்னணி - பொய்க்கால் குதிரையாட்ட வரலாறு - பிற மாநிலங்களில்-அயல்நாடுகளில் பொய்க்கால் குதிரை - தமிழ்நாட்டுப் பொய்க்கால் குதிரையின் தனிச் சிறப்பு.

பொய்க்கால் குதிரையாட்டத்திற்கான கலைப் பொருட்கள். பொய்க் குதிரை, கால்கட்டை தயாரித்தல் - அரசன், அரசி உடையலங்காரம் - ஒப்பனை - குதிரைக் கூடு - கால் கட்டைகள்- உடைகள் அணிந்து கொள்ளும் முறைகள்.

பொய்க்கால் குதிரையாட்ட அடவுகள் - ஒன்றரையடியள- வுள்ள கட்டைகளில் நின்று ஆடுவதால் ஆட்ட அடவுகளுக்கான குறைவான வாய்ப்பு - ஏறத்தாழ 50 கிலோ எடையைத் (பொய்க் குதிரைக் கூடு + கால் கட்டை + சலங்கை எடை) தாங்கி ஆடுவதில் உள்ள சிரமம் - இவற்றையும் கடந்து குதிரைச் சவாரியைக் கண்முன் கொணரும் குதிரை நிற்றல் - நடத்தல் - ஓடுதல் - படுத்தல் - எழுதல் - பக்கவாட்டில் சாய்தல் - எம்பிக் குதித்தல் - பாய்ந்தோடல் - குனிதல் - நிமிர்தல் - முன்னும் பின்னும் அசைதல் என்னும் அடிப்படை அசைவுகளை உள்ளடக்கிய பலவகையான ஆட்ட அடவுகளை விவரித்தல் - கலைஞரின் உடல் அசைவு மட்டுமன்றிப் பொய்க் குதிரைக் கூட்டின் அசைவையும் உள்ளடக்கியதாகப் பொய்க்கால் குதிரையாட்ட அடவுகள் அமைந்துள்ள சிறப்புத் தன்மை - அரசன், அரசியரின் குதிரைச் சவாரியைக் கண்முன் படைப்பதற்காகப் பொய்க்கால் குதிரையாட்டத்தில் இடம் பெறும் அடவுகள்.

பொய்க்கால் குதிரையாட்டத்திற்கான பக்க இசை - தோற்ற கால இசை - தற்போதைய இசை - பொய்க்கால் குதிரையாட்டத்திற்காக தாள நடை வகைகள் - குதிரையாட்டத்திற்காக இசைக்கப்படும் பாடல்கள் - அவற்றின் சிறப்புத் தன்மைகள்.

பொய்க்கால் குதிரையாட்ட அடவுகளும் பக்க இசையும் ஒருங்கிணைதல் - பொய்க்கால் குதிரையாட்டத்திற்கான பக்க இசையில் இடம்பெறும் தாள நடை வகைகளும் - அவற்றுக்கேற்ப அமையும் ஆட்டக் கலைஞர் மற்றும் பொய்க் குதிரைக் கூட்டின் அசைவுகளும் இணைந்து போகும் நிலை - ஆட்ட அடவுகளையும் மற்றும் பக்க இசையில் இடம்பெறும் தாளக் கூறுகளையும் தனித்தனியாக மிகச் சிறு கூறுகளாகப் பிரித்தல் - இவ்விரு வகைக் கூறுகளின் தனித்தனியான பல்வேறு வகைப்பட்ட சேர்க்கைத் தொகுதிகள் - ஒன்றோடு ஒன்று இணைந்து இயைந்து போகும் நிலை - ஆட்டக் கலைஞரின் உடலசைவிற்கு எடுத்துக் கொள்ளும் தாள நேரமும் பொய்க் குதிரைக் கூட்டின் அசைவிற்கு எடுத்துக் கொள்ளும் தாள நேரமும் குறைந்தும் மிகுந்தும் இருப்பினும் இயைந்து கலைப் படைப்பாகத் தோன்றுதல்.

பொய்க்கால் குதிரையாட்டக் கலையும் பார்வையாளர்களும்- பொய்க்கால் குதிரையாட்டத்தின் கலை நிலை - அழகியல் - குறியியல் அடிப்படையில் பொய்க்கால் குதிரையாட்டம் - பார்வையாளர்களின் மனநிலை - எதிர்பார்ப்பு - நிறைவு - நிறைவின்மை - பொய்க்கால் குதிரையாட்ட அடவுகள், இசை, குதிரையின் தோற்றம் - கலைஞர்களின் உடை, ஒப்பனை இவற்றின் கூட்டுக் கலவையாகப் பொய்க்கால் குதிரையாட்டக் கலை விளங்குதல் - பொய்க்கால் குதிரையாட்டத்தின் தற்போதைய நிலை.

முஸ்தபா, மணவை அறிவியலில் தமிழ் ஒலி பெயர்ப்பு உத்திகள்

அறிவியல் தமிழ் வளர்ச்சியில் ஒலிபெயர்ப்பின் பங்கு - பிற மொழித் தாக்கத்தால் உருவான ஒலிபெயர்ப்புக்கான தொல்காப்பிய இலக்கணமும் இன்றைய அறிவியல் சூழலும் - அறிவியலுக்குத் தனி ஒலிப்பிலக்கணம் ஏன் தேவை - உலக மொழிகளின் ஒலிப்பிலக்கண முறைகள் - மொழிக்கு மொழி காணப்படும் ஒலிப்பு வேறுபாடுகளும் ஒற்றுமையும் - பிற மொழி எழுத்துக்களும் தமிழும்- தமிழ் மொழியும் ஒலிக் குறைபாடும் ஒலிக் குறை நீக்க எழுத்துச் சேர்ப்பு அவசியமா? - தமிழ் ஒலிப்பில் சிக்கலேற்படுத்தும் ஆங்கில எழுத்துக்கள் - வர்க்க எழுத்துக்களும் தமிழும் - தமிழ் ஒலிக் குறையும் கிரந்த எழுத்துக்களும் - தமிழ் எழுத் தொலியின் தனிச் சிறப்பு - அறிவியல் ஒலி பெயர்ப்பும்

தனித்துவ தமிழ் எழுத் தொலிகளும் - ஆங்கில எழுத்துப் பெயர்ப்பில் எழும் சிக்கல்கள் - அறிவியல் மொழிபெயர்ப்பின் போது ஒலி பெயர்க்கும் தனி உத்திகள்- ஒலி பெயர்ப்பில் வழுவும் மரபிலக்கணம் - வர்க்க எழுத்தொலி பெறக்கையாளக் கூடிய குறியீடுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரையாக அமையும்.

மெய்கண்டான், முனைவர் ஒளவை. மக்களின் மரபுவழி மருத்துவக் கருத்துக்கள்

முகவை மாவட்டத்தைச் சேர்ந்த இராமநாதபுரம் பகுதியைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களின் மருத்துவ மந்திரக் கோட்பாடுகளைப் பற்றிய ஆராய்ச்சிப்பணியின் சுருக்கமே இக்கட்டுரை.

இப்பகுதிக் கிராமமக்கள் பிறந்தவுடன் குழந்தைக்குத் தாய்ப்பால் தருவதில்லை. மூன்று நாட்கள் அக்குழந்தைக்குச் சீனித் தண்ணீர் மட்டும் கொடுக்கப்படுகிறது. குழந்தையின் முதல் மலம் கரிய நிறத்தில் இருப்பதால் அதற்குக் குடல் அழுக்கு உள்ளது என்பதே அதற்கு அவர்கள் கூறும் காரணம்.அது சுத்தமான பின்தான் தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். மருத்துவர்களைப் பொறுத்தமட்டில் இது ஒரு ஆபத்தான போக்கு.

இன்னும் சில உட்புறக் கிராமப்பகுதி மக்கள் ஓணான் இரத்தம், கழுதைப் பால் முதலியவற்றையும் பிறந்த குழந்தைக்கு முதல் உணவாகக் கொடுக்கிறார்கள். முதல் மூன்று நாள் தாய்ப்பால் மிகவும் சக்தி வாய்ந்த ஊட்டச் சத்தும் எதிர்ப்புச் சத்தும் நிரம்பிய சீம்பால் எனக் கூறப்படுகிறது. அதைக் குழந்தைகளுக்குப் புகட்டுவது அவசியம். நோய்வாய்ப்படும்பொழுது அவர்கள் மருத்துவர்களை அணுகுவதற்கு முன்னால் மந்திரங்களிலும், நாட்டுப்புறக் கோட்பாடுகளிலும் அசாத்திய நம்பிக்கை வைத்திருக்கின்றனர். வயிற்றுப்போக்கு, இருமல் நோய், வலிப்பு, அம்மை போன்ற நோய்கள் பற்றிய அவர்களின் நம்பிக்கைகளையும் இன்றைய அறிவியல் எண்ணங்களை அவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்கின்றனர் என்பதைப் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

மோகன், முனைவர் இரா. தமிழில் ஹைகூ ஒரு பறவைப்பார்வை

தமிழில் ஹைகூ பற்றிய அறிமுகத்தினை முதலில் செய்தவர் பாரதியார். அவர் கட்டுரை ஒன்றில் ஹைகூ பற்றிய தம் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஹைகூவை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்தவர் கவிஞர் சி. மணி. 'நடை' இதழில் அவரது ஹைகூ மொழிபெயர்ப்புகள் வெளிவந்தன. தி. லீலாவதி 1987-இல் 'ஜப்பானிய ஹைகூ' என்ற பெயரில் ஒரு தொகுப்பினை வெளியிட்டுள்ளார். அதில் 142 ஜப்பானிய ஹைகூ கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

அப்துல் ரகுமான் 1974 - இல் வெளியிட்ட கவிதைத் தொகுப்பு 'பால்வீதி' அதில் 'சிந்தர்' என்ற தலைப்பில் சில ஹைகூ கவிதைகளை எழுதியுள்ளார். இவையே தமிழில் வெளிவந்த முதல் ஹைகூ கவிதைகள் என்பர் ஆய்வாளர்.

தமிழில் முதல் ஹைகூ கவிதைத் தொகுப்பு 1984-இல் வெளிவந்துள்ளது. 'புள்ளிப்பூக்கள்' என்பது தொகுப்பின் பெயர். வெளியிட்ட கவிஞர் அமுதபாரதி. இது தவிர, 'காற்றின் கைகள்', 'ஐக்கூ அந்தாதி' என்னும் இரு தொகுப்புகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

கழனியூரன், மித்ரா இருவரும் முறையே இரு ஹைகூ தொகுப்புகளை வெளியிட்டுள்ளனர். புகழ் பெற்ற புதுக்கவிஞர்களுள் தமிழன்பன் மட்டுமே தனியொரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்டுள்ளார். புதுவையைச் சார்ந்த தமிழ்மணி, தமிழ்நெஞ்சன் இருவரும் இணைந்து ஒரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்டுள்ளனர். ஈழத்தைச் சார்ந்த கவிஞர் முரளிதரனும் ஹைகூ கவிஞர்களின் வரிசையில் இடம்பெற்றுள்ளார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் ஆகியோரும் ஹைகூ தொகுப்புகளை வெளியிட்டுள்ளனர். மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறை அண்மையில் ஹைகூ பணிமனையினை நடத்தியுள்ளது.

இன்றைய தமிழ் இதழ்களிலும் (முன்னணி இதழ்கள், சிற்றிதழ்கள் இரண்டிலும்) ஹைகூ செல்வாக்கோடு பவனிவருகின்றது. வாசகர்களுக்கு 'ஹைகூபோட்டிகள்' வைக்கப்படுகின்றன 'ஹைகூ சிறப்பிதழ்கள்' வெளியிடப்படுகின்றன.

இதுவரைத் தமிழில் 24 ஹைகூ கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. ஒப்பீட்டு நோக்கில் ஆராயும்போது, தமிழ் ஹைகூ கவிதைகள் ஜப்பானிய ஹைகூ கவிதைகளோடு ஒத்துச் செல்வதையும் காணமுடிகின்றது. உறழ்ந்து நிற்பதையும் காணமுடிகின்றன. இவை தவிர, ஹைகூ பாணிக் கவிதைகளும் ஹைகூ சாயலில் அமைந்த கவிதைகளும் தமிழில் இருப்பதை உய்த்துணர முடிகின்றது.

ஆய்வு நிலையில் தி.லீலாவதியின் 'இதுதான் ஹைகூ' சுஜாதாவின் 'ஹைகூ ஒரு புதிய அறிமுகம்' என்னும் இரு நூல்களும் குறிப்பிடத்தக்கவை. தமிழ்நாடன், தமிழன்பன், அப்துல் ரகுமான், ஹெச்.ஜி.ரசூல் ஆகியோர் ஹைகூ பற்றிய தம் சிந்தனைகளைக் கட்டுரைகளிலும், முன்னுரைகளிலும் வெளியிட்டுள்ளனர்.

DR. R. MOHAN A BIRD'S EYE-VIEW OF TAMIL HAIKU

At the outset, Bharathiar introduced Haiku in Tamil. Besides, in an essay he has expressed his views on Haiku poems.

The poet C. Mani who translated Haiku poems into Tamil published the same in a journal known as `Nadai'. In the year 1987, Dr. T. Leelavathy published an anthology with the title, `Japanese Haiku'. There are 142 Japanese Haiku poems which were translated into Tamil by her in the above anthology.

Haiku poems have been labelled as `Cinthar' by Abdul Rahman in the year 1974 and he wrote a few poems in Haiku model. They are supposed to be first original Haiku poems published in Tamil.

An artist turned poet popularly known as `Amutha Bharathi' published a small volume with the title `Pulli Pu: kkal' in 1984. It is said to be the first book containing Haiku poems alone. On occassion, he published two other books namely `Karrin Kaihal' and `Haiku Anthathi'. Kalaniyuran and Mithra authored two books each on the composition of Haiku poems. Haiku poems because of its structural excellences attracted many of the poets in Tamilnadu. Some of them who wore writing new poetry switched over to Haiku. In this respect `Tamilanban' deserves special mention. Tamilmani and Tamilnenjan of Pondichery jointly published an anthology of Tamil Haiku poems. Haiku cult spread to Sri Lanka also. Sri Lankan Tamil poet Muralidharan joins the file of Haiku poets.

The formal elements of Haiku is not quiet new for Tamil tradition. Because of its foreign colouring in its form and theme, the same attracts professors researchers and students; it was proved by the active participation of the said people in the workshop on Haiku cum comparative Literature organised by the Department of Comparative Literature, Madurai Kamaraj University recently.

The nature of composition of Tamil Haiku is so flexible. Many Tamil journals have conducted competitions in Haiku composition and published special issues for the same.

In a survey of Tamil Haikus we could see 24 books on Haiku composition. Some of them have been written on the lines of Haiku poems of Japanese tradition and many of them written deviating from the main stream of the composition of Japanese Haiku. So far as Tamil is concerned, there is no prescription of prosody in respect of Haiku and in the result, any poem less than 5 or 4 lines are being labelled as `Haikus'. Same of them are nothing but tit-bits.

`This is Haiku' *(இது தான் ஹைகூ')*, Haiku a new Introduction' *('ஹைகூ புதிய அறிமுகம்')* written by Leelavathy and Sujatha respectively deserve special mention in the above series of publications. There are a few write-up on Haiku by TamilNadan, TamilAnban, Abdul Rahman and H.G. Rasul.

Based on the above survey a critical evaluation will be the kernal of my paper.

மோகன், டாக்டர் எஸ். சிறுநீரகக் குணக்கேட்டில் அலுமினியத்தின் பங்கு

நவீன விஞ்ஞான உலகில், நாகரிகம் வெகுவாக வளர்ந்துள்ளது. பெருகிவரும் மக்கட் தொகைக்கு ஏற்பப் பல்வேறு தொழிற்சாலைகளிலும் உணவுப் பெருக்கத்தில் பல்வேறு நவீன உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன. இதனால் தோன்றும் கழிவுப் பொருட்கள் சுற்றுச்சூழலை மாசுபடுத்தி வருகின்றன. இயற்கையை அழிப்பதும், இயற்கைக்கு எதிராக வாழ்வதும் மனிதனுக்குக் கைவந்த கலையாகிவிட்டது. இதனால் பலகொடிய நோய்கள் தோன்றுகின்றன. மருத்துவ அறிவியலுக்குச் சவாலாகப் பல நோய்கள் உள்ளன. சுற்றுச்சூழல் மாசுபடுவதால் மனிதனின் உடலில் பல வேண்டாத உலோகங்கள் நுழைந்து விடுகின்றன. இவற்றின் எண்ணிக்கை அதிகமாகும் போது இவை உடலுக்கு மிக மோசமான கேடுகளை உண்டாக்குகின்றன.

சுமார் 40 அல்லது 45 வயதுடையோரில் பலர் சிறுநீரகக் குணக் கேட்டினால் அவதியுறுகின்றனர். சிறுநீரகக் குணக்கேடு தோன்றக் காரணம் என்ன என்ற ஆய்வைப் பல்கலைக்கழக மானியக் குழு உதவியுடன் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டோம்.

இந்த ஆய்வின் முதல் தகவல் மிக அதிர்ச்சியான முடிவுகளைத் தந்தது. சிறுநீரகக் குணக் கேட்டில் அவதியுறும் நோயாளிகளின் ரத்தம், சிறுநீர் போன்ற உடல் திரவங்களையும், மாதிரிகளையும், Atomic Absorption Spectometor -இல் சோதித்ததில் சிறுநீரகக் குணக் கேட்டால் பாதிக்காதவர்களின் உடலில் உள்ள அலுமினியத்தைவிட Parts per billion அதிகமாக உள்ளது. ஹங்கேரி நாட்டு ஆராய்ச்சியாளர்கள் இன்னும் ஒருபடி மேலே போய்ச் சிறுநீரகக் குணக்கேட்டால் அவதியுற்ற நோயாளிகளின் மூளை tissue - விலும் அலுமினியத்தின் பங்கு அதிகமாயுள்ளதைக் கண்டறிந்துள்ளனர். மேலும் அலுமினியம் உடலில் அதிகமாகச் சேர்வதால் அல்ஸிமெயர் நோய் வருகிறது எனவும் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வுகளின் முடிவை விளக்குவதே இவ்வுரையின் நோக்கமாகும்.

மோகன், முனைவர் நிர்மலா ஹைகூ கவிதைகளில் சமூகச் சித்தரிப்பு

இருபதாம் நூற்றாண்டில் கவிதை ஒரு புதிய பரிமாணத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியது. மகாகவி பாரதியாரிடம் 'வசன கவிதை' யாக முளைவிட்டு, முப்பதுகளில் 'புதுக்கவிதை'யாக அரும்பி, எண்பதுகளில் 'ஹைகூ'வாக மலர்ந்து மணம் வீசத் தொடங்கியிருக்கிறது.

ஜப்பானிய மொழியில் தோன்றிய ஹைகூ, 5,7,5 என்னும் அசையமைப்பைக் கொண்டதாய் ஜென் தத்துவத்தை விளக்குவதற்கும், இயற்கையைப் போற்றுவதற்கும் பயன்பட்டது. இவ்வடிவத்தைப் பயன்படுத்தித் தமிழ்க் கவிஞர்கள் இயற்கையை மட்டும் போற்றவில்லை; சமுகத்தை விமர்சனம் செய்வதற்கும், சமுதாயக் கேடுகளைச் சாடுவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

மேலும் சாதி சமய வேறுபாடுகள், தீண்டாமை, தேர்தல் தில்லுமுல்லுகள், நீதி நிலைபெறாமை போன்ற பல சமுதாயக் கொடுமைகளையும் சித்தரிக்கின்றன ஹைகூ கவிதைகள் . இத்தனை அவலங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் இடையே இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்டி எழுச்சி பெற வைக்கும் நம்பிக்கைக் குரல்களையும் ஹைகூ கவிதைகளில் காண முடிகின்றது.

ஜப்பானிய ஹைகூவில் தத்துவமும் இயற்கையும் முதலிடத்தைப் பெற, தமிழ் ஹைகூவில் சமூகமும் இயற்கையும் சிறப்பிடம் பெறும் பாங்கினைக் காண முடிகின்றது.

DR. NIRMALA MOHAN REFLECTION OF SOCIETY IN HAIKU

Poetry took a new dimension in the beginning of the twentieth century. It budded as `Vacana Kavitai' from Mahakavi Bharathiar, blossomed as `new.poetry' or `free verse' in 1930s and bloomed as `Haiku in 1980s.

Haiku, a poetical form appeared in Japanese language with 5-7-5 syllable structure is used to explain the Zen Philosophy and appreciate the nature. Tamil Haïku, not only appreciated the nature but also criticised the society and social atrocities. Nowadays we have to face and solve so many problems in our daily life like poverty, dowry, casticism, unemployment, child labour, social atrocities, killing the female child and many policital problems. Haiku reflects all these problems.

Regarding the labourers, they are not given enough payment for their labour and they are denied of the fundamental rights. The one who weaves the clothes does not have proper clothes to wear; the one who produces the crop does not get enough food for him and his family and is forced to starve; the one who goes to the sea and catches fish does not enjoy it but it is santched away by the owner as a king-fisher; the one who prepares the pulp to paste the poster could not give it to his child crying out of hunger; even after independence, we are not able to eradicate poverty; out of poverty, so many children who have to study are forced to work in the factories, cracker making and such other works not only the cats in the oven are lying with hunger but also the pots - These are some of the picturisations in Haiku.

In this twentieth century, women have to face so many problems. Kill the female children and demanding heavy dowry in marriages are very commonly seen in this society, and so marriage to ladies has become a problem nowadays. If dowry is not given, without any consideration they are set to fire. Haiku poems point out all these distress.

Education has become very costly in this society; poor people are not able to give good education to their children. Besides, this education system is not upto the standard. Knowledge is not loaded

in the brain but the book burden is loaded on the back of the children. The one who gets the education could not find a proper job; so many youth are waiting in long queue before employment exchanges to register their names for job opportunities; only if they bribe the higher authorities, they will get the jobs - Haiku poets criticise all these problems.

Politicians, the one who have to weed all these social distress have become very selfish. They are like crows searching for food in the sown fields and they are like magicians hiding the truth. They only seek for power and themselves to the postings. Haiku poems pint point out all these problems and also the problems of middle class people and casticism and so on. In spite of all these contradictions, the Haiku poets have not failed to give confidence and soft soothing to the wounded. Thus, Haiku, in a new form, and in a new dimension reflects the society.

ரமேஷ் - நாகார்ஜூனன், ஜி. மெய்ப்பாட்டியல் நோக்கில் மேற்கத்திய புனைகதைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் விளக்கப்படுகின்ற மெய்ப்பாடுகளுக்கும் சமஸ்கிருத நூலான நாட்டிய சாஸ்திரத்தின் ஆறாவது அத்தியாயத்தில் விவரிக்கப்படுகின்ற ரஸங்களுக்கும் (rasas) குறிப்பிடத்தக்க ஒற்றுமை வேற்றுமைகளைக் காணமுடிகிறது. நாட்டிய சாஸ்திர நூலில் விவரிக்கப்படும் எண்வகை ரஸங்கள்: சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயனகம் (பயம்) பீபத்ஸம் (அருவருப்பு) மற்றும் அற்புதம். தொல்காப்பியச் சூத்திரம் குறிப்பிடும் மெய்ப்பாடுகள்: நகை (ஹாஸ்யம்), அழுகை (அவலமும் கருணையும்), இளிவரல், மருட்கை (அற்புதம்), அச்சம் (பயம்), பெருமிதம் (வீரம்), வெகுளி (ரௌத்திரம்) மற்றும் உவகை (மகிழ்ச்சி). எண்ணிக்கை அளவில் ஒற்றுமையும் அர்த்த அளவில், பொதுவான சில அம்சங்களும் இவ்விரண்டுக்கும் இடையே இருப்பினும் சில முக்கிய வேற்றுமைகளையும் காண முடிகிறது. மெய்ப்பாடுகளும் ரஸங்களும் வரிசைப்படுத்தப்படுகிற முறையிலும் (ordering) வகைப்படுத்துப்பட்டிருக்கும் முறையிலும் (classifying) வேற்றுமைகள் உள்ளன.

மேற்கண்ட ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயும்போது தன்னுடைய தேவைகளுக்கேற்ப அனைத்திந்திய சமஸ்கிருதக் கலைமரபைத் தமிழ்மரபானது மறுசீரமைப்பு (restructuring)

செய்துகொண்டு இயங்கி வந்திருப்பதை அறியமுடிகிறது. இந்தியக் கலாச்சாரம் பல முகங்களையும் மட்டங்களையும் கொண்டிருப்பதே இதற்குக் காரணம். தொல்காப்பிய உரைமரபும் நாட்டிய சாஸ்திர மரபும் செய்யுள் மற்றும் நாடகம்/கூத்து ஆகிய கலைவடிவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பரவலாக இயங்கி வருகிற கவிதை, புனைகதை போன்ற இலக்கிய வடிவங்களும் இதர கலைவடிவங்களும் மேற்கத்திய உலகிலிருந்து இங்கு வந்தவை. மெய்ப்பாடுகளுக்கு நேரடித் தொடர்பற்ற வேறு கலாச்சாரச் சூழல்களிலும் காலகட்டங்களிலும் தோன்றிய இலக்கிய வடிவங்களில் ஒன்றான நவீனப் புனைகதைக்கு ஏற்ப மெய்ப்பாடுகளை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

மேற்கத்திய இலக்கியத்தைப் படிக்கிற கிழக்கத்திய (தமிழ்) வாசகன் தன்னுடைய கலாச்சார அடையாளங்களின் வழியேதான் அதை அணுக முற்படுகிறான். இந்த அடையாளங்களைக் கோட்பாட்டுப் பின்னணியில் வைத்து விளக்கவேண்டியது இன்றைய தேவை. இப்படித்தான் தமிழ் வாசகன் பிற கலாச்சாரங்களை அணுகுவதற்கான முறையியலை வளர்த்துக்கொள்ள முடிகிறது.

நவீன மேற்கத்திய புனைகதைகளில் ஒன்றை முன்வைத்து, இந்திய மரபை வளர்த்தெடுத்துள்ள மேற்கண்ட வன்மைமென்மைகளைப் பரிசோதித்துப் பார்க்கிறது கட்டுரை.

ரவிக்குமார், தமிழ்ச் சிறுகதைப் பரப்பும் தலித் கதையாடல்களின் வருகையும்

இந்த ஆய்வு தமிழ்ச் சிறுகதைகளில் தலித் கருத்தாக்கம் எவ்விதம் வெளிப்பாடு கொள்கிறது என்பதை விவரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலகச் சிறுகதைகளின் தரத்துக்கு இணையானவையாகத் தமிழ்ச்சிறுகதைகள் பேசப்படுகின்றன. வர்த்தகத்தின் தோற்றத்தோடு உருவான புதிய கதையாடல் முறைகளான நாவல், சிறுகதை போன்றவை இந்தியச் சூழலில் எவ்வாறு தோற்றம் கொண்டன என்பதை நாம் பரிசீலித்தால் இங்குக் காலனிய ஆட்சிமுறையின் எச்சங்கள் தற்போது நிலைபெற்றுள்ள முறைகளையும் கண்டுகொள்ள முடியும். வர்த்தகப் பெருக்கத்தால் உருவான புதிய அரசு வடிவங்கள் வாழ்முறையில் நிகழ்த்திய தாக்கம் பண்பாட்டுக் களத்தில் வெளிப்படும் போது புதுப்புது இலக்கிய வடிவங்களையும் உருவாக்கிவிட்டன என்பதை நாம் அறிவோம். இவ்விதம் நமது சூழலில்

அரசு வடிவங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களோடு தமிழ்ச்சிறுகதை வடிவம்கொண்டுள்ள மறைமுகமான உறவைக் கண்டு வெளிப்படுத்துவதும், இன்று தலித் சிறுகதைகளின் தோற்றத்துக்குப் பின்புலமாயுள்ள அரசியல் சூழலை இனங்காண்பதும் இந்த ஆய்வின் அடிப்படையாக இருக்கும். உலகெங்கும் சனநாயகத்துக்கான குரல்கள் எழுந்து பரவும் முறைகளை விளக்கி அவற்றின் பகுதியாக இந்த தலித் சிறுகதைகள் எவ்விதம் அமைந்துள்ளன என்பது இங்கு தெளிவுபடுத்தப்படும். அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள், அட்டவணை இனத்தவர் எனப் பலவாறாகக் குறிக்கப்பட்ட மக்கள் தம்மைத் தலித்துகள் எனக் குறித்துக் கொள்ளும்போது தன்னிலைத்துவத்தில் (Subjectivity) ஏற்படும் மாற்றங்களை இந்த ஆய்வு வெளிப்படுத்தும். தலித் சிறுகதைகளைத் தலித்துகள்தான் எழுத முடியுமா என்ற கேள்வி இப்போது முனைப்படைந்துள்ளது. இதற்கான பதிலை நவீனக் கருத்தாக்கங்களின் பின்னணியில் இந்த ஆய்வு முன்வைப்பதோடு, தன்னைத் தலித் என்னும் தன்னிலையாகக் கட்டமைத்துக் கொள்ளாத தாழ்த்தப்பட்ட எழுத்தாளர்கள் எழுதும் சிறுகதைகளில் தென்படும் சிக்கல்களையும் அடையாளம் காட்டும். உலக அளவில் பேசப்படும் பின் நவீனத்துவ (Post Modernist) எழுத்துமுறைகளான, மேஜிக்கல் ரியாலிசம் (Magical Realism) அ-நேர்கோட்டு எழுத்துக்கள் (Non Linear Writings) போன்றவை தலித் கருத்தாக்கத்துக்கு எவ்விதம் அனுசரணையாக உள்ளன என்பதை விளக்குவதோடு, தலித் மக்களிடையே புழக்கத்தில் உள்ள கதை சொல்லும் முறைகளில் மேற்சொன்ன பின் நவீனத்துவ கூறுகள் எவ்வாறு கலந்துள்ளன என்பதையும் எடுத்துரைக்கும். இவை மட்டுமின்றி நவீனத்துவம் என்பது சாதிப்பிரச்சனையைக் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது என்பதையும் நிறுவும்.

தற்காலத் தமிழ்ச் சிறுகதைகளின் பரப்பில் தலித் கதைப்பாடல்களுக்கு உண்டாகியுள்ள இடத்தை இனம்காட்டுவதும், பிற சிறுகதைகளுக்கும் தலித் சிறுகதைகளுக்குமிடையேயுள்ள இடைவெளிகளைச் சுட்டிக்காட்டுவதும், இன்று உலக அளவில் சிறுகதையில் கையாளப்படும் புதிய உத்தி தலித் சிறுகதை வடிவத்தோடு நெருங்கிய உறவு கொண்டிருப்பதை நிறுவுவதும் இந்த ஆய்வில் மேற்கொள்ளப்படுகின்றன.

ராஜ் கௌதமன் தமிழ் நாவல்களில் தலித்தியம்

தமிழ் நாவல்களில் தலித்தியச் சிந்தனைகள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிவது இவ் ஆய்வின் நோக்கமாகும்.

தமிழ் இலக்கியத்திற்குப் புதிய வரவான தலித்தியம் குறித்த விளக்கம் இன்றியமையாத இடம் பெறுகிறது. பிறப்பால் தீர்மானிக்கப்பட்டு, இந்து மதத்தின் வருணக் கருத்தியலால் உறுதி செய்யப்படுகின்ற தீண்டாமை என்ற தீட்டுக் கொள்கையால் ஒதுக்கப்பட்ட மக்கள் தொகுதியைத் தலித் என்ற சொல்லால் இன்று அழைக்கிறார்கள். இம்மக்களை இதற்கு முன்னர் தீண்டத்தகாதவர்கள்,அரிசனர்கள், இழிசனர்கள் என்று அழைத்தனர். இன்று அரசு இவர்களை அட்டவணை இனத்தார் என்று குறிப்பிடுகிறது.

இம்மக்களின் மீட்சியைப்பற்றிப் பேசுகின்ற கருத்தியலையே தலித்தியம் என்று குறிப்பிடலாம். இது பண்பாடு, சமயம், கலை இலக்கியம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியது. உடைமைப் பண்பாடு, சாதி, சமயம், தந்தை வழிக் குடும்பம், பாலியல் அடிப்படையில் பெண் ஒடுக்குமுறை, ஆதிக்க ஒழுக்கவியல், உடைமையை நியாயப்படுத்துகிற நடுவுநிலை, நீதி, அறம் முதலானவற்றை முழுமையாக நிராகரித்துக் கடந்து செல்வது தலித்தியத்தின் சிறப்பு அம்சமாகும். தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு இது மிகவும் இன்றியமையாததாகும். இந்துச் சமூகச் சீர்திருத்தத்திற்கும் மேலானதாக இது அமைகிறது.

தற்காலத் தமிழ் நாவல்களில் தலித்தியம் எவ்விதம் கையாளப்பட்டிருக்கிறது என்பதை இரு பெரும் பிரிவாகக் காணலாம். தலித் அல்லாத பிறர் படைத்துள்ள நாவல்களில் தலித்தியம் எவ்வாறு அணுகிப் புரியப்பட்டிருக்கிறது என்று காண்பது முதலாவது. குறிப்பாக 'இடதுசாரி, மனிதாபிமான, சீர்திருத்தப்படைப்பாளிகளின் நாவல்களில் தலித்துக்கள் எவ்விதம் பார்க்கப்படுகிறார்கள் என்பதைக் கட்டுரை கவனப்படுத்துகிறது. இரண்டாவதாக, தலித் படைப்பாளிகளின் நாவல்களில் தலித் மக்களின் சிக்கல்கள் எத்தகைய பார்வைகளில் புனையப்பட்டிருக்கின்றன என்பதைக் கட்டுரை விளக்குகிறது. இவ் இருவகைப் பார்வைகளுக்கிடையிலான வேறுபாடுகள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கான காரணங்களை அறிய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இறுதியாக, தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கும், தலித் படைப்பிற்குமான தொடர்புகளும் இடைவெளிகளும் புரட்சிகர நவீனத்துவத்திற்கும் தலித் படைப்பிற்கும் உள்ள நெருங்கிய உறவுகளும் புரட்சிகர நவீனத்துவத்தின் ஓரங்கமாகப் பரிமாணம் பெற்றுவரும் தலித் இலக்கியம் சமகால உலக இலக்கிய அரங்கில் கறுப்பர், பெண்ணியலாளர், மூன்றாம் உலக விளிம்புநிலை மாந்தர் ஆகியோரின் படைப்பு நவீனத்துவத்தோடு கொள்ளும் உறவுகளும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

ராஜமாணிக்கம், முனைவர் எஸ். முதல் தமிழ் இலக்கணம்

செந்தமிழுக்குத் தொல்காப்பியர் காலம் தொட்டுப் பல்வேறு இலக்கணங்கள் தமிழில் இருப்பினும், தற்காலத் தமிழ் அல்லது பேச்சுத் தமிழுக்குரிய அத்தகைய இலக்கணம் ஐரோப்பியர் நம் நாடு வந்த பிறகே தோன்றிற்று. அதை முதல் முதலாகச் செய்தவர் அண்டிரீக்கிப் பாதிரியார் என்று தம்மைத் தமிழில் அழைத்துக் கொள்ளும் Padire Henrique Henriques என்பவரே. 1570-இல் போர்த்துக்கல் நாட்டில் 1520-இல் பிறந்த இவர் 1546-இல் தமிழ் நாட்டுக்குக் கிறித்துவ வேத போதகராக வந்தார். மக்களோடு உறவாட இன்றியமையாத தமிழறிவு தமக்குத் தேவை என்பதை உணர்ந்து தமிழை நன்கு கற்றதோடு, அதைப்பிற வெளிநாட்டாரும் பயிலும்படி பேச்சுத் தமிழுக்கு இலக்கணமும் அகராதியும் தொகுத்துத்தந்தார். அவரது அகராதி நமக்குக் கிடைக்காவிடினும் அவர் கைப்பட எழுதிய இலக்கணம் இன்னும் லிஸ்பன் நூலகத்தில் உள்ளது. இது 1982 - ஆம் ஆண்டில் செர்மனியில் அச்சானாலும், தமிழ் மக்களுக்குப் பயன்படவில்லை. ஏனெனில் அது போர்த்துக்கீசிய மொழியில் அமைந்துள்ளது. அந்நூல் சுருக்கமாக இங்குத் தமிழில் விளக்கம் பெறுகிறது.

தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் முதலிய நூல்களை ஆசிரியர் அறியாதது மட்டுமின்றி, கேள்விப்பட்டதாகவும் தெரியவில்லை. கல்வி மணம் அறியாத பரவ மக்கள் பேசும் பேச்சை நன்கு கற்று, அதை ஊடுருவி ஆராய்ந்து சொந்த முயற்சியால் முதல் முதலாக இந்த இலக்கணம் எழுதுகிறார். தம் போன்ற வெளிநாட்டாருக்கு, மேல் நாட்டு இலத்தீன் முதலிய மொழிகளின் இலக்கணத்தைப் போல், அவற்றிலிருந்து முற்றிலும் வேறுபடும் தமிழுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறார். அவருக்குப் பின் வந்த இலக்கணிகள் அனைவரும் இந்நாள்வரை இவரது முறையைப் பின்பற்றி வருகின்றவாறு திறமையாய்ப் படைத்துள்ளார்.

எழுத்து, பெயர், வேற்றுமை, பெயரெச்சம், இடப்பெயர், வினை, தொடரியல் என்ற ஏழு பிரிவு கொண்டது இந்நூல். நன்னூலார் முதலியோர் தமிழ்தெரிந்த தமிழர்களுக்கு இலக்கணம் எழுத இவர் தமிழை முற்றிலும் உணராத வெளிநாட்டு மக்களுக்குக் கற்பிக்க இவ்விலக்கணம் இயற்றுகிறார். ஆகவே இவரது முறையும் நன்னூலார் முதலியோர் முறையும் மிகவும் வேறுபடுவது இயல்பே. பெயர்ச்சொல் எல்லாம் இவர் கருத்துப்படி அ, இ, உ, ஐ என்ற ஓர் உயிர் எழுத்திலோ, ம்,ன் (ண்),ல் (ள்/ழ்), ர் என்ற மெய்யெழுத்து ஒன்றிலோ முடிகின்றன. அவை வேற்றுமை உருபு ஏற்குமுன் சில வேறுபாடுகளை அடைகின்றன. மரம் - மரத்து (ஐ), வீடு - வீட்டு (ஐ) , இராசா(வு)டைய முதலியன

இதற்குச் சான்று. இவ்வேறுபாடு நோக்கிப் பெயர்கள் 5 படிவங்களில் அமைகின்றன.

மேலும் பெயர்கள் சாதிப்படி: பிராமணன் - பிராமணச்சி, தொழில்படி கொல்லன் கொல்லத்தி..., பொது; குருடன் - குருடி...., காறன் முடிவு: சிலேசக்காறன் - சிலேச்சகாறி என்று ஆண்பால் பெண்பால் சுடப்படுகின்றன. மதிப்புப் பன்மைக்கு 'ஆர்' வருகிறது. ஆகவே பாதிரி என்று உச்சரிக்கப்படும் Padre (தந்தை) என்ற சொல் மதிப்புப் பன்மையோடு பாதிரியார்என்று வருகிறது. இந்தச் சொல்லைத் தமிழுக்கு அளித்தவர் ஆசிரியர் அண்டிறீக்கி பாதிரியார்.

இவரது கருத்துப்படி பெயரெச்சம் பெயர்முன் மாறுபடாது, ஆனால் பெயரின்பின் பால், எண்ணில் வேறுபடும். இந்த மனிதன் நல்ல மனிதன், ஆனால் இந்த மனிதன் நல்லவன் (ள், ர்). பண்புப் பெயர்கள் உள்ளவன் பெற்றுப் பெயரெச்சம் ஆகின்றன. பெலம் உள்ளவன் (ள், ர், து) முதலியன.

வினைச்சொற்களில் சில - கிறேன் என்றும், வேறுசில. - க்கிறேன் என்றும் முடிவதையும், ஒருசில - த்தேன், - ப்பேன், -க்க என்று வர, வேறுசில ன்றேன்/ண்டேன்/ட்டேன் எனவருவதையும், - வேன் என்று முடிவதையும் கவனித்து அவற்றை 9 வகையாகப் பிரிக்கிறார். வெளிநாட்டார் தமிழைப் பயிலும்போது இவரைப் பின்பற்றி இது எவ்வளவு சிறந்த முறையில் அமைந்திருக்கிறது என்றால், இந்நாள் வரையும் அதே முறையைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு நம்நாட்டு இலக்கணிகள் தமிழை ஆராயவில்லை. பழக்கத்தால் வந்துவிடும் என்று விட்டுவிட்டனரா, அல்லது குறிப்பிட்ட ஓரிரண்டு ஒழுங்குக்கு உட்பட்டு வராததால், வெறுமனே விட்டுவிட்டனரா என்பது ஆராயத்தக்கது.

தமிழில் செயப்பாட்டுவினை இல்லை என்று ஆசிரியர் கூறுவதன் பொருள் என்ன வென்றால் இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் செயப்பாட்டு வினைக்கென்று தனி வடிவம் இல்லை என்பதாம். செயப்பாட்டு வினைப்பொருள் எவ்வாறு தமிழில் பயன்படுகிறது என்பதை விற்கிது, கழங்கிது, உடைஞ்சிது, உடைஞ்சு போச்சு முதலியவற்றால் சுட்டுகிறார்.

தொடர் இலக்கணத்தில் இரண்டாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைகள் எங்கு வருகின்றன என்று காட்ட, சுவானுக்கு நாலு பணம் குடு, புன்னைக்காயலுக்குப் போறேன், என்னைக் காட்டிலும் நல்லவன், பேதுரு வீட்டிலே இருக்கிறான் முதலிய சான்றுகள் வருகின்றன.

இப்பெரியார் தம்பிரான் வணக்கம் (1578) கிரிசித்தியானி வணக்கம் (1579), கொம்பெசியோநாயகு (1580), Flos Sanctorum என்ற அடியார் வரலாறு (1586) முதலிய நூல்களை எழுதி, பரவ மக்கள் செய்த பொருள் உதவியால் தமிழச்சு உண்டாக்கி, இவற்றை அச்சடித்துத் தந்து 'தமிழ் அச்சுத் தந்தை' என்ற பெயர் பெற்றார். மேலும் பேச்சுத் தமிழுக்கு முதல் இலக்கணியாகவும் முதல் அகராதி தொகுத்தவராகவும் விளங்குகிறார். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழருக்குத் தொண்டுபுரிந்த இவர் புன்னைக்காயலில் 6/2/1600-இல் மரிக்க இவரது உடல் தூத்துக்குடி பனிமாதாக் கோவிலில் அடக்கம் செய்யப்பட்டது.

ரெக்ஸ், டாக்டர் பி.எம். ஒவ்வாமை - தமிழகத்தில் ஒரு கண்ணோட்டம்

தமிழகத்தில் ஒவ்வாமை எவ்வாறெல்லாம் வேரூன்றியுள்ளது என்று பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் புரிந்து, ஆய்வின் வரையறுக்கப்பட்ட மரபுகளை யாத்தல் என்பது கட்டுரையின் இலக்கு.

ஒவ்வாமை பற்றிய அடிப்படைக் கருத்துக்களைத் தெள்ளத் தெளிய முன்னரே தெரிந்திருந்தால் மட்டுமே, ஆய்வுக் கட்டுரை வழங்கும் முடிவுகளை முழுக்கத் தெரிந்து பயன்பெறல் கூடும் என்ற பாங்கில் ஒவ்வாமை பற்றிய அடிப்படை உண்மைகளைச் சுருக்கமாக வழங்குதல்.

ஆய்வுக் கட்டுரை பற்றிய அடிப்படைக் குறிப்புகள்:

1. ஆய்வு நிகழ்த்தப்பட்ட கால கட்டம்

1993 ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் 31-ஆம் நாள் வரை மொத்தம் 6 திங்கள்.

2. ஆய்வில் கலந்து கொண்டவர்கள் 400 பேர்

3. ஆய்வுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட 400 பேரும் தமிழகத்தில் பிறந்து, வளர்ந்து தமிழர் வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிப்பவர்களே!

4. ஆய்வில் கலந்து கொண்ட அத்துணைப் பேரும் ஆய்வுக்கு முன்னர் ஒவ்வாமைக்கு உரிய எந்தவிதச் சிகிச்சைக்கும் உட்படாதவர்கள்.

ஆய்வுக் கட்டுரை, ஆய்வுக்கு உட்பட்டவர்களிடம், மிக மிக நுண்ணியதாக ஆய்ந்து கண்டறிந்த தகவல்களைக் கீழ்க்கண்ட பகுப்பில் பகிர்ந்தளிக்கின்றது.

1. தமிழகத்தில் ஒவ்வாமை, எந்தெந்த வயது வரம்பு மக்களைப் பீடிக்கின்றது?

2. ஒவ்வாமைப் பீடிப்பில் ஆடவர், பெண்டிர் எனும் பால் வேறுபாடுகளின் விகிதாச்சாரம்.

3. ஒவ்வாமை பாரம்பரியம் காரணமாக எத்தனைப் பேரைப் பீடித்துள்ளது? பாரம்பரியப் பின்னணி இல்லாமலேயே, ஒவ்வாமை எத்துணைப் பேரை அணுகியது?

4. ஒவ்வாமை, தமிழகத்தில் எந்தெந்தப் பருவங்களில், ஆண்டு முழுவதும், குளிர் காலத்தில் மட்டும், கோடை காலத்தில் மட்டும் எத்துணைப் பேரைப் பாதிக்கின்றது என்பது பற்றிய தகவல்கள்.

5. ஆய்வுக்கு இலக்கான 400 பேருக்கும் ஒவ்வாமை தோன்றக் காரணமாக அமைந்த பல்வேறு பொருட்களான வீட்டுத் தூசி, பஞ்சுத் துகள்கள், காகிதத் தூசிப் படலங்கள், வேறுபட்ட உணவு வகைகள் போன்றவற்றுள், ஒவ்வொன்றும், இவர்களுள் எத்துணைப் பேருக்கு ஒவ்வாமை தோன்றக் காரணங்களாக அமைந்தன என்பது பற்றிய துல்லியமான புள்ளி விவரங்கள்.

6. தமிழகத்தில் ஒவ்வாமைப் பீடிப்புக்கு உட்பட்ட இந்த 400 பேரையும் சோதித்து ஆராய்ந்ததில் மனத்துக்கும் ஒவ்வாமை தோன்றுதற்கும் உள்ள தொடர்பு மிக நெருக்கமானது - தேர்வுக்குச் செல்லுவதற்கு ஏறத்தாழ ஒரு திங்கள் காலத்துக்கு முன்னரே, உக்கிரமமாகத் தோன்றுகிறது - என்ற உண்மை உறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

7. நம் தமிழகத்தில் சாதாரணமாகக் காணப்படும், யானைக்கால் வியாதியை உருவாக்கும் கிருமி (WUCHERERIA BANCROFTI) ஆய்வுக்கு உட்பட்டவர்களில் கணிசமான அளவினர்க்கு அவர்கள் இரத்தத்தில் காணப்பட்டது. தமிழகத்தில் யானைக்கால் கிருமி ஒவ்வாமையினைத் தோற்றுவிப்பதில் பங்கு வகிக்கின்றதோ? என்ற கருத்து இந்த ஆய்வு வாயிலாகத் துலங்குகின்றது.

DR. P.M. REX ALLERGY - AN ASSESSMENT IN TAMIL NADU

To find out how Allergy is deep - rooted in the Tamil Soil by research from various angles and to present in the article the facts arrived at.

One should know the basic facts about Allergy beforehand, and only then can understand and benefit by the results of the research article. Hence, fundamental facts of allergy are presented at the outset of this article.

Basic details about the Research Article:

1. Period of the Research Work..

1.7.1993 to 31.12.1993

Totally Six Months time taken for Research Work.

2. No. of People selected for Research Work :

3. All the peoples selected for research work are born, brought up, and are subject to the way of life of this soil.

4. All who participated in the research work, were not subject to treatment for allergy before.

This Research Article will present facts and figures, got out from the deep research work done on those, who subjected themselves for this research venture.

1. In Tamilnadu, what is the incidence of allergy in various age-groups?

2. What is the difference of incident of allergy in men and women -i.e. Sex prevalence ratio?

3. In people affected with allergy, how many have a herediatary background? How many do not possess it?

4. When does allergy manifest? How many get allergic manifestations perennially. How many in winter? How many in summer. The article throws light on these aspects?

5. Out of the 400 Who subjected for this research, various materials such as - House Dust, Cotton, Paper Dust, Various food materials - which all confers allergy on them - this article given detailed facts, about the proportion in which each of the above materials caused allergy in various individuals?

6. This research work conducted in 400 people in Tamilnadu,. exposed the fact, that there is a close bondage between one's mental state and the appearance of allergy. Students who were already allergy patients, just a month before their examinations came out with serious bouts of allergic attacks, was also found in this research work.

7. Filariasis is a very common malady in Tamilnadu, and, in this research work, it was found, that, a considerable number of people suffering from allergy had wuchereria bancrofti in their blood. Is it that the causative organision of Filariesis plays a role in causing allergy in Tamilnadu is a question posed in this research work.

லலிதா, முனைவர் து. வைணவநெறியும் பெரியதிருமொழியும்

இந்து சமயத்தின் இருபெரும் பிரிவுகளாக விளங்குவன சைவம், வைணவம் ஆகியவையாகும். இவற்றுள் வைணவத்தின் தத்துவமாக விசிட்டாத்துவைதம் விளங்குகிறது.

'விசிட்டாத்துவைதம்' என்பது விசிட்டம் + அத்துவைதம் என்று விவரிக்கப்பெறும். 'விசிட்டம்' என்பது விசேடம், மேன்மை என்னும் பொருள்படும். இறைவனின் அழகிய திருமேனியும் எல்லையற்ற நற்பண்புகளும் அறிவுள்ள, அறிவில்லாத சீவான்மாக்களுக்காகப் பரமான்மா பேரருள்கூர்ந்து செய்யும் செயல்களும் ஆகிய இவை விசிட்டமாகும். 'அத்துவைதம்' என்பது தனக்கு அயலாக இரண்டாவது இல்லாதது என்று பொருள்படும். எனவே உருவம், பண்பு, சீவான்மா, உயிரில்லாத உலகம் இவற்றையுடைய மேலான மெய்ப்பொருள் ஒன்றேயாம் என்பதே விசிட்டாத்துவைதத்தின் திரண்ட பொருளாகும்.

ஆன்மா வீடுபேற்றினை அடைய வேண்டுமானால் தத்தவத்திரய ஞானத்தைப்பெற வேண்டும். தத்துவத்திரயமாகிய சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்றும் ஒன்றோடொன்று இயைப்நது நிற்பன. சித்தும் அசித்தும் இறைவனுக்கு உடலாக அமைந்திருப்பன என்றம் இறைவனே உயிர்கள் அனைத்துள்ளும் அந்தரியாமியாய் நின்று அவையனைத்தையும் இயக்குபவன் என்றும் வைணவத் தத்துவம் கூறுகிறது.

சித்து, அசித்து ஆகிய இரண்டிலும் ஈசுவரன் நிறைந்திருக்கின்ற தத்துவம் பெரிய திருமொழிப் பாடல்களில் பலவாறாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இறைவன் அனைத்துப் பொருள்களிலும்

கலந்திருப்பதோடு அப்பொருள்களையே தன் உருவமாகவும் கொண்டிருக்கும் வைணவ சமயக் கருத்துக்கேற்பக் கடல்நீர் அரையில் உடுக்கும் ஆடையாகவும், பூமிப்பரப்பு திருவடியாகவும், விண்வெளி திருமேனியாகவும், திசைகள் எட்டும் திருத்தோளாகவும், அண்டம் முழுவதும் திருவடியாகவும் அமைந்து உலகமே இறைவன் உருவமாக இருப்பதாகத் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

வைணவ சமயத்தில் சித்தோபாயம், சாத்தியோபாயம் என்ற இரு நெறிகள் பேசப்பெறுகின்றன. சாத்தியோபாயம் என்பது பக்திநெறி, பிரபத்திநெறி, பரசமர்ப்பணம், சரணாகதி என்னும் பெயர்களால் வழங்கப்பெறும். இந்தச் சரணாகதித் தத்துவம் ஐந்துவிதமாக வகைப்படுத்தப்படுகிறது.

இறைவன் மட்டுமே உறுதியான - உண்மையான பாதுகாப்பு என்று கருதி அப்பாதுகாப்பை வேண்டி நிற்பதை நித்தியக் கடமையாகக்கொள்ளுமுகத்தான் அவன் நாமங்களுள் ஒன்றாகி 'நாராயணன்' என்பது 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரமாக வைணவர்களால் போற்றப்படுகிறது. இதைப்பெரிய திருமொழி 'வாயெடுத்த மந்திரம்' என்று குறிப்பிட்டு அதன் சிறப்பையும் அதனைச் சொல்லுவதால் வரும் பயனையும் காட்டுகின்றது.

'அனைத்தும் இறைவன் செயலே' என்னும் எண்ணத்தில் ஆழ்வார் பாடிய பெரியதிருமொழிப் பாடல்களின் இறுதிச் சொற்கள் அவருடைய பக்திப் பெருக்கை உணர்த்துவதோடு சரணாகதித் தத்துவத்தையும் புலப்படுத்துகின்றது.

உயிர் தளையிலிருந்து விடுபடக் கைக்கொள்ள வேண்டியனவாக கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம், ஆசாரிய அபிமானம் என்பன குறிப்பிடப்படுகின்றன. அவற்றைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக உயிர் பிறவியாகிய தளையிலிருந்து விடுபட்டு வீடுபேறடையும் என்பதைப் பெரியதிருமொழி கூறுகிறது.

ஆதியும் அந்தமும் இல்லாத நாராயணன் பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை ஆகிய ஐவகை நிலைகளில் நின்று உயிர்க்குலத்தை உய்விக்கின்றான். அர்ச்சை நிலை இறைவனின் நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களைக் கொண்டது. திருமங்கையாழ்வார் அர்ச்சை நிலையில் அதிகமான ஈடுபாடு கொண்டவர் என்பதைப் பெரியதிருமொழி வாயிலாக அறியலாம்.

DR. D. LALITHA VAISHANAVA CULT AND PERIA TIRUMOZHI

It is accepted by all that there are two main sects in Hindu religion namely Saiva and Vaishnava. Visishtadvaita is considered to be the Special feature of vaishnava philosophy.

The term 'Visishtadvaita' can be split as Visishta + Advaita. Visishta means speciality, superiority. 'Visishta' consists various aspects of God like His divine form, His unlimited and overwhelming kindness towards all kinds of living beings. Advaita or non-dualism explains the philosophy of oneness of God and soul. Soul is not different from God. Visishtadvaita admits plurality- plurality of form as soul (chit) and matter (Achit). Hence it is called Visishtadvaita or qualified non-dualism.

According to Vaishnava concept the soul must have attained Thathvathraya Gnana to reach Moksha. Thathvathraya consists of three aspects namely soul (Chit) (matter) (Achit) and (God) (Eshwar).

These three Chit, Achit and Eshwar are inseparable and interrelated. Soul and matter constitute the body of the Lord. Of these three Lordis the indweller and He is controlling everything.

It is stated in Peria Tirumozhi that the Lord pervades these two Chit, Achit. Vaishnava Philosophers say that by mingling in all these things He forms part of them.

Bearing in mind that He dwells in everything Tirumangai Alwar portrays the sea as His dress, earth as His feet, sky as His body, eight directions as His arms, universe as His head and thus the whole earth seems to be the holy body of the Lord.

Vaishnava religion shows two ways for worshipping the Lord Vishnu. They are called Siddhobhaya and Sadhyobhaya. Sadhyobhaya cult will also be called as Bhakti cult, Prapatti cult,. Parasamarppanam and Saranagathi. This Saranagathi Philosophy is classified as five types.

Vaishnavaites recite in their daily life the Ashtakshara Mantra 'Om Namo Narayanaya' for their protection and well being. Tirumangai Alwar describes it as 'Vaayedutta Mantra' in his Peria Tirumozhi. It

shows the way in which he finds that Martra and the specialities and effects of it.

The words found at the end of the verses in Peria Tirumozhi bring out the supremacy of Almighty, Alwar's strong belief in it and the philosophy of saranagathi.

Emancipation of the soul from bondage is possible through karma yoga, Gnana Yoga, Bhakti yoga, Prapatti yoga and Acharya Abhimana.

Peria Tirumozhi says that soul will reach Moksha by doing all these yogas.

Lord Narayana protects all living beings by taking Para, Vyuha, Vibhava, Antaryamin and Archa stances. Archa stance consists of Almighty's standing, sitting and lying postures. We understand that Tirumangai Alwar is very much influenced by Archa stance and worshipped Him.

விசுவநாதன், முனைவர் அ. அகம்பாடிய பெண்பாற் புலமையர் சால்பு

சங்கப் புலவர்களுள் 30 பேர் பெண்பாற் புலவர்கள். இவர்களால் பாடப்பெற்ற புறப்பாடல்கள் 67, அகப்பாடல்கள் 87. அகம் மட்டும் பாடியோர் பதினைவர். புறம் மட்டும் பாடியோர் எண்மர். அகமும் புறமும் பாடியோர் எழுவர். ஆக அகப்பொருட் பாடல்கள் பாடியோர் 22 புலவர்கள். புறப்பொருட் பாடல்கள் பாடியோர் 15 புலவர்கள்.

அகம்பாடிய பெண்பாற்புலவர்களிடையே சில வாழ்வியல் நெறிமுறைகள் காணப்படுகின்றன. 1. மகளிர் உடன்போக்கினை விரும்பவில்லை. அதனால் உடன் போக்கில் ஒரு பாடல் கூடப் பாடவில்லை. மகட் போக்கிய தாய் கூற்றில் பாடியோர் அனைவரும் ஆண்பாற் புலவர்களே. 2. தலைவனின் பரத்தமைத் தொடர்பினை விரும்பவில்லை. வாயில் நேர்ந்ததாக ஒரு பாடல் கூடப்பாடவில்லை. 3. பெண்பாற் புலவர்கள் தலைவன் மடல் ஏறுவதாகவோ / ஏறியதாகவோ பாடல் பாடிற்றிலர். 4. இயற்கைப் புணர்ச்சியில் தலைவியின் உடல் வேறுபாடு கண்டு வெறியாட்டு நிகழ்தல் உண்டு. வெறியாட்டு குறித்து முருகனால் வேறுபாடு தீர்ந்தது என்று பாடினாரிலர். 5. காமக்கிழத்தி ஊடலைத் தீர்த்து வைக்குங்கால் கூற்று நிகழும் என்பர் தொல்காப்பியர். தலைவிக்குப் பரத்தையொடு கூற்று நிகழ்ந்ததாகப் பாடவில்லை. 6. இல்லறச் சிறப்புக்குரிய

விருந்தயர்தலைச் சிறப்பாய்ப்பாடியுள்ளனர். 7. உலகியலறிவு தோன்ற வரலாற்றுச் செய்திகளை அகப்பாடல்களுள் சுட்டியுள்ளனர். 8. பெண்பாற் புலவர் ஒருவர் கூட, மக்கட்பேற்றைப்பாடவில்லை. மக்கட்பேற்றைப் பாடாதது ஏன் என்பது சிந்திக்கத்தக்கது. மக்கட்பேற்றைப்பாடியோர் அனைவரும் ஆண்பாற்புலவர்களே. 9. தலைவன் கூற்றைக் காட்டிலும் தலைவி கூற்றுப் பாடல்களே மிகுதி.

பெண்பாற்புலவர்கள் பெண்மைக்கு முதலிடம் தந்து, பெண்மை உணர்ச்சிகளைத் திறம்படச் சித்திரித்துள்ளனர். உலகியலில் சில நடைமுறைகள் இருந்தும் அவற்றைப் பாடாது விடுத்தமை பாராட்டத்தக்கது.

விவேகானந்த கோபால், இராக. தமிழக வரலாற்றிற்கு மோடி ஆவணங்களின் பங்களிப்பு

தமிழக வரலாற்றிற்கு மூலச்சான்றுகளாக விளங்குபவை கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள், ஓலை மற்றும் காகித ஆவணங்கள் ஆகியவையாகும். இவை தமிழில் மட்டுமல்லாது பிறமொழிகளிலும் உள. அவற்றுள் ஒன்றே மோடி எழுத்திலமைந்த மராட்டி மொழி ஆவணங்களாகும்.

‘மோடனே’ என்னும் மராட்டிச் சொல்லுக்கு ‘உடைதல்’ என்று பொருள். அதிலிருந்து மோடி என்ற சொல் உருவானது. அஃதாவது தேவநாகரி எழுத்தினை உடைத்துச் சிதைத்து உருவாக்கப்பட்ட மாறுபட்ட எழுத்தே மோடி. கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் தேவகிரியை ஆண்ட யாதவ அரசர்களின் அமைச்சரான ‘கேமாடுபந்த்’ என்பவரே இதனை உருவாக்கியவர். அரசியல், நிர்வாக ஆவணங்களை எழுதுவதற்கு மட்டுமே பயன்பட்ட இவ்வெழுத்து சுருக்கெழுத்து முறைக்கு ஒப்பானது. இதனை மகாராட்டிரத்து மராட்டிய மன்னர்களும், இந்தியாவின் பிற பகுதிகளில் ஆண்ட மராட்டிய மன்னர்களும் பயன்படுத்தினர்.

முற்காலத்தில் கல்வெட்டு, செப்பேடுகளிலும் பின்னர் ஓலை, காகித ஆவணங்களிலும் இது எழுதப்பட்டது. எனினும் காகித வரவிற்குப் பின்னரே இதன் பயன் அதிகமாயிற்று. மோடி எழுத்து முறை ஆளுக்கு ஆளும், காலத்திற்குக் காலமும் வேறுபட்டு அமைந்துள்ளது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்த மராட்டிய மன்னர்களின் வரலாற்றினை அறிய இது பெரிதும் உதவுகிறது.

தென்னிந்திய மோடி ஆவணங்களை ஆராய்ந்த டிவி. போட்தார் என்னும் வரலாற்றறிஞர் இது 'பழைய மோடி' என்பார். கி.பி. 1676 முதல் 1855 வரைத் தஞ்சையை ஆண்ட சுமார் 11 மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்ட தினசரி நடவடிக்கைகள், நன்கொடைகள், கணக்கு வழக்குகள், கடிதத் தொடர்புகள் ஆகியன மோடி எழுத்தில் எழுதப்பட்டன. இவ்வாவணங்கள் இன்று தஞ்சை சரசுவதி மகாலிலும், தமிழ்ப்பல்கலைக்கழகத்திலும் உள.

180 ஆண்டுக்காலத் தஞ்சைப்பகுதியின் அரசியல், பொருளாதார, நிர்வாக வரலாற்றினை அறியவும், தமிழ் மொழி, பண்பாட்டின் மீது ஏற்பட்ட மராட்டியத் தாக்கத்தினை அறியவும் மோடி ஆவணங்களின் ஆய்வே அடிப்படையானது. இதன் மூலம் மகாராட்டிரம் மற்றும் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தொடர்பினையும் அறியலாம்.

தஞ்சை மராட்டியர்கள், மகாராட்டிர மராட்டியர்களுடனும், இலங்கை அரசர்களுடனும், சேதுபதிகளுடனும், ஆர்க்காட்டு நவாப்புடனும், தரங்கம்பாடியிலிருந்த டச்சுக்காரர்களுடனும், பாண்டிச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரர்களுடனும் கிழக்கிந்தியக் கம்பெனியுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் கோயில்கள், சத்திரங்கள் தீட்சிதர்கள், கலைஞர்களுக்குச் சிறப்பாகச் சேவை புரிந்தவர்களுக்கு இனாமாக நிலங்களையும் வீடுகளையும் வழங்கினர். அவர் தம் காலத்தில் பயணிகளுக்கான சத்திரங்களும், மருத்துவமனைகளும் கட்டப்பெற்றன. இரண்டாம் சரபோஜியே காசிக்கும், இராமேசுவரத்திற்கும் பயணம் மேற்கொண்டு அதன்மூலம் ஏராளமான சுவடிகளைச் சேகரித்துச் சரசுவதி மகாலில் வைத்தார். குழந்தைக் கல்வியில்ஆர்வம் காட்டி, தமிழ், சமஸ்கிருதப் பள்ளிகளையும், பிற கல்வியளிக்கும் பள்ளிகளையும் மராட்டியர் தொடங்கினர். அரசியல் நெருக்கடிகள், நிர்வாக முறை, சமூக அமைப்பு, மகளிர் நிலை ஆகியவை இவ்வணங்களின் மூலம் அறியப்படுகின்றன. குறிப்பாக, தமிழ்மொழியைப் போற்றியதன் மூலம் ஏராளமான தமிழ் இலக்கியங்கள் மராட்டியர் காலத்துத் தோன்றின.

இவ்வாறாக, மராட்டிய மன்னர்கள் தமிழ் நாட்டிற்குப் புதியவர்களெனினும், இங்குள்ள மக்களைத் தம்மவர் போல் பாவித்துத் தாய்மொழிப் பண்பாட்டினைப் போற்றியதால் அவர்தம் வரலாறு தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

R. VIVEKANANDAGOPAL CONTRIBUTION OF MODI DOCUMENTS TO THE HISTORY OF TAMIL NADU

Modi is a form of short-hand script developed for speedy writing of Marathi language. The main purpose was to record the political, economical and administrative documents of the Maratha Kings of Maharashtra as well as the Maratha rulers who ruled over other parts of India. The necessity of such a script was felt by Hemadpant, the minister of Yadava dynasty in 12th Century and was so developed and practiced by the descendants of Yadavas and subsequently by the Marathas. However literary works in Marathi continued to be written only in Devanagari script or otherwise called Balabodh.

In the medieval days, Modi script was also used for inscription on stones, palm leaves and eventually on paper. Now-a-days paper manuscripts only are available in abundance. So many methods of writing the modi documents were seen through the ages. The style also differed from hand to hand and time to time. So, it is an interesting topic to study, understand and reproduce it in making the history of Marathas who had spread all over India.

The Southern style of Modi is called `Archaic Modi' by Shri D.V. Potday, a historian who studied the Thanjavur based Modi documents in depth. Since 1676, Thanjavur was ruled by Maratha Kings, whose reign ended in 1858 A.D. under the British rule. Nearly eleven Kings had ruled over Thanjavur. they had kept the diaries, correspondences, gifts, accounts etc.,in Modi script only. These records are available in the Sarasvati Mahal and Tamil University Archives.

Modi documents are the indigenous source materials for the political, Economical and Cultural history of Thanjavur region for over 180 years. But the influence of Maratha rule over Tamil language and culture till exists in various other forms also. Nevertheless we cannot neglect the Modi documents, which are the main source of evidence available to trace the history and Culture of Thanjavur region as well as the Cultural contacts between Maharashtra and Tamil Nadu.

Marathas showed keen attention to child education and started so many schools for Sanskrit, Tamil and other education. Apart from this, political happenings, Social structure, position of Women etc.,

are known from these Modi records. Marathas patronised a large number of Tamil poets who authored many minor literary works in Tamil.

So, we are able to have a glimpse of the glorious past through these Modi documents.

வீராசாமி, முனைவர் தா.வே. அரவிந்தரும் ஆண்டாளும்

பக்திப் பாடல்கள் தமிழிலக்கியத்தின் தனிச்செல்வமாகும். பக்திப் பார்வையில் இறைவனைத் தந்தையாகவும், தாயாகவும் மக்கள் வழிபட்டனர். அதனால் கோயிலில் வழிபடுவது சமூகப் பண்பாட்டுக் கூறாக மலர்ந்தது. இதன் முற்கூறுகளைப் பக்தியுடன் கலந்த தாந்திரீகமாகத் திருமூலரின் திருமந்திரம் கூறும். இந்நிலை, சங்ககால அகப்பாடல்களில் வெளிப்பட்ட காதலில் மறைபொருட் கூறுகள் (Mystic elements) கலக்க வழிசெய்தது. பக்திக் கவிஞர்கள் இறைவன் மீது பாடிய பாடல்களில் பண்டைய அகமரபைப் பின்பற்றினர். அதனால் அம்மரபில் செறிவும் ஆழமும் கலந்தன.

தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலங்களாக விளங்கிய கோயில்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளில் மக்கள் தெய்வீக உருவங்களை அழகிய வடிவமாகவும் கலைநயமிக்க தோற்றங்களாயும் காணும்போது சங்க இலக்கியப்பாடல்களில் வெளிப்பட்ட அழகுக்கலைக் கூறுகள் குறியீடுகளாகப் பக்திப்பாடல்களில் வெளிப்படலாயின. மனிதனிடத்தும் மற்ற உயிரிடத்தும் இறைவன் புரியும் அருளாக மாறும் புராணக் காட்சியாகவும் புலப்படலாயின.

இன்பமும் அழகுமே கவிதையின் உயிரெனக் கண்டவர், இக்கால மெய்ஞ்ஞானிகளில் தனி இடம் பெற்றுத் திகழ்ந்த அரவிந்தர் ஆவர். இளமைக் காலமுதல் கவிதை உலகில் திளைத்து மேலைநாட்டுக் கீழை நாட்டு இலக்கியங்களின் கவிதைப் பண்பாட்டு நிலைகளை நன்கு வேறுபடுத்தி 'எதிர்காலக் கவிதை' எங்ஙனம் உருவாக வேண்டும் என வழிகாட்டினார் அரவிந்தர். கவிதையின் அகத்தே சென்று அதனைத் துய்க்கும் போது, மனிதன் விரும்பும் உலகியல் இன்பத்தைக் கடந்து இறைவனை உள்ளொளியாக உணர்ந்து எல்லையற்ற இன்பத்தின் அருகே செல்லச்செல்லப் படைப்பாக்க ஆன்மீக உணர்வை எட்டும் நிலைக்குக் கவிதைமொழி தன்னைப் பயில்வோரைக்கூட்டிச் செல்கிறது என்பார். இக்கூற்றின் அடிப்படையில் அரவிந்தர், தமிழில் நாச்சியார் திருமொழிகளைப் பக்திச்சுவை ததும்பப் பாடிய ஆண்டாளின் பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்த செயலிலும் உணர இயலும்.

ஆழ்வார் பாடல்கள் தமிழிலக்கியப் பக்திப்பாடல்களில் தமக்கெனத் தனி இடம் பெற்றுள்ளன. பக்திச் சுவையும் கவிதைக் கலையழகும் கலந்தசிறப்பை ஆண்டாள் பாடிய 'ஆண்டாள் வைபவ'த்தின் வாயிலாகக் காணலாம். ஆண்டாளின் 173 பாடல்களில் 12 பாடல்களை அரவிந்தர் தேர்ந்தெடுத்துள்ளார். இவற்றில் எம்பெருமானைக்கூவி அழைக்கும்படி குயிலை வேண்டும் பாடல்களில் மூன்றும் ஆயனை மணம் செய்து கொள்வதாகக் கண்ட கனவைத் தோழிக்குக் கூறும் பாடல்களில் மூன்றும் தலைவி கண்ணனுள்ள இடத்தில் தன்னைக் கொண்டுவிடும்படி உற்றாரை வேண்டும் பாடல்களில் ஐந்தும் உள்ளன. இவற்றை அரவிந்தர் காட்டிய கவிதை நெறிப்படி ஆராயின், அவர் தம் யோக நெறிக்கு எற்ற பாடல்களைப் பொதுவாக இந்தியப் பண்பாட்டிலும் சிறப்பாகத் தமிழ்ப் பண்பாட்டிலும் பொது நிலையில் காணும் பண்பாட்டு நலம் சிறக்க விளக்கும் செய்திகளைக் கொண்டவற்றையே மொழிபெயர்த்த நோக்கு புலப்படும்.

பழங்காலந்தொட்டுத் தெய்வீக ஞானத்திலும் சமய ஆர்வத்திலும் தமிழர் மனம் ஈடுபட்டிருந்தது. அதனால் மனித வாழ்வின் எல்லா வடிவும், உணர்வும் உலகநிகழ்வும் குறியீடுகளாக அமைக்கப்பெற்றுள்ளன. அவற்றின் உதவியால் ஆன்மா மேலான பரம்பொருளைத் தேடிச் சென்று அதனைக் கண்டறிந்து பக்தி உணர்வால் மானிட உறவுநிலை கொண்டு 'உயர்மா மனிதனை உருவாக்கும் படிநிலையில் ஏறி உயர்நிலையை அடையும். இறைவனைக் குரு, தோழன், தாய், குழந்தை, காதலன் எனப்பல நிலைகளில் பக்திக் கவிஞர்கள் பாடியுள்ளனர் (பாரதியின் கண்ணன்பாட்டிலும் இப்போக்கு வெளிப்பட்டுள்ளது). ஆண்டாள் பாடல்களில் இந்நிலையாவற்றிலும் காதலனைக் காதலிதேடும் பக்தி உணர்வே மிக உயர்ந்த நிலையை எட்டுகின்றது. அரவிந்தரின் 'சிறிய பெரும் புத்தக'மான அன்னையில் தொடக்கத்தில் சுட்டப்பெறும் 'கீழ் ஆற்றல்', 'மீ ஆற்றல்' என்பதன் உருவக விளக்கத்தை உணர ஆண்டாளின் பாடல்கள் துணைபுரியும். ஆண்டாள் பாடல்களை விழிப்புற்ற ஆற்றல் மிக உயர்ந்த அருளாற்றலைத் தேடும் குறியீடாகக் கொண்டுணர வழி கிடைக்கிறது. இக்கவிதைகள் அரவிந்தர் கண்ட கவிதைப்பயனாம். புதிய போக்கைக்கான உதவும். இது உள்ளமாம் கோயிலின் மறைநிலையாம் கருவறைக்கு அடிஎடுத்து வைப்பதைக் காட்டும்.

கவிதை என்பது ஆன்மா இயற்கையில் பெற்றுள்ள ஆழ்நிலைப் பொருளை எடுத்துரைக்க வேண்டும். இறைநிலையை அது வெளிப்படையாகக் கூறும்போது ஆன்மாவின் அழியா இன்பத்தைப் புலப்படுத்தும்போது கவிஞன் தீர்க்கதரிசி ஆகிறான். இவ்வாறு

'எதிர்காலக் கவிதை' பற்றி எண்ணிய அரவிந்தர் தம், கருத்திற்கேற்பப் பண்டைய ஆழ்வார்கள் பாடல்களில் குறிப்பாக ஆண்டாளின் கவிப்பெருக்கில் தோய்ந்ததுடன் அப்பக்தி நிலைபற்றியும் எழுதியுள்ளார். அகத்தூண்டல், அகக்காட்சி ஆகியவற்றைத் தமிழ்ப்பண்பாட்டு நிலையில் ஆண்டாள் வெளிப்படுத்தும் கவிதைச் சுவையையும் அழகையும் அரவிந்தர் வாயிலாக அறிகிறோம். எதிர்காலக் கவிதையின் புதிய கதிர்வீச்சைக் காண்கிறோம்.

வேங்கடராமன், முனைவர் சு. அண்மைக்காலத் தமிழ்ப் புனைகதைப் போக்குகள்

தொன்னூறுகளின் முதற்பகுதியில் (1990 - 94) வெளியான தமிழ்ச் சிறுகதை, நாவல் ஆகியவற்றின் போக்குகளை மதிப்பிடுவது இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம். தமிழ் இதழ்கள் வழக்கமான செல்தடத்திலே, வணிநோக்கில் புனைகதை எழுத்துக்களை உற்பத்தி செய்து வருகின்றன. இலக்கியச் சிறுபத்திரிகைகளில் சிறுகதைகள் மட்டும் புதிய கருப்பொருள்களிலும் வடிவச் சோதனையிலும் புதிய உத்திமுறைகளிலும் எழுதப்படுகின்றன. இதழ்களை நம்பாமல் நேரடியாக நூலாக வெளிவரும் படைப்புகளிலும் புதுமை நாட்டம் உள்ளது. இவற்றில் கருப்பொருள் தேர்விலும் கதை சொல்லும் முறையிலும் சோதனைப் பாங்கு காணப்படுகிறது. அமைப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம், பெண்ணியம் ஆகிய இலக்கியக் கோட்பாடுகளின் தாக்கம் பெற்று உருவான புனைகதைகள் வெளிவந்து உள்ளன. அதே போல, நேர்கோட்டு வடிவற்ற (non-linears) எழுத்து என்ற புதிய தன்மையிலான படைப்புமுறையும் இக்காலகட்டத்தில் தமிழில் வெளிவந்துள்ளது. பெண்ணியம் மிகுந்த அளவில் புனைகதைகளில் வெளிப்பட்டு வருகிறது. இதில் குறிப்பிடத்தக்க கூறாக, தனிக்குடும்பச் சிதைவும். கல்வி-வேலைவாய்ப்பு. பொருளாதாரச் சுதந்திரம் காரணமாக, ஆண் ஆதிக்கப் போக்கை எதிர்த்து, மனைவி வீட்டைவிட்டு வெளியேறி வந்து, தனித்து வாழும் போக்கும் மிகுதியாகப் புனைகதைகளில் சுட்டப்படுகின்றன. இந்த வகையில் பண்பாட்டு மாற்றத்தைச் சமூகவியலாளருக்குப் புதிய தரவாக நடப்பியல் பாங்கில் இப்புனைகதைகள் எடுத்துரைக்கின்றன. பெண்ணிய மொழி உருவாக்கப்படும் சாத்தியக்கூறு எதுவும் இப்புனைகதைகளில் காணப்படவில்லை. நகர்ப்புற, மத்தியதர வகுப்பாரிடையே ஏற்படும் சமஉரிமை விழிப்புணர்வாக மட்டுமின்றி, கிராமப்புற உழைக்கும் பெண்களிடம் விழிப்புணர்வும் சம உரிமை வேட்கையும் உருவாகியுள்ளதை இக்கதைகள் பதிவு செய்துள்ளன.

பெண்ணியச் சிந்தனைக்கு அடுத்தநிலையில், ஒடுக்கப்பட்ட மக்களின் விழிப்பு உணர்வை - தலித் விடுதலையை - மையமிட்ட படைப்புக்கள் வந்துள்ளன. புதிய களங்களைத் தேர்ந்து, அந்த மக்களின் பண்பாட்டு மரபுகளின் பின்னணியில் சமூக, தனி மனிதச் சிக்கல்களை இலக்கியமாக்கும் போக்கு அருகியுள்ளது. அடுத்த நூற்றாண்டில் தமிழர் நிலை, தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் சவால் பற்றியதான எந்தச் சிந்தனையும் இப்புனைகதைகளில் இடம்பெறவில்லை. கதைப்பொருள் தேர்வில் ஒரு சில தவிர, புதுமை நாடும் போக்கு காணப்படவில்லை. அறிவியல் புனைகதை என்பது மருந்துக்குக் கூடக் காணப்படவில்லை. அரசியல், பண்பாட்டுச் சீரழிவு என்பவையும் இவற்றில் இடம்பெறவில்லை.

பொதுவாக, சோதனை முயற்சி மிகக் குறைந்த அளவில் உள்ளது. புதிய போக்குகளை உண்டாக்கும் செல்நெறியாளர் என்று எந்தப் புனைகதையாளரையும் சுட்ட முடியவில்லை. முன்னமே அறிமுகமாகி, தடம் பதித்த சில தரமான படைப்பாளர்களின் புனைகதைப் பங்களிப்பே இக்காலகட்டத்திலும் பரவலாக வெளிவந்துள்ளது.

DR. S. VENKATARAMAN CURRENT TRENTS IN TAMIL FICTION

The main aim of this paper is to evaluate and assess the trends of Tamil fiction (short stories and novels) which appeared in the first half of nineties (i.e. between 1990 to 1994). The Tamil magazines are still producing fictional writings in the usual pattern with commercial motivation. In contrast, the little literary magazines are encouraging the experimental short stories. These stories are new themes, techniques and new forms. The fictional writings which are appearing directly in book form are new in many senses. There is modernity in these work both in content and in narrative methods. Some novels and short stories get impact by the literary concepts such as structuralism, modernism, post modernism and feminism. Similarly, non-linear type of writings also appeared in this period in Tamil for the first time. Feminism is the major subject matter in this period. One of the important aspect of feminism that was handled by many writers of this period is, the disintegration of single unit family and after separation from her husband due to his domination, the wife came out from the family and begin to live independantly. This is possible only because women education and economic independance. Many of the fictional writings recorded this cultural

change as a new data in realistic manner to the sociologists. The fiction writers also recorded the lesser chance of formulation of feminist language. The fictional writings of this period noted not only the awareness regarding equal rights among the middle class womenhood but also the awareness of village women folk of the labour class.

Next to feminism, dalit movement is the subject matter in the Tamil fiction. The urge for tracing new unexplored area and recording the cultural traditions through narratives is also an un-known trend in this period. The status of Tamil society in the next century and the challenge are not found in these writings. Except some aspects, there is no scope for new themes in these fictions. There is not even a science fiction to mention. Similarly, political fiction and fiction showing the cultural ruin are also not found.

In general, experimental new attempts in fictional writings are in small number. It is very difficult to point out any one among the fictional writers of this period as a new trend setter. The known writers who came into scene already are still contributing in this period also.

வேணுகுமார், முனைவர் வி. சமுதாயத்தில் மக்கட் பெயர்களின் பங்கும் மதிப்பும்

பெயராய்வின் ஒரு பிரிவாகிய மக்கட் பெயராய்வு இன்று வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்றாகும். பெயரானது சில எழுத்துக்கள் மற்றும் சொற்களின் சேர்க்கையாக இருப்பினும் அவை சமுதாயத்திற்குப் பல செய்திகளைத் தர வல்லனவாகத் திகழ்கின்றன. பெயர்களை ஆழ்ந்து ஆராய்வதன் மூலம் மக்களின் மனநிலை மற்றும் பண்பாட்டினை உணர்ந்து கொள்ளலாம். பெயர்களை வகைப்படுத்தி ஆராயும் போது ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் சமுதாயத்தின் மனநிலை, பண்பாடு, நம்பிக்கை, புதுமையாக்கம் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

ஒருவனுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டவும் உதவும் பெயரானது அவனுடைய பழக்க வழக்கங்கள், மனநிலை மற்றும் விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டுவதாக உள்ளது.

பழங்காலச் சமுதாயத்தில் பெயர் தேர்வு செய்யும் முறை பற்றி மனுதர்ம சாஸ்திரமும், கிரஹிய சூத்திரங்களும் சில நெறிகளைக்

கூறியுள்ளன. சாதி அடிப்படையில் பெயர் சூட்டும் முறையை இவை வலியுறுத்துகின்றன. பொதுவாக இந்து சமயத்தாரிடம் குழந்தை பிறந்த நட்சத்திரத்தின் அடிப்படையில் பெயரிடும் வழக்கமும் முன்னோரின் பெயர்களைச் சூட்டும் வழக்கமும் இருந்து வந்தன. ஆனால் தற்போதைய நடைமுறையில் இவ்வழக்குகள் அரிதாகவே உள்ளன.

பெயர் தனித்தன்மை வாய்ந்தததாகவும், முக்கியத்துவம் உடையதாகவும் இருப்பதால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடும் போது ஆழ்ந்த கவனம் செலுத்துவதனைக் காணலாம்.

சமுதாயத்தின் நம்பிக்கை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பெயர் அந்தச் சமுதாயத்தின் மனநிலைக்கு ஏற்ப மாறுதல்களை அடைகின்றது. காலந்தோறும் மக்களின் மனநிலை மாறுவதற்கு ஏற்பவும் பெயரின் தன்மையும் அமைப்பும் மாறுகின்றன.

தெய்வப் பெயர்களை மக்கட் பெயர்களாகச் சூட்டும் வழக்கம் சமுதாயத்தில் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. தெய்வப் பெயர்களைச் சூட்டுவதனால் தெய்வத்தின் அருளைப் பெற முடியும் என நம்பியிருந்தனர். தெய்வப் பெயர்களை உச்சரிப்பதன் மூலம் அரக்கர்களும் நற்கதி அடைய முடியும் என்பதனை ஸ்ரீமத்பாகவதம் காட்டுகின்ற 'அஜாமினன்' என்ற பாத்திரம் மூலம் உணரலாம்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற துறைகளின் வளர்ச்சி காரணமாக இன்றைய சமுதாயத்தின் தெய்வப் பெயர்களின் முக்கியத்துவம் குறைந்து வருவதனைக் காண முடிகின்றது. தற்போதைய அறிவியல் வளர்ச்சியினால் சமுதாயத்தில் இறை நம்பிக்கையும் குன்றி வருவதனைக் காணலாம். இதன் காரணமாக மக்கள் தெய்வப் பெயர்களைத் தவிர்த்துப்பல நவீனப் பெயர்களை விரும்பிச் சூட்டிக்கொள்கின்றனர். தற்போது கடினமான தெய்வப் பெயர்களை விடச் சுருங்கிய வடிவிலான எளிமையான, இனிமையான பெயர்களையே சமுதாயம் விரும்புகின்றது.

சோதிடத்தில் நம்பிக்கையுடையவர்கள் தங்கள் வாழ்க்கைச் சிறப்புக்குப் பெயரும் காரணமாக அமையும் என்பர். எண் கணிதச் சோதிட முறையில் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கும் ஒரு எண் மதிப்பு உண்டு. இவ் எண்கணிதச் சோதிட அடிப்படையில் ஒருவனுக்குப் பெயர் சூட்டினால் அவனுடைய வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பது சோதிட நம்பிக்கை.

இலக்கியம் சமுதாயப் பண்பாட்டினை வெளிப்படுத்துவது போல, மக்கள்பெயர்கள் அச்சமுதாயத்தின் நம்பிக்கை, மனநிலை ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

DR. V. VENUKUMAR VALUE OF PERSONAL NAMES AND ITS SOCIAL SETTINGS

Anthroponomastics is an emerging field of research which deals with Personal names. Although names are the sum of the few alphabets and words, still they convey certain messages of our society. We get an insight into human society, human mind and culture by a research on names. By categorising research on names in different areas, one can understand the beliefs, mental make up, culture and modernity of that society.

Names are absolutely essential for men to introduce themselves to differentiate one man from another. In course of time the name acquired a sentimental value. They also reflect the culture, one's likes and dislikes and tendencies of one's mind.

In olden days there were several guide lines for selecting the names. The Manusastra and Gragya sutras give us some rules about it. They outline the time for naming of a child with reference to his caste. In Hindu families the names are selected according to the star in which the baby was born. In most of the families the custom was to name children after Grandparents. But this custom of naming is not popular now-a-days because of the inclination to shorter names.

Because names are so individualistic and therefore important, great care is taken by parents to select good names for their child.

Personal names are chosen under strange mental conditions and based on one's beliefs. Names change according to the conditions prevalent in society and the time as also to the mental state of its people. As men's mind change and vacillate as centuries advance, names too undergo changes from time to time.

It has been an ancient practice to name some one after preferred Gods/Goddesses. It was believed that, while calling the child named after the God, would be blessed. Our scriptures like the Bhagavatham abound in examples of how tyrants like Ajamilan were blessed by the Lord and forgiven his sins all because he called the Lord Narayana while breathing his lost. He was in truth calling his youngest son names `Narayana'. It was also considered to be one

form of worship of God and have come to stay as `Personal names' as well.

An agewise grouping of personal names reveals the fact that deity names are not much in vogue today. Advances in Research, science, technology and general world conditions where rationalism prevail have lessened the importance of deity names. Today science has taken away spiritualism and implicit faith in God to such an extent that man believes he has technology in his hands to solve all problems and could do without His grace and therefore resort to invent new fangled names. Today man wants short sweet, simple names not complicated God names.

Believers in Astrology wish their words to be lucky and to this end choose names which total up to a good auspicious numbers. Based on numerology every English alphabet has a value and has a number for it. We even believe that a numerologically perfect name can even change one's fate and destiny.

We also see that when surveyed on the basis of age, meanings, structure, names reveal the mental make up of the people of that era. Just as the literature is an index of society and culture so too names are a mirror of that society's value and mental make up.

வேலுசுவாமிசுதந்திரன், முனைவர் ஆ. கல்லல்ல கருத்துக் கருவூலங்கள்

மன்னர்களின் கலைப்படைப்புக்களை கலைமாட்சி பொங்கும் மாமல்லையில் கண்டுகளிக்கலாம். கடற்கரைக்கோயில் கட்டடச் சிற்பங்களின் உன்னத எடுத்துக்காட்டாகும். கருவறையின் உட்புறச் சுவரில் சோமாஸ்கந்த புடைச்சிற்பம் அழகுக் கலைக்கோலம் காட்டுகிறது. சோமாஸ்கந்தமூர்த்தி என்பது சிவன் பார்வதி இருவருக்குமிடையில் முருகனைக் கொண்டதாகும். இவ்வமைப்பு முறை பல்லவர்க்கேயுரிய கலைப் பணியாகும். சோழமன்னர்கள் கட்டிய திருக்கோயில்களில் இவ்வித அமைப்புமுறை இடம்பெறாது. சில முற்காலச் சோழர் கோயில்களில் பின்புறச்சுவரின் மாடக்குழியில் சோமாஸ்கந்தமூர்த்தி சிற்பம் முழு உருவில் இடம்பெறும். குழந்தைச்செல்வத்தின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டவே இச்சிற்பம் கருவறையில் இடம் பெறுகிறது.

திரிபுராந்தகச்சிற்பம் சிவன் முப்புரத்தை எரித்ததைக் குறிக்கும்.

மூன்று அசுரர்கள் கட்டிய கோட்டையைச் சிவன் அழித்ததாகப் புராணங்கள் கூறும். ஆனால் தமிழ்ச் சித்தர் திருமூலரோ முப்புரமென்பது மும்மலமாகுமெனக் குறிப்பிடுகிறார். ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்கள் வாழ்க்கையை மறைத்துவிடும் கரிய இருளாகும். மல இருள் நீங்கி அருள் ஒளி கிடைக்கவே சிவன் இத்தோற்றமெடுத்தான் என்றுரைப்பதே மிகப் பொருத்தமாகும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் நீங்கினால் ஆன்மா பரமாத்மாவைச் சென்றடையுமென்பதை உணர்த்திக்காட்டுவது தட்சிணாமூர்த்தி சிற்பமாகும்.

ஒரு பகுதியில் சிவனையும், மற்றொரு பகுதியில் திருமாலையும் உடைய அரிஹரர் சிற்பம் பரம்பொருள் ஒன்றே என்ற உயர்ந்த உன்னதக் கருத்தைக்காட்டுகிறது. ஆணையும் பெண்ணையும் இணைத்துக்காட்டும் அர்த்தநாரீசுவரர் சிற்பம் ஆணும், பெண்ணும் எல்லாத்துறையிலும் சம உரிமை பெற்று வாழ்ந்தால் வாழ்க்கை வளம்பெறும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுகிறது. மணக்கோலம் காட்டும் கல்யாணசுந்தரர் சிற்பம் வாழ்க்கையில் இல்லறத்தின் இன்றியமையாமையை இனிதே இயம்புகிறது. தஞ்சைக் கலைக்கூடத்திலிருக்கும் துவாரபாலகர் சிற்பமொன்று சாளுக்கிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். சிற்பத்தின் பீடத்தில் 'கல்யாணபுரமெரிந்து கொடுவந்த துவாரபாலகர்' என்ற கல்வெட்டுக் குறிப்புள்ளது. எதிரிகளின் கலைச்செல்வங்களை அழிக்காது பண்பாடு காக்கும் பெருமை தமிழ் மன்னர்களுக்கேயுரியது. சிற்பங்கள் காட்டும் இக்கருத்துக்கள் எல்லா நூற்றாண்டிற்கும் நற்கருத்தாயமையுமெனலாம்.

DR. A. VELUSAMY SUDHANTHIRAN NOT MERE STONES BUT STORE-HOUSE OF THOUGHTS AND IDEAS

The Pallava kings were the first and foremost among the Tamil kings to deserve the title of Founders of art in stone. Mamallapuram presents a grand feast to the eyes of the visitors with its beautiful rock-cut temples. One can see there not only the great sea but also stones which are the treasures of grand thoughts. The shore temple, kissed by the sea waves is the embodiment of Pallava art and architecture. The inner wall of the sanctum sanctorum is beautiful with the presence of the bas-relief, representing Somaskandamurti. In some of the early temples of the Cholas, the deity is present in the niches in high-relief form. The diety of Somaskanda is not a

mere sculpture, but imbibes a noble idea for leading a good life. It expresses a message to the world that it is the good family, where happy children are smiling and screaming, crying and crawling. This deity has been installed in the Sanctum sanctorum only to emphasise the importance of child - wealth in a family.

According to the·Puranas, the image of Tripurantaka, is the embodiment of Siva's destruction, of the triple cities built by the three asuras. But according to Thirumoolar, it is symbolic of the effacement of three impurities (malas) of human mind anavam (S-consciousness, ego)'Kanmam (fruits of action) and Mayai (illusion) which like darkness hinders realization of divinity. Siva's victory is again a symbol of man's conquest over the malas and living a life of divine peace and contentment. they stands as beacon-lights guiding the humanity in the path of ideal life.

Another deity bearing the significant spiritual message is that of Dakshinamurti. It stresses the truth that when the three malas are gone, the soul reaches god. The statue of Harihara-siva on one side and vishnu on the other, embodies the truth that god is one though addressed in several names. The sculpture of Ardhanarisvara (Partly male and partly female) stresses equality of men and women. The importance of wedded life is expressed by yet another sculpture of Kalyana-sundara. It is worth mentioning that Thiruvalluvar places his chapter on saintly life only after that of wedded life.

The ancient Tamil kings conquered many Northern kingdoms, destroyed towns and cities and got their rulers imprisoned but never touched the statues. They brought many of them safe to their countries. This signifies the fact that the Tamil Kings evinced keen interest in sculpture and took pains to preserve them at all costs. This cultural revelation through the sculptures speak highly of the refined and unpolluted politics of the Tamil kings. An image of Dvarapalaka, being kept in the Thanjavur art gallery, was brought after the conquest of Kalyanapura, the capital of the Chalukya kingdom and this is attested to by an inscription carved on the pedestal of the image itself. The image of the Navagrahas, being in the form of the chariot, drawn by horses, present in the Gangai Kondacholapuram temple is also one such brought from North.

These sculptures are not mere stones but stored houses of noble thoughts, treasures of great ideas and embodiments of an excellent culture.

ஜகந்நாதராஜா, மு.கு. சமண பௌத்தத் தத்துவ வேறுபாடுகள்

வேத மரபை எதிர்ப்பதிலும் கடவுட் கோட்பாட்டிலும் மறுபிறவிக் கோட்பாட்டிலும் ஒற்றுமையுடைய சமண, பௌத்தத் தத்துவங்களின் பொது நோக்கு- இவ்விரு தத்துவக் கோட்பாடுகளின் அடிப்படை வேறுபாடுகள் - சமணரின் இரத்தினத்திரயம் (மும்மணிகள்) - பௌத்தரின் திரிசரணம் இடையே உள்ளவேறுபாடு: சமணம் நிரந்தர ஆன்மாவை ஏற்கும் - பௌத்தத்தின் அனாத்ம வாதம்.

சமணத்தின் அனேகாந்த வாதம் எனப்படும் சியாத் வாதம் - புத்தரின் ஏகாந்த வாதக் கொள்கை உயிர்களைப் பகுக்கும் முறையில் சமணமும் பௌத்தமும் வேறுபடுதல் - தொல்காப்பியரின் உயிர்ப்பகுப்பும் சமணமும் நீதிநெறிக் கோட்பாட்டில் - சமணமும் பௌத்தமும் வேறுபடுதல் - சமணத்தில் புலால் மறுத்தலும் பௌத்தத்தில் புலால் அனுமதித்திருப்பதும் துறவு நிலையில் இருதத்துவக் கோட்பாட்டில் உள்ள வேறுபாடுகள் - சமணநூல்கள் பிராகிருதத்திலும் பௌத்த நூல்கள் பாலியிலும் இருத்தல் - சமண அளவையியலுக்கும் பௌத்த அளவையியலுக்கும் உள்ள வேறுபாடுகள்.

தத்துவப் பரிபாடைச் சொற்களிலும் வேறுபாடுகள் - சமணத்தில் 'புத்கலம்' என்ற சொல் பொருளைக் குறிக்க, பௌத்தத்தில் அதே சொல் ஜுவனைக் (ஆன்மா) குறிக்கிறது.

சமண பௌத்த மதங்கள் தமிழகத்தில் பரவியமை. மணிமேகலையில் காணும் பௌத்தக் கருத்துகள், நீலகேசியில் காணும் தருக்கவியல் தத்துவக் கண்ணோட்டம் - மணிமேகலை, நீலகேசி ஆகிய இரு காவியங்களின் சிறப்பும் இதன் மூலம் விளக்கம் பெறும் சமண பௌத்தத் தத்துவ வேறுபாடுகளும், இவ்விரு காவியங்களும் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் படவேண்டிய தேவை.

ஜமீர் பாஷா, டாக்டர் ஏ. அறுவை சிகிச்சையின் புதிய பரிமாணங்கள் - தொலைக்காட்சி மூலம் அறுவை சிகிச்சை

அறுவை சிகிச்சை முறையில் முதன்முதலாகத் 'தொலைக்காட்சி அறுவை சிகிச்சை முறை' தொடங்கப்பட்டுள்ளது. இது நவீனமானதும்

புதுமை ஆனதும் ஆகும்.

உடம்பில் உள்ள வியாதிகளைக் குணப்படுத்துவதற்கு உடம்பின் மேல்பகுதியை அறுக்காமலே உள்நோக்கிக்கருவி மூலம் அறுவை சிகிச்சை செய்வது இந்தத் தொலைக்காட்சி முறையின் தனித்தன்மையாகும்.

தொலைக்காட்சி அறுவை சிகிச்சையின் பல குறிப்பிடத்தக்க அம்சங்களாவன.

பித்தப்பைக் கற்கள், பித்தப்பை அழற்சி

இரைப்பைப்புண், இரைப்பை அடைப்பு

அப்பெண்டிசைடிஸ், குடல்வால் அழற்சி

கர்பப்பைக் கோளாறுகள், சூல்பைக் கட்டிகள்

குழந்தையின்மையால் ஏற்படும் கர்பப்பைக் கோளாறுகள்

குடல் இறக்கம், ஹெர்னியா

ஆண்களுக்கு நரம்பு சுருண்டு கொள்வதால் ஏற்படும் ஆண்தன்மைக்குறைவு.

நீர்ப்பை நீர்த்தாரைக் கட்டிகள், கற்கள் போன்றவை யாவற்றையும் இந்த நவீன முறையால் அறுவை இன்றியே குணப்படுத்தலாம்.

இனம் கண்டறிய முடியாத வயிற்றுவலியின் மூல காரணத்தை அறியலாம்.

வயிற்றுக்குள் உள்ள கட்டிகளை நோக்குதல், நீக்குதல், திசுப்பரிசோதனை போன்றவற்றை இந்த முறையால் செய்யலாம்.

செய்முறை - தொப்புள் அருகில் சிறிய அளவில் ஒரு துவாரம் போடப்படுகிறது. அதன் வழியாக சிப்கேமரா வயிற்றுக்குள் செலுத்தப்படுகிறது. வயிற்றுக்குள் உள்ள வியாதிகள் பற்றிய முழு விவரமும் சிப்கேமரா மூலம் வெளியே உள்ள தொலைக்காட்சிப் பெட்டியில் தெரிகிறது. வயிறு, குடல், இரைப்பை, கர்பப்பை, பித்தப்பை, நுரையீரல் போன்றவற்றில் என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன என்பது வெளியே உள்ள தொலைக்காட்சிப் பெட்டியில் சிப்கேமரா மூலம் தெரிகிறது. டாக்டர் அந்தக் குறிப்பிட்ட வியாதியை - கோளாறை நீக்குவதற்கு முதலில் துவாரம் போட்ட இடத்திற்குப் பக்கத்தில்

இன்னொரு துவாரமிட்டு, அந்தத்துளை வழியாக அறுவை செய்கிறார். ஆபரேஷன் செய்வதற்கான கருவிகள் மிக மெல்லியதாகவும் - நூலிழை போன்றும் அமைந்துள்ளன. சிப்கேமரா வயிற்றுக்குள் உள்ள அனைத்து உறுப்புகளையும் துல்லியமாகக் காட்டுகிறது. டாக்டர் வெளியே நின்றுகொண்டே சிறிய துவாரத்தின் மூலம் அனைத்து அறுவை சிகிச்சைகளையும் குறுகிய நேரத்திற்குள் முடித்துவிடுகிறார். நோயாளிக்கு எந்தவிதமான சிரமமுமின்றி அறுவைசிகிச்சை முடிந்துவிடுகிறது. இந்த அற்புதச் சிகிச்சை முறைதான் ஷாநவாஸ் நர்ஸிங் ஹோமில் துவக்கப்பட்டுள்ளது.

நவீன சிகிச்சையின் சிறப்பம்சங்கள்.

இந்தத் தொலைக்காட்சி அறுவை சிகிச்சை மூலம் பெரிய அறுவை சிசிச்சை நோயாளிக்குத் துன்பமின்றிச் செய்யப்படுகிறது.

மூன்று நாட்களிலிருந்து ஐந்து நாட்களுக்குள் வீடு திரும்பிவிடலாம்.

அறுவை சிகிச்சையின் அடையாளமாக, ஒரு சிறு தழும்பு தவிர, வேறு எதுவும் உடம்பில் இருக்காது.

இரத்தக்கசிவு இருக்காது.

அறுவை சிகிச்சை நடந்த அடுத்த நாளில் இருந்தே சாதாரணமாக உணவு அருந்திக்கொள்ளலாம்.

அடுத்த நாளே நடக்கவும் செய்யலாம்.

மருத்துவமனையில் தங்குவதற்கும், மருத்துவமனைக்கும் ஏற்படும் செலவினங்களில் மிச்சமுண்டாகிறது.

இந்த அறுவை சிகிச்சைக்குப்பிறகு வழக்கமாகச் செய்யும் எந்த வேலையையும் வழக்கம்போல் செய்யலாம்.

பின் விளைவுகள் எதுவும் இந்தச் சிகிச்சை முறையால் ஏற்படாது.

தழும்பில் ஏற்படும் வலி, பின்னால் உண்டாகும் ஹெர்னியா போன்ற கோளாறுகளும் இருக்காது.

ஜான் பிரிட்டோ, முனைவர் எஸ். பழந்தமிழரின் குறிஞ்சிநிலம் - ஒரு தாவரவியல் பார்வை

இலை, முறி, தளிர், தோடு, மடல், ஓலை புறக்காழன, அகக்காழன பற்றிய தொல்காப்பியக் குறிப்புக்களை (மரபியல் 630-33) ஆய்வுசெய்து

இவற்றில் தாவர வெளிஅமைப்பியல் (External Morphology), உள்ளமைப்பியல் (Anatomy), வகைப்பாட்டியல் (Taxonomy), செயலியல் (Physiology), சூழ்நிலையியல் (Ecology) என்கிற தாவரவியலார் அணுகிய அறிவியல் முறை இருத்தலை ஆய்தல்.

தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்கள் 640, 642 - இல் பேராசிரியர் கூறியுள்ள உரை - இவற்றில் ஊகம், புல், சிழகம் புல், பஞ்சாய் என்ற தாவரவியல் வகைப்பாட்டுத் தன்மை இருத்தலைப் பேசுதல்.

நிலையுயிரியல் பற்றிய தாவரவியலார் கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டுதல்.

திணைப்பிரிவில் காணலாகும் தாவரவியல் கோட்பாடுகள் பற்றி விளக்குதலும் இக்கட்டுரையின் ஒரு கூறாக அமைகிறது.

குறிஞ்சி நிலத் தாவரவியல் கோட்பாடுகள் தாவரப்பூக்களில் தனித்துத் தோன்றுபவை (Solitary), கொத்தாகத் தோன்றுபவை (Infloresence) என்று வகைப்படுத்தித் தாவரவியலார் ஆய்வர். இந்த ஆய்வு முறையைச் சங்க இலக்கியங்களில் உள்ள குறிஞ்சிநிலத்தாவரப் பகுப்புக்குப் பொருத்திப்பார்த்தல்.

'மெல்லிணர் வேங்கை' (பதிற்.14:11) என்று வேங்கை மலரும் 'விலங்கிணர் கொன்றை' (கலி.102) என்று கொன்றை மலரும், 'இணர்' என்ற சொல்லாட்சியுடைய பூக்களில், மலர் அடுக்குமுறை, மகரந்தத்தாள் எண்ணிக்கை, அல்லி வட்டங்களில் திருகு அமைப்பு போன்ற ஒற்றுமைகள் இருப்பதை ஆய்தல். இவை கொத்துப் பூக்களாக இருப்பதால் 'இணர்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டன.

'தனிப்பூ'க்கள் அனைத்தும் சங்கப்பாடல்களில் 'கருங்கோல் குறிஞ்சி பூ' 'குறிஞ்சிமதனில் வான்பூ'

என்பன போல அழைக்கப்பட்டுள்ளதை விளக்குதல்.

நள்ளிருள்நாறி (குறிஞ்சிப்பாட்டு 94 தற்காலத்தில் 'இருவாட்சி' அதாவது 'இருள்வாசி') இரவில் மகரந்தச் சேர்க்கை கொள்ளுதல் (night pollination) இரவில் வண்டுகளைக் கவர்வதற்காக வெண்மை நிறம் பெற்றிருத்தல் பற்றி ஆய்தல்.

ஆம்பல் (நிம்பேயா பூபொசன்ஸ்) என்ற தாவரத்தில் உட்துளை உள்ள தன்மையைத் தாவரவியலார் கூறியுள்ளதையும், 'நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள் கால்' (நற்.6:1-2)

போன்ற ஆம்பல் முதலியபூக்கள் பற்றிய நுண்ணறிவு சங்கப் பாடல்களில் 'தூம்பு' 'புழல்' என்ற சொற்களால் குறிக்கப் பெற்றிருத்தலையும் விளக்குதல்.

குறிஞ்சி நிலத்தில் வளரும் தாவரங்களாகக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடும் 99 வகைத் தாவரங்கள், இன்னும் சிலவற்றுடன் சேர்த்து 102 குறிஞ்சிநிலத் தாவரங்களின் பெயர் அவற்றின் இனப்பெயர்களைப் பட்டியல் செய்தல்.

பழந்தமிழ்நாட்டில் ஊடுபயிர் (inter cropping) முறையில் கானவர் பயிர்செய்தல் பற்றி விளக்குதல்.

நாகநெடுவழி, நறுந்தாதாடிய தும்பி வேருக்குப் பாறை நெக்கு விடுதல் போன்ற செய்திகளை ஆய்தல்.

தொண்டை நாட்டரசு (அரசமரம்), ஆத்தி, பனை, வேம்பு, தமிழர் வாழ்வில் இணைந்துள்ளதை ஆய்தல்.

DR. S. JOHN BRITTO Land of Kurinci of Ancient Tamils - A Botanical Perspective

The ancient Tamils had divided the landscape into five regions as hill regions (Kurinci), pasture lands (Mullai), agricultural regions (Marutam), maritime tracts (Neithal), and temporary dry, waterless arid region (Paalai) (dreary and desert like region). Floristic wealth in these areas correspond to people's way of life.

In the non-love poetry (Puram Poetry), indigenous flowers of hills such as `Vetci' and others served as symbols with specific meaning. Several flowers are mentioned which are associated with warfare. The life style of the Tamils is very much integrated and deeply associated with concepts of Flora and Fauna. In this essay, an attempt is made to explore the thought of Tamils about these aspects of nature with special emphasis on hill (Kurinci), since Kurinci has again blossomed after twelve years.

An index of Tamil names of trees in the mountain with their botanical names are provided in this essay. Grasses, sedges, herbs, climbers, thorny bushes, trees with soft and hard wood are listed and corretated with today's botanical information and technology.

Facts regarding trees such as Aacha (Yaa tree) are under investigation. From the beginning of Tolkappiar's period to Sangam age and Epic period facts - regarding plants will be codified in this essay.

The botanical classification of Kurinci family is worth noting. Tamil's depiction of biodiversity of Kurinci such as blue Kurinci, red Kurinci, dark Kurinci is revelatory. To make an index of this diversification in genetic level and to make a comparative assessment of information from literature to today's scientific data will be beneficial.

In this research paper, an attempt is made to list out literary names againstt their botanical names. Hill terrain with its floristic biodiversity is evaluated in the light of ancient Tamil literature to unearth useful indigenous information and insight. This would enable us to appreciate Tamil's ancient concept of land, flora and their integration to Tamil culture and livelihood.

ஜெயச்சந்திரன், முனைவர் ஆர். வள்ளலாரின் வாழ்வியல் கோட்பாடு

வள்ளலாரைப் பற்றிய பெரும்பாலான ஆய்வுகள் இலக்கியம், தத்துவம், சமயம், சமயம் கடந்த நெறி ஆகியவை பற்றியே நிகழ்ந்து வருகின்றன. அவர் உருவாக்கிய உயிர் இரக்க நெறியை முழுமையாக ஏற்று வாழ விரும்புவோருக்கு உதவும் வகையில் வள்ளலாரது வாழ்வியல் கோட்பாட்டினை வகுத்தளிக்கவேண்டிய இன்றியமையாப் பணியை நிறைவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இதுவரை உணவு நெறிகள், மருந்து விதிகள் முதலிய வாழ்வியல் செய்திகளைப் பரவலாக அறிந்திருந்தோர்க்குக் கோட்பாட்டு வடிவில் அமைத்தளிக்கும் இக்கட்டுரை உயிர் இரக்க நெறியினருக்கு ஒரு வழிகாட்டுதலாய் அமையும். நித்தியகரும விதி, சில உபதேசக்குறிப்புகள், அருள் நெறி, பேருபதேசம் முதலிய உரைநடை வடிவங்கள், அவா அறுத்தல் முதலிய அருட்பாப் பதிகங்கள் முதன்மை ஆதாரங்களாகவும் தொடர்புடைய பிறதகவல்கள் துணை ஆதாரங்களாகவும் அமைகின்றன.

முழு வாழ்க்கை நெறிக்குரிய செய்திகளைக் கூறுவது வாழ்வியலாகும். வரையறுக்கப்பட்ட உட்கூறுகளைக் கொண்டமையும்

முழுக்கருத்து வடிவமே கோட்பாடாகும். இலக்கியம், தத்துவம், மரணமிலாப் பெருவாழ்வின் படிநிலைகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தவிர்த்து வள்ளலார் நெறியின் வாழ்வியல் செய்திகள் மட்டுமே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சமரச சுத்த சத்திய சன்மார்க்கமே வள்ளலாரது தத்துவம். தனை வள்ளலார் நெறி என்னும் கலைச்சொல்லால் குறிக்கிறோம். இந்நெறி அருள் நெறி, பெரு நெறி (ஒழுக்க நெறி), சோதி நெறி (ஒளி நெறி) எனும் கோட்பாடுகளைக் கொண்டது. இந்நெறிப்படி வாழ்வதே தன் குறிக்கோள் என முடிவு செய்தல் வேண்டும். இந்நிலையில் ஒரு சன்மார்க்கியின் மனத்தில் குறிக்கோள் உருவாக்கம் நிகழும். அந்தக்குறிக்கோளை அடைவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதனைச் சூழலாக்கம் என்கிறோம்.

உடல், மனம், காலம், இடம், குடும்பம், சமுதாயம் எனும் 6 நிலைகளிலும் கவனம் செலுத்தித் தக்க சூழலை உருவாக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட குறிக்கோளாக்கமும், சூழலாக்கமும் அருள் நெறி மற்றும் ஒளி நெறி சார்ந்தவை. சூழலாக்கத்தின் போது பரம்பரையாக ஏற்பட்ட பழக்க வழக்கங்களினாலும் பிறவித் தொடர்புகளாலும் மனித அங்கம் சூழல்மாற்றிகளுக்கு உட்படும். குறிக்கோளுக்கு உகந்த சூழலை மாற்றும் காரணிகளைச் சூழல் மாற்றிகள் என்கிறோம்.

இந்நிலையில் உயிர் இரக்க நெறியினர் உணவு, உறக்கம், காமம், அச்சம் முதலிய நால்வகைச் சூழல்மாற்றிகளை வெல்லும் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனைச் சொல்வதே பெரு நெறி என்னும் ஒழுக்க நெறியாகும். அது நான்கு வகைப்படும். அவை 1. உடல் ஒழுக்கம் எனும் இந்திரிய ஒழுக்கம், 2. மன ஒழுக்கம் எனும் கரண ஒழுக்கம், 3. சீவ ஒழுக்கம் எனும் உயிர் ஒழுக்கம், 4. ஆன்ம ஒழுக்கம் என்பன.

உணவு, உடை, வாழிடம், உழைப்பு, காமம், உடல் தூய்மை, அறப்பண்புடைமை, தியானப்பயிற்சி, மனித சமத்துவம், ஆன்ம நேயம் எனும் அனைத்துயிர் நேயம் ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.

உலகில் உயிர் இரக்க வாழ்க்கை இல்லாது போனால் வலிய உயிர்கள் எளிய உயிர்களை அழித்துவிடும். பின் அவையும் போரிட்டு அழிந்து உலக வாழ்க்கை இல்லாது போகும் எனும் கருத்தின்படி அனைத்துயிர் நேயம் கொண்ட பல்லுயிர்க் கூட்டு வாழ்க்கையே இயற்கையில் சமச்சீர்மையைக் காக்கும். அதற்கு ஏற்ற குறிக்கோளுடைய மனித வாழ்வியலை உருவாக்க இக்கோட்பாடு உதவும். உயிர் இரக்க

நெறியினர் இவ்வுணர்வினைப் பெற்றுப் பிறரையும் உணரச் செய்வர். அவர் மரணமிலாப் பெருவாழ்வை அடைவதற்குத் தம்மைத் தயார் செய்து கொண்டவராய் இருப்பர்.

ஜெயச்சந்திரன், ப்ரதிபா. தமிழ்க் கவிதைகளில் தலித்தியம்

பலநூறு ஆண்டுப் பழமை வாய்ந்த தமிழ்க் கவிதையில் சங்க காலம் தொட்டு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் எண்ணற்ற மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது புதிய வீச்சை உருவாக்கிவரும் தலித் கவிதை குறித்துத் தத்துவநோக்கிலும் படைப்பு நோக்கிலும் பேசுகிறது இக்கட்டுரை.

எளிமையான சந்தங்களால் ஆன சங்ககாலக் கவிதை, பின்னர் வெளிப்பட்ட பல்வேறு பாவடிவங்கள், மேலைநாடுகளில் முதலாளியப் புரட்சிக்குப் பின்னால் உருவான புதுக்கவிதை என்கிற வடிவம் இங்கு அறிமுகமான பின்புலம் இவற்றினூடாக நாம் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை அவதானிக்க முடியும். சந்தத்தைத் துறந்து புதுக்கவிதையாக மாறிய பின்பும் தொடர்ந்து கொண்டிருந்த மேலும் சில வரையறைகளை உதறிவிட்டுப் பேச்சுவழக்கில், கவிதை என்பது பேசும்வார்த்தைகளால் அல்ல பேசும் விதத்தினால் என்பதை உணர்த்தும் விதமாகத் தலித் கவிதை முன்வைக்கப்படுகிறது. உலகெங்கும் விளிம்புகளில் வாழும் மக்கள் திரளினர் சமூகங்களில் மையங்களை நோக்கி உள்ளிழுக்கப்பட்டு மையக்காலச்சாரங்களின் பகுதிகளாய் விளிம்புநிலை மக்களின் கலாச்சாரங்கள் ஆக்கப்படும் இன்றைய சூழலின் பின்னணியில் தலித் சிந்தனையை நாம் விளங்கிக் கொள்கிறோம். தலித் என்ற மராத்தி சொல் இன, மொழி எல்லைகளைக் கடந்து தீண்டப்படாத மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாய் மாறியுள்ளதைக் கவிதைகளினூடாக இக்கட்டுரை கண்டு சொல்லும்.

தலித் கவிதை மராத்தியில் தோன்றிய விதம், அதன் பின்னணி, பிற மொழிகளில் அது உண்டாக்கிய தாக்கம் போன்றவற்றை இக்கட்டுரை பேசும். தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள பிறமொழி தலித் கவிதைகள் குறித்தும், தமிழில் சுயமாக உருவாக்கப்பட்டுள்ள தலித் கவிதைகள் குறித்தும் ஆய்வு செய்யப்படும். பேசு பொருளில், பேசுமொழியில், பேசும் விதத்தில் எவ்விதமாகத் தலித் கவிதை பிற தமிழ்க் கவிதைகளிலிருந்து வேறுபடுகிறது என்பதை விளக்கும். தலித் ஆதரவு தமிழ்க் கவிதைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பரிசீலிக்கும்.

உலக அளவில், மொழியில் இலக்கணத்தின் அதிகாரத்தையும் குலைப்பதாக வெளிப்பாடு கொள்ளும் கறுப்பின மக்களின் இசைப்பாடல்களோடு தலித் மக்களிடையே புழங்கும் பாடல் வடிவங்களின் ஒற்றுமைகளை அடையாளப்படுத்துவது இன்றைய தமிழ்க் கவிதை, உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சந்தித்துள்ள தேக்கத்தை விவரித்து அதிலிருந்து புதிய உடைப்பாகத் தலித் கவிதை எவ்விதம் வந்துள்ளது என்பதை நிறுவுவது. இன்று வெளிவரும் தலித் கவிதைகள் மீதும் விமர்சனங்களை வைத்து அது உள்வாங்கிக் கொள்ளவேண்டிய கூறுகளைப் பரிந்துரைப்பது ஆகிய இவற்றை இந்த ஆய்வு மேற்கொள்ளும். இத்துடன் கூட, உலக அளவில் தலித் கவிதையோடு ஒற்றுமைகள் கொண்ட கறுப்பின மக்கள், பெண்கள், பிற விளிம்புநிலை மக்கள் ஆகியோரின் குரல்களைத் தொகுத்து அவற்றிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டிய சாதகமான அம்சங்களையும் இந்த ஆய்வு விவரிக்கும்.

ஜெயசேகர், முனைவர் எல். தமிழக வளர்ச்சியும் தமிழர் குடிபெயர்வும்

மக்கள் குடிபெயர்வு என்பது மனிதன் தோன்றிய நாளிலிருந்து நடைபெற்றுவரும் ஒரு நிகழ்ச்சியாகும். குடிபெயர்வுபற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் மக்கள் குடிபெயர்வுக்கும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறியுள்ளனர்.

இந்த ஆய்வுக்கட்டுரை 1971 மற்றும் 1981 ஆம் ஆண்டைய தமிழ்நாட்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையிலுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும். இக்கட்டுரையில் குடிபெயர்வுக்குக் காரணங்கள் யாது? வளர்ச்சியடைந்து வரும் பகுதிகளினால் குடிபெயர்வு நிகழ்கிறதா? குடிபெயர்தலால் குடிபெயரும் பகுதிகள் வளர்ச்சியடைகின்றதா? எனும் மூன்று கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த மூன்று கேள்விகளுக்கும் விடையளிப்பதுதான் இந்த ஆய்வுக்கட்டுரையின் சாராம்சமாகும்.

தமிழ்நாட்டு மாவட்டங்களுள் நடைபெற்ற குடிபெயர்வுகள், மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு நடைபெற்ற குடிபெயர்வுகள், பிற மாநிலங்களிலிருந்து தமிழக மாவட்டங்களுக்கு நடைபெற்ற குடிபெயர்வுகள் ஆகிய புள்ளி விவரங்களிலிருந்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1971-ஆம் ஆண்டைப் பொறுத்தவரைத் தமிழகத்தில் 13 மாவட்டங்களும் 1981-ஆம் ஆண்டைப் பொறுத்தவரை 15 மாவட்டங்களும் உள்ளன. பெரியார், புதுக்கோட்டை ஆகியவை

அதிகரிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களாகும். 1971 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தமிழர் குடிபெயர்வையும், தமிழக வளர்ச்சியையும் இந்த ஆய்வுக்கட்டுரை ஒப்பிட்டு நோக்கியுள்ளது.

ஸ்ரீபால், சு. இலக்கியத்தில் (கணக்கில்) காவல்

இக்கட்டுரை காவல்துறையின் தேவை, காவலர் ஆய்வு, காவலர் கடமைகள், பண்டைய நூல்களில் காவல்துறை என நான்கு பகுதிகளாக அமைகிறது.

1 இப்பகுதி ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழில்களில் காத்தல் தொழில் ஏனைய இரண்டு தொழில்களைவிட இன்றியமையாதது என்பதை விளக்குகிறது.

2. பண்டைக் காலத்தில் காவலர் என்னும் சொல் வேந்தனைக் குறித்தது. இன்று மக்களோடு மக்களாய் வாழ்ந்து அவர்களைக் காப்பவரைக் குறிக்கின்றது என்பதை இப்பகுதி விளக்குகிறது.

3. பண்டைக் காலக் காவலருக்கு இருந்த கடமைகளைவிட இன்றைய காவல்துறையினருக்குரிய கடமைகள் மிகுதியாகி வருவதை இப்பகுதி சான்றுடன் விளக்குகிறது.

4. வேதங்கள், புராணங்கள், அர்த்தசாஸ்திரம், புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பாண்டிக்கோவை, கம்பராமாயணம் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள காவல் தொடர்பான செய்திகள் இப்பகுதியில் விளக்கப் பெறுகின்றன. அந்நூல்செய்திகளில் இருந்து இன்றைய காவல்துறையினர், பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டியவை இவை என்பது சுட்டிக்காட்டப் பெறுகின்றது.

விடுபட்ட ஆய்வுச் சுருக்கங்கள்

1. **கிருட்டிணசாமி, முனைவர் வெ.**
தமிழில் குழந்தைப் பாடல்கள் - 298

2. **கோபாலகிஷ்ணன், மா.**
பதினெட்டாம் நூற்றாண்டிறுதியில் இரண்டாம் வீரநாய்க்கரின் தமிழ் உரைநடை - 305

3. **சாமி, பி.எல்.**
சிபி சக்ரவர்த்தியும் அரப்பா நாகரீகமும் 291

4. **சிற்சபேசன், சி.**
தமிழர் புலம்பெயர்வு 299

5. **சேகரன், சாத்தூர்.**
தமிழும் கொரியமொழியும் - 304

6. **ஞானசேகரன், டாக்டர் ஆ.**
டாக்டர் ஹெர்மன் கூண்டர்ட்டின் தமிழ்ப்பணி - 301

7. **தெய்வநாயகம், முனைவர் கோ.**
கிறித்துவத் தேவாலயக் கட்டடத் தத்துவம் - 297

8. **நளினிதேவி, முனைவர் நா.**
தமிழ்ப்புதினங்களில் சமுதாய மாற்றமும் சமநிலை ஆக்கமும் - 292

9. **டாக்டர் நசீம்தீன், முனைவர் பீ.**
தென்னிந்தியப் பழங்குடி மக்களின் வாய்மொழி வரலாறு - 303

10. **முத்து - கண்ணப்பன், முனைவர் கி.**
எழுத்துவடிவத்தின் இன்றியமையாமை - 287

11. **வீரமணி, முனைவர் அ.**
சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களில் எழுத்தாளர்கள் காட்டும் சமுதாயம் - 302

12. **ஸ்ரீகுமார், முனைவர், எஸ்.**
இன்றைய தமிழ்க் கவிதைகளில்அடையாளத் தேடலும்அடையாள மறைத்தலும் - 295

முத்து-கண்ணப்பன், முனைவர் தி. எழுத்து வடிவமாற்றத்தின் இன்றியமையாமை

ஈ.வெ.ரா. பெரியாரின் நூற்றாண்டு விழா நினைவாக 19.10.78 இல் தமிழ்நாடு அரசு தமிழ் எழுத்துகள் சிலவற்றின் வடிவமைப்பில் மாறுதல் செய்யுமாறு உத்தரவிட்டது. அவ்வுத்தரவின்படி ணு, று, னு என்ற எழுத்துகள் ணா, றா, னா என மற்றைய ஆகார நெடில்களுக்கு இடுவது போன்று பக்கத்தில் 'ா' (கால்) போட்டு எழுதப்பட்டு வருகின்றன.

அவ்வாறே ணை, லை, னை, ளை என்ற எழுத்துகளை ஏனைய ஐகார உயிர்மெய் எழுத்துக்களைப் போல் ணை, லை, ளை, னை என ஐகார ஒலியைக் குறிக்கும் 'ை' என்னும் குறியீட்டை எழுத்துகளுக்குப் பக்கத்தில் இட்டு எழுத வேண்டுமெனவும் அவ்வுத்தரவு குறிப்பிட்டது. அம்முறையும் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

தட்டச்சு, அச்சு, தொலையச்சு, கணிபொறி முதலிய சாதனங்கள் வழக்கில் வந்து விரைவாகப்பரவி வருகின்றமைக்கு மேலே கூறியுள்ள மாற்றங்கள் அவசியமானவையே.

ஆனால், பழைய முறையில் எழுதியவர்கள் அவ்வெழுத்துக்களை (ணு, று, னு, ணை, லை, ளை, னை) அப்படியே எழுதிவந்ததில் தவறோ, முறைகேடா இல்லை. பழங்காலத்தில் ஓலைகளில் எழுத்தாணியால் எழுதினர். பின்னர்க் காகிதத்தில் பேனா, பென்சில்களால் எழுதியவர்கள் அம்முறையையே பின்பற்றினர். அச்செழுத்துகளும் அவ்வாறே இருந்துவந்தன.

முன்னோர்கள் (ஓலையிலும், காகிதத்திலும் எழுதியவர்கள்) சுருக்கம், எளிமை, விரைவு கருதி அவ்வாறு எழுதிவந்தனர். ண, ற, ன இவற்றை நெடிலாக்க அவ்வெழுத்துகளின் கீழ்ப் பிறைக் கோடிட்டு எழுதினர். இந்தப் பிறைக் குறியீட்டுக்கும் ஆகாரத்தைக் குறிக்கும் 'ா' (கால்) ஒலியுண்டு. உதாரணமாக 'அ' என்னும் குறிலை நெடிலாக்க 'ஆ' என எழுதுகிறோம். அப்படியானால் இந்தப் பிறைக் குறியீட்டுக்குக் காலுக்கு (ா) உரிய ஒலியுள்ளது என்பது கருதத்தக்கது. மற்ற எழுத்துகளுக்குக் கீழ் இந்தப் பிறைக் குறியீட்டை இட்டால் அவை உகர ஒலிபெறும்.

அடுத்தது ஐகாரம் பற்றிய மாற்றங்கள். அதில் அப்படியொன்றும் பெரிய மாற்றம் இல்லை. முன்னர் ஐகாரக் குறியீட்டை (ை) எழுத்துக்களின் மேல் செங்குத்தாய் இட்டு எழுதினோம். அதாவது ஐகாரத்தைக் குறிக்கும் குறியீடு (ை) சுருக்கமும் எளிமையும் கருதி இரு

சுழிகளில் ஒரு சுழியாக இடப்பட்டது (எ.டு.) ணை, லை, ளை, னை.

எனவே அச்சு, தட்டச்சு முதலியவற்றுக்கு மேலே குறிப்பிட்டுள்ள வடிவ மாறுதல் அவசியமானவையே.

ஆனால், அம்மாறுதல்களை விட மிகமிக அவசியமும் அவசரமும் ஆனவை 'இகர', 'ஈ'கார, 'உ'கார 'ஊ'காரக் குறியீடுகளின் வரிவடிவ மாற்றமேயாம். அம்மாறுதல்களால் அச்சு, தட்டச்சு, தொலையச்சுக்கலை முதலியவற்றில் பல எழுத்துகள் மிச்சப்படும். தேவையான வரிவடிவ மாற்றங்கள் பின்வருவன.

கி, கீ, ஙி, ஙீ, சி, சீ, என இவ்வாறு எழுத்துக்களுக்கு மேலே உள்ள 'இ'கர, 'ஈ'காரக் குறியீடுகளை அவ்வெழுத்துகளில் பக்கத்தில் இணைக்காமல் தனியாகக் குறித்தால் 'இ'கரத்தில் குளியில் பதினேழு எழுத்துகளும் ஈ காரத்தில் பதினேழு எழுத்துகளும் ஆக 34 எழுத்துகள் மிச்சமாகும்.

அவ்வாறே 'உ' கர 'ஊ' கார வரிவடிவங்களும் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

இந்த 'உ' கர 'ஊ' காரங்களுக்கு ஒன்பது குறியீடுகள் உள்ளன.

(எ.டு.)	1 - குறில்	:	பு	
	1 - நெடில்	:	பூ	2
	ஷ - குறில்	:	கு	
	ஷ - நெடில்	:	மூ	3
	உ - நெடில்	:	கூ	
	து - குறில்	:	நு	
	தூ - நெடில்	:	நூ	2
	ு - குறில்	:	ஜு	
	ூ - நெடில்	:	ஜூ	2

ஆக மொத்தக்குறியீடுகள் **2+3+2+2 = 9** (ஒன்பது)

'உ'கர 'ஊ'காரங்களைக் குறிக்க ஏற்கனவே கிரந்த எழுத்துகளுக்குக் கையாளும் 'ு' 'ூ' இக்குறியீடுகளைக் கையாளலாம்.

(எ.டு.) கு (கு) குறில், பூ (பூ) நெடில்

இம்முறையில் இவ்விரண்டு குறியீடுகளையும் 'உ'கர 'ஊ' காரங்களைக் குறிக்கப் பயன்படுத்தினால் பல எழுத்துகள் மிச்சப்படும்.

'உ'கர 'ஊ'காரங்களைக் குறிக்க இப்பொழுது வழக்கில் உள்ள ஒன்பது குறியீடுகளைப் பயன்படுத்துவதால் கற்போருக்கும் கற்பிப்போருக்கும் மிகுந்த குழப்பமும், சிக்கலும் கால விரயமும் ஏற்படுகின்றன.

எனவே 'இ'கர 'ஈ'கார, 'உ'கர 'ஊ' காரக் குறியீடுகளை உடனடியாக மாற்றியமைப்பது இன்றியமையாதது.

DR. T. MUTHU - KANNAPPAN INTRODUCING CHANGES IN WRITTING THE FORM OF TAMIL ALPHABETS

On the occasion of the Birth Centenary of `Periyar' E.V.R., in his memory, changes in the writing of a few Tamil alphabets were ordered by the Government of Tamil Nadu on 19-10-1978. Accordingly, the alphabets 'ணா', 'றா' and 'னா' are being written, respectively as 'ணா', 'றா', 'னா' in same manner as the other long vowels connoting 'ஆ', are written, with a symbol 'ா' placed adjecent to them.

Similarly, this order stipulated that, the alphabets, 'ணை', 'லை', 'ளை', and 'னை' be written as 'ணை' 'லை' 'ளை' and 'னை' that is. in the same manner as the other vowel-consonants connoting 'ஐ' are written, with the symbol 'ை' adjacent to them. this practice is also in vogue.

In as much as the `Type-Writing', `Printing', `Telex messaging' and `Computerising' have spread rapidly and come to stay, the above mentioned changes are indeed necessary.

But there was nothing erroneous or improper when people wrote adopting the old practice (of writing 'ணா', 'றா', 'னா', and 'ணை', 'லை', 'ளை', while writing on palm leaves with a sharp instrument called `Ezhuththani' (எழுத்தாணி). Latter when people wrote with pencil or pen on paper, the same method was adopted. So also printing these alphabets were adopted.

Our forefathers, for the sake of brevity, easy writing and speed, wrote in that manner. They applied the `Crescent shaped symbol' underneath the alphabets 'ண' 'ற', and 'ன' to devote long vowels, for example 'ணா' 'றா' 'னா'. This `Crescent symbol' itself was able to connote the intonation of 'ா' in the long vowel 'ஆ'. To convert the

short vowel 'அ' into a long vowel, we write it as 'ஆ' Since that is so, it is worth considering the Crescent symbol " ' as having the intonation of 'ா'. On the other hand under other alphabets, if this Crescent symbol is adopted, they attain the intonation of the short vowel 'உ' - for example கு, மு and so on.

Next come the changes relating to the vowel 'ஐ'. There is no drastic change in this. To connote 'ஐ' we wrote, formerly, the symbol 'ை' vertically, that is, as 'ணை', 'லை', 'ளை', 'னை'. This would mean, for the sake of brevity and easy writing he two curved 'ை' was shortened and writen with one curve only as ணை, லை, ளை, and னை.

The changes now ordered are no doubt essential to facilitate printing, type-writing etc. But, a much more important and necessary change in the form of writing the symbols connoting the intonations of 'இ', 'ஈ', 'உ', 'ஊ', require our immediate and urgent attention. But introducing these changes, we will be saving many alphabets in printing, typewriting, telexing and computerising.

The following are the necessary changes for adoption.

'கி', 'நி', 'நீ', 'சி', 'சீ' etc. are written with symbols of ி,ீ , placed on top of the alphabets to denote the intonations of 'இ', and 'ஈ'. If we justapase these two symbols,without joining them to the respective alphabets, but by their sides, we will be saving as many as 17 alphabets to denote the cintonation of 'இ', and 17 alphabets to denote the intonation of 'ஈ'.

Similar are the changes to be effected fortwith in respect of the intonation pertaining to 'உ' and 'ஊ'. There are nine symbols to denote the intonation of 'உ' and 'ஊ' as below:

'ſ', - for `short' vowel, viz, 'பு',

' ', - for `long vowel, viz. 'பூ', 2

ʔ, - for `short' vowel, viz. 'ரு',

• ', - for long vowel, viz. 'மு',

'உ', - for long vowel. viz. 'கூ', 3

'ſ, - for short vowel 'நு',

'ஙா', - for long vowel *'ஙா'*, 2

'ு', -for short vowel *'ஜு'*,

'ூ', for long vowel *'ஜூ'*

Those are 2+3+2+2+ = 9 symbols.

We may adopt, instead the symbols already in existence in the writing of Grentham. viz. *'ு'*, to denote the short vowel intonation and *'ூ'* to denote the long vowel intonation.

(e-g) - *'கு'* *(கு)* (Short)

'பூ' *(பூ)* - (long)

By the adoption of these symbols a great many (alphabets in printing etc.) can be saved.

By continuing the symbols for denoting the intonations of *'உ'* and *'ஊ'* a good deal of difficulty is experienced in teaching and learning and generates not only confusion, but also a waste of time and energy.

Therefore, it will be seen, that the symbols for denoting *'இ'* and *'ஈ'*, *'உ'* and *'ஊ'* require changes that are indispensable and urgently necessary.

சாமி, பி.எல். *சிபி சக்கரவர்த்தியும் அரப்பா நாகரீகமும்*

சிபிச் சக்கரவர்த்தியின் கதை புறநானூற்றுப் பாடல்களில் வழங்கியுள்ளது. புறநானூற்று 37, 39-ஆம் பாடல்களில் மாறோகத்து நப்பசலையாரும், புறநானூற்று 43-ஆம் பாடலில் தாமப்பல் கண்ணனாரும் புறநானூற்று 46-ஆம் பாடலில் கோவூர்க் கிழாரும், புறாவுக்காகத் தன் இன்னுயிரை ஈந்த சிபிச்சக்கரவர்த்தியின் கதையைக் கூறியுள்ளனர். சோழ மன்னர்கள் செம்பியர் என்றும் புறாவுக்கு உயிர் ஈந்த சிபிச் சக்கரவர்த்தியின் வழித்தோன்றல்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனால் அக்கருத்து எந்த அளவுக்கு உண்மை என்பது பின்னர் ஆராயப்படும். இலண்டனில் தமிழ்மொழி கற்பித்த ஆங்கில நாட்டுத் தமிழறிஞர் ஜான்மார் என்பவர் பாண்டியர் பெயர் மகாபாரதத்தில் கூறப்பட்ட பாண்டவர் என்ற பெயரைத் தழுவிவந்ததாக, ஆங்கிலமொழியில் அவர் எழுதிய பத்துப்பாட்டு

ஆராய்ச்சி என்ற நூலில் கூறியுள்ளார். ஆனால் புறநானூற்றின் மூன்றாம் பாடலிலும் அகநானூற்றின் 70-ஆம் பாடலிலும் பாண்டியமன்னர்களைக் 'கவுரியர் மருக' என்று அழைத்திருப்பதால் பாண்டவர் என்ற சொற்கும் பாண்டியர் என்ற சொற்கும் எந்தத் தொடர்புமில்லை என்பது நன்கு தெளிவாகும். வெறும் ஒளி, ஓசை ஒப்புமையை வைத்துக் கொண்டு இவ்வாறு முடிவுக்கு வந்தது அறிவுப்பூர்வமான ஆராய்ச்சியன்று. புறநானூற்றுப் பாடல்களில் சிபி என்ற பெயர் வழங்கவில்லை. பெயர் குறிப்பிடாமலேயே சிபிச் சக்கரவர்த்தியின் கதை கூறப்பட்டுள்ளது. புறநானூற்றில் நாலு பாடல்களிலும் கூறப்பட்ட இக்கதை பின்னர் சிலப்பதிகாரத்திலும் கலிங்கத்துப்பரணியிலும், மூவருலாவிலும், தக்கயாகப்பரணியிலும் சோழ மன்னர் பரம்பரையைப் புகழ்வதற்காக வழங்கியுள்ளது. இக்கதை கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையறைக்குள் எழுத்து வடிவில் கொண்டு வந்த மகாபாரதத்தில் வழங்கியுள்ளது. மகாபாரதத்தில் மூன்று, நான்கு வகையாகக் (Versions) கூறப்பட்டுள்ளது. இக்கதை சில மாற்றங்களுடன் வடமொழியிலும், பிராகிருத மொழியிலும் வேறு பல மொழிகளிலும், இந்து மத, பௌத்த சமண மதக் கதைகளில் வழங்கியுள்ளது. இக்கதை பௌத்தர்களுடைய செல்வாக்கால் திபெத்து நாட்டிலும் சீனாவிலும் பரவியதோடு இசுலாமிய நாடுகளான பெர்சியா, துருக்கி, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் பரவியதை டியெட்டர் ஆர் காப் என்ற ஜெர்மானிய அறிஞர் குறிப்பிட்டுள்ளார். இக்கதை பற்றிய தகவல்களை விரிவாய் ஆராய்வதே இக்கட்டுரையி நோக்கம்.

நளினிதேவி, முனைவர் நா. தமிழ்ப் புதினங்களில் சமுதாய மாற்றமும், சமநிலை ஆக்கமும்

உலகின் தொன்மை சான்ற நமது இனிய தமிழ் மொழி, அன்று முதல் இன்று வரை இந்திய, உலகப் பண்பாட்டுக்குக் காலந்தோறும் சிறப்பான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது என்பது நடுநிலைச் சான்றோர் மறுக்க இயலா உண்மை.

இன்றைய உலகின் அனைத்து நிலைகளிலும் குடியாட்சி, பொதுவுடைமை அரசுகளின் நோக்கம் சமநிலைச் சமுதாயம் என்பதே வளர்ந்த, வளரும் நாடுகள் அனைத்தும், அரசியல், பொருளியல், சமுதாயவியல் அடிப்படையில் இதுநாள் வரை மேற்கொண்ட சமநிலைச் சமுதாய முயற்சிகள் இன்றும் முழு வெற்றி பெற இயலவில்லை. இதற்குரிய காரணம் உள்ளங்கை நெல்லிக்கனி மக்கள் தொகையில் சரிபாதி எண்ணிக்கை உடைய மகளிர், இந்த அறிவியல் உலகிலும், சமநிலை பெறாதவராகவே உள்ளனர். அத்துடன் அரசுகள்

மற்றும் தொழிலாளர், சீர்திருத்த இயக்கங்கள் போன்றவை மேற்கொள்ளும், திட்டங்கள் அல்லது போராட்ட முயற்சிகள் யாவும், மகளிர் சமநிலை நிலையை உள்ளடக்கியும், முதன்மையாகக் கொண்டும் அமையவில்லை என்பது தெளிவு.

சமுதாயத்தை, அதன் மாற்றங்களோடும் சிக்கல்களோடும் பதிவு செய்யும் ஆவணங்களாக வலிவு பெற்று வருகின்றன இன்றைய சமுதாயப் புதினங்கள். இவ்வடிப்படையில், சமன்மைச் சமுதாயத்துக்கு உரிய தடைகளுள் முதன்மையும், வலிவும், கொண்ட மகளிர் சமன்மை இன்மைச் சிக்கலைப் புற ஆய்வுகளுக்குப் புலப்படாத நுண்ணிய அகப்புற நிகழ்வுகளோடும், உளவியல் காரணங்களோடும், விளைவுகளோடும் வெகு நுட்பமாகவும், மிக ஆழமாகவும் விளக்கி நிற்கின்றன. இதனால், தனி மனிதர், சமுதாய நிறுவனமாம் திருமணம், சமுதாய உறுப்பாம் குடும்பம், சமுதாயம் என்ற அனைத்து நிலைகளிலும் இம் மகளிர் சமுதாயச் சிக்கல் இடம் பெற்றுள்ளது. சமுதாய மாற்றங்கள் சமுதாய இயல் வல்லுநர்களால் பொதுவாக மேல்நிலை ஆக்கம் (Sanskritization) கீழ்நிலை ஆக்கம் (de-sanskritization), மேற்கத்திய ஆக்கம் (westernization) எனும் பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன. இவற்றுள், புதுமை ஆக்கத்தின் ஒரு கூறாகச் சமநிலை ஆக்கத்தைக் கொள்ளலாம்.

சமுதாயமாற்ற முயற்சிகளுக்கும்சமுதாயச்சிக்கல்களுக்கு உரிய தீர்வுகளுக்கும் சமுதாயஇயலார் சமுதாயப்புதினங்களைத் தரவுகளாகக் கொள்ள வேண்டும், என்ற புதிய நோக்கு நிலை இக்காலத்தின் இன்றியமையாத தேவையாகி உள்ளது. எனவே, இவற்றைத் தரவுகளாகக் (Data) கொண்டு சமுதாய மாற்றத்துக்கும் சிக்கல்களுக்குமுரிய காரணங்களையும், தடைகளையும் தீர்வுகளையும் ஆராய்வது நடைமுறைப் பயன்களைத் தரும். இந்த அடிப்படையில் புதிய கோட்பாடுகளும், நெறி முறைகளும் உருவாக்கப்பட வேண்டும். இப்புதிய முயற்சி இருபத்தோராம் நூற்றாண்டில் இந்திய, உலகப் பண்பாட்டிற்குத் தமிழின் பங்களிப்பு இன்றும் சிறப்பானதாகவும், செம்மையுடையதாக்வும் அமைய வழிகோலும் என்பது உறுதியாகப் பெறப்படுகிறது.

எட்டாவது உலகத் தமிழ் ஆய்வு மாநாட்டில் குழுமும் பல்துறை, பன்னாட்டு அறிஞர்கள் இம்முயற்சிக்கு உருவாக்கம் தரும் வழிகளைக் கண்டறிய வேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமும் பொருளுமாக அமைகின்றது.

சமுதாயக் கவலையும், உணர்வும் கொண்ட புதினங்கள், மகளிர் சமுதாயச் சிக்கலின் நுண்மையையும் அதற்குரிய தீர்வு காணும் திறனையும் பெற்றிருப்பது சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகின்றது.

புதினங்களுக்கு உரிய இலக்கியப்பண்புகளை நீக்கிவிட்டு, அவையும் நடப்பியல் நிகழ்வுகள் காட்டும் உண்மைகளை ஆராயுங்கால், நேரிய சமுதாய மாற்றத்துக்கு அடிப்படை சமநிலை ஆக்கத்துக்குரிய தடைகளும் வழிகளும் என்பது புலப்படும் என்ற அரிய உண்மை கட்டுரையில் தெளிவாக்கப்படுகின்றது.

ஆய்வு நோக்கம், ஆய்வின் கருதுகோல், ஆய்வுப் பொருளின் இன்றியமையாமையும் விளக்கமும் எடுத்துக்காட்டுகளும், ஆய்வின் முடிவு என்ற நெறிமுறைகளில் கட்டுரை அமைக்கப்படுகின்றது.

DR. N. NALINI DEVI SOCIAL CHANGE AND EQUALIZATION IN TAMIL NOVELS

Our Tamil is an ancient language in the world. From time immemorial, Tamil has contributed amply to the Indian as well as world culture and there could be no controversy among the fair minded, unbiased scholars over this established fact.

In today's world, it is the aim of the democratic and communist governments to establish equalised society. The efforts taken to achieve social equality, through political, economical and social means have not yet met with success in developed as well in developing countries; and reasons therefor is quite obvious!

Women folk who contribute half of the entire population have not yet gained social equality in spite of marked advancement in educational field. Moreover several schemes formulated and sponsored by the government agencies, and the agitations by labour organisations and social organisations have not helped to the appreciable extent in securing equal social status to the women folk, and it is an obvious fact.

Tamil Novels are now transforming as valid and important documents in exhibiting the changes and implications; based on which the hurdles that are on the road to the realisation of equa lity in social status to women are perceivable.

Social changes, classified in broad outlooks Sanskritization, de-sanskritization, westernization, modernization and nationalization. Among these, equalization may be construed as a novel attempt.

When social reformers attempt at eliminating social inequality and try to solve the problems due to social intrigue, they should base their efforts on Tamil Novels on the subject and it is the need of the hour. So it is inperative that such novels should be based on and taken as lead to achieve social reforms, to remedy the social evils, to remove the social intricacy and to study the various reasons pertaining to the prevailing social inequality and to seek remedies and to get at solution to solve to entire problem.

ஸ்ரீகுமார், முனைவர் எஸ். இன்றைய தமிழ்க் கவிதைகளில் அடையாளத் தேடலும் அடையாள மறைத்தலும்

சமூகத்தில் அரசியல் போராட்டம், பொருளாதாரப் போராட்டம், பண்பாட்டுப் போராட்டம் என்ற போராட்டங்களின் வழி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை வரலாறுகள் காட்டுகின்றன. ஆனால் எப்போதுமே இந்த மும்முனையில் ஏதாவது ஒரு முனையை மையப்படுத்தியே போராட்டக்களம் அமைவுறும் என்பதும் நாம் அறிகின்ற உண்மை. இன்னொரு கோணத்தில் அரசியல், பொருளாதாரம் இரண்டின் மூலம் மட்டும் மாற்றம் என்ற சாதனை முழுமைபெறாது என்பதையும் புரிந்துகொள்ளமுடிகிறது. பண்பாட்டுத்தளம் என்பது இந்த இடத்தில் தனித்தன்மையைப் பெறுகிறது.

இந்தியச் சூழலில் பண்பாட்டின் தனித்தன்மையை அல்லது சிறப்பைச் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் ஆதிக்கச் சக்தியினரே ஆவர். சமூக மாற்றத்திற்காக நிற்போர் பண்பாடு பற்றிய சரியான புரிதலைக் கொள்ளவில்லை. இக்கருத்து நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டுப் பண்பாட்டின் வரலாற்று இடம் தீர்மானிக்கப்பட்ட காலம்தான் இது. சமூக மாற்றத்திற்காக நிற்போர்கள் இதனைப்புரியத் தொடங்கியபோது பலவிதமான திசை திருப்பல்கள், கருத்து மயக்கங்கள் பண்பாட்டுத்தளத்தில் ஊற்றப்பட்டன. ஏற்கனவே இந்தியச் சாதியமைப்பு, பல்வேறு இணைமொழி முரண்பாடுகள் ஆகிய சிக்கல்களைக் கொண்டிருந்த இந்தியப் பண்பாட்டுத்தளம் மேலும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. இதனைப் புரிந்து கொள்ள ஏற்கனவே கட்டி அமைக்கப்பட்டு நமக்குத் தந்துள்ள கோட்பாடுகளை

முதன்மைப்படுத்தியோ, சமூக வரலாறுகளை முதன்மைப்படுத்தியோ, நமது தேடல்களைத் தொடங்க முடியும். ஆனால் சமூக மனிதனோடு, சமூக மனங்களோடு மிக நெருக்கமான உறவு கொண்ட படைப்பியக்கியங்கள் வழி நம் தேடலைத் தொடங்கும்பொழுது பண்பாட்டுச் சிக்கல்களின் மூலவேரைச் சரியாக நாம் அடையாளம் காணமுடியும். இதற்குக் கோட்பாடுகளும், சமூக வரலாறுகளும் நிச்சயம் துணைபுரியும்.

இன்றைய வெகுஜனக் கல்வி, மக்கள் தொடர்புச் சாதனங்கள் தொழில்துறை வளர்ச்சி ஆகியன பண்பாட்டுத்தளத்தில் புதிய மலர்ச்சியையும் நெருக்கடிகளையும் தோற்றுவித்துள்ளன. இதன் தொடர்விளைவாக அடையாளத் தேடல்கள் எல்லா மட்டங்களிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அடையாளத் தேடல்களை விமர்சித்து அடையாள மற்றவர்களாக ஆக்கும் போக்கும் தொடர்கிறது. இவற்றை இனம் காட்டுவதன் மூலம் நம்மை நாமே தெளிவுபடுத்திக் கொள்ளவும் பண்பாட்டுச்சிக்கல்களை விடுவிக்கவும், பண்பாட்டுப் போராட்டத்தைத் துவக்கம் பெறச்செய்யவும் இயலும். இந்த முயற்சிகளை இன்றைய தமிழ்க் கவிதைகளில் தேடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

DR. S. SREEKUMAR IDENTITY SEEKING AND IDENTITY HIDING IN MODERN TAMIL POEMS

Histories reveal that Social changes are being effected through political struggle, economical struggle and cultural struggle. We know that the field of struggle is centering around any one of these. Looking at this at another angle, we may also realise that the social charge effected through politics and economics cannot be complete. Here the cultural basis occupies a unique place.

In Indian context, the people, who have corretly understood the special and unique place of culture, are the ruling forces. those who stood for a social change had failed to realise the importance of culture. After a prolonged discussion, the historical place of culture is now being determined.

When those who stood for social change began to realise this, various mis-directions and ambiquities were poured into the cultural basis. The Indian caste and ethnic system is already a complex one due to multi-various ethnic and linguistic conflicts. It is now made more conflicting. To have a more understanding of our culture it is

better to give priority to the already existing structured theories or to the already existing structured theories or to the social histories, and may begin our search. But if we begin our search through the creative literature which are related to social man and social mind, we may correctly identify the main root-cause of the social conflicts. Of course theories and social histories will help to do this.

The present day popular education, mass media and Industrial development have introduced better scope and new conflicts in the cultural base. As a chain reaction, seeking identity is being effected at all levels. Parrallel to this criticizing the `Identity seeking' and making them a `Non-Identity' are also carried out.

By exposing this, we may clarify ourselves, solve the social conflicts, and enlighten the cultural struggle. This essay aims at seeking such attempts in the present-day Tamil poems.

தெய்வநாயகம், முனைவர் கோ. கிறித்துவத் தேவாலயக் கட்டடத் தத்துவம்

தமிழகத்தில் காணப்பெறும் பல்வேறு சமயச் சின்னங்களுள் கிறித்துவத் தேவாலயங்களும் குறிப்பிடத்தக்கன. இத்தேவாலய வடிவாக்கங்கள் பல்திறப்பட்டவையாகக் காணப்பெறுகின்றன. அவ்வடிவாக்கத்திற்கான காரணங்களைப் பல்வேறு நிலைகளில் கூறிவரும் வழக்காறு உள்ளது. இச்சூழலில் ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவத் தேவாலயக் கட்டடங்களைப் பற்றி ஆய விழைவார்க்கு அத்தேவாலயக் கட்டுமானத்தின் அடிப்படைகள், தத்துவப் பின்னணி முதலியவை அறிமுகமாயிருப்பது நல்லது. தலைமைப் பேராலயமாக ரோம் நகரில் அமைந்துள்ள ஒப்பும் உயர்வுமற்ற, புனித பீட்டர் தேவாலயக் கட்டுமானம், வடிவமைப்பு மற்றும் தத்துவப் பின்னணி இவற்றைத் தெளிதல் தமிழகத்தில் அமைந்துள்ள கிறித்துவத் தேவாலயக் கட்டுமானங்களை ஆய்வதற்கு அடிப்படையாகலாம். அவ்வகையில் ரோம் நகரத்துப் புனித பீட்டர் தேவாலயத்தின் கட்டடத் தத்துவம் இக்கட்டுரையில் விளக்கம் செய்யப்பெறுகிறது. இது முழுக்கக் கள ஆய்வுத் தரவுகளைக் கொண்டு படைக்கப்பெறுகிறது.

கிருட்டிணசாமி, முனைவர் வெ. தமிழில் குழந்தைப் பாடல்கள்

சமுதாயத்தின் தேவைக்கேற்ப இலக்கிய வகைகள் உருவாகக்கூடும். மக்களின் விருப்பு, வெறுப்பு, அந்நியர் ஆட்சி, அரசியல் சூழல், மக்களின் கல்வி நிலை, பிறமொழி இலக்கியச் செல்வாக்கு, சமுதாய மாற்றங்கள் போன்றவை இலக்கியவகை உருவாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் எழுச்சிபெற்று வளர்ந்து வரும் இலக்கிய வகைகளுள் குழந்தைப்பாடலும் ஒன்றாகும்.

பிறந்தது முதல் பன்னிரண்டு வயது வரை உள்ளவர்களைக் குழந்தை என்னும் சொல்லால் அழைக்கலாம். பிறந்தது முதல் எட்டு வயது வரையுள்ளவர்களை இளம்குழந்தைகள் என்றும், ஒன்பது வயது முதல் 12 வயது வரை உள்ளவர்களைக் குழந்தைகள் எனப்பாகுபாடு செய்யலாம். தொல்காப்பியர் கூற்றுப்படி 'குழ' என்னும் சொல்லிலிருந்து (குழ > குழவி > குழந்தை) 'குழந்தை' என்னும் சொல் தோன்றியிருக்கலாம். மொழி நூலார் குழ என்னும் சொல்லிற்கு வேர்ச்சொல் 'கொழ்' எனக் கூறியுள்ளனர். எனவே கொழ் > குழ > குழவி > குழந்தை எனக் குழந்தை என்னும் சொல் தோன்றியிருக்க வேண்டும்.

குழந்தைப் பாடலில் இன்னோசை முதலிடம் பெறும். வந்த ஓசை திரும்பத் திரும்ப வருவது நலம். குழந்தைப் பாடல்கள் எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டிருக்கவேண்டும். அகர முதலி பார்த்துப் பொருள்காணும் கடினமான சொற்கள் குழந்தைப் பாடலில் இடம் பெறலாகாது. குழந்தைகள் அறிந்த, படித்த எளிய சொற்கள் பாடலில் இடம் பெறவேண்டும். வந்தசொல்லும் சொற்றொடரும் திரும்பத் திரும்ப வருதல் சிறப்பு. ஒவ்வொரு வரியோடு ஒரு சொற்றொடர் முடிய வேண்டும். எளிய நடையில், குழந்தைகளுக்குத் தெரிந்த பொருளில் பாடல்கள் அமைந்திருக்க வேண்டும். பொய், களவு, தீண்டாமை, கொலை, கொள்ளை, நகைச்சுவை என்னும் பெயரில் பிறரை இழிவுபடுத்துதல் போன்றவை குழந்தைப்பாடலில் இடம் பெறலாகாது.

குழந்தைப் பாடலுக்கும், குழந்தையைப் பற்றிய பாடலுக்கும், குழந்தையாகப் பாவித்துப் பாடும் பாடலுக்கும் வேறுபாடுகள் உள.

குழந்தைப் பாடலின் தோற்றத்தை அறிவது கடினம். பெரியவர்கள் உருவாக்கியிருக்கலாம். குழந்தைகள் 'போலச் செய்தல்' என்னும் முறையில் சில பாடல்களைப் பாடியிருக்கலாம். நாட்டுப்புறக்

குழந்தைப் பாடலும், விடுகதையும் முதலில் தோன்றிய குழந்தைப்பாடல்கள் எனலாம். தொல்காப்பியத்தில் காணும் விடுகதை, ஔவையாரின் ஆத்திசூடி, எஸ். கிருஷ்ணபிள்ளையின் சமயத்துதிப்பாடல்கள், கவிமணி, பாரதிதாசன், பாரதியாரின் பாடல்கள் போன்றவை குழந்தைப் பாடல்துறை வளர உதவின. இருபதாம் நூற்றாண்டில் பலர் குழந்தைப் பாடல்கள் எழுதுகின்றனர்.

நாட்டுப்புறக் குழந்தைப் பாடல்கள், பொருளிலிப் பாடல்கள், விடுகதைகள், வினா விடைப் பாடல்கள், நகைச் சுவைப் பாடல்கள், கதைப் பாடல்கள், காவியம், கவிதை நாடகம், புதுக்கவிதை, வில்லுப்பாட்டு, ஆத்திசூடி போன்றவை குழந்தைப் பாடல் வகைகளாகும்.

அறிவியல், இயற்கை, உணவுப்பொருள்கள், உயிரினங்கள், உறவினர்கள், கடவுள் கட்டடங்கள், கல்வி, காலம், கொடி, தமிழ், தொழில்கள், நாடுகள், நீதி, பயன்படுத்தும் பொருள்கள், வாகனங்கள், வாழ்க்கைவரலாறு, விழாக்கள், விளையாட்டுகள் போன்றவை பாடுபொருளாக அமைந்துள்ளன. இவை பல்வேறு யாப்பில் அமைந்துள்ளன.

குழந்தைப் பாடல் நூல்களின் கட்டமைப்பு சிறந்தமுறையில் இருக்க வேண்டும். பல்வேறு உத்திகளைக் கையாண்டு புதுமையான முறையில் பாடல்களைப் படைக்கவேண்டும். குழந்தைப் பாடல்களில் எவ்வகைப் பிழையும் இருக்கக்கூடாது. குழந்தைப் பாடலின் வளர்ச்சி தேக்கநிலையை அடைந்துள்ளது. எனவே குழந்தைப்பாடல்கள் வளர ஆசிரியர்களும் பெற்றோரும் ஆவன செய்யவேண்டும்.

சிற்சபேசன், சி. தமிழர் புலம்பெயர்வு

சொந்த மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து பூமிப்பந்தின் பல பாகங்களிலும் வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கை பல இலட்சங்கள். அவர்களின் புலம்பெயர்வுகள் வாழ்வுமுறை, தமிழ் அடையாளங்களின் நிலைப்பாடு ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கின்றது.

தமிழர்களுடைய புலம்பெயர்வை இரண்டு கால அளவுகளிலே வரையறை செய்து கொள்ளலாம். அவையாவன.

அ. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலானது

ஆ. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பிற்பட்டது.

முதலாவது, பொருள் மேம்பாட்டின் பொருட்டு நிகழ்ந்தது.

இரண்டாவது இன அழிவுகளிலிருந்து பாதுகாப்பு வேண்டி நிகழ்கின்றது. இது அரசியல் புலம் பெயர்வு எனக்கொள்ளப்படும்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தமை, வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் நிகழ்ந்திராத அளவுக்குத் தமிழர்கள் சொந்த மண்ணிலிருந்து பிரிய நிர்பந்திக்கப்பட்ட அரசியல் களநிலைப்பாடுகள் இதனால் சமூக அமைப்பில் இனி வருகின்ற காலங்களில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தடம்பதிப்பனவாக இப்புலம்பெயர்வுகள் அமையும்.

இக்கட்டுரையின் முற்பகுதி புலம்பெயர்வு - வரையறை, புலம்பெயர்வுக் காரணிகள், புலம்பெயர்வோர் பின்னணி, அவர்தம் களநிலைப்பாடுகள் பற்றி விளக்குகிறது. பிற்பகுதி, புதிய புலங்களும் நிலைப்பாடுகளும், சுவாத்திய அமைவுகள், சமூக அமைவுகள், கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி, மொழி, மதம், கலாச்சாரம் பேணல் ஆகியனகுறித்து விரித்துரைக்கிறது.

S. SITSABESAN TAMIL MIGRATIONS

A. large number of Tamils migrate to different parts of the world. This paper aims to study the life style and the issue of identity of the migrated Tamils.

Tamils Migration could be classified as follows,

a. Until the middle of twentieth century

b. After the middle of twentieth century

First type of Migration was for the purpose of acquiring wealth, whereas the second is to preserve and protect the Tamil identity and it is hearafter known as political migration.

Indeed, it is of significant importance. In the history of the Tamil race, it is the first time that a large number of people are forced to migrate for political reasons. This migration will have definite impact on the future of Tamil society.

The Tamils migrate in search of security for life and most of them are living in safer evironment. Second generation of Tamils stand better chances of achieving higher levels in life. On the cultural front, the course of devleopments indicate that the Tamils identity is beginning to fade into oblivion.

ஞானசேகரன், டாக்டர் ஆ. டக்டர் ஹெர்மன் கூண்டர்ட்டின் தமிழ்ப்பணி

டாக்டர் ஹெர்மன் கூண்டர்ட் (1814-1893) ஓர் ஜெர்மானியப்பாதிரி தமிழகத்தில். அவர் இருந்த காலம் இரண்டு ஆண்டுகளேயாம் (ஆகஸ்டு 1836 - அக்டோபர் 1838), இக்குறுகிய காலத்தில் அவர் ஆற்றிய தமிழ்ப் பணி சிறப்புப் பொருந்தியதாகும்.

ஆகஸ்டு 1836-இல் நெல்லை வந்தடைந்ததும் அங்கு முன்பே தங்கிப் பணியாற்றிக் கொண்டிருந்த மற்றோர் ஜெர்மானியப் பாதிரியார் ரேனியுஸைத்துணை கொண்டார். கிரேக்க - தமிழ், அகராதி, ஹீப்ரு - தமிழ் அகராதி ஆகியவற்றின் ஆக்கப்பணிகள் விரைவில் துவங்கின.

ரேனியுஸின் துணையுடன் கூண்டர்ட் சங்க இலக்கியங்களையும், அப்போதைய கத்தோலிக்க 'பிராட்டஸ்டன்ட்' மத இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றார். ரேனியுஸ் எழுதிய தமிழ் இலக்கணப் புத்தகம் இவருக்கு மிகவும் பயன்பட்டது. தொல்காப்பியம் கற்றார். கத்தோலிக்க மதகுரு ஜோஸஃப் பெஸ்கி எழுதிய சதுரகராதியையும் கற்றுத் தேர்ந்தார்.

அந்நாளில் ஐரோப்பிய மதகுருக்களே இந்தியர்கட்கு ஞானஸ்நானம் அளிக்கும் தகுதியுள்ளவர்களாகக் கருதப்பட்டனர். கூண்டர்ட் இந்தியர்க்கு இந்தியரே ஞானஸ்நானம் அளிக்கலாம் என்ற கொள்கை கொண்டவராயிருந்தார்; அதைப் பின்பற்றினார். யாவரும் சமம் என்ற கருத்துக் கொண்டிருந்தார்.

தமது மூன்று தமிழ்படைப்புகளை நாகர்கோவிலிலிருந்த அச்சகத்தில் 1838 அக்டோபர் முதல் வாரம் அச்சிட அளித்தார். பின்னர் தமிழகத்தை விட்டு மங்களூர் சென்று 20 ஆண்டுகட்கும் மேலாக மதப்பணியாற்றினார். மலையாள மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்.

K.S.A. GNANASEKARAN CONTRIBUTIONS OF DR. HERMAN GUNDERT TO TAMIL LANGUAGE

Dr. Hermann Gundert (1814-1893) was a German Missionary who lived in Tamilnadu only for a period of two years, from August 1836-October 1838. During this short period of two years he contributed well to Tamil Language.

As soon as he reached Tirunelveli in August, he joined another German missionary Rhenius who was stationed there. He learnt

Tamil and started composing a Greek-Tamil and a Hebrew- Tamil Dictionary.

Along with, Rhenius, Gundert studied the Tamil classic of the Sangam period as well as the Tamil writings of the early and cntemporary catholic and protestant missionaries. got to know the revision of Rhenius grammer was just Gundert published. So he became familiar with Tolkappiam as well as with `Saturagaradi', composed by the Jesuit missionary Joseph Beschi.

Gundert himself took measures to provide the Indian Christians adequate positions within the church. Once he asked his fellow Indian catechist to baptize. It was opposed by many. However he maintained the view that there should be no distinction between an european priest and an Indian catechist.

In October 1838 he entrusted his three Tamil literary work for publication at Nagercoil and left for Mangalore were he served two decades.

வீரமணி, முனைவர் அ. சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களில் எழுத்தாளர்கள் காட்டும் சமுதாயம்

சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளில் தமிழும் ஒன்று. சுமார் நூறாண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் வெளியீடுகள் சிங்கப்பூரில் வெளிவந்துள்ளன என்று ஆய்வுகள் காட்டுகின்றன. படைப்பிலக்கிய முயற்சிகளுள் ஒன்றான தமிழ் நாவலும் சிங்கப்பூரில் எழுதப்பட்டு வந்துள்ளது.

தமிழகம், இலங்கை போன்ற இடங்களில் தோன்றிய நாவல்களுக்கும் சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறுபாடுகளில் ஒன்று எழுத்தாளர்களின் சமுதாய - பொருளாதாரப் பின்னணி. சிங்கப்பூரில் தமிழ் வளர்ந்தது பாமர மக்களின் மத்தியில்தான். படித்தவர்கள், பதவியில் இருந்தவர்கள், பணக்காரர்கள் ஆகிய தமிழர்கள் தமிழை எழுதவும் படிக்கவும் செய்யவில்லை. எனவே, தமிழ் நாவலும் சிங்கப்பூர்ச் சமுதாயத்தில் நடுத்தர வருவாய்க்கும் குறைவான பொருளாதார நிலையில் இருந்தவர்களாலேயே எழுதப்பட்டது; படிக்கப்பட்டது.

இந்த ஆய்வுக்கட்டுரை சமூகவியல் கூறுகளைக் கொண்டு சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களை ஆராயும். நாவல்களில் காட்டப்படும்

சமுதாயம் நாவலாசிரியர்களின் பொருளாதார வாழ்க்கை அனுபவ நிலைகளோடு எந்த அளவுக்கு ஒத்திருக்கிறது என்பதைக் கட்டுரை விளக்கும். சிங்கப்பூர்ச் சமுதாயத்தின் உண்மை நிலைக்கும், தமிழ் நாவலாசிரியர்கள் காட்டும் சமுதாயத்திற்கும் உள்ள மாறுபாடுகளைக் கட்டுரை ஆராயும். உலகின் மாநகரங்களில் ஒன்றாக மாறிவிட்ட சிங்கப்பூரில் தமிழ் நாவல்கள் எதைச் சாதிக்க முயலுகின்றன என்பதைக் கட்டுரை எடுத்துக்காட்டும்.

டாக்டர் நசீம்தீன், முனைவர் பீ. தென்னிந்தியப் பழங்குடி மக்களின் வாய்மொழி வரலாறு

நமது நாட்டு வரலாறு முதலானவை ஆங்கிலேயர்களால் சார்புநிலையுடன் எழுதப்பட்டதாகும். மக்களது வாழ்வியற் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு எழுதப்படும் வரலாறே முழுமையுடையதாக அமையும். மக்களின் வாழ்வியற் கூறுகளை வெளிப்படுத்தும் நாட்டார் வழக்காற்று அடிப்படையில் இவ்வரலாறுகள் எழுதப்படுதல் வேண்டும். நாட்டார் வழக்காற்றடிப்படையில் திரட்டப்படும் வரலாறுகளின் உண்மைநிலை உறுதி செய்யப்படுதல் வேண்டும். அதற்கான சில சோதனை முறைகளை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

குடியேற்ற வரலாறுகள் (Migration theory) வெறும் அலங்காரத்துக்காக அவ்வினத்தாரால் கூறப்படுவன அல்ல. வாய்மொழி வரலாறு எழுத்துருப் பெற்ற வரலாற்றை விடக் கடந்த காலத்தை மீட்டுருவாக்குவதில் இயல்பானதாகவும், சிறப்பானதாகவும் இருக்கிறது. வாய்மொழி வரலாற்றை இனப்பண்பாட்டோடு இணைத்து நோக்குவதில் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. மூன்று மாதிரி ஆய்வுகள் இக்கட்டுரையில் தரப்படுகின்றன. முதல் மாதிரி ஆய்வில், இடுக்கி மாவட்டத்தில் வாழும் மன்னான் இனத்தாரின் வரலாறு தமிழக வரலாற்றோடு ஒப்பீடு செய்யப்பட்டு அவர்தம் வரலாற்றில் சில உண்மைகள் எடுத்துக்காட்டப்படுகிறது. இம்மக்கள் இடைக்காலத்தில் தமிழகப் பகுதிகளிலிருந்து கேரளக் காடுகளில் குடியேறியமை உறுதி செய்யப்படுகிறது.

இரண்டாவது மாதிரிச் சோதனையில் இதுபோலக் குடியேறிய பிற கேரளப் பழங்குடிகள் பற்றிய குறிப்பும் காணிக்காரர் எனும் பழங்குடிகளது வாய்மொழிவரலாற்றின் உண்மைகளும் ஆராய்ந்து உரைக்கப்படுகின்றன. மாதிரிச் சோதனை மூன்றில் திருநெல்வேலிப் பகுதியிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிற்குக் குடியேறிய ஓர் இனம்பற்றிய வரலாறு பழங்குடிகளின் பழக்கவழக்கங்களோடும், சமணர்களது எண்ணங்களோடும் ஒப்பீடுசெய்யப்பட்டு தமிழகத்தில் மறைந்துபோன களப்பிரர் பற்றிய வரலாற்றை மீட்டுருவாக்குவதில் சிறுமுயற்சி

தொடங்கி வைக்கப்படுகிறது. இதுபோன்ற வாய்மொழி வரலாற்று ஆய்வுகள் மேலும் நடைபெற்றால் தமிழகவரலாற்றில் பல தெளிவுகள் கிடைக்கும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

DR. P. DOCTOR NAZEEMDEEN ORAL HISTORY OF SOUTH INDIAN TRIBES

Oral history is the most prominent factor in the fields of social studies. It is quiet offen said that scholars like Ilankulam Kunjanpillai, Samuel Martier, the tribes of southern Indian, are dwelling here from the very ancient period. And the changes accord in the languages have not yet affects their tongue. But the tribes, very oftens said that they have migrated from various places other they living, scholars have the opinion that some of Kerala tribal groups would have migrated from the Madurai and Thirunelvely District of Tamil Nadu. They embathetically comes to a conclusion infering the customs and behaviours. After the destructions of Pandya Kingdom the followers of Pandyas interlude into the forest and mingled with the native tribal group in the hilly regions. The studies proves that some tribal groups are a mixture of ethnic groups and that the period was early of 17th century. The domination of higher easte people and their customary behaviours have made many clans to find selter to the forest down from the 16th century. These problems are discussed in this article.

சேகரன், சாத்தூர் தமிழும் கொரிய மொழியும்

தமிழ் மொழி போலவே கொரிய மொழி ஒரு ஒட்டுமொழி. பழந்தமிழில் இறந்தகாலம் - இறப்பில் காலம் இருந்ததைப் போலவே கொரிய மொழியிலும் இந்த இரு கால வகைகளே மிகுதியாக உள்ளன. தமிழில் பழகு தொடர் போன்றவற்றிற்கு வினை வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக அவன் பையன், இவர் மருத்துவர் - இத்தகைய சொற்றொடர்களில் வினை வேண்டியதில்லை. இத்தகைய சொற்றொடர் அமைப்பு கொரிய மொழியில் உண்டு.

அவசியச் சொற்கள் என்று மொழி அறிஞர்கள் குறிப்பிடும் சொற்கள் 204 ஆகும். இவற்றில் ஏதேனும் இருபது சொற்களில் ஒற்றுமை இருந்தால் இவை ஏதோ ஒருகாலத்தில் இன உறவு உள்ள மொழிகளாக இருந்திருக்கும் என்பர்.

கொரிய மொழியில் அப்பா, அம்மா என்ற உறவுமுறைப் பெயர்கள் உண்டு. தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களில் அம்மாவை அழைக்கும்போது யம்மா, எம்மா என்றெல்லாம் அம்மா திரிக்கப்படும். இவ்வாறே கொரிய மொழியில் அம்மாவை அழைக்கும்போது யம்மா என்பர். அன்னை என்ற சொல்லும் சிறுபான்மையாகப் பயன்படுகிறது.

பிரதிப் பெயர்களிலும் நான் போன்ற பிரதிப்பெயர் உண்டு. எண்கள் ஒன்று முதல் பத்து வரை எண்ணப்படும்போது நான்கு எண்கள் சற்று திரிந்திருந்த போதிலும் தமிழுடன் உறவு உள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன.

இனஉறவு உள்ள மொழிகளில் தான் வினைச் சொற்கள் ஒன்றுபடும். சில இன்றியமையாத வினைச் சொற்கள் இருமொழிகளிலும் உள்ளன.

இனஉறவு உள்ள மொழிகளில் மட்டும்தான் உருபுகள் ஒன்றுபடும். தமிழில் உள்ள சில உருபுகளைக் கொரிய மொழி - சற்று திரித்துக் கையாண்ட போதிலும், இவ்வொற்றுமை நமக்கு வியப்பு அளிக்கிறது.

ஆதியில் கொரிய மொழியின் எழுத்துகள் சித்திர எழுத்துகளாக இருந்த போதிலும், தற்காலத்தில் தமிழின் வட்ட எழுத்துகளையே இம்மொழி கையாளுகிறது.

கொரிய மொழியையும் திராவிட மொழிகளையும் ஆராய்ந்த ஹல்பர்ட் போன்றோர் இனஒற்றுமையை வற்புறுத்திக் கூறுகின்றனர்.

இத்தகைய ஆய்வுகள் விரிவு படுத்தப்பட்டால் பல புதிய மொழியியல் உண்மைகள் விளங்கும். தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் உள்ள இன ஒற்றுமை எதிர்காலத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டிய செய்தி என்பதில் ஐயமில்லை.

கோபாலகிஷ்ணன், மா. பதினெட்டாம் நூற்றாண்டிறுதியில் இரண்டாம் வீராநாய்க்கரின் தமிழ் உரை நடை

பழங்காலந் தொட்டே தமிழில் இலக்கிய, இலக்கண உரைகள் பல இயற்றப்பட்டிருக்கின்றன. எனினும் ஐரோப்பியர் வருகைக்குப்பின்பு தான் உண்மையான 'தமிழ் உரை நடை' வளர்ச்சி பெற்றது என்பதும் தெரிந்ததே. முதலில் உரை நடையில் எழுதிவைத்துச் சென்ற தமிழர் ஆனந்தரங்கப்பிள்ளையே. அவர் 1736-க்கு முன்பே கணக்குச் சுவடியாகத் தொடங்கியது பிறகு நாட்டில் பல முக்கியமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டதை உணர்ந்து அந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து

எழுதியபோது நாட்குறிப்பாக மாறியது. இவரே தமிழ்நாட்டு உரைநடை நூலாசிரியருக்கு முன்னோடியாகத் திகழ்பவர் என்றால் மிகையாகாது. இவருக்குப்பின் எழுதியவருள், அக்கால 'இரண்டாம் நாயினார்' ராஜகோபால நாய்க்கர் மகனான (இரண்டாம்) வீரநாய்க்கரைக் குறிப்பிடவேண்டும்.

மேல்நோக்கமாகப் படிக்கும்பொழுது பல சொற்கள் கொச்சைத்தமிழ் ஆகத் தோன்றலாம். ஆனால், உற்று நோக்கின், ஆசிரியர் இரண்டாம் வீரநாய்க்கர் காலத்தில் வழக்கிலிருந்த சொற்களையும் சொற்றொடர்ளையும் அடுக்குமொழிகளையும் அவர் உபயோகிப்பது விளங்கும். மேலும் அவர் இலக்கணவிதிகளைக் கடைப்பிடிக்கும் விதமும் மற்றும் தமிழில் இல்லாத பிரெஞ்சு - ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்பத் தமிழ்க் கலைச்சொற்கள் கொடுக்கும் விதமும் அவருடைய தமிழ்ப்புலமையைக் காட்டுகின்றன.

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பின் முறையில் இ. வீராநாய்க்கர் சில நிகழ்ச்சிகளைமிக்க அக்கறையுடன் எழுதிவைத்திருக்கின்றார். அமெரிக்கச் சுதந்திரப் போர் தொடங்கிய போது ஏற்பட்ட 1778-ஆம் ஆண்டு புதுச்சேரி முற்றுகையைப் பற்றியும் பிறகு இந்த ஊரை ஆங்கிலேயர்கள் பிடித்துக் கொண்டபின் வங்காளக் குடாக்கடலிலும் திரிகோணமலைப் பகுதியிலும் சுய்ப்பிரேன் (Suffren) அதிகாரத்தின் கீழிருந்த பிரெஞ்சு கப்பற்படை கொண்ட வெற்றிகளைப் பற்றியும் புய்சி (Bussy) வந்த பிறகு கூடலூர், சிதம்பரம் போன்றவிடங்களில் சோழமண்டலக்கரையில் நடந்த போர்களைப்பற்றியும் அறியமுடிகின்றது.

கோவா-வைக் 'கோவை' என்றும் மஞ்சகுப்பத்தை 'மஞ்சங்குப்பம்' என்றும் சொல்லும் அவர் வேறு பழைய தமிழ் ஊர்ப் பெயர்களையும் குறிக்கின்றார். கலைச்சொற்களைத் தேடும் நமக்கு 'நலமிளப்பம்', 'ஞாயத் தப்பிதம்' போன்ற சொற்களும் 'இன்னார் இனியர்', கண்டெனை தண்டெனை', 'நன்மை தின்மை', 'அசையும்பொருள் அசையாப்பொருள்' முதலிய சொற்றொடர்களும் காதுக்கு இனிக்கின்றன. 'வட பாரிசம்- தென் பாரிசம்' என்ற வசனம் சென்னை பாரிசு முனையைக் கவனத்தில் கொண்டுவருகின்றது. சாப்பாடு போடுவதைத் 'தீனி போட்டார்கள்' என்றும் பிரெஞ்சுக்காரர் 'டான்' சாடுவதைக் 'கூத்தாடினர்' என்றும் படிக்கும்போது முதலில் நம்மை மீறிச் சிரிப்பு வந்தாலும் யோசிக்கும்போது அக்காலத் தமிழ் வழக்குப் புரிகின்றது. இப்படியாக இக்கட்டுரை இவருடைய எழுத்துரையில் உள்ள பற்பல நுணுக்கங்களைக் காட்டி அன்றைய தமிழ் அழகு நடையை விளக்குகின்றது.

C.M. GOBALAKICHENAN ON THE FOOTSTEPS OF ANANDA RANGAPILLAI OR VIRANAIKER II, THE FIRST TAMIL HISTORIAN?

After the well-known Anandarangappillai's Diary, the Tamil edition of a second one has been published recently in Madras under the title *Irandam Viranaiker NatkuRippu* (1778-1792) Moreover the so-called Tiruvengadappillai's Diary has been noticed already in XIXth century and even described by some scholars as of minor importance. Less important for the French and British may be, but certainly as important as the previous ones for Pondicherrians and Tamilians.

The first part of this paper gives a through account of the available diaries which in fact are more abundant than we could imagine and propose a tentative genealogy for the diarists on the basis of the manuscripts studied.

And the second part shows these diaries contribution for the knowledge of XVIIIth century Pondicherry Tamilnadu and South India, Mauritius Island and beyond, France and UK.

Viranaiker II relates the Siege of Pondicherry by the British in , Suffiren naval campaigns in 1782. Bussy's fighting on Goodelur coast in 1783, Haider Aly's envoys to France leaving Pondicherry and coming back two years after with French gifts.

And other such historical event which show also the close maritime relations between Pondicherry and Mauritius and the reciprocal influences, before and after the transfer of Governor General Office and residence from Pondicherry to Mauritius and the attempts in 1790-92 of Pondicherry Europeans and Tamilians to organize themselves as political goups.

Tiruvengadappilai continues, after the 5th Siege of Pondicherry and its capture by the British in August 1778 (during the coalition war in Europe against the French Revolutionary power) maintaining his contact with the last French Commander Chermont and other citizens of Pondicherry, with the British administtration officers and with Tamilians. His diary describes well the difficult years 1798 - 1799 for Pondicherry citizens (no economy, several important peo-

ple in jail,...) who are enduring great sufferings similar to those known about 40 years earlier in Ananda Rangappilai time. And with the end of XVIIIth century the curtain falls on the local South Indian Tamil rajas and paleagars.

The successive diaries covering a large part of XVIIIth ce show clearly the repetition of disastrous wars in South Ind well in time of war as in time of peace in Europe - the sufferin the people caused by numerous invasions and plunders by Arco Mysore powers and by the Europeans. All these conditions w plain the human geography of XIXth century in the Carnatic land where history writing was apparently not important we ca there were in fact some pioneer pseudo-historians as far Tami and Pondicherry are concerned. Viranaiker II being the first ar them.

INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCH

EVERY COUNTRY IS MY COUNTRY EVERY MAN IS MY KINSMAN

திருக்குறள்

INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCH

உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்